பாரதியார் கவிதைகள்



வானவில் பிரசுரம்

பாரதியார் கவிதைகள்

பதிப்பாசிரியர்கள்

டி.வி.எஸ்.மணி
சீனி-விசுவநாதன்

வானவில் பிரசுரம்
13 இரண்டாவது கிராஸ் தெரு
மேற்கு சி.ஐ.டி.நகர்
சென்னை - 600035.

திருத்திய மூன்றும்
பதிப்பு: 11:9:1977

பாரதியார் நினைவுநாள் வெளியீடு

BHARATHIAR KAVITHAIGAL

விலை ரூ. 5-00

உள்ளமைப்பும், ஒப்பமைப்பு முறையும் பதிவு செய்யப் பெற்றது.

© வானவில் பிரசுரம்
சென்னை 600 035

இந்தப் புத்தகம் மத்திய அரசு சலுகை விலையில் அளிக்கப்பட்ட தாளில் அச்சிடப் பெற்றுள்ளது.

போட்டோ ஆஃப்செட்
பிராசசில் அச்சிட்டோர்:
நவபாரத் பிரிண்டர்ஸ் & டிரேடர்ஸ்
சென்னை 600 014.

முதற் பதிப்பின்
அணிந்துரை

பேராசிரியர் **அ. ச. ஞானசம்பந்தன்**

கவிச் சக்கரவர்த்தி பாரதியின் பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற படைப்புகள் என்பதை இன்றைய நிலையில் யாரும் கூறத் தேவை இல்லை. பல்வேறு பதிப்புகளாக வெளிவந்துள்ள அவை ஏறத்தாழ ஒரே முறையில் தொகுக்கப்பெற்று நாட்டுப் பாடல்களை முதற்கண் கொண்டே வெளிவந்துள்ளன.

இன்னும் எத்தனை ஆண்டுகள் கழித்தாலும் தமிழ் இலக்கிய உலகில் கவிச் சக்கரவர்த்தி அழியாத ஓர் இடத்தைப் பெறுவார் என்றால் அது எதனால் இயலும்? அவருடைய கவிதைகளே அதற்குக் காரணம் என்று கூறத் தேவை இல்லை. ஆனால் எந்தக் கவிதைகள்? நாட்டுப் பாடல்களா? வேதாந்தப் பாடல்களா? பாஞ்சாலி சபதமா? நாட்டுப் பாடல்கள் சிறந்தவை; நாட்டு மக்களை விழிப்படையச் செய்தவை என்பதில் ஐயமில்லை. என்றாலும் அவை காலத்துக்கேற்ற பாடல்களே தவிரக் காலத்தை வென்று நிற்கும் பாடல்களல்ல. 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடல் இன்னும் கால் நூற்றாண்டு கழித்துப் பாடப் பெற்றால் அதனை அனுபவிக்க முடியாது.

அவ்வாருனல், பாரதியின் பாடல்கள் என்றும் நின்று நிலவும் இயல்பு பெருதவையா? என்றும் நின்று வாழும் சாகா வரம் பெற்றவை அவை. தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், கண்ணன் பாடல்கள், குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை என்றும் நிலைபெற்று வாழும் தகுதி வாய்ந்தவை. இம் முறைவைப்பை நன்கு அறிந்து, மொக்குரி புத்தகக் கம்பெனியார் தோத்திரப் பாடல்களை முதற்கண் வைத்து இப் புதிய மலிவுப் பதிப்பை வெளியிடுகின்றனர்.

பாரதியின் பாடல்கட்கும் பாடபேதம் உண்டு என்பதைப் பலரும் அறியார். முன்னர்க் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் ஓரளவு இப்பாட பேதங்களுடன் பதிப்பித்தார்கள். அவற்றையெல்லாம் ஒப்புநோக்கித் தேவையான பாட பேதங்களையும் அடிக் குறிப்பாக இட்டு இப் புதிய பதிப்பு வெளிவருகிறது.

இதுவரை வெளிவந்த பதிப்புகளுள் ஒரு குறை இருந்துவந்தது. நிறுத்தற் குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி முதலிய குறியீடுகளைச் செம்மையாகப் பயன் படுத்தாமல் அவை பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அக் குறையையும் போக்குகிறது இப் புதிய பதிப்பு.

அழகிய முறையில் அச்சாகி வெளிவரும் இப் புதிய பதிப்பு தமிழ்கூறு நல்லுலகில் சிறந்த வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. —அ. ச ஞா.

○

பதிப்புரை

தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு, கற்பனை கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் கவிதைகள் புனைந்து பெருமை கொண்டவர் மகாகவி பாரதியார். அவருடைய கவிதைத் தொகுதிகளை முழுநூலாக வெளியிடுவதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறோம்.

இக் கவிதைத் தொகுப்பு நூலைப் பதிப்புச் செய்யுங்கால் பல பழைய பதிப்புப் பிரதிகளை ஒப்பு நோக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் விளைவாக அப் பழைய பதிப்புக்களில் காணப் பட்ட பாடபேதங்கள், கவிமணி அவர்கள் கண்டறிந்த பாடபேதங்கள், குறிப்புரைகள், ஸமர்ப்பணங்கள், முன்னுரைகள் முதலியன இப்பதிப்பில் இடம்பெற்றால் பொருத்தமாயிருக்கும் எனக் கருதி, அவற்றினை உரிய இடங்களில் இணைத்துள்ளோம். இது இந் நூலின் தனிச்சிறப்பு எனலாம்.

தெய்வ பக்திப் பாடல்களை முதன்மையாகக் கொண்டு வெளிவருவதையும் நாங்கள் இன்னொரு சிறப்பாகக் கருதுகிறோம். தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டே எந்தவொரு செயலையும் தொடங்குவது நம் தமிழகத்தின் பண்பு. எனவே, நாங்களும் தெய்வத்தைக் குறித்து மகாகவி பாடிய பாடல்களை முதனிலையாகக் கொண்டு கவிதைத் தொகுதியைப் பதிப்பித்துள்ளோம். தெய்வ பக்திப் பாடல்களை யடுத்துத் தேச பக்திப் பாடல்கள்

இடம் பெறுகின்றன. தேச பக்திப் பாடல்களான தேசிய கீதங்கள் காலத்திற் கேற்ற முறையில், சூழ்நிலையை யொட்டிப் பூனயப்படுகின்றன. ஆனல், தெய்வ பக்திப் பாடல்களோ எக்காலத் திற்கும் ஏற்றனவாகவும் பொருத்தமானவை யாகவும் இருக்கும்படி பூனயப்படுகின்றன. காலம் மாறினலும் கடவுட் கொள்கை மாறுவதில்லை. காலத்தையும் ஞாலத்தையும் வென்று ஒளி வீசித் திகழ்கின்ற பாடல்கள்தாம் தெய்வ பக்திப் பாடல்கள் என்ருல், அதில் ஐயப்பாடு இல்லை. இதனைக் கருத்தில் கொண்டே தெய்வ பக்திப் பாடல்களான பாமாலைப் பகுதியை முற்பகுதி யாகக் கொண்டு இம் மலிவுப் பதிப்பை வெளியிடு கின்ருேம்.

கவிதை யுலகில் முழு மதி யெனத் திகழ்ந்த கவிஞர் பாரதியாரின் பாடல் தொகுதியாம் இக் கவிதை நூலைத் தமிழ்த்தாயின் பொன்னடிகளில் சமர்ப்பிக்கின்ருேம்.

இந் நூலுக்கென அணிந்துரை அளித்த பேராசிரியர் திரு. அ. ச. ஞா. அவர்களுக்கு எங்கள் நன்றி. மற்றும், இந்த இரண்டாம் பதிப்பு வெளி வருங்கால், சில சீரிய யோசனைகளையும், திருத்தங் களையும் செய்து உதவிய திரு. திருலோக சீதாராம், திரு. ம. ரா. போ. குருசாமி ஆகியோருக்கும் எங்கள் நன்றி.

கவிஞன் பிறந்தபின் கவிதை பிறக்கும்
கவிஞன் மறையினும் கவிதை உலாவும்

—பதிப்பாளர்

○

பொருளடக்கம்

பாமாலை

பக்திப் பாடல்கள்

(1 - 126)

			பக்கம்
1.	விநாயகர் நான்மணி மாலை	...	1 - 15
2.	தோத்திரப் பாடல்கள்	...	16 - 96
3.	வேதாந்தப் பாடல்கள்	...	97 - 126

தேசிய கீதங்கள்

தேசபக்திப் பாடல்கள்

(127 - 224)

1.	பாரத நாடு	...	133 - 164
2.	தமிழ் நாடு	...	165 - 174
3.	சுதந்திரப் பள்ளு	...	175 - 181
4.	தேசிய இயக்கப் பாடல்கள்	...	182 - 198
5.	தேசியத் தலைவர்கள்	...	199 - 213
6.	பிற நாடுகள்	...	214 - 224

பல்சுவை

தன்வரலாறும் பிற பாடல்களும்

(225 - 280)

1.	ஸ்வசரிதை	...	227 - 239
2.	பாரதி - அறுபத்தாறு	...	240 - 257
3.	புதிய ஆத்திசூடி	...	258 - 260
4.	முரசு	...	261 - 265
5.	பாப்பாப் பாட்டு	...	266 - 268
6.	வாழ்த்துப் பாக்கள்	...	269 - 280

காவியங்கள்

கற்பனையும் கதையும்

(281 - 469)

1. குயில் ... 283 - 307
2. கண்ணன் பாட்டு ... 308 - 355
3. பாஞ்சாலி சபதம் ... 356 - 469

தனிப் பாடல்கள்

பொதுமைப் பாடல்கள்

(471 - 550)

1. பல்வகைப் பாடல்கள் ... 473 - 496
2. சமூகம் ... 497 - 506
3. வசன கவிதை ... 507 - 550

பிற்சேர்க்கை

பாடல் முதற்குறிப்பு அகராதி ... 551 - 558

○

பாமாலை

பக்திப் பாடல்கள்

1. விநாயகர் நான்மணி மாலை
2. தோத்திரப் பாடல்கள்
3. வேதாந்தப் பாடல்கள்

○

விநாயகர் நான்மணி மாலை இரண்டாம் பதிப்பாக 1939ஆம் ஆண்டில், பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றதாகத் தெரிகிறது. கையெழுத்துப் பிரதி அபூர்ணமா யிருந்த விடங்களில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களையும், கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களையும் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டதாகவும், கையெழுத்துப் பிரதியிற் காணுதன நகவளவு (பிராக்கெட்)களுள் தரப்பட்டுள்ளன வென்றும் அக்காலத்துப் பதிப் பித்தவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தோத்திரப் பாடல்கள் தொகுதியும், **வேதாந்தப் பாடல்கள்** தொகுதியும் 1930ஆம் ஆண்டில் பதிப் பிக்கப் பெற்றன. இத் தொகுதிகளுள் காணப் பெறும் சில பாடல்கள் 1910ஆம் ஆண்டில் வெளி யான பாடல் தொகுதியிலும் சேர்ந்திருந்தன.

○

பாமாலை

★

பக்திப் பாடல்கள்

★

1. விநாயகர் நான்மணி மாலை

—:o:—

வெண்பா

(சக்திபெறும்)† பாவாணர் சாற்றுபொருள் யாதெனினும்
சித்(தி பெறச் செய்வாக்கு வல்லமைக்கா*)‡—அத்தனே
(நின்)றனக்குக் காப்புரைப்பார் நின்மீது செய்யுநூல்
இன்றிதற்குங் காப்புநீ யே. 1

கலித்துறை$

நீயே சரணநின தருளே சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து கூளத்துணை நாடிவந்தேன்
வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே. 2

[பாட பேதம்] : † சக்திவளர்—சக்திகொள் — சக்தியுள—சத்தியுள்ள என்பனவெல்லாம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடபேதங்களாம்.

‡ கைப்பிரதியில் பாரதியார், 'நூல் செய்திடினும் வல்லமைக்கா' என்பதை அடித்துச் 'சித்' என்று மட்டுமே எழுதியிருந்ததாக முன் பதிப்பில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

* 'வல்லமைக்கே' என்கிறார் சுத்தானந்த பாரதியார்.

'வைத்து நூல் செய்திடினும் வல்லமைக்கா' என்பதுவும், 'சித்தமதிற் கொண்டு நூல் செய்வரெனில்' என்பதுவும் கவிமணி அவர்களின் பாடபேதங்களாம்.

$ கலித்துறை எனக் குறித்தன வெல்லாம் கட்டளைக் கலித்துறைகள்.

விருத்தம்

செய்யுந் தொழிலுன் தொழிலேகாண் ;
சீர்பெற் றிடநீ யருள்செய்வாய்,
வையந் தனையும் வெளியினையும்
வானத் தையுமுன் படைத்தவனே !
ஐயா, நான்முகப் பிரமா,
யானை முகனே, வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே,
கமலா சனத்துக் கற்பகமே. 3

அகவல்

கற்பக விநாயகக் கடவுளே, போற்றி !
சிற்பர மோனத் தேவன் வாழ்க !
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க !
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க !
படைப்புக் கிறையவன் பண்ணவர் நாயகன்
இந்திர குருஎன திதயத் தொளிர்வான்
சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம் ;
குணமதிற் பலவாம் ; கூறக் கேளீர் :
உட்செவி திறக்கும் ; அகக்கண் ஒளிதரும் ;
அக்கினி தோன்றும் ; ஆண்மை வலியுறும் ;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே யெடுக்கலாம் ;
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம் ;
அச்சந் தீரும் ; அமுதம் விளையும் ;
வித்தை வளரும் ; வேள்வி யோங்கும் ;[1]
அமரத் தன்மையு மெய்தவும்
இங்குநாம் பெறலாம் ; இஃதுணர் வீரே.[2] 4

[பாட பேதம்] : [1] 'வித்தை வளரும் ; வீரமே யியல்பாம்'
[2] 'அமரத் தன்மையு மெய்துவம் ; நமர்க ளிதனை நன்குணர் வீரே' —கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

வெண்பா

(உண)ர்வீர், உணர்வீர் உலகத்தீ ரிங்குப்
(புண)ர்வீ(ர் அமரரு)றும் போக(ம்)—கண(ப)தி(யைப்)
(போத வடிவாகப் போற்றிப் பணிந்திடுமின்
காதலுடன் கஞ்சமலர்க் கால்.)‡ 5

கலித்துறை

காலைப் பிடித்தேன் கணபதி நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழு(தும்)
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள்செய்துன்
கோலை மனமெனு நாட்டி னிறுத்தல் குறியெனக்கே. 6

விருத்தம்

எனக்கு வேண்டும் வரங்களை
யிசைப்பேன் கேளாய் கணபதி,
மனத்திற் சலன மில்லாமல்,
மதியி லிருளே தோன்றுமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்,
கனக்குஞ் செல்வம் நூறு வய†
திவையுந் தரநீ கடவாயே. 7

அகவல்

கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனை, வேலுடைக் குமரனை,
நாரா யணனை, நதிச்சடை முடியனை,

[பா - ம்] : ‡ 'தஞ்சமெனக் கொண்டு தளரா தெந்நாளுமவன்
கஞ்சமலர்த் தாள் பணிந்தக் கால்'
(அல்லது)
'நெஞ்சிலிருத்தி நிதமுமன் பாகவவன்
கஞ்சமலர்த் தாள் பணிந்தக் கால்'

† 'நூறு வய தெல்லாந்தர நீ கடவாயே
—கவிமணி

பிற நாட் டிருப்போர் பெயர்பல கூறி,
அல்லா யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவருந் தானுய், திருமகள், பாரதி,
உமையெனுந் தேவிய ருகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கு மொருவனேப் போற்றுதல்—
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை யெனப்படும் ; பயனிதில் நான்காம்,
அறம், பொருள், இன்பம், வீடெனு முறையே
தன்னே யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்,
மணக்குள விநாயகா, வான்மறைத் தலேவா,$
தனேத்தா ளுஞ்ந் தன்மைநான் பெற்றிடில்,
எல்லாப் பயன்களுந் தாமே யெய்தும் ;
அசையா நெஞ்ச மருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டிநின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா, வாழ்வேன் களித்தே. 8

வெண்பா

களியுற்று நின்று கடவுளே யிங்குப்
பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய்—ஒளிபெற்றுக்
கல்விபல தேர்ந்து கடமையெலா நன்காற்றித்
தொல்வினைக்கட் டெல்லாம் துறந்து. 9

கலித்துறை

துறந்தார் திறமை பெரிததினும் பெரிதாகு மிங்குக்
குறைந்தாரைக் காத்தெளி யார்க்குண வீந்து குலமகளும்
அறந்தாங்கு மக்களு நீடுழி வாழ்கென அண்டமெலாம்
சிறந்தாளு நாதனேப் போற்றிடுந் தொண்டர் செயுந்
[தவமே. 10

விருந்தம்

தவமே புரியும் வகையறியேன்,
சலியா துறநெஞ் சறியாது,
சிவமே நாடிப் பொழுதனேத்துந்
தியங்கித் தியங்கி-நிற்பேனே,

[முதற் பதிப்பு] : $'விநாயக தேவா, வேத நாயகா.'

நவமா மணிகள் புனைந்தமுடி
நாதா, கருணை லயனே, தத்
துவமா கியதோர் பிரணவமே,
அஞ்சேல் என்று சொல்லுதியே. 11

அகவல்

சொல்லினுக் கரியனுய்ச் சூழ்ச்சிக் கரியனுய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளே,
உள்ளுயி ராகி யுலகங் காக்கும்
சக்தியே தானுந் தனிச்சுடர்ப் பொருளே,
சக்தி குமாரனைச் சந்திர மவுலியைப்
பணிந்தவ னுருவிலே பாவனை நாட்டி,
ஓமெனும் பொருளை யுளத்திலே நிறுத்தி,
சக்தியைக் காக்குந் தந்திரம் பயின்று,
யார்க்கும் எளியனுய், யார்க்கும் வலியனுய்,
யார்க்கும் அன்பனுய், யார்க்கு மினியனுய்
வாழ்ந்திட விரும்பினேன் ; மனமே! நீ யிதை
ஆழ்ந்து கருதியாய்ந் தாய்ந்து, பலமுறை
சூழ்ந்து, தெளிந்துபின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து,
தேறித் தேறிநான் சித்திபெற் றிடவே,
நின்னு லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னு லுனக்கொரு கோயில் புனைவேன் ;
மனமே, எனைநீ வாழ்வித் திடுவாய்.
வீணே யுழலுதல் வேண்டா,
சக்தி குமாரன் சரண்புகழ் வாயே. 12

வெண்பா

புகழ்வோங் கணபதிநின் பொற்கழலே நாளுந்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே—இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யை யெலாம்; ஈங்கிதுகாண்
வல்லபைகோன் தந்த வரம். 13

கலித்துறை

வரமே நமக்கிது கண்டீர் கவலையும் வஞ்சனையும்
கரவும் புலைமை விருப்பமு மையமுங் காய்ந்தெறிந்து
'சிரமீதெங்கள் கணபதி தாண்மலர் சேர்த்தெமக்குத்
தரமேகொல் வானவர்' என்றுளத் தேகளி சார்ந்ததுவே. 14

விருத்தம்

சார்ந்து நிற்பா யெனதுளமே,
சலமுங் கரவுஞ் சஞ்சலமும்
பேர்ந்து, பரம சிவாநந்தர்
பேற்றை நாடி, நாடோறும்
ஆர்ந்த வேதப் பொருள்காட்டும்
ஐயன், சக்தி தலைப்பிள்ளை,
கூர்ந்த விடர்கள் போக்கிடுநங்
கோமான் பாதக் குளிர்நிழலே. 15

அகவல்

நிழலினும் வெயிலினு நேர்ந்தநற் றுணையாய்த்
தழலினும் புனலினு மபாயந் தவிர்த்து
மண்ணினுங் காற்றினும் வானினு மெனக்குப்
பகைமையொன் றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்
உள்ளத் தோங்கு நோக்குறும் விழியும்
மௌன வாயும் வரந்தரு கையும்
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்
ஓமெனு நீலயி லொளியாத் திகழ்வான்
வேத முனிவர் விரிவாப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவுந்
தானே யாகிய தனிமுதற் கடவுள்
யானென தற்றூர் ஞானமே தானுய்
முக்தி நிலைக்கு மூலவித் தாவான்
ஸத்தெனத் தத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்று நிர்மலக் கடவுள்
ஏழையர்க் கெல்லா மிரங்கும் பிள்ளை

வாழும் பிள்ளே மணக்குளப் பிள்ளே
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனே
முப்பொழு தேத்திப் பணிவது முறையே. 16

வெண்பா

முறையே நடப்பாய், முழுமூட நெஞ்சே,
இறையேனும் வாடா யினிமேல்—கறையுண்ட
கண்டன் மகன்வேத காரணன் சக்திமகன்
தொண்டருக் குண்டு துணை. 17

கலித்துறை

துணையே, யெனதுயி ருள்ளே யிருந்து சுடர்விடுக்கும்
மணியே, யெனதுயிர் மன்னவனே,யென்றன் வாழ்வினுக்கோர்
அணியே,யெனுள்ளத்தி லாரமு தேயென தற்புதமே,
இணையே துனக்குரைப் பேன்கடை வானில் எழுஞ்சுடரே. 18

விருத்தம்

சுடரே போற்றி, கணத்தேவர்
துரையே போற்றி, எனக்கென்றும்
இடரே யின்றிக் காத்திடுவாய்,
எண்ணு யிரங்கால் முறையிட்டேன் ;
படர்வான் வெளியிற் பலகோடி
கோடி கோடிப் பல்கோடி
இடரா தோடு மண்டலங்க
ளிசைத்தாய், வாழி யிறையவனே. 19

அகவல்

இறைவி இறையவ னிரண்டு மொன்றுகித்
தாயாய்த் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி யுலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ ! பரம்பொரு ளேயோ !
ஆதி மூலமே ! அனைத்தையுங் காக்கும்
தேவ தேவா, சிவனே, கண்ணு,

வேலா, சாத்தா, விநாயகா, மாடா,
இருளா, சூரியா, இந்துவே, சக்தியே,
வாணீ, காளீ, மாமக ளோயோ,
ஆணுப்பெண் ணுய் அலியாய் உள்ள
தியாதுமாய் விளங்கு மியற்கைத் தெய்வமே,
வேதச் சுடரே, மெய்யாங் கடவுளே,
அபயம் அபயம் அபயநான் கேட்டேன்,
நோவு வேண்டேன், நூருண்டு வேண்டினேன்;
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;†
உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;‡
வேண்டா தனைத்தையு நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே. 20

வெண்பா

கடமை தானேது கரிமுகனே வையத்
திடநீ யருள்செய்தா யெங்க—ளுடைமைகளு
மின்பங்களு மெல்லா மீந்தாய்நீ யாங்களுனக்
கென்புரிவோம் கைம்மா றியம்பு. 21

கலித்துறை

இயம்பு மொழிகள் புகழ்மறை யாகு மெடுத்தவினை
பயன்படும் தேவர் இருபோதும் வந்து பதந்தருவார்
அயன்பதி முன்னேன் கணபதி சூரியன் ஆனைமுகன்
வியன்புகழ் பாடிப் பணிவார் தமக்குறு மேன்மைகளே. 22

[பா - ம்.] : † 'பாவம் வேண்டேன், பல்சுவை வேண்டினேன்;
இழிவு வேண்டேன், இன்பம் வேண்டினேன்'
என்றும்,

‡ 'பிறர்துயர் வேண்டேன், பெருமை வேண்டினேன்;
கொலையினை வேண்டேன், தலைமையை வேண்டினேன்;
களவு வேண்டேன், காதல்-வேண்டினேன்.'
என்றும் முதற் பதிப்பிலே உள்ளன.

விருத்தம்

மேன்மைப் படுவாய் மனமேகேள்
விண்ணி னிடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே,
பயத்தா லேதும் பயனில்லை,
யான்முன் னுரைத்தேன் கோடிமுறை,
இன்னுங் கோடி முறைசொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
அருளுண் டச்ச மில்லையே. 23

அகவல்

அச்ச மில்லை, அமுங்குத லில்லை,
நடுங்குத லில்லை, நாணுத லில்லை,
பாவ மில்லை, பதுங்குத லில்லை ;
ஏது நேரினு மிடர்ப்பட மாட்டோம் ;
அண்டஞ் சிதறினு லஞ்ச மாட்டோம் ;
கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம் ;
யார்க்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம் ;
எங்கு மஞ்சோம், எப்பொழுது மஞ்சோம் ;
வான முண்டு, மாரி யுண்டு,
ஞாயிறுங் காற்றும் நல்ல நீரும்
தீயு மண்ணுந் திங்களு மீன்களும்
உட்லு மறிவு முயிரு முளவே ;
தின்னப் பொருளுஞ் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப் பாட்டுங் காணநல் லுலகும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம்; சலித்திடாய், ஏழை
நெஞ்சே ; வாழி, நேர்மையுடன் வாழி,
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல்.மன்னே
தஞ்ச முண்டு, சொன்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே. 24

வெண்பா

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்;—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான் ;
சிந்தையே, யிம்மூன்றுஞ் செய். 25

கலித்துறை

செய்யுங் கவிதை பராசக்தி யாலே செயப்படுங்காண்
வையத்தைக் காப்பவ ளன்னை சிவசக்தி வண்மையெலாம்
ஐயத்தி லுந்துரி தத்திலுஞ்சிந்தி யழிவதென்னே
பையத் தொழில்புரி நெஞ்சே கணதிபன் பக்தி
கொண்டே. 26

விருத்தம்

பக்தி யுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்,
சக்தி தொழிலே யனைத்துமெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா, கணநாதா,
மேன்மைத் தொழிலிற் பணியெனையே. 27

அகவல்

எனைநீ காப்பாய், யாவுமாந் தெய்வமே !
பொறுத்தா ரன்றே பூமி யாள்வார் ;
யாவுநீ யாயி னனைத்தையும் பொறுத்தல்
செவ்விய நெறியதிற் சிவநிலை பெறலாம் ;
பொங்குநல் போக்கிப் பொறையெனக் கீவாய் ;

மங்கள குணபதி மணக்குளக் கணபதி†
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்;
அகல்விழி யுமையா ளாசை மகனே.*
நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்
உளமெனு நாட்டை யொருபிழை யின்றி
ஆள்வதும் பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பத நோக்கினேன்;
காத்தருள் புரிக, கற்பக விநாயகா,
காத்தருள் புரிக, கடவுளே, யுலகெலாம்
கோத்தருள் புரிக, குறிப்பரும் பொருளே,
அங்குச பாசமுங் கொம்புந் தரித்தாய்
எங்குல தேவா, போற்றி !‡
சங்கரன் மகனே தாளினை போற்றி ! 28

வெண்பா

போற்றி கலியாணி புதல்வனே பாட்டினிலே
ஆற்ற லருளி யடியேனைத்—தேற்றமுடன்
வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய் வாணியருள்
வீணையொலி என்னுவில் விண்டு. 29

[பா – ம்.] : முதற் பதிப்பில்,

† 'யானை முகனே இங்குவந் தருள்செய்
ஓங்கார ரூபா உண்மைப் பொருளே'

என்றும்,

* 'மாதவன் மருகா மணிமலர்த் திருவடி
வாழ்த்திடுந் தொழிலில் வாழ்வித் தருள்வாய்
அசுரரைக் காய்வாய், ஆரண நாதா'

என்றும்,

‡ 'விநாயக தேவா, வேலா, தீயே,
மதியே, ஞாயிறே, அடியேன் மனத்தினுன்
பதத்தினை நாட்டிப் படரு மிடரெலாம்
போக்கி யாள்வாய் புனிதா போற்றி'

என்றும் உள்ளன.

கலித்துறை

விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகனே
தொண்டுனை தன்னே பராசக்திக் கென்றுந் தொடர்ந்திடுவேன்
பண்டைச் சிறுமைகள் போக்கியென் னுவிற் பழுத்தசுவைத்
தெண்டமிழ்ப் பாட லொருகோடி மேவிடச் செய்குவையே. 30

விருத்தம்

செய்யா லினியால் ஸ்ரீதேவி,
செந்தா மரையிற் சேர்ந்திருப்பாள்
கையா லெனநின் றடியேன்செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள் ; புகழ்சேர் வாணியுமென்
னுள்ளே நின்று திங்கவிதை
பெய்வாள், சக்தி துணைபுரிவாள்,
பிள்ளாய், நின்னைப் பேசிடிலே.* 31

அகவல்

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்,
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்—
யாவுமென் னினையா லிடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட னினங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா !
ஞான காசத்து நடுவே நின்றுநான்
'பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்
சாவு நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனைநீ
திருச்செவிக் கொண்டு திருவுள மிரங்கி

[மு - ப.] : * 'நின்னைப் பேணிடிலே' (அல்லது)
'நின்னைப் பேசினிலே.'

'அங்ஙனே யாகுக' என்பாய், ஐயனே!
இந்நாள், இப்பொழு தெனக்கிவ் வரத்தினே
அருள்வாய்; ஆதி மூலமே! அநந்த
சக்தி குமாரனே! சந்திர மவுலீ!
நித்தியப் பொருளே சரணம்†
சரணம் சரணம் சரணமிங் குனக்கே. 32

வெண்பா

உனக்கேயென் ஞவியு முள்ளமுந் தந்தேன்
மனக்கேதம்* யாவினையு மாற்றி—(எனக்கே)‡
நீண்டபுகழ் வாணுள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து. 33

கலித்துறை

விரைந்துன் திருவுள மென்மீ திரங்கிட வேண்டுமையா
சூரங்கை விடுத்துப் பகைவரின் தீவைக் கொளுத்தியவன்
அரங்கத்தி லேதிரு மாதுடன் பள்ளிகொண் டான்மருகா!
வரங்கள் பொழியு முகிலே என்னுள்ளத்து வாழ்பவனே! 34

விருத்தம்

வாழ்க புதுவை மணக்குளத்து
வள்ளல் பாத மணிமலரே;
ஆழ்க வுள்ளஞ் சலனமிலா
தகண்ட வெளிக்கண் அன்பினேயே
சூழ்க; துயர்கள் தொலைந்திடுக;
தொலையா.....வினம்,
வீழ்க கலியின் வலியெல்லாம்,
கிருத யுகந்தான் மேவுகவே. 35

[பா - ம்.]: முதற் பதிப்பிலே,

†'அத்தனே, ஆருயிர்த் தெய்வமே, அகண்ட
நித்தியப் பொருளே நிர்மலா நந்தமே
சத்தியப் பொருளே சரணம்'

என்று உள்ளது.

*'மனக்கேடனைத் தினையு மாற்றி' என்பது பாடபேதம்.

‡'எனக்கே' என்பதற்குப் பதிலாக 'எனக்கு நீ' என்பது கவிமணி அவர்களின் பாடபேதம்.

அகவல்

மேவி மேவித் துயரில் வீழ்வாய்,
எத்தனை கூறியும் விடுதலைக் கிசையாய்,
பாவி நெஞ்சே, பார்மிசை நின்னை
இன்புறச் செய்வேன்; எதற்குமினி யஞ்சேல்
ஐயன் பிள்ளை(யார்) அருளால் உனக்குநான்
அபயமிங் களித்தேன்.....நெஞ்(சே)
நினக்குநா னுரைத்தன நிலைநிறுத் தி(டவே)
தீயிடைக் குதிப்பேன், கடலுள் வீழ்வேன்,
வெவ்விட முண்பேன், மேதினி யழிப்பேன்,
ஏதுஞ் செய்துனை யிடரின்றிக் காப்பேன்;
மூட நெஞ்சே, முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னு மொழிவேன்;
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே ;
ஏது நிகழினு 'நமக்கேன்' என்றிரு;
பராசக்தி யுளத்தின் படியுலக நிகழும்;
நமக்கேன் பொறுப்பு? "நான்என்றோர் தனிப்பொருள்
இல்லை; நானெனும் எண்ணமே வெறும்பொய்"
என்றுன் புத்தன்; இறைஞ்சுவோ மவன்பதம்.
இனியெப் பொழுது முரைத்திடேன். இதை நீ
மறவா திருப்பாய், மடமை நெஞ்சே !
கவலைப் படுதலே கருநர கம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி;
சிவனெரு மகனிதை நினக்கருள் செய்கவே. 36

வெண்பா

செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம்செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு.‡ 37

கலித்துறை

இயல்பு தவறி விருப்பம் விளைத லியல்வதன்றும்
செயலிங்கு சித்த விருப்பினைப் பின்பற்றும்; சீர்மிகவே

[பா - ம்.] : ‡ 'வாழ்க வியல்பு'

பயிலுநல் லன்பை யியல்பெனக் கொள்ளுதிர் பாரிலுள்ளீர்
முயலு வினைகள் செழிக்கும் விநாயகன் மொய்ம்பினிலே.† 38

விருத்தம்

மொய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னேன் அருளைத் துணையாக்கி,
எய்க்கு நெஞ்சை வலியுறுத்தி,
யுடலை யிரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று,
பூலோ கத்தார் கண்முன்னே,
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே. 39

அகவல்

விதியே வாழி, விநாயகா வாழி,
பதியே வாழி, பரமா வாழி,
சிதைவினை நீக்கும் தெய்வமே, போற்றி !
புதுவினை காட்டும் புண்ணியா, போற்றி !
மதியினை வளர்க்கு மன்னே. போற்றி !
இச்சையுங் கிரியையு ஞானமு மென்றுக்கு
மூல சக்தியின் முதல்வா, போற்றி !
பிறைமதி சூடிய பெருமான் வாழி,
நிறைவினைச் சேர்க்கு நிர்மலன் வாழி,
கால மூன்றையுங் கடந்தான் வாழி !
சக்தி தேவி சரணம் வாழி !
வெற்றி வாழி, வீரம் வாழி !
பக்தி வாழி, பலபல காலமும்
உண்மை வாழி, ஊக்கம் வாழி,
நல்ல குணங்களே நம்மிடை யமரர்
பதங்களாம், கண்டீர், பாரிடை மக்களே !
கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதநான் கொண்டனன் ; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே.

[பா - ம்.] : †'மொய்ம்பினையே' 40

—தேசிக விநாயகம் பிள்ளை.

2. தோத்திரப் பாடல்கள்

—:o:—

1. ஆறு துணை

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்—பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி—ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

1. கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமு யர்ந்திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

2. சொல்லுக் கடங்காவே—பராசக்தி
சூரத் தனங்களெல்லாம் ;
வல்லமை தந்திடுவாள்—பராசக்தி
வாழியென் றேதுதிப்போம். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

3. வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம் ;
சுற்றிநில் லாதேபோ !—பகையே !
துள்ளி வருகுதுவேல். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

4. தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

5. பாம்புத் தலைமேலே—நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

6. செல்வத் திருமகளைத்—திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்.
செல்வமெல் லாந்தருவாள்—நமதொளி
திக்கனைத் தும்பரவும். (ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

2. பக்தி

[ராகம் — பிலஹரி]

பல்லவி

பக்தியி னாலே—தெய்வ—பக்தியி னாலே.

சரணங்கள்

1. பக்தியி னாலே—இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ !
சித்தந் தெளியும்,—இங்குச்
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும்,—நல்ல
வீர முறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம்,—நெஞ்சிற்
சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும், (பக்தியி னாலே)

2. காமப் பிசாசைக்—குதிக்
கால்கொண் டடித்து விழுத்திட லாகும்;இத்
தாமஸப் பேயைக்—கண்டு
தாக்கி மடித்திட லாகும்;எந் நேரமும்
தீமையை எண்ணி—அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகி யெறிந்துபொய்ந்
நாம மில்லாதே—உண்மை
நாமத்தி னிங்கு நன்மை விளைந்திடும்,
(பக்தியி னாலே)

3. ஆசையைக் கொல்வோம்,—புலை
யச்சத்தைக் கொன்று பொசுக்கிடு வோம்,கெட்ட
பாச மறுப்போம்,—இங்குப்
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை

மோசஞ் செய்யாமல்—உண்மை
முற்றிலுங் கண்டு வணங்கி வணங்கியோர்
ஈசனைப் போற்றி—இன்பம்
யாவையு முண்டு புகழ்கொண்டு வாழ்குவம்,
(பக்தியி னலே)

4. சோர்வுகள் போகும்,—பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெற லாகும்,நற்
பார்வைகள் தோன்றும்,—மிடிப்
பாம்பு கடித்த விஷமகன் றேநல்ல
சேர்வைகள் சேரும், – பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி வீனைந்திடும்,
தீர்வைகள் தீரும்,—பிணி
தீரும், பலபல இன்பங்கள் சேர்ந்திடும்,
(பக்தியி னலே)

5. கல்வி வளரும்,—பல
காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்,
அல்ல லொழியும்,—நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்,
சொல்லுவ தெல்லாம்—மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகும்,மெய்
வல்லமை தோன்றும்,—தெய்வ
வாழ்க்கையுற் றேயிங்கு வாழ்ந்திட லாம்,உண்மைப்
(பக்தியி னலே)

6. சோம்ப லழியும்,—உடல்
சொன்ன படிக்கு நடக்கும், முடிசற்றுங்
கூம்புத லின்றி—நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்,
வீம்புகள் போகும்,—நல்ல
மேன்மையுண் டாகிப் புயங்கள் பருக்கும்,பொய்ப்
பாம்பு மடியும்,—மெய்ப்
பரம்வென்று நல்ல நெறிகளுண் டாய்விடும்,
(பக்தியி னலே)

7. சந்ததி வாழும்,—வெறுஞ்
சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்,
'இந்தப் புவிக்கே—இங்கொர்
ஈசனுண் டாயின் அறிக்கையிட் டேனுன்றன்
கந்த மலர்த்தாள்—துணை ;
காதல் மகவு வளர்ந்திட வேண்டும்,என்
சிந்தை யறிந்தே—அருள்
செய்திட வேண்டும்'என் றுல்அரு ளெய்திடும்,
(பக்தியி னலே)

---

3. ஸரஸ்வதி ஸ்தோத்திரம்

(நொண்டிச் சிந்து)

1. எங்ஙனம் சென்றிருந்தீர்—என
தின்னுயிரே யென்றன் இசையமுதே
திங்களைக் கண்டவுடன்—கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன்—கடல்
காலியி லிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே—அந்தப்
புதுமையி லேதுயர் மறந்திருப்பேன்.

2. மாதமொர் நான்காநீர்—அன்பு
வறுமையி லேயென வீழ்த்திவிட்டீர்.
பாதங்கள் போற்றுகின்றேன்—என்றன்
பாவமெ லாங்கெட்டு ஞானகங்கை
நாதமொ டெப்பொழுதும்—என்றன்
நாவினி லேபொழிந் திடவேண்டும் ;
வேதங்க ளாக்கிடுவீர்!—அந்த
விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர்!

3. கண்மணி போன்றவரே!—இங்குக்
காலையு மாலையுந் திருமகளாம்
பெண்மணி யின்பத்தையும்—சக்திப்
பெருமகள் திருவடிப் பெருமையையும்

வண்மையி லோதிடுவீர்!—என்றன்
வாயிலு மதியிலும் வளர்ந்திடுவீர்!
அண்மையி லிருந்திடுவீர்!—இனி
அடியனைப் பிரிந்திடல் ஆற்றுவனே?

4. தானெனும் பேய்கெடவே,—பல
சஞ்சலக் குரங்குகள் தளைப்படவே,
வானெனும் ஒளிபெறவே,—நல்ல
வாய்மையி லேமதி நிலைத்திடவே,
வானெனப் பொழிந்திடுவீர்!†—அந்தத்
திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்!
ஊனங்கள் போக்கிடுவீர்!—நல்ல
ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர்!

5. தீயினை நிறுத்திடுவீர்!—நல்ல
தீரமுந் தெளிவுமிங் கருள்புரிவீர்!
மாயையி லறிவிழந்தே—உம்மை
மதிப்பது மறந்தனன்* பிழைகளெல்லாம்
தாயென வுமைப்பணிந்தேன்—பொறை
சார்த்திநல் லருள்செய வேண்டுகின்றேன்;
வாயினிற் சபதமிட்டேன்;—இனி
மறக்கிலேனெனை மறக்கிலீர்!

---

4. ஸரஸ்வதி தேவியின் புகழ்

ராகம்—ஆனந்த பைரவி] [தாளம்—சாப்பு

1. வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்

[பா - ம்.]: †'தேனெனப் பொழிந்திடுவீர்' —கவிமணி

]மு - ப.]: *'மதிப்பது மறந்தன'

உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றுளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.
(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னுவை யிருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றுள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றுள்.
(வெள்ளைத்)

3. வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்.
(வெள்ளைத்)

4. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.
(வெள்ளைத்)

5. செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர் !
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர் !
வந்த னம்மிவட் கேசெய்வ தென்றுல்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர் !
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்த னத்தை மலரை யிடுவோர்
சாத்தி ரம்மிவள் பூசனை யன்றும்.
(வெள்ளைத்)

6. வீடு தோறும் கலியின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

7. ஊனர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினி லின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி ளெளிமிகுத் தோங்க.
(வெள்ளைத்)

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாய்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர் !
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர் !
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர் !

மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ ?
போன தற்கு வருந்துதல் வேண்டா,
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர் !
(வெள்ளோத்)

9. இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்.
(வெள்ளோத்)

10. நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர் !
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர் !
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர் !
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர் !
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர் !
(வெள்ளோத்)

---

5. லக்ஷ்மி தேவி—சரண் புகுதல்

1. மாதவன் சக்தியினைச்—செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம்—எந்தப்
போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும்—உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை—அன்னை
மாமக ளடியினை சரண்புகுவோம்.

2. கீழ்களி னவமதிப்பும்—தொழில்
கெட்டவ ரிணக்கமுங் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல்—செய்யு
முயற்சியெல் லாங்கெட்டு முடிவதுவும்
ஏழ்கட லோடியுமோர்—பயன்
எய்திட வழியின்றி யிருப்பதுவும்
வீழ்கலிக் கொடு†நோய்தான்—வைய
மீதினில் வறுமையோர் கொடுமையன்றே !

3. பாற்கட லிடைப்பிறந்தாள்—அது
பயந்தநல் லமுதத்தின் பான்மைகொண்டாள்
ஏற்குமோர் தாமரைப்பூ—அதில்
இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள்—அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள்—செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள்.

4. நாரணன் மார்பினிலே—அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்
தோரணப் பந்தரிலும்—பசுத்
தொழுவிலும் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும்—உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும்—ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள்.

5. பொன்னிலு மணிகளிலும்—நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும்—செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும்—மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி—அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்.

[பா - ம்.] : † 'வீழ்கவிக் கொடு'—முதற்பதிப்பு
'வீழ்கவக் கொடு'—கவிமணி

6. மண்ணினுட் கனிகளிலும்—மலை
வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்
புண்ணிய வேள்வியிலும்—உயர்
புகழிலு மதியிலும் புதுமையிலும்
பண்ணுநற் பாவையிலும்—நல்ல
பாட்டிலுங் கூத்திலும் படத்தினிலும்
நண்ணிய தேவிதனே—எங்கள்
நாவிலும் மனத்திலும் நாட்டிடுவோம்.

7. வெற்றிகொள் படையினிலும்—பல
விநயங்க ளறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும்—நல்ல
நாவலர் தேமொழித் தொடரினிலும்‡
உற்றசெத் திருத்தாயை—நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்;
கற்றபல் கலைகளெல்லாம்—அவள்
கருணைநல் லொளிபெறக் கலிதவிர்ப்போம்.

---

6. லக்ஷ்மி பிரார்த்தனை
திரு வேட்கை

ராகம்—நாட்டை] [தாளம்—சதுஸ்ர ஏகம்

1. மலரின் மேவு திருவே;—உன்மேல்
மையல்பொங்கி நின்றேன்;
நிலவு செய்யு முகமும்—காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலக லென்ற மொழியும்—தெய்வக்
களிதுலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம்வேண்டு கின்றேன்.

2. கமல மேவும் திருவே!—நின்மேல்
காதலாகி நின்றேன்;
குமரி நின்னை யிங்கே—பெற்றோர்
கோடியின்ப முற்றார்;

[பா - ம்.] : ‡ தொடையினிலும்

அமரர் போல வாழ்வேன்,—என்மேல்
அன்புகொள்வை யாயின் ;
இமய வெற்பின் மோத,—நின்மேல்
இசைகள்பாடி வாழ்வேன் ;

3. வாணி தன்னே யென்றும்—நினது
வரிசைபாட வைப்பேன் ;
நாணி யேகலாமோ ?—என்னே
நன்கறிந்தி லாயோ ?
பேணிவைய மெல்லாம்—நன்மை
பெருகவைக்கும் விரதம்
பூணுமைந்த ரெல்லாம்—கண்ணன்
பொறிகளாவ ரன்றே ?

4. பொன்னு நல்லமணியும்—சுடர்செய்
பூண்களேந்தி வந்தாய் !
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவிநிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ !—திருவே !
என்னுயிர்க்கொ ரமுதே !
நின்னே மார்பு சேரத்—தழுவி
நிகரிலாது வாழ்வேன் ;

5. செல்வ மெட்டு மெய்தி—நின்னுற்
செம்மையேறி வாழ்வேன் ;
இல்லை என்ற கொடுமை—உலகில்
இல்லையாக வைப்பேன் ;
முல்லை போன்ற முறுவல்—காட்டி,
மோகவாதை நீக்கி,
எல்லை யற்ற சுவையே !—எனை நீ
என்றும் வாழ வைப்பாய்.

———

7. ஸ்ரீதேவி ஸ்துதி

திருமகள்

ராகம்—சக்கரவாகம்] [தாளம்—திஸ்ர ஏகம்

1. நித்தமுனே வேண்டிமனம்
நினைப்ப தெல்லாம் நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வ திலே
பெருமை யுண்டோ ? திருவே !
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றிகொண்டே*
உத்தமநிலே சேர்வரென்றே
உயர்ந்தவேத முரைப்பதெல்லாம்
சுத்தவெறும் பொய்யோடீ ?†
சுடர்மணியே ! திருவே,
மெத்தமயல் கொண்டுவிட்டேன்
மேவிடுவாய், திருவே !

2. உன்னையன்றி யின்பமுண்டோ
உலகமிசை வேறே ?
பொன்னைவடி வென்றுடையாய் !
புத்தமுதே, திருவே !
மின்னெளிதரு நன்மணிகள்
மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரைப்பூ
மணிக்குளமுள்ள சோலைகளும்
அன்னம்நறு நெய்பாலும்
அதிசயமாத் தருவாய் !
நின்னருளே வாழ்த்திஎன்றும்
நிலைத்திருப்பேன், திருவே !‡

[பா - ம்.] : * 'வெற்றி கண்டே'
† 'சுத்த முழுப் பொய்யோகாண்'
‡ 'வாழ்த்திநன்று நிலமளிப்பேன், திருவே.'
—கவிமணி

3. ஆடுகளு மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளு நெடுநிலமும் விரைவினிலே தருவாய்.
ஈடுநினக் கொர்தெய்வ முண்டோ ?
எனக்குனே யன்றிச்சரண முண்டோ ?
வாடுநிலத்தைக் கண்டிரங்கா
மழையினைப்போல் உள்ளமுண்டோ ?
நாடுமணிச் செல்வ மெல்லாம்
நன்கருள்வாய், திருவே !
பீடுடைய வான்பொருளே
பெருங்களியே, திருவே !

---

8. நவராத்திரிப் பாட்டு

உஜ்ஜயினீ ! நித்ய கல்யாணீ !
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி (உஜ்ஜயினீ !)
உஜ்ஜய காரண சங்கர தேவீ
உமா ஸரஸ்வதீ ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜயினீ !)
வாழி புனேந்து மஹேசுவர தேவன்,
தோழி, பதங்கள் பணிந்து துணிந்தனம். (உஜ்ஜயினீ !)
ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தித்
திறத்தை நமக்கருளிச் செய்யும் உத்தமி (உஜ்ஜயினீ !)

---

9. நவராத்திரிப் பாட்டு

பராசக்தி: (மூன்றும் ஒன்றுகிய மூர்த்தி)

1. மாதா பராசக்தி வையமெலா நீநிறைந்தாய் !
ஆதார முன்னேயல்லால் ஆரெமக்குப் பாரினிலே ?
ஏதா யினும்வழிநீ சொல்வாய், எமதுயிரே !
வேதாவின் தாயே ! மிகப்பணிந்து வாழ்வோமே.

வாணி

2. வாணிகலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினுள்
காணுகின்ற காட்சியாய்க் காண்ப தெல்லாங்
காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

ஸ்ரீ தேவி

3. பொன்னரசி, நாரணனர் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

பார்வதி

4. மலையிலே தான்பிறந்தாள், சங்கரனே மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையி லுயர்த்திடுவாள், நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

---

10. மூன்று காதல்

முதலாவது—ஸரஸ்வதி காதல்

ராகம்—ஸரஸ்வதி மனோஹரி] [தாளம்—திஸ்ர ஏகம்

1. பிள்ளைப் பிராயத்திலே—அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்குப்
பள்ளிப் படிப்பினிலே—மதி
பற்றிட வில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணைமேல்—அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும்—கண்டு
வெள்ளை மனது பறிகொடுத் தேனம்மா !

2. ஆடி வருகையிலே—அவள்
அங்கொரு வீதி முனையினிற்பாள் ; கையில்
ஏடு தரித்திருப்பாள்,—அதில்
இங்கித மாகப் பதம்படிப்பாள், அதை
நாடி யருகணைந்தால்,—பல
ஞானங்கள் சொல்லி யினிமைசெய்வாள் ; "இன்று
கூடி மகிழ்வ" மென்றுல்,—விழிக்
கோணத்தி லேநகை காட்டிச்செல் வாளம்மா !

3. ஆற்றங் கரைதனிலே—தனி
யானதோர் மண்டப மீதினிலே, தென்றற்
காற்றை நுகர்ந்திருந்தேன்,—அங்குக்
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்;அதை
ஏற்று மனமகிழ்ந்தே "அடி
என்னே டிணங்கி மணம்புரிவாய்"என்று
போற்றிய போதினிலே,—இளம்
புன்னகை பூத்து மறைந்துவிட் டாளம்மா !

4. சித்தந் தளர்ந்ததுண்டோ ?—கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல்—பகற்
பேச்சு மிரவிற் கனவு மவளிடை
வைத்த நினைவையல்லால்—பிற
வாஞ்சை யுண்டோ ?வய தங்ஙன மேயிரு
பத்திரண் டாமளவும்—வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றிநின் றேனம்மா !

இரண்டாவது—லக்ஷ்மி காதல்

ராகம்—ஸ்ரீ ராகம்] [தாளம்—திஸ்ர ஏகம்

5. இந்த நிலையினிலே—அங்கொர்
இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு
சுந்தரி வந்துநின்றாள்—அவள்
சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்
சிந்தை திறைகொடுத்தேன்—அவள்
செந்திரு வென்று பெயர்சொல்லி னாள்;மற்றும்
அந்தத் தினமுதலா—நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின் றேனம்மா !

6. புன்னகை செய்திடுவாள்,—அற்றைப்
போது முழுது மகிழ்ந்திருப்பேன் ; சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள்,—அந்த
மோகத்தி லேதலை சுற்றிடுங் காண்;பின்னர்

என்ன பிழைகள்கண்டோ—அவள்
என்னைப் புறக்கணித் தேகிடு வாள்அங்கு
சின்னமும் பின்னமுமா—மனஞ்
சிந்தி யுளமிக நொந்திடு வேனம்மா!

7. காட்டு வழிகளிலே,—மலைக்
காட்சியி லே,புனல் வீழ்ச்சியி லேபல
நாட்டுப் புறங்களிலே,—நகர்
நண்ணு சிலசுடர் மாடத்தி லேசில
வேட்டுவர் சார்பினிலே,—சில
வீர ரிடத்திலும், வேந்த ரிடத்திலும்,
மீட்டு மவள்வருவாள்—கண்ட
விந்தையி லேயின்ப மேற்கொண்டு போமம்மா!

மூன்றுவது—காளி காதல்

ராகம்—புன்னகவராளி] [தாளம்—திஸ்ர ஏகம்

8. பின்னெ ரிராவினிலே—கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு;
கன்னி வடிவமென்றே—களி
கண்டுசற் றேயரு கிற்சென்று பார்க்கையில்,
அன்னை வடிவமடா!—இவள்
ஆதிப ராசக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா !—பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா !

9. செல்வங்கள் பொங்கிவரும்;—நல்ல
தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்;
அல்லும் பகலுமிங்கே—இவை
அத்தனை கோடிப் பொருளினுள் னேநின்று
வில்லை யசைப்பவளே—இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளே—நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடு வோமடா!

---

11. முருகன் பாட்டு

ராகம்—நாட்டைக்குறிஞ்சி] [தாளம்—ஆதி

பல்லவி

முருகா—முருகா—முருகா

சரணங்கள்

1. வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

2. அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருவாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

3. சுருதிப் பொருளே, வருக.
துணிவே, கனலே, வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே, சரணம். (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

6. குருவே, பரமன் மகனே,
குகையில் வளருங் கனலே,
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
ஸமரா திபனே, சரணம் சரணம். (முருகா)

———

12. முருகன் பாட்டு

1. வீரத் திருவிழிப் பார்வையும்—வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே—எந்த
நேரத் திலுமெனைக் காக்குமே;—அன்னை
நீலி பராசக்தி தண்ணருட்—கரை
யோரத்தி லேபுனை கூடுதே;—கந்தன்
ஊக்கத்தை யென்னுள நாடுதே;—மலை
வாரத்திலேவினை யாடுவான்—என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான்.

2. வேடர் கனியை விரும்பியே—தவ
வேடம் புனைந்து திரிகுவான்;—தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே—முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான்;—சுரர்
பாடு விடிந்து மகிழ்ந்திட—இருட்
பார மலைகளைச் சீறுவான்;—மறை
யேடு தரித்த முதல்வனும்—குரு
வென்றிட மெய்ப்புக ழேறுவான்.

3. தேவர் மகளை மணந்திடத்—தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான்;—மக்கள்
யாவருக் குந்தலை யாயினன் ;—மறை
அர்த்த முணர்த்துநல் வாயினன்;—தமிழ்ப்
பாவலர்க் கின்னருள் செய்குவான்;—இந்தப்
பாரி லறமழை பெய்குவான்;—நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான்;—நித்தம்
ஆண்மையும் வீரமு மூட்டுவான்.

4. தீவளர்த் தேபழ வேதியர்—நின்றன்
சேவகத் தின்புகழ் காட்டினர்;—ஒளி
மீவளருஞ் செம்பொ னூட்டினர்—நின்றன்
மேன்மையி னுலக நாட்டினர்;—ஐய,

நீவள ருங்குரு வெற்பிலே*—வந்து
நின்றுநின் சேவகம் †பாடுவோம்—வரம்
ஈவள் பராசக்தி யன்னைதான்—உங்கள்
இன்னரு ளேயென்று நாடுவோம்—நின்றன்
(வீரத் திருவிழிப்)

---

13. முருகக் கடவுள்மீது கிளித் தூது

பல்லவி

சொல்ல வல்லாயோ?—கிளியே
சொல்லநீ வல்லாயோ?

அனுபல்லவி

வல்லவேல் முருகன்—தனையிங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று (சொல்ல)

சரணங்கள்

1. தில்லை யம்பலத்தே—நடனம்
செய்யும் அமரர்பிரான்—அவன்
செல்வத் திருமகனை—இங்கு வந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடு வாயென்று (சொல்ல)

2. அல்லிக் குளத்தருகே—ஒரு நாள்
அந்திப் பொழுதினிலே—அங்கொர்
முல்லைச் செடியதன்பாற்—செய்த வினை
முற்று மறந்திடக் கற்றதென் னேயென்று (சொல்ல)

3. பாலை வனத்திடையே—தனைக்கைப்
பற்றி நடக்கையிலே—தன் கை
வேலின் மிசையாணை—வைத்துச் சொன்ன
வித்தை மொழிகளைச் சிந்தைசெய்வா யென்று (சொல்ல)

---

*'குருவெற்பு' என்பது திருநெல்வேலிக்கு அண்மையி லுள்ள சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய 'குரு மலை' என்னும் ஊராகும்.

† 'நின் சேவகம்' என்பதற்குப் பதிலாகத் 'திருப்புகழ்' என்றும் ஒரு பாடம் உண்டு.

14. வேலன் பாட்டு*

ராகம்—புன்னாகவராளி] [தாளம்—திஸ்ர ஏகம்

1. வில்லினை யொத்த புருவம் வளைத்தனை,
வேலவா !—அங்கொர்
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி
யானது, வேலவா !
சொல்லினைத் தேனிற் குழைத்துரைப் பாள்சிறு
வள்ளியைக்—கண்டு
சொக்கி மரமென நின்றனை தென்மலைக்
காட்டிலே.
கல்லினை யொத்த வலிய மனங்கொண்ட
பாதகன்—சிங்கன்
கண்ணிரண் டாயிரங் காக்கைக் கிரையிட்ட
வேலவா !
பல்லினைக் காட்டிவெண் முத்தைப் பழித்திடும்
வள்ளியை—ஒரு
பார்ப்பனக் கோலந் தரித்துக் கரந்தொட்ட
வேலவா !

2. வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழங்குங்
கடலினை—உடல்
வெம்பி மறுகிக் கருகிப் புகைய
வெருட்டினாய்.
கிள்ளை மொழிச்சிறு வள்ளி யெனும் பெயர்ச்
செல்வத்தை—என்றும்
கேடற்ற வாழ்வினை யின்ப விளக்கை
மருவினாய்.
கொள்ளைகொண் டே அம ராவதி வாழ்வு
குலைத்தவன்—பானு
கோபன் தலைபத்துக் கோடித்துணுக்குறக்
கோபித்தாய்.

குறிப்பு:— *வேலன் அல்லது சுப்பிரமணியக் கடவுள் என்பது ஆத்மாவின் வீர்ய ரூபமாகிய அக்நி தேவனுக்குப் பெயர். இஃது வேதப் பொருள்.

துள்ளிக் குலாவித் திரியுஞ் சிறுவன
மானைப்போல்—தினைத்
தோட்டத்தி லேயொரு பெண்ணை மணங்
கொண்ட வேலவா !

3. ஆறு சுடர்முகங் கண்டு விழிக்கின்ப
மாகுதே ;—கையில்
அஞ்சலெ னுங்குறி கண்டு மகிழ்ச்சியுண்
டாகுதே.
நீறு படக்கொடும் பாவம் பிணிபசி
யாவையும்—இங்கு
நீக்கி யடியரை நித்தமுங் காத்திடும்
வேலவா !
கூறு படப்பல கோடி யவுணரின்
கூட்டத்தைக்—கண்டு
கொக்கரித் தண்டங் குலுங்க நகைத்திடுஞ்
சேவலாய் !†
மாறு படப்பல வேறு வடிவொடு
தோன்றுவாள்—எங்கள்
வைரவி பெற்ற பெருங்கன லே, வடி
வேலவா !

---

15. ஆர்ய தரிசனம்

ஓர் கனவு

[ஸ்ரீ ராகம்—ஆதி தாளம்.]

கனவென்ன கனவே—என்றன்
பண்துயி லாது நனவினிலே யுற்ற (கன)

1. கானகங் கண்டேன்—அடா*
கானகங் கண்டேன்—உச்சி
வானகத்தே வட்ட மதியொளி கண்டேன். (கன)

[பா – ம்.]: † 'சிரித்திடுங் கோழியாய்'
* 'அடா' என்பதற்குப் பதிலாக 'அடர்' என்றும் பாடபேதமுண்டு.

2. பொற்றிருக் குன்றம்—அங்கொர்
பொற்றிருக் குன்றம்—அதைச்
சுற்றி யிருக்கும் சுனைகளும் பொய்கையும். (கன)

புத்த தரிசனம்

3. குன்றத்தின் மீதே—அந்தக்
குன்றத்தின் மீதே—தனி
நின்றதொ ரால நெடுமரங் கண்டேன். (கன)

4. பொன்மரத் தின்கீழ்—அந்தப்
பொன்மரத் தின்கீழ்—வெறுஞ்
சின்மய மானதோர் தேவ னிருந்தனன். (கன)

5. புத்த பகவன்—எங்கள்
புத்த பகவன்—அவன்
சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்முகங் கண்டேன். (கன)

6. காந்தியைப் பார்த்தேன்—அவன்
காந்தியைப் பார்த்தேன்—உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தனன். (கன)

7. ஈதுநல் விந்தை !—என்னே !
ஈதுநல் விந்தை !—புத்தன்
சோதி மறைந்திருள் துன்னிடக் கண்டனன். (கன)

8. பாய்ந்ததங் கொளியே ;—பின்னும்
பாய்ந்ததங் கொளியே !—அருள்
தேய்ந்த தென்மேனி சிலிர்த்திடக் கண்டேன். (கன)

கிருஷ்ணர்ஜுன தரிசனம்

9. குன்றத்தின் மீதே—அந்தக்
குன்றத்தின் மீதே—தனி
நின்றபொற் றேரும் பரிகளும் கண்டேன். (கன)

10. தேரின்முன் பாகன்—மணித்
தேரின்முன் பாகன்—அவன்
சீரினைக் கண்டு திகைத்துநின் றேனிந்தக் (கன)

11. ஓமென்ற மொழியும்—அவன்
ஓமென்ற மொழியும்—நீலக்
காமன்ற னுருவுமவ் வீமன்றன் திறலும் (கன)

12. அருள்பொங்கும் விழியும்—தெய்வ
அருள்பொங்கும் விழியும்—காணில்
இருள்பொங்கு நெஞ்சினர் வெருள்
பொங்குந் திகிரியும், (கன)

13. கண்ணனைக் கண்டேன்—எங்கள்
கண்ணனைக் கண்டேன்—மணி
வண்ணனை ஞான மலியினைக் கண்டேன். (கன)

14. சேனைகள் தோன்றும்—வெள்ளச்
சேனைகள் தோன்றும்—பரி
யானையுந் தேரும் அளவில தோன்றும். (கன)

15. கண்ணனற் றேரில்—நீலக்
கண்ணனற் றேரில்—மிக
எண்ணயர்ந் தானெ ரிளைஞனைக் கண்டேன். (கன)

16. விசையன்கொ லிவனே !—விறல்
விசையன்கொ லிவனே !—நனி
இசையுநன் கிசையுமிங் கிவனுக்கிந் நாமம். (விசை)

17. வீரிய வடிவம் !—என்ன
வீரிய வடிவம் !—இந்த
ஆரிய னெஞ்ச மயர்ந்ததென் விந்தை ! (விசை)

18. பெற்றதென் பேறே—செவி
பெற்றதென் பேறே—அந்தக்
கொற்றவன் சொற்கள் செவியுறக் கொண்டேன்.
(கன)

19. "வெற்றியை வேண்டேன் ;—ஐய,
வெற்றியை வேண்டேன் ;—உயிர்
அற்றிடு மேனு மவர்தமைத் தீண்டேன். (பெற்ற)

20. சுற்றங் கொல்வேனே ?—என்றன்
சுற்றங் கொல்வேனே ?—கிளை
அற்றபின் செய்யு மரசுமொ ரரசோ?" (பெற்ற)

21. மிஞ்சிய அருளால்—மித
மிஞ்சிய அருளால்—அந்த
வெஞ்சின வீரன் பலசொல் விரித்தான். (கன)

22. இம்மொழி கேட்டான்—கண்ணன்
இம்மொழி கேட்டான்—ஐயன்
செம்மலர் வதனத்திற் சிறுநகை பூத்தான். (கன)

23. வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்திசெய் திடடா.
(வில்லினை)

24. வாடி நில்லாதே ;—மனம்
வாடி நில்லாதே ;—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல்சொல் லாதே. (வில்லினை)

25. ஒன்றுள துண்மை—என்றும்
ஒன்றுள துண்மை—அதைக்
கொன்றி டொணாது குறைத்தலொண் ணாது.
(வில்லினை)

26. துன்பமு மில்லை—கொடுந்
துன்பமு மில்லை—அதில்
இன்பமு மில்லை பிறப்பிறப் பில்லை. (வில்லினை)

27. படைகளுந் தீண்டா—அதைப்
படைகளுந் தீண்டா—அனல்
சுடவு மொண்ணாது புனல்நனை யாது. (வில்லினை)

28. செய்தலுன் கடனே—அறஞ்
செய்தலுன் கடனே—அதில்
எய்துறும் விளைவினி லெண்ணம்வைக் காதே.
(வில்லினை)

---

16. கண்ணன் பிறப்பு

1. கண்ணன் பிறந்தான்—எங்கள்
கண்ணன் பிறந்தான்—இந்தக்
காற்றதை யெட்டுத் திசையிலுங் கூறிடும்.
திண்ண முடையான்—மணி
வண்ண முடையான்—உயர்
தேவர் தலைவன் புவிமிசைத் தோன்றினன்.

2. பண்ணை யிசைப்பீர்—நெஞ்சிற்
புண்ணை யொழிப்பீர்—இந்தப்
பாரினி லேதுயர் நீங்கிடு மென்றிதை
எண்ணிடைக் கொள்வீர்—நன்கு
கண்ணை விழிப்பீர்—இனி
ஏதுங் குறைவில்லை ; வேதந் துணையுண்டு.

3. அக்கினி வந்தான்—அவன்
திக்கை வளைத்தான்—புவி
யாரிருட் பொய்ம்மைக் கலியை மடித்தனன் ;
துக்கங் கெடுத்தான்—சுரர்
ஒக்கலும் வந்தார்—சுடர்ச்
சூரியன், இந்திரன், வாயு, மருத்துக்கள்—

4. மிக்க திரளாய்—சுரர்
இக்கணந் தன்னில்—இங்கு
மேவி நிறைந்தனர் ; பாவி யசுரர்கள்
பொக்கென வீழ்ந்தார்,—உயிர்
கக்கி முடிந்தார் ‡ ;—கடல்
போல ஒலிக்குது வேதம் புவிமிசை.

5. சங்கரன் வந்தான் ; —இங்கு
மங்கல மென்றுன் ; —நல்ல
சந்திரன் வந்தின் னமுதைப் பொழிந்தனன் ;
பங்கமொன் றில்லை—ஒளி
மங்குவ தில்லை ; இந்தப்
பாரின்கண் முன்பு வானத்தி லேநின்று
(கண்ணன் பிறந்தான்)

6. கங்கையும் வந்தாள் ;—கலை
மங்கையும் வந்தாள் ;—இன்பக்
காளி பராசக்தி அன்புட னெய்தினள் ;
செங்கம லத்தாள்—எழில்
பொங்கு முகத்தாள்—திருத்
தேவியும் வந்து சிறப்புற நின்றனள்.
(கண்ணன் பிறந்தான்)

[பா - ம்.] : ‡ 'முடித்தார்'

17. கண்ணன் வரவு

பல்லவி

வருவாய், வருவாய், வருவாய்—கண்ணு
வருவாய், வருவாய், வருவாய்.

சரணங்கள்

1. உருவாய் அறிவில் ஒளிர்வாய்—கண்ணு
உயிரின் னமுதாய்ப் பொழிவாய்—கண்ணு
கருவாய் என்னுள் வளர்வாய்—கண்ணு
கமலத் திருவோ டிணைவாய்—கண்ணு (வருவாய்)

2. இணைவாய் எனதா வியிலே—கண்ணு
இதயத் தினிலே யமர்வாய்—கண்ணு
சுணைவா யசுரர் தலைகள்—சிதறக்
கடையூ ழியிலே படையோ டெழுவாய்! (வருவாய்)

3. எழுவாய் கடல்மீ தினிலே—யெழுமோர்
இரவிக் கிணையா உளமீ தினிலே
தொழுவேன் சிவனும் நினையே—கண்ணு,
துணையே, அமரர் தொழும்வா னவனே! (வருவாய்)

---

18. கண்ணன் துதி

காயிலே புளிப்ப தென்னே ? கண்ண பெருமானே !—நீ
கனியிலே இனிப்ப தென்னே ? கண்ண பெருமானே !
நோயிலே படுப்ப தென்னே ? கண்ண பெருமானே !—நீ
நோன்பிலே உயிர்ப்ப தென்னே ? கண்ண பெருமானே !
காற்றிலே குளிர்ந்த தென்னே ? கண்ண பெருமானே !—நீ
கனலிலே சுடுவ தென்னே? கண்ண பெருமானே !
சேற்றிலே குழம்ப லென்னே ? கண்ண பெருமானே !—நீ
திக்கிலே தெளிந்த தென்னே ? கண்ண பெருமானே !
ஏற்றிநின்னைத் தொழுவ தென்னே? கண்ண பெருமானே!—நீ
எளியர்தன்னைக் காப்ப தென்னே ? கண்ண பெருமானே !
போற்றினேரைக் காப்ப தென்னே? கண்ண பெருமானே!—நீ

பொய்யர்தம்மை மாய்ப்ப தென்னே? கண்ண பெருமானே!
போற்றி! போற்றி! போற்றி! போற்றி! கண்ணபெரு
மானே!—நின்
பொன்னடிகள் போற்றி நின்றேன், கண்ண பெருமானே!

---

19. கண்ணம்மா—அங்க வர்ணனை

ராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ரூபகம்

பல்லவி

எங்கள் கண்ணம்மா நகைபுது ரோஜாப் பூ;
எங்கள் கண்ணம்மா விழிஇந்த்ர நீலப் பூ!
எங்கள் கண்ணம்மா முகஞ்செந் தாமரைப் பூ;
எங்கள் கண்ணம்மா நுதல்பால ஸூர்யன்.

சரணங்கள்

1. எங்கள் கண்ணம்மா எழில்மின் னலைநோக்கும்;
எங்கள் கண்ணம்மா புருவங்கள் மதன்விற்கள்;
திங்களை மூடிய பாம்பினைப் போல
செறிகுழல்; இவள் நாசி எட் பூ. (எங்கள்)

2. மங்கள வாக்கு நித்யானந்த ஊற்று;
மதுர வாய்அமிர்தம்; இதழமிர்தம்;
ஸங்கீத மென்குரல் ஸரஸ்வதி வீணை:
சாய லரம்பை, சதுர்அயி ராணி (எங்கள்)

3. இங்கித நாத நிலைய மிருசெவி;
சங்கு நிகர்த்த கண்டம் அமிர்த சங்கம்;
மங்களக் கைகள் மஹாசக்தி வாஸம்;
வயிறு வலை;இடை அமிர்த வீடு. (எங்கள்)

4. சங்கரனைத் தாங்கு நந்திபத சதுரம்;
தாமரை யிருதாள் லக்ஷ்மீ பீடம்;
பொங்கித் ததும்பித் திசையெங்கும் பாயும்
புத்தன்பும் ஞானமும் மெய்த்திருக் கோலம்.
(எங்கள்)

---

20. கண்ணம்மா (1)

பல்லவி

பீடத்தி லேறிக் கொண்டாள்—மனப்
பீடத்தி லேறிக் கொண்டாள்.

சரணங்கள்

1. நாடித் தவம்புரிந்து—பீடுற்ற முனிவரர்
கேடற்ற தென்றுகண்டு—கூடக் கருதுமொளி
மாடத்தி லேறிஞானக்—கூடத்தில் விளையாடி
ஓடத் திரிந்துகன்னி—வேடத் திரதியைப்போல்
ஈடற்ற கற்பனைகள்—காடுற்ற சிந்தனைகள்
மூடிக் கிடக்குநெஞ்சின்—ஊடுற்ற தையமரர்
தேடித் தவிக்குமின்ப—வீடொத் தினிமைசெய்து
வேடத்தி சிறுவள்ளி வித்தையென் கண்ணம்மா
(பீடத்திலேறிக்)

2. கண்ணன் திருமார்பிற்—கலந்த கமலையென்கோ ?
விண்ணவர் தொழுதிடும்—வீரசிங் காதனத்தே,
நண்ணிச் சிவனுடலே—நாடு மவளென்கோ ?
எண்ணத் திதிக்குதடா, இவள்பொன் னுடலமுதம்
பெண்ணி லரசியிவள்—பெரிய எழிலுடையாள்
கண்ணுள் மணியெனக்குக்—காத லிரதியிவள்
பண்ணி லினியசுவை—பரந்த மொழியினுள்
உண்ணு மிதழமுத ஊற்றினள் கண்ணம்மா
(பீடத்திலேறிக்)

---

21. கண்ணம்மா (2)

பல்லவி

நின்னையே ரதியென்று
நினைக்கிறேனடி—கண்ணம்மா ! (நின்னையே)
தன்னையே சசியென்று
சரண மெய்தினேன். (நின்னையே)

சரணங்கள்

1. பொன்னேயே நிகர்த்தமேனி மின்னேயே நிகர்த்த சாயற்
பின்னேயே—நித்ய கன்னியே,—கண்ணம்மா !
(நின்னேயே)

2. மாரனம் புகளென்மீது வாரிவாரி வீசநீ—கண்ண
பாராயோ—வந்து சேராயோ,—கண்ணம்மா !
(நின்னேயே)

3. யாவு மே சுகமுனிக் கொர் ஈசனு மெனக்குன் தோற்றம்
மேவு மேஇங்கி யாவுமே,—கண்ணம்மா !
(நின்னேயே)

---

22. கண்ணம்மா (3)

1. காற்று வெளியிடைக் கண்ணம்மா—நின்றன்
காதலே யெண்ணிக் களிக்கின்றேன் ;—அமு
தூற்றினே யொத்த இதழ்களும்—நில
வூறித் ததும்பும் விழிகளும்—பத்து
மாற்றுப்பொன் னெத்தநின் மேனியும்—இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும்—எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே—இங்கொர்
விண்ணவ னுகப் புரியுமே—இந்தக்
(காற்று வெளி)

2. நீயென தின்னுயிர் கண்ணம்மா—எந்த
நேரமு நின்றனைப் போற்றுவேன்—துயர்
போயின, போயின துன்பங்கள்—நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே—என்றன்
வாயினி லேயமு தூறுதே—கண்ணம்
மாவென்ற பேர்சொலும் போழ்திலே—உயிர்த்
தீயினி லேவளர்சோதியே—என்றன்
சிந்தனே யேயென்றன் சித்தமே ! இந்தக்
(காற்று வெளி)

---

23. திருக்காதல்

திருவே நினைக்காதல் கொண்டேனே—நினது திரு
வுருவே மறவா திருந்தேனே—பல திசையில்
தேடித் திரிந்தினைத் தேனே—நினக்கு மனம்
வாடித் தினங்களைத் தேனே—அடி, நினது
பருவம் பொறுத்திருந் தேனே—மிகவுநம்பிக்
கருவம் படைத்திருந் தேனே—இடைநடுவில்
பையச் சுதிகள்செய் தாயே—அதனிலுமென்
மையல் வளர்தல்கண் டாயே—அமுதமழை
பெய்யக் கடைக்கணல் காயே—நினதருளில்
உய்யக் கருணைசெய் வாயே—பெருமை கொண்டு
மையந் தழைக்கவைப் பேனே—அமரயுகஞ்
செய்யத் துணிந்துநிற் பேனே—அடியெனது
தேனே, எனதிரு கண்ணே,—எனையுகந்து
தானே வருந்திருப்—பெண்ணே !

---

24. ஸூர்ய தர்சனம்

[காலே வேளையில், கடற்கரையில், சூரியன் மேகங்களால் மூடப்பட்டிருக்க, முகம் காட்டும்படி அவனே வேண்டிப் பாடிய பாடல்கள்.]

[ராகம்—பூபாளம்]

1. சுருதி யின்கண் முனிவரும் பின்னே
தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன் ;
பரிதி யேபொருள் யாவிற்கு முதலே,
பானுவே, பொன்செய் பேரொளித் திரளே,
கருதி நின்னை வணங்கிட வந்தேன் ;
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி இற்றே.

2. வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குந்றேன் ;
நாத வார்கட லின்னெலி யோடு
நற்ற மிழ்ச்சொ லிசையையுஞ் சேர்ப்பேன் ;
காத மாயிர மோர்கணத் துள்ளே
சுடுகி யோடும் கதிரினம் பாடி
ஆத வா,நீனே வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

---

25. ஞாயிறு—ஸூர்ய ஸ்துதி

1. கடலின் மீது கதிர்களே வீசிக்
சுடுகி வான்மிசை ஏறுதி யையா,
படரும் வாளெளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்.
உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ்வொர் நுண்டுளி யும்விழி யாகச்
சுடரு நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே.

2. என்ற னுள்ளங் கடலினேப் போலே
எந்த நேரமு நின்னடிக் கீழே
நின்று தன்னகத் தொவ்வொ ரணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை யையா,
ஞாயிற் றின்கணெளிதருந் தேவா !
மன்று வானிடைக் கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா !

3. காதல் கொண்டனே போலுமண் மீதே,
சுண்பிறழ் வின்றி நோக்குகின் ருயே !
மாதர்ப் பூமியு நின்மிசைக் காதல்
மண்டி ஞளிதி லேயமொன் றில்லே ;

சோதி கண்டு முகத்தி லிவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித் தாய்தந்தை நீவி ருமக்கே
ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன்.

---

26. வெண்ணிலா

[வெண்ணிலா என்பது இங்குச் சந்திரனுடைய பிரகாசத்தையன்று, சந்திரனையே குறிப்பது.]

1. எல்லை யில்லாததோர் வானக் கடலிடை
வெண்ணிலாவே—விழிக்
கின்ப மளிப்பதோர் தீவென் றிலகுவை
வெண்ணிலாவே.
சொல்லையும் கள்ளையு நெஞ்சையுஞ் சேர்த்திங்கு
வெண்ணிலாவே—நின்றன்
சோதி மயக்கும் வகையது தானென்சொல்
வெண்ணிலாவே.
நல்ல வொளியின் வகைபல கண்டிலன்
வெண்ணிலாவே
நனவை மறந்திடச் செய்வது கண்டிலன்
வெண்ணிலாவே.
கொல்லு மமிழ்தை நிகர்த்திடுங் கள்ளொன்று
வெண்ணிலாவே—வந்து
கூடியிருக்குது நின்னொளி யோடிங்கு
வெண்ணிலாவே.

2. மாதர் முகத்தை நினக்கிணை கூறுவர்
வெண்ணிலாவே—அஃது
வயதிற் கவலையி னெவிற் கெடுவது
வெண்ணிலாவே.
காத லொருத்தி யிளைய பிராயத்தள்
வெண்ணிலாவே—அந்தக்
காமன் றன்வில்லை யிணைத்த புருவத்தள்
வெண்ணிலாவே.

மீதெழு மன்பின் விளைபுன னகையினள்
வெண்ணிலாவே—முத்தம்
வேண்டிமுன் காட்டு முகத்தி னெழிலிங்கு
வெண்ணிலாவே.
சாத லழித லிலாது நிரந்தரம்
வெண்ணிலாவே—நின்
தண்முகந் தன்னில் விளங்குவ தென்னைகொல்
வெண்ணிலாவே.

3. நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு
வெண்ணிலாவே—நன்கு
நீயு மமுது மெழுந்திடல் கண்டனன்
வெண்ணிலாவே.
மன்னு பொருள்க ளனைத்திலு நிற்பவன்
வெண்ணிலாவே—அந்த
மாயனப் பாற்கடல் மீதுறல் கண்டனன்
வெண்ணிலாவே.
துன்னிய நீல நிறத்தள் பராசக்தி
வெண்ணிலாவே—இங்குத்
தோன்று முலகவ ளேயென்று கூறுவர்
வெண்ணிலாவே.
பின்னிய மேகச் சடைமிசைக் கங்கையும்
வெண்ணிலாவே—
பெட்புற நீயும் விளங்குதல் கண்டனன்
வெண்ணிலாவே.

4. காதலர் நெஞ்சை வெதுப்புவை
நீயென்பர் வெண்ணிலாவே—நினைக்
காதல்செய் வார்நெஞ்சிற் கின்னமு
தாகுவை—வெண்ணிலாவே.
சீத மணிநெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே—நீ
தேசு மிகுந்தவெண் டாமரை போன்றனை
வெண்ணிலாவே.

மோத வருங்கரு மேகத் திரளினை
வெண்ணிலாவே—நீ
மூத்தி ஞெளிதந் தழகுறச் செய்குவை
வெண்ணிலாவே.
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்
வெண்ணிலாவே—நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவ ராமன்றே?
வெண்ணிலாவே.

5. மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே—உன்றன்
மேனி யழகு மிகைப்படக் காணுது
வெண்ணிலாவே.
நல்லிய லார்யவ னத்தியர் மேனியை
வெண்ணிலாவே—மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும்,
வெண்ணிலாவே.
சொல்லிய வார்த்தையில் நாணுற் றனைபோலும்
வெண்ணிலாவே—நின்
சோதி வதன முழுது மறைத்தனை
வெண்ணிலாவே.
புல்லியன் செய்த பிழையொறுத் தேயருள்
வெண்ணிலாவே—இருள்
போகிடச் செய்து நினதெழில் காட்டுதி,
வெண்ணிலாவே.

---

27. ஸோமதேவன் புகழ்

பல்லவி

ஜயஸோம, ஜயஸோம, ஜயஸோம தேவா
ஜய ஜய.

சரணம்

1. நயமுடைய இந்திரனை நாயகத் திட்டாய்
வயமிக்க அஸுரரின் மாயையைச் சுட்டாய்

வியனுலகி லாநந்த விண்ணிலவு பெய்தாய்
துயர்நீங்கி யென்னுளஞ் சுடர்கொளச் செய்தாய்
மயல்கொண்ட காதலரை மண்மிசைக் காப்பாய்
உயவேண்டி யிருவருளும் ஒன்றுறக் கோப்பாய்
புயலிருண்டே குமுறி யிருள்வீசி வரல்போற்
பொய்த்திரள் வருமதைப் புன்னகையில் மாய்ப்பாய்.

---

28. சாகா வரம்

பல்லவி

சாகா வரமருள்வாய், ராமா
சதுர்மறை நாதா—ஸரோஜ பாதா!

சரணங்கள்

1. ஆகாசந் தீகால் நீர்மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்
ஏகா மிர்த மாகிய நின்தாள்
இணைசர ணென்றுல் இதுமுடி யாதா? (சாகா)

2. வாகார்தோள் வீரா, நீரா,
மன்மத ரூபா, வானவர் பூபா,
பாகார்மொழி ஸீதையின் மென்றோள்
பழகிய மார்பா! பதமலர் சார்பாச் (சாகா)

3. நித்யா, நிர்மலா, ராமா,
நிஷ்களங்கா, ஸர்வா தாரா,
ஸத்யா, ஸநாதநா, ராமா,
சரணம், சரணம், சரண முதாரா! (சாகா)

---

29. கிளிப் பாட்டு

1. திருவைப் பணிந்துநித்தம் செம்மைத் தொழில்புரிந்து
வருக வருவதென்றே—கிளியே மகிழ்வுற்றி ருப்போமடீ

2. வெற்றி செயலுக்குண்டு விதியி னியமமென்று
கற்றுத் தெளிந்தபின்னும்—கிளியே கவலைப்
படலாகுமோ?

3. துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பி லழியுமடா—கிளியே அன்புக் கழிவில்லைகாண்.

4. ஞாயிற்றை யெண்ணியென்றும் நடுமை நிலைபயின்று
ஆயிர மாண்டுலகில்—கிளியே அழிவின்றி
வாழ்வோமடா.

5. தூய பெருங்கனலைச் சுப்பிர மண்ணியனை
நேயத் துடன்பணிந்தால்—கிளியே நெருங்கித் துயர்
வருமோ ?

30. சந்திரமதி பாட்டு *

[ராகம்—ஆனந்த பைரவி] [தாளம்—ஆதி

1. பச்சைக் குழந்தையடி—கண்ணிற்
பாவையடி சந்திரமதி.
இச்சைக் கினியமது;—என்றன்
இருவிழிக்குத் தேநிலவு ;
நச்சுத்தலைப் பாம்புக்குள்ளே—நல்ல
நாகமணி யுள்ளதென்பார் ;
துச்சப்படு நெஞ்சிலே—நின்றன்
சோதி வளருதடா.

2. பேச்சுக் கிடமேதடி—நீ
பெண்குலத்தின் வெற்றியடி
ஆச்சர்ய மாயையடி— என்றன்
ஆசைக் குமரியடி
நீச்சு நிலைகடந்த—வெள்ள
நீருக்குள்ளே வீழ்ந்தவர்போல்
தீச்சுடரை வென்றவொளி—கொண்ட
தேவிநினை விழந்தேனடி.†

---

*‘சந்திரமதி’’ என்பது காதல் கொண்டவளாகிய பெண்ணைக் குறிப்பது; சந்திரன் காதலுக்கு அதி தேவதை யாதலால்.

[பா - ம்.] : † வீழ்ந்தேனடி : ‘விரும்பினேன், அடி’ என்ற பொருளில் ‘விழைந்தேனடி’ என்று மிருக்கலாம் என்பது கவிமணியின் பாடபேதம்.

3. நீலக் கடலினிலே—நின்றன்
நீண்டகுழல் தோன்றுதடி ;
கோல மதியினிலே—நின்றன்
குளிர்ந்தமுகங் காணுதடி ;
ஞால வெளியினிலே—நின்றன்
ஞானவொளி வீசுதடி ;
கால நடையினிலே—நின்றன்
காதல் விளங்குதடி. (பச்சைக் குழந்தையடி)

---

31. வேள்விப் பாட்டு

1. இயற்கையென் றுனையுரைப்பார்—சிலர்
இணங்குமைம் பூதங்க ளென்றிசைப்பார்
செயற்கையின் சக்தியென்பார்—உயிர்த்
தீயென்பர், அறிவென்பர், ஈசனென்பர்
வியப்புறு தாய்நினக்கே—இங்கு
வேள்விசெய் திடுமெங்கள் 'ஓம்' என்னும்
நயப்படு மதுவுண்டே—சிவ
நாட்டியங் காட்டிநல் லருள்புரிவாய்.

2. அன்புறு சோதியென்பார்—சிலர்
ஆரிருட் காளியென் றுனைப்புகழ்வார்
இன்பமென் றுரைத்திடுவார்—சிலர்
எண்ணருந் துன்பமென் றுனையிசைப்பார்
புன்பலி கொண்டுவந்தோம்—அருள்
பூண்டெமைத் தேவர்தங் குலத்திடுவாய்
மின்படு சிவசக்தி—எங்கள்
வீரைநின் திருவடி சரண்புகுந்தோம்.

3. உண்மையி லமுதாவாய்—புண்கள்
ஒழித்திடு வாய்களி யுதவிடுவாய்
வன்மைகொ ளுயிர்ச்சுடராய்—இங்கு
வளர்ந்திடு வாயென்று மாய்வதிலாய்
ஒண்மையும் ஊக்கமுந்தான்—என்றும்
ஊறிடுந் திருவருட் சுனையாவாய்
அண்மையி லென்றுநின்றே—எம்மை
ஆதரித் தருள்செயும் விரதமுற்றுய்.

4. தெளிவுறு மறிவினோ நாம்—கொண்டு
சேர்த்தனம், நினக்கது ஸோமரஸம்
ஒளியுறு முயிர்ச்செடியில்—இதை
ஓங்கிடு மதிவலி தனிற் பிழிந்தோம்
களியுறக் குடித்திடுவாய்—நின்றன்
களிநடங் காண்பதற் குளங்கனிந்தோம்
குளிர்சுவைப் பாட்டிசைத்தே—சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம்.

5. அச்சமுந் துயருமென்றே—இரண்
டசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்துநின்றார்
துச்சமிங் கிவர்படைகள்—பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்
இச்சையுற் றிவரடைந்தார்—எங்கள்
இன்னமு தைக்கவர்ந் தேகிடவே
பிச்சையிங் கெமக்களித்தாய்—ஒரு
பெருநக ருடலெனும் பெயரினதாம்.

6. கோடிமண் டபந்திகழும்—திறற்
கோட்டையிங் கிதையவர் பொழுதனைத்தும்
நாடிநின் றிடர்புரிவார்—உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்
சாடுபல் குண்டுகளால்—ஒளி
சார்மதிச் கூடங்கள் தகர்த்திடுவார்
பாடிநின் றுனைப்புகழ்வோம்—எங்கள்
பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய்.

7. நின்னருள் வேண்டுகின்றோம்—எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும்—எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணிவயல்கள்—எங்கள்
ஆடு மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே—அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்.

8. எம்முயி ராசைகளும்—ஏங்கள்
இசைகளுஞ் செயல்களுந் துணிவுகளும்
செம்மையுற் றிடவருள்வாய்—நின்றன்
சேவடி யடைக்கலம் புகுந்துவிட்டோம்.
மும்மையின் உடைமைகளும்—திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்
அம்மைநற் சிவசக்தி—எமை
அமரர்தந் நிலையினி லாக்கிடுவாய்.

———

32. அக்நி தோமம்—(தீ)

ராகம்—நாதநாமக்ரியை] [தாளம்—சதுஸ்ர ஏகம்

1. ரிஷிகள் : எங்கள் வேள்விக் கூட மீதில்
ஏறுதே தீ! தீ!—இந்நேரம்
பங்க முற்றே பேய்க ளோடப்
பாயுதே தீ! தீ!—இந்நேரம்.

2. அஸுரர் : தோழ ரே,நம் மாவி வேவச்
சூழுதே தீ! தீ!—ஐயோ! நாம்
வாழ வந்த காடு வேவ
வந்ததே தீ! தீ!—அம்மாவோ!

3. ரிஷி : பொன்னை யொத்தோர் வண்ணமுற்றுன்
போந்து விட்டானே—இந்நேரம்
சின்னமாகிப் பொய்ய ரக்கர்
சிந்தி வீழ்வாரே—இந்நேரம்.

4. அஸு : இந்தி ராதி தேவர் தம்மை
ஏசி வாழ்ந்தோமே—ஐயோ! நாம்
வெந்து போக மானி டர்க்கோர்
வேத முண்டாமோ!—அம்மாவோ!

5. ரிஷி : வானை நோக்கிக் கைகள் தூக்கி
வளருதே தீ! தீ!—இந்நேரம்
ஞான மேனி உதய கன்னி
நண்ணி விட்டாளே—இந்நேரம்.

6. அஸு : கோடி நாளாய் இவ்வ னத்திற்
கூடி வாழ்ந்தோமே—ஐயோ ! நாம்
பாடி வேள்வி மாந்தர் செய்யப்
பண்பி ழந்தோமே—அம்மாவோ !

7. ரிஷி : காட்டில் மேயுங் காளை போன்றுன்
காணுவீர் தீ! தீ!—இந்நேரம்
ஓட்டி யோட்டிப் பகையை யெல்லாம்
வாட்டு கின்றுனே—இந்நேரம்.

8. அஸு : வலியி லாதார் மாந்த ரென்று
மகிழ்ந்து வாழ்ந்தோமே—ஐயோ ! நாம்
கலியை வென்றோர் வேத வுண்மை
கண்டு கொண்டாரே—அம்மாவோ !

9. ரிஷி : வலிமை மைந்தன் வேள்வி முன்னேன்
வாய்தி றந்தானே—இந்நேரம்
மலியு நெய்யுந் தேனு முண்டு
மகிழ வந்தானே—இந்நேரம்.

10. அஸு : உயிரை விட்டும் உணர்வை விட்டும்
ஓடி வந்தோமே—ஐயோ! நாம்
துயிலு டம்பின் மீதிலுந் தீ
தோன்றி விட்டானே—அம்மாவோ !

11. ரிஷி : அமரர் தூதன் சமர நாதன்
ஆர்த்தெ ழுந்தானே—இந்நேரம்
குமரி மைந்தன் எமது வாழ்விற்
கோயில் கொண்டானே—இந்நேரம்.

12. அஸு : வருணன் மித்ரன் அர்ய மானும்
மதுவை யுண்பாரோ!—ஐயோ! நாம்
பெருகு தீயின் புகையும் வெப்பும்
பின்னி மாய்வோமோ!—அம்மாவோ !

13. ரிஷி : அமர ரெல்லாம் வந்து நம்முன்
அவிகள் கொண்டாரே—இந்நேரம்
நமனு மில்லை பகையு மில்லை
நன்மை கண்டோமே—இந்நேரம்.

14. அஸு : பகனு மிங்கே யின்ப மெய்திப்
பாடு கின்றுனே—ஐயோ! நாம்
புகையில் வீழ இந்திரன் சீர்
பொங்கல் கண்டீரோ!—அம்மாவோ!

15. ரிஷி : இளையும் வந்தாள் கவிதை வந்தாள்
இரவி வந்தானே—இந்நேரம்
விளையு மெங்கள் தீயி னுலே
மேன்மை யுற்றுமே—இந்நேரம்.

16. ரிஷி : அன்ன முண்பீர் பாலு நெய்யும்
அமுது முண்பீரே—இந்நேரம்
மின்னி நின்றீர் தேவ ரெங்கள்
வேள்வி கொள்வீரே—இந்நேரம்.

17. ரிஷி : ஸோம முண்டு தேவர் நல்கும்
ஜோதி பெற்றுமே—இந்நேரம்
தீமை தீர்ந்தே வாழி யின்பஞ்
சேர்ந்து விட்டோமே—இந்நேரம்.

18. ரிஷி : உடலு யிர்மே லுணர்வி லுந்தீ
ஒங்கி விட்டானே—இந்நேரம்
கடவு ளர்தாம் எம்மை வாழ்த்திக்
கைகொ டுத்தாரே—இந்நேரம்.

19. ரிஷி : எங்கும் வேள்வி யமர ரெங்கும்
யாங்க ணுந் தீ! தீ!—இந்நேரம்
தங்கு மின்பம் அமர வாழ்க்கை
சார்ந்து நின்றுமே—இந்நேரம்.

20. ரிஷி : வாழ்க தேவர் ; வாழ்க வேள்வி
மாந்தர் வாழ்வாரே—இந்நேரம்
வாழ்க வையம், வாழ்க வேதம்,
வாழ்க தீ! தீ! தீ!—இந்நேரம்.

33. அக்னி பகவான்

யாகப் பாட்டு

[ராகம்—புன்னகவராளி]

பல்லவி

தீ வளர்த்திடுவோம்—பெருந்
தீ வளர்த்திடுவோம்

சரணங்கள்

1. ஆவியி னுள்ளும் அறிவி னிடையிலும்
அன்பை வளர்த்திடுவோம்—விண்ணின்
ஆசை வளர்த்திடுவோம்—களி
யாவல் வளர்த்திடுவோம்—ஒரு
தேவி மகனைத் திறமைக் கடவுளைச்
செங்கதிர் வானவனை—விண்ணோர் தமைத்
தேனுக் கழைப்பவனைப்—பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம்—வாரீர். (தீ)

2. சித்தத் துணிவினை மானுடர் சேல்வனைத்
தீமை யழிப்பவனை—நன்மை
சேர்த்துக் கொடுப்பவனை—பல
சீர்க ளுடையவனைப்—புவி
அத்தனை யுஞ்சுட ரேறத் திகழ்ந்திடும்
ஆரியர் நாயகனை—உருத்திரன்
அன்புத் திருமகனை—பெருந்திர
ளாகிப் பணிந்திடுவோம்—வாரீர். (தீ)

3. கட்டுக்கள் போக்கி விடுதலை தந்திடுங்
கண்மணி போன்றவனை—எம்மைக்
காவல் புரிபவனைத்—தொல்லைக்
காட்டை யழிப்பவனைத்—திசை
எட்டும் புகழ்வளர்ந் தோங்கிட வித்தைகள்
யாவும் பழகிடவே—புவிமிசை
இன்பம் பெருகிடவே—பெருந்திரள்
எய்திப் பணிந்திடுவோம்—வாரீர். (தீ)

4. நெஞ்சிற் கவலைகள் நோவுகள் யாவையும்
நீக்கிக் கொடுப்பவனை—உயிர்
நீளத் தருபவனை—ஒளிர்
நேர்மைப் பெருங்கனலை—நித்தம்
அஞ்சலஞ் சேலென்று கூறி யெமக்குநல்
லாண்மை சமைப்பவனைப்—பல்வெற்றிகள்
ஆக்கிக் கொடுப்பவனைப்—பெருந்திரள்
ஆகிப் பணிந்திடுவோம்—வாரீர். (தி

5. அச்சத்தைச் சுட்டங்கு சாம்பரு மின்றி
அழித்திடும் வானவனைச்—செய்கை
ஆற்றுமதிச் சுடரைத்—தடை
யற்ற பெருந்திறலை—எம்முள்
இச்சையும் வேட்கையும் ஆசையுங் காதலும்
ஏற்றதொர் நல்லறமும்—கலந்தொளி
ஏறுந் தவக்கனலைப்—பெருந்திரள்
எய்திப் பணிந்திடுவோம்—வாரீர். (தி

6. வானகத்தைச் சென்று தீண்டுவ னிங்கென்று
மண்டி யெழுந்தழலைக்—கவி
வாணர்க்கு நல்லமுதைத்—தொழில்
வண்ணந் தெரிந்தவனை—நல்ல
தேனையும் பாலையு நெய்யையுஞ் சோற்றையுந்
தீம்பழம் யாவினையும்—இங்கே யுண்டு
தேக்கிக் களிப்பவனைப்—பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம்—வாரீர். (தி

7. சித்திர மாளிகை பொன்னெளிர் மாடங்கள்
தேவத் திருமகளிர்—இன்பந்
தேக்கிடுந் தேனிசைகள்—சுவை
தேறிடு நல்லிளமை—நல்ல
முத்து மணிகளும் பொன்னு நிறைந்த
முழுக்குடம் பற்பலவும்—இங்கேதர
முற்பட்டு நிற்பவனைப்—பெருந்திரள்
மொய்த்துப் பணிந்திடுவோம்—வாரீர். (தி

---

34. வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற$ வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம்' ஓம் ஓம் ஓம்.

---

35. கோவிந்தன் பாட்டு

1. கண்ணிரண்டும் இமையாமல் செந்நிறத்து
மெல்லிதழ்ப்பூங் கமலத் தெய்வப்
பெண்ணிரண்டு விழிகளாயு நோக்கிடுவாய்,
கோவிந்தா! பேணி னுனக்கு
நண்ணிரண்டு பொற்பாத மளித்தருள்வாய்,
சராசரத்து நாதா! நாளும்
எண்ணிரண்டு கோடியினு மிகப் பலவாம்
வீண்கவலை யெளிய னேற்கே.

2. எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவ னேயிவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான

[பா - ம்.] ; $ 'மண் விளைந்திட'

—கவிமணி

வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டி லெல்லாம்
களியிலே, கோவிந்தா, நினைக்கண்டு
நின்றெடுநான் கலப்ப தென்றே ?

3. என்கண்ணே மறந்துனிரு கண்களேயே
யென்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணைப் புவியெல்லா நீ யெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதற்
பாவமெலா மடிந்து* நெஞ்சிற்
புன்கண்போய் வாழ்ந்திடவே, கோவிந்தா,
எனக்கமுதம் புகட்டு வாயே.

---

36. இறைவனை வேண்டுதல்

[ராகம்—தன்யாசி]

பல்லவி

எத்தனைகோடி யின்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா ! இறைவா ! இறைவா ! (ஓ—எத்தனை)

சரணங்கள்

1 சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்குச்
சேதனம் பூதத்து வியலுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய். (எத்தனை)

2. முக்தியென் றொருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினை யுமுண ருமுணர்வமைத்தாய்
பக்தியென் றொருநிலை வகுத்தாய் எங்கள்
பரமா, பரமா, பரமா. (ஓ—எத்தனை)

[பா - ம்.] : * 'பாவமெலா மடித்து'

37. காளிப் பாட்டு

1. யாது மாகி நின்றாய்—காளி
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம்—காளி
தெய்வ லீலை யன்றே ?
பூத மைந்து மானாய்—காளி
பொறிக ளைந்து மானாய்[1]
போத மாகி நின்றாய்—காளி
பொறியை விஞ்சி நின்றாய்.

2. இன்ப மாகி விட்டாய்—காளி
என்னுளே புகுந்தாய்
பின்பு நின்ன யல்லால்—காளி
பிறிது நானு முண்டோ ?
அன்ப ளித்து விட்டாய்—காளி
ஆண்மை தந்து விட்டாய்
துன்ப நீக்கி விட்டாய்—காளி
தொல்லை போக்கி[2] விட்டாய்.

---

38. காளி ஸ்தோத்திரம்

1. யாது மாகி நின்றாய்—காளீ
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம்—நின்றன்
செயல்க ளன்றி யில்லை.
போது மிங்கு மாந்தர்—வாழும்
பொய்ம்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே—என்மீ
தருள்பு ரிந்து காப்பாய்.

[பா - ம்.] : 1. 'பொறிகளைக் கடந்தாய்'
2. 'பொறியை மிஞ்சி'
3. 'துயரழித்து'.

—கவிமணி

2. எந்த நாளு நின்மேல்—தாயே,
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னேப்ப யந்தாய்,—தாயே,
கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில்—வானில்
மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும்—அங்குன்
செம்மை தோன்று மன்றே!

3. கர்ம யோக மொன்றே—உலகில்
காக்கு மென்னும் வேதம்;
தர்ம நீதி சிறிதும்—இங்கே
தவற லென்ப தின்றி
மர்ம மான பொருளாம்—நின்றன்
மலர டிக்க ணெஞ்சம்
செம்மை யுற்று நாளும்—சேர்ந்தே
தேசு கூட வேண்டும்.

4. என்ற னுள்ள வெளியில்—ஞான
திரவி யேற வேண்டும்.
குன்ற மொத்த தோளும்—மேருக்
கோல மொத்த வடிவும்
நன்றை நாடு மனமும்—நீயெந்
நாளு மீதல் வேண்டும்
ஒன்றை விட்டு மற்றோர்—துயரில்
உழலு நெஞ்சம் வேண்டா.

5. வான கத்தி லொளியைக்—கண்டே
மனம கிழ்ச்சி பொங்கி
யானை தற்கு மஞ்சேன்—ஆகி
எந்த நாளும் வாழ்வேன்
ஞான மொத்த தம்மா—உவமை
நானு ரைக்கொ ணாதாம்
வான கத்தி லொளியின்—அழக
வாழ்த்து மா றியாதோ?

6. ஞாயி றென்ற கோளம்—தருமோர்
நல்ல பேரொ ளிக்கே
தேய மீதோ ருவமை—எவரே
தேடி யோத வல்லார் ?
வாயி னிக்கு மம்மா—அழகாம்
மதியி னின்ப ஒளியை
நேய மோடு ரைத்தால்—ஆங்கே
நெஞ் சிளக்க மெய்தும்.

7. காளி மீது நெஞ்சம்—என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும்—பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும்—என்றும்
இன்ப நிற்கு மனமும்
வாழி யீதல் வேண்டும்—அன்னாய் !
வாழ்க நின்றன் அருளே.

---

39. ஹே காளீ !

1. எண்ணி லாத பொருட்குவை தானும்
ஏற்ற மும்புவி யாட்சியு மாங்கே
விண்ணி லாதவ னோர்த்திடும் ஒளியும்
வெம்மை யும்பெருந் திண்மையு மறிவும்
தண்ணி லாவி னமைதியும் அருளும்
தருவ லின்றென தன்னை யென்காளி ;
மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்,
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்.

2. தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதி னிலேபெறச் செய்வேன்,
வான மூன்று மழைதரச் செய்வேன்,
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்,
மானம் வீரிய மாண்மை நன்னோர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்,
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்;
நான் விரும்பிய காளி தருவாள்.

---

40. மகா காளியின் புகழ்

காவடிச் சிந்து

ராகம்—ஆனந்த பைரவி] [தாளம்—ஆதி

1. காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின்மீது
காளிசக்தி யென்றபெயர் கொண்டு—ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு—தழல்
காலும்விழி நீலவன்ன மூலஅத்து வாக்களெனும்
கால்களா றுடையதெனக் கண்டு—மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.
மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணுமண்ணு மானசக்தி வெள்ளம் —இந்த
விந்தையெல்லா மாங்கதுசெய் கள்ளம்—பழ
வேதமா யதன்முனுள்ள நாதமாய் விளங்குமிந்த
வீரசக்தி வெள்ளம்விழும் பள்ளம்—ஆக
வேண்டுநித்த மென்றனேழை யுள்ளம்.

2. அன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
ஆக்கநீக்கம் யாவுமவள் செய்கை—இதை
ஆர்ந்துணர்ந்த வர்களுக்குண் டுய்கை—அவள்
ஆதியா யநாதியா யகண்டவறி வாவளுன்றன்
அறிவுமவள் மேனியிலோர் சைகை—அவள்
ஆனந்தத்தி னெல்லையற்ற பொய்கை.
இன்பவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
இஃதெலா மவள்புரியு மாயை—அவள்
ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை—எனில்
எண்ணியேஓம் சக்தியெனும் புண்ணியமுனிவர் நித்த
மெய்துவார்மெய்ஞ் ஞானமெனுந் தியை—எரித்
தெற்றுவாரிந் நானெனும்பொய்ப் பேயை.

3. ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சத்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும்—ஒன்றே
யாகினு லுலகனேத்தும் சாகும்—அவை

யன்றியோர் பொருளுமில்லை, அன்றியொன்று மில்லையிதை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
அறிவுதான் பரமஞான மாகும்.
நீதியா மரசுசெய்வர் நிதிகள்பல கோடிதுய்ப்பர்
நீண்டகாலம் வாழ்வர்தரை மீது—எந்த
நெறியுமெய்து வர்நினைத்த போது—அந்த
நித்தமுத்த சுத்த புத்த சத்த பெருங் காளிபத
நீழலடைந் தார்க்கில்லையோர் தீது—என்று
நேர்மைவேதஞ் சொல்லும்வழி யீது.

---

41. முத்துமாரி

1. உலகத்து நாயகியே,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
உன்பாதம் சரண்புகுந்தோம்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
கலகத் தரக்கர்பலர்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார், எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
பலகற்றும் பலகேட்டும்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
பயனென்று மில்லையடி,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
நிலையெங்கும் காணவில்லை,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
நின்பாதம் சரண்புகுந்தோம்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!

2. துணிவெளுக்க மண்ணுண்டு,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ!

மணிவெளுக்கச் சாணையுண்டு,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !
மனம்வெளுக்க வழியில்லை,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !
பிணிகளுக்கு மாற்றுண்டு,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !
பேதைமைக்கு மாற்றில்லை,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !
அணிகளுக்கொரெல்லை யில்லாய்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம்,—எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள்முத்து மாரீ !

---

42. தேச முத்துமாரி

1. தேடியுனைச் சரணடைந்தேன், தேசமுத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்டவரந் தருவாய்.

2. பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாங் களைவாய்,
கோடிநலஞ் செய்திடுவாய்,குறைகளெல்லாந் தீர்ப்பாய்.

3. எப்பொழுதுங் கவலையிலே இணங்கிநிற்பான் பாவி ;
ஒப்பியுன தேவல்செய்வேன் உனதருளால் வாழ்வேன்.

4. சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதை பாடி,
பக்தியுடன் போற்றிநின்றுல் பயமனைத்துந் தீரும்.

5. ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும் ;
யாதானுந் தொழில் புரிவோம்; யாதுமவள் தொழிலாம்.

6. துன்பமே யியற்கையெனும் சொல்லைமறந் திடுவோம் ;
இன்பமே வேண்டி நிற்போம்; யாவுமவள் தருவாள்.

7. நம்பிஞர் கெடுவதில்லை ; நான்குமறைத் தீர்ப்பு‡ :
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

[பா-ம்] : நான்மறையின் தீர்ப்பு—பாரதிதாசன்.

43. கோமதி மஹிமை

[சங்கர நயினார் கோயில் ஆவுடையம்மையின் புகழ். சிவபிரான் தானும் திருமாலும் ஒரு பொருளென் றுணர்த்தி ஒரு வடிவங் காட்டிய சரித்திரம்.]

1. தாருக வனத்தினிலே—சிவன்
சரணநன் மலரிடை யுளம்பதித்துச்
சீருறத் தவம்புரிவார்—பர
சிவன்புக ழமுதினை யருந்திடுவார்
பேருயர் முனிவர்முன்னே—கல்விப்
பெருங்கடல் பருகிய சூதனென்பான்
தேருமெய்ஞ் ஞானத்தினுல்—உயர்
சிவனிகர் முனிவரன் செப்புகின்றான் :

2. "வாழிய, முனிவர்களே,—புகழ்
வளர்ந்திடுஞ் சங்கரன் கோயிலிலே,
ஊழியைச் சமைத்தபிரான்,—இந்த
உலக மெலாமுருக் கொண்டபிரான்,
ஏழிரு புவனத்திலும்—என்றும்
இயல்பெறும் உயிர்களுக் குயிராவான்,
ஆழுநல் லறிவாவான்,—ஒளி
யறிவினைக் கடந்தமெய்ப் பொருளாவான்.

3. தேவர்க் கெலாந்தேவன்,—உயர்
சிவபெரு மான்பண்டொர் காலத்திலே
காவலி னுலகளிக்கும்—அந்தக்
கண்ணனுந் தானுமிங் கோருருவாய்
ஆவலொ டருந்தவங்கள்—பல
ஆற்றிய நாகர்க ளிருவர்முன்னே
மேவிநின் றருள்புரிந்தான்,—அந்த
வியப்புறு சரிதையை விளம்புகின்றேன் ;

4. கேளீர் முனிவர்களே,—இந்தக்
கீர்த்திகொள் சரிதையைக் கேட்டவர்க்கே,
வேள்விகள் கோடிசெய்தால்—சதுர்
வேதங்க ளாயிர முறைபடித்தால்

மூளுநற் புண்ணியந்தான்—வந்து
மொய்த்திடும்; சிவனியல் விளங்கிநிற்கும்;
நாளுநற் செல்வங்கள்—பல
நணுகிடும்; சரதமெய் வாழ்வுண்டாம்.

5. இக்கதை யுரைத்திடுவேன்,—உளம்
இன்புறக் கேட்பீர், முனிவர்களே!
நக்கபி ரானருளால்—இங்கு
நடைபெறு முலகங்கள் கணக்கிலவாம்;
தொக்கன அண்டங்கள்—வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம்!
இக்கணக் கெவரறிவார்? புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார்?

6. நக்கபி ரானறிவான்;—மற்று
நானறி யேன்,பிற நரரறியார்;
தொக்க பேரண்டங்கள்—கொண்ட
தொகைக்கெல்லை யில்லையென்று சொல்லுகின்ற
தக்கபல் சாத்திரங்கள்;—ஒளி
தருகின்ற வானமொர் கடல்போலாம்;
அக்கட லதனுக்கே—எங்கும்
அக்கரை யிக்கரை யொன்றில்லையாம்.

7. இக்கட லதனகத்தே—அங்கங்
கிடையிடை தோன்றும்புன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள்;—திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதொர் வியப்புடைத்தாம்—இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி கண்டீர்;
மெய்க்கலை முனிவர்களே!—இதன்
மெய்ப்பொருள் பரசிவன் சக்தி,—கண்டீர்.

8. எல்லையுண் டோஇலையோ—இங்
கியாவர் கண்டார்திசை வெளியினுக்கே?
சொல்லுமொர் வரம்பிட்டால்—அதை
....

(இது முற்றுப்பெற வில்லை)

44. யோக சித்தி

வரங் கேட்டல்

1. விண்ணும் மண்ணுந்தனி யாளும்—எங்கள்
வீரை சக்திநின தருளே—என்றன்
கண்ணுங் கருத்துமெனக் கொண்டு—அன்பு
கசிந்து கசிந்துகசிந் துருகி—நான்
பண்ணும் பூசனைக ளெல்லாம்—வெறும்
பாலை வனத்திலிட்ட நீரோ ?—உனக்
கெண்ணுஞ் சிந்தையொன் றிலையோ—அறி
வில்லா தகிலமளிப் பாயோ ?

2. நீயே சரணமென்று கூவி—என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு—அடி
தாயே யெனக்குமிக நிதியும்—அறந்
தன்னைக் காக்குமொரு திறனும்—தரு
வாயே யென்றுபணிந் தேத்திப்—பல
வாரு நினதுபுகழ் பாடி—வாய்
ஓயே னுவதுண ராயோ ?—நின
துண்மை தவறுவதோ ரழகோ ?*

3. காளீ வலியசா முண்டி—ஓங்
காரத் தலைவியென் னிராணி—பல
நாளிங் கெனையலைக்க லாமோ ?—உள்ளம்
நாடும் பொருளடைதற் கன்றே—மலர்த்
தாளில் விழுந்தபயங் கேட்டேன்—அது
தாரா யெனிலுயிரைத் தீராய்—துன்பம்
நீளி லுயிர்தரிக்க மாட்டேன்—கரு
நீலி யென்னியல்பறி யாயோ ?

குறிப்பு : இப் பாடல்களில் வரும் காளி, சக்தி, மாரி முதலியன உலகத்தின் மூலசக்தியைக் குறிக்கும் பெயர்களாம்.

[மு. ப.] : * 'தவறுவ தொருலகோ?'

4. தேடிச் சோறுநிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக வுழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ ?

5. நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
நேரே யின்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீவினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதிய வுயிராக்கி—எனக்
கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

6. தோளை வலியுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும்—கட்டு
மாரு வுடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.

7. எண்ணுங் காரியங்க ளெல்லாம்—வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும்—தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும்—அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்—சுவை
நண்ணும் பாட்டிலெடு தாளம்—மிக
நன்று வுளத்தமுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை யின்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.

8. கல்லே வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லே நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கமே முக்கல்—மண்ணே
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிடவிந் நாட்டை—நான்
தொல்லே தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரமறி வாண்மை

9. கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும் படிக்கு வினைசெய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்—கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்—அடி
தாயே உனக்கரிய துண்டோ?—மதி
மூடும் பொய்மையிரு ளெல்லாம்—எனே
முற்றும் விட்டகல வேண்டும் ;

10. ஐயந் தீர்ந்துவிடல் வேண்டும்—புலே
அச்சம் போயொழிதல் வேண்டும்—பல
பையச் சொல்லுவதிங் கென்னே—முன்னேப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா—எனே
உய்யக் கொண்டருள வேண்டும்—அடி
உன்னேக் கோடிமுறை தொழுதேன்—இனி
வையத் தலேமையெனக் கருள்வாய்—அன்னே
வாழி, நின்னதருள் வாழி.
ஓம் காளீ வலியசா முண்டே
ஓங்காரத் தலேவியென்னி ராணி.

45. போற்றி யகவல்

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய் !
மாற்றுவாய், துடைப்பாய், வளர்ப்பாய், காப்பாய் !
கனியிலே சுவையும் காற்றிலே யியக்கமும்
கலந்தாற் போலநீ அனேத்திலும் கலந்தாய்.
உலகெலாந் தாலு யொளிர்வாய், போற்றி !
அன்னே, போற்றி ! அமுதமே, போற்றி !

புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்,
உயிரிலே யுயிராய், இறப்பிலு முயிராய்,
உண்டெனும் பொருளி லுண்மையாய், என்னுளே
நானெனும் பொருளாய், நானேயே பெருக்கித்
தானென மாற்றுஞ் சாகாச் சுடராய்,
கவலைநோய் தீர்க்கு மருந்தின் கடலாய்,
பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்,
யானென தின்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்,
செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்
நின்றிடுந் தாயே, நித்தமும் போற்றி!
இன்பங் கேட்டேன், ஈவாய் போற்றி!
துன்பம் வேண்டேன், துடைப்பாய் போற்றி!
அமுதங் கேட்டேன், அளிப்பாய் போற்றி!
சக்தி, போற்றி! தாயே, போற்றி!
முக்தி, போற்றி! மோனமே, போற்றி!
சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி!*

---

46. காணி நிலம்

1. காணி நிலம்வேண்டும்,—பராசக்தி
காணி நிலம்வேண்டும்;—அங்குத்
தூணி லழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்;—அங்குக்
கேணி யருகினிலே—தென்னைமரம்
கீற்று மிளநீரும்,

2. பத்துப் பனிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்;—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலாவொளி

[பா - ம்.]: *'சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி' என்பது ஒரு பிரதியில் 'இன்பங் கேட்டேன், ஈவாய் போற்றி' என்ற வரியை அடுத்துக் காணப் படுகிறது. —கவிமணி

முன்பு வரவேணும்;—அங்குக்
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற் படவேணும்;—என்றன்
சித்த மகிழ்ந்திடவே—நன்றுயிளந்
தென்றல் வரவேணும்.

3. பாட்டுக் கலந்திடவே—அங்கே யொரு
பத்தினிப் பெண்வேணும்;—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டு தரவேணும்;—அந்தக்
காட்டு வெளியினிலே,—அம்மா, நின்றன்
காவ லுறவேணும்;—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்.

———

47. மஹாசக்தி வெண்பா

1. தன்னே மறந்து ஸகல உலகினையும்
மன்ன நிதங்காக்கு மஹாசக்தி—அன்னே
அவளே துணையென் றனவரதம் நெஞ்சந்
துவளா திருத்தல் சுகம்.

2. நெஞ்சிற் கவலே நிதமும் பயிராக்கி
அஞ்சி யுயிர்வாழ்த்த லறியாமை;—தஞ்சமென்றே
வையமெலாங் காக்கு மஹாசக்தி நல்லருளே
ஐயமறப் பற்ற லறிவு.

3. வையகத்துக் கில்லே, மனமே, நினக்குநலஞ்
செய்யக் கருதியிவை செப்புவேன்—பொய்யில்லே
எல்லாம் புரக்கும் இறைநமையுங் காக்குமென்ற
சொல்லால் அழியுந் துயர்.

4. எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம்—
[பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறுண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு.

———

48. ஓம் சக்தி

1. நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணீப்பூண்.
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம் இவள்
பார்வைக்கு நேர்பெருந்தீ.
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர் சக்தி
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

2. "நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்;
அல்லது நீங்கும்" என்றேயுல கேழும்
அறைந்திடு வாய்முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண் இங்குச்
சொல்லு மவர்தமையே
அல்லல் கெடுத்தம ரர்க்கினை யாக்கிடும்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

3. நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பிவிட்டோம்.
கும்பிட்டெந் நேரமும் "சக்தி"யென் றூலினைக்
கும்பிடு வேன்மனமே.
அம்புக்குந் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாதபடி
உம்பர்க்கு மிப்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

4. பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு,
போற்றி யுனக்கிசைத்தோம்;
அன்னை பராசக்தி யென்றுரைத் தோம்தனை
யத்தனையுங் களைந்தோம்;
சொன்ன படிக்கு நடந்திடு வாய்மன
மேதொழில் வேறில்லைகாண்;
இன்னும தேயுரைப் போம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

5. வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய் !
தெள்ளு கலைத்தமிழ் வாணி, நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்,
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
யிராதென்றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல்சக்தி
வேல்சக்தி வேல்சக்தி வேல் !

---

49. கேட்பன

1. நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ ?
சொல்லடி, சிவசக்தி !—எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்து விட்டாய்,
வல்லமை தாராயோ,—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே ?
சொல்லடி, சிவசக்தி !—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ ?

2. விசையுறு பந்தினைப்போல்—உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன்,—நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும்—சிவ
சக்தியைப் பாடுநல் லகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன்;—இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ ?

---

50. பராசக்தி

1. கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்;
காவி யம்பல நீண்டன கட்டென்பார்;
விதவி தப்படு மக்களின் சித்திரம்
மேவு நாடகச் செய்யுள் மேவென்பார் ;

இதய மோஎனிற் காலேயு மாலேயும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டில தன்னே பராசக்தி
இன்ப மொன்றினேப் பாடுத லன்றியே.

2. நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொருதெய்வங் கூறுமே ;
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வைய முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்
பண்ணி லின்பமுங் கற்பனே விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஓங்கு மின்கவி யோதெனும் வேறொன்றே.

3. நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலே யெய்தவும்
பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டிநான்
மூட்டு மன்புக் கனலோடு வாணியை
முன்னு கின்ற பொழுதிலெ லாங்குரல்
காட்டி யன்னே பராசக்தி யேழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றுள்.

4. மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானி ருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்
ஈர வாடை யிரைந்தொலி செய்யவும்
உழையெ லாம்இடை யின்றியிவ் வானநீர்
ஊற்றுஞ் செய்தி யுரைத்திட வேண்டுங்கால்
" மழையுங் காற்றும் பராசக்தி செய்கைகாண் !
வாழ்கதாய் !" என்று பாடுமென் வாணியே.

5. சொல்லி னுக்கெளி தாகவு நின்றிடாள்
சொல்லே வேறிடஞ் செல்ல வழிவிடாள்;
அல்லி னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னே சக்தியின் மேனி நலங்கண்டார்.

கல்லி னுக்குள் அறிவொளி காணுங்கால்,
கால வெள்ளத் திலேநிலை காணுங்கால்,
புல்லி னில்வயி ரப்படை தோன்றுங்கால்,†
பூத லத்தில் பராசக்தி தோன்றுமே !

---

51. சக்திக் கூத்து

[ராகம்—பியாக்]

பல்லவி

தகத்த கத்தகத் தகதகவென் றூடோமோ?—சிவ
சக்திசக்தி சக்தியென்று பாடோமோ ? (தக)

சரணங்கள்

1. அகத்த கத்த கத்தினிலே உள்நின்றுள்—அவள்
அம்மையம்மை யெம்மைநாடு பொய்வென் றுள்
தகத்தகநமக் கருள் புரிவாள் தாளொன்றே
சரணமென்று வாழ்ந்திடுவோம் நாமென்றே (தக)

2. புகப்பு கப்புக வின்பமடா போதெல்லாம்
புறத்தினிலே தள்ளிடுவாய் சூதெல்லாம்
குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோலே—அது
குழந்தையதன் தாயடிக்கீழ் பேய்போலே.* (தக)

3. மிகத்த கைப்படு களியினிலே மெய்சோர—உள
வீரம்வந்து சோர்வைவென்று கைதேர
சகத்தினிலுள்ள மனிதரெல்லாம் நன்றுநன்றென—நாம்
சதிருடனே தாளமிசை யிரண்டுமொன்றென (தக)

4. இந்திரஞ் ருலகினிலே நல்லின்பம்
இருக்குதென்பார் அதனையிங்கே கொண்டெய்தி
மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்—நல்ல
மதமுறவே அமுதநிலை கண்டெய்தித் (தக)

[பா - ம்.]: †'வயிரப்படை காணுங்கால்.'
—கவிமணி

[மு – ப.]: *'தாயடிக்கீழ் சேய்போலே.'

52. சக்தி

1. துன்ப மிலாத நிலையே சக்தி
துரக்க மிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத் திருக்கு மெரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
முத்தி நிலையின் முடிவே சக்தி.

2. சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி
தீம்பழந் தன்னில் சுவையே சக்தி
தெய்வத்தை யெண்ணு நினைவே சக்தி
பாம்பை யடிக்கும் படையே சக்தி
பாட்டினில் வந்த களியே சக்தி
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கர னன்புத் தழலே சக்தி.

3. வாழ்வு பெருக்கு மதியே சக்தி
மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
சஞ்சல நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

---

53. வைய முழுதும்

கண்ணிகள்

1. வைய முழுதும் படைத்தளிக் கின்ற
மஹாசக்தி தன்புகழ் வாழ்த்துகின்றோம்,
செய்யும் வினைக ளனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே.

2. பூதங்க ளைந்தி லிருந்தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்றுகின்றேம்,
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்றே.

3. வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவுகின்றேம்,
ஏக நிலையி லிருக்கும் அமிர்தத்தை
யாங்க ளறிந்திட வேண்டுமென்றே.

4. உயிரெனத் தோன்றி யுணவுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றேம்,
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்கவென்றே.

5. சித்தத் திலேநின்று சோர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்புகின்றேம்,
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டுமென்றே.

6. மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வையம் மிசைநித்தம் பாடுகின்றேம்,
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே.

7. ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி யென்றுரை செய்திடுவோம்;
ஓம்சக்தி யென்பவர் உண்மைகண் டார்சுடர்
ஒண்மைகொண் டார்,உயிர் வண்மைகொண்டார்.

---

54. சக்தி விளக்கம்

1. ஆதிப் பரம்பொருளின் ஊக்கம்—அது
அன்னை யெனப்பணிதல் ஆக்கம்;
சூதில்லை காணுமிந்த நாட்டீர்—மற்றத்
தொல்லை மதங்கள்செய்யுந் தூக்கம்.

2. மூலப் பழம்பொருளின் நாட்டம்—இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம் ;
காலப் பெருங்களத்தின் மீதே—எங்கள்
காளி நடமூலகக் கூட்டம்.

3. காலை யிளவெயிலின் காட்சி—அவள்
கண்ணெளி காட்டுகின்ற மாட்சி ;
நீல விசும்பினிடை யிரவிற்—சுடர்
நேமி யஃதுமவ ளாட்சி.

4. நாரண னென்றுபழ வேதம்—சொல்லும்
நாயகன் சக்திதிருப் பாதம் ;
சேரத் தவம்புரிந்து பெறுவார்—இங்குச்
செல்வ மறிவுசிவ போதம்.

5. ஆதி சிவனுடைய சக்தி—எங்கள்
அன்னை யருள்பெறுதல் முக்தி ;
மீதி யுயிரிருக்கும் போதே—அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி.

6. பண்டை விதியுடைய தேவி—வெள்ளை
பாரதி யன்னையருள் மேவி,
கண்ட பொருள்விளக்கும் நூல்கள்—பல
கற்றலில் லாதவனோர் பாவி.

7. மூர்த்திகள் மூன்றுபொரு ளொன்று ;—அந்த
மூலப் பொருள்ஒளியின் குன்று ;
நேர்த்தி திகழுமந்த வொளியை—எந்த
நேரமும் போற்றுசக்தி யென்று.

---

55. சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம்

[தாளம்—சதுஸ்ர ஏகம் ராகம்—பூபாளம்]

கையைச், சக்திதனக் கே† கருவி யாக்கு—அது
சாதனைகள் யாவினையுங் கூடும்—கையை
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும். 1

[மு - ப.] : †'சக்தி தனக்கு'

கண்ணைச், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திவழி யினையது காணும்—கண்ணைச்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சத்தியமு நல்லருளும் பூணும். 2

செவி, சக்திதனக் கேகருவி யாக்கு—சிவ
சக்திசொலு மொழியது கேட்கும்—செவி
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திதிருப் பாடலினை வேட்கும். 3

வாய், சக்திதனக் கேகருவி யாக்கு—சிவ
சக்திபுக ழினையது முழங்கும்—வாய்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திநெறி யாவினையும் வழங்கும். 4

சிவ, சக்திதனை நாசிநித்த முகரும்—அதைச்
சக்திதனக் கேகருவி யாக்கு—சிவ
சக்திதிருச் சுவையினை நுகரும்—சிவ
சக்திதனக் கேயெமது நாக்கு. 5

மெய்யைச், சக்திதனக் கேகருவி யாக்கு—சிவ
சக்திதருந் திறனதி லேறும்—மெய்யைச்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சாதலற்ற வழியினைத்தேறும். 6

கண்டம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சந்ததமு நல்லமுதைப் பாடும்—கண்டம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தியுட னென்றுமுற வாடும். 7

தோள், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
தாரணியு மேலுலகுந் தாங்கும்—தோள்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தி பெற்று மேருவென வோங்கும். 8

நெஞ்சம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தியுற நித்தம்விரி வாகும்—நெஞ்சம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அதைத்
தாக்கவரும் வாளொதுங்கிப் போகும். 9

சிவ, சக்திதனக் கேயெமது வயிறு—அது
சாம்பரையு நல்லவுண வாக்கும்—சிவ
சக்திதனக் கேயெமது வயிறு—அது
சக்திபெற வுடலினைக் காக்கும். 10

இடை, சக்திதனக் கேகருவி யாக்கு—நல்ல
சக்தியுள்ள சந்ததிகள் தோன்றும்—இடை
சக்திதனக் கேகருவி யாக்கு—நின்றன்
சாதிமுற்று நல்லறத்தி லூன்றும். 11

கால், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சாடியெழு கடலையுந் தாவும்—கால்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சஞ்சலமில் லாமலெங்கு மோங்கும்.* 12

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சஞ்சலங்கள் தீர்ந்தொருமை கூடும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சாத்துவிகத் தன்மையினைச் சூடும். 13

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தியற்ற சிந்தனைகள் தீரும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அதில்
சாருநல்ல உறுதியுஞ் சேரும். 14

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திசக்தி சக்தியென்று பேசும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அதில்
சார்ந்திருக்கு நல்லுறவுந் தேசும். 15

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திநுட்பம் யாவினையு நாடும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்திசக்தி யென்றுகுதித் தாடும். 16

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சக்தியினை யெத்திசையுஞ் சேர்க்கும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அது
தான்விரும்பில் மாமலையைப் பேர்க்கும். 17

[பா - ம்.]: *'சஞ்சலமில் லாமலெங்கு மேவும்.' —கவிமணி

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—அது
சந்ததமுஞ் சக்திதனைச் சூழும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—அதில்
சாவுபெறுந் தீவினையும் ஊழும். 18

மனம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—எதைத்
தான்விரும்பி னலும்வந்து சேரும்—மனம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—உடல்
தன்னிலுயர் சக்திவந்து நேரும். 19

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—இந்தத்
தாரணியில் நூறுவய தாகும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—உன்னைச்
சாரவந்த நோயழிந்து போகும். 20

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—தோள்
சக்திபெற்று நல்லதொழில் செய்யும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—எங்கும்
சக்தியருள் மாரிவந்து பெய்யும். 21

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—சிவ
சக்திநடை யாவுநன்கு பழகும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—முகம்
சார்ந்திருக்கு நல்லருளு மழகும். 22

மனம், சக்திதனக் கேகருவி யாக்கு—உயர்
சாத்திரங்கள் யாவுநன்கு தெரியும்—மனம்
சக்திதனக் கேகருவி யாக்கு—நல்ல
சத்திய விளக்குநித்த மெரியும். 23

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—நல்ல
தாளவகை சந்தவகை காட்டும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அதில்
சாருநல்ல வார்த்தைகளும் பாட்டும். 24

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்தியையெல் லோர்க்குமுணர் வுறுத்தும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்திபுகழ் திக்கனைத்து நிறுத்தும். 25

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்திசக்தி யென்றுகுழ லூதும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அதில்
சார்வதில்லை அச்சமுடன் சூதும். 26

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்தியென்று வீணைதனில் பேசும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்திபரி மளமிங்கு வீசும். 27

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்தியென்று தாளமிட்டு முழக்கும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சஞ்சலங்கள் யாவினையு மழிக்கும். 28

சித்தம், சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்திவந்து கோட்டைகட்டி வாழும்—சித்தம்
சக்திதனக் கேயுரிமை யாக்கு—அது
சக்தியருட் சித்திரத்தி லாழும். 29

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சங்கடங்கள் யாவினையு முடைக்கும்—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அங்குச்
சத்தியமு நல்லறமுங் கிடைக்கும். 30

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சாரவருந் தீமைகளை விலக்கும்—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சஞ்சலப்பி சாசுகளைக் கலக்கும். 31

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சக்திசெய்யும் வித்தைகளைத் தேடும்—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சக்தியுறை விடங்களை நாடும். 32

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
தர்க்கமெனுங் காட்டிலச்ச நீங்கும்—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அதில்
தள்ளிவிடும் பொய்ந்நெறியுந் தீங்கும். 33

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அதில்
சஞ்சலத்தின் தீயவிருள் விலகும்—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அதில்
சக்தியொளி நித்தமுநின் றிலகும். 34

மதி, சக்திதனக் கேயுடைமை யாக்கு—அதில்
சார்வதில்லை ஐயமெனும் பாம்பு—மதி
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அங்கு
தான்முளைக்கு முக்திவிதைக் காம்பு. 35

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
தாரணியி லன்புநிலை நாட்டும்—மதி
சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
ஸர்வசிவ சக்தியினைக் காட்டும். 36

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
சக்திதிரு வருளினைச் சேர்க்கும்—மதி
சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
தாமதப்பொய்த் தீமைகளைப் பேர்க்கும். 37

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
சத்தியத்தின் வெல்கொடியை நாட்டும்—மதி
சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
தாக்கவரும் பொய்ப்புலியை யோட்டும். 38

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
சத்தியநல் லிரவியைக் காட்டும்—மதி
சக்திதனக் கேயடிமை யாக்கு—அதில்
சாரவரும் புயல்களை வாட்டும். 39

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
சக்திவிர தத்தையென்றும் பூணும்—மதி
சக்திவிர தத்தை யென்றுங் காத்தால்—சிவ
சக்திதரு மின்பமுநல் லாணும். 40

மதி, சக்திதனக் கேயடிமை யாக்கு—தெளி
தந்தமுதப் பொய்கையென வொளிரும்—மதி
சக்திதனக் கேயடிமை யாக்கு—அது
சந்ததமு மின்பமுற மிளிரும். 41

அகம், சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
தன்னையொரு சக்தியென்று தேரும்—அகம்
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
தாமதமு மாணவமும் தீரும். 42

அகம், சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
தன்னையவள் கோயிலென்று காணும்—அகம்
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
தன்னையெண்ணித் துன்பமுற நாணும். 43

அகம், சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சக்தியெனும் கடலிலோர் திவலை—அகம்
சக்திதனக் கேயுடைமை யாக்கு—சிவ
சக்தியுண்டு நமக்கில்லை கவலை. 44

அகம், சக்திதனக் கேயுடைமை யாக்கு—அதில்
சக்திசிவ நாதநித்த மொலிக்கும்—அகம்
சக்திதனக் கேயுடைமை யாக்கு—அது
சக்திதிரு மேனியொளி ஜ்வலிக்கும். 45

சிவ, சக்தியென்றும் வாழியென்று பாடு—சிவ
சக்திசக்தி யென்றுகுதித் தாடு—சிவ
சக்தியென்றும் வாழியென்று பாடு—சிவ
சக்திசக்தி யென்றுவிளை யாடு. 46

---

56. சக்தி திருப்புகழ்

1. சக்திசக்தி சக்தீசக்தீ சக்தி சக்தீ யென்றோது
சக்திசக்தி சக்தியென்பார்—சாகா ரென்றே நின்றோது.

2. சக்திசக்தி யென்றேவாழ்தல் சால்பா நம்மைச் சார்ந்தீரே
சக்திசக்தி யென்றீராயில்‡—சாகா உண்மை சேர்ந்தீரே.

3. சக்திசக்தி என்றுல்சக்தி—தானே சேருங் கண்டீரே
சக்திசக்தி என்றுல்வெற்றி—தானே நேருங் கண்டீரே.

[பா - ம்.]: ‡'சக்தி யென்றீராயின்' என்றேனும், சக்தி யென்றீராகில்' என்றேனு மிருக்கலாம்.

4. சக்திசக்தி யென்றேசெய்தால்—தானே செய்கை
[நேராகும்
சக்திசக்தி யென்றுலகாள்து—தானே முக்தி வேராகும்.

5. சக்திசக்தி சக்தீசக்தீ சக்தியென்றே ஆடோமோ?
சக்திசக்தி சக்தியென்றே—தாளங் கொட்டிப்
[பாடோமோ.

6. சக்திசக்தி யென்றுல்துன்பந்—தானே தீருங் கண்டீரே.
சக்திசக்தி யென்றுலின்பந்—தானே சேருங் கண்டீரே.

7. சக்திசக்தி யென்றுல்செல்வம்—தானே ஊறுங்
[கண்டீரோ?
சக்திசக்தி யென்றுல்கல்வி—தானே தேறுங் கண்டீரோ?

8. சக்திசக்தி சக்தீசக்தீ சக்தீ சக்தீ வாழீ நீ.
சக்திசக்தி சக்தீசக்தீ சக்தீ சக்தீ வாழீ நீ.

9. சக்திசக்தி வாழியென்றுல்—சம்பத் தெல்லா நேராகும்
சக்திசக்தி யென்றுல்சக்தி—தாச னென்றே பேராகும்.

---

57. மஹாசக்தி பஞ்சகம்

1. கரணமுந் தனுவு நினக்கெனத் தந்தேன்
காளிநீ காத்தருள் செய்யே
மரணமு மஞ்சேன் நோய்களு யஞ்சேன்
மாரவெம் பேயினு யஞ்சேன்.
இரணமுஞ் சுகமும் பழியுநற் புகழும்
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்
தாயெனைக் காத்தலுன் கடனே.

2. எண்ணிலாப் பொருளும் எல்லையில் வெளியும்
யாவுமா நின்றனை போற்றி
மண்ணிலார் வந்து வாழ்த்தினுஞ் செறினும்
மயங்கிலேன், மனமென்னும் பெயர்கொள்
கண்ணிலாப் பேயை யெள்ளுவேன், இனியெக்
காலுமே அமைதியி லிருப்பேன்
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகும்
தாயுனைச் சரண்புகுந் தேனுல்.

3. நீசருக் கினிதாந் தனத்தினு மாதர்
நினைப்பினு நெறியிலா மாக்கள்
மாசுறு பொய்ந்நட் பதனிலும் பன்னுள்
மயங்கினேன் அவையினி மதியேன்
தேசுறு நீல நிறத்தினுள் அறிவாய்ச்
சிந்தையிற் குலவிடு திறத்தாள்
வீசுறுங் காற்றி னெருப்பினில் வெளியில்
விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன்.

4. ஐயமுந் திகைப்புந் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது சினமும்
பொய்யுமென் றினைய புன்மைக ளெல்லாம்
போயின வுறுதிநான் கண்டேன்
வையமிங் கனைத்து மாக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்ந்திடு தாயைத்
துய்யவெண் ணிறத்தாள் தனைக்கரி யவளைத்
துணையெனத் தொடர்ந்தது கொண்டே.

5. தவத்தினை யெளிதாப் புரிந்தனள் யோகத்
தனிநிலை யொளிதெனப் புரிந்தாள்
சிவத்தினை யினிதாப் புரிந்தனள் மூடச்
சித்தமுந் தெளிவுறச் செய்தாள்
பவத்தினை வெறுப்ப அருளினள் நானும்
பான்மைகொன் றவள்மயம் புரிந்தாள்
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்
அநந்தமா வாழ்கவிங் கவளே.

58. மஹாசக்தி வாழ்த்து

1. விண்டு ரைக்க அறிய அரியதாய்
விரிந்தவான வெளியென நின்றனை,
அண்ட கோடிகள் வானி லமைத்தனை,
அவற்றிலெண் ணற்ற வேகஞ் சமைத்தனை,
மண்ட லத்தை அணுவணு வாக்கினுல்
வருவதெத்தனை யத்தனை யோசனை
கொண்ட தூர மவற்றிடை வைத்தனை
கோல மேநினைக் காளியென் றேத்துவேன்.

2. நாடு காக்கு மரசன் றனையந்த
நாட்டு ளோரர சென்றறி வார்எனிற்
பாடு தண்டைக் குழந்தை தனக்கிதம்
பண்ணு மப்ப னிவனென் றறிந்திடும் ;
கோடி யண்ட மியக்கி யளிக்குநின் :
கோல மேழை குறித்திட லாகுமோ ?
நாடி யிச்சிறு பூமியிற் காணுநின்
நலங்க ளேத்திட நல்லருள் செய்கவே.

3. பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை,
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை,
கரிய மேகத் திரளெனச் செல்லுவை,
காலு மின்னென வந்துயிர் கொல்லுவை,
சொரியு நீரெனப் பல்லுயிர் போற்றுவை,
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை,
விரியு நீள்கட லென்ன நிறைந்தனை,
வெல்க காளி யெனதம்மை வெல்கவே.

4. வாயு வாகி வெளியை யளந்தனை,
வாழ்வெ தற்கு முயிர்நிலை யாயினை,
தேயு வாகி யொளியருள் செய்குவை,
செத்த வற்றைக் கருப்பொரு ளாக்குவை,
பாயு மாயிரஞ் சத்திக ளாகியே
பாரி லுள்ள தொழில்க ளியற்றுவை,
சாயும் பல்லுயிர் கொல்லுவை, நிற்பன
தம்மைக் காத்துச் சுகம்பல நல்குவை.

5. நிலத்தின் கீழ்பல் லுலோகங்க ளாயினை,
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை,
தலத்தின் மீது மலையு நதிகளுஞ்
சாருங் காடுஞ் சுனைகளு மாயினை,
குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்,
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை,
புலத்தை யிட்டிங் குயிர்கள்செய் தாயன்னை,
போற்றி போற்றி, நினதருள் போற்றியே.

6. சித்த சாகரஞ் செய்தனே, ஆங்கதிற்
செய்த கர்மப் பயனெனப் பல்கினே,
தத்து கின்ற திரையுஞ் சுழிகளும்
தாக்கி யெற்றிடுங் காற்றுமுள் ளோட்டமுஞ்
சுத்த மோனப் பகுதியும் வெண்பனி
சூழ்ந்த பாகமுஞ் சுட்டவெந் நீருமென்
றெத்த நீர்கடல் போலப் பலவகை
யுள்ள மென்னுங் கடலி லமைத்தனே.

---

59. சிவ சக்தி புகழ்

ராகம்—தன்யாசி] [தாளம்—சதுஸ்ர ஏகம்

1. ஓம், சக்திசக்தி சக்தியென்று சொல்லு—கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு
சக்திசக்தி சக்தியென்று சொல்லி—அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு.

2. சக்திமிசை பாடல்பல பாடு--ஓம்
சக்திசக்தி யென்றுதாளம் போடு
சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே—சிவ
சக்திவெறி கொண்டுகளித் தாடு.

3. சக்திதனே யேசரணங் கொள்ளு—என்றும்
சாவினுக்கொ ரச்சமில்லை தள்ளு
சக்திபுக ழாமமுதை யள்ளு—மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு.

4. சக்திசெய்யும் புதுமைகள் பேசு—நல்ல
சக்தியற்ற பேடிகளே யேசு
சக்திதிருக் கோயிலுள்ள மாக்கி—அவள்
தந்திடுநற் குங்குமத்தைப் பூசு.

5. சக்தியினைச் சேர்ந்ததிந்தச் செய்கை—இதைச்
சார்ந்துநிற்ப தேநமக்கோ ருய்கை
சக்தியெனு மின்பமுள்ள பொய்கை—அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை.

6. ஓம், சக்திசக்தி சக்தியென்று நாட்டு—சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு
சக்திபெற்ற நல்லநிலை நிற்பார்—புவிச்
சாதிகளெல் லாமதனைக் கேட்டு.

7. சக்திசக்தி சக்தியென்று முழங்கு—அவள்
தந்திரமெல் லாமுலகில் வழங்கு
சக்தியருள் கூடிவிடு மாயின்—உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு.

8. சக்திசெயுந் தொழில்களே யெண்ணு—நித்தஞ்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால்—இங்குச்
சாவினையும் நோவினையும் உண்ணு.

9. சக்தியரு ளாலுலகி லேறு—ஒரு
சங்கடம்வந் தாலிரண்டு கூறு
சக்திசில சோதனைகள் செய்தால்—அவள்
தண்ணருளென் றேமனது தேறு.

10. சக்திதுணை யென்றுநம்பி வாழ்த்து—சிவ
சக்திதனை யேயகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய்—சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து.

---

60. ஊழிக் கூத்து

1. வெடிபடுமண்டத் திடிபல தாளம் போட—வெறும்
வெளியிலிரத்தக் களியொடு பூதம் பாடப்—பாட்டின்
அடிபடுபொருளுன் அடிபடு மொலியிற் கூடக்—களித்
தாடுங் காளீ, சாமுண்டீ; கங்காளீ!
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

2. ஐந்துறுபூதம் சிந்திப் போயொன் றுகப்—பின்னர்
அதுவும்சக்திக் கதியில் மூழ்கிப் போக—அங்கே
முந்துறுமொளியிற் சிந்தை நழுவும் வேகத்—தோடே
முடியா நடனம் புரிவாய்அடீ சொரிவாய்,
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

3. பாழாம்வெளியும் பதறிப் போய்மெய் குலையச்—சலனம்
பயிலும்சக்திக் குலமும்வழிகள் கலைய—அங்கே
ஊழாம்பேய்தான் ''ஓஹோ ஹோ''வென் றலைய,—
[வெறித்
துறுமித் திரிவாய், செருவெங்கூத்தே புரிவாய்,
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

4. சத்திப்பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச்—சட்டச்
சடசடசட்டென் றுடைபடு தாளங் கொட்டி—அங்கே
எத்திக்கினிலும் நின்விழி யனல்போ யெட்டித்—தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

5. காலத் தொடுநிர் மூலம்படு மூவுலகும்—அங்கே
கடவுள்மோனத் தொளியேதனியா யிலகும்—சிவன்
கோலங் கண்டுன் கலைசெய் சினமும் விலகும்—கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக்கூத் திடுவாய்,
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

---

61. மஹாசக்தி

1. சந்திர ஒளியி லவளைக் கண்டேன்*
சரண மென்று புகுந்து கொண்டேன்
இந்திரி யங்களை வென்று விட்டேன்
எனதெ னுணர்வையைக் கொன்று விட்டேன்,

[பா - ம்.]: *''சந்திரிகையி லவளை கண்டேன்'
—1910ஆம் வருடப் பதிப்பு.

2. பயனெண் ணுமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரி லாதெனைச் செய்து விட்டாள்
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்.

3. மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள்.

---

62. மஹாசக்திக்கு விண்ணப்பம்

1. மோகத்தைக் கொன்றுவிடு—அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு—அல்லாலதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு—அல்லாலென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத் திருந்துலகம்—இங்குள்ளன
யாவையும் செய்பவளே ![1]

2. பந்தத்தை நீக்கிவிடு—அல்லாலுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு—அலலாலிதைச்
செத்த வுடலாக்கு
இந்தப் பதர்களையே—நெல்லாமென
எண்ணி இருப்பேனே
எந்தப் பொருளிலுமே—உள்ளேநின்
றியங்கி யிருப்பவளே.

3. உள்ளம் குளிராதோ ?[2]—பொய்யானவை
ஊன மொழியாதோ ?

[பா - ம்] : [1] 'யாவையும் செய்தவளே'
[2] 'உள்ளந் தெளியாதோ'
—1910 ஆம் வருடப் பதிப்பு.

‡கள்ளமுருகாதோ—அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ ?
வெள்ளக் கருணையிலே—இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ ?
விள்ளற் கரியவளே—அண்டத்திலு
மேவி யிருப்பவளே !

---

63. வெற்றி

1. எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றுங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி ;
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரு மானுட மாயினு மஃதைப்
படுத்து மாய்ப்ப ளருட்பெருங் காளி
பாரில் வெற்றி யெனக்குறு மாறே.

2. எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும வெற்றி யெதனிலும் வெற்றி
கண்ணு மாருயி ரும்மென நின்றுள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணுங் காற்றும் புனலு மனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே ?

[பா - ம்.] : 1910ஆம் வருடத்தில் வெளிவந்த பதிப்பில் மூன்றும் பாடலின் முதலிரண்டடிகள் பின்வருமாறு காணப் படுகின்றன :

‡‘கள்ளமுருகாதோ—அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ ?
உள்ளந் தெளியாதோ—பொய்யாணவ
ஊன மொழியாதோ ?’

64. காளிக்கு ஸமர்ப்பணம்

இந்தமெய்யும் கரணமும் பொறியும்
இருபத் தேழு வருடங்கள் காத்தனன்[1]
வந்தனம்மடி பேரரு ளன்னாய்!
வைரவீ! திறற் சாமுண்டி! காளி!
சிந்தனைதெளிந்தேனினி யுன்றன்[2]
திருவருட்கென அர்ப்பணஞ் செய்தேன்
வந்திருந்து பலபய னுகும்
வகைதெ ரிந்துகொள்[3] வாழி யடிநீ.

---

65. மஹாசக்திக்கு விண்ணப்பம்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்.

[பா - ம்.]: [1] 'காத்தேன்'
[2] 'சிந்தனை தெளிந்தே னிதையின்று'
[3] 'வகை புரிந்துகொள்'
—1910ஆம் வருடப் பதிப்பு.

66. பூலோக குமாரி

பல்லவி

பூலோக குமாரி
ஹே அம்ருத நாரி

அனுபல்லவி

ஆலோக ஸ்ருங்காரி
அம்ருத கலசகுச பாரே
கால பயகுடாரி காமவாரி
கனக லதாரூப கர்வதிமிராரே.

சரணங்கள்

பாலே ரஸ ஜாலே
பகவதி ப்ரஸீத காலே
நீல ரத்னமய நேத்ர விசாலே
நித்ய யுவதி பத நீரஜமாலே—
லீலா ஜ்வாலா நிர்மிதவாணி
நிரந்தரே நிகில லோகேசாநி
நிருபம ஸாந்தி நித்யகல்யாணி
நிஜம்மாம் குருஹே மன்மதராணி.

---

3. வேதாந்தப் பாடல்கள்

—: 0 :—

1. மாயையைப் பழித்தல்

ராகம்—காம்போதி] [தாளம்—ஆதி

1. உண்மை யறிந்தவ ருன்னைக்க ணிப்பாரோ
மாயையே—மனத்
திண்மையுள் ளாரைநீ செய்வது
மொன்றுண்டோ—மாயையே.

2. எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே—நீ
சித்தத் தெளிவெனுந் தீயின்முன்
நிற்பாயோ—மாயையே.

3. என்னைக் கெடுப்பதற் கெண்ணமு ற்றுய்கெட்ட
மாயையே—நான்
உன்னைக் கெடுப்ப துறுதியென்
றேயுணர் மாயையே.

4. சாகத் துணியிற் சமுத்திர மெம்மட்டு
மாயையே—இந்தத்
தேகம்பொய் யென்றுணர் தீரரை
யென்செய்வாய்—மாயையே.

5. இருமை யழிந்தபின் எங்கிருப் பாயற்ப
மாயையே—தெளிந்
தொருமைகண் டார்முன்ன மோடாது
நிற்பையோ—மாயையே.

6. நீதரு மின்பத்தை நேரென்று கொள்வனே
மாயையே—சிங்கம்
நாய்தரக் கொள்ளுமோ நல்லர
சாட்சியை—மாயையே.

7. என்னிச்சை கொண்டுனை யெற்றிவிட வல்லேன்
மாயையே—இனி
உன்னிச்சை சொண்டெனக் கொன்றும்வ
ராதுகாண்—மாயையே.

8. யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே—உன்றன்
போர்க்கஞ்சு வேனெ பொடியாக்கு
வேனுன்னை—மாயையே.

---

2. அச்சமில்லை

[பண்டாரப் பாட்டு]

அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே

1. இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
துச்சமாக வெண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
பிச்சைவாங்கி யுண்ணும்வாழ்க்கை பெற்றுவிட்ட
போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட
போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

2. கச்சணிந்த கொங்கைமாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
நச்சைவாயி லேகொணர்ந்து நண்பரூட்டு போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
பச்சையூ னியைந்தவேற் படைகள்வந்த போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

---

3. சங்கு

1. செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே எண்ணியிருப்பார்
பித்த மனித ரவர்சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

2. இத்தரை மீதினி லேபிறந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்.

3. பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தி லெறிந்தே
ஐயுற லின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்.

4. மையுறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற் றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்க ளாமென்றிங் கூதேடா சங்கம்.

---

4. அறிவே தெய்வம்

கண்ணிகள்

1. ஆயிரந் தெய்வங்க ளுண்டென்று தேடி
அலையு மறிவிலிகாள்—பல்
லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ ?

2. மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள்—எத
னூடுநின் றேங்கு மறிவொன்றே தெய்வமென்
றேதி யறியீரோ ?

3. சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ ?—பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?

4. வேடம்பல் கோடியொ ருண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே—ஆங்கோர்
வேடத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே.

5. நாமம்பல் கோடியொ ருண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே—ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே.

6. போந்த நிலைகள் பலவும் பராசக்தி
பூணு நிலையாமே—உப
சாந்த நிலையேவே தாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே.

7. கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டு மறைகளெலாம்—நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்
கவங்கள் புரிவீரோ ?

8. உள்ளத னேத்திலு முள்ளொளி யாகி
யொளிர்ந்திடு மான்மாவே—இங்குக்
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ ?

9. மெள்ளப் பலதெய்வம் கூட்டிவளர்த்து
வெறுங்க தைகள்சேர்த்துப்—பல .
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்முறை
காட்டவும் வல்லீரோ ?

10. ஒன்றுபிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெலாம்—என்றும்
ஒன்றுபிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே.

5. அழகுத் தெய்வம்

1. மங்கியதொர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னிறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்.
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே யறிந்தேன்.

2. யோகந்தான் சிறந்ததுவோ தவம்பெரிதோ என்றேன்;
யோகமேதவம் தவமே யோகமென வுரைத்தாள்.
ஏகமோ பொருளன்றி இரண்டாமோ என்றேன்;
இரண்டுமாம் ஒன்றுமாம் யாவுமாம் என்றாள்.
தாகமறிந் தீயுமருள் வான்மழைக்கே யுண்டோ
தாகத்தின் துயர்மழைதா னறிந்திடுமோ வென்றேன்
வேகமுடன் அன்பினையே வெளிப்படுத்தா மழைதான்.
விருப்புடனே பெய்குவதோ வேறுமோ என்றாள்.

3. காலத்தின்விதி மதியைக் கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியா மென்றாள்.
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ என்றேன
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலா மென்றாள்
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை யென்றேன்.
எண்ணினுல் எண்ணியது நண்ணுங்கா ணென்றாள்.
மூலத்தைச் சொல்லவோ வேண்டாமோ என்றேன்
முகத்திலருள் காட்டினாள் மோகமது தீர்ந்தேன்.

—

6. ஜீவன்முக்தி

ராகம்—கமாஸ்] [தாளம்—ஆதி

பல்லவி

ஜயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்தி லேவிடு தலையுண்டு நிலையுண்டு. (ஜய)

அனுபல்லவி

பயனுண்டு பக்தியி னலே—நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணங்கள்

1. புயமுண்டு குன்றத்தைப் போலே—சக்தி
பொற்பாத முண்டதன் மேலே
நியமமெல் லாம்சக்தி நினைவன்றிப் பிறிதில்லை ;
நெறியுண்டு; குறியுண்டு; குலசக்தி வெறியுண்டு. (ஜய)

2. மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்—தெய்வ
வலியுண்டு தீமையைப் பேர்க்கும் :
விதியுண்டு ; தொழிலுக்கு விளைவுண்டு; குறைவில்லை;
விசனப்பொய்க் கடலுக்குக் குமரன்கைக்
கணையுண்டு. (ஜய

3. அலைபட்ட கடலுக்கு மேலே—சக்தி
அருளென்னுந் தோணியி னலே
தொலையெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு (ஜய)

---

7. ஜய பேரிகை

பல்லவி

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்

1. பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்‡
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்
வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ் வினைக்கைப் பிடித்தோம்.

(ஜய பேரிகை)

2. இரவியி னொளியிடைக் குளித்தோம்—ஒளி
யின்னமு தினையுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம்.

(ஜய பேரிகை)

3. காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையுமெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை ;
நோக்க நோக்கக்களி யாட்டம்.

(ஜய பேரிகை)

———

[பா - ம்.] : ‡'துன்பப்'

8. அல்லா

பல்லவி

அல்லா, அல்லா, அல்லா !

சரணங்கள்

1. பல்லாயிரம் பல்லாயிரம் கோடிகோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ்செய்தருள் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத
பெருஞ்சோதி !
(அல்லா, அல்லா, அல்லா !)

2. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாதவ ராயினும்தவ மில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும்வந் தேத்துமளவில் யமபயங்கெடச் செய்பவன்
(அல்லா, அல்லா, அல்லா !)

---

9. யேசு கிறிஸ்து

[தீய ஒழுக்கத்தில் நின்ற மேரி மக்தலேன் என்பாள் யேசு கிறிஸ்துவை அடைந்து, தனது ஒழுக்கத்திற்காகப் பரிதபித்து, தன்னைக் கடையேற்ற வேண்டுமென்று வேண்டினாள். யேசுவும் அவளுக்கு அருள் புரிந்தார். யேசு தைக்கப்பட்ட மூன்றும்நாள் அவர் உடம்புடன் எழுந்து விண்ணேகினதை மேரி மக்தலேன் கண்ணால் கண்டு பிறருக் கறிவித்ததாய்க் கிறிஸ்து புராணம் கூறுகிறது. இக் கதையையே இங்கு விளக்கியிருக்கிறது.]

1. 'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்,
எழுந்து யிர்த்தனன் நாள்ஒரு மூன்றில் ;
நேச மாமரி யாமக்த லேநா
நேரிலே யிந்தச் செய்தியைக் கண்டாள்.'

தேசத் தீர்!இதன் உட்பொருள் கேளீர் :
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமைநித்தங் காப்பார்,
நம்அகந் தையை நாம்கொன்று விட்டால்.

2. அன்பு காண்மரி யாமக்த லேநா,
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து ;
முன்பு தீமை வடிவினைக் கொன்ருல்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும் ;
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
போற்று வாள்அந்த நல்லுயிர் தன்னை
அன்பெ னும்மரி யாமக்த லேநா
ஆஹ!சாலப் பெருங்களி யிஃதே.

3. உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண் டடித்தால்,
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண்மரி யாமக்த லேநா,
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து.
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும்.

10. கற்பனை யூர்

[ஜான் ஸ்கர் என்ற ஆங்கிலப் புலவன் 'நக்ஷத்ர தூதன்' என்ற பத்திரிகையில் பிரசுரித்த "The Town of Let's Pretend" என்ற பாட்டின் மொழிபெயர்ப்பு.]

குறிப்பு :—இப்பாடலின் பொருள்: கற்பனை நகர மென்பது சித்தத்தில் குழந்தை நிலை பெறுவதை இங்குக் குறிப்பிடுகிறது. 'யோவான்' என்பது குமாரதேவனுடைய பெயர். 'அக்கடவுள் மனிதனுக்குள்ளே நிலைபெற்று, மனிதன் மோக்ஷமடைவதற்கு முன்னர்க் குழந்தைப் பருவத்தை அடைய வேண்டும்' என்று யேசு கிறிஸ்து நாதர் சொல்லியிருக்கும் பொருளை இப்பாடல் குறிப்பிடுகிறது. கவலைகளை முற்றுந் துறந்துவிட்டு உலகத்தை வெறுமே லீலையாகக் கருதினாலன்றி மோக்ஷம் எய்தப்படாது.

1. கற்பனே யூரென்ற நகருண்டாம்—அங்குக்
கந்தர் வர்விளே யாடுவராம்.
சொப்பன நாடென்ற சுடர்நாடு—அங்குச்
சூழ்ந்தவர் யாவர்க்கும் பேருவகை.

2. திருமணே யிதுகொள்ளேப் போர்க்கப்பல்—இது
ஸ்பானியக் கடலில் யாத்திரைபோம்.
வெருவுற மாய்வார் பலர்கடலில்—நாம்
மீளவு நம்மூர் திரும்புமுன்னே.

3. அந்நகர் தனிலோ ரிளவரசன்—நம்மை
அன்பொடு கண்டுரை செய்திடுவான் ;
மன்னவன் முத்தமிட் டெழுப்பிடவே—அவன்
மனேவியு மெழுந்தங்கு வந்திடுவாள்.

4. எக்கால மும்பெரு மகிழ்ச்சியங்கே
எவ்வகைக் கவலேயும் போருமில்லே;
பக்குவத் தேயிலே நீர்குடிப்போம்—அங்குப்
பதுமைகைக் கிண்ணத்தி லளித்திடவே.

5. இன்னமு திற்கது நேராகும்—நம்மை
யோவான் விடுவிக்க வருமளவும்
நன்னக ரதனிடை வாழ்ந்திடுவோம்—நம்மை
நலித்திடும் பேயங்கு வாராதே.

6. குழந்தைகள் வாழ்ந்திடும் பட்டணங்காண்—அங்குக்
கோல்பந்து யாவிற்கு முயிருண்டாம்
அழகிய பொன்முடி யரசிகளாம்—அன்றி
அரசிளங் குமரிகள் பொம்மையெலாம்,

7. செந்தோ லசுரனேக் கொன்றிடவே—அங்குச்
சிறுவிற கெல்லாம் சுடர்மணிவாள்
ஸந்தோ ஷத்துடன் செங்கலேயும்—அட்டைத்
தாளேயுங் கொண்டங்கு மனேகட்டுவோம்.

8. கள்ளரவ் வீட்டினுட் புகுந்திடவே—வழி
காண்பதி லாவகை செய்திடுவோம்—ஓ!
பிள்ளைப் பிராயத்தை இழந்தீரே!—நீர்
பின்னுமந் நிலைபெற வேண்டீரோ?

9. குழந்தைக ளாட்டத்தின் கனவையெல்லாம்—[அந்தக்
கோலநன் னுட்டிடைக் காண்பீரே;
இழந்தநல் லின்பங்கள் மீட்குறலாம்—நீர்
ஏகுதிர் கற்பனை நகரினுக்கே.

---

11. நந்தலாலா

ராகம்—யதுகுல காம்போதி] —ஆதி

1. காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா;

2. பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா;

3. கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா;

4. தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா.

---

12. சொல்

[சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே
நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்.]

1. தேவர் வருகவென்று சொல்வதோ?—ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினில்
ஆவலறிந்துவரு வீர்கொலோ?—உம்மை
யன்றி யொருபுகலு மில்லையே.

2. 'ஓம்' என் றுரைத்துவிடிற் போதுமோ?—அதில்
உண்மைப் பொருளறிய லாகுமோ ?
தீமை யனைத்துமிறந் தேகுமோ ?—என்றன்
சித்தந் தெளிவுநிலை கூடுமோ ?

3. 'உண்மை யொளிர்க' வென்று பாடவோ?—அதில்
உங்க ளருள்பொருந்தக் கூடுமோ ?
வண்மை யுடையதொரு சொல்லினுல்—உங்கள்
வாழ்வு பெறவிரும்பி நிற்கிறேம்.

4. "தீயை யகத்தினிடை மூட்டுவோம்"—என்று
செப்பு மொழிவலிய தாகுமோ ?
ஈயைக் கருடநிலை யேற்றுவீர்—எம்மை
என்றுந் துயரமின்றி வாழ்த்துவீர்.

5. வான மழைபொழிதல் போலவே—நித்தம்
வந்து பொழியுமின்பங் கூட்டுவீர்
கானை யழித்துமனை கட்டுவீர்—துன்பக்
கட்டுச் சிதறிவிழ வெட்டுவீர்.

6. விரியு மறிவுநிலை காட்டுவீர்—அங்கு
வீழுஞ் சிறுமைகளை யோட்டுவீர்
தெரியு மொளிவிழியை நாட்டுவீர்—நல்ல
தீரப் பெருந்தொழிலிற் பூட்டுவீர்.

7. மின்ன லனையதிற லோங்குமே—உயிர்
வெள்ளங் கரையடங்கிப் பாயுமே
தின்னும் பொருளமுத மாகுமே—இங்கு*
செய்கை யதனில்வெற்றி யேறுமே.

8. தெய்வக் கனல்விளைந்து காக்குமே—நம்மைச்
சேரு மிருளழியத் தாக்குமே.
கைவைத் ததுபசும்பொன் னாகுமே—பின்பு
காலன் பயமொழிந்து போகுமே.

9. 'வலிமை, வலிமை'யென்று பாடுவோம்—என்றும்
வாழுஞ் சுடர்க்குலத்தை நாடுவோம்
கலியைப் பிளந்திடக்கை யோங்கினேம்—நெஞ்சிற்
கவலை யிருளனைத்து நீங்கினேம்.

[பா - ர்.] : *'இங்குச்' —கவிமணி

10. 'அமிழ்தம் அமிழ்தம்'என்று கூவுவோம்—நித்தம்
அனலைப் பணிந்துமலர் தூவுவோம்
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றுந்
தலைமை பெருமைபுகழ் கூடுவோம்.

---

13. ஸரஸ்வதி ஸ்தோமம்—ஞானபாநு

1. திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம்,நல் லறிவு,வீரம்,
மருவுபல் கலையின் சோதி, வல்லமை யென்ப வெல்லாம்
வருவது ஞானத் தாலே வையக முழுது மெங்கள்
பெருமைதா னிலவி நிற்கப் பிறந்தது ஞான பாநு.

2. கவலைகள் சிறுமை, நோவு, கைதவம், வறுமைத் துன்பம்,
அவலமா மனத்தைக் காட்டில் அவலமாம் புலைமை யச்சம்,
இவையெலாம் அறிவிலாமை என்பதோர் இருளிற் பேயாம்.
நவமுறு ஞான பாநு நண்ணுக; தொலைக பேய்கள்.

3. அனைத்தையுந் தேவர்க் காக்கி, அறத்தொழில் செய்யு மேலோர்
மனத்திலே சக்தி யாக வளர்வது நெருப்புத் தெய்வம்;
தினத்தொளி ஞானங் கண்டீர்; இரண்டுமே சேர்ந்தால் வானோர்
இனத்திலே கூடி வாழ்வர் மனிதரென் றிசைக்கும் வேதம்.

4. பண்ணிய முயற்சி யெல்லாம் பயனுற வோங்கு மாங்கே
எண்ணிய எண்ண மெல்லாம் எளிதிலே வெற்றி யெய்தும்;
திண்ணிய கருத்தி லேடும் சிரித்திடு முகத்தி லேடும்
நண்ணிடு ஞான பாநு, அதனைநாம் நன்கு போற்றின்.

---

14. ஒளியும் இருளும்

1. வான மெங்கும் பரிதியின் சோதி ;
மலைகள் மீதும் பரிதியின் சோதி ;
தானை நீர்க்கடல் மீதிலு மாங்கே
தரையின் மீதுந் தருக்களின் மீதும்
கான சுத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி ;
மான வன்ற னுளத்தினில் மட்டும்
வந்து நிற்கும் இருளிது வென்னே !

2. சோதி யென்னுங் கரையற்ற வெள்ளம்,
தோன்றி யெங்குந் திரைகொண்டு பாய,
சோதி யென்னும் பெருங்கடல், சோதிச்
சூறை, மாசறு சோதி யனந்தம்,
சோதி யென்னு நிறைவிஃ துலகைச்
சூழ்ந்து நிற்ப, ஒருதனி நெஞ்சம்
சோதி யன்றதொர் சிற்றிருள் சேரக்
குமைந்து சோரும் கொடுமையி தென்னே

3. தேம லர்க்கொ ரமுதன்ன சோதி,
சேர்ந்து புள்ளினம் வாழ்த்திடும் சோதி,
காம முற்று நிலத்தொடு நீருங்
காற்று நன்கு தழுவி நகைத்தே
தாம யங்கிநல் லின்புறுஞ் சோதி,
தரணி முற்றுந் ததும்பி யிருப்ப,
தீமை கொண்ட புலையிருள் சேர்ந்தோர்
சிறிய நெஞ்சந் தியங்குவ தென்னே !

4. நீர்சு னைக்கணம் மின்னுற் றிலக,
நெடிய குன்றம் நகைத்தெழில் கொள்ள,
கார்ச்ச டைக்கரு மேகங்க ளெல்லாம்
கனக மொத்துச் சுடர்கொண் டுலாவ,

தேர்ச்சி கொண்டுபல் சாத்திரங் கற்றுந்
தெவிட்டொ ணாததல் லின்பக் கருவாம்
வேர்ச்சு டர்பரமாண்பொருள் கேட்டும்
மெலிவொர் நெஞ்சிடை மேவுத லென்னே !

---

15. கடமை

கடமை புரிவா ரின்புறுவார்
என்னும் பண்டைக் கதைபேணும் ;
கடமை யறியோம் தொழிலறியோம் ;
கட்டென் பதனை வெட்டென்போம் ;
மடமை, சிறுமை, துன்பம்பொய்
வருத்தம், நோவு, மற்றிவைபோல்
கடமை நினைவுந் தொலைத்திங்கு
களியுற் றென்றும் வாழ்குவமே.

---

16. விடுதலை (1)

1. இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஒளடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில்செய்து வாழ்வனவோ ?

வேறு

2. மானுட ருழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்புகட் டாவிடினு மன்றிநீர்பாய்ச் சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையாக நெற்கள் புற்கள்மலிந் திருக்குமன்றே?
யானெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா;
ஊனுடலை வருத்தாதீர்; உணவியற்கை கொடுக்கும் ;
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்.

---

17. விடுதலை (2)

[ராகம்—நாட்டை]

பல்லவி

வேண்டுமடி யெப்போதும் விடுதலை, அம்மா!

சரணங்கள்

1. தூண்டு மின்ப வாடைவீசு துய்யதேன்கடல்
சூழநின்ற தீவிலங்கு சோதி வானவர்
ஈண்டுநமது தோழராகி
எம்மோடமுத முண்டுகுலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடு மின்ப மனைத்தும்உதவ

(வேண்டுமடி)

2. விருத்தி ராதி தானவர்க்கு மெலிவ தின்றியே
விண்ணு மண்ணும் வந்துபணிய மேன்மை துன்றியே
பொருத்த முறநல் வேதமோர்ந்து
பொய்ம்மைதீர, மெய்ம்மைநேர
வருத்தமழிய வறுமையொழிய
வைய முழுதும் வண்மைபொழிய

(வேண்டுமடி)

3. பண்ணில்இனிய பாடலோடு பாயு மொளியெலாம்
பாரில்எம்மை யுரிமைகொண்டு பற்றிநிற்கவே
நண்ணியமரர் வெற்றி கூற
நமதுபெண்கள் அமரர்கொள்ள
வண்ணமினிய தேவமகளிர்
மருவநாமும் உவகைதுள்ள

(வேண்டுமடி)

———

18. விடுதலை — சிட்டுக் குருவி

பல்லவி

விட்டு விடுதலை யாகிநிற்பா யிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.

சரணங்கள்

1. எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வாஞ்ஞெளி யென்னு மதுவின் சுவையுண்டு (விட்டு)

2. பெட்டையி ஞோடின்பம் பேசிக் களிப்புற்றுப்
பீடையி லாததொர்† கூடுகட் டிக்கொண்டு
முட்டை தருங்குஞ்சைக் காத்து மகிழ்வெய்தி
முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு (விட்டு)

3. முற்றத்தி லேயுங் கழனி வெளியிலும்
முன்கண்ட தானியம் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுது கதைசொல்லித் தூங்கிப்பின்
வைகறை யாகுமுன் பாடி விழிப்புற்று (விட்டு)

---

19. விடுதலை வெண்பா

1. சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து
பக்தியினற் பாடிப் பலகாலும்—முக்திநிலை
காண்போ மதனற் கவலைப் பிணிதீர்ந்து
பூண்போம் அமரப் பொறி.

2. பொறிசிந்தும் வெங்கனல்போற் பொய்தீர்ந்து
[தெய்வ
வெறிகொண்டா லாங்கதுவே வீடாம்—நெறி
[கொண்ட
வையமெலாந் தெய்வ வலியன்றி வேறில்லை
ஐயமெலாந் தீர்ந்த தறிவு.

[பா - ம்.]: †'பீடையிலாத வோர்' —கவிமணி

3. அறிவிலே தோன்றில் அவனியிலே தோன்றும்
வறிஞராய்ப் பூமியிலே வாழ்வீர்—குறிகண்டு
செல்வமெலாம் பெற்றுச் சிறப்புறவே சக்திதரும்
வெல்வயிரச் சீர்மிகுந்த வேல்.

4. வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல்முருகன்
காலைப் பணிந்தாற் கவலைபோம்—மேலறிவு
தன்னுலே தான்பெற்று சக்திசக்தி சக்தியென்று
சொன்னு லதுவே சுகம்.

5. சுகத்தினை நான்வேண்டித் தொழுதேன்; எப்போதும்
அகத்தினிலே துன்புற் றழுதேன்—யுகத்தினிலோர்
மாறுதலைக் காட்டி வலிமை நெறிகாட்டி
ஆறுதலைத் தந்தா ளவள்.

20. மனப் பெண்

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை யஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமைகா ணுமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததி லிசைவாய்.
அங்ஙனே
என்னிடத் தென்று மாறுத லில்லா
அன்புகொண் டிருப்பாய், ஆவிகாத் திடுவாய்,

கண்ணினேர் கண்ணுய்க் காதின் காதாய்ப்
புலன்புலப் படுத்தும் புலனு மென்னே
உலக வுருளேயில் ஒட்டுற வகுப்பாய்,
இன்பெலாந் தருவாய், இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடியெண் ணிலாப்பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்,
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்,
தன்னே யறியாய், சகத்தெலாந் தொலேப்பாய்,
தன்பின் னிற்குந் தனிப்பரம் பொருளேக்
காணவே வருந்துவாய், காணெனிற் காணுய்,
சகத்தின் விதிகளேத் தனித்தனி யறிவாய்,
பொதுநிலே யறியாய், பொருளேயுங் காணுய்,
மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னெடு வாழு நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனே நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவன்; நின்னே மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன்; முத்தியுந் தேடுவேன்;
உன்விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளேத் தினமும் போற்றி
உன்றனக் கின்ப மோங்கிடச் செய்வேன்.

---

21 நெஞ்சொடு சொல்வது

1. இன்னுமொரு முறைசொல்வேன், பேதை நெஞ்சே,
எதற்குமினி யுளேவதிலே பயனென் றில்லே;
முன்னர்நம திச்சையினுற் பிறந்தோ மில்லே;
முதலிறுதி யிடைநமது வசத்தி லில்லே;
மன்னுமொரு தெய்வத்தின் சக்தி யாலே
வையகத்திற் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்;
பின்னேயொரு கவலேயுமிங் கில்லே நாளும்
பிரியாதே விடுதலேயைப் பிடித்துக் கொள்வாய்.

2. நினேயாத விளேவெல்லாம் விளேந்து கூடி
நினேத்தபயன் காண்பதவள் செய்கை யன்றே?

மனமார வுண்மையினைப் புரட்ட லாமோ ?
மஹாசக்தி செய்தநன்றி மறக்க லாமோ?
எனையாளு மாதேவி, வீரர் தேவி
இமையவருந் தொழுந்தேவி, எல்லைத் தேவி,
மனவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி
மலரடியே துணையென்று வாழ்த்தாய் நெஞ்சே.

3. சக்தியென்று புகழ்ந்திடுவோம், முருக னென்போம்,
சங்கரனென்றுரைத்திடுவோம்,கண்ண னென்போம்,
நித்தியமிங் கவள்சரணே நிலையென் றெண்ணி,
நினக்குள்ள குறைகளெலாந் தீர்க்கச் சொல்லி,
பக்தியினாற் பெருமையெலாங் கொடுக்கச் சொல்லி,
பசிபிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி,
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதா ளுரைப்பாய், நெஞ்சே.

4. 'செல்வங்கள் கேட்டால்நீ கொடுக்க வேண்டும்,
சிறுமைகளென் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்,
கல்வியிலே மதியினைநீ தொடுக்க வேண்டும்,
கருணையினு லயங்கள் கெடுக்க வேண்டும்,
தொல்லைதரு மகப்பேயைத் தொலைக்க வேண்டும்,
துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே
நல்லவழி சேர்ப்பித்துக் காக்க வேண்டும்,
நமோநமஓம் சக்தி'யென நவிலாய் நெஞ்சே.

5. பாட்டினிலே சொல்லுவது மவள்சொல் லாகும்;
பயனன்றி யுரைப்பாளா ? பாராய், நெஞ்சே!
கேட்டதுநீ பெற்றிடுவாய், ஐய மில்லை ;
கேடில்லை, தெய்வமுண்டு, வெற்றி யுண்டு,
மீட்டுமுனக் குரைத்திடுவேன், ஆதி சக்தி
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி,
நாட்டினிலே சனகனைப்போல் நமையுஞ் செய்தாள் ;
நமோநமஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே.

———

22. மனமே

1. கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணந் தருமே.

2. தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமா னிங்கே.

3. இங்கே யமரர் சங்கந் தோன்றும்
மங்குந் நீமை பொங்கும் நலமே.

4. நலமே நாடிற் புலவீர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே.

5. புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்
தொகையோ டசுரப் பகைதீர்ப் பதையே.

6. தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை
ஆர்ப்பா ரமரர் பார்ப்பார் தவமே.

7. தவரு துணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே.

8. ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
என்றுந் திகழும் குன்று வொளியே.

---

23. மனத்திற்குக் கட்டளை

பேயா யுழலுஞ் ‡ சிறுமனமே
பேணு யென்சொல் இன்றுமுதல்
நீயா யொன்றும் *நாடாதே
நினது தலைவன் யானேகாண்
தாயாம் சக்தி தாளினிலும்
தரும மெனையான் குறிப்பதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுவாய்†
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

———

[பா - ம்.]: ‡'பேயா வுழலுஞ்'
*'நீயா ஒன்றை'
—1910ஆம் வருடப் பதிப்பு
†'ஓயா தேநின் றுழைத்திடு நீ'

24 மனத்திற்கு *

சென்றதினி மீளாது, மூடரே நீர்
எப்போதுஞ் சென்றதையே சிந்தைசெய்து
கொன்றழிக்குங் கவலையெனும் குழியில்வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல்வேண்டா
இன்றுபுதி தாய்ப்பிறந்தோ மென்றுநீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்துவாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பிவாரா.

———

25. பகைவனுக் கருள்வாய்

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்.

1. புகைநடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே.
பகைநடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான்—நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்றான். (பகைவனுக்)

2. சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ—நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடிவள ராதோ?—நன்னெஞ்சே (பகைவனுக்)

3. உள்ள நிறைவிலொர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமோ?—நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலொர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனுமோ?—நன்னெஞ்சே (பகைவனுக்)

---

*இப்பாடலின் முதல் மூன்று அடிகளும் நான்காமடியின் முற்பகுதியுமான ஏழு வரிகளும் 'பாரதி அறுபத்தாறு' என்னும் பகுதியுள் 32 ஆம் பாட்டில் உள்ளன.

4. வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழி வானென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே (பகைவனுக்)

5. போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போலுவந் தானுமவன்—நன்னெஞ்சே
நேருக் கருச்சுனன் தேரிற் கசைகொண்டு
நின்றதுங் கண்ண னன்றே?—நன்னெஞ்சே (பகைவனுக்)

6. தின்ன வரும்புலி தன்னையு மன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே (பகைவனுக்)

---

26. தெளிவு

1. எல்லா மாகிக் கலந்து நிறைந்தபின்
ஏழைமை யுண்டோடா?—மனமே!
பொல்லாப் புழுவுனைக் கொல்ல நினைத்தபின்
புத்தி மயக்கமுண்டோ?

2. உள்ள தெலாமோ ருயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ?—மனமே!
வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா?

3. சித்தி னியல்பு மதன்பெருஞ் சத்தியின்
செய்லகயுந் தேர்ந்துவிட்டால்,—மனமே,
எத்தனை கோடி யிடர்வந்து சூழினும்
எண்ணஞ் சிறிதுமுண்டோ?

[பா - ம்.]: $'கண்ட பின்'
—1910ஆம் வருடப் பதிப்பு

4. செய்க செயல்கள் சிவத்திடை நின்றெனத்
தேவ னுரைத்தனனே ;—மனமே !
பொய்கரு தாம லதன்வழி நிற்பவர்
பூதல மஞ்சுவரோ ?

5. ஆன்ம வொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்
கச்சமு முண்டோடா?—மனமே !
தேன்மடை யிங்குத் திறந்தது கண்டு*
தேக்கித் திரிவமடா !

---

27. ஆத்ம ஜயம்

1. கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டாவோ?—அட,
மண்ணில் தெரியுது வானம், அதுநம்
வசப்பட லாகாதோ ?
எண்ணி யெண்ணிப்பல நாளு முயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ?—அட,
விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலு
மேவு பரா சக்தியே.

2. என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள்,
எத்தனை மேன்மைகளோ—
தன்னைவென் றுலவை யாவும் பெறுவது
சத்திய மாகுமென்றே
முன்னை முனிவர் உரைத்த மறைப்பொருள்
முற்று முணர்ந்தபின்னும்
தன்னைவென்றுளும் திறமை பெறுதிங்குத்
தாழ்வுற்று நிற்போமோ ?

[பா - ம்] ; * 'கண்டது'

28. பரசிவ வெள்ளம்

1. உள்ளும் புறமுமா யுள்ளதெலாந் தானுகும்
வெள்ள மொன் றுண்டாமதனைத் தெய்வமென்பார்
வேதியரே.

2. காணுவன நெஞ்சிற் கருதுவன உட்கருத்தைப்
பேணுவன யாவும் பிறப்பதந்த வெள்ளத்தே.

3. எல்லிபிரி வற்றதுவாய் யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென்றறிஞ ரென்றுமய லெய்துவதாய்.

4. வெட்டவெளி யாயறிவாய் வேறுபல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்

5. தூல வணுக்களாய்ச் சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த் தன்மையெலாந் தானுகி

6. தன்மையொன்றி லாததுவாய்த் தானே
ஒரு பொருளாய்த்
தன்மை பலவுடைத்தாய்த் தான்பலவாய் நிற்பதுவே.

7. எங்குமுளான் யாவும்வலான் யாவுமறி வானெனவே
தங்கு பலமதத்தோர் சாற்றுவது மிங்கிதையே.

8. வேண்டுவோர் வேட்கையாய் வேட்பாராய் வேட்பாருக்
கீண்டுபொரு ளாயதனை யீட்டுவதாய் நிற்குமிதே.

9. காண்பார்தங் காட்சியாய்க் காண்பாராய்க்
காண்பொருளாய்
மாண்பார்ந் திருக்கும், வகுத்துரைக்க வொண்ணுதே.

10. எல்லாந் தானுகி யிருந்திடினு மிஃதறிய
வல்லார் சிலரென்பர் வாய்மையெல்லாங் கண்டவரே.

11. மற்றிதனைக் கண்டார் மலமற்றூர் துன்பமற்றூர்
பற்றிதனைக் கொண்டார் பயனனைத்துங் கண்டாரே.

12. இப்பொருளைக் கண்டார் இடருக்கோ ரெல்லைகண்டார்
எப்பொருளுந் தாம்பெற்றிங் கின்பநிலை யெய்துவரே.

13. வேண்டுவவெ லாம்பெறுவார் வேண்டா ரெதனையுமற்
றீண்டுபுவி யோரவரை யீசரெனப் போற்றுவரே.

14. ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆளுவர்காண்
என்றுமே யிப்பொருளோ டேகாந்தத் துள்ளவரே.

15. வெள்ளமடா தம்பி விரும்பியபோ தெய்திநின
துள்ளமிசைத் தானமுத வூற்றுப்பொழியுமடா.

16. யாண்டுமிந்த இன்பவெள்ளம் என்று நின்னுள்
வீழ்வதற்கே
வேண்டு முபாய மிகவுமெளி தாகுமடா.

17. எண்ணமிட்டா லேபோதும் எண்ணுவதே யிவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே ததும்பப் புரியுமடா.

18. எங்கு நிறைந்திருந்த ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப் போற்றிநின்றூற்
போதுமடா.

19. யாதுமா மீசவெள்ள மென்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை யுள்ளுவதே போதுமடா.

20. காவித் துணிவேண்டா சுற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும் பரமநிலை யெய்துதற்கே.

21. சாத்திரங்கள் வேண்டா சதுமறைக ளேதுமில்லை
தோத்திரங்க ளில்லையுளந் தொட்டுநின்றூற் போதுமடா.

22. தவமொன்று மில்லையொரு சாதனையு மில்லையடா
சிவமொன்றே யுள்ளதெனச் சிந்தைசெய்தாற்
போதுமடா.

23. சந்ததமு மெங்குமெல்லாந் தானுகி நின்றசிவம்
வந்தெனுளே பாயுதென்று வாய்சொன்னற் போதுமடா.

24. நித்தசிவ வெள்ளமென்னுள் வீழ்ந்து நிரம்புதென்றுன்
சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தையொன்றே
போதுமடா.

———

29. பொய்யோ? மெய்யோ?

[எல்லா சாஸ்திரங்களும் ஏறகுறைய உண்மை தான். ஆனல், எல்லாருக்கும், எப்போதும், ஒரே சாஸ்திரம் ஒத்துவராது. சின்ன திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் :—

ஒரு செல்வர், கிழவனூர்; ஒருவேளை ஆஹாரம் செய்துகொண்டு, லௌகிக விஷயங்களைத் தான் கவனியாமல், பிள்ளைகள் கையிலே கொடுத்துவிட்டு, நியம நிஷ்டைகள் ஜப தபங்களுடன் சுந்தர காண்டத்தையும் கடோபநிஷத்தையும், பாராயணம் செய்துகொண்டு வீட்டைவிட்டு வெளியேறும லிருப்பதே மேலான வழியென்ற கொள்கை இந்தக் கிழவனுருக்குச் சரிப்பட்டு வரும்.

ஒரு 16 வயது ஏழைப்பிள்ளை; தகப்பனில்லை; வீட்டிலே தாயாருக்கும் தங்கைக்கும் தனக்குமாக எங்கேனும் போய் நாலுபணம் கொண்டுவந்தால் தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம். இவன் மேற்படி சுந்தரகாண்டவழியைப் போய்ப் பிடித்தால் நியாயமாகுமா?

'இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கிவருகிறது. ஸந்யாஸிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும். அதைப்பற்றி, இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்தி லிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச் சொல்லன்றே? நமக்குத் தந்தை வைத்து விட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலை போலே நிற்கிறுள் மனைவி. நமது துயரத்துக்கெல் லாம் கண்ணீர்விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின்போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானு? பெற்றவரிடம்

கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?

வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன்படாது. நமக்கு இவ்வுல கத்தில் வேண்டியவை நீண்ட வயது, நோயில் லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற் றைத் தரும்படி தத்தம் குலதெய்வங்களே மன்றாடிக் கேட்கவேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானே கிடைக்கும்.]

உலகத்தை நோக்கி வினவுதல்

1. நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந்தானே?—பலதோற்ற மயக்கங்களோ?
சுற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ?—உம்முள் ஆழ்ந்த
பொருளில்லையோ?

2. வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலினீரோ?—வெறுங் காட்சிப் பிழைதானே?
போனதெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே
போனதனால்
நானுமோர் கனவோ?—இந்த ஞாலமும் பொய்தானே?

3. காலமென்றே யொருநினைவுங் காட்சியென்றே
பலநினைவும்
கோலமும் பொய்களோ?—அங்குக்
குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர்
விதையிலென்றுல்
சோலை பொய்யாமோ?—இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ?

§4. காண்பவெல்லா மறையுமென்றுல் மறைந்த
தெல்லாம்* காண்பமன்றே?
வீண்படு பொய்யிலே—நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே யுறுதிகண்டோம்,‡ காண்பதல்லா
லுறுதியில்லே
காண்பது சக்தியாம்—இந்தக் காட்சி நித்தியமாம்.

[பின்னுரை :—முதற் பாட்டிலே, 'நிற்பது', 'நடப்பது' முதலியன உலகத்தில் தோன்றும் வடிவங்கள்; 'கற்பது', 'கேட்பது' முதலியன செய்கைகள். மூன்றும் பாட்டிலே 'கோலமும் பொய்களோ, அங்குக் குணங்களும் பொய்களோ' என்பது, தெளிவாகச் சொன்னுல், 'தேளின் உருவம் மாத்திரம் பொய்யோ? அது கொட்டுவதும் பொய்தானே?' என்ற கேள்வி.]

---

30. நான்

இரட்டைக் குறள்வெண்செந்துறை

1. வானிற் பறக்கின்ற புள்ளெலாநான்
மண்ணிற் றிரியும் விலங்கெலாநான்
கானிழல் வளரு மரமெலாநான்
காற்றும் புனலுங் கடலுமேநான்.

---

§4 இப்பாட்டின் தலைப்பாக 'இயற்கை சொல்விடை' என்று முதற் புதிப்பிலே உள்ளது.

[பா - ம்.]: *'காண்பதெல்லா மறையுமென்றுல் மறைந்த
வெல்லாம்' என்றும்,
'காண்பவெல்லா மறையுமென்றுல் மறைந்த
வெல்லாம்'
என்றும் பாடம் கொள்ளலாம் என்கிறூர் கவிமணி.
‡ 'காண்பதுவே யுறுதி யென்னுய்' என்றும்,
'காண்பதுவே யுண்மை கண்டாய்' என்றும்
பாடம் கொள்ளலாம் என்கிறூர் கவிமணி.

2. விண்ணிற் றெரிகின்ற மீனெலாநான்
வெட்ட வெளியின் விரிவெலாநான்
மண்ணிற் கிடக்கும் புழுவெலாநான்
வாரியி லுள்ள வுயிரெலாநான்.

3. கம்ப னிசைத்த கவியெலாநான்
காருகர் தீட்டு முருவெலாநான்
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழினகர் கோபுரம் யாவுமேநான்.

4. இன்னிசைமாத ரிசையுளேனுன்
இன்பத் திரள்க ளனைத்துமேநான்
புன்னிலை மாந்தர்தம் பொய்யெலாநான்
பொறையருந் துன்பப் புணர்ப்பெலாநான்.

5. மந்திரங் கோடி யியக்குவோனுன்
இயங்கு பொருளி னியல்பெலாநான்
தந்திரங் கோடி சமைத்துளோனுன்
சாத்திர வேதங்கள் சாற்றினேனுன்.

6. அண்டங்கள் யாவையு மாக்கினேனுன்
அவைபிழை யாமே சுழற்றுவோனுன்
கண்டநற் சக்திக் கணமெலாநான்
காரண மாகிக் கதித்துளோனுன்.

7. நானெனும் பொய்யை நடத்துவோனுன்
ஞானச் சுடர்வானிற் செல்லுவோனுன்
ஆன பொருள்க ளனைத்தினு மொன்றுய்
அறிவாய் விளங்கு முதற்சோதிநான்.

தேசிய கீதங்கள்

தேசபக்திப் பாடல்கள்

1. பாரத நாடு
2. தமிழ் நாடு
3. சுதந்திரப் பள்ளு
4. தேசிய இயக்கப் பாடல்கள்
5. தேசியத் தலைவர்கள்
6. பிற நாடுகள்

தேசிய கீதங்கள் என்னும் இப் பகுதியுள் உள்ள பாடல்கள் "ஸ்வதேச கீதங்கள்", "ஜன்ம பூமி", "நாட்டுப் பாட்டு", "மாதா மணிவாசகம்" முதலிய நூல்களினின்றும் தொகுக்கப்பட்டு, பாரதிநூல்களின் முதலி-ரண்டு பாகங்களிலே சேர்க்கப்பட்டிருந்தன. அவ்விரு பாகங்களுள் வேறு பாடல்களும் சேர்க்கப்பெற்றிருந்தன. "தேசிய கீதங்கள்" மட்டும் பிரித்து 1929 ஆம் வருஷத்தில் தனிப் பதிப்பாக முதலில் பிரசுரிக்கப்பட்டது.

* "ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூல் 1908ஆம் ஆண்டில் முதன்முதலில் வெளி யாயிற்று.

* 'ஜன்ம பூமி' (ஸ்வதேச கீதங்கள்— இரண்டாம் பாகம்) 1909 இல் வெளியாயிற்று.

* "மாதா மணிவாசகம்" என்னும் நூல் 1914 ஆம் ஆண்டில் தென்னுப்பிரிக்காவில் வெளியாயிற்று.

* "நாட்டுப் பாட்டு" என்னும் பாடற் றொகுதியை திரு. பரலி. சு. நெல்லையப்பர் வெளியிட்டார். அதன் இரண்டாம் பதிப்பு 1919ஆம் ஆண்டில் வெளியாயிற்று.

"ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூலி லுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமா று:

ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்துமஜ்ஞா னத்தை விளக் கியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ணரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப் பிக்கின்றேன்.

—ஆசிரியன்



முகவுரை

ஒருமையும் யௌவனத்தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவியின் சரணங்களிலே யான் பின்வரும் மலர்கள்கொண்டு சூட்டத் துணிந்தது எனக்குப் பிழையென்று தோன்றவில்லை. யான் சூட்டியிருக்கும் மலர்கள் மணமற்றன வென்பதை நன்கறிவேன். தேவலோகத்துப் பாரிஜாத மலர்கள் சூடத் தகுதிகொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம்பூக்கள் அணிக்குறைவு விளைவிக்குமென்பதையும் நான் தெரிந்துள்ளேன்.

ஆயினும் உள்ளன்பு மிகுதியால் இச் செய்கையிலே துணிவுகொண்டுவிட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களாகக் கருதி அங்கீகரிக்கவில்லையா? அதனையொப்ப, எனது குணமற்ற பூக்களையும் பாரதமாதா கருணையுடன் ஏற்றருளுக!

—சி. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு: இந்தப் பாடல்களைப் பிரசுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுவதில் மிகுந்த ஆவல் காட்டி உதவிகளியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றிபாராட்டுகின்றேன்.

1908 ஆம் ஜனவரி மீ 10 உ. மைலாப்பூர்.

○

'ஜன்ம பூமி' ("ஸ்வதேச கீதங்கள்"—இரண்டாம் பாகம்) என்னும் நூலிலுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமாறு:

ஸமர்ப்பணம்

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமலுணர்த்திய குரு மணியும், பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதாதேவிக்கு இந் நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

—சி. சுப்பிரமணிய பாரதி

○

முகவுரை

இனிய நிலவின் ஒளியால் வீழுங்கப்பட்டு உலகம் அவாங்மனகோசரமாகிய ஸௌந்தர் யத்தைப்பெற்றிருக்கும் சமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாது குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப்பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினையொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்—ஓர் மார்க்கம்—தோன்றுமேயானால், மேன் மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்தமலர்போல, அவ் வாதர் சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுப கிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங் களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடைய வனாகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதைமலர் புனைந்து, மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராதவண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் "இம்மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சியறிவித்தார்கள். மாதா வும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள்.

இதனால் துணிவுமிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்குமென்றே நினைக்கின்றேன்; "குழலினிது யாழினிதென்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்பது வேதமாதலின்.

இங்ஙனம்,

சி. சுப்பிரமணிய பாரதி

○

தேசிய கீதங்கள்

★

தேசபக்திப் பாடல்கள்

★

1. பாரத நாடு

—:o:—

1. வந்தே மாதரம்

தாயுமானவர் ஆனந்தக் களிப்பு மெட்டு

ராகம்—நாதநாமக்கிரியை] [தாளம்—ஆதி

பல்லவி

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

சரணங்கள்

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே
(வந்தே)

2. ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றே?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே)

3. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றே?
(வந்தே)

4 ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?‡
(வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்தே)

6. புல்லடி மைத்தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி
(வந்தே)

---

2. வந்தே மாதரம்

ராகம்—ஹிந்துஸ்தானி பியாக்] [தாளம்—ஆதி

பல்லவி

வந்தே—மாதரம்—ஜய
வந்தே மாதரம்

[பா - ம்.] : ‡'பின்னமக்கெது வேண்டும்'
—ஸ்வதேச கீதங்கள்

*1919ஆம் ஆண்டில் வெளிவந்த பாடல் தொகுதியான 'நாட்டுப்பாட்டு' என்ற பகுதியில் 2, 3, 6 சரணங்கள் இடம் பெறவில்லை.

சரணங்கள்

1. ஜயஜய பாரத ஜயஜய பாரத
ஜயஜய பாரத ஜயஜய ஜயஜய (வந்தே)

2. ஆரிய பூமியில் நாரிய ரும்நர
சூரிய ரும்சொலும் வீரிய வாசகம் (வந்தே)

3. நொந்தே போயினும் வெந்தே மாயினும்
நந்தே சத்தர்—உ வந்தே சொல்வது (வந்தே)

4. ஒன்ரூய் நின்றினி வென்ரு யினுமுயிர்
சென்ரு யினும்வலி குன்ரு தோதுவம் (வந்தே)

---

3 நாட்டு வணக்கம்

சுதேச வந்தனம்

ராகம்—காம்போதி] [தாளம்—ஆதி

1. எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனே?

2. இன்னுயிர் தந்தெமை யின்று வளர்த்தரு
வீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோள் பு மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்

கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனே ?

3. மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனே ?

---

4. பாரத நாடு

[ராகம்—ஹிந்துஸ்தானி தோடி]

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

1. ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே,
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்தி லேபடை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே,
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையி லேயுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே,
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்தி லேதொழி லூக்கத்திலே—புய
வீக்கத்தி லேயுயர் நோக்கத்திலே,
காக்கத் திறல்கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையி லேயுளத் திண்மையிலே—மனத்
தண்மையி லேமதி நுண்மையிலே,
உண்மையி லேதவ ரூத புலவர்
உணர்வினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

6. யாகத்தி லேதவ வேகத்திலே—தனி
யோகத்தி லேபல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண் டார்தம்
அருளினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

7. ஆற்றினி லேசுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபய னீந்திடுங் காலி
யினத்தினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

8. தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே—கனி
யிட்டத்தி லேபயி ரூட்டத்திலே
தேட்டத்தி லேயடங் காத நிதியின்
சிறப்பினி லேயுயர் நாடு—இந்தப் (பாரு)

---

5. பாரத தேசம்

[ராகம்—புன்னகவராளி]

பல்லவி

பாரத தேசமென்று பெயர்சொல்லுவார்—மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லுவார்.

சரணங்கள்

1. வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்கு வோம்எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.

2. சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம்.

3. வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்.

4. முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

5. சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் ஞாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்.

6 கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

7. காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.

8. பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலேகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்.

9. ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம்செய்வோம்
ஆலேகள் வைப்போம்கல்விச் சாலேகள்வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலே சாயுதல்செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்.

10. குடைகள் செய்வோம்உழு படைகள்செய்வோம்
கோணிகள் செய்வோம்இரும் பாணிகள்செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்.

11. மந்திரங் சுற்போம்வினேத் தந்திரங்கற்போம்
வானே யளப்போம்கடல் மீனேயளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்.

12. காவியஞ் செய்வோம்நல்ல காடுவளர்ப்போம்
கலே வளர்ப்போம்கொல்ல ருலேவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனேத்து முவந்துசெய்வோம்.

13. சாதி இரண்டொழிய வேறில்லேயென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர் ; கீழவர்மற்றோர். (பாரத)

———

6. எங்கள் நாடு

[ராகம்—பூபாளம்]

1. மன்னு மிமயமலே யெங்கள்மலேயே
மாநில மீதுபோற் பிறிதிலேயே !
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள்யாறே
இங்கிதன் மாணபிற் கெதிரெதுவேறே ?

பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிதுபோலே !
பொன்னெளிர் பாரத நாடெங்கள்நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலையீடே.

2. மாரத வீரர் மலிந்தநன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன்னாடு
நாரத கான நலந்திகழ்நாடு
நல்லன யாவையு நாடுறுநாடு
பூரண ஞானம் பொலிந்தநன்னாடு$
புத்தர் பிரானருள் பொங்கியநாடு
பாரத நாடு பழம்பெருநாடே
பாடுவ மிஃதை யெமக்கிலையீடே.

3. இன்னல்வந் துற்றிடும் போததற்கஞ்சோம்
ஏழையராகி யினிமண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில்புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையைவிரியோம்
கன்னலுந் தேனும் கனியுமின்பாலும்
சுதலியும் செந்நெலும் நல்குமெக்காலும்
உன்னத ஆரிய† நாடெங்கள்நாடே
ஒதுவ மிஃதை யெமக்கிலையீடே.

———

7. ஜய பாரத !

1. சிறந்து நின்ற சிந்தை யோடு
தேய நூறு வென்றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே !

[பா - ம்.]: $ 'பொருந்து நன்னாடு'
† 'உன்னத பாரத'
—நாட்டுப் பாட்டு.

2. நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறு நுண்மை கொள்ள விங்கு
தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்,
ஈறு நிற்கு முண்மை யொன்றி
றைஞ்சி நிற்பள் வாழ்கவே !

3. வில்லர் வாழ்வு குன்றி யோய
வீர வாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்
சொல்லு மிவ்வ னேத்தும் வேறு
சூழ நன்மை யுந்தர
வல்ல நூல்*கெ டாது காப்பள்
வாழி யன்னை வாழியே !

$4. தேவ ருண்ணு நன்ம ருந்து
சேர்ந்த கும்ப மென்னவும்
மேவு வார்க டற்க ணுள்ள
வெள்ள நீரை யொப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவி லாத செல்வ மின்னும்
ஓங்கு மன்னை வாழ்கவே !

5. இதந்த ருந்தொழில்கள் செய்தி
ரும்பு விக்கு நல்கினள்
பதந் தரற் குரிய வாய
பன்ம தங்கள் காட்டினள்

[குறிப்பு]: *உபநிஷத்து அல்லது கீதை.

$4. இக் குறியிட்ட பாடல் 'நாட்டுப் பாட்டு'த் தொகுதியில் இல்லை.

விதம் பெறும்ப ஞட்டி னர்க்கு
வேறெரு ருண்மை தோற்றவே
சுதந்தி ரத்தி லாசை யின்று
தோற்றி ஞள்மன் வாழ்கவே !

---

8. பாரத மாதா

தான தனதந்தன தான தனந்தன
தானனத் தானனே.

1. முன்னே யிலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில் ?—எங்கள்
அன்னே பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின்வில்.

2. இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடைவில் ?—எங்கள்
மந்திரத் தெய்வதம் பாரதராணி
வயிரவி தன்னுடைவில்.

3. ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேளியென்றே—மிக
நன்றுபல் வேதம் வரைந்ததகை பாரத
நாயகி தன்திருக்கை.

4. சித்த மயமிவ் வுலகம் உறுதிநம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனேயும் வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின்சொல்.

5. சகுந்தலே பெற்றதோர் பிள்ளேசிங்கத்தினேத்
தட்டி விளேயாடி—நன்
றுகந்ததோர் பிள்ளேமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்றபிள்ளே.

6. காண்டிவ மேந்தி உலகினே வென்றது
கல்லொத்த தோளெவர்தோள் ?—எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின்தோள்.

7. சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்த தெவர்கொடைக்கை ?—சுவைப
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின்கை.

8. போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடைவாய் ?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திருவாய்.

9. தந்தை யினிதுறத் தானரசாட்சியும்
தையலர் தம்முறவும்—இனி
இந்த உலகில் விருப்புகிலே னென்ற
தெம்மனை செய்தவுள்ளம்,

10. அன்பு சிவம்உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகுமென்றே—இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழியெங்கள் அன்னைமொழி.

11. மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன்மதி—தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்லநம் அன்னைமதி.

12. தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர்கவிதை ?—அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி யருட்கவிதை.

---

9. எங்கள் தாய்

(காவடிச்சிந்தில், 'ஆறுமுகவடி வேலவனே' என்ற வர்ண மெட்டு)

1. தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்.

2. யாரும் வகுத்தற் கரிய பிராவத்த
ளாயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்.

3. முப்பது கோடி முகமுடை யாளுமிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்.

4. நாவினில் வேதமுடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள்—தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடையாள்.

5. அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்.

6. பூமியினும் பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.

7. கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரிகொண் டேழுல காளு
மொருவனை யுந்தொழுவாள்.

8. யோகத்தி லேநிக ரற்றவ ளுண்மையு
மொன்றென நன்றறிவாள்—உயர்
போகத்தி லேயு நிறைந்தவ ளெண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

9. நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயப்புரி வாளெங்கள்தாய்—அவர்
அல்லல ராயி னவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்.

10. வெண்மை வளரிம யாசலன் றந்த
விறன்மக ளாமெங்கள்தாய்—அவன்
திணமை மறையினுந் தான்மறை யாணித்தஞ்
சிருறு வாளெங்கள்தாய்.

---

10. வெறிகொண்ட தாய்

1. பேயவள் காணெங்க ளன்னே—பெரும்
பித்துடைய ளெங்க ளன்னே
காயழ லேந்திய பித்தன்—தனேக்
காதலிப்பா ளெங்க ளன்னே. (பேயவள்)

2. இன்னிசை யாமின்பக் கடலில்—எழுந்
தெற்றும் அலைத்திரள் வெள்ளம்
தன்னிடை மூழ்கித் திளைப்பாள்—அங்குத்
தாவிக் குதிப்பாளெம் மன்னே. (பேயவள்)

3. தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
தெய்வீக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
தேக்கி நடிப்பளெம் மன்னே. (பேயவள்)

4. வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
வேல்கையிற் பற்றிக் குதிப்பாள்
ஓதருஞ் சாத்திரங் கோடி—உணர்ந்
தோதி யுலகெங்கும் விதைப்பாள். (பேயவள்)

5. பாரதப் போரெனி லெளிதோ?—விறற்
பார்த்தன்கை வில்லிடை யொளிர்வாள்
மாரதர் கோடிவந் தாலும்—கணம்
மாய்த்துக் குருதியிற் றிளைப்பாள். (பேயவள்)

---

11. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி

1. பொழுது புலர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதனே வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்.
வீழிதுயில் கின்றனே யின்னுமெந் தாயே !
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தரு ளாயே !

2. புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்குஞ்† சுதந்திர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் !
வீதியெ லாமணு குற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை !‡
ஆருயிரே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

3. பருதியின் பேரொளி$ வானிடைக் கண்டோம் ;
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம் ;
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம் ;
சுருதிகள் பயந்தனை ; சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை யம்மே !
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய் !
நிர்மலை யேபள்ளி யெழுந்தரு ளாயே !

4. நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ ;
பொன்னனை யாய் ! வெண் பனிமுடி யிமையப்
பொருப்பின னீந்த பெருந்தவப் பொருளே !

[பா - ம்.] : †'பொங்கின தெங்குஞ்'
‡'அள்ளிய தெள்ள முதன்னையெ மன்னை'
$'பரிதியின் பேரொளி'

—1910ஆம் வருடப் பதிப்பு

என்ன தவங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேலிது நன்றே?
இன்னுயி ரே! பள்ளி யெழுந்தரு ளாயே!

5. மதலைய ரெழுப்பவுந் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமக ளே!பெரும் பாரதர்க் கரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்
இதமுற வந்தெமை யாண்டரு ளெய்வாய்!
ஈன்றவ ளே!பள்ளி யெழுந்தரு ளாயே!$

---

12. பாரத மாதா நவரத்ன மாலை*

காப்பு

வீரர்முப் பத்திரண்டு கோடி விளைவித்த
பாரதமா தாவின் பதமலர்க்கே—சீரார்
நவரத்ன மாலையிங்கு நான்சூட்டக் காப்பாம்
சிவரத்ந மைந்தன்‡ திறம்.

வெண்பா

1. திறமிக்க நல்வயிரச் சீர்திகழு மேனி
அறமிக்க சிந்தை; அறிவு—பிறநலங்கள்
எண்ணற் றனபெறுவார் 'இந்தியா' என்றறின்றன்
கண்ணெத்த பேருரைத்தக் கால்.

[மூ - ப.]: $ 'பள்ளியெழுந்தருள்வாயே'

* ஒன்பது பாடலிலும் முறையே ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள் இயற்கைப் பொருளிலேனும் சிலேடைப் பொருளிலேனும் வழங்கப்பட்டிருத்தல் காண்க.

‡ சிவரத்ந மைந்தன்—சிவமாகிய இரத்தினத்திற்குப் பிறந்த மைந்தன்; விநாயகன்.

—பாரதி பிரசுராலயக் குறிப்பு

கட்டளைக் கலித்துறை

2. காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக்
கும்பிட்டுக் கம்பனமுற்
றேலமிட் டோடி மறைந்தொழி
வான்;பகை யொன்றுளதோ ?
நீலக் கடலொத்த கோலத்தி ஞள்மூன்று
நேத்தி ரத்தாள்$
காலக் கடலுக்கோர் பாலமிட்
டாள் அன்னை காற்படினே.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

3. அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிஹா ஸங்கள் ;
இன்னும்பன் னூல்களிலே யிசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை யிந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண் ! காலங் கொன்ற
விருந்துகாண் ! கடவுளுக்கோர் வெற்றி காணே.

ஆசிரியப் பா

4. வெற்றி கூறுமின் ! வெண்சங் கூதுமின் !
கற்றவ ராலே உலகு காப்புற்ற
துற்றதிங் கிந்நாள் ! உலகினுக் கெல்லாம்
இற்றைநாள் வரையினும், அறமிலா மறவர்,
குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்
மற்றை மனிதரை அடிமைப் படுத்தலே

[குறிப்பு]: $ மூன்று நேத்திரத்தாள் — இங்குப் பார்த மாதாவை லோகமாதாவாகிய உமாதேவியாகப் பாவனை செய்யப்பட்டிருக்கின்றது.

—பாரதி பிரசுராலயக் குறிப்பு

முற்றிய அறிவின் முறையென் றெண்ணுவார் ;
பற்றை யரசர் பழிபடு படையுடன்
சொற்றை நீதி தொகுத்துவைத் திருந்தார்.
இற்றை நாள் ;

பாரி லுள்ள பலநாட் டினர்க்கும்
பாரத நாடு புதுநெறி பழக்க
லுற்றதிங் கிந்நாள்—உலகெலாம் புகழ
இன்ப வளஞ்†செறி பண்பல பயிற்றுங்
கவீந்திர ஞகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர் :—" புவிமிசை யின்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்,
தர்மமே உருவாம், மோஹன தாஸ
கர்ம சந்திர காந்தி''யென் றுரைத்தான்.
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனுக் கொண்டு புவிமிசைத் தருமமே
அரசிய லதனிலும், பிறஇய லனைத்திலும்
வெற்றி தருமென வேதஞ் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றூர்
பாரத மக்கள். இதனைத் படைஞர்தஞ்
செருக்கொழிந் துலகி லறந்திறம் பாத
கற்றூர் தலைப்படக் காண்போம்—விரைவிலே.
(வெற்றி கூறுமின் ; வெண் சங் கூதுமின் !)

தரவுகொச்சகக் கலிப்பா

5. ஊதுமினே வெற்றி ! ஒலிமினே வாழ்த்தொலிகள் !
ஓதுமினே வேதங்கள் ! ஓங்குமினே ! ஓங்குமினே !
நீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறி* கண்டோம்;
வேதனைக ளினி வேண்டா; விடுதலையோ திண்ணமே.

[குறிப்பு] : † 'இன் ப வளம்' என்பதில் பவளம் என்ற மணியின் பெயர் அமைந்திருப்பது காண்க.

* 'செம் மணி மா நெறி'—செவ்விய அழகிய பெரிய நெறி ; அஃது ஒத்துழையாமை. செம்மணி—மாணிக்கம்.

வஞ்சி விருத்தம்

6. திண்ணங் காணீர் ! பச்சை
வண்ணன் பாதத் தாணை ;
எண்ணங் கெடுதல் வேண்டா !
திண்ணம், விடுதலை திண்ணம்.

கலிப்பா

7. '' விடுதலை பெறுவீர் விரை வா நீர் !
வெற்றி கொள்வீர் '' என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநந் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய் கின்றான்,
'' சுடுத லும்குளி ரும்உயிர்க் கில்லை ;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை ;
எடுமி னைஅறப் போரினை'' யென்றான்
எங்கோ மேதக‡ மேந்திய காந்தி !

அறுசீர் விருத்தம்

8 காந்திசேர் பதுமராகக்
கடிமலர் வாழ்ஸ்ரீதேவி,
போந்துநிற் கின்றுளின்று
பாரதப் பொன்னுடெங்கும்.
மாந்தரெல் லாருஞ்சோர்வை
அச்சத்தை மறந்துவிட்டார் ;
காந்திசொற் கேட்டார்,காண்பார்
விடுதலை கணத்தினுள்ளே.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

9. கணமெனு மென்றன் கண்முனே வருவாய்,
பாரத தேவியே, கனல்கால்
இணைவிழி வால வாயமாஞ் சிங்க†
முதுகினி லேறிவீற் றிருந்தே.

[குறிப்பு] : ‡ கோமேதகம் என்ற இரத்னப் பெயர் தொனித்தல் காண்க

† வால் அவாயமாம் சிங்கம்—பயங்கரமான வாலினை யுடைய சிங்கம். வாலவாயம் என்பது வைடூர்யத்தின் பெயர்.

துணைநினை வேண்டு நாட்டினர்க் கெல்லாந்
துயர்கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ் திருக்கோலங்
கண்டுநான் மகிழ்ந்திடு மாறே.

---

13 பாரத தேவியின் திருத்தசாங்கம்

நேரிசை வெண்பா

நாமம்

(காம்போதி)

1. பச்சை மணிக்கிளியே! பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளியதாய் பேருரையாய்—இச்சகத்திற்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு

நாடு

(வஸந்தம்)

2. தேனூர் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானுள்பொன் னுட்டை யறிவிப்பாய்—வானூடு
பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறுகும்
ஆரியநா டென்றே யறி.

நகர்

(மணிரங்கு)

3. இன்மழலைப் பைங்கிளியே யெங்க ளுயிரானுள்
நன்மையுற வாழு நகரெதுகொல்?—சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம்.

ஆறு

(சுருட்டி)

4. வன்னக்கிளி ! வந்தே மாதரமென் றேதுவரை
யின்னலறக் காப்பா ளியாறுரையாய்—நன்னர்செயத்
தான்போம் வழியெல்லாந் தன்மமொடு பொன்விளக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து.

மலை

(கானடா)

5. சோலைப் பசுங்கிளியே ! தொன்மறைகள் நான்குடையாள்†
வாலை வளரு மலைகூறுய்—ஞாலத்துள்
வெற்பொன்று மீடிலதாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு.

ஊர்தி

(தன்யாசி)

6. சீரும் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றுள்
ளூரும் புரவி யுரைதத்தாய் !—தேரிற்
பரிமிசையூர் வாளல்லள் பாரனைத்து மஞ்சும்
அரிமிசையே யூர்வா ளவள்.

படை

(முகாரி)

7. கருணை யுருவாளுள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய் !
செருநரை வீழ்த்துபடை யென்செப்பாய்—பொருபவர்மேற்
றண்ணளியான் வீழாது, வீழிற் றகைப்பரிதாந்
திண்ணமுறு வான்குலிசம் தேரு.

[பா - ம்] ; †'தொன்மறை கணுன்குடையாள்'
—ஜன்ம பூமி.

முரசு

(செஞ்சுருட்டி)

8. ஆசை மரகதமே அன்னைதிரு முன்றிலிடை
ஓசை வளர்முரச மோதுவாய்‡—பேசுகவோ
சத்தியமே செய்க தருமமே யென்றெலிசெய்
முத்திதரும் வேத முரசு.

தார்

(பிலகரி)

9. வாரா யிளஞ்சுகமே வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்சூழ்ய்—சேராரை
முற்றுக் குறுநகையால் முற்றுவித்துத்†
தாஞெளிர்வாள்
பொற்ற மரைத்தார் புனைந்து.

கொடி

(கேதாரம்)

10. கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! குத்திரமுந் தீங்கும்$
மடிப்பவளின் வெல்கொடிதான் மற்றென்—
அடிப்பணிவார்
நன்றுரத் தீயார் நலிவுறவே வீசுமொளி
குன்று வயிரக் கொடி.

[பா – ம்.]: ‡' வளர்முரசம் ஒதுவாய் '
†' குறுநகையால் முற்றுவித்து'
—நாட்டுப் பாட்டு.

$' குத்திர முந்தீங்கு'
—ஜன்ம பூமி.

14. மாதாவின் துவஜம்

பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு வர்ணமெட்டு)

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல்வந்தே மாதர மெல்றே
பாங்கி னெழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பரந்தது பாரீர் ! (தாயின்)

2. பட்டுத் துகிலென லாமோ?—அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்.
(தாயின்)

3. இந்திரன் வச்சிர மோர்பால்—அதில்
எங்கள் துருக்க ரிளம்பிறை யோர்பால்(தாய்)
மந்திர நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யாரே? (தாயின்)

4. கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார். (தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரிய காட்சியோ ரானந்த மன்றே ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர் ! (தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,

7. கன்னட ரொட்டிய ரோடு—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்,

8. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னோப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் ஞட்டார்,
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்,

10. சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

---

15. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

(நொண்டிச்சிந்து)

1. நெஞ்சு பொறுக்கு திலேயே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார்—இந்த
மரத்திலென் பார்;அந்தக் குளத்திலென்பார்,
துஞ்சுது முகட்டி லென்பார்—மிகத்
துயர்ப்படு வார்எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)

2. மந்திர வாதியென்பார்—சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார் ;
யந்திர சூனியங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர்துயர்கள் !
தந்த பொருளைக்கொண்டே—ஜனம்
தாங்குவ துலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்
(நெஞ்சு)

3. சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலை வனைசெல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்
எப்போதுங் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போ லேங்கிநடப்பார்.
(நெஞ்சு)

4. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடியென் றுல்அது பெரிதாமோ ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

5. சாத்திரங்க ளொன்றுங்காணர்—பொய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தைநம்பியே
கோத்திரம்ஒன் றுயிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார் ;
தோத்திரங்கள் சொல்லியவர் தாம்—தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார் ;
ஆத்திரங்கொண் டேயிவன்சைவன்—இவன்
அரிபக்த னென்றுபெருஞ் சண்டையிடுவார். (நெஞ்சு)

6. நெஞ்சு பொறுக்குதிலே யே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே
கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித் தேஉயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே. (நெஞ்சு)

7. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்போல்—பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலா யிரங்கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போலவாழ்வார். (நெஞ்சு)

---

16. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும், வருகின்ற ஹிந்துஸ்தானமும்

போகின்ற பாரததைச் சபித்தல்

1. வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ

2. இன்றுபார தத்திடை நாய்போலே
ஏற்றமின்றி வாழுவாய் போ போ போ
நன்றுகூறி லஞ்சுவாய் போ போ போ
நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ

சென்றுபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் போ போ போ
வென்றுநிற்கு மெய்யெலாம் பொய்யாக
விழிமயங்கி நோக்குவாய் போ போ போ

3. வேறுவேறு பாஷைகள்—சுற்பாய் நீ
வீட்டுவார்த்தை சுற்கிலாய் போ போ போ
நூறுநூல்கள் போற்றுவாய்—மெய்கூறும்
நூலிலொத் தியல்கிலாய் போ போ போ
மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில்நீள ஓதுவாய் போ போ போ
சேறுபட்ட நாற்றமும்—தூறுஞ் சேர்
சிறியவீடு கட்டுவாய் போ போ போ

4 ஜாதிநூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதிநூறு சொல்லுவாய்—கா சொன்று
நீட்டினுல் வணங்குவாய் போ போ போ
தீதுசெய்வ தஞ்சிலாய்—நின் முன்னே
தீமைநிற்கி லோடுவாய் போ போ போ
சோதிமிக்க மணியிலே—காலத்தால்
சூழ்ந்தமாசு போன்றனே போ போ போ

வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

1. ஒளிபடைத்த கண்ணினுய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினுய் வா வா வா
களிபடைத்த மொழியினுய் வா வா வா
கடுமைகொண்ட தோளினுய் வா வா வா
தெளிவுபெற்ற மதியினுய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினுய் வா வா வா

2. மெய்மைகொண்ட நூலையே—அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா
பொய்மைகூற லஞ்சுவாய் வா வா வா
பொய்மைநூல்க ளெற்றுவாய் வா வா வா
நொய்மையற்ற சிந்தையாய் வா வா வா
நோய்களற்ற உடலினுய் வா வா வா
தெய்வசாபம் நீங்கவே—நங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய் வா வா வா

3. இளையபார தத்தினுய் வா வா வா
எதிரிலா வலத்தினுய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே—நின்றேறும்
உதயஞாயி றெழுப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே—முன்போலே
களைசிறக்க வந்தனே வா வா வா
விளையுமாண்பு யாவையும்—பார்த்தன்போல்
விழியினுல் விளக்குவாய் வா வா வா

4. வெற்றிகொண்ட கையினுய் வா வா வா
விநயநின்ற நாவினுய் வா வா வா
மூற்றிநின்ற வடிவினுய் வா வா வா
முழுமைசேர் முகத்தினுய் வா வா வா
கற்றலொன்று பொய்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்கு ளுய்யவே—நாடெல்லாம்
ஒருபெருஞ் செயல்செய்வாய் வா வா வா

———

17. பாரத ஸமுதாயம்

ராகம்——பியாக்] [தாளம்—திஸ்ர ஏகதாளம்

பல்லவி

பாரத ஸமுதாயம் வாழ்கவே—வாழ்க வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய
(பாரத)

அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை—வாழ்க (பாரத)

சரணங்கள்

1. மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுணடோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ ?—புலனில்
வாழ்க்கை யினியுண்டோ ?—நம்மி லந்த
வாழ்க்கை யினியுண்டோ ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும்பெரு நாடு
கனியுங் கிழங்குந் தான்யங்களும்
கணக்கின்றித்தரு நாடு—இது
கணக்கின்றித்தரு நாடு—நித்தநித்தம்
கணக்கின்றித்தரு நாடு—வாழ்க (பாரத)

2. இனியொ ருவிதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்—வாழ்க (பாரத)

3. "எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத் தான்கண்ண பெருமான் ;
எல்லாரு மமரநிலை யெய்துநன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க (பாரத)

4. எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க (பாரத)

———

18. ஜாதிய கீதம்—1

பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் எழுதிய
ஜகத் பிரசித்தி கொண்ட 'வந்தே மாதரம்' கீதத்தின்

மொழிபெயர்ப்பு

1. இனியநீர்ப் பெருக்கினே ! இன்கனி வளத்தினே !
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினே !
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினே ! (வந்தே)

2. வெண்ணிலாக் கதிர்மகிழ் விரித்திடு மிரவினே !
மலர்மணிப் பூத்திகழ் மரன்பல செறிந்தனே !
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினே !
நல்குவை யின்பம் வரம்பல நல்குவை ! (வந்தே)

3. *முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடிதோ ளுயர்ந்துனக் காற்றவும்
'திறனிலாள்' என்றுனே யாவனே செப்புவன் ?
அருந்திற லுடையாய் ! அருளினே போற்றி
பொருந்தலர் படைபுறத் தொழித்திடும்
பொற்பினே (வந்தே)

[குறிப்பு] : *வங்காளி பாஷையிலே ஏழு கோடியென்றே கூறி யிருக்கின்றது. ஆனல், அது வங்காளத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30 கோடி இந்தியா முழுமையின் ஜனத் தொகை. —1937 ஆம் வருடப் பதிப்பு.

4. நீயே வித்தை, நீயே தருமம் !
நீயே யிதயம், நீயே மருமம் !
உடலகத் திருக்கு முயிருமன் னீயே ! (வந்தே)

5. தடந்தோ ளகலாச் சக்திநீ யம்மே !
சித்தநீங் காதுறு பக்தியு நீயே
ஆலயந் தோறு மணிபெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே ! (வந்தே)

6. ஒருபது படைகொளு முமையவ னீயே !
கமலமெல் லிதழ்களிற் களித்திடுங் கமலநீ !
வித்தைநன் கருளும் வெண்மலர்த் தேவிநீ ! (வந்தே)

7. போற்றிவான் செல்வீ, புரையிலை, நிகரிலை !
இனியநீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை !
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை !
இனியபுன் முறுவலாய் ! இலங்குநல் லணியினை !
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

———

19. ஜாதிய கீதம்—2

புதிய மொழிபெயர்ப்பு‡

1. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்துநன் கிலகுவை, வாழிய அன்னை ! (வந்தே)

[குறிப்பு] : ‡ முன்னொரு முறை முழுதும் அகவலாக ஒரு மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன். ஆனால், அது பாடுவதற்கு நயப்படாதாகையால் இப்போது பல சந்தங்கள் தழுவி மொழிபெயர்த் தெழுதப்பட்டிருக்கின்றது.

—பாரதியார்

2. தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை யின்பமும் வரங்களு நல்குவை. (வந்தே)

3. கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கிமுன் னிற்கவும்
கூடு திண்மை குறைந்தனை, யென்பதென் ?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை.
(வந்தே)

4. அறிவுநீ, தருமநீ, உள்ளநீ, அதனிடை
மருமநீ, உடற்கண் வாம்ந்திடு முயிர் நீ,
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாந் தேவியிங் குனதே.
(வந்தே)

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் சுளித்திடும் சுமலியும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ !
(வந்தே)

6. திருநி றைந்தனை, தன்னிக ரொன்றிலை !
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததொர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற்றெ ளிர்ந்தனை, பல்பணி பூண்டனை,
இருநி லத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய்நின் பதங்க ளிறைஞ்சுவாம் ! (வந்தே)

———

பிற்சேர்க்கை

ஜாதிய கீதம்

பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் வங்காளியில்
இயற்றிய "வந்தே மாதரம்" கீதம்.

ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஶீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம் (வந்தே)

1. ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ருமதள ஸோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம். மாதரம் (வந்தே)

2. ஸப்த கோடி கண்ட கலகல நிநாதக ராலே
த்விஸப்த கோடி புஜைர் த்ருத கரகர வாலே
கே போலே, மா துமி அபலே
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம் (வந்தே)

3. துமி வித்யா, துமி தர்ம,
துமி ஹ்ருதி, துமி மர்ம,
த்வம்ஹி ப்ராண : சரீரே
பாஹுதே துமி மா சக்தி
தொமா ரேயி ப்ரதிமா கடிமந்திரே மந்திரே (வந்தே)

4. த்வம்ஹி துர்கா தசப்ரஹரண தாரிணீ
கமல கமலதல விஹாரிணீ
வாணி வித்யா, தாயிநீ, நமாமி த்வாம் (வந்தே)

5. நமாமி, கமலாம், அமலாம் அதுலாம்
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ஸ்யாமலாம், ஸரலாம், ஸுஸ்மிதாம் பூஷிதாம்
பரணீம், தரணீம், மாதரம் (வந்தே மாதரம்)

2. தமிழ் நாடு

—: o :—

20. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள் (செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—யென
மேவிய யாறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள்வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றேர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

9. விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத் தார்தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு. (செந்தமிழ்)

10. சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

---

21. தமிழ்த் தாய்

தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்

(தாயுமானவர் ஆனந்தக் களிப்பு சந்தம்)

1. ஆதி சிவன்பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

2. மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார்—இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்;
நேத்திரங் கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்த தினைத்துந் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான்—முன்
நாடும் பொருள்கள் அனைத்தையும்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—கை
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்.

6. கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

7. தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏதுசெய் வேன்?என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

9. "புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

10. சொல்லவுங் கூடுவ தில்லே— அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லே ;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.''

11. என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ !
இந்த வசையெனக் கெய்திட லாமோ !
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலேச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!

12. தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

---

22. தமிழ்

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம்.
பாமரராய், விலங்குகளாய், உலகனேத்தும்
இகழ்ச்சிசொல்லப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றே ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனேப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலே,
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லே ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றேம் ; ஒருசொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர் !

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் ,
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும் ;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

---

23. தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தான.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
யிசைகொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்குத் தமிழ்மொழி யோங்குத்
துலங்குக வையக மே.

6. தொல்லீல வினைதரு தொல்லீ யகன்று
சுடர்க தமீழ்நாடே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

——

24. தமிழச் சாதி*

* * *

எனப்பல பேசி யிறைஞ்சிடப் படுவதாய்
நாட்பட நாட்பட நாற்றமுஞ் சேறும்
பாசியும் புதைந்து பயனீ ரிலதாய்
நோய்க் களமாகி யழிகெனு நோக்கமோ ?
விதியே, விதியே, தமிழச் சாதியை
என்செய நினைத்தா யெனக்குரை யாயோ ?
சார்வினுக் கெல்லாந் தகத்தக மாறித்
தன்மையுந் தனது தருமமு மாயா †
தென்றுமோர் நிலையா யிருந்துநின் னருளால்
வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடு வாயோ ?
தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்துமற்
றுள்ளுறு தருமமு முண்மையு மாறிச்

---

*இப்பாடல் எண்ணிடப்படாத, மிகவுஞ் சிதைவுற்ற கைப் பிரதித் துணுக்குகளினின்றும் சேகரிக்கப்பட்டது. ஆரம்பத்திலும் முடிவிலும் உள்ள வரிகள் கிடைக்கவில்லை. தலைப்பு 'இருதலைக் கொள்ளியினிடையே' எனக் கொடுக்கப் பட்டுள்ளது.

—1937ஆம் வருடப் பதிப்பில் உள்ள பாரதி பிரசுராலயத்தினர் குறிப்பு.

[பா - ம்.] : † 'தருமமு மழியா'

சிதைவுற் றழியும் பொருள்களிற் சேர்ப்பையோ ?
'அழியாக் கடலோ ? அணிமலர்த் தடமோ ?
வானுறு மீனே ? மாளிகை விளக்கோ ?
கற்பகத் தருவோ ? காட்டிடை மரமோ ?
விதியே, தமிழச் சாதியை யெவ்வகை
விதித்தா' யென்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்.
ஏனெனில்,
''சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவு மழகுங் கருதியும்,
'எல்லையொன் றின்மை' யெனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலு
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை யமரத் தன்மைவாய்ந் தது''வென்
றுறுதிகொண் டிருந்தேன். ஒருபதி னாயிரஞ்
சனிவாய்ப் பட்டுந் தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி யுழைத்திடு நெறிகளைக்
கண்டென துள்ளங் கலங்கிடா திருந்தேன்.
ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலுந்
தென்மூனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொருது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதந்
நாட்டினைப் பிரிந்த நலிவினுற் சாதலும்
இஃதெலாங் கேட்டு மெனதுள மழிந்திலேன் ;
'தெய்வ மறவார், செயுங்கடன் பிழையார்,
ஏதுதாஞ் செயினு மேதுதான் வருந்தினும்
இறுதியில் பெருமையு மின்பமும் பெறுவார்'
என்பதென் னுளத்து வேரகழ்ந் திருத்தலால்.

எனினும்,
இப்பெருங் கொள்கை யிதயமேற் கொண்டு
கலங்கிடா திருந்த வெனைக் கலக் குறுத்தும்
செய்தியொன் றதனைத் தெளிவுறக் கேட்பாய் :—
ஊனமற் றெவைதாம் உறினுமே பொறுத்து,
வானம் பொய்க்கின் மடிந்திடு முலகுபோல்,
தானமும் தவமுந் தாழ்ந்திடல் பொறுத்து
ஞானம் பொய்க்க நசிக்குமோர் சாதி.
சாத்திரங் கண்டாய் சாதியி னுயிர்த்தலம் ;
சாத்திர மின்றேற் சாதி யில்லை.
பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்
பொய்மை யாகிப் புழுவென மடிவர்.
நால்வகைக் குலத்தார் நண்ணுமோர் சாதியில்,
அறிவுத் தலைமை யாற்றிடுந் தலைவர்—
மற்றிவர் வகுப்பதே சாத்திரமாகும்.
இவர்தாம்—
உடலு முள்ளமுந் தம்வச மிலராய்
நெறிபிழைத் திகழ்வுறு நிலைமையில் வீழினும்,
பெரிதிலை ; பின்னும் மருந்திதற் குண்டு.
செய்கையுஞ் சீலமுங் குன்றிய பின்னரும்
உய்கைக் குரிய வழிசில வுளவாம்.
மற்றிவர்,
சாத்திரம்—(அதாவது, மதியிலே தழுவிய
கொள்கை, கருத்து, குளிர்ந்திடு நோக்கம்)—
ஈங்கிதிற் கலக்க மெய்திடு மாயின்
மற்றதன் பின்னர் மருந்தொன் றில்லை.
இந்தநா ளெமது தமிழ்நாட் டிடையே
அறிவுத் தலைமை தமதெனக் கொண்டார்
தம்மிலே யிருவகை தலைப்படக் கண்டேன் :
ஒருசார்,
'மேற்றிசை வாழும் வெண்ணிற மாக்களின்
செய்கையு நடையு தீனியு முடையும்
கொள்கையு மதமுங் குறிகளு நம்முடை
யவற்றினுஞ் சிறந்தன ; ஆதலி னவற்றை

முழுதுமே தழுவி மூழ்கிடி னல்லால்,
தமிழச் சாதி தரணி மீதிராது.
பொய்த்தழி வெய்தல் முடி' பெனப் புகலும்.
நன்றடா ! நன்று ! நாமினி மேற்றிசை
வழியெலாந் தழுவி வாழ்குவ மெனிலோ,
'ஏ ஏ ! அஃதுமக் கிசையா' தென்பர்.
'உயிர்தரு மேற்றிசை நெறிகளே யுவந்துநீர்
தழுவிடா வண்ணந் தடுத்திடும் பெருந்தடை
பல, அவை நீங்கும் பான்மைய வல்ல'
என்றருள் புரிவர். இதன்பொருள் 'சீமை
மருந்துகள் கற்ற மருத்துவர் தமிழச்
சாதியின் நோய்க்குத் தலையசைத் தேகினர்'
என்பதே யாகும். இஃதொரு சார்பாம்.
பின்னொரு சார்பினர் வைதிகப் பெயரொடு
'நமது மூதாதையர் (நாற்பதிற் முண்டின்
முன்னிருந் தவரோ, முந்நூற் முண்டிற்
கப்பால் வாழ்ந்தவர் கொல்லோ, ஆயிரம்
ஆண்டின் முன்னவரோ, ஐயா யிரமோ ?
பவுத்தரே நாடெலாம் பல்கிய காலத்
தவரோ ? புராண மாக்கிய காலமோ ?
சைவரோ ? வைணவ சமயத் தாரோ ?
இந்திரன் முனே தனிமுதற் கடவுள்
என்றுநம் முன்னே ரேத்திய வைதிகக்
காலத் தவரோ ? கருத்திலா தவர்தாம்
எமது மூதாதைய ரென்பதிங் கெவர்கொல் ?)
நமது மூதாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமு நடையுங் கிரியையுங் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய வவ்வப் படியே
தழுவிடின் வாழ்வு தமிழர்க் குண்டு.
எனிலது தழுவ லியன்றிடா வண்ணம்
கலிதடை புரிவன். கலியின் வலியை
வெல்லலா கா'தென விளம்புகின் றனரால்.
நாசங் கூறு 'நாட்டு வயித்தியர்'
இவராம். இங்கிவ் விருதலைக் கொள்ளியி

னிடையே நம்மவ ரெப்படி யுய்வர் ?
விதியே ! விதியே ! தமிழச் சாதியை
யென்செயக் கருதி யிருக்கின் றாயடா ?

விதி

மேலோர் கூறிய விநாசப் புலவரை
நம்மவ ரிகழ்ந்து நன்மையு மறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வ ராயின்,
அச்சமொன் றில்லை. ஆரிய நாட்டின்
அறிவும் பெருமையும்.....

---

25. வாழிய செந்தமிழ்‡

ஆசிரியப் பா

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மைவந் தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம்வளர்ந் திடுக ! மறமடி வுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக !
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க |
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

[குறிப்பு] : ‡ இப்பாடலின் தலைப்பு 1937ஆம் வருடப் பதிப்பில் 'புது வருஷம்' என உள்ளது.

3. சுதந்திரப் பள்ளு

—: C :—

26. சுதந்திரப் பெருமை

"தில்லை வெளியிலே கலந்துவிட் டாலவர்
திரும்பியும் வருவாரோ?" என்னும் வர்ண மெட்டு

1. வீர சுதந்திரம் வேண்டிநின் றூர்பின்னர்
வேறெருன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத்தொண் டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ ? (வீர)

3. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ ? (வீர)

4. மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தியினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ ?—
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ ? (வீர)

7. வந்தே மாதர மென்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ ? (வீர)

---

27. சுதந்திரப் பயிர்*

கண்ணிகள்

1. தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா !
இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ

2. எண்ணமெலா நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ ?

3. ஓராயிர வருட மோய்ந்து கிடந்தபினர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?

4. தர்மமே வெல்லுமெனுஞ் சான்றோர்சொற்
பொய்யாமோ ?
கர்ம விளைவுகள்யாங் கண்டதெல்லாம் போதாதோ?

5. மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங்
காண்கிலையோ?

6. எண்ணற்ற நல்லோ ரிதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?

7. மாதரையு மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர் கருத்தழிதல் காணுயோ ?

8. எந்தாய் நீதந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ ?

9. இன்பச் சுதந்திரநின் இன்னருளாற் பெற்றதன்றே?
அன்பற்ற மாக்கள் அதைப்$ பறித்தாற் காவாயோ?

[குறிப்பு] : * 1919 ஆம் வருடப் பதிப்பில் இப்பாடலின் தலைப்பு 'சுதந்திர தாகம்' என்பதாகும்.

[பா-ம்.] $ 'மாக்க ளதை' —நாட்டுப் பாட்டு

10. வானமழை யில்லையென்றுல் வாழ்வுண்டோ ?
எந்தைசுயா
தீனமெமக் கில்லையென்றுல் தீனரெது செய்வோமே?

11. நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலா
நீதருவாய்:
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணுயோ?

12. பொய்க்கோ வுடலும் பொருளுயிரும் வாட்டு
கிறேம்?
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே?

13. நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாங்
கேட்டால்
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவே?

14. இன்றுபுதி தாயிரக் கின்றேமோ? முன்னேர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலா மோராயோ ?

15. நீயும் அறமு நிலைத்திருத்தல் மெய்யாலுல்
ஓயுமுன ரெங்களுக்கிவ் வோர்வர நீ நல்குதியே.

28. சுதந்திர தாகம்*

ராகம்—கமாஸ்] [தாளம்—ஆதி

1. என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரத மாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றே?
மெய்யடி யோமினும் வாடுதல் நன்றே?

2. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமையில் லாயோ?
ஆரிய நீயுநின் அறமறந் தாயோ?
வெஞ்செய லரக்கரை வீட்டிடு வோனே,
வீரசிகாமணி, ஆரியர் கோனே!

[குறிப்பு]: *1919 ஆம் வருடப் பதிப்பில் இப்பாடலின் தலைப்பு 'ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்' என்பதாகும்.

29 சுதந்திர தேவியின் துதி
[விருத்தம்]

1. இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி!$ நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

2. நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

3. தேவி!நின் ளெளிபெ ருத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றே நின்றன்
பாலனம் படைத்தி லாதார்?

4. ஒழிவறு நோயிற் சாவார்
ஊக்கமொன் றறிய மாட்டார்
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக்† கடையி னிற்பார்

[பா-ம்.]: $ 'சுதந்திரத் தேவி!'
† 'மாக்களெல்லா மிகழ்ந்திட'
—ஜன்ம பூமி

இழிவறு வாழ்க்கை தேரார்
கனவினு மின்பங் காணர்
அழிவறு பெருமை நல்கும்
அன்னை* நின் னருள்பெ றுதார்.

வேறு

5. தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்
தாவி யும்தம தன்பு மளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினுந்
தாவில் வானுல கென்னத் தகுவதே.

6. அம்மை யுன்ற னருமை யறிகிலார்
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்
இம்மை யின்பங்க ளெய்துபொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே.

7. மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்‡
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்.

8 அன்ன தன்மைகொள் நின்னை யடியனேன்
என்ன கூறி யிசைத்திட வல்லனே ?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்.

9. பேர றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர்மிடி யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமு தேநினை வேண்டுவேன்.

[பா-ம்.]: * 'நல்குமன்னை'
‡ 'வீரத்தாற்'
—ஜன்ம பூமி.

30. விடுதலை

(ராகம் — பிலஹரி)

விடுதலை ! விடுதலை ! விடுதலை !

1. பஞ்சுறய ருக்கு மிங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை !
பரவரோடு குறவ ருக்கு
மறவ ருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி
வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப
திந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வமெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரு மொருநி கர்ஸ
மானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர் தம்மை இழிவு செய்யு
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையி லும்ந மக்குளே
தாத ரென்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
ஸரிநி கர்ஸ மான மாக
வாழ் மிந்த நாட்டிலே (விடுதலை)

---

31. சுதந்திரப் பள்ளு

பள்ளர் களியாட்டம்

ராகம்—வராளி] [தாளம்—ஆதி

பல்லவி

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
(ஆடுவோமே)

சரணங்கள்

1. பார்ப்பானே ஐயரென்ற காலமும்போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும்போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும்போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யுங் காலமும்போச்சே.
(ஆடுவோமே)

2. எங்கும் சுதந்திர மென்பதேபேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப துறுதியாச்சு
சங்குகொண் டேவெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத் தோதுவோமே.
(ஆடுவோமே)

3. எல்லோரு மொன்றென்னுங் காலம்வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம்வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும் காலம்வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம்வந்ததே.
(ஆடுவோமே)

4. உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்.
(ஆடுவோமே)

5. நாமிருக்கு நாடுநம தென்பதறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா மென்பதறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்குமினி அடிமைசெய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்துவாழ்வோம்.
(ஆடுவோமே)

4. தேசிய இயக்கப் பாடல்கள்

—: 0 :—

32. சத்ரபதி சிவாஜி

தன் சைனியத்திற்குக் கூறியது‡

ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!
ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!
சேனைத் தலைவர்காள்! சிறந்தமந் திரிகாள்!
யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்!
அதிரத மன்னர்காள்! துரகதத் ததிபர்காள்!
எதிரிகள் துணுக்குற இடித்திடு பதாதிகாள்!
வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்!
காலனுருக் கொளும் கணைதுரந் திடுவீர்.
மற்றுமா யிரவிதம் பற்றலர் தம்மைச்
செற்றடுந் திறனுடைத் தீரரத் தினங்கள்காள்!
யாவிரும் வாழிய! யாவிரும் வாழிய!
தேவிநுந் தமக்கெலாம் திருவருள் புரிக!
மாற்றலர் தம்புலை நாற்றமே யறியா
ஆற்றல்கொண் டிருந்ததிவ் வரும்புகழ் நாடு!
வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?
வீரரு மவரிசை விரித்திடு புலவரும்
பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு!
தர்மமே யுருவமாத் தழைத்தபேர ரசரும்
நிர்மல முனிவரும் நிறைந்தநன் னாடு!
வீரரைப் பெறுத மேன்மைதீர் மங்கையை
ஈரவர் மலடியென் றுரைத்திடு நாடு!

[குறிப்பு] : ‡ பாடலின் போக்கைக் கவனிக்குமிடத்து, இது பூர்த்தியாகவில்லை யென்றும், இறுதியில் இன்னுஞ் சில வரிகள் இருந்திருக்கலாமோ வென்றும் கருதவேண்டியுளது என்ற குறிப்பு 1937ஆம் வருடப் பதிப்பில் காணப்படுகின்றது.

பாரதப் பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்;இந் நினைவகற் றுதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்;இந் நினைவகற் றுதீர்!
வானக முட்டு மிமயமால் வரையும்
ஏனைய திசைகளி லிருந்திரைக் கடலும்
காத்திடு நாடு! கங்கையுஞ் சிந்துவும்
தூத்திரை யமுனையுஞ் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இனையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
பைந்நிறப் பழனம் பசியிலா தளிக்க
மைந்நிற முகில்கள் வழங்குபொன் ஞடு!
தேவர்கள் வாழ்விடம், திறலுயர் முனிவர்
ஆவலோ டடையு மரும்புகழ் நாடு!
ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையு மாட்சியார் தேயம்!
பாரத நாட்டிசை பகரயான் வல்லனே ?
நீரதன் புதல்வர்;இந் நினைவகற் றுதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்,
பேய்த்தகை கொண்டோர், பெருமையும் வன்மையும்
ஞானமு மறியா நவைபுரி பகைவர்,
வானக மடக்க வந்திடு மரக்கர்போல்
இந்நாட் படைகொணர்ந் தின்னல்செய் கின்றூர்!
ஆலய மழித்தலு மருமறை யொழித்தலும்
(பாலரை விருத்தரை பசுக்களை ஒழித்தலும்)
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்
கேதமே சூழ்வது மியற்றிநிற் கின்றூர்!
சாத்திரத் தொகுதியைத் தாழ்த்திவைக் கின்றூர்!
கோத்திர மங்கையர் குலங்கெடுக் கின்றூர்!
எண்ணில துணைவர்காள்! எமக்கிவர் செயுந்துயர்:
கண்ணியம் மறுத்தனர்; ஆண்மையுங் கடிந்தனர்;
பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்தனர்;
திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்;
பாரதப் பெரும்பெயர் பழிப்பெய ராக்கினர்;

சூரர்தம் மக்களைத் தொழும்பராய்ப் புரிந்தனர்;
வீரிய மழிந்து மேன்மையு மொழிந்துநம்
ஆரியர் புலையருக் கடிமைக ளாயினர்.
மற்றிதைப் பொறுத்து வாழ்வதோ வாழ்க்கை?
வெற்றிகொள் புலையர்தாள் வீழ்ந்துகொல் வாழ்வீர்?
மொக்குள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவ னுகி
நாயென வாழ்வோன் நமரிலிங் குளனே?
பிச்சைவாழ் வுகந்து பிறருடைய யாட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்;
புன்புலால் யாக்கையைப் போற்றியே தாய்நாட்
டன்பிலா திருப்போன் ஆரிய னல்லன்.
மாட்சிதீர் மிலேச்சர் மனப்படி யாளும்
(ஆட்சியி லடங்குவோன் ஆரிய னல்லன்.)
ஆரியத் தன்மை யற்றிடுஞ் சிறியர்
யாரிவ ணுளரவர் யாண்டேனு மொழிக!
படைமுகத் திறந்து பதம்பெற விரும்பாக்
கடைபடு மாக்களென் கண்முனில் லாதீர்!
சோதரர் தம்மைத் துரோகிக ளழிப்ப
மாதரார் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க!
நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென் றுளிக்க விரும்புவோன் விரும்புக!
(தேசமே நலிவொடு தேய்ந்திட மக்களின்)
பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளார் பசியினல் நலிந்திடத் தன்வயி
றூட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க!
ஆணுருக் கொண்ட பெண்களு மலிகளும்
வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்.
ஆரிய ரிருமின்! ஆண்களிங் கிருமின்!
வீரிய மிகுந்த மேன்மையோ ரிருமின்!

மானமே பெரிதென மதிப்பவ ரிருமின் !
ஈனமே பொருத வியல்பின ரிருமின் !
தாய்நாட் டன்புறு தனையரிங் கிருமின் !
மாய்நாட் பெருமையின் மாய்பவ ரிருமின் !
புலையர் தம் தொழும்பைப் பொறுக்கிலா ரிருமின் !
கலையறு மிலேச்சரைக் கடிபவ ரிருமின் !
ஊரவர் துயரில்நெஞ் சுருகுவீ ரிருமின் !
சோர நெஞ்சிலர்த் தூயவ ரிருமின் !
தேவிதாள் பணியுந் தீரரிங் கிருமின் !
பாவியர் குருதியைப் பருகுவா ரிருமின் !
உடலினைப் போற்று வுத்தம ரிருமின் !
கடல்மடுப் பினுமனங் கலங்கல ருதவுமின் !
வம்மினே துணைவீர் ! மருட்சிகொள் ளாதீர் !
நம்மினே ராற்றலை நாழிகைப் பொழுதெனும்
புல்லிய மாற்றலர் பொறுக்கவல் லார்கொல் ?
மெல்லிய திருவடி வீறுடைத் தேவியின்
இன்னருள் நமக்கோர் இருந்துணை யாகும்.
பன்னரும் புகழுடைப் பார்த்தனும் கண்ணனும்
வீமனும் துரோணனும் வீட்டுமன் ருனும்
ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்
நற்றுணை புரிவர் ; வானக நாடுறும் ;
வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்.
(பற்றறு முனிவரும் ஆசிகள் பகர்வர்)
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின் !
(ஈட்டியாற் சிரங்களை வீட்டிட எழுமின் !
நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின் !)
வாளுடை முனையினும், வயந்திகழ் சூலினும்,
ஆளுடைக் கால்க ளடியினுந் தேர்களின்
உருளையி னிடையினும், மாற்றலர் தலைகள்
உருளையிற் கண்டுநெஞ் சுவப்புற வம்மின் !
நம்மிதம் பெருவளம் நலிந்திட விரும்பும்
(வன்மியை) வேரறத் தொலைத்தபின் னன்றே
ஆணைனப் பெறுவோம் ! அன்றிநா மிறப்பினும்
வானுறு தேவர் மணியுல கடைவோம் !

வாழ்வமேற் பாரத வான்புகழ்த் தேவியை
தாழ்வினின் றுயர்த்திய தடம்புகழ் பெறுவோம் !
போரெனி லிதுபோற் புண்ணியத் திருப்போர்
பாரினி லொன்று பார்த்திடற் கெளிதோ ?
யாட்டினைக் கொன்று வேள்விக ளியற்றி
வீட்டினைப் பெறுவதை விரும்புவார் சிலரே ;
நெஞ்சக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம்யாம்.
வேள்வியி லிதுபோல் வேள்வியொன் றில்லை ;
தவத்தினி லிதுபோற் றவம்பிறி தில்லை,
முன்னையோர் பார்த்தன் முனைத்திசை நின்று
தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட
மாதுலர் சோதரர் மைத்துனர் தாதையர்
காதலின் நண்பர் கலைதரு குரவரென்
றின்னவ ரிருத்தல்கண் டிதயநொந் தோளுய்த்
தன்னருந் தெய்விகச் சாரதி முன்னர்
"ஐயனே ! யிவர்மீ தம்பையோ தொடுப்பேன் ?
வையகத் தரசும் வானக வாட்சியும்
போயினு மிவர்தமைப் போரினில் வீழ்த்தேன்.
மெய்யினில் நடுக்கம் மேவுகின் றதுவால் ;
கையினில் வில்லும் கழன்றுவீழ் கின்றது ;
வாயுலர் கின்றது ; மனம்பதைக் கின்றது ;
ஒய்வுறுங் காலகள் ; உலைந்தது சிரமும் ;
வெற்றியை விரும்பேன்; மேன்மையை விரும்பேன் ;
சுற்றமிங் கறுத்துச் சுகம்பெறல் விரும்பேன் ;
எனையிவர் கொல்லினும் இவரையான் தின்டேன்.
சினையறுத் திட்டபின் செய்வதோ ஆடசி ?"
எனப்பல கூறியவ் விந்திரன் புதல்வன்
கனப்படை வில்லைக் களத்தினி லெறிந்து
சோர்வொடு வீழ்ந்தனன் ; சுருதியின் முடிவாய்த்
தேர்வயின் நின்றநந் தெய்விகப் பெருமான்
லெறிந் திருந்த வீரனை நோக்கி,
லிய அறிவொடு புலம்புகின் றனையால்.
னைப் பிரிந்த சுயோதனை தியரைச்

செறுத்தினி மாய்ப்பது தீமையென் கின்றாய்.
உண்மையை அறியாய்; உறவையே கருதிப்
பெண்மைகொண் டேதோ பிதற்றிநிற் கின்றாய்.
வஞ்சகர், தீயர், மனிதரை வருத்துவோர்,
நெஞ்சகத் தருக்குடை நீசர்கள்—இன்னோர்
தம்மொடு பிறந்த சகோதர ராயினும்
வெம்மையோ டொறுத்தல் வீரர்தஞ் செயலாம்.
ஆரிய! நீதிநீ யறிகிலை போலும்!
பூரியர் போல்மனம் புழுங்குற லாயினை.
அரும்புகழ் தேய்ப்பதும் அஞரியத் தகைத்தும்
பெரும்பதத் தடையுமாம் பெண்மையெங் கெய்தினை ?
பேடிமை யகற்று!நின் பெருமையை மறந்திடேல்!
ஈடிலாப் புகழினாய்! எழுகவோ எழுக!"
என்றுமெய் ஞானப் நம் மிறையவர் கூறக்
குன்றெனும் வயிரக் கொற்றவான் புயத்தோன்
அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய்
மறமே யுருவுடை மாற்றலர் தம்மைச்
சுற்றமும் நோக்கான் தோழமை மதியான்
பற்றலர் தமையெலாம் பார்க்கிடை யாக்கினன்.
விசயனன் றிருந்த வியன்புகழ் நாட்டில்
இசையுநற் றவத்தா லின்றுவாழ்ந் திருக்கும்
ஆரிய வீரர்காள்! அவருடை யாற்றலர்,
தேரில், இந் நாட்டினர், செறிவுடை உறவினர்;
நம்மையின் றெதிர்க்கும் நயனிலாப் புல்லோர்
செம்மைதீர் மிலேச்சர், தேசமும் பிறிதாம்,
பிறப்பினி லன்னியர், பேச்சினி லன்னியர்,
சிறப்புடை யாரியச் சீர்மையை யறியார்.

---

33. கோக்கலே சாமியார் பாடல்

[இராமலிங்க சுவாமிகள் "களக்கமறப் பொது நடனங் கண்டுகொண்ட தருணம்" என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது]

களக்கமுறும் மார்லிநடம்
கண்டுகொண்ட தருணம்

கடைச்சிறியேன் உளம்பூத்துக்
காய்த்ததொரு கனிதான்
விளக்கமுறப் பழுத்திடுமோ
வெம்பிவிழுந் திடுமோ?
வெம்பாது விழினுமென்றன்
கரத்திலகப் படுமோ?
வளர்த்தபழம் கர்சானென்ற
குரங்குகவர்ந் திடுமோ?
மற்றிங்நன் ஆட்சிசெயும்
அணில்கடித்து விடுமோ?
துளக்கமற யான்பெற்றிங்
குண்ணுவலே, அல்லால்
தொண்டைவிக்கு மோஏதும்
சொல்லரிய தாமே?

---

34. தொண்டு செய்யும் அடிமை

ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது

[நந்தனர் சரித்திரத்திலுள்ள "மாடு தின்னும் புலையா— உனக்கு மார்கழித் திருநாளா" என்ற பாட்டின் வர்ணமெட்டு]

1. தொண்டுசெய்யு மடிமை—உனக்குச்
சுதந்திர நினவோடா
பண்டுகண்ட துண்டோ—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

2. ஜாதிச்சண்டை போச்சோ?—உங்கள்
சமயச்சண்டை போச்சோ?
நீதிசொல்ல வந்தாய்—கண்முன்
நிற்கொணது போடா (தொண்டு)

3. அச்சநீங்கி ஞயோ ?—அடிமை!
ஆண்மை தாங்கிஞயோ?
பிச்சைவாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

4. கப்ப லேறுவாயோ?—அடிமை!
கடலேத்தாண்டு வாயோ?
குப்பை விரும்பும்நாய்க்கே—அடிமை!
கொற்றத் தவிசுமுண்டோ? (தொண்டு)

5. ஒற்றுமை பயின்ருயோ?—அடிமை!
உடம்பில் வலிமையுண்டோ!
வெற்றுரை பேசாதே—அடிமை
வீரிய மறிவாயோ? (தொண்டு)

6. சோர்ந்து வாழுவீரோ? உங்கள்
சிறுமைக் குணங்கள்போச்சோ?
சோர்ந்து வீழ்தல்போச்சோ—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ ? (தொண்டு)

7. வெள்ளைநிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலே யொழித்தாயோ?
உள்ளது சொல்வேன்கேள்—சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா. (தொண்டு)

8. நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானஞ் சிறிதுமுண்டோ?
வீடுகாக்கப் போடா—அடிமை
வேலைசெய்யப் போடா. (தொண்டு)

9. சேனை நடத்துவாயோ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ ?
ஈனமான தொழிலே—உங்களுக்
கிசைவதாகும் போடா. (தொண்டு)

———

35. மேத்தா திலகருக்குச் சொல்வது

புதிய கட்சித் தலைவரை நோக்கி நிதானக் கட்சியார் சொல்லுதல்.

"ஓய் நந்தனரே, நம்ம ஜாதிக் கடுக்குமோ, நியாயந் தானே நீர் சொல்லும்" என்ற வர்ண மெட்டு.

[சிதம்பர பதவியாகிய முக்தியிலே, நந்தனர் அடங்காத தாகம் கொண்டிருந்தார். அது அவரை அடிமை கொண்டிருந்த ஆண்டைக்கு மனமில்லை. அவன் நந்தனரைப் பலவித இம்சைகளுக்கு உட் படுத்தினன்; அதுவுமின்றிச் சேரியிலிருந்த நிதானப் பறையர்கள் பலர் நந்தனர் சிதம்பரத்தைப் பற்றி நினைக்கலாகா தென்று போதனை செய்தார்கள். அந்த நிதானஸ்தர்களிலே ஒருவர் பாடிய பாட்டின் கருத்தையும் வர்ண மெட்டையும் தழுவிப் பின்வரும் பாடல் செய்யப்பட்டிருக்கிறது.]

பல்லவி

ஓய் திலகரே, நம்ம ஜாதிக் கடுக்குமோ?
செய்வது சரியோ, சொல்லும்.

கண்ணிகள்

1. முன்னறி யாப்புது வழக்கம்—நீர்
மூட்டி விட்டதிந்தப் பழக்கம்—இப்போ
தெந்நக ரிலுமிது முழக்கம்—மிக
இடும்பை செய்யுமிந்த வொழுக்கம். (ஓய் திலகரே)

2. சுதந்திர மென்கிற பேச்சு—எங்கள்
தொழும்புக ளெல்லாம்வீணைப் போச்சு—இது
மதம்பிடித் ததுபோ லாச்சு—எங்கள்
மனிதர்க்கெல் லாம்வந்த தேச்சு. (ஓய் திலகரே)

3. வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம்—அன்றி
வேறெவ ருக்குமது தியாஜ்யம்—சிறு
பிள்ளைகளுக் கேயுப தேசம்—நீர்
பேசி வைத்ததெல்லா மோசம். (ஓய் திலகரே)

36. நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்‡

[நந்தனர் சரித்திரத்திலே சேரிப் பறையர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து நந்தனரையும் அவரது கட்சியாரையும் பழிக்கின்றார்கள். சேரியிலே மாட்டிறைச்சி யுண்டு புலைவாழ்வு வாழ்ந்துகொண்டு ஆண்டைப் பார்ப்பானுக்கு அடிமை செய்வதே ஸ்வர்க்க மென்றறியாமல், சிதம்பரப் பயித்தியங் கொண்டலையும் நந்தனராலும், அவருடைய சீடர்களாலும் பெரிய கேடுகள் விளையக்கூடுமென்று வருத்தங்கொண்டு "நாம் என்ன செய்வோம் புலையரே இந்தப் பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம்" என்று யோசிக்கிறார்கள். அந்தப் பாட்டின் கருத்தையும் வர்ண மெட்டையும் தழுவிப் பின்வரும் பாடல் எழுதப்பட்டிருக்கின்றது. மேத்தாகோகலே முதலிய நிதானஸ்தர்கள் நமது தேச விமோசன மென்னுஞ் சிதம்பரத்தை எண்ணி ஆசை கொண்டு பரவச நிலையிலிருக்குந் திலக முனிவராலும், அவரது கட்சியாராலும் நாட்டிற்குக் கெடுதி விளையு மென்று பேசும் விஷயங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.]

ராகம்—புன்னாகவராளி] [தாளம்—ரூபகம்

பல்லவி

நாமென்ன செய்வோம், துணைவரே—இந்தப்
பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம். (நாம்)

சரணங்கள்

1. திலக னெருவனலே யிப்படி யாச்சு
செம்மையுந் தீமையு மில்லாமலே போச்சு
பலதிசை யும்துஷ்டர் கூட்டங்க ளாச்சு
பையல்கள் நெஞ்சில்பய மென்பதே போச்சு. (நாம்)

[குறிப்பு]: ‡ 'நிதானக் கட்சியார் கூட்டம்' என்பது 'ஜன்ம பூமி' தலைப்பு.

2. தேசத்தி லெண்ணற்ற பேர்களுங் கெட்டார்
செய்யுந் தொழில்முறை யாவையும் விட்டார்
பேசுவோர் வார்த்தை தாதாசொல்லி விட்டார்
பின்வர வறியாமல் சுதந்திரம் தொட்டார். (நாம்)

3. பட்டம்பெற் றோர்க்குமதிப் பென்பது மில்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ ரில்லை
சட்டம் மறந்தோர்க்குப் பூஜைகுறை வில்லை
சர்க்கா ரிடம்*சொல்லிப் பார்த்தும் பயனில்லை. (நாம்)

4. சிமைத் துணியென்ரு லுள்ளங் கொதிக்கிறூர்
சீரில்லை யென்ருலோ எட்டி மிதிக்கிறூர்
தாமெத்தையோ "வந்தே" யென்று துதிக்கிறூர்
தரமற்ற வார்த்தைகள் பேசிக் குதிக்கிறூர். (நாம்)

---

37. பாரத தேவியின் அடிமை

(நந்தன் சரித்திரத்திலுள்ள "ஆண்டைக் கடிமைக் காரனல்லவே" என்ற பாட்டின் வர்ண மெட்டையும் கருத்தையும் பின்பற்றி எழுதப்பட்டது.)

பல்லவி

அன்னியர் தமக்கடிமை யல்லவே—நான்
அன்னியர் தமக்கடிமை யல்லவே.

சரணங்கள்

1. மன்னிய புகழ்ப் பாரத தேவி
தன்னிரு தாளிணைக் கடிமைக் காரன். (அன்)

2. இலகு பெருங்குணம் யாவைக்கு மெல்லையாம்
திலக முனிக்கொத்த அடிமைக் காரன். (அன்)

3. வெய்ய சிறைக்குள்ளே புன்னகையோடு போம்
ஐயன் பூபேந்த்ரனுக் கடிமைக் காரன். (அன்)

[குறிப்பு]: *பழைய கட்சியார் புதுக் கட்சியாரைப் பற்றி ஸர்க்காரிடங் கோள் மூட்டியும் பயனில்லை என்ருய் விட்டது.

4. காலர்முன் னிற்பினும் மெய்தவரு வெங்கள்
பாலர் தமக்கொத்த அடிமைக் காரன். (அன்)

5. காந்தன லிட்டாலும் தர்மம்விடா ப்ரம்ம
பாந்தவன் ரூளிணைக் கடிமைக் காரன். (அன்)

38. ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது*

['நந்தன் சரித்திர'த்திலே ஆண்டை நந்தனுடைய சிதம்பர வாஞ்சையை மற்றப் பறையர்கள் வந்து சொல்லக் கேட்டு மஹா கோபங்கொண்டு நந்தனை நோக்கி, "சேரிமுற்றுஞ் சிவபக்தி பண்ணும்படி விட்டையாம் அடியிட்டையாம்" என்பது முதலான வார்த்தைகள் கூறிப் பயமுறுத்துகிறன். அதன் குறிப்பைத் தழுவித் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராகிய வின்ச், ஸ்ரீ சிதம்பரம்பிள்ளைக்குக் கூறியதாகப் பின்வரும் கண்ணிகள் எழுதப்பட்டுள்ளன

('ஜன்ம பூமி' குறிப்பு.)]

ராகம்—தண்டகம்] [தாளம்—ஆதி

1. நாட்டி லெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்—கனல்—மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன் (நாட்டி)

2 கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்களை டுக்கவென் றேகப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய். (நாட்டி)

* "கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல்" என்பது 'ஜன்ம பூமி' நூலில் உள்ள தலைப்பு.

3. கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினுய்—சட்ட—மீறினுய்
ஏழைப் பட்டிங் கிறத்த லிழிவென்றே
யேசினுய்—வீரம்—பேசினுய். (நாட்டி)

4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினுய்—புன்மை—போக்கினுய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினுய்—ஆசை—யூட்டினுய். (நாட்டி)

5. தொண்டொன் றேதொழி லாக்கொண்
டிருந்தோரைத்
தூண்டினுய்—புகழ்—வேண்டினுய்
கண்டகண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினுய்—சோர்வை—யோட்டினுய். (நாட்டி)

6. எங்கு மிந்தஸ்வ ராஜ்ய விருப்பத்தை
ஏவினுய்—விதை—தூவினுய்
சிங்கம் செய்யுந் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ—நீங்கள்—உய்யவோ ? (நாட்டி)

7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி—கொள்ளுவேன். (நாட்டி)

———

39. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி*

1. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம் ;
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ ?—தெய்வம்—பார்க்குமோ ?

* 'கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை சொல்லிய மறுமொழி' என்பது 'ஜன்ம பூமி' தலைப்பு.

2. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்—முடி—தாழ்த்துவோம் ;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ ?—அவ—மானமோ ?

3 பொழுதெல் லாமெங்கள் செல்வங்கொள்ளை
கொண்டு
போகவோ ?—நாங்கள்—சாகவோ ?
அழுதுகொண் டிருப்போமோ ? ஆண்பிள்ளைகள்
நாங்கள்
அல்லமோ ?—உயிர்—வெல்லமோ ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ—பன்றிச்—சேய்களோ ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ ?—பிடி—வாதமோ ?

5. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ ?—மனஸ்—தாபமோ ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ—இதிற்—செற்றமோ ?

6. ஒற்று மைவழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம்—நன்கு—தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள்செய் யுங்கொடு மைக்கெலாம்
மலிவுறும்—சித்தம்—கலிவுறும்.

7. சதையைத் துண்டுதுண் டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ ?—ஜீவன்—ஓயுமோ ?
இதயத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ ?—நெஞ்சம்—வேகுமோ ?

———

40. நடிப்புச் சுதேசிகள்

பழித்தறி வுறுத்தல்

கிளிக் கண்ணிகள்

1. நெஞ்சி லுரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடே—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடே.

2. கூட்டத்திற் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடே—கிளியே
நாளில் மறப்பாரடே.

3. சொந்த அரசும்புவிச்
சுகங்களு மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ ?—கிளியே
அலிகளுக் கின்பமுண்டோ ?

4. கண்க ளிரண்டிருந்தும்
காணுந் திறமையற்ற
பெண்களின் கூட்டமடே—கிளியே
பேசிப் பயனென்னடே.

5. யந்திர சாலையென்பர்
எங்கள் துணிகளென்பர்
மந்திரத் தாலேயெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வதுண்டோ ?

6. உப்பென்றும் சீனியென்றும்
உள்நாட்டுச் சேலையென்றும்
செப்பித் திரிவாரடே—கிளியே
செய்வ தறியாரடே.

7. தேவியர் மானமென்றும்
தெய்வத்தின் பக்தியென்றும்
நாவினுற் சொல்வதல்லால்—கிளியே
நம்புத லற்றாரடீ.

8. மாதரைக் கற்பழித்து
வன்கண்மை பிறர்செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே
பேணி யிருந்தாரடீ.

9. தேவிகோ யிலிற்சென்று
தீமை பிறர்கள்செய்ய
ஆவி பெரிதென்றெண்ணிக்—கிளியே
அஞ்சிக் கிடந்தாரடீ.

10. அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ—கிளியே
ஊமைச் சனங்களடீ.

11. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக்கோர் கணமும்—கிளியே
வாழத் தகுதியுண்டோ ?

12. மானம் சிறிதென்றெண்ணி
வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலகந்தனில்—கிளியே
இருக்க நிலைமையுண்டோ ?

13. சிந்தையிற் கள்விரும்பிச்
சிவசிவ வென்பது போல்
வந்தே மாதரமென்பார்—கிளியே
மனதி லதனைக்கொள்ளார்.

14. பழமை பழமையென்று
பாவினே பேசலன்றிப்
பழமை இருந்தநில்லை—கிளியே
பாமர ரேதறிவார் ?

15. நாட்டி லெவமதிப்பும்
நாணின்றி இழிசெல்வத்
தேட்டில் விருப்புங்கொண்டே—கிளியே
சிறுமை யடைவாரடீ.

16. சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல்கண்டும்
சிந்தை யிரங்காரடீ—கிளியே
செம்மை மறந்தாரடீ.

17. பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள்போல்
துஞ்சத் தம் கண்ணுற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ.

18. தாயைக் கொல்லும்பஞ்சத்தைத்
தடுக்க முயற்சியுறூர்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதரமென்பார்.

———

5. தேசியத் தலைவர்கள்

—:o:—

41. மஹாத்மா காந்தி பஞ்சகம்

1. வாழ்கநீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்ம!நீ வாழ்க ! வாழ்க !

2. அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய் !

வேறு

3. கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ ?
இடிமினல் காக்கும் குடைசெய்தா னென்கோ ?
என்சொலிப் புகழ்வதிங் குனையே ?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய் !

4. தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல் ;
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல் ;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான் !

5. பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்,
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ யறிந்தாய் ;
நெருங்கிய பயன்சேர் ஒத்துழை யாமை
நெறியினில் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே.

---

42. குரு கோவிந்தர்$

ஆயிரத் தெழுநூற் றைம்பத் தாறு
விக்ரம ஞண்டு, வீரருக் கமுதாம்
ஆனந்த புரத்தி லார்ந்தினி திருந்தனன்
பாஞ்சா லத்துப் படர்தரு சிங்கக்
குலத்தினை வகுத்த குருமணி யாவான்
ஞானப் பெருங்கடல், நல்லிசைக் கவிஞன்
வானம்வீழ்ந் துதிரினும் வாள்கொடு தடுக்கும்
வீரர் நாயகன், மேதினி காத்த
குருகோ விந்த சிங்கமாங் கோமகன்
அவன்றிருக் கட்டளை யறிந்துபல் திசையினும்
பாஞ்சா லத்துறு படைவலோர் நாடொறும்
நாடொறும் வந்து நண்ணுகின் றூரால்.
ஆனந்த புரத்தி லாயிர மாயிரம்
வீரர்கள் குருவின் விருப்பினைத் தெரிவான்

[குறிப்பு] : $ 'குரு கோவிந்தஸிம்ஹ விஜயம்'—என்பது 1941ஆம் வருடப் பதிப்பின் தலைப்பு ஆகும்.

கூடிவந் தெய்தினர் கொழும்பொழி லினங்களும்
புன்னகை புனைந்த புதுமலர்த் தொகுதியும்
பைந்நிறம் விரிந்த பழனக் காட்சியும்
'நல்வர வாகுக நம்மனோர் வரவு'' என்
ருசிகள் கூறி யார்ப்பன போன்ற
புண்ணிய நாளிற் புகழ்வளர் குரவன்
திருமொழி கேட்கச் செறிந்தனர் சீடர்கள்.
''யா தவன் கூறும் ? என்னெமக் கருளும் ?
எப்பணி விதித்தெம தேழைப் பிறவியும்
இன்புடைத் தாக்கும் ?'' எனப்பல கருதி,
மாலோன் றிருமுனர் வந்துகண் ணுயர்த்தே
ஆக்கினை தெரிவா ளுவலொடு துடிக்கும்
தேவரை யொத்தனர் திடுக்கெனப் பீடத்
தேறிநின் றதுகாண் ! இளமையுந் திறலும்
ஆதிபத் தகைமையு மமைந்ததோ ருருவம்
விழிகளிற் றெய்வப் பெருங்கனல் வீசிட
திருமுடி சூழ்ந்தோர் தேசுகாத் திருப்ப
தூக்கிய கரத்திற் சுடருமிழ்ந் திருந்தது
கூறநா நடுங்குமோர் கொற்றக் கூர்வாள்
எண்ணிலா வீரர் இவ்வுரு நோக்கி
வானின் றிறங்கிய மாந்திரிகன் முனர்ச்
சிங்கக் கூட்டந் திகைத்திருந் தாங்கு
மோனமுற் றடங்கி முடிவணங் கினரால்
வாள்நுனி காட்டி மாட்சியார் குரவன்
திருவுள நோக்கஞ் செப்புவன். தெய்வச்
சேயித ழுசைவுறச் சினந்தோர் எரிமலைக்
குமுறுதல் போல்வெளிக் கொண்டன திருமொழி :
''வாளிதை மனிதர் மார்பிடைக் குளிப்ப
விரும்புகின் றேன்யான் தீர்கிலா விடாய்கொள்
தருமத் தெய்வந் தான்பல குருதிப்
பலிவிழை கின்றதால் பக்தர்காள் ! நும்மிடை
நெஞ்சினைக் கிழித்து நிலமிசை யுதிரம்
வீழ்த்தித் தேவியின் விடாயினைத் தவிர்ப்ப
யார்வரு கின்றீர் !'' என்னலுஞ் சீடர்கள்

நடுங்கியோர் கணம்வரை நாவெழா திருந்தனர்.
கம்மென ஓர்சிறு கணங்கழி வுற்றது
ஆங்கிருந் தார்பல் லாயிர ருள்ளொரு
வீரன்முன் வந்து விளம்புவ னிஃதே :
"குருமணி, நின்னெரு கொற்றவாள் கிழிப்ப
விடாயரூத் தரும மேம்படு தெய்வதத்
திரையென மாய்வ னேற்றருள் புரிகவே."
புன்னகை மலர்ந்தது புனிதநல் வதனம்
கோயிலு ளவனைக் குரவர்கோன் கொடுசெல்
மற்றத னின்றோர் மடுவின்வந் தாலெனக்
குருதி நீர்பாயக் குழாத்தினர் கண்டனர்.
பார்மின் ! சற்குரு பளீரெனக் கோயிலின்
வெளிப்போந் தாங்கு மேவினோர் முன்னம்
முதற்பலி முடித்து முகமலர்ந் தோனுய்
மீன்னெனப் பாய்ந்து மீண்டு வந்துற்றனன்.
மீண்டுமவ் வுதிரவாள் விண்வழி தூக்கிப்
பின்வரு மொழிகள் பேசுவன் குரவர்கோன் :
"மானுடர் நெஞ்சிலிவ் வாளினைப் பதிக்கச்
சித்தநான் கொண்டேன் தேவிதான் பின்னுமோர்
பலிகேட் கின்றுள் பக்தர்காள் ! நும்முளே
இன்னுமிங் கொருவன் இரத்தமே தந்திக்
காளியைத் தாகங் கழித்(திடத்)துணிவோன்
எவனுளன் ?" எனலும் இன்னுமோர் துணிவுடை
வீரன்முன் னின்று விருப்பினை யுணர்த்தினன்.
இவனையுங் கோயிலு ளினிதழைத் தேகி
இரண்டாம் பலிமுடித் தீண்டினன் குரவன்
குருதியைக் கண்டு குழாத்தினர் நடுங்கினர்.
இங்ஙன மீண்டுமே யியற்றிப்
பலியோ ரைந்து பரமனங் களித்தனன்.

* * *

அறத்தினைத் தமதோ ரறிவினுற் கொண்ட
மட்டிலே மானிடர் மாண்பெற லாகார்
அறமது தழைப்ப நெஞ்சகம் காட்டி
வாட்குத் தேற்று மாய்பவர் பெரியோர்,
அவரே மெய்ம்மையோர் முத்தரு மவரே

தோன்று நூருயிரம் தொண்டர் தம்முள்ளே
அத்தகை நல்லரை யறிகுதல் வேண்டியே
தண்ணருட் கடலாந் தகவுயர் குரவன்
கொடுமைசேர் சோதனை புரிந்திடல் குறித்தனன்
அன்பின் மிகையா லாருயிர் நல்குவோர்
ஐவரைக் கண்டபின் அவ்விய லுடையார்
எண்ணில ருளரெனத் துணிந்தின் பெய்தினன்
வெய்யசெங் குருதியின் வீழ்ந்துதா மிறந்து
சொர்க்கமுற் றுரெனத் தொண்டர்கொண் டிருக்கும்
ஐந்துநன் மணியெனு மைந்துமுத் தரையும்
கோயிலு ளிருந்துபே ரவைமுனர்க் கொணர்ந்தான் !
ஆர்த்தனர் தொண்டர் ! அருவியப் பெய்தினர் !
விழிகளைத் துடைத்து மீளவு நோக்கினர் !
ஜயஜய குருமணி ஜயகுரு சிங்கம்
எனப்பல வாழிக ளிசைத்தனர், ஆடினர்
அப்போழ் தின்னரு ளவதரித் தனையான்,
நற்சுடர்ப் பரிதி நகைபுரிந் தாங்கு
குறுநகை புரிந்து குறையறு முத்தர்
ஐவர்கள் தம்மையு மகமுறத் தழுவி
யாசிகள் கூறி யவையினை நோக்கிக்
கடல்முழக் கென்ன முழங்குவன் :—''காணீர் !
காளியு நமது கனகநன் னாட்டுத்
தேவியு மொன்றெனத் தேர்ந்தநல் லன்பர்காள்,
நடுக்கநீ ரெய்த நானிலம் முறையும்
பலியிடச் சென்றது, பாவனை மன்ற
என்கரத் தாற்கொலோ நும்முயி ரெடுப்பன்
ஐம்முறை தானு மன்பரை மறைத்துநும்
நெஞ்சகச் சோதனை நிகழ்த்தினன் யானே.
தாய்மணி நாட்டின் உண்மைத் தனயர்நீர்
என்பது தெளிந்தேன். என்கர வாளால்
அறுத்ததிங் கின்றைந் தாடுகள் காண்பீர் !
சோதனை வழியினுந் துணிவினைக் கண்டேன்
கவித்ததென் னெஞ்சம் கழிந்தன கவலைகள்.''
குருகோ விந்தன் கொண்டதோர் தருமம்

'சிடர்தம் மார்க்கம்' எனப்புகழ் சிறந்தது
இன்றுமம் மார்க்கத் திருப்பவர் தம்பெயர்
'காலசா' என்ப 'காலசா' எனுமொழி
முத்தர்தம் சங்க முறையெனும் பொருளது
முத்தர்தஞ் சபைக்கு மூலர்க ளாகமற்
றைவரன் னேர்தமை யருளின னுரியன்.
சமைந்தது 'காலசா' எனும்பெயர்ச் சங்கம்
பாரத மென்ற பழம்பெரு நாட்டினர்
ஆவிதேய்ந் தழிந்திலர், ஆண்மையிற் குறைந்திலர்
வீரமுஞ் சிரத்தையும் வீந்தில ரென்று
புவியினே ரறியப் புரிந்தனன் முனிவன்.
அந்நாள் முகுந்த னவதரித் தாங்கோர்
தெய்விகத் தலைவன் சீருறத் தோன்றி
மண்மா சகன்ற வான்படு சொற்களால்
எழுப்பிடுங் காலை, இறந்து தான் கிடக்கிலள்,
இளமையுந் துணிவு மிசைந்துநம் மன்னை
சாதியின் மானந் தாங்கமுற் படுவளென்
றுலகினே ரறிவிடை யுறுத்தினன் முனிவன்
ஐம்பெரும் பூதத் தகிலமே சமைத்த
முன்னவ னுப்ப முனிவனு மைந்து
சீடர்கள் மூலமாத் தேசுறு பாரதச்
சாதியை வகுத்தனன் தழைத்தது தருமம்
கொடுங்கோல் பற்றிய புன்கைக் குரிசிலர்
நடுங்குவ ராயினர். நகைத்தினள் சுதந்திரை.
ஆயிரத் தெழுநூற் றைம்பத் தாறு
விக்கிர மார்க்க னுண்டினில், வியன்புகழ்க்
குருகோ விந்தன் கொற்றமார் சீடரைக்
கூட்டியே தெய்வக் கொலுவொன் றமைத்தனன்
காண்டற் கரிய காட்சி ! கவின்திகழ்
அரியா தனத்தி லமர்ந்தனன் முனிவர்கோ.
சூழ்ந்திருந் தனருயிர்த் தொண்டர்தா மைவரும்
தன்றிருக் கரத்தா லாடைகள் சார்த்தி
மாலைகள் சூட்டி மதிப்புற விருத்திக்
கண்மணி போன்ரு ரைவர்மேற் களிந்து

குழைவுற வாழ்த்திக் குழாத்தினை நோக்கி
''காண்டிரோ ! முதலாங் 'காலசா,'' என்றனன்
நாடுந் தருமமு நன்கிதிற் காப்பான்
அமைந்ததிச் சங்க மறிமினீ ரென்றான்.
அருகினி லோடிய ஆற்றினின் றையன்
இருப்புச் சிறுகலத் தின்னீர் கொணர்ந்து
வாள்முனை கொண்டு மற்றதைக் கலக்கி
மந்திர மோதினன். மனத்தினை யடக்கிச்
சித்தமே முழுதுஞ் சிவத்திடை யாக்கிச்
சபமுரைத் திட்டான், சயப்பொருந் திருவக்
கொலுமுனர் வந்து குதித்துநின் றிட்டாள்.
ஆற்றுநீர் தனையோ அடித்ததத் திருவாள்
அயர்ந்து போய்நின்ற அரும்புகழ் பாரதச்
சாதியின் திறல்கள் தம்மையே யியக்கி
நல்லுயிர் நல்கினன். நாடெலா மியங்கின.
தவமுடை யைவரைத் தம்முனர் நிறுத்தி
மந்திர நீரை மாசறத் தெளித்து
அருள்மய மாகி யவர்விழி தீண்டினன்
பார்மிசை உலகீர் ! பரமனங் கரத்தால்
அவர்விழி தீண்டிய அக்கணத் தன்றே
நாடனைத் திற்கு நல்வழி திறந்தது !
சீடர்க ளனைவருந் தீட்சையிஃ தடைந்தனர்.
ஐயன் சொல்வன், ''அன்பர்காள் ! நீவிர்
செய்திடப் பெற்ற தீட்சை யினுமம்
அமிர்தமென் றறிமின் ! அரும் பேறுமிது
பெற்றூர் யாவரும் பேரருள் பெற்றூர்.
நுமக்கினித் தரும நுவன்றிடக் கேண்மின்.
ஒன்றும் கடவுள். உலகிடைத் தோன்றிய
மானிட ரெல்லாஞ் சோதரர் மானுடர்
சமத்துவ முடையார், சுதந்திரஞ் சார்ந்தவர்.
சீடர்காள் ! குலத்தினும் செயலினு மனத்தினு
மிக்கணந் தொட்டுநீர் யாவிரு மொன்றே.
பிரிவுகள் துடைப்பீர் ! பிரிதலே சாதல்.
ஆரியர் சாதியுள் ஆயிரஞ் சாதி

வகுப்பவர் வகுத்து மாய்க, நீ ரினைவிருந்
தருமம், கடவுள், சத்தியம், சுதந்திரம்
என்பவை போற்ற எழுந்திடும் வீரச்
சாதியொன் றினையே சார்ந்தோ ராவிர்.
அநீதியும், கொடுமையும் அழித்திடுஞ் சாதி ;
மழித்திட லறியா வன்முகச் சாதி ;
இரும்பு முத்திரையு மிறுகிய கச்சையும்
கையினில் வாளுங் கழன்றிடாச் சாதி ;
சோதர நட்புத் தொடர்ந்திடு சாதி ;
அரச னில்லாது தெய்வமே யரசா
மானுடர் துணிவரா, மறமே பகையாக்
குடியர சியற்றுங் கொள்கையார் சாதி ;
அறத்தினை வெறுக்கிலீர் மறத்தினைப் பொறுக்கிலீர்
தாய்த்திரு நாட்டைச் சந்ததம் போற்றிப்
புகழொடு வாழ்மின் ! புகழொடு வாழ்மின் !"
என்றுரைத் தைய னின்புற வாழ்த்தினன்
அவனடி போற்றி யார்த்தனர் சீடர்கள்
குருகோ விந்தக் கோமக னுட்டிய
கொடியுயர்ந் தசையக் குவலயம் புகழ்ந்தது
ஆடியே மாய்ந்த தரங்கசிப் ஆட்சி.

---

43. தாதாபாய் நவுரோஜி

1. முன்னுளி லிராமபிரான் கோதமனு
தியபுதல்வர் முறையி னீன்று
பன்னுடு முடிவணங்கத் தலைமைநிறுத்
தியவெமது பரத கண்ட
மின்னுளிங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்த காலை
அன்னளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர்சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்.

2. அவ்வறிஞ ரனைவோர்க்கு முதல்வனும்
மைந்தன்ற னன்னை கண்ணீ
ரெவ்வகையி னுந்துடைப்பே னின்றேலென்
உயிர்துடைப்பே னென்னப் போந்தி
யெளவனநாள் முதற்கொடுதா
னெண்பதின்மேல் வயதுற்ற வின்று காறும்
செவ்வியுறத் தனதுடலம் பொருளாவி
யானுழைப்புத் தீர்த லில்லான்.

3. கல்வியைப்போ லறிவுமறி வினைப்போலக்
கருணையுமக் கருணை போலப்
பல்விதவுக் கங்கள்செயுந் திறனுமொரு
நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர்செய்தல் பயனிலதா
மெனவதனை வெறுத்தே யுண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்.

4. மாதாவாய் விட்டலற வதைச்சிறிது
மதியாதே வாளுள் போக்குந்
தீதாவார் வரினுமவர்க் கினியசொலி
நன்குணர்த்துஞ் செவ்வி யாளன்
வேதாவா யினுமவனுக் கஞ்சாமே யுண்மை நெறி
விரிப்போ னெங்கள்
தாதாவாய் விளங்குறுநற் குதாபாய்
நவுரோஜி சரணம் வாழ்க !

5. எண்பஃதாண் டிருந்தவ னினிப்பல்லாண்
டிருந்தெம்மை யினிது காக்க !
பண்பல்ல நமக்கிழைப்போ ரறிவுதிருந்
துக ! எமது பரத நாட்டுப்
பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி
போற்புதல்வர் பிறந்து வாழ்க !
விண்புல்லு மீன்களென வவனன்ன
ரெவ்வயினு மிருக மன்னே.

44 பூபேந்திர விஜயம்

(விருத்தம்)

1. பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் றனக்குப் பின்வந்தோன்
விண்ணவர்த முலகை யாள்ப்ர
தாபேந் திரன்கோட முறினுமதற்
கஞ்சியறந் தவிர்கி லாதான்
பூபேந் திரப்பெயரோன் பாரதநாட்
டிற்கடிமை பூண்டு வாழ்வோன்.

2. வீழ்த்தல்பெறத் தருமமெலாம், மறமனேத்துங்
கிளேத்துவர மேலோர் தம்மை
தாழ்த்தமர் முன்னேங்க நிலேபுரண்டு
பாதகமே ததும்பி நிற்கும்
பாழ்த்தகலி யுகஞ்சென்று மற்றெருருகம்
அருகில்வரும் பான்மை தோன்றக்
காழ்த்தமன வீரமுடன் யுகாந்தரத்தி
னிலேயினிது காட்டி நின்ருன்.

3. மண்ணுளு மன்னரவன் றனேச்சிறைசெய்
திட்டாலும் மாந்த ரெல்லாங்
கண்ணுகக் கருதியவன் புகழோதி
வாழ்த் திமலங் களிக்கின்ருரால்
எண்ணுது நற்பொருளேத் தீதென்பார்
சிலருலகி லிருப்ப ரன்றே ?
விண்ணுரும் பரிதியொளி வெறுத்தொருபுள்
இருளினிது விரும்பல் போன்றே.

4. இன்னுத பிறர்க்கெண்ணுன் பாரதநாட்
டிற்கிரங்கி யிதய நைவான்
ஒன்னுரென் றெவருமிலான் உலகனேத்து
மோருயிரென் றுணர்ந்த ஞானி

அன்னனைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமையெது மறிகி லாதார்,
முன்னளிற் றுன்பின்றி யின்பம்வரா
தெனப்பெரியார் மொழிந்தா ரன்றே ?

———

45. வாழ்க திலகன் நாமம்

பல்லவி

வாழ்க திலகன் நாமம் ! வாழ்க ! வாழ்கவே !
வீழ்க கொடுங் கோன்மை ! வீழ்க ! வீழ்கவே !

சரணங்கள்

1 நாலு திசையும் ஸ்வாதந் தர்ய நாதம் எழுகவே !
நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே !
ஏலு மனிதர் அறிவை யடர்க்கும் இருள் அழிகவே
எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே !
(வாழ்க)

2. கல்வி யென்னும் வலிமை கொண்ட கோட்டை
கட்டினன்—நல்ல
கருத்தினு லதனைச் சூழ்ந்தொ ரகழி வெட்டினன்
சொல்விளக்க மென்ற தனிடைக் கோயி லாக்கினன்
ஸ்வாதந் தர்யமென்ற தன்மேற் கொடியைத் தூக்கினன்.
(வாழ்க)

3. துன்ப மென்னுங் கடலைக் கடக்குந் தோணி யவன்பெயர்
சோர் வென்னும் பேயை யோட்டுஞ் சூழ்ச்சி யவன்பெயர்
அன்பெ னுந்தே னூறித் ததும்பும் புதுமலர் அவன்பேர்
ஆண்மை யென்னும் பொருளைக் காட்டும் அறிகுறி
யவன்பேர்.
(வாழ்க)

———

46 லோகமான்ய பால கங்காதர திலகர்*

1. நாம கட்குப் பெருந்தொண் டியற்றிப்பன்
ஞட்டி னேர்தங் சுலியிலு மவ்வவர்
தாம கத்து வியப்பப் பயின்றெரு
சாத்தி ரக்கட லென்ன விளங்குவோன் ;
மாம கட்குப் பிறப்பிட மாகமுன்
வாழ்ந்திந் நாளில் வறண்டயர் பாரதப்
பூம கட்கு மனந்துடித் தேயிவள்
புன்மை போக்குவ லென்ற விரதமே.

2. நெஞ்ச கத்தொர் கணத்திலு நீங்கிலான்
நீத மேயொ ருருவெனத் தோன்றினேன்
வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனதிற் கொதிக்கின்றேன்
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டி ழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ முத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோதும் பெயருடை யாரியன்

3. வீர மிக்க மராட்டியர் ஆதர
மேவிப் பாரத தேவிதிருநுதல்
ஆர வைத்த திலக மெனத்திகழ்
ஐய னல்லிசைப் பாலகங் காதரன்
சேர லர்க்கு நினைக்கவுந் தீயென
நின்ற வெங்கள் திலக முனிவர்கோன்
சீர டிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே.

[குறிப்பு] : *இப்பாடல் ஸ்ரீமான் எம். வி. சுசுவர ஐயர் 1908இல் வெளியிட்ட 'ஸ்ரீ திலகரின் ஜீவிய சரித'த்தில் உள்ளது.

47. லாஜ்பத்ராய் துதி

(விருத்தம்)

1. விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அதன்கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலா மறக்கொ ணுதம்
எண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீவளர்தற் கென்செய் வாரே?

2. ஒருமனிதன் றனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவற் கூறு செய்தல்
அருமையிலை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்றூர் இவரையெலாம்
ஒட்டியெவர் வாழ்வ திங்கே?

3. பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றூர்?
ஆரன்பு நாரணன்பா லிரணியன்சேய்
செய்ததினு லவனுக் குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டிற்பத்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்றே?

———

48. லாஜ்பத்ராய் பிரலாபம்

கண்ணிகள

1. நாடிழந்து மக்களையு நல்லாளை யும்பிரிந்து
வீடிழந்திங் குற்றேன் விதியீனையென் சொல்கேனே.

2. வேதமுனி போன்றூர் விருத்தரா மெந்தையிரு
பாதமலர் கண்டு பரவப் பெறுவேனே?

3. ஆசைக் குமர னருச்சுனனைப் போல்வான்றன்
மாசற்ற சோதி வதனமினிக் காண்பேனே?

4. அன்றிலைப்போன் றென்னை யரைக்கணமே
னும்பிரிந்தால்
குன்றிமனஞ் சோர்வாளிக் கோலம் பொறுப்பாளோ?

5. வீடு முறவும் வெறுத்தாலு மென்னருமை
நாடு பிரிந்த நலிவினுக்கென் செய்கேனே?

6. ஆதிமறை தோன்றியநல் லாரியநா டெந்நாளு
நீதிமறை வின்றி நிலைத்த திருநாடு.

7. சிந்துவெனுந் தெய்வத் திருநதியு மற்றதிற்சேர்
ஐந்துமணி யாறும் அளிக்கும் புனலுடு.

8. ஐம்புலனை வென்ற அறவோர்க்கு மாற்றலர்தம்
வெம்புலனை வென்றஎண்ணில் வீரருக்குந் தாய்நாடு.

9. நல்லறத்தை நாட்டுதற்கு நம்பெருமான் கௌரவராம்
புல்லரைச்செற் றுழ்த்த புனிதப் பெருநாடு.

10. கன்னலுந் திண்டோட் களவீரன் பார்த்தனெரு
வின்னு ணெலிகேட்ட மேன்மைத் திருநாடு.

11. கன்ன னிருந்த கருணைநிலம் தர்மனெனு
மன்ன னறங்கள் வளர்த்த புகழ்நாடு.

12. ஆரியர்தம் தர்மநிலை ஆதரிப்பான் வீட்டுமனுர்
நாரியர்தங் காதல் துறந்திருந்த நன்னுடு.

13. வீமன் வளர்ந்த விறனுடு வில்லசுவத்
தாம னிருந்து சமர்புரிந்த வீரநிலம்.

14. சிக்கரெனு மெங்கள்விறற் சிங்கங்கள் வாழ்தருநல்
ஆக்கமுயர் குன்ற மடர்ந்திருக்கும் பொன்னாடு.

15. ஆரியர்பா ழாகா தருமறையின் உண்மைதந்த
சீரியர்மெய்ஞ் ஞான தயாநந்தர் திருநாடு.

16. என்னருமைப் பாஞ்சால மென்றேனும் காண்பேனே?
பன்னரிய துன்பம் படர்ந்திங்கே மாய்வேனே?

17. ஏதெல்லாம் பாரதத்தே இந்நாள் நடப்பனவோ?
ஏதெல்லாம் யானறியா தென்மனிதர் பட்டனரோ?

18. என்னை நினைந்து மிரங்குவரோ? அல்லது
பின்னைத் துயர்களிலென் பேருமறந் திட்டாரோ?

19. தொண்டுபட்டு வாடுமென்றன் தூய பெருநாட்டிற்
கொண்டுவிட்டங் கென்னையுடன் கொன்றழு
மின்புறுவேன்.

20. எத்தனை ஜன்மங்கள் இருட்சிறையி லிட்டாலும்
தத்துபுனற் பாஞ்சாலந் தனில்வைத்தால்
வாடுகிலேன்.

---

49. வ.உ.சி.க்கு வாழ்த்து‡

'வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான்' என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!

[குறிப்பு]: ‡"சுயராஜ்ய தினம்" தூத்துக்குடியில் 1908ஆம் ஆண்டு வ உ.சி., சுப்ரமணிய சிவா முதலியோரால் கொண்டாடப்பட, இருவரும் சிறைப்படுகின்றனர். அது சம்பந்தமான வழக்கில் பாரதியார் சாட்சி கூறினர்.

6. பிற நாடுகள்

—: 0 :—

50. மாஜினியின் பிரதிக்ஞை

[மாஜினி என்ற இத்தாலி தேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட 'யௌவன இத்தாலி' என்ற சங்கத்திலே செய்துகொண்ட பிரதிக்ஞை.]

1. பேரருட் கடவுள் திருவடி யாணை,
பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
தவப்பெய ரதன்மிசை யாணை
பாரவெந் துயர்கள் தாய்த்திரு நாட்டின்
பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர்நந் நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெய ராணை.

2. ஈசனிங் கெனக்கு மென்னுடன் பிறந்தோர்
யாவர்க்கு மியற்கையி னளித்த
தேசமின் புறுவான் எனக்கவன் பணித்த
சிரும ரறங்களி ஞணை.
மாசறு மென்நற் றுயிணைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கு மியற்கையா மன்றே ?
அத்தகை யன்பின்மீ தாணை.

3. தியன புரிதல், முறைதவி ருடைமை,
செம்மைதீ அரசியல், அநீதி
ஆயலற் றென்னெஞ் சியற்கையி னெய்தும்
அரும்பகை யதன்மிசை யாணை.
தேயமொன் றற்றேன், நற்குடிக் குரிய
உரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூயசீ ருடைத்தாம் சுதந்திரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்.

4. மற்றைநாட் டவர்முன் னின்றிடும் போழ்து
மண்டுமென் வெட்கத்தி ஞலே.
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்
றச்செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனி
லார்ந்தபே ராவலி ஞலே.
நற்றவம் புரியப் பிறந்ததா யினுமிந்
நலனறு மடிமையின் குணத்தால்

5. வலியிழந் திருக்கு மென்னுயிர்க் கதன்கண்
வளர்ந்திடும் ஆசைமீ தாலே.
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
மாண்பதன் நினைவின்மீ தாலே.
மெலிவுட னிந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
வீழ்ச்சியி னுணர்ச்சிமீ தாலே.
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
புன்சிறைக் களத்திடை யழிந்தும்

6. வேற்றுநா டுகளில் அவர்துரத் துண்டும்,
மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்ற கிலராய் எம்மரு நாட்டின்
அன்னைமா ரழுங்கணீ ராலே.
மாற்றல ரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
வகுக்கொணுத் துயர்களி ஞலே.
ஏற்றஇவ் வாலே யனைத்துமேற் கொண்டே
யான்செயுஞ் சபதங்கள் இவையே.

7. கடவுளிந் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டலே தன்னினும், அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே பிறந்தவர்க் கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென் பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்,
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைகெனப் பணிப்பனேல் அதுதான்

[பா - ம்.] : ‡ 'துரத்துண்டு'
—ஸ்வதேச கீதங்கள்.

8. சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும்,
அமையுமத் திறமை ஜனங்களைச் சாரும்
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையு மில்லாது
தம்மருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செயத்தினுக்குதவே
சூழ்ச்சியா மென்பதை யறிந்தும்,

9. கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமா மென்றும், ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியா மென்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற் கொண்டும்,
அருமைசால் சபத மிவைபுரி கின்றேன்
ஆணைக ளனைத்துமுற் கொண்டே.

10. என்னுட னெத்த தருமத்தை யேற்றூர்
இயைந்த இவ் 'வாலிபர் சபை'க்கே
தன்னுடல், பொருளும், ஆவியு மெல்லாம்
தத்தமா வழங்கினேன். எங்கள்
பொன்னுயர் நாட்டை யொற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமொர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன்றதா யிலக.

11. இவருடன் யானு மிணங்கியே யென்று
மிதுவலாற் பிறதொழி லிலனுய்த்
தவறறு முயற்சி செய்திடக் கடவேன்.
சந்ததஞ் சொல்லினுல், எழுத்தால்,
அவமறு செய்கை யதனினுல், இயலும்
அளவெலாம், எம்மவ ரிந்த
நவமுறு சபையி னெருபெருங் கருத்தை
நன்கிதின் அறிந்திடப் புரிவேன்.

12. உயருமிந் நோக்க நிறைவுற 'இணக்கம்'
ஒன்றுதான் மார்க்கமென் பதுவும்,
செயம்நிலை யாகச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்கமென் பதுவும்,
பெயர்வற எங்கள் நாட்டினர் மனதிற்
பேணுமா றியற்றிடக் கடவேன் ;
அயலொரு சபையி லின்றுதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன்.

13. எங்கள்நாட் டொருமை யென்னெஞ்சு குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்களாக் கினைக ளனைத்தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன் ;
இங்கென தாவி மாய்ந்திடு மேனு
மிவர்பணி வெளியிடா திருப்பேன் ;
துங்கமார் செயலாற் போதனை யாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன்.

14. இன்றுமெந் நாளு மிலைசெயத் தவறேன் ;
மெய்யிது, மெய்யிது : இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனே லென்னை
ஈசனுர் நாசமே புரிக ;
அன்றியு மக்கள் வெறுத்தெனை யிகழ்க ;
அசத்தியப் பாதகஞ் சூழ்க ;
நின்றதீ யெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தம்யா னுழலுக மன்னே !

வேறு

15. பேசி நின்ற பெரும்பிர திக்கினை
மாசி லாது நிறைவுறும் வண்ணமே
ஆசி கூறி யருளுக ஏழையேற்
கீச னென்று மிதயத் திலகியே.

51. 'பெல்ஜியம்' நாட்டிற்கு வாழ்த்து

1. அறத்தினுல் வீழ்ந்துவிட்டாய் ;
அன்னியன் வலிய னுகி
மறத்தினுல் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினுற் புலியைக் காக்கு
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினுல் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றுய்.

2. வண்மையால் வீழ்ந்து விட்டாய் ;
வாரிபோற் பகைவன் சேனை
நிண்மையோ டடர்க்கும் போதில்
சிந்தனை மெலிந்த லின்றி
ஒண்மைசேர் புகழே மேலென்
றுளத்திலே உறுதி கொண்டாய்
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றுய்.

3. மானத்தால் வீழ்ந்து விட்டாய் ;
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றுய்.

4. வீரத்தால் வீழ்ந்து விட்டாய் ;
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்

பாரத்தை யெளிதாக் கொண்டாய்,
பாம்பினைப் புழுவே யென்றாய்
நேரத்தே பகைவன் றன்னை
'நில்'லென முனைந்து நின்றாய்.

5. துணிவினுல் வீழ்ந்து விட்டாய;
தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னேடும்
பெரும்பகை யெதிர்த்தபோது
பணிவது கருத மாட்டாய்,
பதுங்குதல் பயனென் றெண்ணுய்.
தணிவதை நினைக்க மாட்டாய்,
'நில்'லெனத் தடுத்தல் செய்தாய்.

6. வெருளுத லறிவென் றெண்ணுய் ;
விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்;
சுருளிலை வெள்ளம் போலத்
தொகையிலாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
''உருளுக தலைகள், மான
மோங்குகெ''ன் றெதிர்த்து நின்றாய்.

7. யாருக்கே பகையென் றாலும்
யார்மிசை யிவன் சென்றாலும்
ஊருக்கு ளெல்லை தாண்டி
யுத்தர வெண்ணிடாமல்
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கு மிடமில் லாமல்
வெட்டுவே னென்று நின்றாய்.

8. வேள்வியில் வீழ்வ தெல்லாம்
வீரமும் புகழு மிக்கு
மீள்வதுண் டுலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கு மென்பார்

ஆள்வினை செய்யும் போதில்
அறத்திலே யிளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக்
கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல்.

9. விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்றும் மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனகமா ளிகையு முண்டாம்
அளக்கருந் தீதுற் றாலும்
அச்சமே யுளத்துக் கொள்வார்
துளக்கற வோங்கி நிற்பர்
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே?

52. புதிய ருஷியா

ஜார் சக்ரவர்த்தியின் வீழ்ச்சி

1. மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர், புதுமை காணீர்!

2. இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும்பே ரிசைந்த பாவி.
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சானரேரும்; தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்;
பொய் சூது தீமையெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே யந்த நாட்டில்.

3. உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை ;
பிணிகள் பல வுண்டு ; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டுண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்ப துண்டு ;
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவ துண்டு.

4. இம்மென்னூல் சிறைவாசம் ; ஏனென்னூல்
வனவாசம் ; இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்,
அம்மைமனங் கனிந்திட்டாள் ; அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
முய்மையிலுங் காத்திடுநல் விழியாலே
நோக்கினுள் ; முடிந்தான் காலன்.

5. இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் ; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர்சட சடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.

6. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார் ; குடியரசென்
றுலகறியக் கூறி விட்டார் ;
அடிமைக்குத் தலையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக! என்னூர் ;
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்,
கிருதயுகம் எழுக மாதோ !

---

53. பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்

ஹரிகாம்போதி ஜன்யம்

ராகம்—ஸைந்தவி] [தாளம்—திஸ்ரசாப்பு

பல்லவி

கரும்புத் தோட்டத்திலே—ஆ
கரும்புத் தோட்டத்திலே.

சரணங்கள்

1. கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே—ஹிந்து
மாதர்தன் னெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோவொரு
மருந்தி தற்கிலையோ—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றூரந்தக
(கரும்புத் தோட்டத்திலே)

2. பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயு மிரங்கு மென்பார் தெய்வமே.நின
தெண்ண மிரங்காதோ—அந்த
ஏழைக ளங்கு சொரியுங்கண் ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ—தெற்கு
மாக டலுக்கு நடுவினிலே யங்கொர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின் றூரந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)

3. நாட்டை நினைப்பாரோ—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென் றேயன்னை
விட்டை நினைப்பாரோ—அவர்
விம்மிவிம்மி விம்மி விம்மி யழுங்குரல்

கேட்டிருப் பாய்காற்றே—துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்க ளழுதசொல்
மீட்டு முரையாயோ—அவர்
விம்மி யழுவந் திறங்கெட்டுப் போயினர்
(கரும்புத் தோட்டத்திலே)

4. நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ—ஹே
வீர கராளி, சாமுண்டி காளி!
(கரும்புத் தோட்டத்திலே)

கிருஷ்ணன்மீது ஸ்துதி

1. வேத வானில் விளங்கி "அறஞ்செய்மின்,
சாதல் நேரினுஞ் சத்தியம் பூணுமின்,
தீத கற்றுமின்" என்று திசையெலாம்
மோத நித்தம் இடித்து முழங்கியே

2. உண்ணுஞ் சாதிக் குறக்கமும் சாவுமே
நண்ணு ரூவண நன்கு புரந்திடும்
எண்ண ரும்புகழ்க் கீதையெனச் சொலும்
பண்ண மிழ்த்தத் தருள்மழை பாலித்தே

3. எங்க ளாரிய பூமியெனும் பயிர்
மங்க ளம்பெற நிததலும் வாழ்விக்கும்
துங்க முற்ற துணைமுகி லேமலர்ச்
செங்க ணுய்நின் பதமலர் சிந்திப்பாம்.

4. வீரர் தெய்வதம் கர்ம விளக்குநற்
பார தர்செய் தவத்தின் பயனெனும்
தார விர்ந்த தடம்புயப் பார்த்தனேர்
கார ணம்மெனக் கொண்டு கடவுணீ

5. நின்னே நம்பி நிலத்திடை யென்றுமே
மன்னு பாரத மாண்குலம் யாவிற்கும்
உன்னுங் காலே உயர்துணை யாகவே
சொன்ன சொல்லே யுயிரிடைச் சூடுவாம்.

6. ஐய கேளினி யோர்சொல், அடியர்யாம்
உய்ய நின்மொழி பற்றி யொழுகியே
மைய றும்புகழ் வாழ்க்கை பெறற்கெனச்
செய்யுஞ் செய்கையி னின்னருள் சேர்ப்பையால்,

7. ஒப்பி லாத உயர்வொடு கல்வியும்
எய்ப்பில் வீரமும் இப்புவி யாட்சியும்
தப்பி லாத தருமமுங் கொண்டுயாம்
அப்ப னேநின் னடிபணிந் துய்வமால்

8. மற்று நீயிந்த வாழ்வு மறுப்பையேல்
சற்று நேரத்து ளெம்முயிர் சாய்த்தருள்
கொற்ற வாநின் குவலய மீதினில்
வெற்று வாழ்க்கை விரும்பி யழிகலேம்.

9. நின்றன் மாமர பில்வந்து நீசராய்ப்
பொன்றல் வேண்டிலம் பொற்கழ லாணைகாண்
இன்றிங் கெம்மை யதம்புரி யில்லையேல்
வென்றி யும்புக முந்தரல் வேண்டுமே.

பல்சுவை

தன்வரலாறும் பிற பாடல்களும்

1. ஸ்வசரிதை
2. பாரதி-அறுபத்தாறு
3. புதிய ஆத்திசூடி
4. முரசு
5. பாப்பாப் பாட்டு
6. வாழ்த்துப் பாக்கள்

முன்னுரை

'ஸ்வசரிதை' என்பது 1910ஆம் ஆண்டு நவம்பரில் முதன்முதலில் அச்சிடப்பெற்றது. அதன் முகவுரையில் பாரதியார் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

'இச் சிறிய செய்யுள்—நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்பமளிக்கக்கூடியவாறாலும் பதர் மிகுதியாகக் கலந்திருக்கக்கூடும். இதன் இயல்பு தன்கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது. இஃது தமிழறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத் தக்கதுதானா என்றுபார்த்திடும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் பதிப்பிடுகிறேன். இதனைப் பதம்பார்த்து மேலோர் நன்றென்பாராயின் இவ்வழியிலே வேறு பல வெளியாக்குவேன். அனுபவக் குறைவினாலும் ஆற்றற் குறைவினாலும் நேரும் பிழைகளைப் பொறுத்தருள் செய்க.'

—சி. சுப்பிரமணிய பாரதி

பல்சுவை

○

தன்வரலாறும்
பிற பாடல்களும்

○

1. ஸ்வசரிதை

—: o :—

" பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே."

—பட்டினத்துப் பிள்ளை

முன்னுரை

வாழ்வு முற்றுங் கனவெனக் கூறிய
மறைவ லோர்த முரைபிழை யன்றுகாண்;
தாழ்வு பெற்ற புவித்தலக் கோலங்கள்
சரத மன்றெனல் யானு மறிகுவேன்;
பாழ்க டந்த பரநிலை யென்றவர்
பகரு மந்நிலை பார்த்திலன் பார்மிசை;
ஊழ்க டந்து வருவது மொன்றுண்டோ?
உண்மை தன்னிலொர் பாதி யுணர்ந்திட்டேன். 1

மாயை பொய்யெனல் முற்றிலும் கண்டனன்;
மற்று மிந்த பிரமத் தியல்பினை
ஆய நல்லருள் பெற்றிலன்; தன்னுடை
அறிவி னுக்குப் புலப்பட லின்றியே
தேய மீதென வோசொலுஞ் சொல்லினைச்
செம்மை யென்று மனத்திடைக் கொள்வதாம்
தீய பக்தி யியற்கையும் வாய்ந்திலேன்;
சிறிது காலம் பொறுத்தினுங் காண்பமே. 2

உலகெ லாமொர் பெருங்கன வஃதுளே
உண்டு றங்கி யிடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கை யோர்
கனவி னுங்கன வாகு மிதனிடை
சிலதி னங்க ளுயிர்க்கமு தாகியே
செப்பு தற்கரி தாக மயக்குமால்
திலத வாணுத லார்தரு மையலாற்
தெய்வி கக்கன வன்னது வாழ்கவே. 3

ஆண்டோர் பத்தினி லாடியு மோடியும்
ஆறு குட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறியி றங்கியும்
என்னை டொத்த சிறிய ரிருப்பரால் ;
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதினுங் கூடிலேன்,
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமைபிறி தின்றி வருந்தினேன். 4

பிள்ளைக் காதல்

அன்ன போழ்தினி லுற்ற கனவினை
அந்த மிழ்ச்சொலி லெவ்வணஞ் சொல்லுகேன்?
சொன்ன திங்கன வங்கு துயிலிடைத்
தோய்ந்த தன்று, நனவிடைத் தோய்ந்ததால் ;
மென்ன டைக்கனி யின்சொற் கருவிழி
மேனி யெங்கு நறுமலர் வீசிய
கன்னி யென்றுறு தெய்வத மொன்றனைக்
கண்டு காதல் வெறியிற் கலந்தனன். 5

'ஒன்ப தாய பிராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்'
என்ப தார்க்கும் வியப்பினை நல்குமால்
என்செய் கேன்? பழி யென்மிசை யுண்டுகொல்?
அன்பெ னும்பெரு வெள்ள மிழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே ?
முன்பு மாமுனி வோர்தமை வென்றவில்
முன்ன ரேழைக் குழந்தையென் செய்வனே ? 6

வயது முற்றிய பின்னுறு காதலே
மாசு டைத்தது, தெய்விக மன்றுகாண் ;
இயலு புன்மை யுடலினுக் கின்பெனும்
எண்ண மூஞ்சிறி தேன்றதக் காதலாம் ;
நயமி குந்தனி மாதை மாமணம்
நண்ணு பாலர் தமக்குரித் தாமன்றே ?
கயல்வி ழிச்சிறு மானினைக் காணநான்
காம னம்புக ளென்னுயிர் கண்டவே. 7

கனகன் மைந்தன் குமர குருபரன்
கனியு ஞானசம் பந்தன் துருவன்மற்
றெனையர் பாலர் கடவுளர் மீதுதாம்
எண்ணில் பக்திகொண் டின்னுயிர்
வாட்டினோர்
மனதி லேபிறந் தோன்மனமுண்ணுவோன்
மதன தேவனுக் கென்னுயிர் நல்கினன் ;
முனமு ரைத்தவர் வான்புகழ் பெற்றனர் ;
மூட னேன்பெற்ற தோதுவன் பின்னரே. 8

நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சிரெ டுத்த புலியியற் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல் 9

காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்த தேருரு ளேப்படு மேழைதான்
யாண்டு தேர்செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன் ;
பூத்த ஜோதி வதனந் திரும்புமேற்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன். 10

புலங்க ளோடு கரணமு மாவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவ னங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர் ;
யானு மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன் ;
விலங்கி யற்கை யிலேயெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே. 11

சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையு மானத மாகுமால் ;
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்,
அதனு டைப்பொருள் நாளே விகீர்த்திடும்
தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,
விரும்பும் யாவும் பெறுரிவர் தாமன்றே. 12

விதியை நோவர்தம் நண்பரைத் தூற்றுவர்,
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்,
சதிகள் செய்வர்பொய்ச் சாத்திரம் பேசுவர்,
சாத கங்கள் புரட்டுவர், பொய்மைசேர்
மதியி னிற்புலே நாத்திகங் கூறுவர்,
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார் ;
கண்ணி லாதவர் போலத் திகைப்பர்காண் 13

கன்னி மீதுறு காதலி னேழையேன்
கவலை யுற்றன கோடியென் சொல்லுகேன் ?
பன்னி யாயிரங் கூறினும், பக்தியின்
பான்மை நன்கு பகர்ந்திட லாகுமோ ?
முன்னி வான்கொம்பிற் றேனுக் குழன்றதோர்
முடவன் கால்கள் முழுமைகொண் டாலென
என்னி யன்றுமற் றெங்ஙனம் வாய்ந்ததோ
என்னி டத்தவ ளிங்கிதம் பூண்டதே ! 14

காத லென்பது மோர்வயி னிற்குமேற்
கடலின் வந்த கடுவினை யொக்குமால் ;
ஏத மின்றி யிருபுடைத் தாமெனில்,
இன்ன மிர்து மிணைசொல லாகுமோ ?
ஓதொ ணுத பெருந்தவம் கூடினோர்
உம்பர் வாழ்வினை யெள்ளிடும் வாழ்வினோர்
மாத ராரிமிசை தாழுறுங் காதலை
மற்ற வர்தரப் பெற்றிடு மாந்தரே ! 15

மொய்க்கு மேகத்தின் வாடிய மாமதி,
மூடு வெம்பனிக் கீழுறு மென்மலர்,
கைக்கும் வேம்பு கலந்திடு செய்யபால்,
காட்சி யற்ற கவினுறு நீள்விழி,
பொய்க் கிளைத்து வருந்திய மெய்யரோ
பொன்ன ரைருள் பூண்டில ராமெனிற்
கைக்கி ளைப்பெயர் கொண்ட பெருந்துயர்க்
காத லஃது கருதவுந் தீயதால். 16

தேவர் மன்னன் மிடிமையைப் பாடல்போல்
தீய கைக்கிளை யானெவன் பாடுதல் ?
ஆவல் கொண்ட அரும்பெறற் கன்னிதான்
அன்பெ னக்கங் களித்திட லாயினள் ;
பாவந் தீமை பழியெதுந் தோர்ந்திடோம் ;
பண்டைத் தேவ யுகத்து மனிதர்போற்
காவல் கட்டு விதிவழக் கென்றிடுங்
கயவர் செய்திக ளேது மறிந்திலோம். 17

கான கத்தி லிரண்டு பறவைகள்
காத லுற்றது போலவு மாங்ஙனே
வான கத்தி லியக்க ரியக்கியர்
மையல் கொண்டு மயங்குதல் போலவும்
ஊன கத்த துவட்டுறு மன்புதா
ளென்று மின்றி யுயிர்களி லொன்றியே
தேன கத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேனரோ. 18

ஆதி ரைத்திரு நாளொன்றிற் சங்கரன்
ஆல யத்தொரு மண்டபந் தன்னில்யான்
சோதி மாலெடு தன்னந் தனியனுய்ச்
சொற்க ளாடி யிருப்ப, மற்றுங்கவள்
பாதி பேசி மறைந்துபின் தோன்றித்தன்
பங்கயக் கையில் மைகொணர்ந் தே,'ஒரு
சேதி ! நெத்தியில் பொட்டுவைப் பேன்' என்றுள் ;
திலத மிட்டனள் ; செய்கை யழிந்தனன். 19

என்னை யின்றெனக் கைந்து பிராயத்தில்
ஏங்க விட்டுவிண் ணெய்திய தாய்தனை
முன்னை யின்றவன், செந்தமிழ்ச் செய்யுளால்
மூன்று போழ்துஞ் சிவனடி யேத்துவோன்,
அன்ன வன்தவப் பூசனை தீர்ந்தபின்
அருச்ச னைப்படு தேமலர் கொண்டுயான்
பொன்னை யென்னுயிர் தன்னை யணுகலும்
பூவை புன்னகை நன்மலர் பூப்பள்காண். 20

ஆங்கிலப் பயிற்சி

நெல்லை யூர்சென்றவ் வூணர் கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்தனன் ;
புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றெரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரி யர்க்கிங் கருவருப் பாவதை 21

நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலைப யில்கென வென்னை விடுத்தனன்.
அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
வற்பர் கல்வியி னெஞ்சு பொருந்துமோ ? 22

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
கார்கொள் வானிலோர் மீனிலே தேர்ந்திலார் ;
அணிசெய் காவிய மாயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்குங் கவியுளம் காண்கிலார் ;
வணிக மும்பொரு ணூலும் பிதற்றுவார் ;
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார் ;
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வாரெட் டுணைப்பயன் கண்டிலார். 23

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதை புனைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையு மீனையு
மோர்ந்த ளந்ததொர் பாஸ்கரன் மாட்சியும்,‡
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞான மீதி லிலக்கணங் கண்டதும்,
இம்பர் வாழ்வி னிறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கர னேற்றமும், 24

சேரன் தம்பி சிலம்பை யிசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்துத் தர்மம் வளர்த்ததும்,
பேர ருட்சுடர் வாள்கொண் டசோகனர்
பிழை படாது புவித்தலங் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும், 25

அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர் ;
முன்ன நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள் ;
என்ன கூறிமற் றெங்க ணுணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ள மெரிவதே ! 26

[மூ. ப.] : ‡'மோர்ந்த ளந்தொர் பாற்கரன் மாட்சியும்'

சூதி லாத வுளத்தின னெந்தைதான்
சூழ்ந்தெ னக்கு நலஞ்செய லுடியே
ஏதி லர்தருங் கல்விப் படுகுழி
ஏறி யுய்தற் கரிய கொடும்பிலம்
நீதி யன்ற மயக்கமு மையமும்
செய்கை யாவினு மேயசி ரத்தையும்
வாதும் பொய்மையு மென்றவி லங்கினம்
வாழும் வெங்குகைக் கென்னை வழங்கினன். 27

ஐய ரென்றுந் துரையென்று மற்றெனக்*
காங்கி லக்கலை யென்றொன் றுணர்த்திய
பொய்ய ருக்கிது கூறுவன், கேட்பிரால் :$
'பொழுதெ லாமுங்கள் பாடத்தில் போக்கிநான்
மெய்ய யர்ந்து விழிகுழி வெய்திட
வீறி ழந்தென துள்ளநொய் தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திர நீங்கியென்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்.' 28

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது ;
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன ;
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.
சிலமுன் செய்நல் வினைப்பய னலு நந்‡
தேவி பாரதத் தன்னை யருளினும்
அலைவு றுத்துநும் பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்தி டாதொரு வாறுபி ழைத்ததே. 29

மணம்

நினைக்க நெஞ்ச முருகும் ; பிறர்க்கிதை
நிகழ்த்த நாநனி கூசு மதன்றியே
எனைத்திங் கெண்ணி வருந்தியு மிவ்விடர்
யாங்ஙன் மாற்றுவ தென்பது மோர்ந்திலம்

[பா - ம்.] : * மன்றெனக்
$ 'கேட்பீரேல்'
‡ 'சில முன் செய்தன நல்வினை யானுநந்'

அனைத்தொர் செய்திமற் றேதெனிற் கூறுவேன்:
அம்ம ! மாக்கள் மணமெனுஞ் செய்தியே.
வினைத் தொடர்களில் மானுட வாழ்க்கையுள்
மேவு மிம்மணம் போற்பிறி தின்றரோ. 30

வீடுறு வணம் யாப்பதை வீடென்பார் ;
மிகவி ழிந்த பொருளைப் பொருளென்பார் ;
நாடுங் காலொர் மணமற்ற செய்கையை
நல்ல தோர்மண மாமென நாட்டுவார்.
கூடு மாயிற் பிரமசரி யங்கொள் ;
கூடு கின்றில தென்னிற் பிழைகள்செய்
தீட ழிந்து நரகவழிச் செல்வாய்.
யாது செய்யினு மிம்மணம் செய்யல்காண். 31

வசிட்ட னுக்கு மிராமற்கும் பின்னெரு
வள்ளு வர்க்குமுன் வாய்த்திட்ட மாதர்போல்
பசித்தொ ராயிர மாண்டு தவஞ்செய்து
பார்க்கி னும்பெறல் சால வரிதுகாண்.
புசிப்ப தும்பரி னல்லமு தென்றெணிப்
புலையர் விற்றிடுங் கள்ளுண லாகுமோ ?
அசுத்தர் சொல்வது கேட்கலிர், காளீயீர் !
ஆண்மை வேண்டின் மணஞ்செய்த
லோம்புமின். 32

வேறு தேயத் தெவரெது செய்யினும்
வீழ்ச்சி பெற்றவிப் பாரத நாட்டினில்
ஊற ழிந்து பிணமென வாழுமிவ்
வூன நீக்க விரும்பு மிளையர்தாம்
கூறு மெந்தத் துயர்கள் விளையினும்
கோடி மக்கள் பழிவந்து சூழினும்
நீறு பட்டவிப் பாழ்ஞ்செயல் மட்டினும்
நெஞ்ச த்தாலு நினைப்ப தொழிகலே. 33

பால ருந்து மதலையர் தம்மையே
பாத கக்கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடு குலங்கெடல் நாடிய
மூட மூடநிர் மூடப் புலையர்தாம்

கோல மாக மணத்திடைக் கூட்டுமிக்
கொலையெ னுஞ்செய லொன்றினை யுள்ளவும்
சால வின்னுமோ ராயிர மாண்டிவர்
தாத ராகி யழிகெனத் தோன்றுமே. 34

ஆங்கொர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன் ;
ஈங்கொர் கன்னியைப் பன்னிரண் டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்.
தீங்கு மற்றிதி லுண்டென் றறிந்தவன்
செய லெதிர்க்குந் திறனில னுயினேன்.
ஓங்கு காதற் றழலெவ் வளவென்றன்
உளமெ ரித்துள தென்பதுங் கண்டிலேன். 35

மற்றொர் பெண்ணை மணஞ்செய்த போழ்துமுன்
மாத ராளிடைக் கொண்டதொர் காதல்தான்
நிற்றல் வேண்டு மெனவுளத் தெண்ணிலேன் ;
நினைவை யேயிம் மணத்திற் செலுத்திலேன் ;
முற்றெ டர்பினி லுண்மை யிருந்ததால்
மூண்ட பின்னதொர் கேளியென் றெண்ணினேன்
கற்றுங் கேட்டு மறிவு முதிருமுன்
காத லொன்று கடமையொன் றுயின. 36

மதனன் செய்யு மயக்க மொருவயின் ;
மாக்கள் செய்யும் பிணிப்புமற் றோர்வயின்;
இதனிற் பன்னிரண் டாட்டை யிளைஞனுக்
கென்னை வேண்டு மிடர்க்குறு சூழ்ச்சிதான்?
எதனி லேனுங் கடமை விளையுமேல்
எத்து யர்க ளுழன்றுமற் றென்செய்தும்
அதனி லுண்மையோ டார்ந்திடல் சாலுமென்
றறம் விதிப்பது மப்பொழு தோர்ந்திலேன். 37

சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்
சகுன மந்திரந் தாலி மணியெலாம்
யாத்தெ னைக்கொலை செய்தன ரல்லது
யாது தர்ம முறையெனல் காட்டிலர் ;

தீத்தி ரன்கொ ளறிவற்ற பொய்ச்செயல்
செய்து மற்றவை ஞான நெறியென்பர் ;
மூத்த வர்வெறும் வேடத்தி னிற்குங்கால்
மூடப் பிள்ளை யறமெவ ணேர்வதே ? 38

தந்தை வறுமை யெய்திடல்

ஈங்கி தற்கிடை யெந்தை பெருந்துயர்
எய்தி நின்றனன், தீய வறுமையான் ;
ஓங்கி நின்றபெ ருஞ்செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியி லிழந்தனன் ;
பாங்கி னின்று புகழ்ச்சிகள் பேசிய
பண்டை நண்பர்கள் கைநெகிழ்த் தேகினர்.
வாங்கி யுய்ந்த கிளைஞருந் தாதரும்
வாழ்வு தேய்ந்தபின் யாது மதிப்பரோ ? 39

பார்ப்ப னக்குலங் கெட்டழி வெய்திய
பாழ டைந்த கலியுக மாதலால்
வேர்ப்ப வேர்ப்ப பொருள்செய்வ தொன்றையே
மேன்மை கொண்ட தொழிலெனக்
கொண்டனன் ;
ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள்செய்து வாழ்ந்தனன் ;
நீர்ப்ப டுஞ்சிறு புற்புத மாமது
நீங்க வேயுளங் குன்றித் தளர்ந்தனன். 40

தீய மாய வுலகிடை யொன்றினில்
சிந்தை செய்து விடாயுறுங் காலதை
வாய டங்கமென் மேலும் பருகினும்
மாயத் தாகந் தவிர்வது கண்டிலம் ;
நேய முற்றது வந்து மிகமிக,
நித்த லும்மதற் காசை வளருமால்.
காய முள்ள வரையுங் கிடைப்பினும்
கயவர் மாய்வது காய்ந்த வுளங்கொண்டே. 41

'ஆசைக் கோரள வில்லை விடயத்துள்
ஆழ்ந்த பின்னங் கமைதி யுண்டாமென
மோசம் போகலிர்' என்றிடித் தோதிய
மோனி தாளிணை முப்பொழு தேத்துவாம் ;

தேசத்தார் புகழ் நுண்ணறி வோடுதான்
திண்மை விஞ்சிய நெஞ்சின ரெனினும்
நாசக் காசினி லாசையை நாட்டினன்
நல்ல னெந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன். 42

பொருட் பெருமை

பொருளி லார்க்கிவ் வுலக மென்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்.
பொருளி லார்க்கின மில்லை, துணையிலை,
பொழு தெலாமிடர் வெள்ளம்வந் தெற்றுமால்.
பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்.
போற்றிக் காசினுக் கேங்கி யுயிர்விடும்
மருளர் தம்மிசை யேபழி கூறுவன்;
மாய கட்கிங்கொ ரூன முரைத்திலன். 43

அறமொன் றேதரு மெய்யின்ப மென்றநல்
லறிஞர் தம்மை யனுதினம் போற்றுவேன்;
பிறவி ரும்பி யுலகினில் யான்பட்ட
பீழை யெத்தனை கோடி! நினைக்கவும்
திறன ழிந்தென் மனமுடை வெய்துமால்.
தேசத் துள்ள இளைஞ ரறிமினே!
அறமொன் றேதரு மெய்யின்பம்; ஆதலால்
அறனை யேதுணை யென்றுகொண் டுய்திரால். 44

வெய்ய கர்மப் பயன்களி னெந்துதான்
மெய்யு ணர்ந்திட லாகுமென் றுக்கிய
தெய்வ மேயிது நீதி யெனினுநின்
திருவ ருட்குப் பொருந்திய தாகுமோ?
ஐய கோசிறி துண்மை விளங்குமுன்,
ஆவி நையத் துயருறல் வேண்டுமே!
பையப் பையவோ ராமைகுன் றேறல்போற்
பாருளோ ருண்மை கண்டிவ ணுய்வரால். 45

தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது;
தரணி மீதினி லஞ்சலென் பாரிலர்;
சிந்தை யிற்றெளி வில்லை: உடலினில்
திறனு மில்லை: உரனுளத் தில்லையால்;

மந்தர் பாற்பொருள் போக்கிப் பயின்றதா
மடமைக் கல்வியில் மண்ணும் பயனிலை.
எந்த மார்க்கமுந் தோற்றில தென்செய்கேன் ?
ஏன்பி றந்தன னித்துயர் நாட்டிலே ? 46

முடிவுரை

உலகெ லாமொர் பெருங்கனவஃதுளே
யுண்டு றங்கி யிடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவி னுங்கனவாகு மிதற்குநான்
பலநி னைந்து வருந்தியிங் கென் பயன் ?
பண்டு போனதை யெண்ணியென் னுளது ?
சிலதி னங்க ளிருந்து மறைவதிற்
சிந்தை செய்தெவன் செத்திடு வானடா ! 47

ஞான முந்துற வும்பெற்றி லாதவர்
நானி லத்துத் துயரன்றிக் காண்கிலர்
போன தற்கு வருந்திலன். மெய்த்தவப்
புலமை யோனது வானத் தொளிருமோர்
மீனை நாடி வளைத்திடத் தூண்டிலை
வீச லொக்கு மெனலை மறக்கிலேன்.
ஆன தாவ தனைத்தையுஞ் செய்ததோர்†
அன்னை யே !இனி யேனு மருள்வையால். 48

வேறு

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே யுறுதி,
அகத்திலே யன்பினோர் வெள்ளம்,
பொறிக ளின்மீது தனியர சாணை,
பொழுதெலா நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தி
னிலைத்திட லென்றிவை யருளாய்,
குறிகுண மேது மில்லதா யனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே ! 49

[பா - ம்.] : † 'செய்வதோர்'

2. பாரதி—அறுபத்தாறு

—: o :—

முதற் காண்டம்

கடவுள் வாழ்த்து - பராசக்தி துதி

எனக்கு முன்னே சித்தர்பல ரிருந்தா ரப்பா,
யானும் வந்தே னெருசித்த னிந்த நாட்டில் ;
மனத்தினிலே நின்றிதனை யெழுது கின்றாள்
மனோன்மணியென் மாசக்தி வையத் தேவி ;
தினத்தினிலே புதிதாகப் பூத்து நிற்கும்
செய்யமணித் தாமரைநேர் முகத்தாள் காதல்
வனத்தினிலே தன்னையொரு மலரைப் போலும்
வண்டினைப் போ லெனையுமுரு மாற்றி விட்டாள். 1

தீராத காலமெலாந் தானு நிற்பாள்,
தெவிட்டாத இன்னமுதின் செவ்வி தழ்ச்சி,
நீராகக் கனலாக வானுக் காற்று
நிலமாக வடிவெடுத்தாள், நிலத்தின் மீது
போராக நோயாக மரண மாகப்
போந்திதனை யழித்திடுவாள் ; புணர்ச்சி கொண்டால்
நேராக மோனமஹா னந்த வாழ்வை
நிலத்தின்மிசை யளித்தமரத் தன்மை யீவாள். 2

மாகாளி பராசக்தி உமையா ளன்னை
வைரவிகங் காளிமனோன் மணிமா மாயி,
பாகார்ந்த தேமொழியாள், படருஞ் செந்தீ
பாய்ந்திடுமோர் விழியுடையாள், பரம சக்தி,
ஆகார மளித்திடுவாள், அறிவு தந்தாள்,
ஆதிபரா சக்தியென தமிர்தப் பொய்கை,
சோகா டவிக்குளெனைப் புகவொட் டாமல்
துய்யசெழுந் தேன்போலே கவிதை சொல்வாள். 3

மரணத்தை வெல்லும் வழி

பொன்னார்ந்த திருவடியைப் போற்றி யிங்கு
புகலுவேன் யானறியு முண்மை யெல்லாம் ;
முன்னோர்க ளெவ்வுயிருங் கடவு ளென்றார்,
முடிவாக அவ்வுரையை நான்மேற் கொண்டேன் ;
அன்னோர்க ளுரைத்த தன்றிச் செய்கையில்லை.
அத்வைத நீலகண்டால் மரண முண்டோ ?
முன்னோர்க ளுரைத்தபல சித்த ரெல்லாம்
முடிந்திட்டார், மடிந்திட்டார், மண்ணுய் விட்டார். 4

பொந்திலே யுள்ளாராம், வனத்தி லெங்கோ
புதர்களிலே யிருப்பாராம், பொதியை மீதே
சந்திலே சவுத்தியிலே நிழலைப் போலே
சற்றேயங் கங்கேதென் படுகின் றாராம்,
நொந்தபுண்ணைக் குத்துவதிற் பயனொன் றில்லை :
நோவாலே மடிந்திட்டான் புத்தன் ; கண்டீர்
அந்தணனும் சங்கரா சார்யன் மாண்டான் ;
அதற்கடுத்த விராமா நுஜனும் போனான் ; 5

சிலுவையிலே அடியுண்டு யேசு செத்தான் ;
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான் ;
பலர்புகழு மிராமனுமே யாற்றில் வீழ்ந்தான் ;
பார்மீது நான்சாகா திருப்பேன், காண்பீர் !
மலிவுகண்டீ ரிவ்வுண்மை, பொய்கூ றேன்யான்,
மடிந்தாலும் பொய்கூறேன் மானு டர்க்கே,
நலிவுமில்லை, சாவுமில்லை, கேளீர், கேளீர்.
நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை 6

அஸுரர்களின் பெயர்

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும் ;
மிச்சத்தைப் பின்சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரண மில்லை ;

துச்சமெனப் பிறர்பொருளைக் கருத லாலே,
சூழ்ந்த தெலாங் கடவுளெனச் சுருதி சொல்லும்
நிச்சயமா ஞானத்தை மறத்த லாலே,
நேர்வதே மானுடர்க்குச் சினத்தீ நெஞ்சில். 7

சினத்தின் கேடு

சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவா ரொப்பாவார் ; சினங்கொள் வார்தாம்
மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார் மானு வாராம்.
தினங்கோடி முறைமனிதர் சினத்தில் வீழ்வார்,
சினம்பிறர்மேற் ருங்கொண்டு கவலை யாகச்
செய்ததெணித் துயர்க்கடலில் வீழ்ந்து சாவார். 8

மாகாளி பராசக்தி துணையே வேண்டும் ;
வையகத்தி லெதற்குமினிக் கவலை வேண்டா ;
சாகாம லிருப்பதுநஞ் சதுரா லன்று ;
சக்தியரு ளாலன்றே பிறந்தோம் பார் மேல் ?
பாகான தமிழினிலே பொருளைச் சொல்வேன்,
பாரீர்நீர் கேளீரோ, படைத்தோன் காப்பான்
வேகாத மனங்கொண்டு களித்து வாழ்வீர்
மேதினியி லேதுவந்தா லெமக்கென் னென்றே. 9

தேம்பாமை

"வடகோடிங் குயர்ந்தென்னே, சாய்ந்தா லென்னே,
வான்பிறைக்குத் தென்கோடு" பார்மீ திங்கே,
விடமுண்டுஞ் சாகாம லிருக்கக் கற்றுல்,
வேறெதுதான் யாதாயி னெமக்கிங் கென்னே ?
திடங்கொண்டு வாழ்ந்திடுவோம், தேம்பல் வேண்டா ;
தேம்புவதிற் பயனில்லை, தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி கோடி
எற்குமினி அஞ்சாதீர் புவியி லுள்ளீர். 10

பொறுமையின் பெருமை

திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலுவீற் றிருக்குமதன் பொருளைக் கேளீர் !
திருத்தணிகை யென்பதிங்கு பொறுமை யின்பேர்,
செந்தமிழ்கண் டீர்,பகுதி : 'தணி'யெ னுஞ்சொல்,
பொருத்தமுறுந் தணிகையினுற் புலமை சேரும்,
பொறுத்தவரே பூமியினை ஆள்வா ரென்னும்
அருத்தமிக்க பழமொழியுந் தமிழி லுண்டாம்,
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன். 11

பொறுமையினை அறக்கடவுள் புதல்வ னென்னும்
யுதிட்டிரனு நெடுநாளிப் புவிமேற் காத்தான்,
இறுதியிலே பொறுமைநெறி தவறி விட்டான்,
ஆதலாற் போர்புரிந்தா னிளையா ரோடே
பொறுமையின்றிப் போர்செய்து பரத நாட்டைப்
போர்க்களத்தே அழித்துவிட்டுப் புவியின் மீது
வறுமையையுங் கலியினையும் நிறுத்தி விட்டு
மலைமீது சென்றுபின் வானஞ் சென்றான். 12

ஆனலும் புவியின்மிசை உயிர்க ளெல்லாம்
அநியாய மரணமெய்தல் கொடுமை யன்றே ?
தேனுன உயிரைவிட்டுச் சாக லாமோ ?
செத்திடற்குக் காரணந்தான் யாதென் பீரேல்,
கோனுகிச் சாத்திரத்தை யாளு மாண்பார்
ஜகதீச சந்த்ரவஸு கூறு கின்றான் :
(ஞானனு பவத்திலிது முடிவாங் கண்டீர்)
"நாடியிலே அதிர்ச்சியினுல் மரண" மென்றான். 13

கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்;
கொடுங் கோபம் பேரதிர்ச்சி ; சிறியகோபம்
ஆபத்தா மதிர்ச்சியிலே சிறிய தாகும் ;
அச்சத்தால் நாடியெலா மவிந்து போகும் ;
தாபத்தால் நாடியெலாம் சிதைந்து போகும் ;
கவலையினுல் நாடியெலாந் தழலாய் வேகும் ;
கோபத்தை வென்றிடலே பிறவற் றைத்தான்
கொல்வதற்கு வழியெனநான் குறித்திட் டேனே. 14

கடவுள் எங்கே இருக்கிறார்?

''சொல்லடா ஹரியென்ற கடவு ளெங்கே?
சொல்'' லென்று ஹிரண்யன்தா னுறுமிக் கேட்க,
நல்லதொரு மகன்சொல்வான் :—''தூணி லுள்ளான்,
நாரா யணன்துரும்பி லுள்ளான்'' என்றான்.
வல்லபெருங் கடவுளிலா வணுவொன் றில்லை,
மஹாசக்தி யில்லாத வஸ்து வில்லை,
அல்லலில்லை, அல்லலில்லை, அல்லலில்லை;
அனைத்துமே தெய்வமென்று லல்ல லுண்டோ? 15

கேளப்பா சீடனே, கழுதை யொன்றைக்
''கீழான'' பன்றியினைத் தேனைக் கண்டு
தாளைப்பார்த் திருகரமுஞ் சிரமேற் கூப்பிச்
சங்கர,சங் கரவென்று பணிதல் வேண்டும்;
கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும்;
கூடிநின்ற பொருளனைத்தின் கூட்டந் தெய்வம்.
மீளத்தா னிதைத்தெளிவா விரித்துச் சொல்வேன்;
விண்மட்டுங் கடவுளன்று மண்ணு மஃதே. 16

சுத்தஅறி வேசிவமென் றுரைத்தார் மேலோர்;
சுத்தமண்ணும் சிவமென்றே யுரைக்கும் வேதம்;
வித்தகனுங் குருசிவமென் றுரைத்தார் மேலோர்;
வித்தையிலாப் புலையனுமஃ தென்னும் வேதம்.
பித்தரே அனைத்துயிருங் கடவு ளென்று
பேசுவது மெய்யானாற் பெண்டி ரென்றும்
நித்தநும தருகினிலே குழந்தை யென்றும்
நிற்பனவுந் தெய்வமன்றே, நிகழ்த்து வீரே. 17

உயிர்களெலாந் தெய்வமன்றிப் பிறவொன் றில்லை;
ஊர்வனவும் பறப்பனவு நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டு மன்றி யிங்கு
பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வங் கண்டீர்;
வெயிலளிக்கு மிரவி,மதி, விண்மீன், மேகம்,
மேலுமிங்கு பலபலவாந் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்க ளனைத்துந் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்துந் தெய்வம். 18

குருக்கள் ஸ்துதி (குள்ளச்சாமி புகழ்)

ஞானகுரு தேசிகனைப் போற்று கின்றேன் ;
நாடனைத்துந் தானுவான் நலிவி லாதான்
மோனகுரு திருவருளாற் பிறப்பு மாறி
முற்றிலுநா மமரநிலை சூழ்ந்து விட்டோம் ;
தேனனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்
சித்தினியல் காட்டிமனத் தெளிவு தந்தான்.
வானகத்தை யிவ்வுலகி லிருந்து தீண்டும்
வகையுணர்த்திக் காத்தபிரான் பதங்கள் போற்றி ! 19

எப்போதுங் குருசரண நினைவாய், நெஞ்சே !
எம்பெருமான் சிதம்பரதே சிகன்ரு ளெண்ணுய்.
முப்பாழுங் கடந்தபெரு வெளியைக் கண்டான்,
முக்தியெனும் வானகத்தே பரிதி யாவான்,
தப்பாத சாந்தநிலை யளித்த கோமான்,
தவநிறைந்த மாங்கொட்டைச் சாமித் தேவன்,
குப்பாய ஞானத்தால் மரண மென்ற
குளிர்நீக்கி யெனைக்காத்தான், குமார தேவன் ; 20

தேசத்தா ரிவன்பெயரைக் குள்ளச் சாமி
தேவர்பிரா னென்றுரைப்பார் ; தெளிந்த ஞானி
பாசத்தை யறுத்துவிட்டான், பயத்தைச் சுட்டான் ;
பாவனையாற் பரவெளிக்கு மேலே தொட்டான் ;
நாசத்தை யழித்துவிட்டான் ; யமனைக் கொன்ரு ன் ;
ஞானகங்கை தனைமுடிமீ தேந்தி நின்ரு ன்,
ஆசையெனும் கொடிக்கொருதாழ் மரமே போன்ரு ன்,
ஆதியவன் சுடர்பாதம் புகழ்கின் றேனே. 21

வாயினற் சொல்லிடவு மடங்கா தப்பா ;
வரிசையுட னெழுதிவைக்க வகையு மில்லை.
ஞாயிற்றைச் சங்கிலியா லளக்க லாமோ ?
ஞானகுரு புகழினைநாம் வகுக்க லாமோ ?
ஆயிரநூ லெழுதிடினு முடிவு ரு தாம் ;
ஐயனவன் பெருமையைநான் சுருக்கிச் சொல்வேன் ;
காயகற்பஞ் செய்துவிட்டா னவன்வாழ் நாளைக்
கணக்கிட்டு வயதுரைப்பார் யாரு மில்லை. 22

குரு தர்சனம்

அன்றொருநாட் புதுவைநகர் தனிலே கீர்த்தி
அடைக்க லஞ்சே ரீசுவரன் தர்மராஜா
என்றபெயர் வீதியிலோர் சிறிய வீட்டில்,
ராஜாரா மையனென்ற நாகைப் பார்ப்பான்
முன்றனது பிதாதமிழி லுபநிட தத்தை
மொழிபெயர்த்து வைத்ததனைத் திருத்தச் சொல்லி
என்றனைவேண் டிக்கொள்ள, யான்சென் றுங்கண்
இருக்கையிலே யங்கு வந்தான் குள்ளச்சாமி. 23

அப்போது நான்குள்ளச் சாமி கையை
அன்புடனே பற்றியிது பேச லுற்றேன் ;
"அப்பனே, தேசிகனே, ஞானி யென்பார்
அவனியிலே சிலர்நின்னைப் பித்த னென்பார் ;
செப்புறுநல் லஷ்டாங்க யோக சித்தி
சேர்ந்தவனென் றுனைப்புகழ்வார் சிலரென் முன்னே ;
ஒப்பனைகள் காட்டாம லுண்மை சொல்வாய்,
உத்தமனே, எனக்குநினை உணர்த்து வாயே. 24

"யாவனீ ? நினக்குள்ள திறமை யென்னே ?
யாதுணர்வாய் ? கந்தைசுற்றித் திரிவ தென்னே ?
தேவனைப்போல் விழிப்பதென்னே ? சிறியா ரோடும்
தெருவிலே நாய்களொடும் விளையாட் டென்னே ?
பாவனையிற் பித்தரைப்போ லிலைவ தென்னே ?
பரமசிவன் போலுருவம் படைத்த தென்னே ?
ஆவலற்று நின்றதென்னே ? அறிந்த தெல்லாம்,
ஆரியனே, எனக்குணர்த்த வேண்டு" மென்றேன். 25

பற்றியகை திருகியந்தக் குள்ளச் சாமி
பரிந்தோடப் பார்த்தான்; யான் விடவே யில்லை.
சுற்றுமுற்றும் பார்த்துப்பின் முறுவல் பூத்தான் ;
தூயதிருக் கமலபதத் துணையைப் பார்த்தேன் !
குற்றமற்ற தேசிகனுந் திமிறிக் கொண்டு
குதித்தோடி யவ்வீட்டுக் கொல்லை சேர்ந்தான் ;
மற்றவன்பின் யானோடி விரைந்து சென்று
வானவனைக் கொல்லையிலே மறித்துக் கொண்டேன். 26

உபதேசம்

பக்கத்து வீடிடிந்து சுவர்கள் வீழ்ந்த
பாழ்மனையொன் றிருந்த தங்கே ; பரமயோகி
ஒக்கத்தன் னருள்விழியா லென்னை நோக்கி
ஒருகுட்டிச் சுவர்காட்டிப் பரிதி காட்டி
அக்கணமே கிணற்றுளதன் விம்பங் காட்டி
"அறிதிகொலோ ?" எனக் கேட்டான் "அறிந்தேன்" என்றேன்.
மிக்கமகிழ் கொண்டவனுஞ் சென்றான் ; யானும்
வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன். 27

தேசிகன்கை காட்டியெனக் குரைத்த செய்தி
செந்தமிழி லுலகத்தார்க் குணர்த்து கின்றேன் :
"வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி,
மண்போலே சுவர்போலே, வாழ்தல் வேண்டும் ;
தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே
தெரிவதுபோ லுனக்குள்ளே சிவனைக் காண்பாய் ;
பேசுவதிற் பயனில்லை, அனுப வத்தாற்
பேரின்ப மெய்துவதே ஞான" மென்றான். 28

கையிலொரு நூலிருந்தால் விரிக்கச் சொல்வேன்,
கருத்தையதிற் காட்டுவேன் ; வானைக் காட்டி,
மையிலகு விழியாளின் காத லொன்றே
வையகத்தில் வாழுநெறி யென்று காட்டி,
ஐயனெனக் குணர்த்தியன பலவா ஞானம்,
அதற்கவன்காட் டியகுறிப்போ அநந்த மாகும்,
பொய்யறியா ஞானகுரு சிதம்ப ரேசன்
பூமிவிநா யகன்குள்ளச் சாமி யங்கே. 29

மற்றொருநாட் பழங்சந்தை யழுக்கு மூட்டை
வளமுறவே கட்டியவன் முதுகின் மீது
கற்றவர்கள் பணிந்தேத்துங் கமல பாதக்
கருணைமுனி சுமந்துகொண்டென் னெதிரே வந்தான் ;

சற்றுநகை புரிந்தவன்பாற் கேட்க லானேன் :
"தம்பிரா னேயிந்தத் தகைமை யென்னே ?
மூற்றுமிது பித்தருடைச் செய்கை யன்றே ?
மூட்டைசுமந் திடுவதென்னே ? மொழிவாய் "
என்றேன். 30

புன்னகைபூத் தாரியனும் புகலு கின்றான் :
"புறத்தேநான் சுமக்கின்றேன் ; அகத்தி னுள்ளே,
இன்னதொரு பழங்குப்பை சுமக்கி றாய்நீ "
என்றுரைத்து விரைந்தவனு மேகி விட்டான்.
மன்னவன்சொற் பொருளினையான் கண்டுகொண்டேன் ;
மனத்தினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்ப தாலே
இன்னலுற்று மாந்தரெலா மடிவார் வீணே,
இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும். 31

சென்றதினி மீளாது ; மூடரே நீர்
எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்குங் கவலையெனுங் குழியில் வீழ்ந்து
குமையாதீர் ; சென்றதனைக் குறித்தல் வேண்டா ;
இன்றுபுதி தாப்பிறந்தோ மென்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர் ;
அஃதின்றிச் சென்றதையே மீட்டு மீட்டும் 32

மேன்மேலு நினைந்தழுதல் வேண்டா, அந்தோ !
மேதையில்லா மானுடரே, மேலு மேலும்
மேன்மேலும் புதியகாற் றெம்முள் வந்து
மேன்மேலும் புதியவுயிர் விளைத்தல் கண்டீர்,
ஆன்மாவென் றேகருமத் தொடர்பை யெண்ணி
அறிவுமயக் கங்கொண்டு கெடுகின் றீரே !
மான்மானும் விழியுடையாள் சக்தி தேவி
வசப்பட்டுத் தன்மறந்து வாழ்தல் வேண்டும். 33

சென்றவினைப் பயன்களெனைத் தீண்ட மாட்டா ;
"ஸ்ரீதரன்யான் சிவகுமா ரன்யா னன்றே ?
நன்றிந்தக் கணம்புதிதாப் பிறந்து விட்டேன்,
நான்புதியன், நான்கடவுள், நலிவி லாதோன்"
என்றிந்த வுலகின்மிசை வானோர் போலே
இயன்றிடுவார் சித்தரென்பார் ; பரம தர்மக்
குன்றின்மிசை யொருபாய்ச்ச லாகப் பாய்ந்து,
குறிப்பற்றூர் கேடற்றூர் குலைத லற்றூர். 34

குறியனந்த முடையோராய்க் கோடி செய்தும்
குவலயத்தில் வினைக்கடிமைப் படாதா ராகி
வெறியுடையோன் உமையாளை யிடத்தி லேற்றோன்
வேதகுரு பரமசிவன் வித்தைபெற்றுச்
செறிவுடைய பழவினையா மிருளைச் செற்றுத்
தீயினைப்போல் மண்மீது திரிவார் மேலோர்,
அறிவுடைய சீடா, நீ குறிப்பை நீக்கி
அநந்தமாந் தொழில்செய்தா லமர ஞவாய். 35

கேளப்பா, மேற்சொன்ன உண்மை யெல்லாம்
கேடற்ற மதியுடையான் குள்ளச் சாமி
நாளும்பல் காட்டாலும் குறிப்பி னாலும்
நலமுடைய மொழியாலும் விளக்கித் தந்தான் ;
தோளைப்பார்த் துக்களித்தல் போலே யன்னன்
தூணையடிகள் பார்த்துமனங் களிப்பேன் யானே.
வாளைப்பார்த் தின்பமுறு மன்னர் போற்று
மலர்த்தாளான் மாங்கொட்டைச் சாமி வாழ்க ! 36

கோவிந்த ஸ்வாமி புகழ்

மாங்கொட்டைச் சாமிபுகழ் சிறிது சொன்னேம் ;
வண்மைதிகழ் கோவிந்த ஞானி, பார்மேல்
யாங்கற்ற கல்வியெலாம் பலிக்கச் செய்தான்,
எம்பெருமான் பெருமையையிங் கிசைக்கக் கேளீர் !
தீங்கற்ற குணமுடையான், புதுவை யூரார்
செய்தபெருந் தவத்தாலே யுதித்த தேவன்,
பாங்குற்ற மாங்கொட்டைச் சாமி போலே
பயிலுமதி வர்ணாசி ரமத்தே நிற்போன். 37

அன்பினுல் முக்தியென்ருன் புத்த னந்நாள் ;
அதனேயிந்நாட் கோவிந்த ஸாமி செய்தான் ;
துன்பமுறு முயிர்க்கெல்லாந் தாயைப் போலே
சுரக்குமரு ளுடையபிரான் துணிந்த யோகி ;
அன்பினுக்குக் கடலேயுந்தான் விழுங்க வல்லான்,
அன்பினேயே தெய்வமென்பா னன்பே யாவான் ;
மன்பதைகள் யாவுமிங்கே தெய்வ மென்ற
மதியுடையான், கவலேயெனு மயக்கந் தீர்ந்தான் ; 38

பொன்னடியா லெண்மனேயைப் புனித மாக்கப்
போந்தானிம் முனியொருநாள் ; இறந்த வெந்தை
தன்னுருவங் காட்டினுன் ; பின்ன ரென்னேத்
தரணிமிசைப் பெற்றவளின் வடிவ முற்ருன் :
அன்னவன்மா யோகியென்றும் பரம ஞானத்
தனுபூதி யுடையனென்று மறிந்து கொண்டேன் ;
மன்னவனேக் குருவெனநான் சரண டைந்தேன் ;
மரணபய நீங்கினேன் ; வலிமை பெற்றேன். 39

யாழ்ப்பாணத்து சுவாமியின் புகழ்

கோவிந்த ஸாமிபுகழ் சிறிது சொன்னேன் ;
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பா ணத்தான்,
தேவிபத மறவாத தீர ஞானி,
சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்,
பாவியரைக் கரையேற்று ஞானத் தோணி
பரமபத வாயிலெனும் பார்வை யாளன் ;
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயுங்
கழனிகள் சூழ் புதுவையிலே யவனேக் கண்டேன். 40

தங்கத்தாற் பதுமைசெய்து மிரத லிங்களுஞ்
சமைத்துமவற் றினிலீசன் தாளேப் போற்றுந்
துங்கமுறு பக்தர்பலர் புவிமீ துள்ளார் ;
தோழரே, யெந்நாளு மெனக்குப் பார்மேல்
மங்களஞ்சேர் திருவிழியா லருளேப் பெய்யும்
வானவர்கோன், யாழ்ப்பாணத் தீசன் றன்னேச்
சங்கரனென் றெப்போது முன்னே கொண்டு
சரணடைந்தா லதுகண்டீர் சர்வ சித்தி. 41

குவளைக் கண்ணன் புகழ்

யாழ்ப்பாணத் தையனென் னிடங் கொணர்ந்தான்,
இணையடியை நந்திபிரான் முதுகில் வைத்துக்
காழ்ப்பான கயிலைமிசை வாழ்வான், பார்மேற்
கனத்தபுகழ்க் குவளையூர்க் கண்ண னென்பான் ;
பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன் ;
பறையரையும் மறவரையு நிகராக் கொண்டான் ;
தீர்ப்பான சுருதிவழி தன்னிற் சேர்ந்தான்.
சிவனடியார் இவன்மீது கருணைகொண்டார். 42

மஹத்தான முனிவரெலாங் கண்ணன் தோழர் ;
வானவ ரெல்லாங்கண்ண னடியா ராவார் ;
மிகத்தானு முயர்ந்ததுணி வுடைய நெஞ்சின்
வீரர்பிரான் குவளையூர்க் கண்ண னென்பான்.
ஜகத்தினிலோ ருவமையிலா யாழ்ப்பா ணத்து
ஸாமிதனை யிவனென்றன் மனைக்கொ ணர்ந்தான்.
அகத்தினிலே யவன்பாத மலரைப் பூண்டேன் ;
''அன்றையப்போதே வீடதுவே வீடு.'' 43

பாங்கான குருக்களைநாம் போற்றிக்கொண்டோம் ;
பாரினிலே பயந்தெளிந்தோம் ; பாச மற்றோம் ;
நீங்காத சிவசக்தி யருளைப் பெற்றோம் :
நிலத்தின்மிசை யமரநிலை யுற்றோ மப்பா.
தாங்காமல் வையகத்தை யழிக்கும் வேந்தர்,
தாரணியிற் பலருள்ளார், தருக்கி வீழ்வார் ;
ஏங்காம லஞ்சாம லிடர்செய் யாமல்
என்றுமருள் ஞானியரே யெமக்கு வேந்தர். 44

பெண் விடுதலை

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன் ; அதற்குரிய பெற்றி கேளீர் !
மண்ணுக்குள் ளெவ்வுயிருந் தெய்வ மென்றால்,
மனையாளுந் தெய்வமன்றோ ? மதிகெட் டீரே!

விண்ணுக்குப் பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்,
விடுதலேயென் பீர்கருணே வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலேநீ ரில்லே யென்றல்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை யில்லே. 45

தாய் மாண்பு

பெண்டாட்டி தனேயடிமைப் படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?
கண்டார்க்கு நகைப்பென்னு முலக வாழ்க்கை
காதலெனுங் கதையினுடைக் குழப்ப மன்றே?
உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்!
பண்டாய்ச்சி ஔவை:—"அன் னேயும் பிதாவும்"
பாரிடை "முன் னறிதெய்வ" மென்று ளன்றே? 46

தாய்க்குமே லிங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய்பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும்பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றே?
மனேவி யொருத் தியையடிமைப் படுத்தவேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?
தாயைப்போ லேபிள்ளே யென்று முன்னோர்
வாக்குளதன் றே? பெண்மை யடிமை யுற்றல்
மக்களெலா மடிமையுறல் வியப்பொன் றுமோ? 47

வீட்டிலுள்ள பழக்கமே நாட்டி லுண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறரா மென்பான்;
நாட்டினிலே
நாடோறு முயன்றிடுவா னலிந்து சாவான்;
காட்டிலுள்ள பறவைகள்போல் வாழ்வோ மப்பா;
காதலிங்கே யுண்டாயிற் கவலே யில்லே;
பாட்டினிலே காதலேநான் பாட வேண்டிப்
பரமசிவன் பாதமலர் பணிகின் றேனே. 48

காதலின் புகழ்

காதலினல் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும் ;
காதலினல் மானுடர்க்குக் கவிதை யுண்டாம் ;
கான முண்டாம் ; சிற்பமுதற் கலைக ளுண்டாம் ;
ஆதலினற் காதல் செய்வீர், உலகத் தீரே !
அஃதன்றே இவ்வுலகத் தலைமை யின்பம் ;
காதலினற் சாகாம லிருத்தல் கூடும் ;
கவலைபோம், அதனலே மரணம் பொய்யாம். 49

ஆதிசக்தி தனையுடம்பில் அரனுங் கோத்தான் ;
அயன்வாணி தனைநாவில் அமர்த்திக் கொண்டான் !
சோதிமணி முகத்தினிலே செல்வ மெல்லாஞ்
சுரந்தருளும் விழியாலே திருவை மார்பில்
மாதவனு மேந்தினன் ; வானோர்க் கேனும்
மாதரின்பம் போற்பிறிதோ ரின்ப முண்டோ ?
காதல்செயு மனைவியே சக்தி, கண்டீர்.
கடவுணிலை அவளாலே யெய்த வேண்டும். 50

கொங்கைகளே சிவலிங்க மென்று கூறிக்
கோக்கவிஞன் காளிதா ஸனும்பூ ஜித்தான் ;
மங்கைதனைக் காட்டினிலு முடன்கொண் டேகி
மற்றவட்கா மதிமயங்கிப் பொன்மான் பின்னே
சிங்கநிகர் வீரர்பிரான் தெளிவின் மிச்ச
ஸ்ரீதரனுஞ் சென்றுபல துன்ப முற்றான் ;
இங்குபுவி மிசைக்காவி யங்க ளெல்லாம்
இலக்கியமெல் லாங்காதற் புகழ்ச்சி யன்றே ? 51

நாடகத்திற் காவியத்திற் காத லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்று மென்பர் ;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றே ரத்தே
ஊரினிலே காதலென்றல் உறுமு கின்றார் ;
பாடைகட்டி யதைக்கொல்ல வழிசெய் கின்றார் ;
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொருமையினல் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின் றாரே. 52

காதலிலே யின்பமெய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போ ரெண்ணு வாரோ ?
மாதருடன் மனமொன்றி மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த்தொழிலே மனங்கொள் வாரோ?
பாதிநடுக் கல்வியிலே காதல் பேசிப்
பகலெல்லா மிரவெல்லாங் குருவிபோலே
காதலிலே மாதருடன் களித்து வாழ்ந்தால்
படைத்தலைவர் போர்த்தொழிலைக் கருது வாரோ? 53

விடுதலைக் காதல்

காதலிலே விடுதலையென் றுங்கோர் கொள்கை
கடுகிவளர்ந் திடுமென்பார் யூரோப் பாவில் ;
மாதரெலாந் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலா மென்பார் அன்னோர்;
பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே
பிரியம்வந்தாற் கலந்தன்பு பிரிந்து விட்டால்
வேதனையொன் றில்லாதே பிரிந்து சென்று
வேறொருவன் றனைக்கூட வேண்டு மென்பார். 54

வீரமிலா மனிதர்சொலும் வார்த்தை கண்டீர் !
விடுதலையாங் காதலெனிற் பொய்மைக் காதல் !
சோரரைப்போ லாண்மக்கள் புவியின்மீது
சுவைமிக்க பெண்மைநல முண்ணு கின்றார்.
காரணந்தான் யாதெனிலோ ; ஆண்க ளெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார் ; கற்பே மேலென்
றீரமின்றி யெப்போது முபதே சங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிட மியம்பு வாரே ! 55

ஆணெல்லாங் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்தி டாதோ ?
நாணற்ற வார்த்தையன்றே ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தா னெரிந்தி டாதோ ?
பேணுமொரு காதலினே வேண்டி யன்றே
பெண்மக்கள் கற்புநிலை பிறழு கின்றார் ?
காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்துக்
கற்புக்கற் பென்றுலகோர் கதைக்கின் றாரே ! 56

ஸர்வ மத ஸம ரஸம்

கோவிந்த ஸ்வாமியுடன் ஸம்பாஷணை

மீளவுமங் கொருபகலில் வந்தா னென்றன்
மனையிடத்தே கோவிந்த வீர ஞானி,
ஆளவந்தான் பூமியினை, யவனி வேந்தர்
அனைவருக்கு மேலானோன், அன்பு வேந்தன்;
நாளைப்பார்த் தொளிர்தருநன் மலரைப் போலே
நம்பிரான் வரவுகண்டு மனம லர்ந்தேன்;
வேளையிலே நமதுதொழில் முடித்துக் கொள்வோம்;
வெயிலுள்ளபோதினிலே யுலர்த்திக் கொள்வோம்; 57

காற்றுள்ள போதேநாந் தூற்றிக் கொள்வோம்;
கனமான குருவையெதிர் கண்ட போதே
மாற்றுன அஹந்தையினைத் துடைத்துக் கொள்வோம்;
மலமான மறதியினை மடித்துக் கொள்வோம்;
கூற்றுன அரக்கருயிர் முடித்துக் கொள்வோம்;
சூலவான மாயைதனை யடித்துக் கொள்வோம்;
பேற்றுலே குருவந்தான்; இவன்பால் ஞானப்
பேற்றை யெல்லாம் பெறுவோம்யாம்" என்றெனுள்ளே
58

சிந்தித்து:—"மெய்ப்பொருளை யுணர்த்தா யையே!
தேய்வென்ற மரணத்தைத் தேய்க்கும் வண்ணம்
வந்தித்து நினைக்கேட்டேன் கூறுய்" என்றேன்.
வானவனுங் கோவிந்த ஸாமி சொல்வான்:—
"அந்தமிலா மாதேவன் சுயிலை வேந்தன்
அரவிந்த சரணங்கள் முடிமேற் கொள்வோம்;
பந்தமில்லை; பந்தமில்லை; பந்த மில்லை;
பயமில்லை; பயமில்லை; பயமே யில்லை. 59

"அதுவேநீ யென்பதுமுன் வேத வோத்தாம்;
அதுவென்று லெதுவெனநா னறையக் கேளாய்!
அதுவென்றுல் முன்னிற்கும் பொருளி னமம்;
அவனியிலே பொருளெல்லா மதுவாம்;—நீயும்

அதுவன்றிப் பிறிதில்லை ; ஆத லாலே,
அவனியின்மீ தெதுவரினு மசைவு றுமல்
மதுவுண்ட மலர்மாலை யிராமன் தாளை
மனத்தினிலே நிறுத்தியிங்கு வாழ்வாய், சீடா. 60

"பாரான உடம்பினிலே மயிர்களைப் போற்
பலப்பலவாம் பூண்டுவரு மியற்கை யாலே ;
நேராக மானுடர்தாம் பிறரைக் கொல்ல
நினையாமல் வாழ்ந்திட்டா லுழுதல் வேண்டா ;
காரான நிலத்தைப்போய்த் திருத்த வேண்டா ;
கால்வாய்கள் பாய்ச்சுவதிற் கலகம் வேண்டா ;
சீரான மழைபெய்யும் ; தெய்வ முண்டு,
சிவன்செத்தா லன்றிமண்மேற் செழுமை யுண்டு. 61

"ஆதலால் மானிடர்கள் களவை விட்டால்
அனைவருக்கு முழைப்பின்றி யுணவுண் டாகும் ;
பேதமிட்டுக் கலகமிட்டு வேலி கட்டிப்
பின்னதற்குக் காவலென்று பேரு மிட்டு
நீதமில்லாக் கள்வர்நெறி யாயிற் றப்பா !
நினைக்குங்கா லிதுகொடிய நிகழ்ச்சி யன்றே ?
பாதமலர் காட்டிநினை யன்னை காத்தாள்
பாரினிலித் தருமநீ பகரு வாயே. 62

"ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொ டுக்கும் ;
ஒருமொழியே மலமொழிக்கு மொழிக்கு மென்ற
ஒருமொழியைக் கருத்தினிலே நிறுத்தும் வண்ணம்
ஒருமொழி "ஓம் நமச்சி வாய" வென்பர் ;
"ஹரிஹரி" யென் றிடினு மஃதே ; "ராம ராம"
"சிவசிவ" ;வென் றிட்டாலு மஃதே யாகும் ;
தெரி வுறவே "ஓம் சக்தி" யென்று மேலோர்
ஜெபம்புரிவ தப்பொருளின் பெயரே யாகும். 63

"ஸாரமுள்ள பொருளினைநான் சொல்லி விட்டேன் ;
சஞ்சலங்க ளினிவேண்டா, சரதந் தெய்வம் ;
ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார் ;
எப்போது மருளைமனத் திசைத்துக் கொள்வாய் ;

வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணுர் ;
எப்போதும் வீரமிக்க வினைகள் செய்வாய் ;
பேருயர்ந்த ஏஹோவா அல்லா நாமம்
பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும். 64

பூமியிலே, கண்டமைந்து, மதங்கள் கோடி !
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்
சாமியென யேசுபதம் போற்று மார்க்கம்,
ஸநாதனமாம் ஹிந்துமதம், இஸ்லாம், யூதம்,
நாமமுயர் சீனத்துத் "தாவு" மார்க்கம்,
நல்ல"சுண் பூசி"மத முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல வுளவா மன்றே
யாவினுக்கு முட்புதைந்த கருத்திங் கொன்றே. 65

பூமியிலே வழங்கிவரு மதத்துக் கெல்லாம்
பொருளினைநா மிங்கெடுத்துப் புகலக் கேளாய் ;
சாமிநீ ; சாமிநீ ; கடவுள் நீயே ;
தத்வமஸி ; தத்வமஸி ; நீயே யஃதாம் ;
பூமியிலே நீகடவு ளில்லை யென்று
புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை ;
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கி
ஸதாகாலம் 'சிவோஹ'மென்று ஸாதிப் பாயே. 66

---

3. புதிய ஆத்திசூடி

—: o :—

காப்பு

பரம்பொருள் வாழ்த்து

ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே ; அதனியல் ஒளியுறு மறிவாம் ;
அதனிலே கண்டார் அல்லலே அகற்றினர் ;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

நூல்

1. அச்சந் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்த லிகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதிசெய்
6. ஊண்மிக விரும்பு
7. எண்ணுவ துயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்த லொழி
12. ஔடதந் குறை
13. கற்ற தொழுகு
14. கால மழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க் கஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்துநில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலுந் துணிந் துநில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை யெதிர்த்துநில்

23. கோல்கைக் கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சி கொள்
26. சாவதற் கஞ்சேல்
27. சிதையா நெஞ்சுகொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுக் கிளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்
32. சேர்க்கை அழியேல்
33. சைகையிற் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடந் தனையிகழ்
36. சௌரியந் தவறேல்
37. ஞமலிபோல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிரென இன்புறு
40. ஞெகிழ்வ தருளின்
41. ஞேயங் காத்தல்செய்
42. தன்மை யிழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்றுவாழ்
45. தீயோர்க் கஞ்சேல்
46. துன்ப மறந்திடு
47. தூற்றுத லொழி
48. தெய்வம் நீ யென்றுணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக் கஞ்சேல்
52. தோல்வியிற் கலங்கேல்
53. தவத்தினை நிதம் புரி
54. நன்று கருது
55. நாளெலாம் வினைசெய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்புசெய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கிடங்கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி யிழந்திடேல்
71. பெரிதினும் பெரிது கேள்
72. பேய்களுக் கஞ்சேல்

73. பொய்மை யிகழ்
74. போர்த்தொழில் பழகு
75. மந்திரம் வலிமை
76. மானம் போற்று
77. மிடிமையில் அழிந்திடேல்
78. மீளுமாறுணர்ந்து கொள்
79. முனையிலே முகத்துநில்
80. மூப்பினுக் கிடங்கொடேல்
81. மெல்லத் தெரிந்து சொல்
82. மேழி போற்று
83. மொய்ம்புறத் தவஞ் செய்
84. மோனம் போற்று
85. மௌட்டியந் தனைக் கொல்
86. யவனர்போல் முயற்சி கொள்
87. யாரையும் மதித்து வாழ்
88. யௌவனங் காத்தல் செய்
89. ரஸத்திலே தேர்ச்சி கொள்
90. ராஜஸம் பயில்
91. ரீதி தவறேல்
92. ருசிபல வென்றுணர்
93. ரூபஞ் செம்மைசெய்
94. ரேகையிற் கனிகொள்
95. ரோதனந் தவிர்
96. ரௌத்திரம் பழகு
97. லவம் பல வெள்ளமாம்
98. லாகவம் பயிற்சிசெய்
99. லீலை யிவ் வுலகு
100. (உ) லுத்தரை யிகழ்
101. (உ) லோக நூல் கற்றுணர்
102. லௌகிக மாற்று
103. வருவதை மகிழ்ந்துண்
104. வானநூற் பயிற்சி கொள்
105. விதையினைத் தெரிந்திடு
106. வீரியம் பெருக்கு
107. வெடிப்புறப் பேசு
108. வேதம் புதுமைசெய்
109. வையத் தலைமைகொள்
110. வௌவுதல் நீக்கு

---

4. முரசு

—: 0 :—

வெற்றி யெட்டுத் திக்கு மெட் டக்
கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று
கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ண னேடே
நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று
கொட்டு முரசே

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. வேத மறிந்தவன் பார்ப்பான்,—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்.
நீதிநி லைதவ றுமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

3. பண்டங்கள் விற்பவன் செட்டி,—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி.
தொண்டரென் றேர்வகுப் பில்லை,—தொழில்
சோம்பலைப் போலிழி வில்லை.

4. நாலு வகுப்புமிங் கொன்றே ;—இந்த
நான்கினி லொன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

5. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை ;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவ ளன்னை ;

6. ஏவல்கள் செய்பவர் மக்கள் ;—இவர்
யாவரு மோர்குல மன்றே ?
மேவி யனைவரு மொன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

7. சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

8. சாதிக் கொடுமைகள் வேண்டாம்,—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம் ;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம் ;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

9. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன் ;
மண்ணுக்குள் ளேசில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

10. கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்

11. தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர் ;
உய்வ தனைத்திலு மொன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.

12. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்—

13. யாரும் பணிந்திடும் தெய்வம்,—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வ மொன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

14. வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை;—அவை
பேருக் கொருநிற மாகும்;

15. சாம்பல் நிறமொரு குட்டி,—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி,—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி.

16. எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றே?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃ
தேற்றமென் றுஞ்சொல்ல லாமோ?

17. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்.

18. நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

19. அன்பென்று கொட்டு முரசே,—அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும்—வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்.

20. அன்பென்று கொட்டு முரசே,—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்.

21. உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

22. மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்;
சிரத்தை யுடையது தெய்வம்,—இங்கு
சேர்ந்த வுணவெல்லை யில்லை.

23. வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனிதரெல் லோருக்கும்;
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்!—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

24. உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
திடங்கொண் டவர்மெலிந் தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

25. வலிமை யுடையது தெய்வம்—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்;
மெலிவுகண் டாலுங் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?

26. தம்பிசற் றேமெலி வாஞல்—அண்ணன்
தானடி மைகொள்ள லாமோ ?
செம்புக்குங் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ ?

27. அன்பென்று கொட்டு முரசே,—அதில்
யார்க்கும் விடுதலே யுண்டு ;
பின்பு மனிதர்சு ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்.

28. அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனே பேருக்கு மொன்றுய் ;
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வமெல் லோரையும் வாழ்த்தும்.

29. பாருக்குள் ளேசமத் தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமைசெய் யாது—புவி
யெங்கும் விடுதலே செய்யும்.

30. வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம் ;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

31. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஒங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

———

5. பாப்பாப் பாட்டு

—: o :—

1. ஓடி விளையாடு பாப்பா,—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா,—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

3. கொத்தித் திரியுமந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்
கிரக்கப் படவேணும் பாப்பா.

4. பாலைப் பொழிந்துதரும், பாப்பா,—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா ;
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

5. வண்டி யிழுக்கும்நல்ல குதிரை,—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும்நம்மை ஆடு,—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

6. காலை யெழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

7. பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வ நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

8. பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

9. துன்பம் நெருங்கிவந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்ததெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

10. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா,—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங்குழந்தை நொண்டி,—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

11. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா,—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

12. சொல்வில் உயர்வுதமிழ்ச் சொல்லே,—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா ;
செல்வம் நிறைந்தஹிந்து ஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

13. வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா,
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

14. வேத முடையதிந்த நாடு,—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு,
சேதமில் லாதஹிந்து ஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

15. சாதிகள் இல்லையடி பாப்பா ;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

16. உயிர்க ளிடத்தில்அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் ;
வயிர முடையநெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா.

6. வாழ்த்துப் பாக்கள்

——: o :——

1. தாயுமானவர்

என்றும் இருக்க உளங்கொண்டாய்
இன்பத் தமிழுக் கிலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோ டிருப்பாய் நீ
ஒன்று பொருளஃ தின்பமென
உணர்ந்தாய் தாயு மானவனே
நின்ற பரத்து மாத்திரமோ
நில்லா இகத்தும் நிற்பாய்நீ !

——

2. நிவேதிதா தேவி

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறு யெமதுயர் நா
டாம்பயிர்க்கு மழையா யிங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும்பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

———

3. அபேதாநந்த ஸ்வாமிகள்

சுருதியு மரிய உபநிட தத்தின்
தொகுதியும் பழுதற வுணர்ந்தோன்
கருதிடற் கரிய பிரம நன்னிலையைக்
கண்டுபே ரொளியிடைக் களித்தோன்
அரிதினிற் காணு மியல்பொடு புவியி
னப்புறத் திருந்துநண் பகலிற்
பரிதியி னொளியும் சென்றிடா நாட்டில்*
மெய்யொளி பரப்பிடச் சென்றோன். 1

[குறிப்பு] : * அமெரிக்கா கண்டம் ; நமது கண்டத்தில் பகலா யிருக்கும்போது அங்கே இருளாக இருக்குந்தன்மை யுடையது.

வேறு

ஒன்றேமெய்ப் பொருளாகு முயிர்களெலா
மதன் வடிவா மோருங்காலே,
என்றேவ னுன்றேவ னென்றுலகர்
பகைப்பதெலா மிழிவா மென்று
நன்றேயிங் கறிவுறுத்தும் பரமகுரு
ஞானமெனும் பயிரை நச்சித்
தின்றேபா ழாக்கிடுமைம் புலன்களெனும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன். 2

வேறு

வானந் தம்புகழ் மேவி விளங்கிய
மாசிலாதி குரவனச் சங்கரன்
ஞானந் தங்குமிந் நாட்டினைப் பின்னரு
நண்ணினனெனத் தேசுறு மவ்விவே
கானந் தப்பெருஞ் சோதிமறைந்தபின்
அவனிழைத்த பெருந்தொழி லாற்றியே
ஊனந்தங்கிய மானிடர் தீதெலா
மொழிக்குமாறு பிறந்த பெருந்தவன். 3

வேறு

தூயஅபே தாநந்த னெனும்பெயர்கொண்
டொளிர்தருமிச் சுத்த ஞானி
நேயமுட லிந்நகரிற் றிருப்பாதஞ்
சாத்தியரு ணெஞ்சிற் கொண்டு
மாயமெலா நீங்கியினி தெம்மவர்நன்
னெறிசாரும் வண்ணம் ஞானம்
தோயநனி பொழிந்திடுமோர் முகில்போன்றுன்
இவன்பதங்கள் துதிக்கின் றேமே. 4

---

4. ஓவியர் மணி ஸ்ரீ இரவிவர்மா

சந்திர னெளியையீசன் சமைத்தது பருகுவென்றே
வந்திடு சாதகப்புள் வகுத்தனன் ; அமுதுண் டாக்கிப்
பந்தியிற் பருகுவென்றே படைத்தன னமரர்தம்மை ;
இந்திரன் மாண்புக்கென்ன இயற்றினன் வெளியயானை. 1

மலரினில் நீலவானில் மாதரார் முகத்தில்எல்லாம்
இலகிய அழகையீசன் இயற்றினன், சீர்த்தியிந்த
உலகினி லெங்கும்வீசி யோங்கிய இரவிவர்மன்
அலகிலா அறிவுக்கண்ணு லகினத்தையு நுகருமாறே. 2

மன்னர்மா ளிகையிலேழை மக்களின் குடிலிலெல்லாம்
உன்னருந் தேசுவீசி உளத்தினைக் களிக்கச்செய்வான்
நன்னரோ வியங்கள்தீட்டி நல்கிய பெருமான்இந்நாட்
பொன்னணி யுலகுசென்றுன் புவிப்புகழ் போதுமென்பான். 3

அரம்பையூர் வசிபோலுள்ள அமரமெல் லியலார்செவ்வி
திறம்பட வகுத்தவெம்மான் ! செய்தொழி லொப்புநோக்க
விரும்பியே கொல்லாமின்று விண்ணுல கடைந்துவிட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக் கழிதலங் கறிவை
திண்ணம். 4

காலவான் போக்கிலென்றுங் கழிகிலாப் பெருமைகொண்ட
கோலவான் றொழில்கள்செய்து குலவிய பெரியோர்தாமும்
சிலவாழ் வகற்றியோர்நாட் செத்திட லுறுதியாயின்,
ஞாலவாழ் வினதுமாயம் நளின்றிடற் கரியதன்றே? 5

---

5. ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் மறைவு குறித்துப் பாடிய இரங்கற் பாக்கள்*

அகவல்

கவிதையு மருஞ்சுவைக் கான நூலும்
புவியினர் வியக்கு மோவியப் பொற்பும்
மற்றுள பெருந்தொழில் வகைகளிற் பலவும்
வெற்றி கொண்டிலங்கிய மேன்மையார் பரத
நாட்டினி லிந்நாள் அந்நியர் நலிப்ப
சுட்டிய செல்வ மிறந்தமை யானும்

குறிப்பு : ஸ்ரீ சுப்பரரம தீக்ஷிதர் தென்னிந்தியாவின் பிரபல சங்கீத வித்வான் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரவர்களின் புதல்வரும் ஏட்டயபுரம் சமஸ்தானப் பாகவதரும் ஆவார். அவர் 25—11—1906 அன்று காலஞ் சென்றபோது பாடிய இரங்கற் பாக்களே மேலே உள்ளவை.

ஆண்டகை யொடுபுக ழழிந்தமை யானும்
மாண்டன பழம்பெரு மாட்சியார் தொழிலெலாம் ;
தேவர்கள் வாழ்ந்த சீர்வளர் பூமியில்
மேவிய குரக்கர் விளங்குதல் போல,
நேரிலாப் பெரியோர் நிலவிய நாட்டிற்
சீரிலாப் புல்லர் செறிந்துநிற் கின்றூர் :
இவரிடை,
சுரத்திடை யின்னீர்ச் சுனையது போன்றும்
அரக்கர்தங் குலத்திடை வீடண ஞகவும்
சேற்றிடைத் தாமரைச் செம்மலர் போன்றும்
போற்றுதற் குரிய புனிதவான் குலத்தில்
நாரத முனிவ னமர்மிசை யருளாற்
பாரத நாட்டிற் பழமாண் புறுகென
மீட்டுமோர் முறையிவன் மேவின னென்ன
நாட்டு நற்சீர்த்தி நலனுயர் பெருமான்
தோமறு சுப்ப ராமனற் பெயரோன்
நாமகள் புளகுற நம்மிடை வாழ்ந்தான்.
இன்ஞன் ருனு மெய்மையகன் றேகினன் ;
என்ஞே நம்மவ ரியற்றிய பாவம் ?
இனியிவ னஜனயரை யெந்நாட் காண்போம் ?
கனியறு மரமெனக் கடைநிலே யுற்றேரும்.
அந்தோ மறலிநம் மமுதினேக் கவர்ந்தான் !
நொந்தோ பயனிலே ; நுவலயா துளதே ?

விருத்தம்

1. கன்னஞெடு கொடைபோயிற் றுயர்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்
றுன்னரிய புகழ்ப்பார்த்த ஞெடுவீர
மகன்றதென வுரைப்ப ரான்ரூர் ;
என்னகநின் றகலாதோன் அருட்சுப்ப
ராமனெனு மிணேயி லாவிற்
பன்னஞெடு சுவைமிகுந்த பண்வளனு
மகன்றதெனப் பகர லாமே.

2. கலிவிளக்கே, யிளசை† யெனுஞ் சிற்றூரிற்
பெருஞ்சோதி கதிக்கத் தோன்று
மலிவிளக்கே, யெம்மனையர் மனவிருளை
மாற்றுதற்கு வந்த ஞான
நிலிவிளக்கே நினைப்பிரிந்த இசைத்தேவி
நெய்யகல நின்ற தட்டி
னுலிவிளக்கே யெனத்தளரு மந்தோ ! நீ
யகன்றதுய ருரைக்கற் பாற்றே ?

3. மன்னரையும் பொய்ஞ்ஞான மதக்குரவர்
தங்களையும் வணங்க லாதேன்
தன்னனைய புகழுடையாய், நினைக்கண்ட
பொழுதுதலை தாழ்ந்து வந்தேன் ;
உன்னருமைச் சொற்களையே தெய்விகமா
மெனக்கருதி வந்தேன் ! அந்தோ,
இன்னமொருக் காலிளசைக் கேகிடினிவ்
வெளியன்மன மென்ப டாதோ ?

---

6. மகாமகோபாத்தியாய வாழ்த்து*

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

செம்பரிதி யொளிபெற்றுன் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
றெவரேகொல் உவத்தல் செய்வார் ?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் சீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல், இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே ? I

[குறிப்பு] : † இளசை—எட்டயபுரம்.

* தமிழ்த்தாத்தா எனப்படும் டாக்டர் உ.வே.சா. அவர்கள் மகாமகோபாத்யாயப்பட்டம் பெற்ற போது பாடிப் படித்த செய்யுட்கள் இவை.

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மகாமகோ பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்,
முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ ? 2

'நிதியறியோம்' இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தந் துய்க்கும்
'கதியறியோம்' என்றுமனம் வருந்தற்க ;
குடந்தைநகர்க் கலிஞர் கோவே !
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே. 3

———

7. சிட்டுக்கவிகளும் ஓலத் தூக்கும்

1

ஸ்ரீ எட்டயபுரம் ராஜ ராஜேந்த்ர மகாராஜ
ஸ்ரீ வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்கள் ஈமுகத்துக்கு

கவிராஜ ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி எழுதும்
சீட்டுக் கவிகள்

பாரிவாழ்ந் திருந்த சீர்த்திப் பழந்தமிழ் நாட்டின் கண்ணே
ஆரிய, நீயிந் நாளி லரசுவீற் றிருக்கின் முயால் ;
காரியங் கருதிநின்னைக் கவிஞர்தாங் காண வேண்டின்
நேரிலப் போதே யெய்தி வழிபட நினைகி லாயோ ? 1

விண்ணள வுயர்ந்த கீர்த்தி வெங்கடேசு ரெட்ட மன்ஞ !
பண்ணள வுயர்ந்த தென்பண், பார்வள வுயர்ந்த தென்பா.
எண்ணள வுயர்ந்த வெண்ணி லிரும்புகழ்க் கவிஞர் வந்தால்
ண்ணலே பரிசு கோடி யளித்திட விரைகி லாயோ ? 2

கல்வியே தொழிலாக் கொண்டாய், கவிதையே தெய்வ மாக
அல்லுநன் பகலும் போற்றி யதைவழி பட்டு நின்றாய்!
சொல்லிலே நிகரி லாத புலவர்நின் சூழ லுற்றால்
எல்லினைக் காணப் பாயும் இடபம்போல் முற்ப டாயோ? 3

எட்டயபுரம்
1919ஆம் ஜூன் மேமீ 2உ } சுப்பிரமணிய பாரதி

2

ஸ்ரீ எட்டயபுரம் மகாராஜ ராஜேந்த்ர
ஸ்ரீ வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்கள் சமூகத்துக்கு

கவிராஜ ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி எழுதும்
ஓலைத் தூக்கு

ராஜமகா ராஜேந்த்ர ராஜகுல
சேகரன் ஸ்ரீராஜ ராஜன்
தேசமெலாம் புகழ்விளங்கு மிளசைவெங்க
டேசுரெட்ட சிங்கன் காண்க,
வாசமிகு துழாய்த்தாரன் கண்ணனடி
மறவாத மனத்தான், சக்தி
தாசனெனப் புகழுவளர் சுப்ரமண்ய
பாரதிதான் சமைத்த தூக்கு*. 1

மன்னவனே! தமிழ்நாட்டில் தமிழறிந்த
மன்னரிலே யென்று மாந்தர்
இன்னலுறப் புகன்றவசை நீமகுடம்
பூண்ந்தபொழு திருந்த தன்றே!
சொன்னலமும் பொருணலமும் சுவை கண்டு,
சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள் போல்
தமிழ்ச்சுவைநீ களித்தா யன்றே! 2

*'பாட்டு' என்ற பாடமு முண்டு.

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றுங்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னுற் கழிந்த தன்றே !
"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை, யெந்நாளு மழியாத
மகாகவிதை" யென்று நன்கு 3

பிரான்ஸென்னுஞ் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவி யென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றூர் ; பாரோ ரேத்துந்
தராதிபனே, யிளசைவெங்க டேசுரெட்டா !
நின்பாலத் தமிழ்கொ ணர்ந்தேன். 4

வேறு

வியப்பு மிகும் புத்திசையில் வியத்தகுமென்
கவிதையினை, வேந்தனே, நின்
நயப்படுசந் நிதிதனிலே நான்பாட
நீகேட்டு நன்கு போற்றி,
ஜயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள்,
பொற்பைகள், ஜதி,பல் லக்கு,
வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப்
பல்லூழி வாழ்க நீயே ! 5

எட்டயபுரம்
1919ஆம் ஞ மேமீ 2ஒ } சுப்பிரமணிய பாரதி

[குறிப்பு] : [ஸ்ரீ பாரதியார் புதுவையிலிருந்து வெளியேறிய பிறகு, எட்டயபுரத்தில் சிறிது காலம் வசித்து வந்தார். ஜீவனத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்

கொண்டிருந்த காலம். இருந்தாலும் ஜமீந்தாரை நேரில் கண்டு, அவரது ஆதரவைப் பெறுவதற்கு விரும்பவில்லை. ஏனெனில், ஏற்கெனவே இந்த சமஸ்தானச் சேவகத்தை உதறிவிட்டு வெளியேறி யவர். மேலும், கவர்ன்மெண்டாரால் பாரதிக்கு ஏற்பட்டிருந்த தடைகளெல்லாம் இப்பொழுது நீங்கப்பட்டிருந்த போதிலும், பாரதியாருக்கு உதவி செய்தால் தனக்கு ஏதேனும் பாதகமேற் படுமோவென்று ஜமீந்தார் பயங்கொண்டிருந்தார். ஆதலின், பாரதியார் தனக்கு இச்சமயம் சரியான ஆதரவும் மரியாதையும் கிடைக்காது என்று கருதி, வறுமையின் கொடுமையைப் பொறுத்துக்கொண் டிருந்தாரே யொழிய, ஜமீந்தாரின் உதவியை நாட வில்லை. ஆனல், இவர் படும் கஷ்டத்தைச் சகிக் காமல் இவரது நண்பர்களும் பந்துக்களும் இவரை மிகவும் நிர்ப்பந்திக்கவே, ஜமீந்தாருக்கு இவ்விரண்டு சீட்டுக் கவிகளையும் எழுதி யனுப்பினர்.

பன்னிரண்டு ரூபாய்க்குச் சேவகஞ் செய்துவந்த பழைய "சுப்பையா"வாகத் தன்னைக் கருதாமல் கவியரசனைப் புவியரசன் தக்கபடி ஆதரிக்கவேண்டு மென்பதை இந்தப் பாக்கள் நன்கு விளக்குகின்றன.

—பாரதி பிரசுராலயத்தினர் குறிப்பு.]

---

8. காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின்மீது வாழ்த்துப் பாக்கள்

மண்ணுலகின் மீதினிலே யெக்காலும்
அமரரைப்போல் மடிவில் லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலா மதற்குரிய
உபாயமிங்கு செப்பக் கேளீர் !
நண்ணியெலாப் பொருளினிலு முட்பொருளாய்ச்
செய்கையெலாம் நடத்தும் வீரூய்த்
திண்ணியநல் லறிவொளியாய்த் திகழுமொரு
பரம்பொருளே யகத்திற் சேர்த்து, 1

'செய்கையெலாம் அதன்செய்கை, நினைவெல்லாம்
அதனினைவு, தெய்வ மேநாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே யொளிர்வ'தென
உறுதி கொண்டு,
பொய்,கயமை, சினம்,சோம்பர், கவலை,மயல்,
வீண்விருப்பம், புழுக்கம், அச்சம்,
ஐயமெனும் பேயையெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி, 2

எப்போது மானந்தச் சுடர்நிலையில்
வாழ்ந்துயிர்கட் கினிது செய்வோர்
தப்பாதே யிவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவார்;
சதுர் வேதங்கள்
மெய்ப்பான சாத்திரங்கள் எனுமிவற்று
லிவ்வுண்மை விளங்கக் கூறும்
துப்பான மதத்தினையே ஹிந்துமத
மெனப்புவியோர் சொல்லு வாரே. 3

அருமையுறு பொருளிலெலா மிகவரிதாய்த்
தனைச்சாரும் அன்பர்க் கிங்கு
பெருமையுறு வாழ்வளிக்கு நற்றுணையாம்
ஹிந்துமதப் பெற்றி தன்னைக்
கருதியதன் சொற்படியிங் கொழுகாத
மக்களெலாங் கவலை யென்னும்
ஒருநரகக் குழியதனில் வீழ்ந்துதவித்
தழிகின்ரு ரோய்வி லாமே. 4

இத்தகைய துயர்நீக்கிக் கிருதயுகந்
தனையுலகி லிசைக்க வல்ல
புத்தமுதாம் ஹிந்துமதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும் வண்ணம்,
தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினிற்கா
ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர், ஊக்கம் மிக்கார், 5

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்,
அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்,
தொண்டொன்றே வழியாக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான
சங்கமொன்று சேர்த்திட் டாரே. 6

பல நூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர்
பிரசங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
லைபலவும் நாட்டி யுந்தங்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார், கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்தொளிர்க, நிலத்தின் மீதே ! 7

---

9. வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு

ஆசிரியப்பா

வருக செல்வ ! வாழ்கமன் நீயே !
வடமேற் றிசைக்கண் மாபெருந் தொலையினோர்
பொற்சிறு தீவகப் புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ ! நல்வர வுனதே !
மேதக நீயும்நின் காதலங் கிளியும்
என்றனைக் காணுமா றித்தனைக் காதம்
வந்தினிர் ! வாழ்கிர் ! என் மனம்மகிழ்ந் ததுவே
செல்வகேள் ! என்னரும் சேய்களோ நின்னுடை
முன்னோர் ஆட்சி தொடங்குறூஉம் முன்னர்
நெஞ்செலாம் புண்ணாய் நின்றனன் யாஅன்.
ஆயிர வருடம் அன்பிலா அந்நியர்
ஆட்சியின் விளைந்த அல்லல்கள் எண்ணில.
போனதை எண்ணிப் புலம்பியிங் கென்பயன் ?
மற்றுன் நாட்டினோர் வந்ததன் பின்னர்,

அகத்தினில் சிலபுண் ஆறுதல் எய்தின.
போர்த்தொகை அடங்கிஎன் ஏழைப் புத்திரர்
அமைதிபெற் றுய்வ ராயினர். எனவே,
பாரத தேவி பழமைபோல் திருவருள்
பொழிதர லுற்றனள். பொருள்செயற் குரிய
தொழிற்கணம் பலப்பல தோன்றின, பின்னும்
கொடுமதப் பாவிகள் குறும்பெலாம் அகன்றன.
யாற்றினிற் பெண்களோ எறிவதூஉம், இரதத்
துருளியிற் பாலரை உயிருடன் மாய்த்தலும்,
பெண்டிரைக் கணவர்தம் பிணத்துடன் எரித்தலும்,
எனப்பல தீமைகள் இறந்துபட் டனவால்.
மேற்றிசை இருளினை வெருட்டிய ஞான
ஒண்பெருங் கதிரின் ஓரிரு கிரணம்என்
பாலரின் மீது படுதலுற் றனவே.
ஆயினும் என்னை? ஆயிரங் கோடி
தொல்லைகள் இன்னும் தொலைந்தன வில்லை.
நல்குர வாதி நவமாம் தொல்லைகள்
ஆயிரம் எனைவந் தடைந்துள நுமரால்
எனினுமிங் கிவையெலாம் இறைவன் அருளால்
நீங்குவ வன்றி நிலைப்பன வல்ல.
நோயெலாந் தவிர்ப்பான் நுமரே எனக்கு
மருத்துவ ராக வந்தனர் என்பதூஉம்
பொய்யிலை. ஆதலிற் புகழ்பெறும் ஆங்கில
நாட்டின ரென்றும் நலமுற வாழ்கவே!
என்னருஞ் சேய்களும் இவரும்நட் பெய்தி
இருபான் மையர்க்கும் இன்னலொன் றின்றி
ஒருவரை யொருவர் ஒறுத்திட லிலாது,
செல்விதின் வாழ்க! அச் சீர்மிகு சாதியின்
இறைவனும் உந்தை இன்பொடு வாழ்க!
வாழ்க நீ! வாழ்கநின் மனமெனும் இனிய
வேரிமென் மலர்வாழ் மேரிநல் லன்னம்!
மற்றென் சேய்கள் வாழிய! வாழிய!

———

காவியங்கள்

கற்பனையும் கதையும்

1. குயில்
2. கண்ணன் பாட்டு
3. பாஞ்சாலி சபதம்

○

*'குயில் பாட்டு' 1912ஆம் ஆண்டில் பிரசுரமாயிற்று.

*'கண்ணன் பாட்டு' என்னும் நூலின் முதற் பதிப்பு 1917ஆம் ஆண்டில் வெளி யாயிற்று.

*'பாஞ்சாலி சபதம்' என்னும் நூலின் முதற்பாகம் 1912ஆம் வருடத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

○

காவியங்கள்

✶

கற்பனையும் கதையும்

✶

1. குயில்

—: 0 :—

காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவரு
வேகத் திரைகளினல் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின்
மேற்கே, சிறுதொலையில் மேவுமொரு மாஞ்சோலை ;
நாற்கோணத் துள்ளபல நத்தத்து வேடர்களும்
வந்து பறவைசுட வாய்ந்த பெருஞ்சோலை ;—
அந்த மாஞ்சோலை யதனிலோர் காலையிலே,
வேடர் வாராத விருந்துத் திருநாளில்,
பேடைக் குயிலொன்று பெட்புறவோர் வான்கிளையில்
வீற்றிருந்தே, ஆண்குயில்கள் மேனிபுளகமுற,
ஆற்ற லழிவுபெற, உள்ளத் தனல்பெருக,
சோலைப் பறவையெலாஞ் சூழ்ந்து பரவசமாய்க்
காலைக் கடனிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடை எங்குங் கலந்ததுபோல்,
மின்னற் சுவைதான் மெலிதாய் மிகவினிதாய்
வந்து பரவுதல்போல், வானத்து மோகினியாள்
இந்தவுரு வெய்தித்தன் ஏற்றம் விளக்குதல்போல்,
இன்னிசைத் தீம்பாட லிசைத்திருக்கும் விந்தைதனை—
முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்

பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவி னிகழ்ச்சியிலே—கண்டேன் யான்.
கன்னிக் குயிலன்று காவிடத்தே, பாடியதோர்
இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்,
"மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ?
இனிதிக் குயிற்பேட்டை யென்றும் பிரியாமல்,
காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ?
நாதக் கனவினிலே நம்முயிரைப் போக்கோமோ?"
என்று பலவெண்ணி யேக்கமுறப் பாடிற்றுல்.
அன்றுநான் கேட்ட தமரர்தாங் கேட்பாரோ?
குக்குக்கு வென்று குயில்பாடும் பாட்டினிலே
தொக்க பொருளெல்லாந் தோன்றியதென் சிந்தைக்கே;
அந்தப் பொருளை அவனிக் குரைத்திடுவேன்;
விந்தைக் குரலுக்கு, மேதினியீர், என்செய்கேன்!

குயிலின் பாட்டு*

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல். (காதல்)

1. அருளே யாநல் லொளியே;
ஒளிபோ மாயின், ஒளிபோ மாயின்,
இருளே, இருளே, இருளே. (காதல்)

2. இன்பம், இன்பம், இன்பம்;
இன்பத் திற்கோ ரெல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம். (காதல்)

3. நாதம், நாதம், நாதம்;
நாதத் தேயோர் நலிவுண் டாயின்,
சேதம், சேதம், சேதம். (காதல்)

---

*ராகம்—சங்கராபரணம், ஏகதாளம்.

ஸ்வரம்:

"ஸகா—ரிமா—காரீ
பாபாபாபா—மாமாமாமா
ரீகா—ரிகமா—மாமா"

[சந்த பேதங்களுக்குத் தக்கபடி மாற்றிக்கொள்க.]

4. தாளம், தாளம், தாளம் ;
தாளத் திற்கோர் தடையுண் டாயின்,
கூளம், கூளம், கூளம். (காதல்)

5. பண்ணே, பண்ணே, பண்ணே ;
பண்ணிற் கேயோர் பழுதுண் டாயின்,
மண்ணே, மண்ணே, மண்ணே. (காதல்)

6. புகழே, புகழே, புகழே ;
புகழுக் கேயோர் புரையுண் டாயின்,
இகழே, இகழே, இகழே. (காதல்)

7. உறுதி, உறுதி, உறுதி ;
உறுதிக் கேயோர் உடைவுண் டாயின்,
இறுதி, இறுதி, இறுதி. (காதல்)

8. கூடல், கூடல், கூடல் ;
கூடிப் பின்னே குமரன் போயில்,
வாடல், வாடல், வாடல். (காதல்)

9. குழலே, குழலே, குழலே;
குழலிற் கிறல் கூடுங் காலே,
விழலே, விழலே, விழலே. (காதல்)

குயிலின் காதற் கதை

மோகனப் பாட்டு முடிவுபெறப் பாடொங்கும்
ஏக மவுன மியன்றதுகாண் ; மற்றதிலோர்
இன்ப வெறியுந் துயரும் இணைந்தனவால்.
பின்புநான் பார்க்கப் பெடைக்குயிலஃ தொன்றல்லால்
மற்றப் பறவை மறைந்தெங்கோ போகவுமிவ்
வொற்றைக் குயில்சோக முற்றுத் தலைகுனிந்து
வாடுவது கண்டேன். மரத்தருகே போய்நின்று,
"பேடே, திரவியமே, பேரின்பப் பாட்டுடையாய்,
ஏழுலகு மின்பத்தீ யேற்றுந் திறனுடையாய்,
பீழையுனக் கெய்தியதென்? பேசாய்" எனக்கேட்டேன்.
மாயக் குயிலதுதான் மானுடவர் பேச்சினிலோர்
மாயச்சொல் கூற மனந்தீ யுறநின்றேன்.

"காதலே வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலே வேண்டித் தவிக்கின்றேன்" என்றதுவால்.
"வானத்துப் புள்ளெல்லா மையலுறப்பாடுகிறாய்,
ஞானத்திற் புட்களிலு நன்கு சிறந்துள்ளாய்,
காதலர்நீ யெய்துகிலாக் காரணந்தான் யா"தென்றேன்.
வேதனையு நாணு மிகுந்த குரலினிலே
கானக் குயிலிக் கதைசொல்ல லாயிற்று :—
"மானக் குலவும் வருத்தமுநான் பார்க்காமல்,
உண்மை முழுதும் உரைத்திடுவேன், மேற்குலத்தீர்!
பெண்மைக் கிரங்கிப் பிழைபொறுத்தல் கேட்கின்றேன்.
அறிவும் வடிவுங் குறுகி, அவனியிலே
சிறியதொரு புள்ளாய்ச் சிறியேன் பிறந்திடினும்,
தேவர் கருணையிலோ, தெய்வச் சினத்தாலோ,
யாவர் மொழியும் எளிதுணரும் பேறுபெற்றேன்;
மானுடவர் நெஞ்ச வழக்கெல்லாந் தேர்ந்திட்டேன்;
கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினுல்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்
கொற்றெடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்,
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்,
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றெழு
லிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.
நாவு மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்

பாவிமனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?
நெஞ்சத்தே தைக்க நெடுநோக்கு நோக்கிடுவீர்.
மஞ்சரே, என்றன் மனநிகழ்ச்சி காணீரோ?
காதலே வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலே வேண்டித் தவிக்கின்றேன்" என்றதுவே.
சின்னக் குயிலிதனைச் செப்பியவப் போழ்தினிலே,
என்னேப் புதிதோர் இன்பச் சுரங்கவர,
உள்ளத் திடையு முயிரிடையு மாங்கந்தப்
பிள்ளைக் குயிலினதோர் பேச்சன்றி வேறற்றேன்;
'காதலோ காதலினிக் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாத'லெனச் சாற்றுமொரு பல்லவியென்
உள்ளமாம் வீணைதனில், உள்ளவீ டத்தனையும்
விள்ள வொலிப்பதலால் வேறே ரொலியில்லை.
சித்த மயங்கித் திகைப்பொடுநா னின்றிடவும்,
அத்தருணத் தேபறவை யத்தனையுந் தாந்திரும்பிச்
சோலைக் கிளையிலெலாந் தோன்றி யொலித்தனவால்.
நீலக் குயிலு நெடிதுயிர்த்தாங் கிஃதுரைக்கும்:
"காதல் வழிதான் கரடுமுர டாமென்பர்.
சோதித் திருவிழியீர்! துன்பக் கடலினிலே
நல்லுறுதி கொண்டதோர் நாவாய்போல் வந்திட்டீர்;
அல்லலற நும்மோ டளவளாய் நான்பெறுமிவ்
வின்பத் தினுக்கும் இடையூறு மூண்டதுவே!
அன்பொடு நீரிங்கே அடுத்தநான் காநாளில்
வந்தருளல் வேண்டும். மறவாதீர், மேற்குலத்தீர்!
சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்! வாரீரேல்,
ஆவி தரியேன். அறிந்திடுவீர், நான்காநாள்.
பாவியிந்த நான்குநாள் பத்துயுக மாக்கழிப்பேன்;
சென்று வருவீர், என் சிந்தைகொடு போகின்றீர்,
சென்று வருவீர்" எனத் தேரூப் பெருந்துயரங்
கொண்டு சிறுகுயிலுங் கூறி மறைந்ததுகாண்.

காதலோ காதல்

கண்டதொரு காட்சி கனவுநன வென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபதுபேய் கொண்ட
வன்போல்

கண்ணு முகமுங் களியேறிக் காமனூர்
அம்பு நுனிக ளகத்தே யமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடிபல கோடியாய்
ஒன்றே யதுவாய் உலகுமெலாந் தோற்றமுற,
சென்றே மனோபோந்து சித்தந் தனதின்றி,
நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறிபடுமோ? யார்படுவார்?
நாளொன்று போயினது. நானு மெனதுயிரும்,
நீளச்சிலே கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்,
சாயைபோ லிந்திரமா சாலம்போல் வையமுமா
மிஞ்சிநின்றேரும் ஆங்கு, மறுநாள் விடிந்தவுடன்,
(வஞ்சனைநான் கூறவில்லை) மன்மதனூர் விந்தையால்,
புத்திமனஞ் சித்தம் புலனென் றறியாமல்,
வித்தைசெயுஞ் சூத்திரத்தின் மேவுமொரு பொம்மை
யென,
காலிரண்டுங் கொண்டு கடுகவுநான் சோலையிலே
நீலிதனைக் காணவந்தேன். நீண்ட வழியினிலே
நின்றபொருள் கண்ட நினைவில்லை. சோலையிடைச்
சென்றுநான் பார்க்கையிலே, செஞ்ஞாயிற்
றெண்கதிரால்
பச்சைமர மெலலாம் பளபளென, என்னுளத்தின்
இச்சை யுணர்ந்தவபோல் ஈண்டும் பறவையெலாம்
வேறெங்கோ போயிருப்ப, வெம்மைக் கொடுங்காதல்
மீறவெனைத் தான்புரிந்த விந்தைச் சிறுகுயிலைக்
காணநான் வேண்டிக் கரைகடந்த வேட்கையுடன்
கோணமெலாஞ் சுற்றிமரக் கொம்பையெலா நோக்கி
வந்தேன்.

குயிலும் குரங்கும்

மற்றைநாட் கண்ட மரத்தே குயிலில்லை.
சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்து வருகையிலே,—
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனும் பொய்த்
தேவே!

நெஞ்சகமே! தொல்விதியி னீதியே! பாழுலகே!—
கண்ணுலே நான்கண்ட காட்சிதனை யென்னுரைப்பேன்!
பெண்ணு லறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினே!
காதலினைப் போற்றுங் கவிஞரெலாங் கேண்மினே!
மாதரெலாங் கேண்மினே! வல்விதியே கேளாய்நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்குஞ் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்
டதுவாய்,
அம்மவோ! மற்றுங்கோ ராண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி யிரங்கு நிலைகண்டேன்.
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையுங் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளிற் கைசேர்த்தேன்.
கொன்றுவிடு முன்னே, குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்றுசற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்,
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே,
பேடைக் குயிலிதனைப் பேசியது :—
''வானரரே,
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே, பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே, நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே
எண்ணிநின்றீர் தம்மை; எனிலொருகால், ஊர்வகுத்தல்,
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்றசில
வாயிலிலே, அந்த மனித ருயர்வெனலாம்.
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்,
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே,
வானரர்தஞ் சாதிக்கு பாந்தர்நிக ராவாரோ?
ஆன வரையு மவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலே
எட்டுடையால் மூடி யெதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்

ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தா லும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர் போலாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை யிதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்;
வேகமுறத் தாவுகையில் வீசி யெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலப் போலாமோ?
சைவசுத்த போசனமும், சாதுரியப் பார்வைகளும்—
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின்
மீதுளதோ?
வானரர்தம் முள்ளே மணிபோ லுமையடைந்தேன்.
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்,
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினால்
தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்திகொண்டேன். தம்
மிடத்தே
ஆவலினாற் பாடுகின்றேன். ஆரியரே, கேட்டருள்வீர்."
(வானரப் பேச்சினிலே மைக்குயிலி பேசியதை
யானறிந்து கொண்டுவிட்டேன், யாதோ வொருதிறத்
தால்,)
நீசக் குயிலு நெருப்புச் சுவைக்குரலில்
ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே:—
காதல், காதல், காதல்;
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.
முதலியன (குயிலின் பாட்டு)

காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும்,
பாட்டின் சுவையதனைப் பாம்பறியு மென்றுரைப்பார்.
வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறிகொண் டாங்ஙனே,
தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்,
"ஆவி யுருகுதடீ, ஆஹாஹா!" என்பதுவும்,

கண்ணைச் சிமிட்டுவதும், காலாலுங் கையாலும்,
மண்ணைப் பிறாண்டியெங்கும் வாரி யிறைப்பதுவும்,
"ஆசைக் குயிலே, அரும்பொருளே, தெய்வதமே,
பேச முடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்.
காதலில்லை யானுற் கணத்திலே சாதலென்றாய்;
காதலினுற் சாகுங் கதியினிலே என்னைவைத்தாய்.
எப்பொழுது நின்னை இனிப்பிரிவ தாற்றகிலேன்,
இப்பொழுதே நின்னைமுத்த மிட்டுக் களியுறுவேன்"
என்று பலபேசுவது மென்னுயிரைப் புண்செயவே,
கொன்றுவிட வெண்ணிக் குரங்கின்மேல் வீசினேன்
கைவாளை யாங்கே ; கனவோ ? நனவுகொலோ ?
தெய்வ வலியோ ? சிறுகுரங்கென் வாளுக்குத்
தப்பி, முகஞ்சுளித்துத் தாவி யொளித்திடவும்,
ஒப்பிலா மாயத் தொருகுயிலுந் தான்மறைய,
சோலைப் பறவை தொகைதொகையாத் தாமொலிக்க,
மேலைச் செயலறியா வெள்ளறிவிற் பேதையேன்
தட்டித் தடுமாறிச் சார்பனைத்துந் தேடியுமே
குட்டிப் பிசாசக் குயிலையெங்கும் காணவில்லை.

இருளும் ஒளியும்

வான நடுவிலே மாட்சியுற ஞாயிறுதான்
மோனவொளி சூழ்ந்திடவு மொய்ம்பிற் கொலு
விருந்தான்.

மெய்யெல்லாஞ் சோர்வு விழியில் மயக்கமுற,
உய்யும் வழியுணரா துள்ளம் பதைபதைக்க,
நாணுந் துயரு நலிவுறுத்த, நான்மீண்டு
பேணுமனை வந்தேன் ; பிரக்கினைபோய் வீழ்ந்து
விட்டேன்.

மாலையிலே மூர்ச்சைநிலை மாறித் தெளிவடைந்தேன் ;
நாலு புறமுமெனை நண்பர்வந்து சூழ்ந்துநின்றார்.
"ஏனடா மூர்ச்சையுற்றாய் ? எங்கு சென்றாய், ஏது
செய்தாய் ?

வானம் வெளிறுமுன்னே வைகறையி லேதனித்துச்
சென்றனை யென்கின்றாரச் செய்தியென்னே ? ஊணின்றி

நின்றதென்னே ?'' என்று நெரித்துவிட்டார் கேள்விகளை.
இன்னுர்க் கிதுசொல்ல தென்று தெரியாமல்,
''என்னுற் பலவுரைத்த லிப்பொழுது கூடாதாம்.
நானிவரு வீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன்.இவ்
வேளை யெனைத்தனியே விட்டகல்வீர்'' என் றுரைத்தேன்.
நண்பரெல்லாஞ் சென்றுவிட்டார். நைந்துநின்ற
தாயார்தாம்
உண்பதற்குப் பண்ட முதவிநல்ல பால்கொணர்ந்தார்.
சற்றுவிடாய் தீர்ந்து தனியே படுத்திருந்தேன் ;
முற்று மறந்து முழுத்துயிலி லாழ்ந்துவிட்டேன்.
பண்டு நடந்ததனைப் பாடுகின்ற விப்பொழுதும்,
மண்டு துயரெனது மார்பையெலாங் சுவ்வுவதே.
ஓடித் தவறி யுடையனவாஞ் சொற்களெலாம் ;
கூடிமதியிற் குவிந்திடுமாஞ் செய்தியெலாம்.
நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்
பேசு மிடைப்பொருளின் பின்னே மதிபோக்கிக்
கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதைவளர்க்கும்
விற்பனர்தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்.
மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்.
காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்.
தங்க முருக்கித் தழல்குறைத்துத் தேனுக்கி
எங்கும் பரப்பியதோ ரிங்கிதமோ ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ ?
கண்ணையினி தென்றுரைப்பர் ; கண்ணுக்குக் கண்ணுகி
விண்ணை யளக்குமொளி மேம்படுமோ ரின்பமன்றே ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும்
மேலவரு மஃதோர் விரியுமொளி யென்பாரேல்,
நல்லொளிக்கு வேறுபொருள் ஞானமிசை யொப்
புளதோ ?
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி,
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சிதந்து,
விண்ணை வெளியாக்கி, விந்தைசெயுஞ் சோதியினைக்
காலைப்பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்.

நாலு புறத்துமுயிர் நாதங்க ளோங்கிடவும்,
இன்பக் களியி லியங்கும் புவிகண்டேன்.
துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ !

குயிலும் மாடும்

காலைத் துயிலெழுந்து, காலிரண்டு முன்போலே
சோலைக் கிழுத்திட,நான் சொந்தவுணர் வில்லாமே
சோலையினில் வந்துநின்று, சுற்றுமுற்றுந் தேடினேன்.
கோலப் பறவைகளின் கூட்டமெல்லாங் காணவில்லை.
மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே
நீலக் குயிலிருந்து நீண்டகதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கிழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,
கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன் ; நெஞ்சி
லனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன், மெய்
வெயர்த்தேன் ;
கொல்லவாள் வீசல் குறித்தேன்.'இப் பொய்ப்பறவை
சொல்லுமொழி கேட்டதன்பின் கொல்லுதலே
சூழ்ச்சி' யென
முன்போல் மறைந்துநின்றேன் ; மோகப் பழங்கதையைப்
பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளுங்
கொண்டு, குயிலாங்கே கூறுவதாம் :—
"நந்தியே,
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே,
காமனே மாடாகக் காட்சிதரு மூர்த்தியே,
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.
காளையர்த முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே !
நீள முகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோற் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சு புறச்சுமையும், வீரத் திருவாலும்
வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்,

ஈனப் பறவை முதுகின்மிசை யேறிவிட்டால்
வாலைக் குழைத்து வஞ்சத்தடிக்கு நேர்மையும்,பல்
கால்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
பார வடிவும் பயிலு முடல்வலியும்
தீர நடையும் சிறப்புமே யில்லாத
சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான்பிறந்தேன்.
அல்லும் பகலுநித மற்ப வயிற்றினுக்கே
காடெல்லாஞ் சுற்றிவந்து, காற்றிலே யெற்றுண்டு,
மூடமனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்
சின்னக் குயிலின் சிறுகுலத்திலே தோன்றி
என்னபயன் பெற்றேன்? எனைப்போலோர் பாவி
யுண்டோ?
சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன்வயிற்றிற்
போற்றுமொளி முத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?
நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே
சாதி பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை.
மூடமதியாலோ, முன்னைத் தவத்தாலோ,
ஆடவர்த முள்ளே அடியா ளுமைத்தெரிந்தேன்.
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை யூர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்:
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்;
வாலிலடி பட்டு மனமகிழ்வேன். 'மா' வென்றே
ஓலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்;
மேனியிலே யுண்ணிகளே மேவாது கொன்றிடுவேன்.
கானிடையே சுற்றிக் கழனியெலா மேய்ந்து,நீர்
மிக்கவுணவுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்,
பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்.
காளை யெருதீரே, காட்டிலுயர் வீரரே,
தாளைச் சரணடைந்தேன். தையலெனைக் காத்தருள்வீர்.

காதலுற்று வாடுகின்றேன். காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை யென்றறிவேன்.
ஆனலு மென்போ லபூர்வமாங் காதல்கொண்டால்,
தானு வுரைத்தலன்றிச் சாரும் வழியுளதோ ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்
இத்தரையில் மேலோர்முன் ஏழையர்க்கு நாண
முண்டோ ?
தேவர்முன்னே யன்புரைக்கச் சிந்தைவெட்கங்
கொள்வதுண்டோ ?
காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார் ?
ஆசைதான் வெட்க மறியுமோ ?'' என்றுபல
நேசவுரை கூறி, நெடிதுயிர்த்துப் பொய்க்குயிலி
பண்டுபோ லேதனது பாழடைந்த பொய்ப்பாட்டை
எண்டிசையு மின்பக் களியேறப் பாடியதே

காதல், காதல், காதல் ;
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.

முதலியன (குயிலின் பாட்டு)

பாட்டு முடியும்வரை பாரறியேன், விண்ணறியேன் ;
கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்ற காவறியேன் ;
தன்னை யறியேன், தனைப்போ லெருதறியேன் ;
பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரு மின்பமொன்றே
கண்டேன். படைப்புக் கடவுளே, நான்முகனே,
பண்டே யுலகு படைத்தனை நீ யென்கின்றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்,
நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்,
காற்றைமுன்னே யூதினாய், காணரிய வானவெளி
தோற்றுவித்தாய், நின்றன் தொழில்வலிமை
யாரறிவார் ?
உள்ளந்தான் கவ்வ வொருசிறிதுங் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள்போல் வானத்தி லண்டங்கள்
எட்ட நிரப்பியவை யெப்போதும் ஓட்டுகின்றாய் ;
எல்லா மறைவில் இருப்பதற்கே சக்திகளை,
பொல்லாப் பிரமா, புகுத்துவிட்டாய். அம்மாவோ !

காலம் படைத்தாய், கடப்பதிலாத் திக்கமைத்தாய் ;
ஞாலம் பலவினிலு நாடோறுந் தாம்பிறந்து
தோன்றி மறையுந் தொடர்பாப் பலவனந்தம் ;
சாலமிகப் பெரிய சாதனைகா ணிஃதெல்லாம் !
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார்யார் ?
ஆனலு நின்றன் அதிசயங்கள் யாவினுமே,
காணுமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா !
காட்டு நெடு வானங் கடலெல்லாம் விந்தையெனில்,
பாட்டினைப்போ லாச்சரியம் பாரின்மிசை யில்லையடா !
பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனில்,
நாதங்கள் சேரு நயத்தினுக்கு நேராமோ ?
ஆசைதருங் கோடி யதிசயங்கள் கண்டதிலே,
ஓசைதரு மின்பம் உவமையிலா வின்பமன்றே ?
செத்தைக் குயில்புரிந்த தெய்விகத்தீம் பாட்டெனுமோர்
வித்தை முடிந்தவுடன், மீட்டுமறி வெய்திநான்
கையில் வாளெடுத்துக் காலாயின்மேல் வீசினேன்.
மெய்யிற் படுமுன் விரைந்ததுதான் ஓடிவிட,
வன்னக் குயில் மறைய, மற்றைப் பறவையெலாம்
முன்னைப்போற் கொம்பு முனைகளிலே வந்தொலிக்க,
நாணமிலாக் காதல்கொண்ட நானுஞ் சிறுகுயிலை
வீணிலே தேடியபின், வீடுவந்து சேர்ந்துவிட்டேன்.
எண்ணியெண்ணிப் பார்த்தேன் எதுவும் விளங்கவில்லை ;
—கண்ணிலே நீர்ததும்பக் கானக் குயிலெனக்கே
காதற் கதையுரைத்து நெஞ்சங் கரைத்ததையும்,
பேதைநா னங்கு பெரியமயல் கொண்டதையும்,
இன்பக் கதையி னிடையே தடையாகப்
புன்பறவை யெல்லாம் புகுந்த வியப்பினையும்,
ஒன்றைப் பொருள்செய்யா வுள்ளத்தைக் காமவனல்
தின்றெனது சித்தந் திகைப்புறவே செய்ததையும்,
சொற்றைக் குரங்கும் தொழுமாடும் வந்தெனக்கு
முற்றும் வயிரிகளா மூண்ட கொடுமையையும்,
இத்தனை கோலத்தினுக்கும் யான்வேட்கை தீராமல்
பித்தம் பிடித்த பெரிய கொடுமையையும்—
எண்ணியெண்ணிப் பார்த்தேன், எதுவும் விளங்கவில்லை;
கண்ணிரண்டு மூடக் கடுந்துயிலி லாழ்ந்துவிட்டேன்.

நான்கா நாள்

நான்காநாள். என்னை நயவஞ்சனை புரிந்து
வான்காதல் காட்டி மயக்கிச் சதிசெய்த
பொய்ம்மைக் குயிலென்னைப் போந்திடவே கூறியநாள்.
மெய்ம்மை யறிவிழந்தேன். வீட்டிலே மாடமிசை
சித்தத் திகைப்புற்றோர் செய்கை யறியாமல்,
எத்துக் குயிலென்னை எய்துவித்த தாழ்ச்சியெலாம்
மீட்டு நினைந்தங்கு வீற்றிருக்கும் போழ்தினிலே,
காட்டுத் திசையினிலென் கண்ணிரண்டு நாடியவால்.
வானத்தே யாங்கோர் கரும்பறவை வந்திடவும்
யானதனைக் கண்டே, 'இதுநமது பொய்க்குயிலே?'
என்று திகைத்தேன்; இருந்தொலைக்கே நின்றதனால்
நன்று வடிவந் துலங்கவில்லை; நாடுமனம்
ஆங்கதனை விட்டுப் பிரிவதற்கு மாகவில்லை.
ஓங்குந் திகைப்பி லுயர்மாடம் விட்டுநான்
வீதியிலே வந்து நின்றேன். மேற்றிசையி லவ்வுருவம்
சோதிக் கடலிலே தோன்றுகரும் புள்ளி யெனக்
காணுதலும், சற்றே கடுகி யருகேபோய்,
'நாணமிலாப் பொய்க்குயிலோ' வென்பதனை நன்கறி
வோம்
என்ற கருத்துடனே யான்விரைந்து சென்றிடுங்கால்,
நின்ற பறவையுந்தான் நேராகப் போயினதால்.
யானின்முல் தானிற்கும், யான்சென்முல் தான் செல்லும்;
மேனிநன்கு தோன்ற அருகினிலே மேவாது ;
வானி லதுதான் வழிகாட்டிச் சென்றிடவும்,
யானிலத்தே சென்றேன். இறுதியிலே முன்புநாம்
கூறியுள்ள மாஞ்சோலை தன்னைக் குறுகியந்த
ஊறிலாப் புள்ளுமத னுள்ளே மறைந்ததுவால்.
மாஞ்சோலைக் குள்ளே மதியிலிநான் சென்முங்கே,
ஆஞ்சோதி வெள்ளம் அலையுமொரு கொம்பரின்மேல்
சின்னக் கருங்குயிலி செவ்வனே வீற்றிருந்து,
பொன்னங் குழலின் புதிய வொலிதனிலே
பண்டைப்பொய்க் காதற் பழம்பாட்டைத் தான்பாடிக்
கொண்டிருத்தல் கண்டேன், குமைந்தேன்; எதிரேபோய்

"நீசக் குயிலே, நிலையறியாப் பொய்ம்மையே,
ஆசைக் குரங்கினையும் அன்பா ரெருதினையும்
எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை
நண்ணியிங்கு கேட்க நடத்திவந்தாய் போலுமென்ன"
என்று சினம்பெருகி ஏதேதோ சொல்லுரைத்தேன்.
கொன்றுவிட நெஞ்சிற் குறித்தேன்; மறுபடியும்
நெஞ்ச மிளகி நிறுத்திவிட்டேன். ஈங்கிதற்குள்,
வஞ்சக் குயிலி மனத்தை யிரும்பாக்கிக்
கண்ணிலே பொய்ந்நீர் கடகடெனத் தானூற்றப்
பண்ணிசைபோ லின்குரலாற் பாவியது கூறிடுமால்:
"ஐயனே, என்னுயிரின் ஆசையே, ஏழையென்ன
வையமிசை வைக்கத் திருவுளமோ? மற்றென்னையே
கொன்றுவிடச் சித்தமோ? கூறீ ரொருமொழியில்!
அன்றிற் சிறுபறவை ஆண்பிரிய வாழாது.
ஞாயிறுதான் வெம்மைசெயில், நாண்மலர்க்கு வாழ்
வுளதோ?

தாயிருந்து கொன்றுல், சரண்மதலைக் கொன்றுளதோ?
தேவர் சினந்துவிட்டால், சிற்றுயிர்க ளென்னுகும்?
ஆவற் பொருளே, அரசே,என் னுரியரே,
சிந்தையினீ ரென்மேற் சினங்கொண்டால் மாய்ந்திடு
[வேன்;

வெந்தழலில் வீழ்வேன், விலங்குகளின் வாய்ப்படுவேன்.
குற்றநீ ரென்மேற் கொணர்ந்ததனை யானறிவேன்.
குற்றநுமைக் கூறுகிலேன், குற்றமிலேன் யானம்ம!
புன்மைக் குரங்கைப் பொதிமாட்டை நான்கண்டு
மென்மையுறக் காதல் விளையாடி னேனென்றீர்;
என் சொல்கேன்! எங்ஙனுய்வேன்! ஏதுசெய்கேன்!
ஐயனே,

நின்சொல் மறுக்க நெறியில்லை; ஆயிடிலும்
என்மேற் பிழையில்லை; யாரிதனை நம்பிடுவார்?—
நின்மேற் சுமைமுழுது நேராகப் போட்டுவிட்டேன்,
வெவ்விதியே! நீயென்னை மேம்பாடுறச் செய்து
செவ்விதினிங் கென்னையென்றன் வேந்தனெடு சேர்த்
திடினும்,
அல்லாதென் வார்த்தை யவர்சிறிது நம்பாமே

புல்லாக வெண்ணிப் புறக்கணித்துப் போய்விட,நான்
அக்கணத்தே தீயில் அழிந்துவிழ நேரிடினும்,
எக்கதிக்கும் ஆளாவேன்; என்செய்கேன்? வெவ்விதியே!

குயில் தனது பூர்வ ஜன்மக் கதை யுரைத்தல்

''தேவனே! என்னருமைச் செல்வமே! என்னுயிரே!
போவதன்முன் ஞென்று புகல்வதனைக் கேட்டருள்வீர்!
முன்ன மொருநாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானுந் தனியேயோர் சோலைதனில்
மாங்கனியி லேதோ மனதிலெண்ணி வீற்றிருந்தேன்.
ஆங்குவந்தா ரோர்முனிவர். ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன் ; ஐயரெனை
ஆதரித்து வாழ்த்தி யருளினர். மற்றதன்பின்,
'வேதமுனிவரே, மேதினியிற் கீழ்ப்பறவைச்
சாதியிலே நான் பிறந்தேன். சாதிக்குயில்களைப்போல்
இல்லாமல், என்றன் இயற்கை பிரிவாகி,
எல்லார் மொழியும் எனக்கு விளங்குவதேன்?
மானுடர்போற் சித்தநிலை வாய்ந்திருக்குஞ் செய்தியேன்?
யானுணரச் சொல்வீர்' எனவணங்கிக் கேட்கையிலே,
கூறுகின்றார் ஐயர் :
'குயிலே,கேள். முற்பிறப்பில்
வீறுடைய வெந்தொழிலார் வேடர் குலத்தலைவன்
வீர முருகனெனும் வேடன் மகளாகச்
சேர வளநாட்டில் தென்புறத்தே யோர்மலையில்
வந்து பிறந்து வளர்ந்தாய் நீ. நல்லிளமை
முந்து மழகினிலே மூன்று தமிழ்நாட்டில்
யாரு நினக்கோர் இணையில்லை யென்றிடவே
சீருயர நின்றாய்; செழுங்கான வேடரிலுன்
மாமன் மகனெருவன், மாடனெனும் பேர்கொண்டான்,
காமன் கணைக்கிரையாய், நின்னழகைக் கண்டுருகி,
நின்னை மணக்க நெடுநாள் விரும்பி,யவன்
பொன்னை மலரைப் புதுத்தேனைக் கொண்டுனக்கு
நித்தங் கொடுத்து, நினைவெல்லா நீயாகச்
சித்தம் வருந்துகையில், தேமொழியே, நீயவனை

மாலையிட வாக்களித்தாய் ; மையலினாலில்லை; அவன்
சால வருந்தல் சகிக்காமற் சொல்லிவிட்டாய்;
ஆயிடையே, நின்றன் அழகின் பெருங்கீர்த்தி
தேயமெங்குந் தான்பரவத் தேன்மலையின் சார்பினிலோர்
வேடர்கோன், செல்வமுநல் வீரமுமே தானுடையான்,
நாடனைத்து மஞ்சி நடுங்குஞ் செயலுடையான்,
மொட்டைப் புலியனுந்தன் மூத்த மகனை
நெட்டைக் குரங்கனுக்கு நேரான பெண்வேண்டி,
நின்னை மணம்புரிய நிச்சயித்து, நின்னப்பன்
தன்னை யணுகி,"நின்னோர் தையலையென் பிள்ளைக்குக்
கண்ணலஞ் செய்யுங் கருத்துடையேன்" என்றிடலும்,
எண்ணற் பெருமகிழ்ச்சி எய்தியே, நின்தந்தை
ஆங்கே யுடம்பட்டான்; ஆறிரண்டு நாட்களிலே
பாங்கா மணம்புரியத் தாமுறுதி பண்ணிவிட்டார்.
பன்னிரண்டு நாட்களிலே பாவையுனைத் தேன்மலையில்
அன்னியன்கொண் டேகிடுவான் என்னும் அதுகேட்டு,
மாடன் மனம்புகைந்து மற்றைநாள் உன்னைவந்து
நாடிச் சினத்துடனே நாலு மொழிகூற,
நீயு மவனிடத்தே நீண்ட கருணையினால,
"காயுஞ் சினந்தவிர்ப்பாய், மாடா, கடுமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக நேர்ந்தாலும்
கட்டுப் படிஅவர்தங் காவலிற்போய் வாழ்ந்தாலும்,
மாதமொரு மூன்றில் மருமஞ் சிலசெய்து
பேதம் விளைவித்துப் பின்னிங்கே வந்திடுவேன் ;
தாலிதனை மீட்டுமவர் தங்களிட மேகொடுத்து
நாலிரண்டு மாதத்தே நாயகனை நின்றனையே
பெற்றிடுவேன்; நின்னிடத்தே பேச்சுத் தவறுவனோ?
மற்றிதனை நம்பிடுவாய், மாடப்பா" என்றுரைத்தாய்;
காதலினாலில்லை, கருணையினாலுரைத்தாய்.
(மாதரசாய், வேடன் மகளான முற்பிறப்பில்,
சின்னக் குயிலியென்று செப்பிடுவார் நின்னமம்.)
பின்னர்ச் சிலதினங்கள் சென்றதன்பின், பெண்குயிலி,
நின்னைத்த தோழியரு நீயுமொரு மாலையிலே
மின்னற் கொடிகள் விளையாடுதல் போலே
காட்டி னிடையே களித்தாடி நிற்கையிலே,

வேட்டைக் கெனவந்தான் வெல்வேந்தன் சேரமான்
தன்னருமை மைந்தன். தனியே, துணைபிரிந்து,
மன்னவன்றன் மைந்தனெரு மானைத் தொடர்ந்துவரத்
தோழியரு நீயுந் தொகுத்துநின்றே யாடுவதை
வாழியவன் கண்டுவிட்டான். மையல் கரைகடந்து
நின்னைத் தனதாக்க நிச்சயித்தான். மாதுநீ
மன்னவனைக் கண்டவுடன் மாமோகங் கொண்டு
விட்டாய்.

நின்னையவன் நோக்கினன் ; நீயவனை நோக்கிநின்றாய் ;
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டீர்.
தோழியரும் வேந்தன் சுடர்க்கோலந் தான்கண்டே
ஆழி யரச னரும்புதல்வன் போலுமென்றே
அஞ்சி மறைந்து விட்டார். ஆங்கவனு நின்னிடத்தே,
"வஞ்சித் தலிவன் மகன்யான்" எனவுரைத்து,
"வேடர் தவமகளே, விந்தை யழகுடையாய்,
ஆடவனைத் தோன்றி யதன்பயனை யின்றுபெற்றேன் ;
கண்டதுமே நின்மிசைநான் காதல்கொண்டேன்"
என்றிசைக்க,

மண்டு பெருங்காதல் மனத்தடக்கி நீ மொழிவாய் ;
"ஐயனே, உங்க ளரமனையில் ஐந்நூறு
தையலருண் டாம் ;அழகில் தந்நிகரில் லாதவராம்.
கல்வி தெரிந்தவராம் ; கல்லுருகப் பாடுவராம் ;
அன்னவரைச் சேர்ந்தேநீர் அன்புடனே வாழ்ந்திருப்பீர் ;
மன்னவரை வேண்டேன் மலைக்குறவர் தம்மகள்யான் ;
கொல்லுமடற் சிங்கம் குழிமுயலை வேட்பதுண்டோ ?
வெல்லுதிறல் மாவேந்தர் வேடருள்ளோ பெண்
ணெடுப்பார் ?

பத்தினியா வாழ்வதல்லால் பாவேந்தர் தாமெனினும்
நத்தி விலைமகளா நாங்கள்குடி போவதில்லை.
பொன்னடியைப் போற்றுகின்றேன், போய்வருவீர்,
தோழியரும்

என்னைவிட்டுப் போயினரே. என்செய்கேன் ?" என்றுநீ
நெஞ்சங் கலக்கமெய்தி நிற்கையிலே, வேந்தன்மகன்
மிஞ்சுநின்றன் காதல் விழிக்குறிப்பி லைறிந்தே,
பக்கத்தில் வந்து பளிச்சென் றுனதுகன்னஞ்

செக்கச் சிவக்கமுத்த மிட்டான். சினங்காட்டி
நீவிலகிச் சென்றுய்—நெறியேது காமியர்க்கே?—
தாவிநின்னை வந்து தழுவினன் மார்பிறுக.
"நின்னையன்றி யோர்பெண் நிலத்திலுண்டோ
என்றனக்கே?
பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே, இன்பமே,
நீயே மனையாட்டி, நீயே யரசாணி,
நீயே துணையெனக்கு, நீயே குலதெய்வம்.
நின்னையன்றிப் பெண்ணை நினைப்பேனே? வீணிலே
என்னை நீ ஐயுறுதல் ஏதுக்காம்? இப்பொழுதே
நின்மனைக்குச் சென்றிடுவோம்; நின்வீட்டி லுள்ளோர்-
பால்
என்மனத்தைச் சொல்வேன், எனது நிலையுரைப்பேன்,
வேத நெறியில் விவாகமுனைச் செய்துகொள்வேன்,
மாதரசே" என்று வலக்கைதட்டி வாக்களித்தான்.
பூரிப்புக் கொண்டாய்; புளகநீ யெய்திவிட்டாய்.
வாரிப் பெருந்திரைபோல் வந்த மகிழ்ச்சியிலே
நாணந் தவிர்த்தாய்; நனவே தவிர்ந்தவளாய்,
காணத் தெவிட்டாதோ ரின்பக் கனவினிலே
சேர்ந்துவிட்டாய். மன்னவன்றன் திண்டோளை நீயுவகை
ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்
சிந்தைகொண்டாய். வேந்தன்மகன், தேனில்விழும்
வண்டினைப்போல்,
விந்தையுறு காந்தமிசை வீழு மிரும்பினைப்போல்,
ஆவலுட னின்னை யறத்தழுவி, ஆங்குனது
கோவை யிதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையிலே,—
சற்றுமுன்னே யூரினின்று தான்வந் திறங்கியவன்,
மற்றுநீ வீட்டைவிட்டு மாதருடன் காட்டினிலே
கூத்தினுக்குச் சென்றதனைக் கேட்டுக் குதூகலமாய்
ஆத்திரந்தான் மிஞ்சிநின்னை ஆங்கெய்திக் காணவந்
தோன்,—
நெட்டைக் குரங்கன் நெருங்கிவந்து பார்த்துவிட்டான்.
"பட்டப் பகலிலே! பாவிமகள் செய்தியைப்பார்!
கண்ணாலங் கூட இன்னுங் கட்டி முடியவில்லை.
மண்ணைக்கி விட்டாள்! என் மானந் தொலைத்து
விட்டாள்!

'நிச்சிய தாம்பூலம்' நிலையா நடந்திருக்கப்
பிச்சைச் சிறுக்கிசெய்த பேதகத்தைப் பார்த்தாயோ!''
என்று மனதில் எழுகின்ற தீயுடனே
நின்று கலங்கினன் நெட்டைக் குரங்கனங்கே.
மாப்பிளைதான் ஊருக்கு வந்ததையும், பெண்குயிலி
தோப்பிலே தானுந்தன் தோழிகளு மாச்சென்று
பாடி விளையாடும் பண்புகேட் டேகுரங்கன்
ஓடி யிருப்பதோ ருண்மையையு மாடனிடம்
யாரோ வுரைத்துவிட்டார்; ஈரிரண்டு பாய்ச்சலிலே
நீரோடு மேனி நெருப்போடுங் கண்ணுடனே
மாடனங்கு வந்துநின்றான். மற்றதனைத் தேன்மலையின்
வேடர்கோன் மைந்தன் விழிகொண்டு பார்க்கவில்லை.
நெட்டைக் குரங்கனங்கு நீண்ட மரம்போலே
எட்டிநிற்குஞ் செய்தி யிவன்பார்க்க நேரமில்லை.
அன்னியனைப் பெண்குயிலி யார்ந்திருக்குஞ் செய்தியொன்று
தன்னையே யிவ்விருவர் தாங்கண்டார், வேறறியார்.
மாடனதைத் தான்கண்டான், மற்றவனு மங்ஙனமே.
மாடன் வெறிகொண்டான், மற்றவனு மவ்வாறே.
காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையுந் தானுமங்கு
தேவ சுகங்கொண்டு விழியே திறக்கவில்லை.
ஆவிக் கலப்பி னமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த விழிநான்கு.
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிக ளுதிர்க்கும் விழிநான்கு.
மாடனுந்தன் வாளுருவி மன்னவனைக் கொன்றிடவே
ஓடிவந்தான்; நெட்டைக் குரங்கனும்வா ளோங்கி வந்தான்;
வெட்டிரண்டு வீழ்ந்தனகாண் வேந்தன் முதுகினிலே.
சட்டெனவே மன்னவனுந் தான்திரும்பி வாளுருவி
வீச்சிரண்டி லாங்கவரை வீழ்த்தினனே; வீழ்ந்தவர்தாம்
பேச்சிழந்தே யங்கு பிணமாக் கிடந்துவிட்டார்.
மன்னவனுஞ் சோர்வெய்தி மண்மேல் விழுந்து விட்டான்.

பின்னவனே நீயும் பெருந்துயர்கொண் டேமடியில்
வாரி யெடுத்துவைத்து வாய்புலம்பக் கண்ணிரண்டும்
மாரி பொழிய மனமழிந்து நிற்கையிலே,
கண்ணே விழித்துனது காவலனுங் கூறுகின்றான் :
"பெண்ணே, இனிநான் பிழைத்திடேன் ; சில்கணத்தே
ஆவி துறப்பேன். அழுதோர் பயனில்லை.
சாவிலே துன்பமில்லை ; தையலே, இன்னமுநாம்
பூமியிலே தோன்றிடுவோம். பொன்னே, நினைக்கண்டு
காமுறுவேன் ; நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன் ;
இன்னும் பிறவியுண்டு. மாதரசே, இன்பமுண்டு.
நின்னுடனே வாழ்வனினி நேரும் பிறப்பினிலே"
என்றுசொல்லிக் கண்மூடி, இன்பமுறு புனனகைதான்
நின்று முகத்தே நிலவுதர, மாண்டனன்காண்.
மாடனிங்கு செய்ததோர் மாயத்தால் இப்பொழுது
பீடையுறு புள்வடிவம் பேதையுனக் கெய்தியது.
வாழிநின்றன் மன்னவனுந் தொண்டை வளநாட்டில்
ஆழிக் கரையி னருகேயோர் பட்டினத்தில்
மானிடனைத் தோன்றி வளருகின்றான். நின்னையொரு
காலிடத்தே காண்பான். கனிந்துநீ பாடுநல்ல
பாட்டினைத்தான் கேட்பான். பழவினையின் கட்டினால்
மீட்டுநின்மேற் காதல்கொள்வான், மென்குயிலே'
என்றந்தத்

தென்பொதியை மாமுனிவர் செப்பினார். 'சாமீ,
குயிலுருவங் கொண்டேன்யான், கோமானே மேன்மை
பயிலு மனிதவுருப் பற்றிநின்றான். எம்முள்ளே
காதலிசைந் தாலுங் கடிமணந்தான் கூடாதாம்.
சாதற் பொழுதிலே தார்வேந்தன் கூறியசொல்
பொய்யாய் முடியாதோ ?' என்றிசைத்தேன் புன்ன-
கையில்

ஐய ருரைப்பார் :—'அடி பேதாய், இப்பிறவி
தன்னிலும்நீ விந்தகிரிச் சார்பினிலோர் வேடனுக்குக்
கன்னியெனத் தான்பிறந்தாய். கர்ம வசத்தினால்,
மாடன் குரங்க னிருவருமே வன்பேயாக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டார்

நின்னையங்கே. இப்பிறப்பில் நீயும் பழமைபோல்
மன்னனையே சேர்வையென்று தாஞ்சூழ்ந்து மற்றவரும்
நின்னைக் குயிலாக்கி நீசெல்லுந் திக்கி லெலாம்
நின்னுடனே சுற்றுகின்றார். நீயிதனைத் தேர்கிலையோ ?'
என்றார். 'விதியே ! இறந்தவர்தாம் வாழ்வாரை
நின்று துயருறுத்தல் நீதியோ ? பேய்களெனைப்
பேதைப் படுத்திப் பிறப்பை மறப்புறுத்தி
வாதைப் படுத்தி வருமாயில், யானெனது
காதலனைக் காணுங்கால், காய்சினத்தா லேதேனுந்
தீதிழைத்தா லென்செய்வேன் ? தேவரே. மற்றிதற்கோர்
மாற்றிலையோ ?' என்று மறுகிநான் கேட்கையிலே,
தேற்றமுறு மாமுனிவர் செப்புகின்றார் :—'பெண்குயிலே,
தொண்டைவள நாட்டிலோர் சோழியிலே வேந்தன்
மகன்

கண்டுனது பாட்டிற் கருத்திளகிக் காதல்கொண்டு
நேச மிகுதியுற்று நிற்கையிலே, பேயிரண்டும்
மோச மிகுந்த முழுமாயச் செய்கைபல
செய்துபல பொய்த்தோற்றங் காட்டித் திறல்வேந்தன்
ஐயமுறச் செய்துவிடும், ஆங்கவனு நின்றனையே
வஞ்சகியென் றெண்ணி மதிமருண்டு நின்மீது
வெஞ்சினந்தா னெய்திநீ விட்டுவிட நிச்சயிப்பான்.
பிந்தி விளைவதெல்லாம் பின்னே நீ கண்டுகொள்வாய்,
சந்திஜபம் செய்யுஞ் சமயமாய் விட்ட'தென்றே
காற்றில் மறைந்துசென்றார் மாமுனிவர். காதலரே,
மாற்றி யுரைக்கவில்லை. மாமுனிவர் சொன்னதெல்லாம்
அப்படியே சொல்லிவிட்டேன். ஐயோ ! திருவுளத்தில்
எப்படி நீர் கொள்வீரோ ? யானறியேன். ஆரியரே,
காத லருள்புரிவீர். காதலில்லை யென்றிடிலோ,
சாத லருளித் தமதுகையாற் கொன்றிடுவீர் !''
என்று குயிலு மெனதுகையில் வீழ்ந்ததுகாண்.
கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ ?
பெண்ணென்றுல்

பேயு மிரங்காதோ ? பேய்க ளிரக்கமின்றி
மாயமிழைத் தாலதனை மானிடனுங் கொள்ளுவதோ ?

காதலிலே ஐயங் கலந்தாலு நிற்பதுண்டோ ?
மாதரன்ப கூறில் மனமிளகா ரிங்குளரோ ?
அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்புவைத்து நோக்கியபின் மூண்டுவரு மின்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்தைக்
காணவில்லை.
விண்டுரைக்க மாட்டாத விந்தையடா ! விந்தையடா !
ஆசைக் கடலின் அமுதடா ! அற்புதத்தின்
தேசமடா ! பெண்மைதான் தெய்விகமாங் காட்சியடா !
பெண்ணெருத்தி யங்குநின்ரு ள் ; பேருவகை
கொண்டுதான்
கண்ணெடுக்கா தென்னைக் கணப்பொழுது நோக்கினள் ;
சற்றே தலைகுனிந்தாள். சாமீ ! இவளழகை
எற்றே தமிழி லிசைத்திடுவேன் ? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனே ?
மீள விழியில் மிதந்த கவிதையெலாம்
சொல்லி லகப்படுமோ ? தூயசுடர் முத்தையொப்பாம்
பல்லிற் கனியிதழிற் பாய்ந்த நிலவினையான்
என்று மறத்தல் இயலுமோ ? பாரின்மிசை
நின்றதொரு மின்கொடிபோல் நேர்ந்தமணிப்
பெண்ணரசின்
மேனி நலத்தினையும் வெட்டினையுங் கட்டினையும்
தேனி லினியாள் திருத்த நிலையினையும்
மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ ? ஓர் வார்த்தை,
கற்றவர்க்குச் சொல்வேன். கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, யதனோடே யின்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினுல்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண் டாங்ஙனே
நண்ணித் தழுவி நறுங்கள் ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்த மயங்கிச் சிலபோழ் திருந்தபின்னே,
பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்

ஒக்க மறைந்திடலும், ஓஹோ ! வெனக்கதறி
வீழ்ந்தேன். பிறகு விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம், பழம்பாய்—வரிசையெல்லாம்—
ஒத்திருக்க 'நாம்வீட்டில் உள்ளோம்' எனவுணர்ந்தேன்.
சோலை, குயில்,காதல், சொன்னகதை யத்தனையும்,
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே
கண்டுகொண்டேன்.
ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ ?

கண்ணன் பாட்டு

முதற் பதிப்பின் முகவுரை

இந்தச் சிறிய நூலுககு ஒரு பெரிய முகவுரை எழுத யான் விரும்பவில்லை. சில வார்த்தைகள் மட்டும் கூறுகின்றேன்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சி. சுப்பிர மணிய பாரதியாரைத் தமிழ்நாட்டார் அறி வார்கள். ஆனால், அவர் பெருமையை உள்ள படி அறிந்தவர்கள் மிகமிகச் சிலரேயாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகாபண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ்நாட்டு 'ரவீந்திர நாதர்'; இவர் எனது தமிழ்நாட்டின் தவப்பயன்.

பாரதியாருக்குக் கண்ணபிரான்மீ துள்ள அதிதீவிர பக்திகாரணமாக இந்நூலிலுள்ள பாடல்கள் வெளியாயின. இவை தமிழர் களுக்கு நல்விருந்தாகும்.

பாரதியார் பாடல்களின் பெருமையைப் பற்றி யான் விரித்துக்கூறுவதென்றால், இந்த முகவுரை அளவுகடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தைமட்டும் கூறுகின்றேன். இந்த ஆசிரியன் காலத்திற்குப்பின், எத்தனையோ

நூற்றாண்டுகளுக்குப்பின், இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்.

இந்நூல் வாழ்க! என்னவர் வாழ்க!! எந்தாய் வாழ்க!!!

—நெல்லையப்ப பிள்ளை

★

இரண்டாம் பதிப்பின் முன்னுரை‡

நம் காலத்துத் தமிழ்க் கவிகளுள் பிரதம ஸ்தானத்தை வகிக்கும் ஸ்ரீமான் ஸுப்ரஹ்மண்ய பாரதியின் நூல்களுக்கு முன்னுரை வேண்டுவதேயில்லை. இருப்பினும், பாயிரமல்லது பனுவலன்றே என்னும் முதுமொழியை நினைத்தோ அல்லது வேறு என்ன எண்ணியோ, பதிப்பாசிரியர் இக் கண்ணன் பாட்டின் இரண்டாம் பதிப்புக்கு என்னை ஒரு முன்னுரை எழுதித்தர வேண்டுமெனக் கேட்டார்; சிறிதளவேனும் சாத்தியமாயிருக்கிற ஒரு காரியத்தை நட்புரிமை பூண்டோர் செய்யும்படி வேண்டினால் மறுத்தல் அழகன்று என நினைத்துச் சம்மதித்தேன்.

பாரதநாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாள்களாக மறந்திருந்த பாரதநாடு திடீரென விழித்துக்கொண்டதும், அதன் எதிரே

‡ இரண்டாம் பதிப்பு 1919இல் வெளி வந்தது.

முதலில் தோன்றிய ஒளி, கீதாசாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபை யைக் கொடுத்தது.

பத்து வருஷங்களுக்குமுன் அவர் பதிப்பித்த ஜன்மபூமியிலேயே ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம் என்று இரண்டு செய்யுள்கள் காணப்படுகின்றன. ஆனால், பிற்பட்டுத்தான் கண்ணனுடைய செயல் களும் திருவிளையாடல்களும் அவர் மனத்தைப் பூரணமாக ஆகருஷித்தன. இவ் ஆகருஷணத் திற்கு நாலாயிரப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்களின் அனுஸந் தானம் முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. இக் கண்ணன் பாட்டானது பாவ விஷயத்தில் அப் பாசுரங்களின் வழியையே தழுவியதாக இருக் கிறது.

இஷ்ட தெய்வத்தைப் பல பாவங்களால் வழிபடலாகும் என்று நமது பக்திசாஸ்திரங்கள் கூறுகின்றன. நமது ஆசிரியரும் இதை அனு சரித்துக் கண்ணனைத் தாயாகவும், தந்தை யாகவும், எஜமானனாகவும், குருவாகவும், தோழ னாகவும், நாயகியாகவும், நாயகனாகவும் பாவித்துப் பாடுகிறார்.

இவற்றுள், நாயக நாயகி பாவத்தைப்பற்றி இங்குச் சிலமொழிகள் கூறாது விடமுடியவில்லை. இப் பாவத்தால் பகவானை வழிபடும்முறை தொன்றுதொட்டு பக்தர்களாலும் கவிகளாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ரோமன் கத்தோலிக் மதத்திலேகூட அடியார்வர்க்கத்தை நாயகி

யாகவும் கிறிஸ்துவை நாயகனாகவும் பாவித்து எழுதிய ஸ்தோத்திரங்கள் பல உள. நமது பாகவதத்தில் கோபிகைகளின் உபாக்கியானங் களெல்லாம் இப்பாவத்தைத் தழுவி எழுதப் பட்டுள்ளனவே. மகாபக்திமதியான மீராபாயி உலகத்திலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் ஸ்திரீப்பிராயம் என்றும் பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்துப் பக்திசெய்திருக்கிறார். பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் தம்முடைய அனுபவங்களுள் நாயகி அனுபவத்தையும் அனுபவிக்க எண்ணி, சேலை தரித்துக்கொண்டு, ராதை என்கிற பாவத்தால் கண்ணனை வழிபட்டார் என்று சொல்லப்படுகிறது. திருக்கோவை-யாரையும், ராமலிங்கசுவாமிகளின் திருவருட் பாவையும் அனுபவித்த தமிழருக்கு இவ்விதம் வழிபடும்முறை புதிதாகப் படாது.

ஆனால், இந்தப் பாவத்தை ஆளுவது கத்தி யின் கூர்ப்பக்கத்தின்மீது நடப்பதைப்போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசங் தர்ப்பமாகிவிடும். ஸ்ரீ பாகவதத்திலுங்கூட கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ் வரம்பை அங்கங்கே கடந்துவிட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்,
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்[1]

என்று தொடங்கும் திருவாய் மொழிகளையும்,

கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?[2]

குறிப்பு : 1. திருவாய்மொழி, 5, 6, 1.
2. நாச்சியார் திருமொழி, 7, 1.

என்றும் தொடங்கும் ஆண்டாளுடைய பாசுரங் களேயும்போலச் செயிரின்றி இப் பாவத்தைப் பாடு வது அநேகமாய் அசாத்தியம்.

நமது கவியும் இப் பாவத்தை விரிக்கையில் பரபக்தியைவிடச் சாரீரமான காதலிலேயே அதிக மாக வர்ணித்திருக்கிறார். ஆனால், சுகப்பிரம்மமே நிறுத்தமுடியாததான தராசுமுனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறை கூறலாமா?

இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்குப் பேரி லக்கியமாகக் கொள்ளவேண்டுவதில்லை. ஆசிரியர் இந் நூலில் கவி என்கிற ஹோதாவில்தான் நம் மிடம் வருகிறார் என நினைக்கவேண்டும். கவிதா ரீதியாகப் பார்க்கும்போது, இக் கீர்த்தனங்களுள் பெரும்பாலவையிலுள்ள சுவை தேனினும் இனிதா யிருக்கிறது.

இன்னொன்று: கவிதையழகை மாத்திரம் அனுபவித்துவிட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக்கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலவை தாளத்தோடு பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன. கடற்கரை யில், சாந்திமயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோஹவயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதி தாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனை கர்வத் தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந் நூலிலுள்ள பாட்டுக் களை மாணிக்கங்களாக மதிப்பர்.

இந் நூலைத் தமிழுலகம் ஆதரித்துத்தான் இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. ஆனால், ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர் எழுதிய ஆங்கிலக் கீர்த்தனங்களின் விலை மூன்று ரூபாயாக இருக்க, அளவில் அந்நூலில் குறையாததும், சுவையில் அதற்கு இணையாக இருப்பதுமான இந் நூலின் முதற் பதிப்புக்குக் காகிதவிலை ஏறிவிற்ற காலத்தில் பதிப்பாசிரியர் விலை கால்ரூபாயாகக் குறிக்க வேண்டியிருந்தது என நினைக்கும்போது, நாட்டில் தமிழபிமானம் வெளிப்படையாக விளங்க வில்லை யென்றுவது ஒப்புக்கொள்ளவேண்டும். முன் காலத்தில், ஆசிரியர்களுக்கு அரசர்கள் ஏராளமான பொருள் உதவிசெய்து, அவர்கள் மனத்தைச் சிறிய விசாரங்கள் பீடிக்காமல் காத்து வந்து, அவர்களுடைய ஆற்றல் நாளுக்குநாள் அதிகரிக்கும்படி செய்துவந்தார்கள். தற்காலத்தில் கல்வி யபிமானமுள்ள பொதுஜனங்கள்தாம் அக்காலத்து அரசரின் ஸ்தானத்தை வகிக்கிறார்கள். இவர்கள் தங்கள் அபிமானத்தை, விலையைப் பொருட்படுத்தாமல் நூல்களின் யோக்கியதையைக் கருதி ஆதரித்துத்தான் காட்டமுடியும். நமது ஆசிரியரின் நூல்களை நம் நாட்டவர் சரிவர ஆதரிக்காததனாலே,

"சுற்றி நில்லாதே போ, பகையே :—
துள்ளி வருகுது வேல்"[1]

என்றும்,

"கைதனில் வில்லும் உண்டு :
காண்டீவம் அதன் பேர்"[2]

---

1. தோத்திரப் பாடல்கள், ஆறு தீணை, 3.

2. பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகத்தில் அர்ச்சுனன் தன்னுடைய பராக்கிரமத்தைக் கூறும் செய்யுளில் வருகிறது.

என்றும் உள்ள அக்ஷர லக்ஷம் பெறுமான பாக்களை எழுதியிருக்கும் அவருடைய உற்சாகம் குன்றிப்போயிருக்கிறது. தமிழபிமானிகள் இப் பதிப்பை ஆதரித்து வாங்கி ஆசிரியனுடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் தமிழில் புதிய இலக்கியங்கள் பிறக்கும்படி செய்வார்கள் என நம்புகிறேன்.

வ. வே. ஸுப்ரமண்ய ஐயர்

2. கண்ணன் பாட்டு

—: o :—

கண்ணன் - என் தோழன்

(புன்னகவராளி—திஸ்ரஜாதி ஏகதாளம்—வத்ஸல ரஸம்)

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே—இனி
என்ன வழியென்று கேட்கி லுபாயம்
இருகணத் தேயுரைப்பான் ;—அந்தக்
"கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன் றில்லேன்—வந்திங்
குன்னை யடைந்தனன்' என்னி லுபாயம்
ஒருகணத் தேயுரைப்பான் ; 1

கானகத் தேசுற்று நாளிலு நெஞ்சிற்
கலக்கமி லாதுசெய்வான் ;—பெருஞ்
சேனைத் தலைநின்று போர்செய்யும் போதினில்
தேர்நடத் திக்கொடுப்பான் ;—என்றன்
ஊனை வருத்திடு நோய்வரும் போதினில்
உற்ற மருந்துசொல்வான் ;—நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ்சொல்லி மாற்றிடுவான் ; 2

பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றூலொரு
பேச்சினிலே சொல்லுவான் ;
உழைக்கும் வழிவினை யாளும் வழிபயன்
உண்ணும் வழியுரைப்பான் ;
அழைக்கும் பொழுதினிற் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக் குள்வருவான் ;
மழைக்குக் குடைபசி நேரத் துணவென்றன்
வாழ்வினுக் கெங்கள்கண்ணன். 3

கேட்டபொழுதிற் பொருள் கொடுப்பான் ; சொல்லுங்
கேவி பொறுத்திடுவான் ;—எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான் ;—என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை யிஃதென்று
தான்சொல்லு முன்னுணர்வான் ;—அன்பர்
கூட்டத்தி லேயிந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுளரோ ? 4

உள்ளத்தி லேகரு வங்கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடுவான் ;—நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னுலங்கு
காறி யுமிழ்ந்திடுவான் ;—சிறு
பள்ளத் திலேநெடு நாளழுகுங் கெட்ட
பாசியை யெற்றிவிடும்—பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடுவான் ; 5

சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான் ;—நல்ல
வன்ன மகளிர் வசப்படவே பல
மாயங்கள் சூழ்ந்திடுவான் ;—அவன்
சொன்ன படிநட வாவிடி லோமிகத்
தொல்லை யிழைத்திடுவான் ;—கண்ணன்
தன்னை யிழந்துவிடில், ஐயகோ, பின்
சகத்தினில் வாழ்வதிலேன். 6

கோபத்தி லேயொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் ;—மனஸ்
தாபத்தி லேயொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான் ;—பெரும்
ஆபத்தினில் வந்து பக்கத்தி லேநின்
றதனை விலக்கிடுவான் ;—சுடர்த்
தீபத்தி லேவிழும் பூச்சிகள் போல்வருந்
தீமைகள் கொன்றிடுவான் ; 7

உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான் ;—அருள்
வண்மையி னுலவன் மாத்திரம் பொய்கள்
மலிமலி யாவுரைப்பான் ;—நல்ல
பெண்மைக் குணமுடையான் ;—சில நேரத்திற்
பித்தர் குணமுடையான் ;—மிகத்‡
தண்மைக் குணமுடை யான் ;சில நேரம்
தழலின் குணமுடையான். 8

கொல்லுங் கொலைக்கஞ் சிடாத மறவர்
குணமிகத் தானுடையான் ;—கண்ணன்
சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
சூதறி யாதுசொல்வான் ;—என்றும்
நல்லவ ருக்கொரு தீங்கு நண்ணுது
நயமுறக் காத்திடுவான் ;—கண்ணன்
அல்லவ ருக்கு விடத்தினில் நோயில்
அழலினிலுங் கொடியான். 9

காதல் விளைய மயக்கிடும் பாட்டினில்
கண்மகிழ் சித்திரத்தில்—பகை
மோதும் படைத்தொழில் யாவினுமே திற
முற்றிய பண்டிதன்காண் ;—உயர்
வேத முணர்ந்த முனிவ ருணர் வினில்
மேவு பரம்பொருள்காண் ;—நல்ல
கீதை யுரைத்தெனை யின்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவேன். 10

கண்ணன் - என் தாய்

(நொண்டிச் சிந்து)

உண்ணஉண் ணத்தெவிட்டாதே—அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும்பால் ;
வண்ணமுற வைத்தெனக்கே—என்றன்
வாயினிற் கொண் டூட்டுமோர் வண்மையுடையாள்,

[பா - ம்.] :‡ 'மிக்கத்'

கண்ணனெனும் பெயருடையாள்,—என்னைக்
கட்டிநிறை வான்எனுந்தன் கையிலணைத்து
மண்ணெனுந்தன் மடியில் வைத்தே—பல
மாயமுறுங் கதைசொல்லி மனங்களிப்பாள். 1

இன்பமெனச் சிலகதைகள்—எனக்
கேற்றமென்றும் வெற்றியென்றும் சில கதைகள்
துன்பமெனச் சிலகதைகள்—கெட்ட
தோல்வியென்றும் வீழ்ச்சியென்றுஞ் சிலகதைகள்
என்பருவம் என்றன்விருப்பம்—எனும்
இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன்பொடவள் சொல்லிவருவாள்;—அதில்
அற்புதமுண் டாய்ப்பர வசமடைவேன். 2

விந்தைவிந்தை யாகவெனக்கே—பல
விதவிதத் தோற்றங்கள் காட்டுவிப்பாள்;
சந்திரனென் றொருபொம்மை—அதில்
தண்ணமுதம் போலஒளி பரந்தொழுகும்:
மந்தை மந்தை யாமேகம்—பல
வன்னமுறும் பொம்மையது மழைபொழியும்;
முந்தஒரு சூரியனுண்டு—அதன்
முகத்தொளி கூறுதற்கொர் மொழியிலையே. 3

வானத்து மீன்க ளுண்டு—சிறு
மணிகளைப் போல்மின்னி நிறைந்திருக்கும்;
நானத்தைக் கணக்கிடவே—மன
நாடிமிக முயல்கினுங் கூடுவதில்லை;
கானத்து மலைகளுண்டு—எந்தக்
காலமுமொ ரிடம் விட்டு நகர்வதில்லை,
மோனத்திலே யிருக்கும்—ஒரு
மொழியுரை யாதுவிளை யாடவருங்காண். 4

நல்லநல்ல நதிகளுண்டு—அவை
நாடெங்கு மோடிவிளை யாடிவருங்காண்;
மெல்லமெல்லப் போயவைதாம்—விழும்
விரிகடற் பொம்மையது மிகப்பெரிதாம்;

எல்லையதிற் காணுவதில்லை;—அலை
எற்றிநுரை கக்கியொரு பாட்டிசைக்கும்;
ஒல்லெனுமப் பாட்டினிலே—அம்மை
ஓமெனும் பெயரென்றும் ஒலித்திடுங்காண்.

சோலைகள் காவினங்கள்—அங்கு
சூழ்தரும் பலநிற மணிமலர்கள்
சாலவு மினியனவாய்—அங்கு
தருக்களில் தூங்கிடும் கனிவகைகள்
ஞாலமுற் றிலுநிறைந்தே—மிக
நயந்தரு பொம்மைக ளெனக் கெனவே
கோலமுஞ் சுவையுமுற—அவள்
கோடிபல் கோடிகள் குவித்துவைத்தாள்.

தின்றிடப் பண்டங்களும்—செவி
தெவிட்டறக் கேட்கநற் பாட்டுகளும்
ஒன்றுறப் பழகுதற்கே—அறி
வுடையமெய்த் தோழரு மவள்கொடுத்தாள்;
கொன்றிடு மெனஇனிதாய்—இன்பக்
கொடுநெருப் பாய்,அனற் சுவையமுதாய்,
நன்றியல் காதலுக்கே—இந்த
நாரியர் தமையெனைச் சூழவைத்தாள்.

இறகுடைப் பறவைகளும்—நிலந்
திரிந்திடும் விலங்குகள் ஊர்வனகள்
அறைகடல் நிறைந்திடவே—எண்ணில்
அமைத்திடற் கரியபல் வகைப்படவே
சுறவுகள் மீன்வகைகள்—எனத்
தோழர்கள் பலருமிங் கெனக்களித்தாள்;
நிறைவுற இன்பம்வைத்தாள்;—அதை
நினைக்கவு முழுதிலுங் கூடுதில்லை.

சாத்திரங் கோடிவைத்தாள்;—அவை
தம்மினு முயர்ந்ததொர் ஞானம்வைத்தாள்;
மீத்திடும் பொழுதினிலே—நான்
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே.

கோத்தபொய் வேதங்களும்—மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய்ந்நடையும்—இள
மூடர்தம் கவலையு மவள்புனைந்தாள்;

வேண்டிய கொடுத்திடுவாள்;—அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்;
ஆண்டருள் புரிந்திடுவாள்;—அண்ணன்
அருச்சுனன் போலெனை யாக்கிடுவாள்;
யாண்டுமெக் காலத்திலும்—அவள்
இன்னருள் பாடுநற் றெழில்புரிவேன்;
நீண்டதோர் புகழ்வாழ்வும்—பிற
நிகரறு பெருமையு மவள்கொடுப்பாள்.

கண்ணன்—என் தந்தை

[நொண்டிச்சிந்து—ப்ரதான ரஸம் அத்புதம்]

பூமிக் கெனையனுப்பினாள்;—அந்தப்
புதமண்ட லத்திலென் தம்பிகளுண்டு;
நேமித்த நெறிப்படியே—இந்த
நெடுவெளி யெங்கணு நித்தமுருண்டே
போமித் தரைகளிலெல்லாம்—மனம்
போலவிருந் தாளுபவ ரெங்களினத்தார்;
சாமி யிவற்றினுக்கெல்லாம்—எங்கள்
தந்தையவன் சரிதைகள் சிறிதுரைப்பேன்.

செல்வத்திற்கோர் குறையில்லை;—எந்தை
சேமித்து வைத்தபொன்னுக் களவொன்றில்லை;
கல்வியில் மிகச்சிறந்தோன்—அவன்
கவிதையி னினிமையொர் கணக்கிலில்லை;
பல்வகை மாண்பினிடையே—கொஞ்சம்
பயித்திய மடிக்கடி தோன்றுவதுண்டு;
நல்வழி செல்லுபவரை—மனம்
நையும்வரை சோதனைசெய் நடத்தையுண்டு.

நாவு துணிகுவதில்லை—உண்மை
நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே ;
யாவருந் தெரிந்திடவே—எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும் சொல்லுவதுண்டு ;
மூவகைப் பெயர்புனைந்தே—அவன்
மூகமறி யாதவர் சண்டைகள் செய்வார் ;
தேவர் குலத்தவனென்றே—அவன்
செய்தி தெரியாதவர் சிலருரைப்பார். 3

பிறந்தது மறக்குலத்தில் ;—அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில் ;
சிறந்தது பார்ப்பனருள்ளே ;—சில
செட்டிமக்க ளோடுமிகப் பழக்கமுண்டு ;
நிறந்தனிற் கருமைகொண்டான் ;—அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப்பெண்கள் ;
துறந்த நடைகளுடையான் ;—உங்கள்
சூனியப்பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான். 4

ஏழைகளைத் தோழமைகொள்வான் ;—செல்வம்
ஏறியார் தமைக்கண்டு சீறிவிழுவான் ;
தாழவரு துன்பமதிலும்—நெஞ்சத்
தளர்ச்சி கொள்ளாதவர்க்குச் செல்வமளிப்பான் ;
நாழிகைக்கொர் புத்தியுடையான் ;—ஒரு
நாளிருந்தபடி மற்றொர் நாளினிலில்லை.
பாழிடத்தை நாடி யிருப்பான் ;—பல
பாட்டினிலுங் கதையிலு நேரமழிப்பான். 5

இன்பத்தை யினிதெனவும்—துன்பம்
இனிதில்லை யென்றுமவன் எண்ணுவதில்லை ;
அன்பு மிகவுமுடையான் ;—தெளிந்
தறிவினில் உயிர்க்குலம் ஏற்றமுறவே
வன்புகள் பலபுரிவான் ;—ஒரு
மந்திரியுண் டெந்தைக்கு விதியென்பவன் ;
முன்பு விதித்ததனையே—பின்பு
முறைப்படி யறிந்துண்ண மூட்டிவிடுவான். 6

வேதங்கள் கோத்துவைத்தான் ;—அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியிலில்லே ;
வேதங்க ளென்றுபுவியோர்—சொல்லும்
வெறுங்கதைத் திரளிலவ் வேதமில்லே ;
வேதங்க ளென்றவற்றுள்ளே—அவன்
வேதத்திற் சிலசில கலந்ததுண்டு ;
வேதங்க ளன்றியொன்றில்லே—இந்த
மேதினி மாந்தர்சொலும் வார்த்தைகளெல்லாம் 7

நாலு குலங்களமைத்தான் ;—அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர் ;
சில மறிவுதருமம்—இவை
சிறந்தவர் குலத்தினிற் சிறந்தவராம் ;
மேலவர் கீழவரென்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியையெல்லாம்—இன்று
பொசுக்கிவிட் டாலெவர்க்கும் நன்மையுண்டென்பான் 8

வயது முதிர்ந்துவிடினும்—எந்தை
வாலிபக் களேயென்று மாறுவதில்லே ;
துயரில்லே, மூப்புமில்லே,—என்றும்
சோர்வில்லே, நோயொன்று தொடுவதில்லே ;
பயமில்லே, பரிவொன்றில்லே,—எவர்
பக்கமுநின் றெதிர்ப்பக்கம் வாட்டுவதில்லே ;
நயமிகத் தெரிந்தவன்காண் ;—தனி
நடுநின்று விதிச்செயல் கண்டுமகிழ்வான். 9

துன்பத்தில் நொந்துவருவோர்—தன்னே[illegible]
தூவென் றிகழ்ந்துசொல்லி வன்புகனிவான் ;
அன்பினைக் கைக்கொளென்பான் ;—துன்பம்
அத்தனையு மப்பொழுது தீர்ந்திடுமென்பான் ;

பா – ம்] : $ 'தம்மைத்'

—கவிமணி

என்புடை பட்டபொழுதும்—நெஞ்சில்
ஏக்கமுறப் பொறுப்பவர் தம்மையுகப்பான் ;
இன்பத்தை எண்ணுபவர்க்கே— என்றும்
இன்பமிகத் தருவதி லின்பமுடையான். 10

கண்ணன்—என் சேவகன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாந் தாமறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடா, நீ நேற்றைக் கிங்குவர வில்லை' யென்றுல்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்ததென்பார் ;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார் ;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டா நாளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு
செய்வார் ;

தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார் ;
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊரம் பலத்துரைப்பார் ;
எள்வீட்டி லில்லையென்றுல் எங்கு முரசறைவார்.
சேவகராற் பட்ட சிரமமிக வுண்டு,கண்டீர் ;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை.
இங்கிதனுல் யானும் இடர்மிகுந்து வாடுகையில்,
எங்கிருந்தோ வந்தான், 'இடைச்சாதி நான்' என்றான்;
"மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களோநான் காத்திடு
வேன் ;

வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன் ;
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன் ;
காட்டுவழி யானலும், கள்ளர்பய மானலும்,
இரவிற் பகலிலே யெந்நேர மானலும்,
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறு மற்காப்பேன் ;
கற்றவித்தை யேதுமில்லை ; காட்டு மனிதன்,ஐயே !
ஆனபொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்

நானறிவேன் ; சற்றும் நயவஞ் சனேபுரியேன்''
என்றுபல சொல்லிநின்றான். ''ஏது பெயர் ?
சொல்'' என்றேன்.
''ஒன்றுமில்லை ; கண்ணனென்பர் ஊரிலுள்ளோர்
என்னை'' என்றான்.
கட்டுறுதி யுள்ளவுடல், கண்ணிலே நல்லகுணம்,
ஒட்டுறவே நன்று வுரைத்திடுஞ்சொல்—ஈங்கிவற்றால்,
தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
''மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய் ;
கூலியென்ன கேட்கின்றாய் ? கூறு'' கென்றேன்.
''ஐயனே !
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை ;
நானோர் தனியாள் ; நரைதிரைதோன் றிவிடினும்
ஆன வயதிற் களவில்லை ; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை ; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை'' யென்றான்.
பண்டைக் காலத்துப் பயித்தியத்தி லொன்றெனவே
கண்டு, மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன். அன்று முதற்கொண்டு,
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன் ; கண்ணனுல்
பெற்றுவரு நன்மையெலாம் பேசி முடியாது.
கண்ணை யிமையிரண்டும் காப்பதுபோல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான். வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீதி பெருக்குகிறான் ; வீடுசுத்த மாக்குகிறான்.
தாதியர்செய் குற்றமெலாந் தட்டி யடக்குகிறான் ;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனுய்,
ஒக்கநயங் காட்டுகிறான் ; ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்
[வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனுய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனுய்,
எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி யென்று
சொன்னான்.

இங்கிவனே யான்பெறவே என்னதவஞ் செய்து
விட்டேன் !
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவு மவன்பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்,சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாஞ் சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஒங்கிவரு கின்றனகாண் !
கண்ணனைநான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்
கண்கொண்டேன் !
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமு முள்ளனவே !

கண்ணன்—என் அரசன்†

பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும்
பார்த்திருப்ப தல்லா லொன்றுஞ் செய்திடான் ;
நகைபுரிந்து பொறுத்துப் பொறுத்தையோ
நாட்கள் மாதங்க ளாண்டுகள் போக்குவான் ;

கண்ணன் வென்று பகைமை யழிந்துநாம்
கண்ணிற் காண்ப தரிதெனத் தோன்றுமே ;
எண்ணமிட் டெண்ண மிட்டுச் சலித்துநாம்
இழந்த நாட்கள் யுகமெனப் போகுமே.

படைகள் சேர்த்தல் பரிசனம் சேர்த்திடல்
பணமுண் டாக்க லெதுவும் புரிந்திடான் ;
'இடையன், வீரமி லாதவன், அஞ்சினேன்'
என்றவர் சொலும் ஏச்சிற்கு நாணிலான் :

கொல்லப் பூத மனுப்பிடு மாமனே
கோலு யர்த்துல காண்டு களித்திட,
முல்லை மென்னகை மாதர்க்கும் பாட்டிற்கும்
மோக முற்றுப் பொழுதுகள் போக்குவான் ;

---

† இத் தலைப்புக் கொண்ட பாடல் 1917ஆம் ஆண்டின் மூதற் பதிப்பில் பதிப்பிக்கப் பெறவில்லை.

வான நீர்க்கு வருந்தும் பயிரென
மாந்தர் மற்றிவண் போர்க்குத் தவிக்கவும்,
தானங் கீர்த்தனை தாளங்கள் கூத்துக்கள்
தனிமை வேய்ங்குழ லென்றிவை போற்றுவான் ;

காலினைக் கையி னுற்பற்றிக் கொண்டுநாம்
கதியெ மக்கொன்று காட்டுவை யென்றிட்டால்,
நாலி லொன்று பலித்திடுங் காணென்பான் ;
நாமச் சொல்லின் பொருளெங் குணர்வதே ?

நாம வன்வலி நம்பி யிருக்கவும்,
நாண மின்றிப் பதுங்கி வளருவான் ;
தீமை தன்னை விலக்கவுஞ் செய்குவான் ;
சிறுமை கொண்டொளித் தோடவுஞ் செய்குவான் ;

தந்தி ரங்கள் பயிலவுஞ் செய்குவான் ;
சவரி யங்கள் பழகவுஞ் செய்குவான் ;
மந்தி ரத்திற னும்பல காட்டுவான் ;
வலிமை யின்றிச் சிறுமையில் வாழ்குவான் ;

காலம் வந்துகை கூடுமப் போதிலோர்
கணத்தி லேபுதி தாகவிளங்குவான் ;
ஆல காலவி டத்தினைப்போலவே,
அகில முற்று மசைந்திடச் சீறுவான் ;

வேரும் வேரடி மண்ணு மிலாமலே
வெந்து போகப் பகைமை பொசுக்குவான் ;
பாரும் வானமு மாயிர மாண்டுகள்
பட்டதுன்பங் கணத்திடை மாற்றுவான் ;

சக்க ரத்தை யெடுப்ப தொருகணம் ;
தருமம் பாரில் தழைத்தல் மறுகணம் ;
இக்க ணத்தி லிடைக்கண மொன்றுண்டோ ?
இதனுள் ளேபகை மாய்த்திட வல்லன் காண் !

கண்ண னெங்க ளரசன் புகழினைக்
கவிதைகொண் டெந்தக் காலமும் போற்றுவேன்;
திண்ணை வாயில் பெருக்கவந் தேவெனைத்
தேசம் போற்றத்தன் மந்திரி யாக்கினன்.
நித்தச் சோறினுக் கேவல்* செய வந்தேன்;
நிகரிலாப் பெருஞ் செல்வ முதவினன்.
வித்தை நன்குதல் லாதவன் என்னுளே
வேத நுட்பம விளங்கிடச் செய்திட்டான்.
கண்ண னெம்பெரு மானருள் வாழ்கவே!
கலி யழிந்து புவித்தவம் வெல்கவே!
அண்ண லின்னருள் நாடிய நாடுதான்
அவல நீங்கிப் புகழி லுயர்கவே!

கண்ணன் - என் சீடன்

ஆசிரியப்பா

யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறுய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்,
என்னிலு மறிவினிற் குறைந்தவன் போலவும்,
என்னைத் துணைக்கொண் டென்னுடை முயற்சியால்
என்னடை பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பா டெய்த வேண்டினேன் போலவும்,
யான்சொலுங் கவிதை என்மதி யளவை
இவற்றினைப் பெருமை யிலங்கின வென்று
கருதுவான் போலவும், கண்ணக் கள்வன்
சீடனு வந்தென்னைச் சேர்ந்தனன், தெய்வமே!
பேதையேன் அவ்வலைப் பின்னலில் வீழ்ந்து
பட்டன தொல்லை பலபெரும் பாரதம்;
உளத்தினை வென்றிடேன்; உலகினை வெல்லவும்

[பா - ம்]: *'நித்தச் சோற்றினுக் கேவல்'
—கவிமணி

தானகஞ் சுடாதேன் பிறர்த்மைத் தானெனும்
சிறுமையி னகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்
தன்னுளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன் இந்தச் சகத்திலே யுள்ள
மாந்தர்க் குற்ற துயரெலா மாற்றி
இன்பத் திருத்தவும் எண்ணிய பிழைக்கெனைத்
தண்டனே புரிந்திடத் தானுளங் கொண்டு,
மாயக் கண்ணன் வலிந்தெனைச் சார்ந்து,
புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்,
பலவகை யால்அகப் பற்றுறச் செய்தான் ;
வெறும்வாய் மெல்லுங் கிழவிக் கிஃதோர்
அவலாய் மூண்டது ; யானுமங் கவனே
உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக் கவனுய்,
''இன்னது செய்திடேல்', இவரொடு பழகேல்,
இவ்வகை மொழிந்திடேல், இனேயன விரும்பேல்,
இன்னது கற்றிடேல், இன்னநூல் கற்பாய்,
இன்னவ ருறவுகொள், இன்னவை விரும்புவாய்''
எனப்பல தருமம் எடுத்தெடுத் தோதி,
ஒய்விலா தவனே டுயிர்விட லானேன்.
கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
எதிர்செயும் மனேவிபோல், இவனுநான் காட்டு
நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே
நடப்பா னுயினன். நானிலத் தவர்தம்
மதிப்பையும் புகழுறு வாழ்வையும் புகழையும்
தெய்வமாக் கொண்ட சிறுமதி யுடையேன்,
கண்ணனுஞ் சீடன்யான் காட்டிய வழியெலாம்
விலகியே நடக்கும் விநோதமிங் கன்றியும்,
உலகினர் வெறுப்புறும் ஒழுக்கமத் தனேயும்
தலேயாக் கொண்டு சார்பெலாம் பழிச்சொலும்
இகழுமிக் கவனுய், என்மனம் வருந்த
நடந்திடல் கண்டேன் ; நாட்பட நாட்படச்
கண்ணனுந் தனது கழிபடு நடையில்
மிஞ்சுவா னுகி, வீதியிற் பெரியோர்
கிழவிய ரெல்லாங் கிறுக்கனென் றிவனே

இகழ்ச்சியோ டிரக்கமுற் றேளனம் புரியும்
நிலையும் வந்திட்டான். நெஞ்சிலே யெனக்குத்
தோன்றிய வருத்தஞ் சொல்லிடப் படாது.
முத்தனுக் கிடநான் முயன்றதோ ரிளைஞன்
பித்தனென் றுலகினர் பேசிய பேச்சென்
நெஞ்சினை யறுத்தது ; நீதிகள் பலவும்
தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்
சொல்லிநான் கண்ணனைத் தொளைத்திட லாயினேன்.
தேவ நிலையிலே சேர்த்திடா விடினும்
மானுடந் தவறி மடிவுறு வண்ணம்,
கண்ணனை நானுங் காத்திட விரும்பித்
தீயெனக் கொதித்துச் சினமொழி யுரைத்தும்,
சிரித்துரை கூறியும், செல்லென விழுந்தும்,
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்
எத்தனை வகையிலோ என்வழிக் கவனைக்
கொணர்ந்திட முயன்றேன் ; கொள்பய னென்றில்லை.$
கண்ணன் பித்தனுய்க் காட்டா ளாகி,
எவ்வகைத் தொழிலிலும் எண்ணமற் றவனுய்,
எவ்வகைப் பயனிலுங் கருத்திழந் தவனுய்,
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்,
யாதோ பொருளாய், எங்குமே நின்றான்.
இதனால்,
அகந்தையு மமதையும் ஆயிரம் புண்ணுற,
யான் கடுஞ் சினமுற்று 'எவ்வகையானும்
கண்ணனை நேருறக் கண்டே தீர்ப்பேன்'
எனப் பெருந்தாப மெய்தினே னகி,
'எவ்வா றேனும் இவனையோர் தொழிலில்
ஓரிடந் தன்னில் ஒருவழி வலிய
நிறுத்துவோ மாயின் நேருற் றிடுவான்'
என்றுளத் தெண்ணி, இசைந்திடுஞ் சமயங்
காத்திருந் திட்டேன், ஒருநாட் கண்ணனைத்
தனியே எனது வீட்டினிற் கொண்டு,

[பா - ம்.] : $ 'கொள்பய னென்றில்லை'
—கவிமணி.

"மகனே, என்பால் வரம்பிலா நேசமும்
அன்புநீ யுடையை ; அதனையான் நம்பி,
நின்னிட மொன்று கேட்பேன் ; நீயது
செய்திடல் வேண்டும் ; சேர்க்கையின் படியே
மாந்தர்தஞ் செயலெலாம் வகுப்புறல் கண்டாய்.
சாத்திர நாட்டமும், தருக்கமும், கவிதையில்
மெய்ப்பொரு ளாய்வதில் மிஞ்சிய விழைவும்
கொண்டோர் தமையே அருகினிற் கொண்டு,
பொருளினுக் கீலியு நேரம் போக
மிஞ்சிய பொழுதெலாம் அவருடன் மேவி
இருந்திட லாகுமேல், என்க்குநன் றுண்டாம் ;
பொழுதெலாம் என்னுடன் போக்கிட விரும்பும்
அறிவுடை மகனிங் குனையலால் அறிந்திடேன்.
ஆதலால்,
என்பயன் கருதி, எனக்கொரு துணையாய்
என்னுடன் சிலநாள் இருந்திட நின்னை
வேண்டிநிற் கின்றேன், வேண்டுதல் மறுத்தே
என்னை நீ துன்ப மெய்துவித் திடாமே,
இவ்வுரைக் கிணங்குவாய்" என்றேன். கண்ணனும்,
"அங்ஙனே புரிவேன். ஆயினின் னிடத்தே
தொழிலிலா தியாங்ஙனஞ் சோம்பரி லிருப்பது ?
காரிய மொன்று காட்டுவை யாயின்.
இருப்பேன்" என்றான். இவனுடை யியல்பையும்
திறனையுங் கருதி, "என் செய்யுளை யெல்லாம்
நல்லதோர் பிரதியில் நாடொறும் எழுதிக்
கொடுத்திடுந் தொழிலினைக் கொள்ளுதி" என்றேன்.
நன்றெனக் கூறியோர் நாழிகை யிருந்தான் ;
"செல்வேன்" என்றான் ; சினத்தொடு நானும்
பழங்கதை யெழுதிய பகுதியொன் றினையவன்
கையினிற் கொடுத்துக் "கவினுற இதனை
எழுதுக" என்றேன் ; இணங்குவான் போன்றதைக்
கையிலே கொண்டு கணப்பொழு திருந்தான் ;
"செல்வேன்" என்றான். சினந்தீ யாகினான்,
"ஏதடா, சொன்னசொல் அழித்துரைக் கின்றாய் ?

பித்தனென் றுன்னை உலகினர் சொல்வது
பிழையிலை போலும் $'' என்றேன். அதற்கு
''நானிவந் திவ்வினை நடத்துவேன்'' என்றான்.
''இத்தொழி லிங்கே இப்பொழு தெடுத்துச்
செய்கின் றனையா ? செய்குவ தில்லையா ?
ஒருரை சொல்'' என் றுறுமினேன். கண்ணனும்
''இல்லை'' யென் றிருசொல் இமைக்குமுன் கூறினன்.
வெடுக்கெனச் சினத்தீ வெள்ளமாப் பாய்ந்திடச்
கண்சிவந் திதழ்கள் துடித்திடக் கனன்றுநான்
''சீச்சீ, பேயே, சிறிதுபோழ் தேனும்
இனியென் முகத்தி னெதிர்நின் றிடாதே.
என்று மிவ்வுலகில் என்னிடத் தினிநீ
போந்திடல் வேண்டா, போபோ, போ''என்
றிடியுறச் சொன்னேன் ; கண்ணனும் எழுந்து
செல்குவ னுயினன். விழிநீர் சோர்ந்திட
''மகனே, போகுதி, வாழ்கநீ, நின்னைத்
தேவர் காத்திடுக ! நின்றனைச் செம்மை
செய்திடக் கருதி ஏதெதோ செய்தேன்.
தோற்றுவிட் டேனடா ! சூழ்ச்சிக ளழிந்தேன்.
மறித்தினி வாராய், செல்லுதி, வாழிநீ !''
எனத் துயர் நீங்கி, அமைதியோ டிசைத்தேன் ;
சென்றனன் கண்ணன் திரும்பியோர் கணத்தே
எங்கிருந் தோநல் லெழுதுகோல் கொணர்ந்தான் ;
காட்டிய பகுதியைக் கவினுற வரைந்தான்.
''ஐயனே, நின்வழி யனைத்தையுங் கொள்வேன்.
தொழில்பல புரிவேன். துன்பமிங் கென்றும்,
இனிநினக் கென்னுல் எய்திடா'' தெனப்பல
நல்லசொல் லுரைத்து நகைத்தனன் மறைந்தான்.
மறைந்ததோர் கண்ணன் மறுகணத் தென்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவா னுயினன் :
''மகனே, ஒன்றை யாக்குதல் மாற்றுதல்
அழித்திட லெல்லாம் நின்செய லன்றுகாண் ;

[மு - ப.] : $ 'பிழையிலைப் போலும்'

தோற்றே னெனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றுய் ; உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையுந் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க நீ'' என்றுன். வாழ்க மற்றவனே !

கண்ணன் – எனது சற்குரு

(புன்னகவராளி – திஸ்ரஜாதி - ஏகதாளம்.
ரஸங்கள் : அத்புதம், பக்தி)

சாத்தி ரங்கள்பல தேடினேன்—அங்கு
சங்கையில் லாதன சங்கையாம்—பழங்
கோத்தி ரங்கள்சொல்லு மூடர்தம்—பொய்மைக்
கூடையி லுண்மை கிடைக்குமோ ?—நெஞ்சில்
மாத்திர மெந்த வகையிலும்—சக
மாய முணர்ந்திடல் வேண்டுமே—என்னும்
ஆத்திர நின்ற திதனிடை—நித்தம்
ஆயிரந் தொல்லைகள் சூழ்ந்தன.

நாடு முழுதிலுஞ் சுற்றிநான்—பல
நாட்க ளலைந்திடும் போதினில்,—நிறைந்
தோடும் யமுனைக் கரையிலே—தடி
ஊன்றிச் சென்றுரோர் கிழவனுர் ;—ஒளி
கூடு முகமுந் தெளிவுதான்—குடி
கொண்ட விழியுஞ் சடைகளும்—வெள்ளைத்
தாடியுங் கண்டு வணங்கியே—பல
சங்கதி பேசி வருகையில், 2

என்னுளத் தாசை யறிந்தவர்—மிக
இன்புற் றுரைத்திட லாயினர்—''தம்பி,
நின்னுளத் திற்குத் தகுந்தவன்,—சுடர்
நித்திய மோனத் திருப்பவன்,—உயர்
மன்னர் குலத்திற் பிறந்தவன்,—வட
மாமது ரைப்பதி யாள்கின்றுன் ;—கண்ணன்
தன்னைச் சரணென்று போவை யால்,—அவன்
சத்தியங் கூறுவன்'' என்றனர். 3

மாமது ரைப்பதி சென்றுநான்—அங்கு
வாழ்கின்ற கண்ணனைப் போற்றியே ;—என்றன்
தாமமு மூருங் கருத்துமே—சொல்லி
நன்மை தருகென வேண்டினன் ;—அவன்
காமனைப் போன்ற வடிவமும்—இளங்
காளையர் நட்பும் பழக்கமும்—கெட்ட
பூமியைக் காக்குந் தொழிலிலே—எந்தப்
போதுஞ் செலுத்திடுஞ் சிந்தையும், 4

ஆடலும் பாடலும் கண்டுநான்—'முன்னர்
ஆற்றங் கரையினிற் கண்டதோர்—முனி
வேடந் தரித்த கிழவரைக்—கொல்ல
வேண்டு' மென் றுள்ளத்தி லெண்ணினேன்—'சிறு
நாடு புரந்திடு மன்னவன்—கண்ணன்
நாளுங் கவலையில் மூழ்கினேன் ;—தவப்
பாடுபட் டோர்க்கும் விளங்கிடா—உண்மை
பார்த்திவ னெங்ஙனங் கூறுவான் ?' 5

என்று கருதி யிருந்திட்டேன் ;—பின்னர்
என்னைத் தனியிடங் கொண்டுபோய்,—"நினை
நன்று மருவுக ! மைந்தனே !—பர
ஞான முரைத்திடக் கேட்பை நீ ;—நெஞ்சில்
ஒன்றுங் கவலையில் லாமலே—சிந்தை
ஊன்ற நிறுத்திக் களிப்புற்றே—தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில்—அங்கு
விண்ணை யளக்கு மறிவுதான் ; 6

சந்திரன் சோதி யுடையதாம் ;—அது
சத்திய நித்திய வஸ்துவாம் ;—அதைச்
சிந்திக்கும் போதினில் வந்துதான்—நினைச்
சேர்ந்து தழுவி யருள்செயும் ;—அதன்
மந்திரத் தாலிவ் வுலகெலாம்—வந்த
மாயக் களிப்பெருங் கூத்துக்காண் ;—'இதைச்
சந்ததம் பொய்யென் றுரைத்திடும்—மடச்
சாத்திரம் பொய்'யென்று தள்ளடா. 7

"ஆதித் தனிப்பொரு ளாகுமோர்—கடல்
ஆருங் குமிழி உயிர்களாம் ;—அந்தச்
சோதி யறிவென்னு ஞாயிறு—தன்னைச்
சூழ்ந்த கதிர்க ளுயிர்களாம் ;—இங்கு
மீதிப் பொருள்க ளெவையுமே—அதன்
மேனியில் தோன்றிடும் வண்ணங்கள் ;—வண்ண
நீதி யறிந்தின்ப மெய்தியே—ஒரு
நேர்மைத் தொழிலி லியங்குவார், 8

"சித்தத்தி லேசிவ நாடுவார்,—இங்கு
சேர்ந்து களித்துல காளுவார்,—நல்ல
மத்த மதவெங் களிறுபோல்—நடை
வாய்ந்திறு மாந்து திரிகுவார் ;—'இங்கு
நித்த நிகழ்வ தனைத்துமே—எந்தை
நீண்ட திருவரு ளால்வரும்—இன்பம்
சுத்த சுகந்தனி யாநந்தம்'—எனச்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே 9

"சோதி யறிவில் விளங்கவும்—உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும்—அற
நீதி முறைவழு வாமலே—எந்த
நேரமும் பூமித் தொழில்செய்து—கலை
ஓதிப் பொருளியல் கண்டுதாம்—பிறர்
உற்றிடுந் தொல்லைகள் மாற்றியே—இன்ப
மோதி விழிக்கும் விழியினர்—பெண்மை
மோகத்தில், செல்வத்தில், கீர்த்தியில், 10

"ஆடுதல், பாடுதல், சித்திரம்—கவி
யாதி யினைய கலைகளில்—உள்ளம்
ஈடுபட் டென்று நடப்பவர்—பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார்—அவர்
நாடும் பொருள்க ளனைத்தையும்—சில
நாளினி லெய்தப் பெறுகுவார்—அவர்
காடு புதரில் வளரினும்—தெய்வக்
காவன மென்றதைப் போற்றலாம். 11

"ஞானியர் தம்மியல் கூறினேன்—அந்த
ஞானம் விரைவினி லெய்துவாய்"—எனத்
தேனி லினிய குரலிலே—கண்ணன்
செப்பவு முண்மை நிலைகண்டேன்—பண்டை
ஈன மனிதக் கனவெலாம்—எங்ஙன்
ஏகி மறைந்தது கண்டிலேன் ;—அறி
வான தனிச்சுடர் நான் கணடேன் !—அதன்
ஆட லுலகென நான்கண்டேன் ! 12

கண்ணம்மா - என் குழந்தை

(பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு)

ராகம்-பைரவி] [தாளம்-ரூபகம்

ஸ ஸ ஸ — ஸா ஸா — பபப்†
தநீத — பதப — பா
பபப — பதப — பமா — கரிஸா
ரிகம — ரிகரி — ஸா

என்ற ஸ்வர வரிசைகளை மாதிரியாக வைத்துக் கொண்டு மனோபாவப்படி மாற்றிப் பாடுக.

1. சின்னஞ் சிறுகிளியே,—கண்ணம்மா !
செல்வக் களஞ்சியமே !
என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரியவந்தாய் !

2. பிள்ளைக் கனியமுதே,—கண்ணம்மா !
பேசும்பொற் சித்திரமே !
அள்ளி யணைத்திடவே—என் முன்னே
ஆடிவருந் தேனே !

[மூ-ப.] : ஸ ஸ ஸ—ஸா ஸா ஸா—ப ப் பா

3. ஓடி வருகையிலே,—கண்ணம்மா !
உள்ளங் குளிருதடீ ;
ஆடித்திரிதல் கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ.

4. உச்சி தனைமுகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடீ ;
மெச்சி யுனையூரார்—புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ.

5. கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ ;
உன்னைத் தழுவிடிலோ,—கண்ணம்மா !
உன்மத்த மாகுதடீ.

6. சற்றுன் முகஞ்சிவந்தால்—மனது
சஞ்சல மாகுதடீ ;
நெற்றி சுருங்கக்கண்டால்—எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ.

7. உன்கண்ணில் நீர்வழிந்தால்—என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ ;
என்கண்ணில் பாவையன்றே?—கண்ணம்மா !
என்னுயிர் நின்னதன்றே ?

8. சொல்லு மழலையிலே,—கண்ணம்மா !
துன்பங்கள் தீர்த்திடுவாய் ;
முல்லைச் சிரிப்பாலே—எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்.

9. இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ ?
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமொர் தெய்வமுண்டோ ?

10. மார்பி லணிவதற்கே—உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ ?
சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ ?

———

கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை

(கேதாரம்-கண்டஜாதி-ஏகதாளம.
ரஸங்கள் : அற்புதம், சிருங்காரம்.)

தீராத விளையாட்டுப் பிள்ளை—கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. (தீராத)

1. தின்னப் பழங்கொண்டு தருவான்;—பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்முல்—அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீராத)

2. தேனெத்த பண்டங்கள் கொண்டு—என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்;
மானெத்த பெண்ணடி* யென்பான்—சற்று
மனமகிழு நேரத்தி லேகிள்ளி விடுவான். (தீராத)

3. அழகுள்ள மலர்கொண்டு வந்தே—என்னை
அழஅழச் செய்துபின்,"கண்ணே மூடிக்கொள்;
குழலிலே சூட்டுவேன்" என்பான்—என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.(தீராத)

4. பின்னலைப் பின்னின் றிழுப்பான்;—தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே—புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீராத)

5. புள்ளாங் குழல்கொண்டு வருவான்;—அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே—அதைக்
கண்மூடி வாய்ந்திறந் தேகேட் டிருப்போம். (தீராத)

6. அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகி லும்பார்த்த துண்டோ?—கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றே?(தீராத)

[மு.-ப.] : *பெண்ணடி

7. விளையாட வாவென் றழைப்பான்;—வீட்டில்
வேலையென் றுலதைக் கேளா திழுப்பான் ;$
இளையாரொ டாடிக் குதிப்பான் :—எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான்.
(தீராத)

8. அம்மைக்கு நல்லவன், கண்டீர்!—மூவி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே,
எம்மைத் துயர்செய்யும் பெரியோர்—வீட்டில்
யாவர்க்கு நல்லவன் போலே நடப்பான். (தீராத)

9. கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன் ;—பொய்மை
சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன் ;
ஆளுக் கிசைந்தபடி பேசி—தெருவில்
அத்தனை பெண்களையு மாகா தடிப்பான். (தீராத)

கண்ணன் - என் காதலன்

(செஞ்சுருட்டி-திஸ்ர ஏக தாளம். சிருங்கார ரஸம்.)

1. தூண்டிற் புழுவினைப்போல்—வெளியே
சுடர் விளக்கினைப்போல்,
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சந் துடித்ததடீ.
கூண்டுக் கிளியினைப்போல்—தனிமை
கொண்டு மிகவுநொந்தேன் ;
வேண்டும் பொருளையெல்லாம்—மனது
வெறுத்து விட்டதடீ.

2. பாயின் மிசைநானும்—தனியே
படுத் திருக்கையிலே
தாயினைக் கண்டாலும்,—ஸகியே,
சலிப்பு வந்ததடி.
வாயினில் வந்ததெல்லாம்,—ஸகியே,
வளர்த்துப் பேசிடுவீர் ;
நோயினைப் போலஞ்சினேன்,—ஸகியே
நுங்க ளுறவையெல்லாம்.

[மு.-ப.] : $ கேளாதிருப்பான்

3. உணவு செல்லவில்லை ;—ஸகியே,
உறக்கங் கொள்ளவில்லை.
மணம் விரும்பவில்லை ;—ஸகியே,
மலர் பிடிக்கவில்லை ;
குண முறுதியில்லை ;—எதிலும்
குழப்பம் வந்ததடீ ;
கணமு முள்ளத்திலே—சுகமே
காணக் கிடைத்ததில்லை.

4. பாலுங் கசந்ததடீ ;—ஸகியே,
படுக்கை நொந்ததடீ.
கோலக் கிளிமொழியும்—செவியில்
குத்த லெடுத்ததடீ.
நாலு வயித்தியரும்—இனிமேல்
நம்புதற் கில்லையென்றார் ;
பாலத்துச் சோசியனும்—கிரகம்
படுத்து மென்றுவிட்டான்.

5. கனவு கண்டதிலே— ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்றுமல்,
இனம் விளங்கவில்லை,—எவனே
என்னகந் தொட்டு விட்டான்.
வினவக் கண்விழித்தேன் ;—ஸகியே,
மேனி மறைந்துவிட்டான் ;
மனதில் மட்டிலுமே—புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடீ.

6. உச்சி குளிர்ந்ததடீ ;—ஸகியே,
உடம்பு நேராச்சு.
மச்சிலும் வீடுமெல்லாம்—முன்னைப்போல்
மனத்துக் கொத்ததடீ.
இச்சை பிறந்ததடீ—எதிலும்
இன்பம் விளைந்ததடீ.
அச்ச மொழிந்ததடீ ;—ஸகியே,
அழகு வந்ததடீ.

7. எண்ணும்பொழுதி லெல்லாம்,—அவன்கை
இட்ட விடத்தினிலே
தண்ணென் றிருந்ததடீ;—புதிதோர்
சாந்தி பிறந்ததடீ;
எண்ணியெண்ணிப் பார்த்தேன்;—அவன்தான்
யாரெனச் சிந்தைசெய்தேன்;
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணின்முன் னின்றதடீ.

கண்ணன் - என் காதலன்

உறக்கமும் விழிப்பும்

(நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.
ரஸங்கள்; பீபத்ஸம், சிருங்காரம்.)

நேர மிகுந்ததின்னும் நித்திரையின்றி.—உங்கள்
நிஜைப்புத் தெரியவில்லை, கூத்தடிக்கிறீர்;
சோர னுறங்கிவிழு நள்ளிரவிலே—என்ன
தூளி படுகுதடி, இவ்விடத்திலே.
ஊரை யெழுப்பிவிட நிச்சயங்கொண்டீர்,—அன்னை
ஒருத்தி யுண் டென்பதையு மறந்துவிட்டீர்;
சார மிகுந்ததென்று வார்த்தைசொல்கிறீர்,—மிகச்
சலிப்புத் தருகுதடி சகிப்பெண்களே. 1

நானும் பலதினங்கள் பொறுத்திருந்தேன்,—இது
நாளுக்கு நாளதிக மாகிவிட்டதே;
கூன னெருவன்வந்திந் நாணிபின்னலைக்
கொண்டை மலர்சிதற நின்றிழுத்ததும்,
ஆன மதம்பிடித்திவ் வஞ்சியம்மையின்
அருகினி லோடஇவள் மூர்ச்சையுற்றதும்,
பானையில் வெண்ணெய்முற்றும் தின்று விட்டதால்
பாங்கி யுரோகிணிக்கு நோவுகண்டதும், 2

பத்தினி யாளையொரு பண்ணைவெளியில்
பத்துச் சிறுவர்வந்து முத்தமிட்டதும்,
நத்தி மகளினுக்கோர் சோதிடன்வந்து
நாற்ப தரசர்தம்மை வாக்களித்ததும்,

கொத்துக் கனல்விழியக் கோவினிப்பெண்ணைக்
கொங்கத்து மூளிகண்டு கொக்கரித்ததும்,
வித்தைப் பெயருடைய வீணியவளும்
மேற்குத் திசைமொழிகள் கற்றுவந்ததும், 3

எத்தனை பொய்களடி, என்னகதைகள் !
என்னை யுறக்கமின்றி இன்னல்செய்கிறீர் ;
சத்தமிடுங் குழல்கள் வீணைகளெல்லாம்
தாளங்க ளோடுகட்டி மூடிவைத்தங்கே,
மெத்த வெளிச்சமின்றி யொற்றைவிளக்கை
மேற்குச் சுவரருகில் வைத்ததன்பின்னர்,
நித்திரை கொள்ளஎனைத் தனியில்விட்டே
நீங்களெல் லோருமுங்கள் வீடுசெல்லுவீர். 4

பாங்கியர் போன பின்பு தனியிருந்து சொல்லுதல்

கண்க ளுறங்கவொரு காரணமுண்டோ,
கண்ணை இன்றிரவு காண்பதன்முன்னே ?
பெண்களெல் லோருமவர் வீடுசென்றிட்டார் ;
பிரிய மிகுந்தகண்ணன் காத்திருக்கின்றான் ;
வெண்கல வாணிகரின் வீதிமுனையில்
வேலிப் புறத்திலெனைக் காணடியென்றான் ;
கண்க ளுறங்கலெனுங் காரியமுண்டோ,
கண்ணனைக் கையிரண்டுங் கட்டலின்றியே ? 5

கண்ணன் - என் காதலன்

காட்டிலே தேடுதல்

(ஹிந்துஸ்தானி தோடி - ஆதி தாளம்.
ரஸங்கள் : பயாநகம், அற்புதம்.)

திக்குத் தெரியாத காட்டில்—உனைத்
தேடித் தேடி இளைத்தேனே.

1. மிக்க நலமுடைய மரங்கள்,—பல
விந்தைச் சுவையுடைய கனிகள்,—எந்தப்
பக்கத்தையு மறைக்கும் வரைகள்,—அங்கு
பாடி நகர்ந்துவரு நதிகள்,—ஒரு (திக்குத்)

2. நெஞ்சிற் கனல்மணக்கும் பூக்கள், —எங்கும்
நீளக் கிடைக்குமிலைக் கடல்கள்,—மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள்,—முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள்,—ஒரு (திக்குத்)

3. ஆசை பெறவிழிக்கும் மான்கள்,—உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள்,—நல்ல
நேசக் கவிதைசொல்லும் பறவை,—அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு,—ஒரு (திக்குத்)

4. தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத்தி னிற்கலங்கும் யானை—அதன்
முன்னின் றோடுமிள மான்கள்—இவை
முட்டா தயல்பதுங்குந் தவளை—ஒரு (திக்குத்)

5. கால்கை சோர்ந்துவிழ லானேன்—இரு
கண்ணுந் துயில்படர லானேன்—ஒரு
வேல்கைக் கொண்டுகொலை வேடன்—உள்ளம்
வெட்கங் கொண்டொழிய விழித்தான்—ஒரு
(திக்குத்)

6. "பெண்ணே, உனதழகைக் கண்டு—மனம்
பித்தங் கொள்ளு" தென்று நகைத்தான்—"அடி
கண்ணே, எனதிருகண் மணியே—உனைக்
கட்டித் தழுவமனங் கொண்டேன்.

7. சோர்ந்தே படுத்திருக்க லாமோ?—நல்ல
துண்டக் கறிசமைத்துத் தின்போம்—சுவை
தேர்ந்தே கனிகள்கொண்டு தருவேன்—நல்ல
தேங்கள் ளுண்டினிது களிப்போம்."

8. என்றே கொடியவிழி வேடன்—உயிர்
இற்றுப் போகவிழித் துரைத்தான்—தனி
நின்றே இருசரமுங் குவித்து—அந்த
நீசன் முன்னரிவை சொல்வேன்:

9. "அண்ணு, உனதடியில் வீழ்வேன்—எனை
அஞ்சச் கொடுமைசொல்ல வேண்டா—பிறன்
கண்ணலஞ் செய்துவிட்ட பெண்ணை—உன்றன்
கண்ணுற் பார்த்திடவுந் தகுமோ?"

10. "ஏடீ,சாத்திரங்கள் வேண்டேன்—நின
தின்பம் வேண்டுமடி, கனியே!—நின்றன்
மோடி கிருக்குதடி தலையை,—நல்ல
மொந்தைப் பழையகள்ளைப் போலே."

11. காதா லிந்தவுரை கேட்டேன்—'அட
கண்ணு!' வென்றலறி வீழ்ந்தேன்—மிகப்
போதாக வில்லையிதற் குள்ளே—என்றன்
போதந் தெளியநினைக் கண்டேன்.

12. கண்ணு, வேடனெங்கு போனான்?—உனைக்
கண்டே யலறிவிழுந் தானே?—மணி
வண்ணு ! எனதபயக் குரலில்—எனை
வாழ்விக்க வந்தஅருள் வாழி !

கண்ணன் - என் காதலன் (1)

பாங்கியைத் தூது விடுத்தல்

(தங்கப் பாட்டு மெட்டு. ரஸங்கள் : சிருங்காரம், ரௌத்ரம்)

கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம் -
அடி தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம் ;
எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம்—பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம். 1

கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம்—நாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம் ;
அன்னிய மன்னர்மக்கள் பூமியிலுண்டாம்—என்னும்
அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம். 2

சொன்ன மொழிதவறு மன்னவ னுக்கே—எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம் ;
என்ன பிழைகளிங்கு கண்டிருக் கின்றான்?—அவை
யாவுந் தெளிவு பெறக் கேட்டு விடடீ. 3

மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே தங்கம்—தலை
மறைந்து திரிபவர்க்கு மானமு முண்டோ ?
பொய்யை யுருவமெனக் கொண்டவ னென்றே—கிழப்
பொன்னி யுரைத்ததுண்டு தங்கமே தங்கம். 4

ஆற்றங் கரையதனில் முன்ன மொருநாள்—எனை
அழைத்துத் தனியிடத்திற் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம் 5

சோர மிழைத்திடையர் பெண்க ளூடனே—அவன்
சூழ்ச்சித் திறமைபல காட்டுவ தெல்லாம்
வீர மறக்குலத்து மாதரி டத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி விடடீ. 6

பெண்ணென்று பூமிதனிற் பிறந்து விட்டால்—மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம் ;
பண்ணொன்று வேய்ங்குழலில் ஊதி வந்திட்டான்—அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே. 7

நேர முழுதிலுமப் பாவி தன்னையே—உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம் ;
தீர ஒருசொலின்று கேட்டு வந்திட்டால்—பின்பு
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம். 8

கண்ணன் - என் காதலன் (2)

(ராகம் - பிலஹரி)

1. ஆசை முகமறந்து போச்சே—இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி ?
நேச மறக்கவில்லை நெஞ்சம்—எனில்
நினைவு முகமறக்க லாமோ ?

2. கண்ணில் தெரியுதொரு தோற்றம்—அதில்
கண்ண னழகு முழுதில்லை ;
நண்ணு முகவடிவு காணில்—அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணேம்.

3. ஓய்வு மொழிதலுமில் லாமல்—அவன்
உறவை நினைத்திருக்கு முள்ளம் ;
வாயு முரைப்பதுண்டு கண்டாய்—அந்த
மாயன் புகழினையெப் போதும்.

4. கண்கள் புரிந்துவிட்ட பாவம்—உயிர்க்
கண்ண னுருமறக்க லாச்சு ;
பெண்க ளினத்திலிது போலே—ஒரு
பேதையை முன்புகண்ட துண்டோ ?

5. தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வைய முழுதுமில்லை தோழி.

6. கண்ணன் முகமறந்து போலே—இந்தக்
கண்க ளிருந்துபய னுண்டோ ?
வண்ணப் படமுமில்லை கண்டாய்—இனி
வாழும் வழியென்னடி தோழி ?

கண்ணன் - என் காந்தன்

(வராளி. திஸ்ர ஏகதாளம். சிருங்கார ரஸம்.)

1. கனிகள் கொண்டுதரும்—கண்ணன்
கற்கண்டு போலினிதாய் ;
பனிசெய் சந்தனமும்—பின்னும்
பல்வகை யத்தர்களும்,
குனியும் வாண்முகத்தான்—கண்ணன்
குலவி நெற்றியிலே
இனிய பொட்டிடவே—வண்ண
மியன்ற சவ்வாதும்,

2. கொண்டை முடிப்பதற்கே—மணங்
கூடு தயிலங்களும்,
வண்டு விழியினுக்கே—கண்ணன்
மையுங் கொண்டுதரும் ;
தண்டைப் பதங்களுக்கே—செம்மை
சார்த்துசெம் பஞ்சுதரும் ;
பெண்டிர் தமக்கெல்லாம்—கண்ணன்
பேசருந் தெய்வமடீ !

3. குங்குமங் கொண்டுவரும்—கண்ணன்
குழைத்து மார்பெழுத;
சங்கையி லாதபணம்—தந்தே
தழுவி மையல்செய்யும் ;
பங்கமொன் றில்லாமல்—முகம்
பார்த்திருந் தாற்போதும் ;
மங்கள மாகுமடீ—பின்னேர்
வருத்த மில்லையடீ.

கண்ணம்மா - என் காதலி

காட்சி வியப்பு

(செஞ்சுருட்டி-ஏகதாளம். ரஸங்கள் : சிருங்காரம் ; அற்புதம்)

1. சுட்டும்விழிச் சுடர்தான்,—கண்ணம்மா !
சூரிய சந்திரரோ ?
வட்டக் கரியவிழி,—கண்ணம்மா !
வானக் கருமைகொல்லோ ?
பட்டுக் கருநீலப்—புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில்—தெரியும்
நக்ஷத்தி ரங்களடீ !

2. சோலைமல ரொளியோ—உனது
சுந்தரப் புன்னகைதான் ?
நீலக்கட லலையே—உனது
நெஞ்சி லலைகளடீ !
கோலக்குயி லோசை—உனது
குரலி னிமையடீ !
வாலைக் குமரியடீ,—கண்ணம்மா !
மருவக் காதல்கொண்டேன்.

3. சாத்திரம் பேசுகிறாய்,—கண்ணம்மா !
சாத்திர மேதுக்கடீ ?
ஆத்திரங் கொண்டவர்க்கே,—கண்ணம்மா !
சாத்திர முண்டோடீ ?
மூத்தவர் சம்மதியில்—வதுவை
முறைகள் பின்புசெய்வோம் ;
காத்திருப் பேனேடீ?—இது பார்,
கன்னத்து முத்தமொன்று !

கண்ணம்மா - என் காதலி

பின்னே வந்து நின்று கண் மறைத்தல்

(நாதநாமக்கிரியை - ஆதிதாளம். சிருங்கார ரஸம்.)

1. மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையுங் கடலையு நோக்கியிருந்தேன் ;
மூலைக் கடலினையவ் வானவனையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல்கண்டேன் ;
நீல நெருக்கிடையில் நெஞ்சுசெலுத்தி,
நேரங் கழிவதிலு நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற்கனவில்
தன்னை மறந்தலயந் தன்னிலிருந்தேன்.

2. ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே,
ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன்,
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்,

ஓங்கி வருமுவகை யூற்றிலறிந்தேன் ;
ஒட்டு மிரண்டுளத்தின் தட்டிலறிந்தேன் ;
'வாங்கி விடடிகையை யேடிகண்ணம்மா,
மாய மெவரிடத்தில்?' என்றுமொழிந்தேன்.

3. சிரித்த ஒலியிலவள் கைவிலக்கியே,
திருமித் தழுவி,''என்ன செய்திசொல்''லென்றேன் :
''நெரித்த திரைக்கடலில் என்னகண்டிட்டாய் ?
நீல விசும்பினிடை என்னகண்டிட்டாய் ?
திரித்த நுரையினிடை என்னகண்டிட்டாய் ?
சின்னக் குமிழிகளில் என்னகண்டிட்டாய் ?
பிரித்துப் பிரித்துநித மேகமளந்தே,
பெற்ற நலங்களென்ன ? பேசுதி''என்ருள்.

4. ''நெரித்த திரைக்கடலில் நின்முகங்கண்டேன் ;
நீல விசும்பினிடை நின்முகங்கண்டேன் ;
திரித்த நுரையினிடை நின்முகங்கண்டேன் ;
சின்னக் குமிழிகளில் நின்முகங்கண்டேன் ;
பிரித்துப் பிரித்துநித மேகமளந்தே,
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லே ;
சிரித்த ஒலியினிலுன் கைவிலக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.''

கண்ணம்மா - என் காதலி

முகத்திரை களைதல்

(நாதநாமக்கிரியை - ஆதி தாளம். சிருங்கார ரஸம்.)

தில்லித் துருக்கர்செய்த வழக்கமடீ—பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்துவைத்தல் ;
வல்லி யிடையினையும் ஒங்கிமுன் னிற்கும்—இந்த
மார்பையு மூடுவது சாத்திரங்கண்டாய் ;
வல்லி யிடையினையும் மார்பிரண்டையும்—துணி
மறைத்தத லைழகு மறைந்ததில்லே ;
சொல்லித் தெரிவதில்லே, மன்மதக்கலே—முகச்
சோதி மறைத்துமொரு காதலிங்குண்டோ ?

ஆரியர் முன்னெறிகள் மேன்மையென்கிறாய்?—பண்டை
ஆரியப் பெண்களுக்குத் திரைகளுண்டோ?
ஓரிரு முறைகண்டு பழகியபின்—வெறும்
ஒப்புக்குக் காட்டுவதிந் நாணமென்னடீ?
யாரிருந் தென்னையிங்கு தடுத்திடுவார்—வலு
வாக முகத்திரையை யகற்றிவிட்டால்?
காரிய மில்லையடி வீண்பசப்பிலே—கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பேனே? 2

——

கண்ணம்மா - என் காதலி

நாணிக் கண் புதைத்தல்

(நாதநாமக்கிரியை-ஆதி தாளம். சிருங்கார ரஸம்)

மன்னர் குலத்தினிடைப் பிறந்தவளோ—இவன்
மருவ நிகழ்ந்ததென்று நாணமுற்றதோ?
சின்னஞ் சிறுகுழந்தை யென்றகருத்தோ—இங்கு
செய்யத் தகாதசெய்கை செய்தவருண்டோ?
வன்ன முகத்திரையைக் கூந்திடென்றேன்—நின்றன்
மதங்கண்டு துகிலினை வலிதுரிந்தேன்.
என்ன கருத்திலடி கண்புதைக்கிறாய்?—எனக்
கெண்ணப் படுவதில்லை யேடிகண்ணம்மா! 1

கன்னி வயதிலுனைக் கண்டதில்லையோ?—கன்னங்
கன்றிச் சிவக்கமுத்த மிட்டதில்லையோ?
அன்னியமாக நம்முள் எண்ணுவதில்லை,—இரண்
டாவியுமொன் றுகுமெனக் கொண்டதில்லையோ?
பன்னிப் பலவுரைகள் சொல்லுவதென்னே?—துகில்
பறித்தவன் கைபறிக்கப் பயங்கொள்வனே?
என்னைப் புறமெனவுங் கருதுவதோ? கண்கள்
இரண்டினி லொன்றையொன்று கண்டுவெள்குமோ? 2

நாட்டினிற் பெண்களுக்கு நாயகர்சொல்லும்—சுவை
நைந்த பழங்கதைகள் நானுரைப்பதோ?
பாட்டுஞ் சுதியுமொன்று கலந்திடுங்கால்—தம்முட்
பன்னி யுபசரணை பேசுவதுண்டோ?

நீட்டுங் கதிர்களொடு நிலவுவந்தே—விண்ணை
நின்று புகழ்ந்துவிட்டுப் பின்மருவுமோ ?
மூட்டும் விறகிவையச் சோதிகவ்வுங்கால்—அவை
முன்னுப சாரவகை மொழிந்திடுமோ ? 3

சாத்திரக் காரரிடம் கேட்டுவந்திட்டேன் ;—அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினக்குரைப்பேன் ;
நேற்று முன்னாளில்வந்த உறவன்றடீ ;—மிக
நெடும்பண்டைக் காலமுதல் நேர்ந்துவந்ததாம்.
போற்றுமி ராமனென முன்புதித்தனே,—அங்கு
பொன்மிதி லேக்கரசன் பூமடந்தைநான் ;
ஊற்றமு தென்னவொரு வேய்ங்குழல் கொண்டோன்
கண்ணன் 4

உருவ நினக்கமையப் பார்த்தனங்குநான் ;
முன்னே மிகப்பழமை யிரணியனும்—எந்தை
மூர்க்கந் தவிர்க்கவந்த நரசிங்க னீ,
பின்னையொர் புத்தனென நான்வளர்ந்திட்டேன்—ஓவிப்
பெண்மை அசோதரையென் றுன்னையெய்தினேன்.
சொன்னவர் சாத்திரத்தில் மிகவல்லர்காண் ;—அவர்
சொல்லிற் பழுதிருக்கக் காரணமில்லை ;
இன்னுங் கடைசிவரை ஒட்டிருக்குமாம் ;—இதில்
ஏதுக்கு நாணமுற்றுக் கண்புதைப்பதே ? 5

கண்ணம்மா - என் காதலி

குறிப்பிடம் தவறியது

(செஞ்சுருட்டி - ஆதிதாளம். சிருங்கார ரஸம்)

1. தீர்த்தக் கரையினிலே—தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே,
பார்த்திருந் தால்வருவேன்—வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்றுசொன்னாய்.
வார்த்தை தவறிவிட்டாய்—அடி கண்ணம்மா !
மார்பு துடிக்குதடீ !
பார்த்த விடத்திலெல்லாம்—உன்னைப் போலவே
பாவை தெரியுதடி !

2. மேனி கொதிக்குதடீ—தலை சுற்றியே
வேதனை செய்குதடீ!
வானி லிடத்தையெல்லாம்—இந்த வெண்ணிலா
வந்து தழுவுதுபார்.
மோனத் திருக்குதடீ—இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும்—பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?

3. கடுமை யுடையதடீ—எந்த நேரமும்
காவலுன் மாளிகையில்;
அடிமை புகுந்தபின்னும்—எண்ணும்போதுநான்
அங்கு வருவதற்கில்லை;
கொடுமை பொறுக்கவில்லை—கட்டுங் காவலும்
கூடிக் கிடக்குதங்கே;
நடுமை யரசியவள்—எதற்காகவோ
நாணிக் குலைந்திடுவாள்.

4. கூடிப் பிரியாமலே—ஓரிராவெலாம்
கொஞ்சிக் குலவியங்கே
ஆடி விளையாடியே,—உன்றன்மேனியை
ஆயிரங் கோடிமுறை
நாடித் தழுவிமனக்—குறைதீர்ந்துநான்
நல்ல களியெய்தியே
பாடிப் பரவசமாய்—நிற்கவேதவம்
பண்ணிய தில்லையடி!

கண்ணம்மா - என் காதலி

யோகம்

பாயுமொளி நீ யெனக்கு, பார்க்கும்விழி நானுனக்கு;
தோயுமது நீ யெனக்கு, தும்பியடி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை, வாழிநின்றன் மேன்மை
யெல்லாம்;
தூயசுடர் வானெளியே! சூறையமுதே! கண்ணம்மா! 1

வீணையடி நீ யெனக்கு, மேவும்விரல் நானுனக்கு ;
பூணும்வட நீயெனக்கு, புதுவயிர நானுனக்கு ;
காணுமிடந் தோறுநின்றன் கண்ணிலொளி வீசுதடீ !
மாணுடைய பேரரசே ! வாழ்வுநிலையே ! கண்ணம்மா ! 2

வானமழை நீ யெனக்கு, வண்ணமயில் நானுனக்கு ;
பானமடி நீ யெனக்கு, பாண்டமடி நானுனக்கு ;‡
ஞானவொளி வீசுதடி, நங்கைநின்றன் சோதிமுகம் ;
ஊனமறு நல்லழகே! ஊறுசுவையே! கண்ணம்மா ! 3

வெண்ணிலவு நீ யெனக்கு, மேவுகடல் நானுனக்கு ;
பண்ணுசுதி நீ யெனக்கு, பாட்டினிமை நானுனக்கு ;
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமிலை†
நின்சுவைக்கே :
கண்ணின்மணி போன்றவளே ! கட்டியமுதே !
கண்ணம்மா ! 4

வீசுகமழ் நீ யெனக்கு, விரியுமலர் நானுனக்கு ;
பேசுபொருள் நீ யெனக்கு, பேணுமொழி நானுனக்கு ;
நேசமுள்ள வான்சுடரே ! நின்னழகை யேதுரைப்பேன் ?
ஆசைமது வே,கனியே, அள்ளுசுவையே! கண்ணம்மா ! 5

காதலடி நீ யெனக்கு, காந்தமடி நானுனக்கு ;
வேதமடி நீ யெனக்கு, வித்தையடி நானுனக்கு ;
போதமுற்ற போதினிலே பொங்கிவருந் தீஞ்சுவையே !
நாதவடி வானவளே ! நல்லவுயிரே கண்ணம்மா ! 6

நல்லவுயிர் நீ யெனக்கு, நாடியடி$ நானுனக்கு ;
செல்வமடி நீ யெனக்கு, சேமநிதி நானுனக்கு ;
எல்லையற்ற பேரழகே ! எங்குநிறை பொற்சுடரே !
மூல்லைநிகர் புன்னகையாய்! மோதுமின்பமே!கண்ணம்மா! 7

[பா - ம்.]: ‡'பாண்ட மிங்கு நானுனக்கு'
† எல்லையில்லை —கவிமணி
எண்ணமில்லை —முதற்பதிப்பு
$ நாடியது —கவிமணி

தாரையடி நீ யெனக்கு, தண்மதிய நானுனக்கு ;
வீரமடி நீ யெனக்கு, வெற்றியடி நானுனக்கு ;
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கு மின்பமெல்லாம்
ஒருருவ மாய்ச்சமைந்தாய் ! உள்ளமுதமே ! கண்ணம்மா! 8

———

கண்ணன் - என் ஆண்டான்

(புன்னகவராளி - திஸ்ர ஏகதாளம்.
ரஸங்கள் : அத்புதம், கருணை)

1. தஞ்ச முலகினில் எங்கணு மின்றித்
தவித்துத் தடுமாறி,
பஞ்சைப் பறைய னடிமை புகுந்தேன்,
பார முனக்காண்டே ;
ஆண்டே—பாரமுனக் காண்டே.

2. துன்பமு நோயு மிடிமையுந் தீர்த்துச்
சுகமரு ளல்வேண்டும் ;
அன்புட னின்புகழ் பாடிக் குதித்துநின்
ஆணை வழிநடப்பேன்.
ஆண்டே—ஆணைவழி நடப்பேன்.

3. சேரி முழுதும் பறையடித் தேயருட்
சீர்த்திகள் பாடிடுவேன் ;
பேரிகை கொட்டித் திசைக ளதிரநின்
பெயர் முழக்கிடுவேன்
ஆண்டே—பெயர் முழக்கிடுவேன்.

4. பண்ணைப் பறையர்தங் கூட்டத்தி லேயிவன்
பாக்கிய மோங்கிவிட்டான்
கண்ண னடிமை யிவனெனுங் கீர்த்தியில்
காதலுற் றிங்குவந்தேன் ;
ஆண்டே—காதலுற் றிங்குவந்தேன்.

5. காடு கழனிகள் காத்திடுவேன், நின்றன்
காலிகள் மேய்த்திடுவேன்;
பாடுபடச் சொல்லிப் பார்த்ததன் பின்னரென்
பக்குவஞ் சொல்லாண்டே!
ஆண்டே—பக்குவஞ் சொல்லாண்டே.

6. தோட்டங்கள் கொத்திச் செடிவளர்க்கச் சொல்லிச்
சோதனை போடாண்டே;
காட்டு மழைக்குறி தப்பிச்சொன்ன லெனைக்
கட்டியடி யாண்டே;
ஆண்டே—கட்டியடி யாண்டே.

7. பெண்டு குழந்தைகள் கஞ்சி குடித்துப்
பிழைத்திட வேண்டுமையே!
அண்டை யயலுக்கென் னுலுப காரங்கள்
ஆகிட வேண்டுமையே!
உபகாரங்கள்—ஆகிட வேண்டுமையே!

8. மானத்தைக் காக்கவோர் நாலு முழத்துணி
வாங்கித் தரவேணும்;
தானத்துக்குச் சில வேட்டிகள் வாங்கித்
தரவும் கடனுண்டே,
சில வேட்டி—தரவுங் கடனுண்டே.

9. ஒன்பது வாயிற் குடிலினைச் சுற்றி
யொருசில பேய்கள்வந்தே
துன்பப் படுத்துது, மந்திரஞ் செய்து
தொலைத்திட வேண்டுமையே!
பகையாவுந்—தொலைத்திட வேண்டுமையே!

10. பேயும் பிசாசுந் திருடரு மென்றன்
பெயரினைக் கேட்டளவில்,
வாயுங் கையுங்கட்டி அஞ்சி நடக்க
வழிசெய்ய வேண்டுமையே!
தொல்லைதீரும்—வழிசெய்ய வேண்டுமையே!

கண்ணம்மா - எனது குலதெய்வம்

(ராகம்—புன்னகவராளி)

பல்லவி

நின்னைச் சரணடைந்தேன்—கண்ணம்மா !
நின்னைச் சரணடைந்தேன் !

சரணங்கள்

1. பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
(நின்னை)

2. மிடிமையு மச்சமு மேவியென் னெஞ்சிற்
குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று
(நின்னை)

3. தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவுபெறும் வணம்
(நின்னை)

4. துன்ப மினியில்லை, சோர்வில்லை, தோற்பில்லை,
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட
(நின்னை)

5. நல்லது தீயது நாமறியோ மன்னை !
நல்லது நாட்டுக ! தீமையை யோட்டுக !
(நின்னை)

பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதத்தின் முதற் பாகத்திலுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமாறு:

ஸமர்ப்பணம்

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும்
இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள்
செய்யப்போகிற

வரகவிகளுக்கும்

அவர்களுக்குத் தக்கவாறு
கைங்கரியங்கள் செய்யப்போகிற

பிரபுக்களுக்கும்

இந் நூலைப் பாதகாணிக்கையாகச்
செலுத்துகிறேன்.

ஆசிரியன்

முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ்மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல்வேண்டும்.

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழி காட்டியாக.

இந் நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோரு முளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந் நூலை வியாசபாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ்நடைக்குமாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ்ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டு மென்று கங்கணங் கட்டிநிற்கும் பராசக்தியே என்னை இத் தொழிலிலே தூண்டிஞளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

—சுப்பிரமணிய பாரதி

ஓம் சக்தி

3. பாஞ்சாலி சபதம்

[முதற் பாகம்]

—: o :—

பிரம ஸ்துதி

ஓமெனப் பெரியோர் கள்—என்றும்
ஓதுவ தாய்,வினை மோதுவ தாய்,
தீமைகள் மாய்ப்பது வாய்,—துயர்*
தேய்ப்பது வாய்,நலம் வாய்ப்பது வாய்,
நாமமு முருவுமற் றே—மனம்
நாடரி தாய்ப்புந்தி தேடரி தாய்,
ஆமெனும் பொருளினைத் தாய்,—வெறும்
அறிவுட னெநந்த வியல்புடைத் தாய். 1

நின்றிடும் பிரமமென் பார் ;—அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடு வேன்,
நன்றுசெய் தவம்யோ கம்—சிவ
ஞானமும் பக்தியு நணுகிட வே,
வென்றிகொள் சிவசக்தி—எனை
மேவுற வேஇருள் சாவுற வே,
இன்றமிழ் நூலிது தான்—புகழ்
ஏய்ந்தினி தாயென்று மிலகிடவே. 2

ஸரஸ்வதி வணக்கம்

வெள்ளைக் கமலத்தி லே—அவள்
வீற்றிருப் பாள்,புக ழேற்றிருப் பாள்,
கொள்ளைக் கனியிசை தான்—நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப் பாள்,

[மூ - ப.] : *மாய்ப்பதுவாய்ப்—பவந்

கள்ளைக் கடலமு தை—நிகர்
கண்டதொர் பூந்தமிழ்க் கவிசொ லவே
பிள்ளைப் பருவத்தி லே—எனைப்
பேணவந் தாளருள் பூணவந் தாள். 3

† வேதத் திருவிழி யாள,—அதில்
மிக்கபல் லுரையெனுங் கருமையிட் டாள்,
சீதக் கதிர்மதி யே—நுதல்$
சிந்தனை யேகுழ லென்றுடை யாள்,‡
வாதத் தருக்கமெ னுஞ்—செவி
வாய்ந்தநற் றுணிவெனுந் தோடணிந் தாள்,
போதமெல் லுசியி னுள்,—நலம்
பொங்குபல் சாத்திர வாயுடை யாள். 4

கற்பனைத் தேனித ழாள்,—சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையி னுள்,
சிற்ப முதற்கலை கள்—பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப் பாள்,
சொற்படு நயமறி வார்—இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறி வார்
விற்பனத் தமிழ்ப்புல வோர்—அந்த
மேலவர் நாவெனு மலர்ப்பதத் தாள்: 5

வாணியைச் சரண்புகுந் தேன்;—அருள்
வாக்களிப் பாளெனத் திடமிகுந் தேன்;*
பேணிய பெருந்தவத் தாள்,—நிலம்
பெயரள வும்பெயர் பெயரா தாள்,
பூணியல் மார்பகத் தாள்,—ஐவர்
பூவை, திரௌபதி புகழ்க்கதை யை
மாணியல் தமிழ்ப்பாட் டால்—நான்
வகுத்திடக் கலிமகள் வாழ்த்துக வே. 6

[குறிப்பு]: †'வேதத் திருவிழியாள்' எனத் தொடங்கும் பாடல் கையெழுத்துப் பிரதியில் அடிக்கப்பட்டுள்ளதாகக் கவிமணி குறித்துள்ளார்.

[மு - ப.]: $'சீதக் கதிர் மதியா—நுதல்'
‡'சேர்ந்த தோரூகவண் குழலுடையாள்'
*'வாக் குத வுவளெனத் திட மிகுந்தேன்'

முதலாவது - அழைப்புச் சருக்கம்

ஹஸ்தினபுரம்

அத்தின புர முண் டாம் ;--இவ்
வவனியி லேயதற் கிணையிலை யாம் ;
பத்தியில் வீதிக ளாம் ;—வெள்ளைப்
பனிவரை போற்பல மாளிகை யாம் ;
முத்தொளிர் மாடங்க ளாம் ;—எங்கு
மொய்த்தளி சூழ்மலர்ச் சோலைக ளாம் ;
நத்தியல் வாவிக ளாம் ;—அங்கு
நாடு மிரதிநிகர் தேவிக ளாம் ; 7

அந்தணர் வீதிக ளாம் ;—மறை
யாதிக ளாம்கலைச் சோதிக ளாம் ;
செந்தழல் வேள்விக ளாம் ;—மிகச்
சீர்பெறுஞ் சாத்திரக் கேள்விக ளாம் ;
மந்திர கீதங்க ளாம் ;—தர்க்க
வாதங்க ளாம் ; தவ நீதங்க ளாம் ;
சிந்தையி லறமுண் டாம் ;$—எனிற்
சேர்ந்திடுங் கலிசெயு மறமுமுண் டாம். 8

மெய்த்தவர் பலருண் டாம் ;—வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண் டாம் ;
உய்த்திடு சிவஞா னங்—கனிந்
தோர்ந்திடு மேலவர் பலருண் டாம் ;
பொய்த்தவிந் திரசா லம்—நிகர்
பூசையுங் கிரியையும் புலைநடை யும்
கைத்திடு பொய்ம்மொழி யும்—கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பல ராம். 9

[மு - ப.]: $'சிந்தையி லறமு முண்டாம்'

மாலைகள் புரண்டசை யும்—பெரு
வரையெனத் திரண்டவன் மேனியுடை யார்,
வேலையும் வாளினை யும்—நெடு
வில்லையுந் தண்டையும் விரும்பிடு வார்,
காலையு மாலையி லும்—பகை
காய்ந்திடு தொழில்பல பழகிவெம் போர்
நூலையுந் தேர்ச்சி கொள் வோர்,—கரி
நூறினைத் தனிநின்று நொறுக்கவல் லார்.* 10

ஆரிய வேன்மற வர்,—புவி
யாளுமொர் கடுந்தொழி லினிதுணர்ந் தோர்,
சீரியல் மதிமுகத் தார்—மணித்
தேனித ழமுதென நுகர்ந்திடு வார்
வேரியங் கள்ளருந் தி—எங்கும்
வெம்மத யானைக ளெனத்திரி வார்,$
ராணி லிந்திரர் போல்—வளர்
பார்த்திவர் வீதிகள் பாடுவ மே. 11

நல்லிசை முழக்கங்க ளாம்;—பல
நாட்டிய மாதர்தம் பழக்கங்க ளாம்;
தொல்லிசைக் காவியங் கள்—அருந்
தொழிலுணர் சிற்பர்செ யோவியங் கள்
கொல்லிசை வாரணங் கள்—கடுங்
குதிரைக ளொடுபெருந் தேர்களுண் டாம்;
மல்லிசை போர்களுண் டாம்;—திரள்
வாய்ந்திவை பார்த்திடு வோர்களுண் டாம். 12

எண்ணரு கனிவகை யும்—இவை
இலகிநல் லொளிதரும் பணிவகை யும்,
தண்ணறுஞ் சாந்தங்க ளும்—மலர்த்
தார்களு மலர்விழிக் காந்தங்க ளும்

[மு - ப.]: * நொறுக்க வல்லோர்.
$ யானை களெனத் திரிவோர்.

சுண்ணமு நறும்புகை யும்—சுரர்
துய்ப்பதற் குரியபல் பண்டங்க ளும்
உண்ணநற் கனிவகை யும்—களி
யுவகையுங் கேளியு மோங்கின வே. 13

சிவனுடை நண்பனென் பார்,—வட
திசைக்கதி பதியள கேசனென் பார்,
அவனுடைப் பெருஞ்செல் வம்—இவர்
ஆவணந் தொறும்புகுந் திருப்பது வாம்;
தவனுடை வணிகர்க ளும்—பல
தரனுடைத் தொழில்செயு மாசன மும்
எவனுடைப் பயமுமி லா—தினி
திருந்திடுந் தன்மைய தெழினக ரே. 14

துரியோதனன் ஸபை

கன்னங் கரியது வாய்—அகல்
காட்சிய தாய்மிகு மாட்சிய தாய்
துன்னற் கினியது வாய்—நல்ல
சுவைதரு நீருடை யமுனையெ னும்
வன்னத் திருநதி யின்—பொன்
மருங்கிடைத் திகழ்ந்தவம் மணிநக ரில்,
மன்னவர் தங்கோ மான்—புகழ்
வாளர வக்கொடி யுயர்த்துநின் ரான். 15

துரியோ தனப்பெய ரான்,—நெஞ்சத்
துணிவுடை யான்,முடி பணிவறி யான்,
'கரியோ ராயிரத் தின்—வலி
காட்டிடு வான்'என்றக் கவிஞர்பி ரான்
பெரியோன் வேதமு னி—அன்று
பேசிடும் படிதிகழ் தோள்வலி யோன்,
உரியோர் தாமெனி னும்—பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனை யான், 16

தந்தைசொல் நெறிப்படி யே,—இந்தத்
தடந்தோள் மன்னவ னரசிருந் தான்.
மந்திர முணர்பெரி யோர்—பலர்
வாய்ந்திருந் தாரவன் சபைதனி லே,
அந்தமில் புகழுடை யான்,—அந்த
ஆரிய வீட்டுமன், அறமறிந் தோன்.
வந்தனை பெறுங்குர வோர்—பழ
மறைக்குல மறவர்க ளிருவரொ டே, 17

மெய்ந்நெறி யுணர்விது ரன்—இனி
வேறுபல் லமைச்சரும் விளங்கிநின் றார்;
பொய்ந்நெறித் தம்பிய ரும்—அந்தப்
புலைநடைச் சகுனியும் புறமிருந்தார்;
மைந்நெறி வான்கொடை யான்,—உயர்
மானமும் வீரமு மதியுமு ளோன்,
உய்ந்நெறி யறியா தான்—இறைக்
குயிர்நிகர் கன்னனு முடனிருந் தான். 18

துரியோதனன் பொருமை

வேறு

எண்ணி லாத பொருளின் குவையும்
யாங்கணுஞ் செலுஞ் சக்கர மாண்பும்
மண்ணி லார்க்கும் பெறலரி தாமோர்
வார் கடற்பெருஞ் சேனையு மாங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டு மின்பமும் பெற்றவ னேனும்
கண்ணி லாத்திரி தாட்டிரன் மைந்தன்
காய்ந்த நெஞ்சுட னெண்ணுவ கேளீர். 19

வேறு

'பாண்டவர் முடியுயர்த் தே—இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதொ ரரசா மோ?—என
தாண்மையும் புகழுமொர் பொருளா மோ?

காண்டகு வில்லுடை யோன்—அந்தக்*
காளை யருச்சுனன் கண்களி லும்
மாண்டகு திறல்வீ மன்—தட
மார்பிலு மெனதிகழ் வரைந்துள தே ! 20

'பாரத நாட்டிலுள் ள—முடிப்
பார்த்திவர் யார்க்கு மொர் பதியென் றே
நாரதன் முதன்முனி வோர்—வந்து
நாட் டிடத் தருமனவ் வேள்விசெய் தான் ;
சோரனவ் வெதுகுலத் தான்—சொலுஞ்
சூழ்ச்சியுந் தம்பியர் தோள்வலி யும்
வீரமி லாத்தரு மன்—தனே
வேந்தர்தம் முதலென விதித்தன வே.‡ 21

'ஆயிர முடிவேந் தர்—பதி
னாயிர மாயிரங் குறுநிலத் தார்
மாயிருந் திறைகொணர்ந் தே—அங்கு
வைத்ததொர் வரிசையை மறந்திட வோ ?
தூயிழை யாடைக ளும்—மணித்
தொடையலும் பொன்னு மொர் தொகைப்படு மோ ?
சேயிழை மடவா ரும்—பரித்
தேர்களுங் கொடுத்தவர் சிறுதொகை யோ ? 22

'ஆணிப்பொற் கலசங்க ளும்—ரவி
யன்னநல் வயிரத்தின் மகுடங்க ளும்
மாணிக்கக் குவியல்க ளும்—பச்சை
மரகதத் திரளுநன் முத்துக்க ளும்
பூணிட்ட திருமணி தாம்—பல
புதுப்புது வகைகளிற் பொலிவன வும்
காணிக்கை யாக்கொணர்ந் தார் ;—அந்தக்
காட்சியை மறப்பது மெளிதா மோ ? 23

[மூ - ப.]: *'வில்லுடையோன்—ஒருக்'
‡'முதலென மிலிந்தனவே'

'நால்வகைப் பசும்பொன் னும்—ஒரு
நாலா யிரவகைப் பணக்குவை யும்
வேல்வகை வில்வகையும்—அம்பு
விதங்களுந் தூணியும் வாள்வகை யும்
சூல்வகை தடிவகை யும்—பல
தொனிசெயும் பறைகளுங் கொணர்ந்துவைத் தே,
பால்வளர் மன்னவர் தாம்—அங்குப்
பணிந்ததை யென்னுள மறந்திடு மோ ? 24

'கிழவியர் தபசியர் போல்—பழங்
கிளிக்கதை படிப்பவன், பொறுமையென் றும்
பழவினை முடிவென் றும்—சொலிப்
பதுங்கி நிற்போன்,மறத் தன்மையி லான்,
வழவழத் தருமனுக் கோ—இந்த
மாநில மன்னவர் தலைமைதந் தார் ?
முழவினைக் கொடிகொண் டான்—புவி
முழுதையுந் தனியே குடிகொண் டான். 25

'தம்பியர் தோள்வலி யால்—இவன்
சக்கர வர்த்தியென் றுயர்ந்தது வும்,
வெம்பிடு மதகரி யான்—புகழ்
வேள்விசெய் தந்நிலை$ முழக்கிய தும்,
அம்புவி மன்னரெ லாம்—இவன்
ஆணைதஞ் சிரத்தினி லணிந்தவ ராய்
நம்பரும் பெருஞ்செல் வம்—இவன்
நலங்கிளர் சபையினிற் பொழிந்தது வும் 26

'எப்படிப் பொறுத்திடு வேன் ?—இவன்
இளமையின் வளமைக ளறியே னே ?
குப்பை கொலோமுத் தும் ?—அந்தக்
குரைகட னிலத்தவர் கொணர்ந்துபெய் தார் ;
சிப்பியும் பவளங்க ளும்—ஒளி
திரண்டவெண் சங்கத்தின் குவியல்க ளும்
ஒப்பில்வை டூரியமும்—கொடுத்
தொதுங்கிநின் றூரிவ னெருவனுக் கே. 27

[மு - ப.] : $ செய் தப்பத முழக்கியதும்.

'மலைநா டுடையமன் னர்—பல
மான்கொணர்ந் தார்,புதுத் தேன்கொணர்ந் தார்,
கொலைநால் வாய்கொணர்ந் தார்,—மலைக்
குதிரையும் பன்றியுங் கொணர்ந்துதந் தார்;
கலைமான் கொம்புக ளும்—பெருங்
களிறுடைத் தந்தமுங் கவரிக ளும்
விலையார் தோல்வகை யும்—கொண்டு
மேலும்பொன் வைத்தங்கு வணங்கிநின் றார். 28

'செந்நிறத் தோல்,கருந் தோல்,—அந்தத்
திருவளர் கதலியின் தோலுட் னே
வெந்நிறப் புலித்தோல் கள்,—பல
வேழங்க ளாடுக ளிவற்றுடைத் தோல்,
பன்னிற மயிருடைக ள்,—வில
பக ரரும் பறவைகள், விலங்கினங் கள்,
பொன்னிறப் பாஞ்சாலி—மகிழ்
பூத்திடுஞ் சந்தன மகில்வகை கள், 29

'ஏலங் கருப்பூ ரம்—நறும்
இலவங்கம் பாக்குநற் சாதி வகை,
கோலம் பெறக்கொணர்ந் தே—அவர்
கொட்டிநின் றார்,கரங் கட்டிநின் றார்;
மேலுந் தலத்திலு ள*—பல
வேந்தரப் பாண்டவர் விழைந்திட வே
ஓலந் தரக்கொணர்ந் தே—வைத்த
தொவ்வொன்று மென்மனத் துறைந்தது வே. 30

'மாலைகள் பொன்னுமுத் தும்—மணி
வகைகளிற் பூனைந்தவுங் கொணர்ந்துபெய் தார்;
சேலைகள் நூறுவன் னம்—பல
சித்திரத் தொழில்வகை சேர்ந்தன வாய்

[மு - ப.] :*தலத்திலுளார்

சாலவும் பொன்னிழைத் தே—தெய்வத்
தையலர் விழைவன பலர்கொணர்ந் தார் ;
கோலநற் பட்டுக்க ளின்—வகை
கூறுவதோ ? எண்ணி லேறுவ தோ ? 31

'கழல்களுங் கடகங்க ளும்—மணிக்
கவசமு மகுடமுங் கணக்கில வாம் ;
நிழனிறப் பரிபல வும்—செந்
நிறத்தன பலவும்வெண் ணிறம்பல வும்
தழனிற மேகநி றம்—விண்ணிற்
சாருமிந் திரவில்லே நேருநி றம்
அழகிய கிளிவயிற் றின்—வண்ணம்
ஆர்ந்தன வாய்ப்பணி சேர்ந்தன வாய் 32

'காற்றெனச் செல்வன வாய்,—இவை
கடிதுகைத் திடுந்திறன் மறவரோ டே,
போற்றிய கையின ராய்ப்—பல
புரவலர் கொணர்ந்தவன் சபைபுகுந் தார்.
சீற்றவன் போர்யா னே—மன்னர்
சேர்த்தவை பலபல மந்தையுண் டாம் ;
ஆற்றன் மிலேச்சமன் னர்—தொலை
அரபிய ரொட்டைகள் கொணர்ந்துதந் தார். 33

'தென்றிசைச் சாவக மாம்—பெருந்
தீவுதொட் டேவட திசையத னில்
நின்றிடும் புகழ்ச்சீ னம்—வரை
நேர்ந்திடும் பலபல நாட்டின ரும்,
வென்றிகொள் தருமனுக் கே,—அவன்
வேள்வியிற் பெரும்புகழ் விளையும்வண் ணம்,
நன்றுபல் (பொருள்)$ கொணர்ந் தார் ; —புவி
நாயகன் யுதிட்டிர னெனவுணர்ந் தார். 34

'ஆடுகள் சிலர்கொணர்ந் தார் ;—பலர்
ஆயிர மாயிரம் பசுக்கொணர்ந் தார் ;
மாடுகள் பூட்டின வாய்ப்—பல
வகைப்படு தானியஞ் சுமந்தன வாய்

[குறிப்பு]: $'பொருள்' என்ற சொல் ஊகித்துக் கொண்டது

ஈடுறு வண்டிகொண் டே—பலர்
எய்தினர் ; சுரும்புகள் பலர்கொணர்ந் தார் ;
நாடுறு தயிலவ கை—நறு
நானத்தின் பொருள்பலர் கொணர்ந்துதந் தார் ; 35

'நெய்க்குடங் கொண்டுவந் தார்,—மறை
நியமங்கொள் பார்ப்பனர் மகத்தினுக் கே ;
மொய்க்குமின் கள்வகை கள்—கொண்டு
மோதின ரரசின மகிழ்வுற வே ;
தைக்குநற் குப்பா யம்,—செம்பொற்
சால்வைகள், போர்வைகள், கம்பளங் கள்—
கைக்குமட் டினுந்தா ரே—அவை
காண்பவர் விழிகட்கும் அடங்குப வோ ? 36

'தந்தத்திற் கட்டில்க ளும்,—நல்ல
தந்தத்திற் பல்லக்கும், வாகன மும்,
தந்தத்தின் பிடிவா ளும்,—அந்தத்
தந்தத்திலே சிற்பத் தொழில்வகை யும்,
தந்தத்தி லாதன மும்,—பின்னுந்
தமனிய மணிகளி லெவையேனத் தும்
தந்தத்தைக் கணக்கிட வோ ?—முழுத்
தரணியின் திருவுமித் தருமனுக் கோ ?' 37

வேறு

என்றிவ் வாறு பலபல வெண்ணி
யேழை யாகி யிரங்குத லுற்றுன்,
வன்றி றத்தொரு கல்லெனு நெஞ்சன்,
வானம் வீழினு மஞ்சுத லில்லான்,
குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந் தெழுந்து வெளிப்படல் போல. 38

நெஞ்சத் துள்ளோர் பொருமை யெனுந்தீ
நீள்வதா லுள்ள நெக்குரு கிப்போய்,
மஞ்ச ளுண்மை மறந்திண்மை மானம்
வன்மை யாவு மறந்தன ளுகிப்
பஞ்சை யாமொரு பெண்மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப் பாளுய்க்
கொஞ்ச நேரத்திற் பாதகத் தோடு
கூடியே யுற வெய்திநின் ருளுல். 39

யாது நேரினு மெவ்வகை யானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட லெண்ணிச்
செய்கை யொன்றறி யான்திகைப் பெய்திச்
சூதும் பொய்யு முருவெனக் கொண்ட
துட்ட மாமனீத் தான்சர ணெய்தி,
'ஏது செய்வம்' எனச்சொல்லி நைந்தான்,
எண்ணத் துள்ளன யாவு முரைத்தே. 40

மன்னர் மன்னன் யுதிட்டிரன் செய்த
மாம கத்தினில் வந்து பொழிந்த
சொன்னம் பூண்மணி முத்திவை கண்டுந்
தோற்றங் கண்டு மதிப்பீனக் கண்டும்
என்ன பட்டது தன்னுள மென்றே
யீன மாம னறிந்திடும் வண்ணம்
முன்னந்தா னெஞ்சிற் கூறிய வெல்லாம்
மூடன் பின்னு மெடுத்து மொழிந்தான். 41

துரியோதனன் சகுனியிடம் சொல்வது

வேறு

'உலகு தொடங்கிய நாள்முத
லாகநஞ் சாதியில்—புகழ்
ஓங்குநின் ருரித் தருமனைப்
போலெவர் ?—மாம னே !

இலகு புகழ்மனு வாதி
முதுவர்க்கும், மாமனே !—பொரு
ளேற்றமு மாட்சியு
மிப்படி யுண்டுகொல்?—மாம னே !
கலைக ளுணர்ந்தநல் வேதியப்
பாவலர் செய்தவாம்—பழங்
கற்பனைக் காவியம்
பற்பல கற்றனை,—மாம னே !
பலகட வுட்டையு மிப்படி
வென்றதை யெங்கணும்—சொல்லப்
பார்த்ததுண் டோ ?கதை
கேட்டதுண் டோ ?புகல், மாமனே ! 42

'எதனை யுலகில் மறப்பினும்,
யானினி, மாமனே!—இவர்
யாகத்தை யென்று மறந்திட
லென்பதொன் றேது காண் ?
விதமுறச் சொன்னபொருட் குவை
யும்பெரி தில்லைகாண் ;—அந்த
வேள்வியி லென்னை வெதுப்பின
வேறு பலவுண் டே ;
இதனை யெலாமவ் விழியற்ற
தந்தையின் பாற்சென்றே—சொல்லி,
இங்கிவர் மீதவ னும்பகை
எய்திடச் செய்கு வாய் †
மிதமிகு மன்பவர் மீதுகொண்
டானவன் கேட்கவே,—அந்த
வேள்விகண் டென்னுயிர்
புண்படுஞ் செய்தி விளம்பு வாய். 43

'கண்ணைப் பறிக்கு மழகுடை
யாரிள மங்கையர்—பல
காமரு பொன்மணிப் பூண்க
ளணிந்தவர் தம்மை யே

[மூ - ப.]: †'யெய்திடச் செய்தியால்'

மண்ணைப் புரக்கும் புரவலர்
தாமந்த வேள்வியில்—கொண்டு
வாழ்த்தி யளித்தனர்
பாண்டவர்க் கே,யெங்கள்—மாம னே !
எண்ணைப் பழிக்குந் தொகையுடை
யாரிள மஞ்சரைப்—பலர்
ஈந்தனர் மன்ன ரிவர்தமக்
குத்தொண் டியற்ற வே ;
விண்ணைப் பிளக்குந் தொனியுடைச்
சங்குக ளூதினர் ;—தெய்வ
வேதியர் மந்திரத் தோடுபல்
வாழ்த்துக்க ளோதி னர். 44

'நாரதன் றனுமவ்
வேதவியாசனு மாங்ஙனே—பலர்
நாவிங் குரைத்தற்
கரியபெருமை முனிவரும்
மாரத வீரரப் பாண்டவர்
வேள்விக்கு வந்ததும்,—வந்து
மாமறை யாசிகள் கூறிப்
பெரும்புகழ் தந்த தும்,
வீரர்தம் போரி னரிய நற்
சாத்திர வாதங்கள்—பல
விப்பிரர் தம்முள் விளைத்திட
வுண்மைகள் வீச வே
சார மறிந்த யுதிட்டிரன்
கேட்டு வியந்ததும்,—நல்ல
தங்க மழைபொழிந் தாங்கவர்க்
கேமகிழ் தந்த தும், 45

'விப்பிர ராதிய நால்வரு
ணத்தவர் துய்ப்பவே—நல்
விருந்து செயலி லளவற்ற
பொன்செல விட்ட தும்,

'இப்பி றவிக்கு ளிலையொத்த
வேள்வி விருந்துகள்—புவி
யெங்களு நாங்கண்ட தில்லை'
யெனத்தொனி பட்ட தும்,
தப்பின்றி யேநல் விருந்தினர்
யார்க்குந் தகுதிகள்—கண்டு
தக்கசன் மான மளித்து
வரிசைக ளிட்ட தும்,
செப்புக நீயவ் விழியற்ற
தந்தைக்கு ; ''நின்மகன்—இந்தச்
செல்வம் பெருவிடிற் செத்திடு
வான்''என்றுஞ் செப்பு வாய். 46

'அண்ணன் மைந்த னவனிக்
குரியவன் யானன்றே?—அவர்
அடியவ ராகியெமைப் பற்றி
நிற்றல் விதியன் றே ?
பண்ணும் வேள்வியில் யார்க்கு
முதன்மை யவர்தந்தார்?—அந்தப்
பாண்ட வர்நமைப் புல்லென
வெண்ணுதல் பார்த்தை யோ ?
கண்ண னுக்கு முதலுப
சாரங்கள் காட்டினர் ;—சென்று
கண்ணி லாத்தந்தைக் கிச்செய
லின்பொருள் காட்டு வாய் ;
மண்ணில் வேந்தருட் கண்ணனெவ்
வாறு முதற்பட்டான்?—என்றன்
மாம னேயவ னம்மி
லுயர்ந்த வகைசொல் வாய். 47

'சந்திரன்குலத் தேபிறந்
தோர்தந் தலைவன்யான்—என்று
சகமெ லாஞ்சொலும் வார்த்தைமெய்
யோவெறுஞ் சால மோ ?

தந்தி ரத்தொழி லொன்றுண
ருஞ்சிறு வேந்தனே—இவர்
தரணி மன்னருள் மூற்பட
வைத்திடல் சாலுமோ?
மந்தி ரத்திலச் சேதியர்
மன்னனே மாய்த்திட்டார்;—ஐய!
மாம கத்தி லதிதியைக்
கொல்ல மரபுண்டோ?
இந்தி ரத்துவம் பெற்றிவர்
வாழு நெறிநன்றே!—இதை
எண்ணி யெண்ணியென் னெஞ்சு
கொதிக்குது, மாமனே. 48

'சதிசெய் தார்க்குச் சதிசெயல்
வேண்டும்என் மாமனே!—இவர்
தாமெ னன்பன் சராசந்த
னுக்குமு னெவ்வகை
விதிசெய் தார்?அதை யென்றுமெ
னுள்ள மறக்குமோ?—இந்த
மேதினி யோர்கள் மறந்துவிட்டார்,
இஃதோர் விந்தையே.
நிதிசெய் தாரைப் பணிகுவர்
மானிடர், மாமனே!—எந்த
நெறியி னுலது செய்யினும்,
நாயென நீள்புவி
துதிசெய் தேயடி நக்குதல்
கண்டனே, மாமனே!—வெறுஞ்
சொல்லுக் கேயற நூல்க
ளுரைக்குந் துணிவெலாம். 49

வேறு

'பொற்றடந் தேரொன்று வாலிகன்
கொண்டு விடுத்ததும்,—அதிற்
பொற்கொடி சேதியர்
கோமகன் வந்து தொடுத்ததும்,

உற்றதோர் தம்பிக்குத் தென்னவன்
மார்பணி தந்ததும்,—ஒளி
யோங்கிய மாலேயம் மாகதன்
ரூன்கொண்டு வந்த தும்,
பற்றல ரஞ்சும் பெரும்புக
ழேக லவியனே—செம்பொற்
பாதுகை கொண்டு யுதிட்டிரன்
தாளினி லார்த்த தும்
மூற்றிடு மஞ்சனத் திற்குப்
பலபல தீர்த்தங்கள்—மிகு
மொய்ம்புடை யானவ் வவந்தியர்
மன்னவன் சேர்த்ததும், 50

'மஞ்சன நீர்தவ வேதவி
யாசன் பொழிந்ததும்,—பல
வைதிகர் கூடிநன் மந்திர
வாழ்த்து மொழிந்த தும்,
குஞ்சரச் சாத்தகி வெண்குடை
தாங்கிட, வீமனும்—இளங்
கொற்றவ னும்பொற் சிவிறிகள்
வீச, இரட்டை யர்
அஞ்சுவர் போலங்கு நின்று
கவரி யிரட்டவே,—கடல்
ஆளு மொருவன் கொடுத்ததொர்
தெய்விகச் சங்கி னில்
வஞ்சகன் கண்ணன் புனிதமு
றுங் கங்கை நீர்கொண்டு—திரு
மஞ்சன மாட்டுமப் போதி
லெவரு மகிழ்ந்த தும் 51

'மூச்சை யடைத்த தடா !
சபை தன்னில் விழுந்து நான்—அங்கு
மூர்ச்சை யடைந்தது
கண்டனை யே ! என்றன் மாம னே !

ஏச்சையு மங்கவர் கொண்ட
நகைப்பையு மெண்ணுவாய் ;—அந்த
ஏந்திழை யாளு மெனைச்சிரித்
தாளிதை யெண்ணு வாய் ;
பேச்சை வளர்த்துப் பயனென்று
மில்லை,என் மாமனே !—அவர்
பேற்றை யழிக்கவு பாயஞ்சொல்
வாய்,என்றன் மாம னே !
தீச்செய னற்செய லேதெனி
னும்ஒன்று செய்து,நாம்—அவர்
செல்வங் கவர்ந்தவ ரைவிட
வேண்டுந் தெருவி லே.' 52

சகுனியின் சதி

வேறு

என்று சுயோதனன் கூறியே—நெஞ்சம்
ஈர்ந்திடக் கண்ட சகுனிதான்—'அட !
இன்று தருகுவன் வெற்றியே ;—இதற்
கித்தனை வீண்சொல் வளர்ப்பதேன் ?—இனி
ஒன்றுரைப் பேனல் லுபாயந் தான் ;—அதை
யூன்றிக் கருத்தொடு கேட்பையால் ;—ஒரு
மன்று பூனந்திடச் செய்திநீ,—தெய்வ
மண்டப மொத்த நலங்கொண்டே ; 53

'மண்டபங் காண வருவிரென்—றந்த
மன்னவர் தம்மை வரவழைத்—தங்கு
கொண்ட கருத்தை முடிப்பவே—மெல்லக்
கூட்டிவன் சூது பொரச்செய்வோம் ;—அந்த
வண்டரை நாழிகை யொன்றிலே—தங்கள்
வான்பொருள் யாவையுந் தோற்றுனப்—பணி
தொண்ட ரெனச்செய் திடுவன்யான்,—என் றன்
சூதின் வலிமை யறிவைநீ. 54

வெஞ்சமர் செய்திடு வோமெனில்—அதில்
வெற்றியும் தோல்வியும் யார்கண்டார்?—அந்தப்
பஞ்சவர் வீரம் பெரிதுகாண்!—ஒரு
பார்த்தன்கை வில்லுக் கெதிருண்டோ?—உன் றன்
நெஞ்சத்திற் சூதை யிகழ்ச்சியாக்—கொள்ள
நீதமில்லை, முன்னைப் பார்த்திவர்—தொகை
கொஞ்ச மிலைப்பெருஞ் சூதினில்—வெற்றி
கொண்டு பகையை யழித்துளோர். 55

'நாடுங் குடிகளுஞ் செல்வமும்—எண்ணி,
நானிலத் தோர்கொடும் போர்செய்வார்;—அன்றி
ஓடுங் குருதியைத் தேக்கவோ?—தமர்
ஊன்குவை கண்டு களிக்கவோ?—அந்த
நாடுங் குடிகளுஞ் செல்வமும்—ஒரு
நாழிகைப் போதினிற் சூதினில்—வெல்லக்
கூடு மெனிற்பிறி தெண்ணலேன்?—என்றன்
கொள்கை யிது'வெனக் கூறினன். 56

இங்கிது கேட்ட சுயோ தனன்—'மிக
இங்கிதஞ் சொல்லினை, மாமனே!'—என்று
சங்கிலிப் பொன்னின் மணியிட்ட—ஒளித்
தாமஞ் சகுனிக்குச் சூட்டினன்;—பின்னர்,
'எங்கும் புவிமிசை யுன்னைப்போல்—எனக்
கில்லை யினியது சொல்லுவோர்'—என்று
பொங்கு முவகையின் மார்புறக்—கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினன். 57

சகுனி திரிதராட்டிரனிடம் சொல்லுதல்

மற்றதன் பின்ன ரிருவரும்—அரு
மந்திரக் கேள்வி யுடையவன்—பெருங்
கொற்றவர் கோன்திரி தாட்டிரன்—சபை
கூடி வணங்கி யிருந்தனர்;—அருள்
அற்ற சகுனியுஞ் சொல்லுவான்:—'ஐய,
ஆண்டகை நின்மகன் செய்திகேள்;—உடல்
வற்றித் துரும்பொத் திருக்கின்றன்;—உயிர்
வாழ்வை முழுதும் வெறுக்கின்றன்; 58

'உண்ப சுவையின்றி யுண்கின்றான் ;—பின்
உடுப்ப திகழ வுடுக்கின்றான் ; —பழ
நண்பர்க ளோடுற வெய்திடான் ;—இள
நாரியரைச் சிந்தை செய்திடான் ;—பிள்ளை
கண்பசலை கொண்டு போயினான் ;—இதன்
காரணம் யாதென்று கேட்பையால் ;—உயர்
திண்பரு மத்தடந் தோளினாய்!'—என்று
தீய சகுனியுஞ் செப்பினான். 59

தந்தையு மிவ்வுரை கேட்டதால்—உளஞ்
சாலவுங் குன்றி வருந்தியே,—'என்றன்
மைந்த! நினக்கு வருத்தமேன்?—இவன்
வார்த்தையி லேதும் பொருளுண்டோ?—நினக்
கெந்த விதத்துங் குறையுண்டோ?—நினை
யாரு மெதிர்த்திடு வாருண்டோ?—நின்றன்
சிந்தையி லெண்ணும் பொருளெலாங்—கணந்
தேடிக் கொடுப்பவ ரில்லையோ? 60

'இன்னமு தொத்த வுணவுகள்,—அந்த
இந்திரன் வெஃ குறு மாடைகள்,—பலர்
சொன்ன பணிசெயு மன்னவர்,—வருந்
துன்பந் தவிர்க்கு மமைச்சர்கள்,—மிக
நன்னலங் கொண்ட குடிபடை,$—இந்த
நானில மெங்கும் பெரும்புகழ்—மிஞ்சி
மன்னுமப் பாண்டவச் சோதரர்—இவை
வாய்ந்து முனக்குத் துயருண்டோ?' 61

தந்தை வசனஞ் செவியுற்றே—கொடி
சர்ப்பத்தைக் கொண்டதொர் கோமகன்
வெந்தழல் போலச் சினங்கொண்டே—தன்னை
மீறிப் பலசொல் விளம்பினான் ;—இவன்

[மூ - ப.]: $ 'கொண்ட குடிவகை'

மந்த மதிகொண்டு சொல்வதை—அந்த
மாமன் மறித்துரை செய்குவான் :—'ஐய,
சிந்தை வெதுப்பத்தி ஞலிவன்—சொலும்
சீற்ற மொழிகள் பொறுப்பையால். 62

'தன்னுளத் துள்ள குறையெலாம்—நின்றன்
சந்நிதி யிற்சென்று சொல்லிட—முதல்
என்னைப் பணித்தனன் ; யானிவன்—றனை
யிங்கு வலியக் கொணர்ந்திட்டேன்;—பிள்ளை
நன்னய மேசிந்தை செய்கின்றன் ;—எனில்
நன்கு மொழிவ தறிந்திலன் ;—நெஞ்சைத்
தின்னுங் கொடுந்தழல் கொண்டவர்—சொல்லுஞ்
செய்தி தெளிய வுரைப்பரோ ? 63

'நீபெற்ற புத்திரனே யன்றே?—மன்னர்
நீதி யியல்பி லறிகின்றன்;—ஒரு
தீபத்திற் சென்று கொளுத்திய—பந்தத்
தேசு குறைய வெரியுமோ?—செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த்திடல்—மன்னர்
சாத்திரத் தேமுதற் சூத்திரம்;—பின்னும்
ஆபத் தரசர்க்கு வேறுண்டோ—தம்மில்
அன்னியர் செல்வ மிகுதல்போல்? 64

'வேள்வியி லன்றந்தப் பாண்டவர்—நமை
வேண்டுமட் டுங்குறை செய்தனர்;—ஒரு
கேள்வி யிலாதுன் மகன்றனைப்—பலர்
கேலிசெய் தேநகைத் தார்,கண்டாய்!—புவி
ஆள்வினை முன்னவர்க் கின்றியே—புகழ்
ஆர்ந்திளை யோரது கொள்வதைப்—பற்றி
வாள்விழி மாதரு நம்மையே—கய
மக்களென் றெண்ணி நகைத்திட்டார். 65

'ஆயிரம் யானை வலிகொண்டான்—உன்றன்
ஆண்டகை மைந்த னிவன்,கண்டாய்!—இந்த
மாயிரு ஞாலத் துயர்ந்ததா—மதி
வான்குலத் திற்கு முதல்வனும் ;—ஒளி

ஞாயிறு நிற்பவு மின்மினி—தன்னை
நாடித் தொழுதிடுந் தன்மைபோல்,—அவர்
வேயிருந் தூதுமொர் கண்ணனை—அந்த
வேள்வியிற் சால உயர்த்தினர். 66

'ஐயநின் மைந்தனுக் கில்லைகாண்—அவர்
அர்க்கிய முற்படத் தந்ததே;—இந்த
வையகத் தார்வியப் பெய்தவே,—புவி
மன்னவர் சேர்ந்த சபைதனில்—மிக
நொய்யதொர் கண்ணனுக் காற்றினர்;—மன்னர்
நொந்து மனங்குன்றிப் போயினர் ;—பணி
செய்யவுங் கேலிகள் கேட்கவும்—உன்றன்
சேயினை வைத்தனர் பாண்டவர். 67

'பாண்டவர் செல்வம் விழைகின்றன் ;—புவிப்
பாரத்தை வேண்டிக் குழைகின்றன்;—மிக
நீண்ட மகிதல முற்றிலும்—உங்கள்
நேமி செலும்புகழ் கேட்கின்றன் ;—குலம்
பூண்ட பெருமை கெடாதவா—றெண்ணிப்
பொங்குகின் றனலம் வேட்கின்றன் ;—மைந்தன்
ஆண்டகைக் கிஃது தகுமன்றே?—இல்லை
யாமெனில் வைய நகுமன்றே ? 68

'நித்தங் கடலினிற் கொண்டுபோய்—நல்ல
நீரை யளவின்றிக் கொட்டுமாம்—உயர்
வித்தகர் போற்றிடுங் கங்கையா—றது
வீணிற் பொருளை யழிப்பதோ ?—ஒரு
சத்த மிலாநடுக் காட்டினில்—புனல
தங்கிநிற் குங்குள மொன்றுண் டாம்;—அது
வைத்ததன் னீரைப் பிறர்கொளா—வகை
வாரடைப் பாசியில் மூடியே.* 69

'சூரிய வெப்பம் படாம லே—மரஞ்
சூழ்ந்த மலையடிக் கீழ்ப்பட்டே—முடை
நீரினை நித்தலுங் காக்குமாம் ;—இந்த
நீள்சுனை போல்வர் பலருண் டே?—எனில்

[பா. - ம்.] *"மூழ்கியே"

ஆரியர் செல்வம் வளர்தற்கே—நெறி
ஆயிர நித்தம் புதியன—கண்டு
வாரிப் பழம்பொரு ளெற்றுவார் ;—இந்த
வண்மையு நீயறி யாததோ?' 70

திரிதராட்டிரன் பதிற் கூறுதல்

கள்ளச் சகுனியு மிங்ஙனே—பல
கற்பனே சொல்லித் தனுள்ளத்தின்—பொருள்
கொள்ளப் பகட்டுதல் கேட்டபின்—பெருங்
கோபத்தொ டேதிரி தாட்டிரன்,—'அட,
பிள்ளையை நாசம் புரியவே—ஒரு
பேயென நீவந்து தோன்றினை;—பெரு
வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ?—இள
வேந்தரை நாய்வெல்ல லாகுமோ? 71

'சோதரர் தம்முட் பகையுண்டோ?—ஒரு
சுற்றத்திலே பெருஞ் செற்றமோ?—நம்மில்
ஆதரங் கொண்டவ ரல்லரோ?—முன்னர்
ஆயிரஞ் சூழ்ச்சி யிவன்செய் தும்—அந்தச்
சீதரன் றண்ணரு ளாலுமோர்—பெருஞ்
சீலத்தி னலும் புயவலி—கொண்டும்
யாதொரு தீங்குமி லாமலே—பிழைத்
தெண்ணருங் கீர்த்திபெற் றரன் றே? 72

'பிள்ளைப் பருவந் தொடங்கியே—இந்தப்
பிச்ச னவர்க்குப் பெரும்பகை—செய்து
கொள்ளப் படாத பெரும்பழி—யன்றிக்
கொண்டதொர் நன்மை சிறிதுண் டோ?—நெஞ்சில்
எள்ளத் தகுந்த பகைமையோ?—அவர்
யார்க்கு மினைத்த வகையுண்டோ?—வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கிறாய்,—பழ
நூலின் பொருளைச் சிதைக்கிறாய். 73

'மன்னவர் நீதி சொலவந்தாய் ;—பகை
மாமலை யைச்சிறு மட்குடம்—கொள்ளச்
சொன்னதொர் நூல்சற்றுக் காட்டுவாய்!—விண்ணீற்
சூரியன் போனிக ரின்றியே—புகழ்
துன்னப் புவிச்சக்க ராதிபம்—உடற்
சோதரர் தாங்கொண் டிருப்பவும்,—தந்தை
யென்னக் கருதி யவரெனைப்—பணிந்
தென்சொற் கடங்கி நடப்பவும், 74

'முன்னை யிவன்செய்த தீதெலா—மவர்
முற்று மறந்தவ ராகியே,—தன்னைத்
தின்ன வருமொர் தவலையைக்—கண்டு
சிங்கஞ் சிரித்தருள் செய்தல்போல்—துணை
யென்ன விவனை மதிப்பவும்—அவ
ரேற்றத்தைக் கண்டுமஞ் சாமலே—(நின்றன்
சின்ன மதியினை யென்சொல்வேன்!) பகை
செய்திட வெண்ணிப் பிதற்றினாய். 75

'ஒப்பில் வலிமை யுடையதாந்—துணை
யோடு பகைத்த லுறுதியோ ?—நம்மைத்
தப்பிழைத் தாரந்த வேள்வியில்—என்று
சால மெவரிடஞ் செய்கிறாய்?—மயல்
அப்பி விழிதடு மாறியே—இவன்
அங்குமிங் கும்விழுந் தாடல்கண்—டந்தத்
துப்பிதழ் மைத்துனி தான்சிரித்—திடில்
தோஷ மிதில்மிக வந்ததோ ? 76

'தவறி விழுபவர் தம்மையே—பெற்ற
தாயுஞ் சிரித்தல் மரபன் றோ?—எனில்
இவனைத் துணைவர் சிரித்ததோர்—செயல்
எண்ணரும் பாதக மாகுமோ ?—மனக்
கவலை வளர்த்திடல் வேண்டுவோர்—ஒரு
காரணங் காணுதல் கஷ்டமோ?—வெறும்
அவல மொழிக ளளப்பதேன்?—தொழி
லாயிர முண்டவை செய்குவீர். 77

'சின்னஞ் சிறிய வயதிலே—இவன்
தீமை யவர்க்குத் தொடங்கினன்—அவர்
என்னரும் புத்திர னென்றெண்ணித்—தங்கள்
யாகத் திவனைத் தலைக்கொண்டு—பசும்
பொன்னை நிறைத்ததொர் பையினை—'மனம்
போலச் செலவிடு வா'யென்றே—தந்து
மன்னவர் காண விவனுக்கே—தம்முள்
மாண்பு கொடுத்தன ரல்லரோ? 78

'கண்ணனுக் கேமுத லர்க்கியம்—அவர்
காட்டின ரென்று பழித்தனை !--எனில்
நண்ணும் விருந்தினர்க் கன்றியே—நம்முள்
நாமுப சாரங்கள் செய்வதோ—உற
வண்ணனுந் தம்பியு மாதலால்—அவ
ரன்னிய மானமைக் கொண்டிலர்;—முகில்
வண்ண னதியர் நம்முளே—முதல்
மாண்புடை யானெனக் கொண்டனர்; 79

'கண்ணனுக் கேயது சாலுமென்—றுயர்
கங்கை மகன்சொலச் செய்தனர்;—இதைப்
பண்ணரும் பாவமென் றெண்ணினுல்—அதன்
பார மவர்தமைச் சாருமோ?—பின்னுங்
கண்ணனே யேதெனக் கொண்டனை?—''அவன்
காலிற் சிறுதுக ளொப்பவர்—நிலத்
தெண்ணரு மன்னவர் தம்முளே—பிறர்
யாரு மிலை''யெனல் காணுவாய். 80

' ''ஆதிப் பரம்பொருள் நாரணன்,—தெளி
வாகிய பாற்கடல் மீதி லே—நல்ல
சோதிப் பணமுடி யாயிரம்—கொண்ட
தொல்லறி வென்னுமொர் பாம்பின் மேல்—ஒரு
போதத் துயில்கொளு நாயகன்,—கலை
போந்து புவிமிசைத் தோன்றினன்—இந்தச்
சீதக் குவளை விழியினன்''—என்று
செப்புவ ருண்மை தெளிந்தவர். 81

'நானெனு மாணவந் தள்ள லும்—இந்த
ஞாலத்தைத் தானெனைக் கொள்ள லும்—பர
மோன நிலையி னடத்தலும்—ஒரு
மூவகைக் காலங் கடத்தலும்—நடு
வான கருமங்கள் செய்தலும்—உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும்—பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதிலும்—தன
துள்ள மருளி னெகுதலும்,* 82

'ஆயிரங் கால முயற்சியாற்—பெற
லாவரிப் பேறுகள் ஞானியர்;—இவை
தாயின் வயிற்றிற் பிறந்தன்றே—தமைச்
சார்ந்து விளங்கப் பெறுவரேல்,—இந்த
மாயிரு ஞால மவர்தமைத்—தெய்வ
மாண்புடை யாரென்று போற்றுங்காண்!—ஒரு
பேயினே வேத முணர்த்தல்போற்—கண்ணன்
பெற்றி யுனக்கெவர் பேசுவார்?' 83

துரியோதனன் சினங் கொள்ளுதல்

வேறு

வெற்றி வேற்கைப் பரதர்தங் கோமான்,
மேன்மை கொண்ட விழியகத் துள்ளோன்,
பெற்றி மிக்க விதுர னறிவைப்
பின்னு மற்றொரு கண்ணெனக் கொண்டோன்,
முற்று ணர்திரி தாட்டிர னென்போன்
மூடப் பிள்ளைக்கு மாமன்சொல் வார்த்தை
எற்றி நல்ல வழக்குரை செய்தே
ஏன்ற வாறு நயங்கள் புகட்ட, 84

கொல்லு நோய்க்கு மருந்துசெய் போழ்திற்
கூடும் வெம்மைய தாய்ப்பிணக் குற்றே
தொல்லுணர்வின் மருத்துவன் றன்னைச்
சோர்வுறுத்துதல் போல்,ஒரு தந்தை

[பா - ம்.]: *''னகுதலும்''

சொல்லும் வார்த்தையி லேதெரு ளாதான்,
தோமி ழைப்பதி லோர்மதி யுள்ளான்,
கல்லு மொப்பிடத் தந்தை விளக்குங்
கட்டு ரைக்குக் கடுஞ்சின முற்றான். 85

துரியோதனன் தி மொழி

வேறு

பாம்பைக் கொடியென் றுயர்த்தவன்—அந்தப்
பாம்பெனச் சீறி மொழிகுவான் :—'அட!
தாம்பெற்ற மைந்தர்க்குத் தீதுசெய்—திடுந்
தந்தையர் பார்மிசை யுண்டுகொல் ?—கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர் ;—அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கின்றான்,—திருத்
தேடினு மென்னை யிகழ்கின்றான். 86

"மன்னர்க்கு நீதி யொருவகை—பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை"—என்று
சொன்ன வியாழ முனிவனை—இவன்
சுத்த மடையனென் றெண்ணி யே,—மற்றும்
என்னென்ன வோகதை சொல்கிறான்,—உற
வென்று நட்பென்றுங் கதைக்கிறான்,—அவர்
தின்ன முறச்செய வேதிறங்—கெட்ட
செத்தை யென் றென்னை நினைக்கிறான் ; 87

'இந்திர போகங்க ளென்கிறான்,—உண
வின்பமு மாதரி னின்பமும்.—இவன்
மந்திரமும் படை மாட்சியும்—கொண்டு
வாழ்வதை விட்டிங்கு வீணி லே—பிறர்
செந்திருவைக் கண்டு வெம்பியே—உளந்
தேம்புதல் பேதைமை யென்கிறான் ;—மன்னர்
தந்திரந் தேர்ந்தவர் தம்மிலே—எங்கள்
தந்தையை யொப்பவ ரில்லை,காண்! 88

'மாதர்த மின்ப மெனக்கென்றுன்,—புவி
மண்டலத் தாட்சி யவர்க்கென்றுன் ;—நல்ல
சாதமு நெய்யு மெனக்கென்றுன்,எங்கும்
சாற்றிடுங் கீர்த்தி யவர்க்கென்றுன் ;—அட !
ஆதர விங்ஙனம் பிள்ளேமேல்—வைக்கும்
அப்ப னுலகினில் வேறுண்டோ ?—உயிர்ச்
சோதரர் பாண்டவர், தந்தைநீ—குறை
சொல்ல இனியிட மேதையா ! 89

'சொல்லி னயங்க ளறிந்திலேன்,—உனேச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன் ;—கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ ?—நினேக்
காரணங் காட்டுத லாகுமோ ?—என்னேக்
கொல்லினும் வேறெது செய்யினும்,—நெஞ்சிற்
கொண்ட கருத்தை விடுகிலேன் ;—அந்தப்
புல்லியப் பாண்டவர் மேம்படக்—கண்டு
போற்றி யுயிர்கொண்டு வாழ்கிலேன் ; 90

'லாது நின்னேடு தொடுக்கிலேன் ;—ஒரு
வார்த்தை மட்டுஞ்சொலக் கேட்பையால் :—ஒரு
தீது நமக்கு வாராமலே—வெற்றி
சேர்வதற் கோர்வழி யுண்டு,காண் !—களிச்
சூதுக் கவரை யழைத்தெலாம்—அதில்
தோற்றிடு மாறு புரியலாம் ;—இதற்
கேதுந் தடைகள்சொல் லாம்லே—என
தெண்ணத்தை நீகொளல் வேண்டுமால்.' 91

திரிதராட்டிரன் பதில்

வேறு

திரிதாட் டிரன்செவியில்—இந்தத்
தீமொழி புகுதலுந் திகைத்து விட்டான் ;
'பெரிதாத் துயர்கொணர்ந் தாய் ;—கொடும்
பேயெனப் பிள்ளேகள் பெற்றுவிட்டேன் !

அரிதாக் குதல்போலே—அமர்
ஆங்கவ ரொடுபொர லவலமென்றேன்;
நரிதாக் குதல்போலாம்—இந்த
நாணமில் செயலினை நாடுவனே?

'ஆரியர் செய்வா ரோ?—இந்த
ஆண்மை யிலாச்செய லெண்ணுவரோ?
பாரினிற் பிறருடைமை—வெஃகும்
பதரினைப் போலொரு பதருண் டோ?
பேரியற் செல்வங்களும்—இசைப்
பெருமையு மெய்திட விரும்புதியேல்,
காரிய மிதுவாமோ?—என்றன்
காளையன் றே?இது கருதலடா!

'வீரனுக் கேயிசைவார்—திரு
மேதினி யெனுமிரு மனைவியர்தாம்;
ஆரமர் தமரல்லார்—மிசை
யாற்றிநல் வெற்றியி லோங்குதியேல்,
பாரத நாட்டினிலே—அந்தப்
பாண்டவ ரெனப்புகழ் படைத்திடுவாய்;
சோரர்தம் மகனேநீ?—உயர்
சோமன்ற னெருகுலத் தோன்றலன்றே?

'தம்மொரு கருமத்திலே—நித்தந்
தளர்வறு முயற்சி,மற் றேர்பொருளே
இம்மியுங் கருதாமை,—சார்ந்
திருப்பவர் தமைநன்கு காத்திடுதல்—
இம்மையி லிவற்றினை யே—செல்வத்
திலக்கண மென்றனர் மூதறிஞர்.
அம்ம,இங் கிதனையெலாம்—நீ
அறிந்திலை யோ?பிழை யாற்றல்நன் றே?

'நின்னுடைத் தோளினையார்—இள
நிருபரைச் சிதைத்திட நினைப்பாயோ?
என்னுடை யுயிரன்றே?—எனை
யெண்ணிக் கொள்கையை நீக்குதியால்!

பொன்னுடை மார்பகத்தார்—இளம்
பொற்கொடி மாதரைக் களிப்பதினும்
இன்னும்ப லின்பத்தினும்—உளம்
இசையவிட் டேயிதை மறந்திடடா.' 96

துரியோதனன் பதில்

வேறு

தந்தை யிஃது மொழிந்திடல் கேட்டே,
தாரி சைந்த நெடுவரைத் தோளான்:
'எந்தை, நின்னெடு வாதிடல் வேண்டேன்
என்று பன்முறை கூறியுங் கேளாய்;
வந்த காரியங் கேட்டி;மற் றுங்குன்
வார்த்தை யின்றியப் பாண்டவர் வாரார்;
இந்த வார்த்தை யுரைத்து விடாயேல்,
இங்கு நின்முனென் னுவி யிறுப்பேன். 97

'மதித மக்கென் றிலாதவர் கோடி
வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியுஞ் சாத்திரத் துள்ளுறை காணூர்,
பானைத் தேனி லகப்பையைப் போல்வார்;
துதிகள் சொல்லும் விதுரன் மொழியைச்
சுருதி யாமெனக் கொண்டனை நீதான்;
அதிக மோக மவனுளங் கொண்டான்
ஐவர் மீதிலிங் கெம்மை வெறுப்பான். 98

'தலைவ னுங்கு பிறர்கையிற் பொம்மை;
சார்ந்து நிற்பவர்க் குய்ந்நெறி யுண்டோ?
உலைவ லால்,திரி தாட்டிர வர்க்கத்
துள்ள வர்க்கு நலமென்ப தில்லை;
நிலையி லாதன செல்வமு மாண்பும்
நித்தந் தேடி வருந்த லிலாமே
''விலையி லாநிதி கொண்டனம்'' என்றே
மெய்கு ழைந்து துயில்பவர் மூடர். 99

'பழைய வானிதி போதுமென் றெண்ணிப்
பாங்கு காத்திடு மன்னவர் வாழ்வை
விழையு மன்னிய ரோர்கணத் துற்றே
வென்ற ழிக்கும் விதியறி யாயோ?
குழைத லென்பது மன்னவர்க் கில்லை;
கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும்;
பிழையொன் றேயர சர்க்குண்டு, கண்டாய்:
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல். 100

வேறு

'வெல்வதெங் குலத்தொழிலாம்;—எந்த
விதத்தினி லிசையினுந் தவறிலைகாண்!
நல்வழி தீயவழி—என
நாமதிற் சோதனை செயத்தகு மோ?
செல்வழி யாவினு மே—டகை
தீர்த்திடல் சாலுமென் றனர்பெரியோர்;
கொல்வது தான்படை யோ?—பகை
குமைப்பன யாவுநற் படையலவோ? 101

வேறு

'சுற்றத் தாரிவ ரென்றனை யையா!
தோற்றத் தாலும் பிறவியி னலும்,
பற்றலா ரென்று நண்பர்க ளென்றும்
பார்ப்ப தில்லை யுலகினில் யாரும்;
மற்றெத் தாலும் பகையுற லில்லை;
வடிவினி லில்லை, யளவினி லில்லை;
உற்ற துன்பத்தி னுற்பகை யுண்டாம்,
ஓர்தொழில் பயில் வார்தமக் குள்ளே. 102

'பூமித் தெய்வம் விழுங்கிடுங் கண்டாய்
புரவ லர்பகை காய்கிலர் தம்மை.
நாமிப் பூதலத் தேகுறை வெய்த
நாளும் பாண்டவ ரேறுகின் றூரால்.

நேமி மன்னர் பகைசிறி தென்றே
நினைவ யர்ந்திருப் பாரெனில், நோய்போல்,
சாமி, யந்தப் பகைமிக லுற்றே
சடிதி மாய்த்திடு மென்பதுங் காணுய். 103

'போர்செய் வோமெனில் நீதடுக் கின்றுய் ;
புவியி னேரும் பழிபல சொல்வார் ;
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வது மாங்கெளி தன்றும் ;
யார்செய் புண்ணியத் தோநமக் குற்றுன்
எங்க ளாருயிர் போன்றவிம் மாமன் ;
நேர்செய் சூதினில் வென்று தருவான் ;
நீதித் தர்மனுஞ் சூதிலன் புள்ளோன். 104

'பகைவர் வாழ்வினி லின்புறு வாயோ ?
பார தர்க்கு முடிமணி யன்னுய் !
புகையு மென்ற னுளத்தினே வீறில்
புன்சொற் கூறி யவித்திட லாமோ ?
நகைசெய் தார்தமை நாளே நகைப்போம் ;
நமரிப் பாண்டவ ரென்னி லிஃதாலே
மிகையுறுந் துன்ப மேது?நம் மோடு
வேறு ரூதெமைச் சார்ந்துநன் குய்வார். 105

'ஐய, சூதிற் கவரை யழைத்தால்,
ஆடி யுய்குதும் ; அஃ தியற் ரூயேல்,
(பொய்யன் றென்னுரை ; என்னியல் போர்வாய் ;
பொய்ம்மை வீறென்றுஞ் சொல்லிய துண்டோ?)
நையு நின்முன ரென்சிரங் கொய் தே
நானிங் காவி யிறுத்திடு வேனுல் ;
செய்ய லாவது செய்குதி' யென்ரூன் ;
திரித ராட்டிர னெஞ்ச மூடைந்தான். 106

திரிதராட்டிரன் ஸம்மதித்தல்

வேறு

'விதிசெயும் விஜேவினுக்கே—இங்கு
வேறுசெய் வார்புவி மீதுளரோ?
மதிசெறி விதுர னன்றே—இது
வருந்திற னறிந்துமுன் னெனக்குரைத்தான்.
" அதிசயக் கொடுங் கோலம்—விஜேந்
தரசர்தங் குலத்தினை யழிக்கு"மென்றான்;
சதிசெயத் தொடங்கி விட்டாய்;—" நின்றன்
சதியினிற் றனது விஜேயு"மென்றான். 107

'விதி!விதி! விதி!மகனே—இனி
வேறெது சொல்லுவ டைமகனே!
கதியுறுங் கால னன்றே—இந்தக்
கய மக னெனநினைச் சார்ந்துவிட்டான்?
கொதியுறு முளம் வேண்டா;—நின்றன்
கொள்கையின் படியவர் தமையழைப்பேன்;
வதியுறு மனைசெல்வாய்,'—என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான். 108

சபா நிர்மாணம்

வேறு

மஞ்சனு மாமனும் போயின பின்னர்,
மன்னன் வினைஞர் பலரை யழைத்தே,
'பஞ்சவர் வேள்வியிற் கண்டது போலப்
பாங்கி னுயர்ந்ததொர் மண்டபஞ் செய்வீர்!
மிஞ்சு பொருளதற் காற்றுவன்' என்றான்;
மிக்க வுவகையொ டாங்கவர் சென்றே
கஞ்ச மலரிற் கடவுள் வியப்பக்
கட்டி நிறுத்தினர் பொற்சபை யொன்றே. 109

வேறு

வல்லவ னுக்கிய சித்திரம் போலும்,
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்,
நல்ல தொழிலுணர்ந் தார்செய லென்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லியு மண்ணியும் பொன்னியுங் கொண்டு
காமர் மணிகள் சிலசில சேர்த்துச்
சொல்லி யிசைத்துப் பிறர்செயு மாறே
சுந்தர மாமொரு காப்பியஞ் செய்தார். 110

விதுரனைத் தூதுவிடல்

தம்பி விதுரனை மன்ன னழைத்தான் ;
‘ தக்க பரிசுகள் கொண்டினி தேகி,
யெம்பியின் மக்க ளிருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்,
“ கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி யழைத்தனன், கௌரவர் கோமான்
நல்லதொர் நுந்தை ” யெனவுரை செய்வாய். 111

‘ நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறும்
நன்மணி மண்டபஞ் செய்ததுஞ் சொல்வாய் ;
“ நீடு புகழ்ப்பெரு வேள்வியி லந்நாள்
நேயமொ டேகித் திரும்பிய பின்னர்
பீடுறு மக்களை யோர்முறை யிங்கே
பேணி யழைத்து விருந்துக ளாற்றக்
கூடும் வயதிற் கிழவன் விரும்பிக்
கூறின னிஃதெ”னச் சொல்லுவை கண்டாய். 112

‘ பேச்சி னிடையிற் “ சகுனிசொற் கேட்டே
பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட
தீச்செய லிஃதெ”ன் றதையுங் குறிப்பாற்
செப்பிடு வாய்’ என மன்னவன் கூறப்

'போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்;
ஐய, விதனைத் தடுத்த லரிதோ?' 113

என்று விதுரன் பெருந்துயர் கொண்டே
ஏங்கிப் பலசொ லியம்பிய பின்னர்,
'சென்று வருகுதி, தம்பி, யினிமேல்
சிந்தனை யேது மிதிற்செய மாட்டேன்.
வென்று படுத்தனன் வெவ்விதி யென்னை;
மேலை வினைவுகள் நீயறி யாயோ?
அன்று விதித்ததை யின்று தடுத்தல்
யார்க் கெளி'தென்றுமெய் சோர்ந்து விழுந்தான். 114

விதுரன் தூது செல்லுதல்

வேறு

அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்;
அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தா மரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்க ணோக்கி
எண்ணமுற லாகித்த னிதயத் துள்ளே
யினையபல மொழிகூறி யிரங்கு வானால். 115

'நீல முடிதரித்த பலமலைசேர் நாடு,
நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு,
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையு நறுநெய்யுந் தேனு முண்டு
பண்ணவர் போல் மக்களெலாம் பயிலுநாடு, 116

'அன்னங்கள் பொற்கமலத் தடத்தி னூர
அளிமுரலக் கிளிமழலே யரற்றக் கேட்போர்
கன்னங்க ளமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்னங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச,
வன்னங்கொள் வரைத்தோளார் மகிழ, மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு, 117

'பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு,
பெண்க ளெல்லாம் அரம்பையர்போ லொளிருநாடு,
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு,
சோரமுதற் புன்மையெதுந் தோன்ரு நாடு,
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு,
பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே !' 118

விதுரனே வரவேற்றல்

வேறு

விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே,
வீறுடை யைவ ருளமகிழ் பூத்துச்
சதுரங்க சேனை யுடன்பல பரிசும்
தாளமு மேளமுந் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து, மணிமுடி தாழ்த்தி,
யேந்தல் விதுரன் பதமலர் போற்றி,
மதுர மொழியிற் குசலங்கள் பேசி,
மன்ன ளெடுந்திரு மாளிகை சேர்ந்தார். 119

குந்தி யெனும்பெயர்த் தெய்வதந் தன்னைக்
கோமகன் கண்டு வணங்கிய பின்னர்,
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி,

அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததொர் மாம னடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்றுள். 120

தங்கப் பதுமை யெனவந்து நின்ற
தையலுக் கையனல் லாசிகள் கூறி
அங்கங் குளிர்ந்திட வாழ்த்திய பின்னர்,
ஆங்குவந் துற்ற உறவினர் நண்பர்
சிங்க மெனத்திகழ் வீரர் புலவர்
சேவகர் யாரொடுஞ் செய்திகள் பேசிப்
பொங்கு திருவி னகர்வலம் வந்து
போழ்து கழிந்திர வாகிய பின்னர், 121

விதுரன் அழைத்தல்

ஐவர் தமையுந் தனிக்கொண்டு போகி,
ஆங்கொரு செம்பொன் னரங்கி லிருந்தே:—
'மைவரைத் தோளன், பெரும்புக ழாளன்,
மாமகள் பூமகட் கோர்மண வாளன்,
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்,
வேந்தர் பிரான், திரி தாட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந்திட நும்மைச்*
சீரொடு நித்தலும் வாழ்கென வாழ்த்தி, 122

'உங்களுக் கென்னிடஞ் சொல்லி விடுத்தான்
ஓர்செய்தி; மற்றஃ துரைத்திடக் கேளீர்!
மங்களம் வாய்ந்தந லத்தி புரத்தே
வையக மீதி லிணையற்ற தாகத்
தங்கு மெழிற்பெரு மண்டப மொன்று
தம்பியர் சூழ்ந்து சமைத்தனர், கண்டீர்!
அங்கதன் விந்தை யழகினைக் காண
அன்பொடு நும்மை யழைத்தனன் வேந்தன். 123

[பா - ம்.]: * 'சிறந்திட உம்மைச்'

'வேள்விக்கு நாங்க ளனைவரும் வந்து
மீண்டு பலதின மாயின வேனும்,
வாள்வைக்கு நல்விழி மங்கையொ டேநீர்
வந்தெங்க ளூரில் மறுவிருந் தாட
நாள் வைக்குஞ் சோதிட ராவிது மட்டும்
நாயக னும்மை யழைத்திட வில்லை ;
கேள்விக் கொருமிதி லாதிப ஞெத்தோன்
கேடற்ற மாத மிதுவெனக் கண்டே 124

'வந்து விருந்து களித்திட நும்மை
வாழ்த்தி யழைத்தனன், என்னரு மக்காள் !
சந்துகண் டேயச் சகுனிசொற் கேட்டுத்
தன்மை யிழந்த சுயோதன மூடன்
வித்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்ய புன் சூது களித்திடச் செய்யும்
மந்திர மொன்று மனத்திடைக் கொண்டான் ;
வன்ம மிதுவு நுமக்கறி வித்தேன்.' 125

தருமபுத்திரன் பதில்

என்று விதுர னியம்பத் தருமன்
எண்ணங் கலங்கிச் சிலசொ லுரைப்பான் ;
'மன்று புனைந்தது கேட்டுமிச் சூதின்
வார்த்தையைக் கேட்டுமிங் கென்றன் மனத்தே
சென்று வருத்தம் உளைகின்ற தையா ;
சிந்தையி லேயம் விளைகின்ற தையா ;
நன்று நமக்கு நினைப்பவ னல்லன் ;
நம்ப லரிது சுயோதனன் றன்னை. 126

'கொல்லக் கருதிச் சுயோதனன் முன்பு
குத்திர மான சதிபல செய்தான் ;
சொல்லப் படாதவ ஞலெமக் கான
துன்ப மனைத்தையும் நீயறி யாயோ ?

வெல்லக் கடவ ரெவரென்ற போதும்
வேந்தர்கள் சூதை விரும்பிட லாமோ?
தொல்லைப் படுமென் மனந்தெளி வெய்தச்
சொல்லுதி நீயொரு சூழ்ச்சியிங்' கென்றான். 127

விதுரன் பதில்

வேறு

விதுரனுஞ் சொல்லுகிறான் :—'இதை
விடமெனச் சான்றவர் வெகுளுவர்காண் ;
சதுரெனக் கொள்ளுவரோ?—இதன்
தாழ்மை யெலாமவர்க் குரைத்துவிட்டேன் ;
இதுமிகத் தீதென்றே—அண்ணன்
எத்தனை சொல்லியு மிளவரசன்,
மதுமிகுத் துண்டவன்போல்—ஒரு
வார்த்தையே பற்றிப் பிதற்றுகிறான். 128

'கல்லெனி லிணங்கிவிடும்,—அண்ணன்
காட்டிய நீதிகள் கணக்கிலவாம் ;
புல்லனிங் கவற்றையெலாம்—உளம்
புகுத வொட்டாதுதன் மடமையினால்
சல்லியச் சூதினிலே—மனந்
தளர்வற நின்றிடுந் தகைமைசொன்னேன் ;
சொல்லிய குறிப்பறிந்தே—நலந்
தோன்றிய வழியினைத் தொடர்க'வென்றான். 129

தருமபுத்திரன் தீர்மானம்

தருமனு மிவ்வளவில்—உளத்
தளர்ச்சியை நீக்கியொ ருறுதிகொண்டே
பருமங் கொள் குரலினலாய்—மொழி
பதைத்திட லின்றியிங் கிவையுரைப்பான் :
'மருமங்க ளெவை செயினும்,—மதி
மருண்டவர் விருந்தறஞ் சிதைத்திடினும,
கருமமொன் றேயுளதாம்—நங்கள்
கடன்அதை நெறிப்படி புரிந்திடுவோம். 130

'தந்தையும் வரப்பணிந்தான் ;—சிறு
தந்தையுந் தூதுவந் ததையுரைத்தான் :
சிந்தையொன் றினியில்லை'—எது
சேரினு நலமெனத் தெளிந்துவிட்டேன்.
முந்தையச் சீலராமன் – செய்த
முடிவினை நம்மவர் மறப்பதுவோ ?
நொந்தது செயமாட்டோம் ;—பழ
நூலினுக் கிணங்கிய நெறிசெலுவோம். 131

'ஐம்பெருங் குரவோர்தாம்—தரும்
ஆணையைக் கடப்பது மறநெறியோ ?
வெம்பெரு மதயானை—பரி
வியன்றேர் ஆளுட னிருதினத்தில்
பைம்பொழி லத்திநகர்—செலும்
பயணத்திற் குரியன புரிந்திடுவாய்,
மொய்ம்புடை விறல்வீமா !'—என
மொழிந்தன னறநெறி முழுதுணர்ந்தான். 132

வீமனுடைய வீரப்பேச்சு

வீமனுந் திகைத்து விட்டான் ;—இள
விசயனை நோக்கியிங் கிதுசொலுவான் :
'மாமனு மருகனுமா—நமை
யழித்திடக் † கருதிஇவ் வழிதொடர்ந்தார்.
தாமதஞ் செய்வோமோ ?—செலத்
தகுந்தது ' மெனவிடி யுறநகைத்தான் ;
'கோமக னுரைப்படியே—படை
கொண்டுசெல் வோமொரு தடையிலைகாண் ! 133

'நெடுநாட் பகைகண்டாய் ;—இந்த
நினைவினில் யான்கழித் தனபலநாள் ;
கெடுநாள் வருமளவும்—ஒரு
கிருமியை யழிப்பவ ருலகிலுண்டோ ?

[மூ – ப.] : † 'மழித்திட'

படுநாட் குறியன்றே—இந்தப்
பாதக நினைப்பவர் நினைத்ததுதான்?
விடுநாண் கோத்திடடா!—தம்பி,
வில்லினுக் கிரைமிக விளையுதடா. 134

'போரிடச் செல்வமடா! மகன்
புலமையுந் தந்தையின் புலமைகளும்
யாரிட மவிழ்க்கின்றார்?—இதை
எத்தனை நாள்வரை பொறுத்திருப்போம்?
பாரிடத் திவரொடுநாம்—எனப்
பகுதியிவ் விரண்டிற்கும் காலமொன்றில்
நேரிட வாழ்வுண்டோ?—இரு
நெருப்பினுக் கிடையினி லொருவிறகோ?' 135

தருமபுத்திரன் முடிவுரை

வேறு

வீம னுரைத்தது போலவே—உளம்
வெம்பி நெடுவில் விசயனும்—அங்கு
காமனுஞ் சாமனு மொப்பவே—நின்ற
காளை யிளைஞ ரிருவரும்—செய்ய
தாமரைக் கண்ணன் யுதிட்டிரன்—சொல்லைத்
தட்டிப் பணிவொடு பேசினர்;—தவ
நேமந் தவறலு முண்டுகாண்,—நரர்
நெஞ்சங் கொதித்திடு போழ்திலே. 136

அன்பும் பணிவு முருக்கொண்டோர்—அணு
வாயினுந் தன்சொல் வழாதவர்—அங்கு
வன்பு மொழிசொலக் கேட்டனன்;—அற
மன்னவன் புன்னகை பூத்தனன்:—'அட!
முன்பு சுயோதனன் செய்ததும்—இன்று
மூண்டிருக் குங்கொடுங் கோலமும்—இதன்
பின்பு விளைவதுந் தேர்ந்துளேன்; என்னைப்
பித்தனென் றெண்ணி யுரைத்திட்டீர்! 137

'கைப்பிடி கொண்டு சுழற்றுவோன்—றன்
கணக்கிற் சுழன்றிடுஞ் சக்கரம் ;—அது
தப்பி மிகையுங் குறையுமாச்—சுற்றும்
தன்மை யதற்குள தாகுமோ ?—இதை
ஒப்பிட லாகும் புவியின்மேல்—என்றும்
உள்ள வுயிர்களின் வாழ்விற்கே,—ஒரு
செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும், 138

'இங்கிவை யாவுந் தவறிலா—விதி
யேற்று நடக்குஞ் செயல்களாம் ;—முடி
வெங்கணு மின்றி யெவற்றினும்—என்றும்
ஏறி யிடையின்றிச் செல்வதாம்—ஒரு
சங்கிலி யொக்கும் விதிகண்டீர் !—வெறுஞ்
சாத்திர மன்றிது சத்தியம் ;—நின்று
மங்கியொர் நாளி லழிவதா—நங்கள்
வாழ்க்கை யிதனைக் கடந்ததோ ? 139

'தோன்றி யழிவது வாழ்க்கைதான் ;—இங்கு
துன்பத்தொ டின்பம் வெறுமையாம்—இவை
மூன்றி லெதுவரு மாயினும்,—களி
மூழ்கி நடத்தல் முறை,கண்டீர் !—நெஞ்சில்
ஊன்றிய கொள்கை தழைப்ப ரோ,—துன்பம்
உற்றிடு மென்பதொ ரச்சத்தால் ?—விதி
போன்று நடக்கு முலகென் றே—கடன்
போற்றி யொழுகுவர் சான்றவர். 140

'சேற்றி லுழலும் புழுவிற்கும்,—புவிச்
செல்வ முடைய வரசர்க்கும்,—பிச்சை
ஏற்றுடல் காத்திடு மேழைக்கும்,—உயிர்
எத்தனை யுண்டவை யாவிற்கும்,—நித்தம்
ஆற்றுதற் குள்ள கடமைதான்—முன் வந்
தவ்வக் கணந்தொறு நிற்குமால் ;—அது
தோற்றும் பொழுதிற் புரிகுவார்—பல
சூழ்ந்து கடமை யழிப்பரோ ? 141

'யாவருக் கும்பொது வாயினும்—சிறப்
பென்ப ரரசர் குலத்திற்கே—உயர்
தேவரை யொப்பமுன் னேர்தமைத்—தங்கள்
சிந்தையிற் கொண்டு பணிகுதல் ;—தந்தை
ஏவலை மைந்தர் புரிதற்கே—வில்
லிராமன் கதையையுங் காட்டினேன் ;—புவிக்
காவலர் தம்மிற் சிறந்தநீர்—இன்று
கர்மம் பிழைத்திடு வீர்கொலோ ?' 142

நால்வரும் ஸம்மதித்தல்

வேறு

என்றினைய நீதிபல தரும ராசன்
எடுத்துரைப்ப, இளைஞர்களுந் தங்கை கூப்பிக்
'குன்றினிலே யேற்றிவைத்த விளக்கைப் போலக்
குவலயத்திற் கறங்காட்டத் தோன்றி னாய் நீ !
வென்றிபெறுந் திருவடியாய், நினது சொல்லை
மீறியொரு செயலுண்டோ ? ஆண்டா னினை
யன்றியடி யார்தமக்குக் கடன்வே றுண்டோ ?
ஐயனே, பாண்டவர்த மாவி நீயே ! 143

'துன்பமுறு மெமக்கென்றே யெண்ணி நின்வாய்ச்
சொல்லைமறுத் துரைத்தோமோ ? நின்பா லுள்ள
அன்புமிகை யாலன்றே திருவு ளத்தின்
ஆக்கினையை யெதிர்த்துரைத்தோ மறிவில் லாமல்
மன்பதையி னுளச்செயல்கள் தெளியக் காணும்
மன்னவனே ! மற்றிதுநீ யறியா தொன்றே ?
வன்புமொழி பொறுத்தருள்வாய், வாழி ! நின்சொல்
வழிச்செல்வோம்,' எனக்கூறி வணங்கிச் சென்றார். 144

பாண்டவர் பயணமாதல்

ஆங்கதன்பின் மூன்றுநா ளினைஞ ரோடும்
அணியிழையப் பாஞ்சாலர் விளக்கி னெடும்
பாங்கினுறு பரிசனங்கள் பலவி னெடும்
படையினெடும் இசையினெடும் பயண மாகித்

தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்
திருநகர்விட் டகல்கின்றான் தீயோ ரூர்க்கே !
நீங்கியகன் றிடலாகுந் தன்மை யுண்டோ,
நெடுங் கரத்து விதி சாட்டு நெறியி னின்றே ? 145

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும், சிற்றெறும்பால் யானை சாகும்,
வரிவகுத்த வுடற்புலியைப் புழுவுங் கொல்லும்,
வருங்கால முணர்வோரு மயங்கி நிற்பார்,
கிரிவகுத்த வோடையிலே மிதந்து செல்லும்,
கீழ்மேலா மேல்கீழாங் கிழக்கு மேற்காம்,
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவர், விதிவகுத்த போழ்தி னன்றே. 146

மாலை வருணனை

மாலைப்போ தாதலுமே, மன்னன் சேனை
வழியிடையோர் பூம்பொழிலி னமர்ந்த காலை,
சேலைப்போல் விழியாளைப் பார்த்தன் கொண்டு
சென்றுங்கோர் தனியிடத்தே பசும்புல் மேட்டில்
மேலைப்போம் பரிதியினைத் தொழுது கண்டான் ;
மெல்லியலு மவன்றொடைமேல் மெல்லச் சாய்ந்து
பாலைப்போல் மொழிபிதற்ற வவளை நோக்கிப்
பார்த்தனுமப் பரிதியெழில் விளக்கு கின்றான் 147

'பாரடியோ ! வானத்திற் புதுமை யெல்லாம்,
பண்மொழீ ! கணந்தோறு மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாத் தோன்றுங் காட்சி ;
யாரடியிங் கிவைபோலப் புவியின் மீதே
யெண்ணரிய பொருள்கொடுத்து மியற்ற வல்லார் ?
சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ்
செழுஞ்சோதி வனப்பையெலாஞ் சேரக் காண்பாய். 148

'கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும் ;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறு நவநவமாங் களிப்புத் தோன்றும் ;
கருதிடவுஞ் சொல்லிடவு மெளிதோ ? ஆங்கே,
கணந்தோறு மொருபுதிய வண்ணங் காட்டிச்
காளிபரா சத்தியவள் களிக்குங் கோலம்
கணந்தோறு மவள்பிறப்பா ளென்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை யிங்குக் காண்பாய். 149

'அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய் ;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுருக்கி வார்த்து,
முடிவான வட்டத்தைக் காளி யாங்கே,
மொய்குழலாய், சுழற்றுவதன் மொய்ம்பு காணுய் !
வடிவான தொன்றுகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய். 150

'அமைதியொடு பார்த்திடுவாய், மின்னே, பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு ; முன்னே,
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய் ;
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை யுண்டோ ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடை யே யெழுதல் காண்பாய் ;
உமைகவிதை செய்கின்றுள், எழுந்துநின்றே
உரைத்திடுவோம், "பல்லாண்டு வாழ்க" என்றே. 151

வேறு

'பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனே தீப்பட் டெரிவன ! ஓகோ !
என்னடே யிந்த வன்னத் தியல்புகள் !
எத்தனே வடிவம் ! எத்தனே கலவை !
தீயின் குழம்புகள் !—செழும்பொன் காய்ச்சி
விட்ட வோடைகள் !—வெம்மைதோன் றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள் !—பாரடே !
நீலப் பொய்கைகள் !—அடடா, நீல

வன்ன மொன்றி லெத்தனை வகையடீ !
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை!—கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்!—காணடி, ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்!—ஆஹா! எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!' 152

வேறு

'செங்கதிர்த் தேவன் சிறந்த வொளியினைத்
தேர்கின்றேம்—அவன்
எங்க ளறிவினைத் தூண்டி நடத்துக'
என்பதோர்—நல்ல
மங்களம் வாய்ந்த சுருதி மொழிகொண்டு
வாழ்த்தியே—இவர்
தங்க வினங்க ளிருந்த பொழிலிடைச்
சார்ந்தனர்;—பின்னர்
அங்கவ் விரவு கழிந்திட, வைகறை யாதலும்,—மன்னர்
பொங்கு கடலொத்த சேனைகளோடு புறப்பட்டே,—வழி
எங்குந் திகழு மியற்கையின் காட்சியி லின்புற்றே,—கதிர்
மங்கிடு முன்னொளி மங்கு நகரிடை வந்துற்றார். 153

துரியோதனன்

சூழ்ச்சிச் சருக்கம்

முற்றிற்று

ஓம்

இரண்டாவது

சூதாட்டச் சருக்கம்

—: 0 :—

வாணியை வேண்டுதல்

தெளிவுறவே யறிந்திடுதல்,
தெளிவுதர மொழிந்திடுதல் ; சிந்திப் பார்க்கே†
களிவளர யுள்ளத்தி லாநந்தக் கனவுபல
காட்டல் கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்இங் கிவையெல்லா
நீயருளுந் தொழில்க ளன்றே ?
ஒளிவளருந் தமிழ்வாணீ, அடியனேற்
கிவையனைத்து முதவு வாயே. 154

பாண்டவர் வரவேற்பு

அத்தின மாநக ரத்தினில் வந்தனர்
ஆரியப் பாண்டவ ரென்றது கேட்டலும்,
தத்தி யெழுந்தன எண்ணருங் கூட்டங்கள் ;
சந்திகள், வீதிகள், சாலைகள், சோலைகள்—
எத்திசை நோக்கினு மாந்தர் நிறைந்தனர் ;
இத்தனை மக்களு மெங்க ணிருந்தனர்
இத்தின மட்டு மெனவியப் பெய்துற
எள்ளு விழற்கிட மின்றி யிருந்தார். 155

மந்திர கீத முழக்கினர் பார்ப்பனர் ;
வன்றடந் தோள்கொட்டி யார்த்தனர் மன்னவர் ;
வெந்திறல் யானையுந் தேருங் குதிரையும்
வீதிகள் தோறு மொலிமிகச் செய்தன ;

[மு - ப.] : † 'எங்களறிவு விளக்க முறச் செய்திடவே—என'

வந்தியர் பாடினர், வேசைய ராடினர்;
வாத்தியங் கோடி வகையி னெலித்தன;
செந்திரு வாழு நகரினி லத்தினஞ்
சேர்ந்த வொலியைச் சிறிதென லாமோ! 156

வாலிகன் றந்ததொர் தேர்மிசை யேறியம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நாலிய லாம்படை யோடு நகரிடை
நல்ல பவனி யெழுந்த பொழுதினில்,
சேலியல் கண்ணியர் பொன்விளக் கேந்திடச்
சீரிய பார்ப்பனர் கும்பங்க ளேந்திடக்
கோலிய பூமழை பெய்திடத் தோரணங்
கொஞ்ச, நகரெழில் கூடிய தன்றே. 157

வேறு

மன்னவன் கோயிலிலே—இவர்
வந்து புகுந்தனர் வரிசையொ டே.
பொன்னரங் கினிலிருந்தான்—கண்ணில்
புலவனைப் போய்நின்று போற்றியபின்,
அன்னவ னுசிகொண் டே—உயர்
ஆரிய வீட்டும னடிவணங்கி,
வின்னய முணர்கிருபன்—புகழ்
வீரத் துரோணனங் கவன்புதல்வன் 158

மற்றுள பெரியோர்கள்—தமை
வாழ்த்தியுள் ளன்பொடு வணங்கிநின்றூர்;
கொற்றமிக் குயர்கன்னன்—பணிக்
கொடியோ னினையவர் சகுனியொடும்
பொறறடந் தோள்சருவப்—பெரும்
புகழினர் தழுவினர், மகிழ்ச்சிகொண்டார்;
நற்றவக் காந்தாரி—முதல்
நாரியர் தமைமுறைப் படிதொழுதார். 159

குந்தியு மிளங்கொடியும்—வந்து
கூடிய மாதர்தம் மொடுகுலவி
முந்திய கதைகள்சொல்லி—அன்பு
மூண்டுரை யாடிப்பின் பிரிந்துவிட்டார் ;
அந்தியும் புகுந்ததுவால் ;—பின்னர்
ஐவரு முடல்வலித் தொழில்முடித்தே
சந்தியுஞ் சபங்களுஞ்செய்—தங்கு
சாருமின் னுணவமு துண்டதன்பின், 160

சந்தன மலர்புனைந்தே,—இளந்
தையலர் வீணைகொண் டுயிருருக்கி
விந்தைகொள் பாட்டிசைப்ப—அதை
விழைவொடு கேட்டனர் துயில்புரிந்தார் ;
வந்ததொர் துன்பத்தினை—அங்கு
மடித்திட லன்றிப்பின் வருந்துயர்க் கே
சிந்தனை யுழல்வாரோ ?—உளச்
சிதைவின்மை யாரியர் சிறப்பன்றே ? 161

பாண்டவர் சபைக்கு வருதல்

பாணர்கள் துதிகூ றை—இளம்
பகலவ னெழுமுனர்த் துயிலெழுந் தார் ;
தோணலத் தினையில் லார்—தெய்வந்
துதித்தனர் ; செய்யபொற் பட்டணிந் து
பூணணிந் தாயுதங் கள்—பல
பூண்டுபொற் சபையிடைப் போந்தன ரால் ;
நாணமில் கவுரவ ருந்—தங்கள்
நாயக னெடுமங்கு வீற்றிருந் தார். 162

வீட்டுமன் றுனிருந் தான் ;—அற
விதுரனும், பார்ப்பனக் குரவர்க ளும்,
நாட்டுமந் திரிமா ரும்,*—பிற
நாட்டினர் பலபல மன்னர்க ளும்,

[மு - ப.]: *'மந்திரி வகையும்'

கேட்டினுக் கிரையா வான்—மதி
கெடுந்துரி யோதனன் கீளியின ரும்,
மாட்டுறு நண்பர்க ளும்—அந்த
வான்பெருஞ் சபையிடை வயங்கிநின் றார். 163

சூதுக் கழைத்தல்

புன்றொழிற் கவறத னில்—இந்தப்
புவிமிசை யிணையிலை யெனும்புக ழான்,
நன்றறி யாச்சகு னி,—சபை
நடுவினி லேறெனக் களித்திருந் தான்;
வென்றிகொள் பெருஞ்சூ தர்—அந்த
விவிஞ்சதி சித்திர சேனனு டன்
குன்றுசத் தியவிர தன்—இதழ்
கூர்புரு மித்திரன் சயனென் பார் 164

சாலவு மஞ்சுத ரும்—கெட்ட
சதிக்குணத் தார்பல மாயம் வல்லோர்
கோலநற் சபைதனி லே—வந்து
கொக்கரித் தார்ப்பரித் திருந்தன ரால்;
மேலவர் தமைவணங் கி—அந்த
வெந்திறற் பாண்டவ ரீளைஞர் தமை
ஆலமுற் றிடத்தழு விச்—செம்பொன்
னுதனத் தமர்ந்தவப் பொழுதினி லே, 165

சொல்லுகின் றுன்சகு னி:—'அறத்
தோன்றலுன் வரவினைக் காத்துளர்காண்
மல்லுறு தடந்தோ ளார்—இந்த
மன்னவ ரனைவரு நெடும்பொழு தா;
வில்லுறு போர்த்தொழி லாற்—புவி
வென்றுதங் குலத்தினை மேம்படுத் தீர்!
வல்லுறு சூதெனும் போர்—தனில்
வலிமைகள் பார்க்குதும் வருதி'யென்றான். 166

தருமன் மறுத்தல்

தருமனங் கிவைசொல் வான்—'ஐய !
சதியுறு சூதினுக் கெனையழைத் தாய் ;
பெருமையிங் கிதிலுண் டோ ?—அறப்
பெற்றியுண் டோ?மறப் பீடுளதோ ?
வருமநின் மனத்துடை யாய் !—எங்கள்
வாழ்வினை யுகந்திலை யெனலறி வேன் ;
இருமையுங் கெடுப்பது வாம்—இந்த
இழிதொழி லாலெமை யழித்தலுற் றாய்.' 167

சகுனியின் ஏச்சு

கலகல வெனச்சிரித் தான்—பழிக்
கவற்றையொர் சாத்திர மெனப்பயின் றோன் ;
'பலபல மொழிகுவ தேன் ?—உனைப்
பார்த்திவ னென்றெணி யழைத்துவிட் டேன்,
''நிலமுழு தாட்கொண் டாய்—தனி
நீ'' யெனப் பலர்சொலக் கேட்டதனல்,
சிலபொருள் வினையாட் டிற்—செலுஞ்
செலவினுக் கழிகலை எனநினைந் தேன். 168

'பாரத மண்டலத் தார்‡—தங்கள்
பதியொரு பிசுனனென் றறிவே னே ?
சோரமிங் கிதிலுண் டோ ?—தொழில்
சூதெனி லாடுந ரரச ரன் றோ ?
மாரத வீரர்முன் னே,—நடு
மண்டபத் தே,பட்டப் பகலினி லே,
சூர சிகாமணி யே,—நின்றன்
சொத்தினைத் திருடுவ மெனுங்கருத் தோ ? 169

'அச்சமிங் கிதில்வேண் டா,—விரைந்
தாடுவ நெடும்பொழு தாயின தால் ;
கச்சையொர் நாழிகை யா—நல்ல
காயுடன் விரித்திங்கு கிடந்திடல் காண் !

[மு–ப.] : ‡'மண்டிலத்தார்'

நிச்சய நீவெல் வாய் ;—வெற்றி
நினக்கியல் பாயின தறியா யோ ?
நிச்சய நீவெல் வாய் ;—பல
நிணகுவ தேன்?களி தொடங்கு'கென் றான். 170

தருமனின் பதில்

வேறு

தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்
துட்ட னிவ்வுரை கூறுதல் கேட் டே,
நூல் விலக்கிய செய்கைக ளஞ்சும்
நோன்பி னெனுள நொந்திவை கூறும் :
'தேவலப் பெயர் மாமுனி வோனும்
செய்ய கேள்வி யசிதனு முன்னர்
காவலர்க்கு விதித்ததந் நூலிற்
கவறு நஞ்செனக்$ கூறினர், கண்டாய் ! 171

"வஞ்ச கத்தினில் வெற்றியை வேண்டார்,
மாயச் சூதைப் பழியெனக் கொள்வார்,
அஞ்ச லின்றிச் சமர்க்களத் தேறி
யாக்கும் வெற்றி யதனை மதிப்பார்,
துஞ்ச னேரினுந் தூயசொல் லன்றிச்
சொல்மி லேச்சரைப் போலென்றுஞ்‡ சொல்லார்,
மிஞ்சு சீர்த்திகொள் பாரத நாட்டில்
மேவு மாரிய" ரென்றனர் மேலோர். 172

'ஆதலா லிந்தச் சூதினை வேண்டேன் !
ஐய, செல்வம் பெருமை யிவற்றின்
காத லாலர சாற்றுவ னல்லேன் ;
காழ்த்த நல்லற மோங்கவு மாங்கே

[மு - ப.]: $'கவறை நஞ்செனக்'
‡'போலொன்றுஞ் சொல்லார்'
—கவிமணி

ஓத லானு முணர்த்துத லானும்
உண்மை சான்ற கலீத்தொகை யாவும்
சாத லின்றி வளர்ந்திடு மாறும்,
சகுனி, யானர சாளுதல், கண்டாய் ! 173

'என்னை வஞ்சித்தென் செல்வத்தைக் கொள்வோர்
என்றனக் கிடர் செய்பவ ரல்லர்,
முன்னை நின்றதொர் நான்மறை கொல்வார்,
மூது ணர்விற் கலீத்தொகை மாய்ப்பார்,
பின்னை யென்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை யழைப்பார் ;
நின்னை மிக்க பணிவொடு கேட்பேன் :
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி' யென்றான். 174

சகுனி வல்லுக் கழைத்தல்

வேறு

'சாத்திரம் பேசுகின் றாய்'—எனத்
தழல்படு விழியொடு சகுனிசொல் வான் :
'கோத்திரக் குலமன் னர்—பிறர்
குறைபடத் தம்புகழ் கூறுவ ரோ?
நாத்திறன் மிகவுடை யாய்!—எனில்
நம்மவர் காத்திடும் பழவழக் கை
மாத்திர மறந்துவிட் டாய் ;—மன்னர்
வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண் டோ ? 175

'தேர்ந்தவன் வென்றிடு வான்;—தொழில்
தேர்ச்சியில் லாதவன் தோற்றிடு வான் ;
நேர்ந்திடும் வாட்போ ரில்—குத்து
நெறியறிந் தவன்வெலப் பிறனழி வான் ;
ஓர்ந்திடு சாத்திரப் போர்--தனில்,
உணர்ந்தவன் வென்றிட, வுணரா தான்
சோர்ந்தழி வெய்திடு வான் ;—இவை
சூதென்றுஞ் சதியென்றுஞ் சொல்வா ரோ ? 176

'வல்லவன் வென்றிடு வான்;—தொழில்
வன்மை யிலாதவன் தோற்றிடு வான்;
நல்லவ னல்லா தான்—என
நாணமிலார் சொலுங் கதைவேண் டா;
வல்லமர் செய்திட வே—இந்த
மன்னர்முன் னேநீ யழைத்துவிட் டேன்;
சொல்லுக வருவதுண் டேல்,—மனத்
துணிவிலை யேலதுஞ் சொல்லு'கென்றான்.

தருமன் இணங்குதல்

வேறு

வெய்யதான விதியை நிந்தித்தான்
விலக்கொ ணாதற மென்ப துணர்ந்தோன்;
பொய்ய தாகுஞ் சிறுவழக் கொன்றைப்
புலனி லாதவர் தம்முடம் பாட்டை
ஐய னெஞ்சி லறமெனக் கொண்டான்.
ஐயகோ! அந்த நாண்முத லாகத்
துய்ய சிந்தைய ரெத்தனை மக்கள்
துன்ப மிவ்வகை யெய்தின ரம்மா!

மூன்பி ருந்ததொர் காரணத் தாலே,
மூடரே, பொய்யை மெய்என லாமோ?
முன்பெனச் சொலுங் கால மதற்கு
மூடரே,யொர் வரையறை யுண்டோ?
முன்பெனச் சொல்லி னேற்றுமுன் பேயாம்;
மூன்று கோடி வருடமு முன்பே;
மூன்பி ருந்தெண்ணி லாது புவிமேல்
மொய்த்த மக்க ளெலாமுனி வோரோ?

நீர்பி றக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்த தில்லை யெனநிந்தீ ரோ?
பார்பி றந்தது தொட்டின்று மட்டும்,
பலப லப்பல பற்பல கோடி

கார்பி றக்கு மழைத்துளி போலே
கண்ட மக்க ளனைவருள் ளேயும்,
நீர்பி றப்பதன் முன்பு, மடமை
நீசத் தன்மை யிருந்தன வன் றே?

பொய்யொ ழுக்கை யறமென்று கொண்டும்,
பொய்யர் கேலியைச் சாத்திர மென்றும்,
ஐயகோ, நங்கள் பாரத நாட்டில்
அறிவி லாரறப் பற்றுமிக் குள்ளோர்
நொய்ய ராகி யழிந்தவர் கோடி.
நூல்வ கைபல தேர்ந்து தெளிந்தோன்,
மெய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்—
விதியி னுலத் தருமனும் வீழ்ந்தான்.

மதியி னும்விதி தான்பெரி தன்றே?
வைய மீதுள வாகு மவற்றுள்
விதியி னும்பெரி தோர்பொரு ளுண்டோ?
மேலே நாஞ்செயுங் கர்ம மல்லாதே,
நதியி லுள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும் பன்மாசு
பதியு மாறு, பிறர்செயுங் கர்மப்
பயனு நம்மை யடைவதுண் டன்றே?

சூதாடல்

வேறு

மாயச் சூதி னுக்கே—ஐயன்
மனமி ணங்கி விட்டான்;
தாய முருட்ட லானார்;—அங்கே
சகுனி யார்ப்ப ரித்தான்;
நேய முற்ற விதுரன்—போலே
நெறியு ளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார்;—தங்கள்
மதிம யங்கி விட்டார்.

அந்த வேளை யதனில்,—ஐவர்க்
கதிப னிஃது ரைப்பான் :
'பந்த யங்கள் சொல்வாய் :—சகுனீ,
பரப ரத்தி டாதே !
விந்தை யான செல்வம்—கொண்ட
வேந்த ரோடு நீதான்
வந்தெ திர்த்து விட்டாய்;—எதிரே
வைக்க நிதிய முண்டோ ?' 184

தருமன் வார்த்தை கேட்டே—துரியோ
தனனெ ழுந்து சொல்வான் :
'அருமை யான செல்வம்—என்பால்
அளவி லாத துண்டு ;
ஒரும டங்கு வைத்தால்—எதிரே
ஒன்ப தாக வைப்பேன் ;
பெருமை சொல்ல வேண்டா,—ஐயா,
பின்ன டக்கு' கென்றான். 185

'ஒருவ ளுடப் பணயம்—வேறே
ஒருவன் வைப்ப துண்டோ ?
தரும மாகு மோடா,—சொல்வாய்,
தம்பி யிந்த வார்த்தை ?'
'வரும மில்லை யையா ;—இங்கு
மாம ளுடப் பணயம்
மருகன் வைக்கொ ணுதோ?—இதிலே
வந்த குற்ற மேதோ ?' 186

'பொழுது போக்குதற் கே—சூதுப்
போர்தொ டங்கு கின்றோம் ;
அழுத லேனி தற்கே?' என்றே
அங்கர் கோன கைத்தான்.
'பழுதி ருப்ப தெல்லாம்—இங்கே
பார்த்தி வர்க்கு ரைத்தேன் ;
முழுது மிங்கி தற்கே—பின்னர்
முடிவு காண்பிர்' என்றான். 187

ஒளிசி றந்த மணியின்—மாலை
ஒன்றை யங்கு வைத்தான் ;
களிமி குந்த பகைவன்—எதிரே
கனத னங்கள் சொன்னான் ;
விழியி மைக்கு முன்னே—மாமன்
வென்று தீர்த்து விட்டான் ;
பழியி லாத தருமன்—பின்னும்
பந்த யங்கள் சொல்வான் : 188

‘ஆயி ரங்கு டம்பொன்—வைத்தே
ஆடு வோ’மி தென்றான் ;
மா யம் வல்ல மாமன்—அதனை
வசம தாக்கி விட்டான்.
‘பாயு மாவொ ரெட்டில்—செல்லும்
பார மான பொற்றேர்.’
தாய முருட்ட லானார் ;—அங்கே
சகுனி வென்று விட்டான். 189

‘இளைய ரான மாதர்,—செம்பொன்
எழிலி ணைந்த வடிவும்
வளைய ணிந்த தோளும்—மாலை
மணிகு லுங்கு மார்பும்
விளையு மின்ப நூல்கள்—தம்மில்
மிக்க தேர்ச்சி யோடு
களையி லங்கு முகமும்—சாயற்
கவினு நன்கு கொண்டோர், 190

ஆயி ரக்க ணக்கா—ஐவர்க்
கடிமை செய்து வாழ்வோர்.’
தாய முருட்ட லானார் ;—அந்தச்
சகுனி வென்று விட்டான்.
ஆயி ரங்க ளாவார்—செம்பொன்
னணிகள் பூண்டி ருப்பார்
தூயி ழைப்பொ ருடை—சுற்றுந்
தொண்டர் தம்மை வைத்தான் ; 191

சோர னங்க வற்றை—வார்த்தை
சொல்லு முன்னர் வென்றான்.
தீர மிக்க தருமன்—உள்ளத்
திட னழிந்தி டாதே,
'நீரை யுண்ட மேகம்—போலே
நிற்கு மாயி ரங்கள்
வார ணங்கள் கண்டாய்,—போரில்
மறலி யொத்து மோதும்' 192

என்று வைத்த பணயந்—தன்னை
யிழிஞன் வென்று விட்டான் ;
வென்றி மிக்க படைகள்—பின்னர்
வேந்தன் வைத்தி ழந்தான் ;
நன்றி ழைத்த தேர்கள்—போரின்
நடை யுணர்ந்த பாகர்
என்றி வற்றை யெல்லாம்—தருமன்
ஈடு வைத்தி ழந்தான். 193

எண்ணி லாத, கண்டீர்—புவியில்
இணையி லாத வாகும்
வண்ண முள்ள பரிகள்—தம்மை
வைத்தி ழந்து விட்டான் ;
நண்ணு பொற்க டாரந்—தம்மில்
நாலு கோடி வைத்தான் ;
கண்ணி முப்ப வன்போல்—அவையோர்
கணமி ழந்து விட்டான். 194

மாடி ழந்து விட்டான்,—தருமன்
மந்தை மந்தை யாக ;
ஆடி ழந்து விட்டான்,—தருமன்
ஆளி ழந்து விட்டான் ;
பீடி ழந்த சகுனி—அங்கு
பின்னுஞ் சொல்லு கின்றான் :
'நாடி முக்க வில்லை,—தருமா !
நாட்டை வைத்தி' டென்றான். 195

நாட்டை வைத்தாடுதல்

வேறு

‘ஐயகோ விதை யாதெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றே?
மெய்ய தாகவொர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாளுங் கருத்தோ?
வைய மீ்து பொறுத்திடு மோ,மேல்
வான்பொ றுத்திடு மோ?பழி மக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோநாம்?
தூ!’வென் றெள்ளி விதுரனுஞ் சொல்வான். 196

‘பாண்ட வர்பொறை கொள்ளுவ ரேனும்,
பைந்து ழாயனும் பாஞ்சாலத் தானும்
மூண்ட வெஞ்சினத் தோடுநஞ் சூழல்
முற்றும் வேரறச் செய்குவ ரன்றே?
ஈண்டி ருக்குங் குருகுல வேந்தர்
யார்க்கு மீ்துரைப் பேன்,குறிக் கொண்மின்:
“மாண்டு போரில் மடிந்து நரகில்
மாழ்கு தற்கு வகைசெயல் வேண்டா.” 197

‘குலமெ லாமழி வெய்திடற் கன்றே
குத்தி ரத்துரி யோதனன் றன்னை
நலமி லாவிதி நம்மிடை வைத்தான்;
ஞால மீதி லவன்பிறந் தன்றே
அலறி யோர்நரி போற்குரைத் திட்டான்;
அீ்து ணர்ந்த நிமித்திகர் “வெய்ய
கலகந் தோன்றுமிப் பாலக ஞலே
காணு வீ”ரெனச் சொல்லிடக் கேட்டோம். 198

‘சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு
சொர்க்க போகம் பெறுபவன் போலப்
பேதை நீயு முகமலர் வெய்திப்
பெட்பு மிக்குற வீற்றிருக் கின்றாய்;

மீது சென்று மலையிடைத் தேனில்
மிக்க மோகத்தி னலொரு வேடன்
பாத மாங்கு நழுவிட மாயும்
படும லீச்சரி வுள்ளது காணுன். 199

'மற்று நீருமிச் சூதெனுங் கள்ளால்
மதிம யங்கி வருஞ்செயல் காணீர் !
முற்றுஞ் சாதி சுயோ தன னலோர்
மூடற் காக முழுகிட லாமோ ?
பற்று மிக்கவிப் பாண்டவர் தம்மைப்
பாத கத்தி லழித்திடு கின்றாய்;
கற்ற கல்வியுங் கேள்வியு மண்ணே
கடலிற் காயங் கரைத்ததொப் பாமே? 200

'வீட்டு ளேநரி யைவிடப் பாம்பை
வேண்டிப் பிள்ளை யெனவளர்த் திட்டோம் :
நாட்டு ளேபுக ழோங்கிடு மாறிந்
நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய்.
மோட்டுக் கூகையைக் காக்கையை விற்று
மொய்ம்பு சான்ற மயில்களைக் கொள்வாய் ;
கேட்டி லேகளி யோடுசெல் வாயோ ?
கேட்குங் காது மிழந்துவிட் டாயோ? 201

'தம்பி மக்கள் பொருள்வெஃகு வாயோ
சாதற் கான வயதினி லண்ணே ?
நம்பி நின்னை யடைந்தவ ரன்றே ?
நாத னென்றுனைக் கொண்டவ ரன்றே ?
எம்பி ராளுளங் கொள்ளுதி யாயின்
யாவுந் தான மெனக்கொடுப் பாரே !
கும்பி மாநர கத்தினி லாழ்த்துங்
கொடிய செய்கை தொடர்வது மென்னே ? 202

'குருகு லத்தலை வன்சபைக் கண்ணே,
கொற்ற மிக்க துரோணன் கிருபன்
பெருகு சீர்த்தியக் கங்கையின் மைந்தன்
பேதை நானு மதிப்பிழந் தேகத்

திருகு நெஞ்சச் சகுனி யொருவன்
செப்பு மந்திரஞ் சொல்லுத னன்றே!
அருகு வைக்கத் தகுதியுள் ளானே?
அவனே வெற்பிடைப் போக்குதி யண்ணே! 203

'நெறி யிழந்தபின் வாழ்வதி லின்பம்
நேரு மென்று நினைத்திடல் வேண்டா.
பொறி யிழந்த சகுனியின் சூதாற்
புண்ணி யர்தமை மாற்றல ராக்கிச்
சிறியர் பாதக ரென்றுல கெல்லாம்
சீயென் றேச வுகந்தர சாளும்
வறிய வாழ்வை விரும்பிட லாமோ?
வாழி, சூதை நிறுத்துதி' யென்றான். 204

சூதாட்டச் சருக்கம்
முற்றிற்று.

முதற்பாகம்
முற்றிற்று.

ஓம் சக்தி

பாஞ்சாலி சபதம்

—: o :—

இரண்டாம் பாகம்

★

ஓம் சக்தி

பராசக்தி வணக்கம்

ஆங்கொரு கல்லே வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி,மற் றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினன். உலகினோர் தாய்நீ ;
யாங்கனே, எவரை, எங்ஙனஞ் சமைத்தற்
கெண்ணமோ, அங்ஙனஞ் சமைப்பாய்.
ஈங்குனைச் சரணென் றெய்தினேன் ; என்னை
இருங்கலைப் புலவனுக் குதியே. 1

ஸரஸ்வதி வணக்கம்

இடையின்றி அணுக்களெலாஞ் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம் ;
இடையின்றிக் கதிர்களெலாஞ் சுழலுமென
வானூலார் இயம்பு கின்றார்.
இடையின்றித் தொழில்புரிதல் உலகினிடைப்
பொருட்கெல்லாம் இயற்கை யாயின்,
இடையின்றிக் கலைமகளே நினதருளில்
எனதுள்ளம் இயங்கொ ணாதோ ? 2

மூன்றுவது : அடிமைச் சருக்கம்

விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி சொல்லுதல்

அறிவு சான்ற விதுரன்சொற் கேட்டான்
அழலு நெஞ்சி னரவை யுயர்த்தான்:
நெறியு ரைத்திடு மேலவர் வாய்ச்சொல்
நீச ரானவர் கொள்ளுவ துண்டோ ?

பொறி பறக்க விழிக ளிரண்டும்
புருவ மாங்கு துடிக்கச் சினத்தின்
வெறி தலைக்க, மதிமழுங் கிப்போய்
வேந்த னிஃது விளம்புத லுற்றான் : 3

வேறு

'நன்றி கெட்ட விதுரா, சிறிதும்
நாண மற்ற விதுரா,
தின்ற உப்பினுக்கே நாசந்
தேடு கின்ற விதுரா,
அன்று தொட்டு நீயும் எங்கள்
அழிவு நாடு கின்றாய் ;
மன்றி லுன்னை வைத்தான் எந்தை
மதியை யென்னு ரைப்பேன் ! 4

'ஐவருக்கு நெஞ்சும் எங்கள்
அரம னைக்கு வயிறும்,
தெய்வமன் றுனக்கே, விதுரா,
செய்து விட்ட தேயோ ?
மெய்வ குப்பவன்போல், பொதுவாம்
விதிஉ ணர்ந்த வன்போல்,
ஐவர் பக்க நின்றே,—எங்கள்
அழிவு தேடு கின்றாய். 5

மன்னர் சூழ்ந்த சபையில்—எங்கள்
மாற்ற லார்க ளோடு
முன்னர் நாங்கள் பணையம்—வைத்தே
முறையில் வெல்லு கின்றோம்.
என்ன குற்றங் கண்டாய் ?—தருமம்
யார்க் குரைக்க வந்தாய் ?
கன்னம் வைக்கி றோமோ ?—பல்லைக்
காட்டி யேய்க்கி றோமோ ? 6

பொய்யு ரைத்து வாழ்வார்,—இதழிற்
புகழு ரைத்து வாழ்வார்,
வைய மீதி லுள்ளார் ;—அவர்தம்
வழியில் வந்த துண்டோ ?

செய்யொ ணுத செய்வார்—தம்மைச்
சீரு றுத்த நாடி,
ஐய, நீயெ ழுந்தால்—அறிஞர்
அவல மெய்தி டாரோ ? 7

அன்பி லாத பெண்ணுக்—கிதமே
ஆயி ரங்கள் செய்தும்,
முன்பி னெண்ணு வாளோ ?—தருணம்
மூண்ட போது கழிவாள்.
வன்பு ரைத்தல் வேண்டா,—எங்கள்
வலிபொ றுத்தல் வேண்டா,
இன்ப மெங்க ணுண்டோ,—அங்கே
ஏகி' டென்று ரைத்தான். 8

விதுரன் சொல்வது

வேறு

நன்ருகு நெறியறியா மன்ன னங்கு
நான்குதிசை யரசர்சபை நடுவே, தன்னைக்
கொன்ருலு மொப்பாக வடுசொற் கூறிக்
குமைவதனி லணுவளவுங் குழப்ப மெய்தான் ;
'சென்ருலு மிருந்தாலு மினியென் னேடா ?
செய்கைநெறி யறியாத சிறியாய், நின்னைப்
பொன்ருத வழிசெய்ய முயன்று பார்த்தேன் ;
பொல்லாத விதியென்னைப் புறங்கண் டானல் ! 9

'கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விடந்தோய்த்த நெஞ்சுங் கொண்டோர்
படுஞ்செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்.
" பால்போலுந் தேன்போலு மினிய சொல்லோர்
இடும்பைக்கு வழிசொல்வார் ; நன்மை காண்பார்
இளகுமொழி கூரு''ரென் றிந்தத் தானும்,—
நெடும்பச்சை மரம்போலே வளர்ந்து விட்டாய்—
நினக்கெவருங் கூறியவ ரில்லை கொல்லோ ? 10

'நலங்கூறி யிடித்துரைப்பார் மொழிகள் கேளா
நரபதி,நின் னவைக்களத்தே யமைச்ச ராக
வலங்கொண்ட மன்னரொடு பார்ப்பார் தம்மை
வைத்திருத்தல் சிறிதேனுந் தகாது கண்டாய்.
சிலங்கைப்பொற் கச்சணிந்த வேசை மாதர்
சிறுமைக்குத் தலைகொடுத்த தொண்டர், மற்றுங்
குலங்கெட்ட புலைநீசர், முடவர், பித்தர்,
கோமகனே, நினக்குரிய அமைச்சர் கண்டாய்! 11

'சென்றுலு நின்றுலு மினியென் னேடா?
செப்புவன நினக்கெனநான் செப்பி னேனு?
மன்றுர நிறைந்திருக்கு மன்னர், பார்ப்பார்,
மதியில்லா மூத்தோனு மறியச் சொன்னேன்.
இன்றேடு முடிகுவதோ? வருவ தெல்லாம்
யானறிவேன், வீட்டுமனு மறிவான், கண்டாய்.
வென்றுனுள் ளாசையெலாம் யோகி யாகி
வீட்டுமனு மொன்றுரையா திருக்கின்று னே. 12

'விதிவழிநன் குணர்ந்திடினும், பேதை யேன்யான்
வெள்ளோமன முடைமையினல், மகனே, நின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்.
சரி,சரியிங் கேதுரைத்தும் பயனென் றில்லே.
மதிவழியே செல்லு'கென விதுரன் கூறி
வாய்மூடித் தலைகுனிந்தே யிருக்கை கொண்டான்.
பதிவறுவோம் புவியிலெனக் கலிம கிழ்ந்தான்,
பாரதப்போர் வருமென்று தேவ ராரத்தார். 13

சூது மீட்டுந் தொடங்குதல்

வேறு

காயு ருட்ட லானர்—சூதுக்
களிதொ டங்க லானர்
மாய மூள்ள சகுனி—பின்னும்
வார்த்தை சொல்லு கின்றுன் :—
'நீய ழிதத தெல்லாம்—பின்னும்
நின்னி டத்து மீளும்.

ஓய்வ டைந்தி டாதே,—தருமா !
ஊக்க மெய்து' கென்றான். 14

கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத்தி ழத்தல் போலும்,
ஆயி ரங்க ளான—நீதி
யவையு ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான் ;—சிச்சீ !
சிறியர் செய்கை செய்தான். 15

'நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்க ளென்று கருதார் ;
ஆட்டு மந்தை யா மென்'—றுலகை
அரச ரெண்ணி விட்டார்.
காட்டு முண்மை நூல்கள்—பலதாங்
காட்டி னூர்க ளேனும்,
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை. 16

ஓரஞ் செய்தி டாமே,—தருமத்
துறுதி கொன்றி டாமே,
சோரஞ் செய்தி டாமே,—பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே,
ஊரை யாளு முறைமை—உலகில்
ஓர்பு றத்து மில்லை.
ஸார மற்ற வார்த்தை !—மேலே
சரிதை சொல்லு கின்றேம். 17

சகுனி சொல்வது

வேறு

'செல்வமுற் றிழந்துவிட்டாய் ;—தருமா,
தேசமுங் குடிகளுஞ் சேர்த்திழந்தாய்.
பல்வள நிறைபுவிக்கே—தருமன்
பூர்த்திவ னென்பதினிப் பழங்கதைகாண் !

சொல்வதொர் பொருள்கேளாய் ;—இன்னுஞ்
சூழ்ந்தொரு பணயம்வைத் தாடுதியேல்,
வெல்வதற் கிடமுண் டாம் ;—ஆங்கவ்
வெற்றியி லனைத்தையும் மீட்டிடலாம். 18

'எல்லா மிழந்த பின்னர்—நின்றன்
இளைஞரு நீருமற் றெதிற்பிழைப்பீர் ?
பொல்லா விளையாட்டில்—பிச்சை
புகநினை விடுவதை விரும்புகிலோம்.
வல்லார் நினதிளைஞர்—சூதில்
வைத்திடத் தகுந்தவர் பணயமென் றே ;
சொல்லால் உளம் வருந்தேல் ;—வைத்துத்
தோற்றதை மீட்' டென்று சகுனிசொன்னன். 19

வேறு

கருண னுஞ்சி ரித்தான் ;—சபையோர்
கண்ணி னீரு திர்த்தார்.
இருணி றைந்த நெஞ்சன்—களவே
யின்ப மென்று கொண்டான்,
அரவு யர்த்த வேந்தன்—உவகை
ஆர்த்தெ ழுந்து சொல்வான் ;
'பரவு நாட்டை யெல்லாம்—எதிரே
பணய மாக வைப்போம். 20

'தம்பி மாரை வைத்தே—ஆடித்
தருமன் வென்று விட்டால்,
முன்பு மாமன் வென்ற—பொருளை
முழுது மீண்ட ளிப்போம்.
நம்பி வேலை செய்வோம் ;—தருமா,
நாடி ழந்த பின்னர்,
அம்பி னைத்த விழியாள்—உங்கள்
ஐவ ருக்கு முரியாள்— 21

'அவளி கழ்ந்தி டாளோ ?—அந்த
ஆயன் பேசுவானே ?
கவலை தீர்த்து வைப்போம் ;—மேலே
களிந டக்கு' கென்றான்.

இவள வான பின்னும்—இளைஞர்
ஏதும் வார்த்தை சொல்லார்,
துவளு நெஞ்சி னராய்—வதனந்
தொங்க வீற்றி ருந்தார். 22

வீமன் மூச்சு விட்டான்—முழையில்
வெய்ய நாகம் போலே ;
காம னெத்த பார்த்தன்—வதனக்
கமலமி ழந்து விட்டான் ;
நேம மிக்க நகுலன்,—ஐயோ !
நினைவ யர்ந்து விட்டான் ;
ஊமை போலி ருந்தான்—பின்னென்
உண்மை முற்று ணர்ந்தான். 23

கங்கை மைந்த னங்கே—நெஞ்சம்
கனலு றத்து டித்தான் ;
பொங்கு வெஞ்சி னத்தால்—அரசர்
புகை யுயிர்த்தி ருந்தார் ;
அங்க நொந்து விட்டான்,—விதுரன்
அவல மெய்தி விட்டான்,
சிங்க மைந்தை நாய்கள்—கொல்லுஞ்
செய்தி காண லுற்றே. 24

ஸஹாதேவனைப் பந்தயங் கூறுதல்

வேறு

எப்பொழு தும்பிர மத்தி லே—சிந்தை
யேற்றி உலகமொ ராடல்போல்—எண்ணித்
தப்பின்றி யின்பங்கள் துய்த்திடும்—வகை
தானுணர்ந் தான்ஸஹ தேவனும்—எங்கும்
ஒப்பில் புலவனை யாட்டத்தில்—வைத்தல்
உன்னித் தருமன் பணயமென்—றங்கு
செப்பினன் காயை யுருட்டினர்—அங்கு
தீய சகுனி கெலித்திட்டான். 25

நகுலனை யிழத்தல்

நகுலனை வைத்து மிழந்திட்டான் ;—அங்கு
நள்ளிருட் கண்ணெரு சிற்றெளி—வந்து
புகுவது போலவன் புந்தியில்—'என்ன
புன்மை செய்தோம்?' என எண்ணினன்.—அவ்வெண்ண
மிகுவதன் முன்பு சகுனியும்—'ஐய,
வேறெரு தாயிற் பிறந்தவர்—வைக்கத்
தகுவரென் றிந்தச் சிறுவரை—வைத்துத்
தாயத்தி லேயிழந் திட்டனை. 26

'திண்ணிய வீமனும் பார்த்தனும்—குந்தி
தேவியின் மக்க ளனையொத்தே—நின்னிற்
கண்ணிய மிக்கவ ரென்றவர்—தமைக்
காட்டுதற் கஞ்சினை போலும்நீ ?'—என்று
புண்ணிய மிக்க தருமனை—அந்தப்
புல்லன் வினவிய போதினில்,— தர்மன்
துண்ணென வெஞ்சின மெய்தியே—'அட,
சூதி லரசிழந் தேகினும், 27

பார்த்தனை யிழத்தல்

தர்மன் சொல்வது

'எங்களி லொற்றுமை தீர்ந்திடோம் ;—ஐவர்
எண்ணத்தில், ஆவியி லொன்றுகாண்.—இவர்
பங்கமுற் றேபிரி வெய்துவார்—என்று
பாதகச் சிந்தனை கொள்கிறாய்;—அட,
சிங்க மறவர் தமக்குள்ளே—வில்லுத்
தேர்ச்சியி லேநிக ரற்றவன்,—எண்ணில்
இங்குப் புவித்தல மேழையும்—வீழ
யீடெனக் கொள்ளத் தகாதவன், 28

'கண்ணனுக் காருயிர்த் தோழனும்—எங்கள்
கண்ணிலுஞ் சால இனியவன்,
வண்ணமுந் திண்மையுஞ் சோதியும்—பெற்று
வானத் தமரரைப் போன்றவன்,—அவன்

எண்ணரு நற்குணஞ் சான்றவன்,—புக
ழேறும் விஜயன் பணயங்காண் !—பொய்யிற்
பண்ணிய காயை யுருட்டுவாய்'—என்று
பார்த்திவன் விம்மி யுரைத்திட்டான். 29

மாயத்தை யேஉரு வாக்கிய—அந்த
மாமனு நெஞ்சில் மகிழ் வுற்றே—கெட்ட
தாயத்தைக் கையினிற் பற்றினன்;—பின்பு
சாற்றி விருத்தமங் கொன்றையே—கையில்
தாய முருட்டி விழுத்தினன் ;—அவன்
சாற்றிய தேவந்து வீழ்ந்ததால்.—வெறும்
ஈயத்தைப் பொன்னென்று காட்டுவார்—மன்னர்
இப்புவி மீதுள ராமன்றே ? 30

வீமனை இழத்தல்

கொக்கரித் தார்த்து முழங்கியே—களி
கூடிச் சகுனியுஞ் சொல்லுவான் :—'எட்டுத்
திக்கினைத் தும்வென்ற பார்த்தனை—வென்று
தீர்த்தனம் வீமனைக் கூ'றென்றான்.—தர்மன்
தக்கது செய்தல் மறந்தனன்,—உளஞ்
சார்ந்திடு வெஞ்சின வெள்ளத்தில்—எங்கும்
அக்கரை யிக்கரை காண்கிலன்,—அறத்
தண்ண லிதனை யுரைக்கின்றான் : 31

'ஐவர் தமக்கொர் தலைவனை,—எங்கள்
ஆட்சிக்கு வேர்வலி யஃதினை,—ஒரு
தெய்வமுன் னேநின் றெதிர்ப்பினும்—நின்று
சீறி யடிக்குந் திறலனை,—நெடுங்
கைவளர் யானை பலவற்றின்—வலி
காட்டும் பெரும்புகழ் வீமனை,—உங்கள்
பொய்வளர் சூதினில் வைத்திட்டேன்—என்று
போ!'என் றுரைத்தனன் பொங்கியே. 32

போரினில் யானை விழக்கண்ட—பல
பூதங்கள் நாய்நரி காகங்கள்—புலை
ஓரி கழுகென் றிவையெலாம்—தம
துள்ளங் களிகொண்டு விம்மல்போல்,—மிகச்
சீரிய வீமனைச் சூதினில்—அந்தத்
தீயர் விழுந்திடக் காணலும்—நின்று
மார்பிலுந் தோளிலுங் கொட்டினர்—களி
மண்டிக் குதித்தெழுந் தாடுவார். 33

தருமன் தன்னைத்தானே பணயம் வைத்திழத்தல்

மன்னவர், தம்மை மறந்துபோய்,—வெறி
வாய்ந்த திருடரை யொத்தனர்.—அங்கு
சின்னச் சகுனி சிரிப்புடன்—இன்னும்
'செப்புக பந்தயம் வே'றென்றான்.—இவன்
தன்னை மறந்தவ ஞதலால்—தன்னைத்
தான் பணயமென வைத்தனன்.—பின்பு
முன்னைக் கதையன்றி வேறுண்டோ?—அந்த
மோசச் சகுனி கெலித்தனன். 34

துரியோதனன் சொல்வது

பொங்கி யெழுந்து சுயோதனன்—அங்கு
பூதல மன்னர்க்குச் சொல்லுவான் :—'ஒளி
மங்கி யழிந்தனர் பாண்டவர்—புவி
மண்டல நம்ம தினிக்கண்டீர்.—இவர்
சங்கை யிலாத நிதியெலாம்—நம்மைச்
சார்ந்தது ; வாழ்த்துதிர் மன்னர்காள் !—இதை
எங்கும் பறையறை வாயடா—தம்பி !'
என்றது கேட்டுச் சகுனிதான், 35

சகுனி சொல்வது

'புண்ணிடைக் கோல்கொண்டு குத்துதல்—நின்னைப்
போன்றவர் செய்யத் தகுவதோ?—இரு
கண்ணி னியவ ராமென்றே—இந்தக்
காளையர் தம்மையிங் குந்தைதான்—நெஞ்சி

லெண்ணி யிருப்ப தறிகுவாய் ;—இவர்
யார்? நின்றன் சோதர ரல்லரோ?—களி
நண்ணித் தொடங்கிய சூதன்றே?—இவர்
நா ணுறச் செய்வது நேர்மையோ ? 36

'இன்னும் பணயம்வைத் தாடுவோம்;—வெற்றி
இன்னு மிவர்பெற லாகுங்காண்.
பொன்னுங் குடிகளுந் தேசமும்—பெற்றுப்
பொற்பொடு போதற் கிடமுண்டாம் ;—ஒளி
மின்னு மமுதமும் போன்றவள்—இவர்
மேவிடு தேவியை வைத்திட்டால், அவள்
துன்னு மதிட்ட முடையவள்—இவர்
தோற்ற தனைத்தையு மீட்டலாம்.' 37

என்றந்த மாம னுரைப்பவே—வளர்
இன்ப மனத்தி னுடையனாய்—'மிக
நன்றுநன்'றென்று சுயோதனன்—சிறு
நாயொன்று தேன்கல சத்தினை—எண்ணித்
துன்று முகவையில் வெற்றுநா—வினைத்
தோய்த்துச் சுவைத்து மகிழ்தல்போல்—அவன்
ஒன்றுரை யாம லிருந்திட்டான்—அழி
வுற்ற துலகத் தறமெலாம். 38

அடிமைச் சருக்கம்

முற்றிற்று.

———

ஓம் சக்தி

நான்காவது

துகிலுரிதற் சருக்கம்

—: o :—

திரௌபதியை இழத்தல்

பாவியர் சபைதனிலே,—புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப்பயனே,
ஆவியி னியவளே,—உயிர்த்
தணிசுமந் துலவிடு செய்யமுதை,
ஓவிய நிகர்த்தவளே,—அரு
ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்
தேவியை, நிலத்திருவை,—எங்குந்
தேடினுங் கிடைப்பருந் திரவியத்தை,

படிமிசை யிசையுற வே—நடை
பயின்றிடுந் தெய்விக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை,—ஒரு
கமனியக் கனவினைக் காதலினை,
வடிவுறு பேரழகை,—இன்ப
வளத்தினைச் சூதினிற் பணயமென் றே
கொடியவ ரவைக்களத்தில்—அறக்
கோமகன் வைத்திடல் குறித்துவிட்டான்.

வேறு

வேள்விப் பொருளினையே—புலி நாயின்முன்
மென்றிட வைப்பவர்போல்,
நீள்விட்டப் பொன்மாளிகை—கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்,

ஆள்விற்றுப் பொன்வாங்கியே—செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல்போல்,—
கேள்விக் கொருவரில்லை—உயிர்த்தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கினன். 41

செருப்புக்குத் தோல்வேண்டியே,—இங்குக் கொல்வரோ
செல்வக் குழந்தையினை ?
விருப்புற்ற சூதினுக்கே—ஒத்த பந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலியோ ?
ஒருப்பட்டுப் போனவுடன்,—கெட்ட மாமனும்
உன்னியத் தாயங்கொண்டே
இருப்பகடை போடென்றான்,—பொய்மைக் காய்களும்
இருப்பகடை போட்டவே. 42

திரௌபதி சூதில் வசமானதுபற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சி

திக்குக் குலுங்கிடவே—எழுந்தாடுமாம்
தீயவர் கூட்டமெல்லாம்.
தக்குத்தக் கென்றேஅவர்—குதித்தாடுவார்
தம்மிரு தோள்கொட்டுவார்.
ஒக்குந் தருமனுக்கே—இஃதென்ப 'ரோ !
ஓ !' வென் றிரைந்திடுவார் ;
கக் கக்கென் றேநகைப்பார்—'துரியோதனை,
கட்டிக்கொ ளெம்மை'யென்பார். 43

மாமனைத் ' தூக்கா ' யென்பார் ;—அந்த மாமன்மேல்
மாலை பலவீசுவார்.
' சேமத் திரவியங்கள்—பலநாடுகள்
சேர்ந்ததி லொன்றுமில்லை ;
காமத் திரவியமாம்—இந்தப்பெண்ணையுங்
கைவச மாகச்செய்தான் ;
மாமனெர் தெய்வ'மென்பார் ; 'துரியோதனன்
வாழ்க'வென் றூர்த்திடுவார். 44

துரியோதனன் சொல்வது

நின்று துரியோதனன்—அந்த மாமனை
நெஞ்சொடு சேரக் கட்டி,
'என்துயர் தீர்த்தாயடா—உயிர் மாமனே,
ஏளனந் தீர்த்துவிட்டாய்.
அன்று நகைத்தாளடா ;—உயிர் மாமனே,
அவளை யென் ஆளாக்கினாய்.
என்று மறவேனடா,—உயிர் மாமனே,
என்னகைம் மாறுசெய்வேன் ! 45

'ஆசை தணித்தாயடா,—உயிர் மாமனே,
ஆவியைக் காத்தாயடா.
பூசை புரிவோமடா,—உயிர் மாமனே,
பொங்க லுனக்கிடுவோம்.
நாச மடைந்ததடா—நெடுநாட்பகை,
நாமினி வாழ்ந்தோமடா !
பேசவுந் தோன்றுதில்லை ;—உயிர் மாமனே,
பேரின்பங் கூட்டிவிட்டாய்.' 46

என்று பலசொல்லுவான்,—துரியோதனன்
எண்ணியெண் ணிக்குதிப்பான் ;
குன்று குதிப்பதுபோல்—துரியோதனன்
கொட்டிக் குதித்தாடுவான்.
மன்று குழப்பமுற்றே,—அவர் யாவரும்
வகைதொகை யொன்றுமின்றி
அன்று புரிந்ததெல்லாம்—என்றன் பாட்டிலே
ஆக்க லெளிதாகுமோ ? 47

திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்து வரச் சொல்லியதுபற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்

வேறு

தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக,
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணுக,

வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய,
மோன முனிவர் முறைகெட்டுத் தாமயங்க,
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட,
நாதங் குலைந்து நடுமையின்றிப் பாழாக,
கந்தருவ ரெல்லாங் கூளியழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோ ரனைவோரும் பித்துறவே,
நான்முகனுர் நாவடைக்க, நாமகட்குப் புத்திகெட,
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத் திருமாலும்
அறிதுயில்போய் மற்றுங்கே ஆழ்ந்ததுயி லெய்திவிட
செறிதருநற் சிரழத செல்வமெலாந் தானுகுஞ்
சீதேவி தன்வதனஞ் செம்மைபோய்க் காரடைய,
மாதேவன் யோகம் மதிமயக்க மாகிவிட,—
வாலை, உமாதேவி, மாகாளி, வீறுடையாள்,
மூலமா சக்தி,யொரு மூவிலைவேல் கையேற்றுள்,
மாயை தொலைக்கு மஹாமாயை தானுவாள்,
பேயைக் கொலையைப் பிணக்குவையைக் கண்டுவப்பாள்,
சிங்கத்தி லேறிச் சிரிப்பா லுலகழிப்பாள்.
சிங்கத்தி லேறிச் சிரித்தெவையுங் காத்திடுவாள்,
நோவுங் கொலையு நுவலொணுப் பீடைகளும்
சாவுஞ் சலிப்புமெனத் தான்பல் கணமுடையாள்,
கடாவெருமை யேறுங் கருநிறத்துக் காலனுர்
இடாது பணிசெய்ய இலங்கு மஹாராணி,
மங்களஞ் செல்வம் வளர்வாழ்நாள் நற்கீர்த்தி
துங்கமுறு கல்வியெனச் சூழும் பல்கணத்தாள்,
ஆக்கந்தா னுவாள், அழிவு நிலையாவாள்,
போக்குவர வெய்தும் புதுமை யெலாந் தானுவாள்,
மாறிமா றிப்பின்னு மாறிமா றிப்பின்னும்
மாறிமா றிப்போம் வழக்கமே தா னுவாள்,
ஆதிபரா சக்தி—அவணெஞ்சம் வன்மையுற,
சோதிக் கதிர்விடுக்கும் சூரியனுந் தெய்வத்தின்
முகத்தே யிருள்படர,

துரியோதனன் விதுரனை நோக்கி யுரைப்பது

மூடப் புலமையினேன்,
அகத்தே யிருளுடையான், ஆரியரின் வேருனேன்,

துரியோ தனனுஞ் சுறுக்கெனவே தான்திரும்பி
அரியோன் விதுர னவனுக் குரைசெய்வான் :
'செல்வாய், விதுராநீ சிந்தித் திருப்பதேன் ?
வில்வா ணுதலிஞள், மிக்க எழிலுடையாள்,
முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்,
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்
சென்று விலைவெல்லாஞ் செவ்வனே தானுணர்த்தி,
"மன்றி னிடையுள்ளானின் மைத்துனனின் ஞேர்தலைவன்
நின்னை யழைக்கிருன் நீள்மனையி லேவலுக்கே"
என்ன வுரைத்தவலை யிங்குகொணர் வாய்' என்ருன்.

விதுரன் சொல்வது

துரியோ தனனிச் சுடுசொற்கள் கூறிடவும்,
பெரியோன் விதுரன் பெரிதுஞ் சினங்கொண்டு,
'மூட மகனே, மொழியொணு வார்த்தையினைக்
கேடு வரலறியாய், கீழ்மையினுற் சொல்லிவிட்டாய்.
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்,
பிள்ளைத் தவலை பெரும்பாம்பை மோதுதல்போல்,
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்ருய்.
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகிருய்;
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெலாஞ் சொல்லுகிறேன்.
என்னுடைய சொல்வே றெவர்பொருட்டு மில்லையடா !
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல், மகனே, கிடப்பாய்நீ.
தன்னழிவு நாடுந் தறுகண்மை யென்னேடா ?
முன்னமொரு வேனன் முடிந்தகதை கேட்டிலையோ ?
நல்லோர் தமதுள்ளம் நையச் செயல்செய்தான்
பொல்லாத வேனன், புழுவைப்போல் மாய்ந்திட்டான்.
நெஞ்சஞ் சுடவுரைத்தல் நேர்மையெனக் கொண்டாயோ ?
மஞ்சனே, யச்சொல் மருமத்தே பாய்வதன்ரே ?
கெட்டார்தம் வாயி லெளிதே கிளைத்துவிடும் ;
பட்டார்தம் நெஞ்சிற் பலநா ளகலாது.
வெந்நரகு சேர்த்துவிடும், வித்தை தடுத்துவிடும்,

மன்னவனே, நொந்தார் மனஞ்சுடவே சொல்லுஞ்சொல்.
சொல்லி விட்டேன்; பின்னொருகால் சொல்லேன்,
கவுரவர்காள்!

புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது.
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்!
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்,
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்ட
தெலாம்

மீண்டவர்க்கே ஈந்துவிட்டு, விநயமுடன்,
"ஆண்டவரே, யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர்" என்றுரைத்து,
மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடூர்.
குற்றந் தவிர்க்கு நெறியிதனைக் கொள்ளீரேல்,
மாபா ரதப்போர் வரும்;நீ ரழிந்திடுவீர்,
பூபால ரேஎன்றப் புண்ணியனுங் கூறினன்.
சொல்லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்,
வல்லிடிபோல் 'சீச்சி! மடையா, கெடுகநீ
எப்போது மெம்மைச் சபித்த லியல்புனக்கே.
இப்போதுன் சொல்லை யெவருஞ் செவிக்கொளார்.
யாரடா, தேர்ப்பாகன்! நீபோய்க் கணமிரண்டில்
"பாரதர்க்கு வேந்தன் பணித்தா" னெனக்கூறிப்
பாண்டவர்தந் தேவிதனைப் பார்வேந்தர் மன்றினிலே
ஈண்டழைத்து வா'என் றியம்பினன். ஆங்கேதேர்ப்
பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகந் ததும்பித் துடித்த குரலுடனே,
'அம்மனே போற்றி! அறங்காப்பாய், தாள்போற்றி!
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச் சூதாடியதில்,
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்.
சாற்றிப் பணயமெனத் தாயே உனைவைத்தார்.
சொல்லவுமே நாவு துணியவில்லை; தோற்றிட்டார்.
எல்லாருங் கூடி யிருக்கும் ஸபைதனிலே,
நின்னை யழைத்துவர நேமித்தான் எம்மரசன்'

என்ன வுரைத்திடலும், 'யார்சொன்ன வார்த்தையடா!
சூதர் ஸபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார்பணியால்
என்னை யழைக்கின்றாய்?' என்றாள். அதற்கவனும்
'மன்னன் சுயோதனன்றன் வார்த்தையினால்' என்
றிட்டான்.
'நல்லது; நீ சென்று நடந்ததை கேட்டு வா.
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னைமுன்னே கூறி யிழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று ஸபையில்இச் செய்தி தெரிந்துவா,
என்றவளுங் கூறி, யிவன்போ கியபின்னர்,
தன்னந் தனியே தவிக்கு மனத்தாளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய,
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள். பின்னந்தத் தேர்ப்பாகன்
மன்னன் ஸபைசென்று, 'வாள்வேந்தே! ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து "போதருவீர்" என்
றிட்டேன்.
"என்னைமுதல் வைத்தி ழந்தபின்பு தன்னையென்
மன்ன ரிழந்தாரா? மாறித் தமைத்தோற்ற
பின்னரெனைத் தோற்றாரா?" என்றேதும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம்பணித்தார்.
வந்துவிட்டேன்' என்றுரைத்தான். மாண்புயர்ந்த
பாண்டவர்தாம்
நொந்துபோ யொன்றும் நுவலா திருந்து விட்டார்.
மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்னரெலாம்
முற்று முரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார். 48

துரியோதனன் சொல்வது

வேறு

உள்ளந் துடித்துச் சுயோதனன்—சினம்
ஓங்கி வெறிகொண்டு சொல்லுவான்:—'அட,
பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய்.—என்றன்
பெற்றி யறிந்திலை போலும், நீ!—அந்தக்

கள்ளக் கரிய விழியினுள்—அவள்
கல்லிகள் கொண்டிங்கு வந்தனை!—அவள்
கிள்ளை மொழியி னலத்தையே!—இங்கு
கேட்க விரும்புமென் னுள்ளமே. 49

'வேண்டிய கேள்விகள் கேட்கலாம்,—சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்லலாம்,—மன்னர்
நீண்ட பெருஞ்சபை தன்னிலே—அவள்
நேரிடவே வந்த பின்புதான்.—சிறு
கூண்டிற் பறவையு மல்லளே?—ஐவர்
கூட்டு மனைவிக்கு நாணமேன்?—சின
மூண்டு கடுஞ்செயல் செய்யுமுன்—அந்த
மொய்குழ லாளையிங் கிட்டுவா. 50

'மன்னன் அழைத்தனன் என்றுநீ—சொல்ல
மாறியவ ளொன்று சொல்வதோ?—உன்னைச்
சின்ன முறச்செய்கு வேனடா!—கணஞ்
சென்றவ ளைக்கொணர் வாய்'என்றான்.—அவன்
சொன்ன மொழியினைப் பாகன்போய்—அந்தத்
தோகைமுன் கூறி வணங்கினன்.—அவள்
இன்னல் விளைந்திவை கூறுவாள்—'தம்பி,
என்றனை வீணி லழைப்பதேன்? 51

திரௌபதி சொல்லுதல்

'நாயகர் தாந்தம்மைத் தோற்றபின்—என்னை
நல்கு முரிமை அவர்க்கில்லை.—புலித்
தாயத்தி லேவிலைப் பட்டபின்,—என்ன
சாத்திரத் தாலெனைத் தோறறிட்டார்? அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்;—புவி
தாங்குந் துருபதன் கன்னிநான்.—நிலை
சாயப் புலித்தொண்டு சார்ந்திட்டால்,—பின்பு
தார முடைமை யவர்க்குண்டோ! 52

'கௌரவ வேந்தர் ஸபைதன்னில்—அறங்
கண்டவர் யாவரு மில்லையோ ?—மன்னர்
சௌரியம் வீழ்ந்திடு முன்னரே—அங்கு
சாத்திரஞ் செத்துக் கிடக்குமோ ?—புகழ்
ஒவ்வுற வாய்ந்த குருக்களும்—கல்வி
ஓங்கிய மன்னருஞ் சூதிலே—செல்வம்
வவ்வுறத் தாங்கண் டிருந்தனர் ; என்றன்‡
மான மழிவதுங் காண்பரோ ? 53

'இன்பமுந் துன்பமும் பூமியின்—மிசை
யார்க்கும் வருவது கண்டனம் ;—எனில்
மன்பதை காக்கு மரசர்தாம்—அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ ?—அதை
அன்புந் தவமுஞ் சிறந்துளார்—தலை
யந்தணர் கண்டு களிப்பரோ ?—அவர்
முன்பென் விஞ்ஞை மீட்டும்போய்ச்—சொல்லி
முற்றுந் தெளிவுறக் கேட்டுவா' 54

என்றந்தப் பாண்டவர் தேவியும்—சொல்ல,
என்செய்வன் ஏழையப் பாகனே ?—'என்னைக்
கொன்றுவிட் டாலும் பெரிதில்லை.—இவள்
கூறும் விஞ்ஞைக் கவர்விடை—தரி
னன்றி யிவளை மறுமுறை—வந்
தழைத்திட நானங் கிசைந்திடேன்'$—(என)
நன்று மனத்திடைக் கொண்டவன்—சபை
நண்ணி நிகழ்ந்தது கூறினன். 55

''மாத விடாயி லிருக்கிறாள்—அந்த
மாதர்' கென்பதுங் கூறினன்.—கெட்ட
பாதக னெஞ்ச மிளகிடான்—நின்ற
பாண்டவர் தம் முக நோக்கினன் ;—அவர்

[குறிப்பு]: ‡ ''என்றன்' என்று ஒரு தனிச் சொல் ஊகித்துக் கொள்ளலாம் என்கிறார் கவிமணி.

$ 'ஏன்' என்பது முதற்பதிப்பிலில்லை ; ஊகித்துக் கொண்ட பாடம்.

பேதுற்று நிற்பது கண்டனன்.—மற்றும்
பேரவை தன்னி லொருவரும்—இவன்
தீதுற்ற சிந்தை தடுக்கவே—உள்ளத்
திண்மை யிலாதங் கிருந்தனர். 56

பாகனே மீட்டுஞ் சினத்துடன்—அவன்
பார்த்திடி போலுரை செய்கின்றான்:—'பின்னும்
ஏகி நமதுளங் கூறடா!—அவள்
ஏழு கணத்தில் வரச்செய்வாய்!—உன்னைச்
சாக மிதித்திடு வேனடா!'—என்று
தார்மன்னன் சொல்லிடப் பாகனும்—மன்னன்
வேகந் தனைப்பொருள் செய்திடான்—அங்கு
வீற்றிருந் தோர்தமை நோக்கியே, 57

'சீறும் அரசனுக் கேழையேன்—பிழை
செய்ததுண்டோ? அங்கு தேவியார்—தமை
நூறு தரஞ்சென் றழைப்பினும்,—அவர்
நுங்களைக் கேட்கத் திருப்புவார்;—அவர்
ஆறுதல் கொள்ள ஒருமொழி—சொல்லில்,
அக்கண மேசென் றழைக்கின்றேன்;—மன்னன்
கூறும் பணிசெய வல்லன்யான்;—அந்தக்
கோதை வராவிடி லென்செய்வேன்?' 58

துரியோதனன் சொல்வது

பாக னுரைத்தது கேட்டனன்—பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கின்றான்:—'அவள்
பாக னழைக்க வருகிலள்;—இந்தப்
பையலும் வீமனே யஞ்சியே—பல
வாகத் திகைப்புற்று நின்றனன்;—இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கிறேன்,—'தம்பீ!
போகக் கடவைநீப் போதங்கே;—இங்கப்
பொற்றொடி யோடும் வருகநீ!, 59

துகிலுரிதல் சருக்கம்
முற்றிற்று.

ஐந்தாவது

சபதச் சருக்கம்

—: o :—

துச்சாதனன் திரௌபதியை ஸபைக்குக் கொணர்தல்

இவ்வுரை கேட்டதுச் சாதனன்—அண்ண
னிச்சையை மெச்சி யெழுந்தனன்.—இவன்
செவ்வி சிறிது புகலுவோம்.—இவன்
தீமையி லண்ணனே வென்றவன் ;—கல்வி
எவ்வள வேனுமி லாதவன் ; —கள்ளும்
ஈரக் கறியும்*விரும்புவோன் ;—பிற
தெவ்வ ரிவன்றனை யஞ்சுவார் ;—தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றெதுங்குவார் ; 60

புத்தி விவேகமில் லாதவன் ;—புலி
போல வுடல்வலி கொண்டவன் ;—கரை
தத்தி வழியுஞ் செருக்கினுல்—கள்ளின்
சார்பின்றி யேவெறி சான்றவன் ;—அவ
சக்தி வழிபற்றி நின்றவன் ;—சிவ
சக்தி நெறியுண ராதவன் ;—இன்பம்
நத்தி மறங்க ளிழைப்பவன் ;—என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினேன் ; 61

அண்ண னெருவனே யன்றியே—புவி
யத்தனைக் குந்தலே யாயினேம்—என்னும்
எண்ணந் தனதிடைக் கொண்டவன் ;—அண்ணன்
ஏது சொன்னலு மறுத்திடான் ;—அருட்

[பா - ம்.] : * 'ஈரற்கறியும்'

—கவிமணி

கண்ணழி வெய்திய பாதகன்—' அந்தக்
காரிகை தன்னை யழைத்துவா ' என்றவ்
வண்ண னுரைத்திடல் கேட்டனன் ;—நல்ல
தாமென் றுறுமி யெழுந்தனன். 62

பாண்டவர் தேவி யிருந்ததோர்—மணிப்
பைங்கதிர் மாளிகை சார்ந்தனன் ;—அங்கு
நீண்ட துயரிற் குலைந்துபோய்—நின்ற
நேரிழை மாதினைக் கண்டனன் ;—அவள்
தீண்டலை யெண்ணி யொதுங்கினாள் ; —'அடி,
செல்வ தெங்கே'யென் றிரைந்திட்டான்.—'இவன்
ஆண்டகை யற்ற புலைய'னென்—றவள்
அச்ச மிலாதெதிர் நோக்கியே, 63

திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் ஸம்வாதம்

'தேவர் புவிமிசைப் பாண்டவர் ;—அவர்
தேவி, துருபதன் கன்னிநான் ;—இதை
யாவரு மிற்றை வரையினும்,—தம்பி,
என்முன் மறந்தவ ரில்லைகாண்.—தம்பி
காவ லிழந்த மதிகொண்டாய் ;—இங்கு
கட்டுத் தவறி மொழிகிறாய்.—தம்பி,
நீவந்த செய்தி விரைவிலே—சொல்லி
நீங்குக ' என்றனள் பெண்கொடி. 64

' பாண்டவர் தேவியு மல்லைநீ ;—புகழ்ப்
பாஞ்சாலத் தான்மக ளல்லைநீ ;—புவி
யாண்டருள் வேந்தர் தலைவனும்—எங்கள்
அண்ணனுக் கேயடி மைச்சிநீ.—மன்னர்
நீண்ட ஸபைதனிற் சூதிலே—எங்கள்
நேசச் சகுனியோ டாடியங்—குன்னைத்
தூண்டும் பணய மெனவைத்தான்—இன்று
தோற்றுவிட் டான்தரு மேந்திரன். 65

'ஆடி விலைப்பட்ட தாதி நீ ;—உன்னை
ஆள்பவ னண்ணன் சுயோதனன்.—'' மன்னர்
கூடி யிருக்குஞ் சபையிலே—உன்னைக்
கூட்டி வரு''கென்று மன்னவன்—சொல்ல
ஓடிவந் தேனிது செய்திகாண்.—இனி
ஒன்றுஞ்சொ லாதென்னை டேகுவாய்.—அந்தப்
பேடி மகனெரு பாகன்பாற்—சொன்ன
பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே.' 66

வேறு

துச்சா தனனிதனைச் சொல்லினன். பாஞ்சாலி :—
'அச்சா, கேள். மாதவிலக் காதலா லோராடை
தன்னி லிருக்கின்றேன். தார்வேந்தர் பொற்சபைமுன்
என்னை யழைத்த லியல்பில்லை. அன்றியுமே,
சோதரர்தந் தேவிதனைச் சூதில் வசமாக்கி,
ஆதரவு நீக்கி, யருமை குலைத்திடுதல்,
மன்னர் குலத்து மரபோகாண் ? அண்ணன்பால்
என்னிலைமை கூறிடுவாய், ஏகுகநீ ' என்றிட்டாள்.
கக்கக் கவென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
கையிலுற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்.
'ஐயகோ ' வென்றே யலறி யுளர்வற்றுப்
பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர,
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான். வழிநெடுக, மொய்த்தவராய்,
'என்ன கொடுமை யிது'வென்று பார்த்திருந்தார்.
ஊரவர்தங் கீழ்மை யுரைக்குந் தரமாமோ ?
வீரமிலா நாய்கள். விலங்கா மிளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னியவ ளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினர்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ ?
பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க்

கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே
கூடுதலு மங்கேபோய்க் 'கோ' வென் றலறினாள்.

ஸபையில் திரௌபதி நீதி கேட்டழுதல்

விம்மி யழுதாள் :—'வியோ கணவரே,
அம்மி மிதித்தே யருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து,
பாதகர்மு னிந்நாட் பரிசழிதல் காண்பீரோ ?'
என்றாள். விஜயனுட னேறுதிறல் வீமனுமே
குன்று மணித்தோள் குறிப்புடனே நோக்கினார்.
தருமனு மற்றுங்கே தலைகுனிந்து நின்றிட்டான்.
பொருமியவள் பின்னும் புலம்புவாள் :—'வான்சபையில்
கேள்வி பலவுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்,
மேலோ ரிருக்கின்றீர். வெஞ்சினமேன் கொள்கிலிரோ ?
வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டார்.
இங்கிவர்மேற் குற்ற மியம்ப வழியில்லை.
மங்கியதோர் புன்மதியாய் ! மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே யேச்சுக்கள் சொல்லுகிறாய்.
நின்னை யெவரும் "நிறுத்தடா" என்பதிலர்.
என் செய்கேன்?' என்றே யிரைந்தழுதாள். பாண்டவரை
மின்செய் கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினாள்.
மற்றவர் தாமுன்போல் வாயிழந்து சீர்குன்றி
பற்றைகள்போல் நிற்பதனைப் பார்த்து, வெறிகொண்டு
'தாதியடி தாதி !'யெனத் துச்சா தனனவனைத்
தீதுரைகள் கூறினான். கர்ணன் சிரித்திட்டான்.
சகுனி புகழ்ந்தான். சபையினோர் ? வீற்றிருந்தார் !
தகுதியுயர் வீட்டுமனுஞ் சொல்லுகிறான் : 'தையலே,

வீட்டுமாசார்யன் சொல்வது

சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்.
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி. தொழில்வலியால்,

மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய். கோமகளே, பண்டையுக
வேதமுனிவர் விதிப்படி,நீ சொல்லுவது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச் செய்தியது!
ஆணெடுபெண் முற்று நிகரெனவே யந்நாளில்
பேணிவந்தார். பின்னுளி லிஃது பெயர்ந்துபோய்,
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர். ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்.
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்கு பார்த் திடிலோ,
கல்லு நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்,
செய்கை யநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைகு நெறியும் வழக்கமுநீ கேட்பதனால்,
ஆங்கவையு நின்சார்பி லாகா வகையுரைத்தேன்.
தீங்கு தடுக்குந் திறமிலேன்' என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான். மெல்லியளுஞ்
சொல்லுகிறாள்:—

திரௌபதி சொல்வது

'சாலநன்கு கூறினீ ரையா, தருமநெறி
பண்டோ ரிராவணனும் ஸீதைதன்னைப் பாதகத்தாற்
கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின், கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே,
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்
"தக்கதுநீர் செய்திர்; தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும்" எனக் கூறி யுகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்.
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ

முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றே?
மண்டபநீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றே?
பெண்டிர் தமையுடையீர்! பெண்க ளுடன்பிறந்தீர்!
பெண்பாவ மன்றே? பெரியவசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்!' என்று கையெடுத்துக்
கும்பிட்டாள்.
அம்புபட்ட மான்போ லழுது துடிதுடித்தாள்.
வம்பு மலர்க்கூந்தல் மண்மேற் புரண்டுவிழத்
தேவி கரைந்திடுதல் கண்டே, சிலமொழிகள்
பாவி துச்சாதனனும் பாங்கிழந்து கூறினன். 67

வேறு

ஆடை குலைவுற்று நிற்கிறாள்;—அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள்.—வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிறான்.—இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும்,—கரை
மீறி யெழுந்தது வெஞ்சினம்;—துயர்
கூடித் தருமனே நோக்கியே,—அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ? 68

வீமன் சொல்வது

வேறு

'சூதர் மனைகளிலே—அண்ணே!
தொண்டு மகளிருண்டு.
சூதிற் பணய மென்றே—அங்கோர்
தொண்டச்சி போவதில்லை. 69

'ஏது கருதிவைத்தாய்?—அண்ணே,
யாரைப் பணயம்வைத்தாய்?
மாதர் குலவிளக்கை—அன்பே
வாய்ந்த வடிவழகை. 70

'பூமி யரசரெல்லாங்—கண்டே
போற்ற விளங்குகிறான்,
சாமி, புகழினுக்கே—வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சாலன். 71

'அவன் சுடர்மகளே,—அண்ணே,
ஆடி யிழந்துவிட்டாய்.
தவறு செய்துவிட்டாய் ;—அண்ணே,
தருமங் கொன்றுவிட்டாய். 72

'சோரத்திற் கொண்டதில்லே ;—அண்ணே,
சூதிற் படைத்ததில்லே.
வீரத்தி னாற்படைத்தோம் ;—வெம் போர்
வெற்றியி னாற்படைத்தோம் ; 73

'சக்கர வர்த்தியென்றே—மேலாந்
தன்மை படைத்திருந்தோம் ;
பொக்கென ஓர்கணத் தே—எல்லாம்
போகத் தொலைத்துவிட்டாய். 74

'நாட்டையெல் லாந்தொலைத்தாய் ;—அண்ணே,
நாங்கள் பொறுத்திருந்தோம்.
மீட்டு மெமையடிமை—செய்தாய்,
மேலும் பொறுத்திருந்தோம். 75

'துருபதன் மகளைத்—திட்டத்
துய்ந னுடற்பிறப்பை,—
இருபகடை யென்றாய்,—ஐயோ !
இவர்க் கடிமையென்றாய் ! 76

'இதுபொறுப்ப தில்லே,—தம்பி !
எரிதழல் கொண்டுவா.
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்.' 77

அர்ஜுனன் சொல்வது

எனவீமன் ஸஹதேவ னிடத்தே சொன்னான்.
இதைக்கேட்டு வில்விஜயன் எதிர்த்துச் சொல்வான் :
' மனமாரச் சொன்னையோ ? வீமா ! என்ன
வார்த்தை சொன்னாய் ? எங்குசொன்னாய் ? யாவர்
முன்னே ?
கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே யிழந்திடுதல் குற்ற மென்றாய் ;
சினமான தீயறிவைப் புகைத்த லாலே,
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய். 78

' "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் ;
தருமமறு படிவெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் ; கால மாறும்.
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்.
தனுவுண்டு காண்டீவ மதன்பேர்' என்றான். 79

விகர்ணன் சொல்வது

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்.
அப்போது விகர்ணனெழுந் தவைமுன் சொல்வான் :
' பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான்கொள்ளேன். பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனிலுஞ் செய்திடலா மென்றான் பாட்டன்.
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னுள்
வழங்குவதிந் நெறியென்றான் ; வழுவே சொன்னான். 80

' எந்தையர்தாம் மனைவியரை விற்ற துண்டோ ?
இதுகாறு மரசியரைச் சூதிற் தோற்ற
விந்தையைநீர் கேட்ட துண்டோ ? விலைமாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்

சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்து விட்டார்!
சொல்லள வேதானலும், வழக்கந் தன்னில்
இந்தவிதஞ் செய்வதில்லை ; சூதர் வீட்டில்
ஏவற்பெண் பணயமில்லை யென்றுங் கேட்டோம். 81

‘ “தன்னையிவ னிழந்தடிமை யான பின்னர்த்
தாரமெது? வீடேது? தாத னென
பின்னையுமோ ருடைமை யுண்டோ?” என்றுநும்மைப்
பெண்ணரசு கேட்கின்றூர் பெண்மை வாயால்.
மன்னர்களே, களிப்பதுதான் சூதென் றுலும்
மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னையிரு விழிபார்க்க வாய்பே சீரோ ?
தாத்தனே, நீதியிது தகுமோ?’ என்றுன். 82

இவ்வாறு விகர்ணனு முரைத்தல் கேட்டார் ;
எழுந்திட்டார் சிலவேந்தர்; இரைச்ச லிட்டார் ;
‘ஒவ்வாது சகுனிசெயுங் கொடுமை’ யென்பார்;
‘ஒருநாளு முலகிதனை மறக்கா’ தென்பார்;
‘எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர் ;
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா.
செவ்வானம் படர்ந்தாற்போ லிரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழியிஃ’ தென்பார். 83

கர்ணன் பதில்

விகருணன் சொல்லைக் கேட்டு வில்லிசைக் கர்ணன்
சொல்வான் :—
‘தகுமடா, சிறியாய், நின்சொல். தாரணி வேந்தர்
யாரும்
புகுவது நன்றன் றெண்ணி வாய்புதைத் திருந்தார்,
நீதான்
மிகுமுரை சொல்லி விட்டாய். விரகிலாய்! புலனு
மில்லாய்! 84

பெண்ணிவள் தூண்ட லெண்ணிப் பசுமையால்
பிதற்று கின்றாய்;
எண்ணிலா துரைக்க லுற்றாய்; இவளோநாம் வென்ற
தாலே
நண்ணிடும் பாவ மென்றாய். நாணிலாய்! பொறையு
மில்லாய்!
கண்ணிய நிலைமை யோராய்; நீதிநீ காண்ப
துண்டோ? 85

மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கங்கீ ழடியார்க்
கில்லை.
சீரிய மகளு மல்லள்; ஐவரைக் கலந்த தேவி.
யாரடா, பணியாள்! வாராய்; பாண்டவர் மார்பி
லேந்தும்
சீரையுங் களைவாய்; தையல் சேலையுங் களைவாய்'
என்றான். 86

இவ்வுரை கேட்டா ரைவர்; பணிமக்க ளேவா முன்னந்
தெவ்வர்கண் டஞ்சு மார்பைத் திறந்தனர், துணியைப்
போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள், ஞானசுந் தரிபாஞ் சாலி
'எவ்வழி யுய்வோ' மென்றே தியங்கிளள், இணைக்கை
கோத்தாள். 87

வேறு

திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை

துச்சா தனன்எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை யுரிதலுற்றான்.
'அச்சோ தேவர்களே!'—என்
றலறியவ் விதுரனுந் தரைசாய்ந்தான்.
பிச்சேறி யவனைப்போல்—அந்தப்
பேயனுந் துகிலினை யுரிகையிலே,
உட்சோதி யிற்கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமையுற்றாள். 88

'ஹரி,ஹரி, ஹரிஎன்றாள்;—கண்ணா!
அபய மபயமுனக் கபயமென்றாள்.
கரியினுக் கருள்புரிந்தே—அன்று
கயத்திடை முதலியி னுயிர்மடித்தாய்,

கரியநன்னிற முடையாய்,—அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்!
பெரியதொர் பொருளாவாய்,—கண்ணா!
பேசரும் பழமறைப் பொருளாவாய்! 89

'சக்கர மேந்திநின்றாய்,—கண்ணா!
சார்ங்கமென் றொருவில்லைக் கரத்துடையாய்!
அக்ஷரப் பொருளாவாய்,—கண்ணா!
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்!
துக்கங்க ளழித்திடுவாய்,—கண்ணா!
தொண்டர்கண் ணீர்களைத் துடைத்திடுவாய்!
தக்கவர் தமைக்காப்பாய்,—அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்துவிட்டாய். 90

'வானத்துள் வாழ்வாய்;—தீ
மண்நீர் காற்றினில் அவையாவாய்;
மோனத்துள் வீழ்ந்திருப்பார்—தவ
முனிவர்தம் அகத்தினி லொளிர்தருவாய்!
கானத்துப் பொய்கையிலே—தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்,
தானத்து ஸ்ரீ தேவி,—அவள்
தாளினை கைக்கொண்டு மகிழ்ந்திருப்பாய்! 91

'ஆதியி லாதியப்பா,—கண்ணா!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொருளே,
சோதிக்குச் சோதியப்பா,—என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினிலே—நடு
வானத்திற் பறந்திடுங் கருடன்மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்,—கண்ணா!
சுடர்ப்பொரு ளேபே ரடற்பொருளே! 92

''கம்பத்தி லுள்ளானே?—அடா!
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயுமூடா''—என்று
மகன்மிசை யுறுமியத் தூணுதைத்தான்,

செம்பவிர் குழலுடையான்,—அந்தத்
தீயவல் லிரணிய னுடல்பிளந்தாய்!
நம்பிநின் னடிதொழுதேன்;—என்னை
நாணழியா திங்கு காத்தருள்வாய். 93

'வாக்கினுக் கீசனையும்—நின் றன்
வாக்கினி லசைத்திடும் வலிமையினுய்,
ஆக்கினை கரத்துடையாய்,—என்றன்
அன்புடை யெந்தை,என் னருட்கடலே,
நோக்கினிற் கதிருடையாய்,—இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள்வாய்,
தேக்குநல் வானமுதே!—இங்கு
சிற்றிடை யாய்ச்சியில் வெண்ணெயுண்டாய்! 94

'வையகங் காத்திடுவாய்!—கண்ணா!
மணிவண் ணா,என்றன் மனச்சுடரே!
ஐய,நின் பதமலரே—சரண்.
ஹரி,ஹரி, ஹரி,ஹரி, ஹரி!'என்றுள்.
பொய்யர்தந் துயரினைப்போல்,—நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப்போல்,
தையலர் கருணையைப்போல்,—கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப்போல், 95

பெண்ணெளி வாழ்த்திடுவார்—அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல்போல்,
கண்ணபிரா னருளால்,—தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!
எண்ணத்தி லடங்காவே;—அவை
எத்தனை யெத்தனை நிறத்தனவோ! 96

பொன்னிழை பட் டிழையும்—பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைகளாய்,
சென்னியிற் கைகுவித்தாள்—அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே,

முன்னிய ஹரிநாமம்—தன்னில்
மூழுநற்† பயனுல கறிந்திடவே,
துன்னிய துகிற்கூட்டங்—கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட்டான். 97

தேவர்கள் பூச்சொரிந்தார்—'ஓம்
ஜெயஜெய பாரத சக்தி!' யென்றே.
ஆவலொ டெழுந்துநின்று—முன்னே
ஆரிய வீட்டுமன் கைதொழுதான்.
சாவடி மறவரெல்லாம் 'ஓம்
சக்திசக்திசக்தி' யென்று கரங்குவித்தார்.
காவலி னெறிபிழைத்தான்,—கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந்தான். 98

வேறு

வீமன் செய்த சபதம்

வீம னெழுந்துரை செய்வான்;—'இங்கு
விண்ணவ ராணை, பராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை;
மாமகளைக் கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன்பதத் தாணை;
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில் 99

'ஆணையிட் டிஃதுரை செய்வேன்:—இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் றன்னை,
பேணும் பெருங்கன லொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடை மீதில்

[பா - ம்.]: † 'மூளு நற்'

—கவிமணி

நாணின்றி "வந்திரு" வென்றான்—இந்த
நாய்மக னுந்துரி யோதனன் றன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே,—என்றன்
வன்மையி னல்யுத்த ரங்கத்தின் கண்ணே,

'தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்;—அங்கு
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்.
நடைபெறுங் காண்பி ருலகீர்!—இது
நான்சொல்லும் வார்த்தையென் றெண்ணிடல் வேண்டா!
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை,—இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான்.

அர்ஜுனன் சபதம்

பார்த்த னெழுந்துரை செய்வான்:—'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன் கண்ணன்கழ லாணை;
கார்த்தடங் கண்ணியெந் தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினு மாணை;
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய்,—ஹே!
பூதலமே! அந்தப் போதினில்' என்றான்.

பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்—'ஓம்,
தேவி பராசக்தி யாணை யுரைத்தேன்;
பாவிதுச் சாதனன் செந்நீர்,—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்,
மேவி யிரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சிவிக் குழல்முடிப் பேன்யான்;—இது
செய்யுமுன் னேமுடி யே'னென் றுரைத்தாள்.

ஓமென் றுரைத்தனர் தேவர் ;—ஓம்
ஓமென்று சொல்லி யுறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சியுண் டாச்சு.—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று.
சாமி தருமன் புவிக்கே—என்று
ஸாக்ஷி யுரைத்தன பூதங்க ளேந்தும்.
நாமுங் கதையை முடித்தோம்.—இந்த
நானில முற்றுநல் லின்பத்தில் வாழ்க. 104

பாஞ்சாலி சபதம் முற்றிற்று

பொருள் விளக்கமும் குறிப்புக்களும்

[பாரதியார் முதற் பதிப்பில் எழுதியன]

முதற் பாகம்

முதற் பாட்டிலிருந்து 18ஆம் பாட்டு வரையில் நொண்டிச்சிந்து.

லாலல லாலல லா—லல
லாலல லாலல லால லலா

என்ற மெட்டில் நடப்பது.

பாட்டு 1 ; வரி 7.

ஆமெனும் பொருளினைத்தாய்—'உள்ள வஸ்துக்கள் யாவுமாகி' என்பது பொருள். 'ஆம்' எனுஞ் சொல் சம்மதியைக் குறிப்பதுமட்டுமேயன்றி உண்மையையும் குறிக்கும். வடமொழியில் 'ஓம்' எனுஞ் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத்தும் 'இல்லை'யாதலின்றி 'ஆம்' என இருத்தல்பற்றியே, வேதத்தில் பிரம்மத்துக்கு 'ஓம்' எனும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதறிக.

பாட்டு 4 ; வரி 2.

மிக்கபல் லுரையெனுங் கருமையிட்டாள்—வேதமாகிய கண்ணில் (ஞான நூல்களாகிய கண்ணில்) பல வித

'வியாக்கியானங்கள், பாஷ்யங்கள்' எனும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது, அழகுங் கூட. ஆனால், அளவுக்குமிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும். நமது தேசத்தில் ஒருவேளை இப்படி நடந்திருக்குமோ? ஸரஸ்வதி அறிவுத் தெய்வமாதலால், அவளுக்கு ஆத்மஞானமே (வேதமே) விழி யெனப்பட்டது.

பாட்டு 4 ; வரி 3, 4.

சீதக் கதிர்மதியா (ம்) நுதல்—குளிர்ந்த ஒளியுடைய மதியே ஸரஸ்வதி தேவிக்கு நெற்றியாக வர்ணிக்கப்பட்டிருக் கிறது. 'ஊகம்' என்பது அவளுடைய கூந்தல்.

பாட்டு 8 ; வரி 7, 8.

சிந்தையி லறமு முண்டாம்—எனிற்
சேர்ந்திடுங் கலிசெயு மறமு முண்டாம்.

ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாசமேற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரதஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல் களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமை களைத் தவறாது நடத்தியிருப்பார்களானால், மற்றக் குலத்த வரும் நெறிதவறி யிருக்கமாட்டார்கள்; மஹாபாரதப் போர் நடந்திராது; பாரததேசத்தில் பெரியதோர் கூத்திரிய நாசமும் கலியும் வந்திருக்கமாட்டா. ஒரு தேசத் திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகளென மேலே குறித்திருப் பதை விளக்கும்பொருட்டு மஹாபாரதப்போர் நடக்கு முன்பாகவே முதற்படப் பாவம் பிராமணருக்குள் புகுந்த தென்பதை நூல் தெரிவிக்கின்றது.

பாட்டு 11; வரி 1.

ஆரிய வேன்மறவர்—'மறம்' என்பது வீரம்; மறவர், க்ஷத்திரியர்.

பொதுப்படையாக இக் குலத்தாரைக் குறிப்பிடுவதற்குத் தமிழில் அரசர், மன்னர் என்னும் சொற்களே வழங்குவது முண்டு. அதாவது, க்ஷத்திரியர்களுடைய தலைவனொரு வனுக்குமாத்திரமன்றி, அக் குலமுழுமைக்குமே தமிழில் மன்னர் முதலிய பெயர்களுண்டு. நமது நாட்டில் இப்போது 'மறவர்' என வழங்கும் கூட்டத்தார் க்ஷத்திரிய வமிசத்தவ ராதல் உணர்க.

பாட்டு 13 ; வரி 4.

மலர்விழிக் காந்தங்கள்—காந்தத்திற்குரிய கவர்ச்சித் தொழில் செய்துகொண்டிருக்கும் (மாதர்) விழிகள்.

பாட்டு 14 ; வரி 5, 6.

பல தரனுடைத் தொழில்செயு மாசனமும்—மாசனம், மஹாஜனங்கள்; பொதுப்படையான குடிகள். இவர்களே தேசத்திற்கு உயிராவர். இவர்களைச் 'சூத்திரர்' என்பது தற்கால வழக்கு. சூத்திரர் என்னும் பெயரைச் சில மூடர் இழிவான பொருள்பட வழங்குவதுபற்றி, நூலில் அப்பெயர் தரவில்லை.

பாட்டு 16 ; வரி 7.

உரியோர்—பந்துக்கள்.

பாட்டு 17 ; வரி 8.

மறைக்குல மறவர்களிருவர்—வேதமோதும் குலத்திலே பிறந்தவராயினும் மறவர்தொழிலைக் கைக்கொண்ட துரோணன், கிருபன் என்னும் மஹான்கள்.

பாட்டு 19.

இஃது எண் சீர்; ஈற்றது மா.

பாட்டு 20 முதல் பாட்டு 37 முடிய

மறுபடியும் நொண்டிச்சிந்து.

பாட்டு 24 ; வரி 7.

பால்வளர் மன்னவர்—பால் என்பது பகுதி. பல பகுதி களாக வகுக்கப்பட்ட அரசர் (க்ஷத்திரியர்) கூட்டங்கள்.

பாட்டு 25 ; வரி 5.

வழவழத் தருமன்—இது உலகவழக்கு ; உக்கிரத்தன்மை முதலிய மறவர் குணங்கள் இல்லாத தருமன்.

பாட்டு 27 ; வரி 2.

வளமைகள்—இது உலகவழக்கு ; பெருமைகளென்பது பொருள்.

பாட்டு 29 ; வரி 2.

கதலியின் தோல்—கதலியென்பது ஒருவகை மான்.

பாட்டு 33 ; வரி 8.

அரபிய ரொட்டைகள்—வியாசமுனிவர் அரபி தேச மென்று பெயர் குறிப்பிடாவிடினும், அவரது வர்ணனைகளைப் பார்க்குமிடத்துத் தருமபுத்திரன் யாகத்துக்குக் காணிக்கை யாக வந்த ஒட்டைகள் அரபிதேசத்தனவென்று தெளிவாகத் தோன்றுகிறது. இன்றும் அரபிதேசத்திலேதான் ஒட்டைகள் அதிகமாக வழங்குதலறிக.

பாட்டு 34 ; வரி 3.

நின்றிடும் புகழ்ச் சீனம்—மிகப் புராதனமான காலந் தொட்டுக் கீர்த்தியழியாது நிற்குஞ் சீனதேசம். இஃது சீன தேசத்திற் குடியரசுநாட்டிப் புகழ்மிகுதியடைந்து முன்ன தாகவே எழுதப்பட்டது. சில தேசங்களின் பெருமை காலத்திலே மாறியும் சிதைந்தும் அழிந்தும் போகிறது. காலச்செய்கையை எதிர்த்துச் சில தேசங்கள் எப்போதும் அழிவற்ற பெருமையுடன் விளங்குகின்றன. பிந்தியவற்றுள் சீனதேச மொன்று.

பாட்டு 38 முதல் 41 முடிய

எண்சீர்ப் பாட்டு.

பாட்டு 42 முதல் 49 முடிய

லாலல லாலல லாலல லாலல
லாலலா லல
லாலல லாலல லாலல லாலல
லாலலா லல

என்று படிக்கவும்.

பாட்டு 45 ; வரி 5, 6.

வீரர்தம் போரி னரியநற் சாத்திர வாதங்கள்—ஆயுதங் களுடன்செய்யப்படும் உடற்போரைக்காட்டிலும் பண்டிதர் செய்யும் சாத்திரவாதங்கள் அருமையுடையன என்பது கருத்து; அதாவது, உண்மையுடன் இவ் வாதங்கள் நடைபெறுமிடத்து என்க. உண்மையறியாதார், உண்மை வேண்டாதார் செய்யும் வாதங்கள் சந்தையில் மீன்விற்கும் ஸ்திரீகளின் போராட்டத்திற்கு நேராகும்.

பாட்டு 53 முதல் 83 முடிய

நாலடி, எண்சீர்ச் சிந்து.

லாலல லாலல லாலலா—லல
லாலல லாலல லாலலா

என்ற மெட்டு.

சம்பாஷணைகள் முதலியவற்றைத் திறனுடனும் உண்மை யுடனும் காட்டுவதற்கு இப்பாட்டின் நடை மிகவும் ஸௌகர்யமாதலைப் பாடிப்பார்த்து உணர்ந்துகொள்க.

பாட்டு 69, 70.

இப்பாட்டுக்களின் கருத்து:—

சகுனி சொல்லுகிறான்: 'நமக்கு ஏற்கெனவே அள விறந்த செல்வமிருக்கும்போது, இன்னும் அதிகச் செல்வத்தை ஏன் விரும்பவேண்டும்? இருப்பதைவைத்துப் பாதுகாத்தால்

போதாதா?' என்று ஒருவேளை நீ நினைக்கின்றாய் போலும். ஆனால், இவ்வித நினைப்பு நின்போன்ற ஆரிய மன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால், நித்தம் ஏராளமான செல்வத்தைத் தானமுதலியவற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு, மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக் கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரியமன்னர்களால் அனுசரிக்கப்படுவது. இருப்பதை மூடி வைக்க விரும்புவோன் அரசனல்லன், கிழச்செட்டி. எது போலெனில், கங்கைநதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலேகொண்டுகொட்டுகிறது. என்ன வீண் செலவு! இந்த 'வீண் செலவு' செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப்போய்விடும். மலைமீதிருந்து அதற்கு ஓயாத ஊற்று வரவு இருக்கின்றது. அதனை உலகிற்கெல்லாம் வழங்குவது மன்றிக் கடலிலும் கொண்டுபொழிகிறது. ஆம். 'மேலே' செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து 'கீழே' ஸாமான்ய ஜனங்களுக்குப் பலவகைகளிலே பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் ராஜா, கங்கைநதியைப்போல், 'ஜீவநதி' யாக இருக்கலாம். கங்கை நதியைப்போல் ஆரியர்களும்

செல்வம் வளர்தற்கே—தொழில்
ஆயிர நித்தம் புதியன—கண்டு
வாரிப் பழம்பொரு ளெற்றுவர்.

இங்ஙனமில்லாது, சத்தமற்ற நெடுங்காட்டில், மலையடிக் கீழ்ப்பட்ட இருட்குகையில் நீரைவைத்துப் பாசியால் மூடிக் காக்கும் சுனைகளைப்போன்ற ஒழுக்கம் ஆரியர்களால் வெறுத்தற்குரியது.'

பாட்டு 81, 82, 83.

ஒருவனைப் பரமாத்மாவின் அவதாரம் என்று கூறுவதன் பொருள் இம் மூன்று பாட்டுக்களிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

பாட்டு 104; வரி 8.

நீதித் தர்மனுஞ் சூதி லன்புள்ளோன்—தர்மன் சூதாட்டத்திலே பிரியமுடையவனென்றும், அழைத்தால்

எளிதில் இணங்கிவிடுவானென்றும் சகுனி கருதுவதாக முதலாலிலேயே காணப்படுகிறது.

பாட்டு 109 முதல் 114 வரை

லாலல லாலல லாலல லாலா
லாலல லாலல லாலல லாலா

என்று பாடுக.

பாட்டு 124 ; வரி 7.

கேள்விக் கொரு மிதிலாதிப ஞெத்தோன்—கேள்வியில் மிதிலேயரசனுகிய ஜனகனுக்கு நிகரானவன்.

இப்பாட்டின் மொத்தக் கருத்து : 'நாங்கள் உமது யாகத்திற்கு வந்து திரும்பிச்சென்ற பிறகு, உங்களைப் பாஞ்சாலிஸஹிதமாகஅழைத்து அஸ்தினபுரத்தில் மறுவிருந்து கொண்டாடவேண்டியது மரபு. ஆனல், இதுவரை சோதிடர்கள் நல்ல நாளில்லே யென்று சொன்னர்கள். இந்த மாதந் தான் அவர்கள் நல்ல மாதமென்றனர்' என்பது.

பாட்டு 138 ; வரி 7, 8.

செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும்

இவ்வுலகத்துச் செய்திகள், மேலளவாகப் பார்க்கும் போது, முன்பின் தொடர்பு இல்லாதனவாகித் திடும் திடுமென்று புறப்படுவனபோலத் தோன்றுகின்றன. ஆனல், ஆழ்ந்து நோக்குமிடத்து, இவை 'காரணகாரியத்தொடர்' என்பதோர் தவிர்க்கமுடியாத விதியால் கட்டுண்டிருக்கின்றன.

பாட்டு 148 ; வரி 7, 8.

சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ் செழுஞ் சோதி—சீர்களும் அடிகளும் இயைந்த மந்திரங்களால் முன்னைய வேதரிஷிகள் போற்றிய ஞாயிறு.

இங்கு, சூரியாஸ்தமன வர்ணனை கூறப்படுகின்றது. இப்பாடல்களின் கருத்து நன்கு விளங்கும்பொருட்டு, நமது "கர்மயோகி"ப் பத்திரிகையிலே இவ் விஷயத்தைப்பற்றி எழுதியுள்ள வியாஸமொன்றை இங்கு தருகின்றோம்.

ஸூர்யாஸ்தமனம்

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்துகிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது சனிக்கிழமை சாயங்காலந்தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற்கென்றுல் நம்மவர்கள் கூட்டங் கூட்டமாக ஓடுகிறார்கள். ஸூர்யாஸ்தமனகாலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன்கூடப் போகிறதில்லை. அப்போது வானத்திலே இந்திரஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணமிருந்த தோற்றம் அடுத்தக்ஷண மிருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக்காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமாஞலும், அது ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே நாம் பொருட்செலவில்லாமல் பார்க்கக் கூடிய காட்சிகளிலே கோடியிலொரு பங்குகூடக் காணுது. வாண வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினுயிரக்கணக்கான திரவியம் செலவிடுகிறான். அவனது செல்வத்திஞலன்றே இந்தக் காட்சி சுலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச்செறிகிறார்கள். ஸ ஹா தர ரா, ஸூர்யாஸ்தமனத்தின் விநோதங்களைச் சென்றுபார். ஸூர்யனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதியென்று குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூர்யனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே.

நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்தமெய்திய வர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்

கின்றனர். இக்காலத்திலேதான் இந்தத் துரதிர்ஷ்ட நிலை கொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்களெல் லாரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிறார்கள்.

ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்தர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படிசெய்வது சாத்தியமில்லை. நேரிலே கொண்டுகாட்டினாலும், பலருக்கு ஆரம்பத்திலே கண் கூசுவதுதான் அர்த்தமாகுமேயல்லாமல், விஷயம் தெரியாது. ஸஹோதரா, நீயாகவேபோய்ப் பல தினம் அடுத்துப் பார்க்கவேண்டும். பிறகுதான் உனக்கு அந்தத் தெய்வக் காட்சி சிறிதுசிறிதாக விளங்கும். ஸூர்யோதயத்திலேயும் ஸூர்யாஸ்தமனத்திலும் வானத்தில் நடக்கும் இந்திரஜாலக் காட்சியில் க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொரு விசேஷமுண்டு. நேற்றிருந் ததுபோல இன்றைக்கிராது. இன்று இருப்பதுபோல நாளை யிராது. தினந்தோறும் வெவ்வேறு வியப்புக்கள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மஹிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு அநிர்வசனீயங்கள்.

சில தினங்களின்முன்பு ஓர் மாலைப்பொழுதில் நான் கண்ட அதிசயங்களை ஒருவாறு இங்குக் குறிப்பிடுகிறேன். அடிவானத்தில் ஸூர்யகோளம் தகதகவென்று சுழன்று கொண்டிருந்தது. இருபதுகோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவதுபோலிருந்தது. ஆரம்பத் திலேதான் கண்கூசும். சிறிதுநேரம் உற்றுநோக்கிக்கொண் டிருந்தால், பிறகு கண்கூச்சம் தீர்ந்துபோய்விடும். இரண்டு வட்டத்தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழலும். கீழேயிருப்பது சுத்தமான மின்வட்டம். மேலே மரகத வட்டம். பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சைத்தகடு பின்புறத்திலிருக்கும் மின்தகட்டை முழு தும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும், இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண்மீது பாயும்.

பார்! ஸூர்யனைச்சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவதுபோலத் தோன்றுகின்றது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனைஆயிரவிதமான கலப்புகள்! அக்கினிக்குழம்பு! தங்கம்காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனைவிதச் செம்மை! எத்தனைவகை பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின் மீது மிதக்கும் தங்கத்தோணிகள்! எரிகின்ற தங்கஜ்வாலைக்கரைபோட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித்திரள், வர்ணக்களஞ்சியம். போ, போ; என்னால் அதை வர்ணிக்கமுடியாது.

பாட்டு 153; வரி 1, 2.

செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்

அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக.

இது "தத் ஸவிதுர்வரேண்யம்" என்று தொடங்கும் காயத்ரி மந்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

பாட்டு 155; வரி 6, 7.

இத்தனை மக்களு மெங்கணிருந்தனர் இத் தினமட்டுமென வியப்புற— 'இந்நாள் வரை இத்தனை ஜனங்களும் எங்கே இருந்தனர்' என்று (காண்போர்) வியப்பெய்தும் வண்ணமாக.

பாட்டு 157; வரி 7, 8.

தோரணங் கொஞ்ச—தோரணங்கள் அழகுடன் குழைந்திருப்ப.

பாட்டு 158; வரி 3, 4.

பொன்னரங்கினி லிருந்தவன்—கண்ணில் புலவனை—ராஜமண்டபத்திலே வீற்றிருந்தவன் ஆகிய திருதராஷ்டிரனை.

பாட்டு 158; வரி 7.

வின்னயம்—வில்வித்தை, யுத்த சாஸ்திரம்.

பாட்டு 159 ; வரி 3, 4.

பணிக் கொடியோன்—பாம்பைக் கொடிச் சின்னமாக வுடைய துரியோதனன்.

பாட்டு 160 ; வரி 1.

இளங்கொடி—பாஞ்சாலி.

பாட்டு 160 ; வரி 6.

உடல்வலித் தொழில்—கஸ்ரத், சரீரபலத்துக்காகச் செய்யப்படும் அப்பியாசங்கள். இதனை வடமொழியில் 'வ்யாயாமம்' என்பர்.

பாட்டு 161 ; வரி 5—8.

வந்ததொர் துன்பத்தினை...—

துன்பம் நேரிடுங்கால், அதனை அவ்விடத்தே அப் பொழுதே மாய்த்துவிட வழிசெய்வார்கள். அவ்வாறன்றிப் பின் வரப்போகும் துன்பங்களை நினைத்து நெஞ்சமுடைந்து போய் யாதொரு செய்கையும் ஓடாமல் சலிப்படைந்திருத்தல் ஆரியர்களுடைய மரபன்று.

பாட்டு 162 ; வரி 3.

தோணலம்—தோள்வலி, வலிமை.

பாட்டு 164 ; வரி 5.

வென்றிகொள் பெருஞ் சூதர்—துரியோதனன் சபையில் வந்திருந்த சூதர்களின் பெயர் ; விமிம்சதி, சித்ரஸேனன், புருமித்ரன், ஜயன் ; சகுனி இருக்கவே செய்கிறான்.

பாட்டு 165 ; வரி 7.

ஆலமுற்றிடத் தழுவி—(ஆலம்—மார்பு) ; மார்புறத் தழுவி.

பாட்டு 166 ; வரி 1.

அறத்தோன்றல்—'தரும புத்திரனே' என்னும் விளி.

பாட்டு 168 ; வரி 1, 2.

பழிக்கவற்றையொர் சாத்திரமெனப் பயின்றேன்—பிறர் ஸங்கீதம், கணிதம், வியாகரணம், யுத்த தந்திரம் முதலிய சாஸ்திரங்கள்படிப்பதுபோலச் சூதாட்டத்தை ஒரு சாஸ்திரமாகப் பயிற்சிசெய்து எதிர்க்கமுடியாத நிபுணத் தன்மை வாய்ந்திருந்த சகுனி.

பாட்டு 168 ; வரி 7, 8.

செலுஞ் செலவினுக் கழிகலே—செலவுக்கு நெஞ்சழிய மாட்டாய். (விளையாட்டில் கொஞ்சம் திரவியம்) செலவிடு வதற்கு அஞ்ச மாட்டாய்.

பாட்டு 169 ; வரி 2.

பிசுனன்—உலோபி.

பாட்டு 171 ; வரி 1.

தோல்விலேக்குப் பசுவினைக் கொல்லும்—தோல் விலையாகக் கிடைக்கும் பொருளே விரும்பிப் பசுவைக் கொல்லுதல் போலப் பொருளாசையால் யுதிஷ்டிரனைக் கெடுத்துத் தரும நாசஞ்செய்யத் துணிந்தவனுகிய (சகுனி).

பாட்டு 171 ; வரி 3.

நூல் விலக்கிய செய்கைக ளஞ்சும் நோன்பிலேன்—தரும ராஜன் ; அறநூல் விதிகளேத் தவருதவன்.

பாட்டு 171 , வரி 8.

கவறை நஞ்செனக் கூறினர்—சூதாட்டத்தை விஷமாகக் கருதவேண்டும் என்றார்கள். 'கவற்றை' என்று இருத்தல் நேர்.

பாட்டு 175 ; வரி 6, 7.

நம்மவர் காத்திடும் பழவழக்கை மாத்திர மறந்து விட்டாய் — க்ஷத்திரியர்களுக்குள்ளே யிருக்கும் புராதன

சம்பிரதாயமொன்றைமாத்திரம் நீ மறந்துவிட்டாய் என்று சகுனி சொல்லுகிறான். வழக்கு—வழக்கம், பூர்வாசாரம், 'மாமூல்'. அந்தப் பூர்வாசாரம் இன்னதென்பது பின்னே எட்டாம் வரியிற் கூறப்படுகிறது, 'மன்னர் வல்லினுக்கழைத் திடில் மறுப்பதுண்டோ?' என. ஒரு அரசனை மற்றொருவன் 'என்னுடன் சூதாட வா' என வலிந்தழைக்கும்போது மாட்டேனென்று சொல்லலாகாதென்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்கவேண்டுமென்ற நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களில் இது வொன்று. அறிவுடையவர்கள்கூடப் 'பூர்வாசார' மென்ற காரணத்தால் தீய வழக்கங்களை அனுசரித்தல் பாரத தேசத்திற்கு ஏற்பட்ட சாபம்; இப்போதுதான் நீங்கி வருகிறது.

பாட்டு 175; வரி 8.

வல்—சூது.

பாட்டு 177; வரி 5.

வல்லமர்—சூதுப்போர்.

பாட்டு 178, 179, 180, 181.

இப்பாட்டுக்களிலே இப் 'பூர்வாசாரங்களில்' ஆராய்ச்சி யில்லாது பக்திசெலுத்துவோரின் மடமை காட்டப் படுகின்றது. பழமையிலே பெரும்பகுதி உயர்வுசான்றதுதான். அதிலும், பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொதிந்தனவாகும். ஆயினும், இழிந்த அமானுஷீக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன.

'எனது தந்தை க்ஷயநோயால் இறந்துபோனான். எனக்கும் க்ஷயநோய் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த நோயுண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன்' என்று ஒரு மனிதன் சொல்லு வானனால் அவன் எவ்வளவு பெரிய மூடன்? லோக க்ஷேமத்துக்கும் லோகாபிவிருத்திக்கும் இந்த 'மாமூல்' பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை.

பாட்டு 182; வரி 4—8.

மேலை நாஞ்செயுங் கர்ம மல்லாதே...—

நமது செய்கையின் விளைவுகளுக்குமாத்திரமேயன்றி நம்மைச் சேர்ந்தவர்களின் கர்மப்பயன்களுக்கும் நாம் ஆளாகிறோமென்பதை இச் செய்யுள் விளக்குகின்றது.

பாட்டு 183 முதல் 195 முடிய

லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள். தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கிற பெண்கள் 'மாயக்காரனம்மா — கிருஷ்ணன் — மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை. சூதாட்ட வருணனைக்கும் அதில் ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குதற்கும் இந் நடை மிகவும் பொருந்தியதென்பது எளிதிலே காணப்படும்.

பாட்டு 185; வரி 8.

பின் னடக்குக—மேலே விளையாட்டு நடக்குக.

பாட்டு 186; வரி 1—4.

ஒருவ னுடப் பணயம்...—தருமன் சொல்லுவது.

பாட்டு 186; வரி 5—8.

வருமமில்லையையா...—துரியோதனன் சொல்வது.

பாட்டு 187; வரி 1—3.

பொழுது போக்குதற்கே...—இஃது கர்ணன் வசனம்.
அங்கர்கோன்—கர்ணன்.

பாட்டு 187; வரி 5—8.

பழுதிருப்ப தெல்லாம்—தருமன் வசனம்.

பாட்டு 189; வரி 6.

பாரமான பொற்றேர்—இங்கு, தேர் பணயமாக வைக்கப் பட்டது என்பது கொள்ளக் கிடக்கின்றது.

பாட்டு 191; வரி 2.

அடிமை செய்து வாழ்வோர்—மாதர்கள் பணயமாக வைக்கப்பட்டனரென்பது தொக்குநிற்கின்றது.

பாட்டு 196; வரி 6.

பழி மக்காள்—பழிப்பிள்ளைகளே, பழிக்கு இடமாகிய பிள்ளைகளே.

பாட்டு 199; வரி 1.

கெலித்திடல்—வெல்லுதல். இது திசைச்சொல், கிராமியம்.

பாட்டு 201; வரி 8.

கேட்குங் காது மிழந்து விட்டாயோ?—கோப மிகுதியால் தன்னைமறந்து அரசனுக்குக் கண்ணில்லாமையைக் குறிக்க நேரிட்டது.

பாட்டு 203; வரி 6.

மந்திரம்—சூழ்ச்சி.

பாட்டு 203; வரி 8.

வெற்பிடைப் போக்குதி—காந்தாரத்து மலைநாட்டி லிருந்து வந்தவளதலால், சகுனியை மீட்டும் அவனது மலை நாட்டுக்கு அனுப்பிவிடுக என்று சொல்லியது.

★

மூக்தி

தோற்றி யழிவது வாழ்க்கை—இதில்
துன்பத்தோ டின்பம் வெறுமையென் றேதும்
மூன்றில் எதுவரு மேனும்—களி
மூழ்கி நடத்தல் பரசிவ முக்தி.

★

தனிப் பாடல்கள்

பொதுமைப் பாடல்கள்

1. பல்வகைப் பாடல்கள்
2. சமூகம்
3. வசன கவிதை

○

*இப் பகுதியில் காணப்படும் பாடல் களில் ஒரு சில 1922ஆம் வருடத்தில் வெளி வந்த "பாரதி நூல்கள்" இரண்டாம் பாகத் திலும், 'ஜன்ம பூமி'யிலும் பதிப்பிக்கப்பெற் றுள்ளன.

*வசனகாவியங்களான காட்சி, சக்தி, காற்று, கடல் ஆகிய நான்கும் காட்சி என்னும் பெயரால் 1930ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்ற பகுதி ஆறனுள் உள்ளன.

*நாடகங்களான ஜகத் சித்திரம், விடுதலை ஆகிய இரண்டும் சித்தக் கடல் என்னும் பெயரால் 1930ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்ற பகுதி பதினென்றனுள் உள்ளன.

○

தனிப் பாடல்கள்

*

பொதுமைப் பாடல்கள்

*

1. பல்வகைப் பாடல்கள்

—: o :—

1. கவிதா தேவி அருள் வேண்டல்

வாராய் ! கவிதையாம் மணிப்பெயர்க் காதலி!
பன்னாள் பன்மதி ஆண்டுபல கழிந்தன,
நின்னருள் வதனநா னேருறக் கண்டே.
அந்தநாள் நீயெனை யடிமையாக் கொள,யாம்
மானிடர் குழாத்தின் மறைவுறத் தனியிருந்
தெண்ணிலா வின்பத் திருங்கடற் றிளைத்தோம் ;
கலந்துயாம் பொழிலிடைக் களித்தவன் ஞட்களிற்
பூம்பொழில் குயில்களி னின்குரல் போன்ற
தீங்குரலு டைத்தோர் புள்ளினைத் தெரிந்திலேன் ;
மலரினத் துன்றன் வாள்விழி யொப்ப
நிலவிய தொன்றினை நேர்ந்திலேன் ; குளிர்புனற்
சுனைகளி லுன்மணிச் சொற்கள்போற் றண்ணிய
நீருடைத் தறிகிலேன் ; நின்னெடு தமியனுய்
நீயே யுயிரெனத் தெய்வமும் நீயென
நின்னையே பேணி நெடுநாள் போக்கினேன்.
வானகத் தமுத மடுத்திடும் போழ்து
மற்றத னிடையோர் வஞ்சகந் தொடுமுள்
வீழ்த்திடைத் தொண்டையில் வேதனை செய்தென
நின்னெடு களித்து நினைவிழந் திருந்த
எனைத்துயர்ப் படுத்தவந் தெய்திய துலகிற்
கொடியன யாவுளுங் கொடியதா மிடிமை.
அடிநா முள்ளினை அயல்சிறி தேகிக்
களைந்துபின் வந்து காண்பொழுது, ஐயகோ !

மறைந்தது தெய்வ மருந்துடைப் பொற்குடம்.
மிடிமைநோய் தீர்ப்பான் வீணர்தம் மூலகப்
புன்தொழில் ஒன்று போற்றுது மென்பான்
தென்திசைக் கண்ணொரு சிற்றூர்க் கிறைவனுந்
திருந்திய வொருவனைத் தூணெனப் புகுந்தவன்
பணிசெய விசைந்தேன். பதகிநீ யென்னைப்
பிரிந்துமற் றகன்றனை. பேசொணு நின்னருள்
இன்பமத் தனையு மிழந்துநா னுழன்றேன்.
சின்னுள் கழிந்தபின்—யாதெனச் செப்புகேன்!
நின்னெடு வாழ்ந்த நினைப்புமே தேய்ந்தது.
கதையிலோர் முனிவன் கடியதாஞ் சாப
விளைவினுற் பன்றியா வீழ்ந்திடு முன்னர்த்
தன்மக னிடை'என் றனையநீ யான்புலைப்
பன்றியாம் போது பார்த்துநில் லாதே!
விரைவிலோர் வாள்கொடு வெறுப்புடை யவ்வுடல்
துணித்தெனைக் கொன்று தொலைத்தலுன் கடனும்.
பாவமிங் கில்லையென் பணிப்பிஃ தாகலின்!'
தாதைசொற் கிளைஞன் தளர்வொடு மிணங்கினன்.
முனிவனும் பன்றியா முடிந்தபின், மைந்தன்
முன்னவன் கூறிய மொழியினை நினைந்தும்,
இரும்புகழ் முனிவனுக் கிழியதா மிவ்வுடல்
அமைந்தது கண்டுநெஞ் சமன்றிடல் கொண்டும்,
வாள்கொடு பன்றியை மாய்த்திட லுற்றனன்.
ஆயிடை மற்றவ் வருந்தவப் பன்றி
யினையது கூறும்: "ஏடா! நிற்க!
நிற்க! நிற்க! முன்னர்யா னினைந்தவா
றத்துணை துன்புடைத் தன்றிவ் வாழ்க்கை.
காற்றும் புனலுங் கடிப்புற் கிழங்கும்
இனைய பல்லின்ப மிதன்கணே யுளவாம்;
ஆறேழ் திங்கள் அகன்றபின் வருதியேற்
பின்னைனைக் கோறலாம்" பீழையோ டிவ்வுரை
செவியுறீஇ முடிசாய்த் திளையவன் சென்றனன்.
திங்கள்பல போயபின், முனிமகன் சென்று
தாதைப் பன்றியோர் தடத்திடைப் பெடையொடும்

போத்தினம் பலவொடு மன்பினிற் பொருந்தி
யாடல்கண் டயிர்த்தனன். ஆற்றெணு தருகுசென்று
"எந்தாய்! எந்தாய்! யாதரோ மற்றிது!
வேதநூ லறிந்த மேதகு முனிவரர்
போற்றிட வாழ்ந்தநின் புகழ்க்கிது சாலுமோ?"
எனப்பல கூறி யிரங்கினன்; பின்னர்
வாள்கொடு பன்றியை மாய்த்திடல் விழைந்தான்.
ஆயிடை முனிவ னகம்பதைத் துரைக்கும்;
"செல்லடா; செல்கத் திக்குணத் திழிஞ!
எனக்கிவ் வாழ்க்கை யின்புடைத் தேயாம்:
நினக்கிதிற் றுன்ப நிகழுமேற் சென்றவ்
வாளினின் நெஞ்சை வகுத்துநீ மடிக"
என்றிது கூறி யிருந்தவப் பன்றிதன்
இனத்தொடு மோடி யின்னுயிர் காத்தது.
இன்னது கண்ட இளையவன் கருதும்:
"ஆவா! மானிடர் அருமையின் வீழ்ந்து
புன்னிலை யெய்திய போழ்ததி னெடுங்காற்
றெருமரு கின்றிலர். சிலபகல் கழிந்தபின்
புதியதா நீசப் பொய்மைகொள் வாழ்வில்
விருப்புடை யவராய் வேறுதா மென்றும்
அறிந்தில ரேபோன் றதிற்களிக் கின்றூர்.
என்சொல்கேன் மாயையி னெண்ணரும் வஞ்சம்."
திமிங்கில வுடலும் சிறிய (புன்மதியும்)
ஒரேழ் பெண்டிரு முடையதோர் (வேந்தன்)
தன்பணிக் கிசைந்தென் தருக்கெலா மழிந்து
வாழ்ந்தனன் கதையின் முனிபோல் வாழ்க்கை!

——

2. மது

போகி

பச்சை முந்திரித் தேம்பழங் சொன்று
பாட்டுப் பாடிநற் சாறு பிழிந்தே
இச்சை தீர மதுவடித் துண்போம்;
இஃது தீதென் றிடையர்கள் சொல்லும்

கொச்சைப் பேச்சிற்கை கொட்டி நகைப்போம் ;
கொஞ்சு மாதருங் கூட்டுணுங் கள்ளும்
இச்ச கத்தினில் இன்பங்க ளன்றே ?
இவற்றி னல்லின்பம் வேறொன்று முண்டோ ? 1

யோகி

பச்சை முந்திரி யன்ன துலகம் ;
பாட்டுப் பாடல் சிவக்களி எய்தல் ;
இச்சை தீர உலகினைக் கொல்வோம் ;
இனிய சாறு சிவமதை உண்போம் ;
கொச்சை மாக்களுக் கிஃதெளி தாமோ ?
கொஞ்சு மாதொரு குண்டலி சக்தி
இச்ச கத்தி லிவையின்ப மன்றே ?
இவற்றினல் லின்பம் வேறுள தாமோ ? 2

போகி

வெற்றி கொள்ளும் படைகள் நடத்தி
வேந்தர் தம்முட் பெரும்புகழ் எய்தி
ஒற்றை வெள்ளைக் கவிகை உயர்த்தே
உலகம் அஞ்சிப் பணிந்திட வாழ்வோம் ;
சுற்று தேங்கமழ் மென்மலர் மாலை
தோளின் மீதுறப் பெண்கள் குலாவச்
சற்றும் நெஞ்சம் கவலுத லின்றித்
தரணி மீதில் மதுவுண்டு வாழ்வோம். 3

யோகி

வெற்றி ஐந்து புலன்மிசைக் கொள்வோம் ;
வீழ்ந்து தாளிடை வையகம் போற்றும் ;
ஒற்றை வெள்ளைக் கவிகைமெய்ஞ் ஞானம்
உண்மை வேந்தர் சிவநிலை கண்டார் ;
மற்ற வர்தமுட் சீர்பெற வாழ்வோம் ;
வண்ம லர்நறு மாலை தெளிவாம் !
சுற்றி மார்பில் அருள்மது வுண்டே
தோகை சக்தியொ டின்புற்று வாழ்வோம். 4

போகி

நல்லகீதத் தொழிலுணர் பாணர்
நடனம் வல்ல நகைமுக மாதர்
அல்லல் போக இவருடன் கூடி
ஆடி யாடிக் களித்தின்பங் கொள்வோம்;
சொல்ல நாவு கனியுத டாநற்
சுதியி லொத்துத் துணையொடும் பாடி
புல்லும் மார்பினே டாடிக் குதிக்கும்
போகம் போலொரு போகமிங் குண்டோ? 5

யோகி

நல்ல கீதஞ் சிவத்தனி நாதம்,
நடன ஞானியர் சிற்சபை யாட்டம்;
அல்லல் போக இவருடன் சேர்ந்தே
ஆடி யாடிப் பெருங்களி கொள்வோம்;
சொல்ல நாவில் இனிக்குத டா! வான்
சுழலு மண்டத் திரளின் சுதியிற்
செல்லும் பண்ணெடு சிற்சபை யாடும்
செல்வம் போலொரு செல்வமிங் குண்டோ? 6

ஞானி

மாத ரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசைப் பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும்பல இன்பம்,
கள்ளில் இன்பம், கலைகளின் இன்பம்,
பூத லத்தினை ஆள்வதில் இன்பம்,
—பொய்மை யல்ல—இவ் வின்பங்க ளெல்லாம்
யாதுஞ் சக்தி இயல்பெனக் கண்டோம்.
இனிய துய்ப்பம் இதய மகிழ்ந்தே. 7

இன்பந் துன்பம் அனைத்தும் கலந்தே
இச்ச கத்தின் இயல்வலி யாகி
முன்பு பின்பல தாகியெந் நாளும்
மூண்டு செல்லும் பராசக்தி யோடே

அன்பில் ஒன்றிப் பெருஞ்சிவ யோகத்
தறிவு தன்னில் ஒருப்பட்டு நிற்பார்,
துன்பு நேரினும் இன்பெனக் கொள்வார்,
துய்ப்பர் இன்பம் மிகச்சுவை கொண்டே. 8

இச்ச கத்தொர் பொருளேயுந் தீரர்,
இல்லை யென்று வருந்துவ தில்லை;
நச்சி நச்சி உளத்தொண்டு கொண்டு
நானிலத் தின்பம் நாடுவ தில்லை;
பிச்சை கேட்பது மில்லைஇன் பத்திற்
பித்துக் கொண்டு மயங்குவ தில்லை;
துச்ச மென்று சுகங்களைக் கொள்ளச்
சொல்லு மூடர்சொற் கேட்பதும் இல்லை. 9

தீது நேர்ந்திடின் அஞ்சுவ தில்லை;
தேறு நெஞ்சினெ டேசிவங் கண்டோர்
மாதர் இன்பம் முதலிய வெல்லாம்
வையகத்துச் சிவன் வைத்த வென்றே
ஆத ரித்தவை முற்றிலுங் கொள்வார்;
அங்கும் இங்குமொன் றுமெனத் தேர்வார்;
யாது மெங்கள் சிவன்றிருக் கேளி;
இன்பம் யாவும் அவனுடை இன்பம். 10

வேத மந்திர நாதம் ஒருபால்,
வேயி னின்குழல் மெல்லொலி ஓர்பால்,
காதன் மாதரொ டாடல் ஒருபால்,
களவெம் போரிடை வென்றிடல் ஓர்பால்,
போத நல்வெறி துய்த்திடல் ஓர்பால்
பொலியுங் கள்வெறி துய்த்தல்மற் றோர்பால்;
ஏதெ லாநமக் கின்புற நிற்கும்
எங்கள் தாய்அருட் பாலது வன்றே. 11

ஸங்கீர்த்தனம்

மூவரும் சேர்ந்து பாடுவது

மதுநமக்கு, மதுநமக்கு, மதுநமக்கு விண்ணெலாம்,
மதுரமிக்க ஹரிநமக்கு, மதுவெனக் கதித்தலால்,
மதுநமக்கு மதியுநாளும், மதுநமக்கு வானமீன்,
மதுநமக்கு மண்ணுநீரும், மதுநமக்கு மலையெலாம்,
மதுநமக்கொர் தோல்விவெற்றி, மதுநமக்கு வினை
யெலாம்.
மதுநமக்கு மாதரின்பம், மதுநமக்கு மதுவகை,
மதுநமக்கு மதிநமக்கு, மதுமனத்தொ டாவியும்
மதுரமிக்க சிவநமக்கு மதுவெனக் கதித்தலால். 12

---

3. காலனுக் குரைத்தல்

காலாஉனை நான்சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்
காலருகே வாடா! சற்றேஉனை மிதிக்கிறேன்—அட (காலா)
வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன்—நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தமையெண்ணித்
துதிக்கிறேன்—ஆதி
மூலாவென்று கதறிய யானையைக் காக்கவே—நின்றன்
முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ? கெட்ட மூடனே—அட
(காலா)
ஆலால முண்டவ னடிசர ணென்ற மார்க்கண்டன்—
தனதாவி கவரப்போய் நீபட்ட பாட்டினை யறிகுவேன்—இங்கு
நாராயண ஞகநின் முன்னே உதிக்கிறேன்—அட (காலா)

---

4. காதற் பாட்டுக்கள்

காலைப் பொழுது

காலைப் பொழுதினிலே கண்விழித்து
மேனிலை மேல்
மேலைச் சுடர்வானை நோக்கி நின்றேனும்
விண்ணகத்தே. 1

கீழ்த்திசையில் ஞாயிறுதான் கேடில்
சுடர்விடுத்தான் ;
பார்த்த வெளியெல்லாம்
பகலொளியாய் மின்னிற்றே. 2

தென்னை மரத்தின் கீளையிடையே
தென்றல்போய்
மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச்
சென்றதுவே. 3

தென்னை மரக்கிளைமேற் சிந்தனையோ
டோர்காகம்
வன்னமுற வீற்றிருந்து வானமுத்த
மிட்டதுவே. 4

தென்னைப் பசுங்கீற்றைக் கொத்திச்
சிறுகாக்கை
மின்னுகின்ற தென்கடலை நோக்கி
விழித்ததுவே. 5

வன்னச் சுடர்மிகுந்த வானகத்தே
தென்றிசையில்
கன்னங் கருங்காகக் கூட்டம்வரக்
கண்டதங்கே. 6

கூட்டத்தைக் கண்டஞ்சு கும்பிட்டே
தன்னருகோர்
பாட்டுக் குருவிதனைப் பார்த்து
நகைத்ததுவே. 7

சின்னக் குருவி சிரிப்புடனே
வந்தாங்கு
கன்னங் கருங்காக்கை கண்ணெதிரே
யோர்கிளைமேல் 8

வீற்றிருந்தே, "கிக் கிக்கீ : காக்காய், நீ
விண்ணிடையே
போற்றியெதை நோக்குகிறாய் ? கூட்டமங்கு$
போவதென்னே?" 9

[பா – ம்.] $'கூட்டங்குறி' என 1937 ஆம் வருடப் பதிப்பில் உளது.

என்றவு டனேகாக்கை,—" என்தோழா,
நீகேளாய்,
மன்றுதனைக் கண்டே மனமகிழ்ந்து
போற்றுகிறேன் " 10

என்றுசொல்லிக் காக்கை யிருக்கையிலே
ஆங்கணுைர்
மின்றிகழும் பச்சைக் கிளிவந்து
வீற்றிருந்தே :— 11

" நட்புக் குருவியே, ஞாயிற்றிள
வெயிலில்
கட்புலனுக் கெல்லாம் களியாகத்
தோன்றுகையில், 12

நும்மை மகிழ்ச்சியுடன் நோக்கியிங்கு
வந்திட்டேன் ;
அம்மவோ ! காகப் பெருங்கூட்ட
மஃதென்னே ?" 13

என்று வினவக் குருவிதா
னிஃதுரைக்கும் :—
" நன்றுநீ கேட்டாய், பசுங்கிளியே,
நானுமிங்கு 14

மற்றதனை யோர்ந்திடவே காக்கையிடம்
வந்திட்டேன்.
கற்றறிந்த காக்காய், கழறுகநீ "
என்றதுவே. 15

அப்போது காக்கை :—" அருமையுள்ள
தோழர்களே,
செப்புவேன் கேளீர் ; சிலநாளாக்
காக்கையுள்ளே 16

நேர்ந்த புதுமைகளை நீர்கேட்
டறியீரோ ?
சார்ந்துநின்ற கூட்டமங்கு சாலையின்மேற்
கண்டீரே ? 17

மற்றந்தக் கூட்டத்து மன்னவனைக்
காணீரே ?
கற்றறிந்த ஞானி கடவுளேயே
நேராவான் ; 18

ஏழுநாள் முன்னே இறைமகுடந்
தான்புனைந்தான்.
வாழியவன் எங்கள் வருத்தமெலாம்
போக்கிவிட்டான். 19

சோற்றுக்குப் பஞ்சமில்லை ; போரில்லை ;
துன்பமில்லை.
போற்றற் குரியான் புதுமன்னன்,
காணீரோ ?'' 20

என்றுரைத்துக் காக்கை யிருக்கையிலே
அன்னமொன்று
தென்றிசையி னின்று சிரிப்புடனே
வந்ததங்கே. 21

அன்னமந்தத் தென்னை யருகினிலோர்
மாடமிசை
வன்னமுற வீற்றிருந்து :—''வாழ்க,
துணைவரே ! 22

காலை யிளவெயிலிற் காண்பதெலா
மின்பமன்றே ?
சாலநுமைக் கண்டு களித்தேன்
சருவிநீர் 23

ஏதுரைகள் பேசி யிருக்கின்றீர் ?''
என்றிடவே,
போதமுள்ள காக்கை புகன்றதந்தச்
செய்தியெல்லாம். 24

அன்னமிது கேட்டு மகிழ்ந்துரைக்கும் :—
''ஆங்காணும் !
மன்னர் அறம்புரிந்தால், வையமெல்லாம்
மாண்புபெறும். 25

ஒற்றுமையால் மேன்மையுண்டாம் ;
ஒன்றையொன்று துன்பிழைத்தல்
குற்றமென்று கண்டால், குறைவுண்டோ
வாழ்வினுக்கே?" 26

என்றுசொல்லி யன்னம் பறந்தாங்கே
ஏகிற்றால்.
மன்று கலைத்து மறைந்தனவப்
புட்களெல்லாம். 27

காலைப் பொழுதினிலே கண்டிருந்தோம்
நாங்களிதை ;
ஞால மறிந்திடவே நாங்களிதைப்
பாட்டிசைத்தோம். 28

---

5. அந்திப்பொழுது

1. காவென்று கத்திடுங் காக்கை—என்றன்
கண்ணுக் கினிய கருநிறக் காக்கை.
மேவிப் பலகிளை மீதில்—இங்கு
விண்ணிடை யந்திப் பொழுதினைக் கண்டே
கூவித் திரியுஞ் சிலவே ;—சில
கூட்டங்கள் கூடித் திசைதொறும் போகும்.
தேவி பராசக்தி யன்னை—விண்ணிற்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்.

2. தென்னை மரக்கிளை மீதில்—அங் கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்.
சின்னஞ் சிறிய குருவி—அது
'ஜிவ்' வென்று விண்ணிடை யூசலிட் டேகும்.
மன்னப் பருந்தொ ரிரண்டு—மெல்ல
வட்டமிட் டுப்பின் னெடுந்தொலை போகும்.
பின்னர் தெருவிலொர் சேவல்—அதன்
பேச்சினி லே"சக்தி வேல்" என்று கூவும்.

3. செவ்வொளி வானில் மறைந்தே—இளந்
தேன்நில வெங்கும் பொழிந்தது கண்டீர்.
இவ்வள வான பொழுதில்—அவள்
ஏறிவந் தேயுச்சி மாடத்தின் மீது,
கொவ்வை யிதழ்நகை வீச,—விழிக்
கோணத்தைக் கொண்டு நிலவைப் பிடித்தாள்.
செவ்வித, செவ்வித, பெண்மை!—ஆ!
செவ்வித, செவ்வித, செவ்வித, காதல்.

4. காதலி னுலுயிர் தோன்றும்;—இங்கு
காதலி னுலுயிர் வீரத்தி லேறும்;
காதலி னுலறி வெய்தும்,—இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்;
ஆதலி னுலவள் கையைப்—பற்றி
அற்புத மென்றிரு கண்ணிடை யொற்றி
வேதனை யின்றி யிருந்தேன்;—அவள்
வீணைக் குரலிலோர் பாட்டிசைத் திட்டாள்.

காதலியின் பாட்டு

5. கோல மிட்டு விளக்கினை யேற்றிக்
கூடி நின்று பராசக்தி முன்னே
ஓல மிட்டுப் புகழ்ச்சிகள் சொல்வார்
உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்;
ஞால முற்றும் பராசக்தி தோற்றம்.
ஞான மென்ற விளக்கினை யேற்றிக்
கால முற்றுந் தொழுதிடல் வேண்டும்,
காத லென்பதொர் கோயிலின் கண்ணே.

---

6. வேய்ங்குழல்

ராகம்—ஹிந்துஸ்தான் தோடி] [ஏகதாளம்

எங்கிருந்து வருகுவதோ—ஒலி
யாவர் செய்கு வதோ?—அடி தோழி
குன்றி னின்றும் வருகுவதோ—மரக்
கொம்பி னின்றும் வருகுவதோ—வெளி
மன்றி னின்று வருகுவதோ—என்றன்
மதிம ருண்டிடச் செய்குதடீ—(இஃதெங்கிருந்து)

2. அலையொ லித்திடும் தெய்வ—யமுனை
யாற்றி னின்றும் ஒலிப்பதுவோ—அன்றி
இலையொ லிக்கும் பொழிலிடை நின்றும்
எழுவ தோஇஃ தின்னமு தைப்போல்—(எங்கிருந்து)

3. காட்டி னின்றும் வருகுவதோ—நிலாக்
காற்றைக் கொண்டு தருகுவதோ—வெளி
நாட்டி னின்றுமித் தென்றல் கொணர்வதோ
நாத மிஃதெ னுயிரை யுருக்குதே— (எங்கிருந்து)

4. பறவை யேதுமொன் றுள்ள தறுவோ—இங்ஙன்
பாடு மோஅமு தக்கனற் பாட்டு
மறைவி னின்றுங் கின்னர ராதியர்
வாத்தி யத்தி னிசையிது வோஅடி— (எங்கிருந்து)

5. கண்ண னூதிடும் வேய்ங்குழல் தானடீ
காதி லேயமு துள்ளத்தில் நஞ்சு
பண்ணன் றுமடி பாவையர் வாடப்
பாடி யெய்திடும் அம்படி தோழி (எங்கிருந்து)

---

7. ராதைப் பாட்டு

[தாளம்-ஆதி ராகம்-கமாஸ்]

பல்லவி

தேகி முதம் தேகி ஸ்ரீ ராதே, ராதே.

சரணங்கள்

ராக ஸமுத்ர ஜாம்ருதே ராதே, ராதே.
ராஜீமண் டலரத்ந ராதே, ராதே.
போகரதி கோடிதுல்ய ராதே, ராதே (ஜய, ஜய)
பூதேவி தப: பல ராதே, ராதே. (தேகி)

வேதமஹா மந்த்ரரஸ ராதே, ராதே!
வேதவித்யா விலாஸினிஸ்ரீ ராதே, ராதே!
ஆதிபரா சக்திரூப ராதே, ராதே!
அத்யத்புத ச்ருங்காரமய ராதே, ராதே. (தேகி)

தமிழ்க் கண்ணிகள்

காதலெனுந் தீவினிலே, ராதே, ராதே! (அன்று)
கண்டெடுத்த பெண்மணியே, ராதே, ராதே.
காதலெனுஞ் சோலையிலே ராதே, ராதே (நின்ற)
கற்பகமாம் பூந்தருவே ராதே, ராதே.
மாதரசே! செல்வப்பெண்ணே, ராதே, ராதே, (உயர்)
வானவர்க ளின்பவாழ்வே, ராதே, ராதே. (தேகி)

---

8. வள்ளிப் பாட்டு (1)

பல்லவி

எந்த நேரமும் நின் மையல் ஏறுதடீ,
குற வள்ளி! சிறு கள்ளி!

சரணங்கள்

1. (இந்த) நேரத்தி லேமலே வாரத்தி லேநதி
யோரத்தி லேயுனைக் கூடி—நின்றன்
வீரத் தமிழ்ச்சொல்லின் ஸாரத்தி லேமன
மிக்க மகிழ்ச்சிகொண் டாடி—குழல்
பாரத்தி லேஇத ழீரத்தி லே,முலே யோரத்திலே
யன்பு சூடி—நெஞ்சம்
ஆரத் தழுவி யமர நிலேபெற் றதன்
பயனே யின்று காண்பேன்.
(எந்த நேரமும்)

2. வெள்ளே நிலாவிங்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய்—ஒளிக்
கொள்ளே யிலேயுனைக் கூடி முயங்கிக்
குறிப்பினி லேயொன்று பட்டு—நின்றன்
பிள்ளேக் கிளிமென் குதலேயிலே மனம்
பின்ன மறச்செல விட்டு—அடி
தெள்ளிய ஞானப் பெருஞ் செல்வ மே!நினேச்
சேர விரும்பினன், கண்டாய்!
(எந்த நேரமும்)

8. வட்டங்க ளிட்டுங் குளமக லாத
மணிப்பெருந் தெப்பத்தைப் போலே—நினை
விட்டுவிட் டுப்பல லீலைகள் செய்துநின்
மேனி தனைவிட லின்றி—
எட்டுத் திசையு மொளிர்ந்திடுங் காலை யிரவியைப்
போன்ற முகத்தாய்!—முத்த
மிட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்த மிட்டுனைச்
சேர்ந்திட வந்தேன். (எந்த நேரமும்)

---

9. வள்ளிப் பாட்டு (2)

ராகம்-கரஹரப்பிரியை] [தாளம்-ஆதி

பல்லவி

உனையே மயல் கொண்டேன்,—வள்ளீ!
உவமையி லரியாய், உயிரினு மினியாய்!
(உனையே)

சரணம்

எனையாள்வாய், வள்ளீ, வள்ளீ!
இளமயிலே, என் இதய மலர்வாழ்வே,
கனியே, சுவையுறு தேனே,
கலவியி லேஅமு தனையாய்!—(கலவியிலே)
தனியே, ஞான விழியாய்! நிலவினில்
நினைமருவி, வள்ளீ, வள்ளீ!
நீயாகிட வே வந்தேன்.

---

10. சித்தாந்தச் சாமி கோயில்

1. சித்தாந்தச் சாமி திருக்கோயில் வாயிலில்
தீப வொளியுண்டாம்;—பெண்ணே!
முத்தாந்த வீதி முழுதையுங் காட்டிட
மூண்ட திருச்சுடராம்;—பெண்ணே!

2. உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ்சுடர்ாம் ;—பெண்ணே!
கள்ளத் தனங்க ளனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ்சுடராம்;—பெண்ணே !

3. தோன்று முயிர்க ளனைத்துநன் றென்பது
தோற்ற முறுஞ்சுடராம் ;—பெண்ணே !
மூன்று வகைப்படு காலநன் றென்பதை
முன்ன ரிடுஞ்சுடராம் ;—பெண்ணே!

4. பட்டினந் தின்னிலும் பாக்கநன் றென்பதைப்
பார்க்க வொளிர்ச்சுடராம் ;—பெண்ணே!
கட்டு மனையிலுங் கோயில்நன்றென்பதைக்
காண வொளிர்ச்சுடராம்;—பெண்ணே !

11. புயற் காற்று†

ஒரு கணவனும் மனைவியும்

மனைவி :—காற்ற டிக்குது, கடல் குமுறுது,
கண்ணே விழிப்பாய், நாயகனே !
தூற்றல் கதவு சாளர மெல்லாந்
தொளைத் தடிக்குது, பள்ளியிலே.

கணவன் :—வானஞ் சினந்தது ; வைய நடுங்குது ;
வாழி பராசக்தி காத்திடவே !
தீனக் குழந்தைகள் துன்பப்ப டாதிங்கு,
தேவி, அருள்செய்ய வேண்டுகின்றேம்.

மனைவி :—நேற்றிருந் தோமந்த வீட்டினிலே, இந்த
நேரமிருந்தா லென்படுவோம் ?
காற்றென வந்தது கூற்றமிங்கே, நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றே ?

† நளஞ்ரு கார்த்திகை மீ 8ஙு புதன்கிழமை இரவு, புதுவையில் வீசிய புயற்காற்றைக் குறிக்கும். நள வருஷம் 1916-17ஆம் வருடத்தைக் குறிப்பதாகும்.

12. பிழைத்த தென்னந்தோப்பு

1. வயலிடை யினிலே—செழுநீர்
மடுக் கரையினிலே.
அயலெவரு மில்லே,—தனியே
ஆறுதல் கொள்ளவந்தேன்.

2. காற்றடித் ததிலே,—மரங்கள்
கணக்கிடத் தகுமோ ?—
நாற்றினேப்போ லேசிதறி
நாடெங்கும் வீழ்ந்தனவே.

3. சிறிய திட்டையிலே—உளதோர்
தென்னஞ் சிறுதோப்பு—
வறியவ னுடைமை—அதனே
வாயு பொடிக்கவில்லே.

4. வீழ்ந்தன சிலவாம்—மரங்கள்
மீந்தன பலவாம் ;
வாழ்ந்திருக்க வென்றே—அதனே
வாயு பொறுத்துவிட்டான்.

5. தனிமை கண்டதுண்டு ;—அதிலே
ஸார மிருக்குதம்மா !
பனிதொலேக்கும் வெயில்,—அது தேம்
பாகு மதுரமன்றே ;

6. இரவி நின்றதுகாண்—விண்ணிலே
இன்ப வொளித்திரளாய் ;
பரவி யெங்கணுமே—கதிர்கள்
பாடிக் களித்தனவே.

7. நின்ற மரத்திடையே—சிறிதோர்
நிழலினி லிருந்தேன் ;
என்றுங் கவிதையிலே—நிலேயாம்
இன்ப மறிந்துகொண்டேன்.

8. வாழ்க பராசக்தீ !—நீனையே
வாழ்த்திடுவோர் வாழ்வார் ;
வாழ்க பராசக்தி !—இதையென்
வாக்கு மறவாதே !

---

13. அக்கினிக் குஞ்சு

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்,—அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் ;
வெந்து தணிந்தது காடு ;—தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

---

14. மழை

1. திக்குக்க ளெட்டுஞ் சிதறி—தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைக ளுடைந்து—வெள்ளம்
பாயுது பாயுது பாயுது—தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்—அண்டம்
சாயுது சாயுது சாயுது—பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று—தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட

2. வெட்டி யடிக்குது மின்னல்,—கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை யிடிக்குது ;
கொட்டி யிடிக்குது மேகம் ;—கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று ;
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம் ;
எட்டுத் திசையு மிடிய—மழை
எங்ங னம்வந்தத டா,தம்பி வீரா !

3. அண்டங் குலுங்குது, தம்பி !—தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான் ;—திசை
வெற்புக் குதிக்குது ; வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார் ;—என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம் !
கண்டோம், கண்டோம், கண்டோம்—இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம் !

---

15. நிலாவும் வான்மீனும் காற்றும்

மனத்தை வாழ்த்துதல்

1. நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம் ;
உலாவு மனச்சிறு புள்ளினை யெங்களும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம் ;
பலாவின் கனிச்சுளை வண்டியி லோர் வண்டு
பாடுவதும் வியப்போ ?

2. தாரகை யென்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போமனமே,
ஈரச்சுவையதி லூறிவருமதில்
இன்புறுவாய் மனமே !
சீரவிருஞ்சுடர் மீனெடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓரழகாக விழுங்கிடு முள்ளத்தை
யொப்பதொர் செல்வமுண்டோ ?

3. பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியிவ் வானத்தி லோட
விரும்பி விரைந்திடுமே ;

மூன்றிலி லோடுமொர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ்* சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம்படைத்தோம்.

4. தென்னையின் கீற்று சலசல வென்றிடச்
செய்து வருங்காற்றே ;
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமொ
ருள்ளம் படைத்துவிட்டோம்.
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற்காற்றே !
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
வெட்டொலி யேன்கொணர்ந்தாய் ?

5. மண்ணுல கத்துநல் லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டுவந்தான் ;
பண்ணி லிசைத்தவ் வொலிக ளனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்.
நண்ணி வருமணி யோசையும், பின்னங்கு
நாய்கள் குலைப்பதுவும்,
எண்ணுமுன் னே'யன்னக் காவடிப் பிச்சை'யெண்
றேங்கிடு வான்குரலும்,

6. வீதிக் கதவை யடைப்பதுங் கீழ்த்திசை
விம்மிடுஞ் சங்கொலியும்,
வாதுகள் பேசிடு மாந்தர் குரலு
மதலை யழுங்குரலும்—
ஏதெது கொண்டு வருகுது காற்றிவை
யெண்ணி லகப்படுமோ ?
சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேனுண்ணு வாய்,மனமே !

[பா - ம்.] : * 'மூவுலகும்'

16. சாதாரண வருஷத்துத் தூமகேது*

தினையின் மீது பனை நின்றுங்கு
மணிச்சிறு மீன்மிசை வளர்வா லொளிதரக்
கீழ்த்திசை வெள்ளியைக் கேண்மை கொண்டிலகுந்
தூம கேதுச் சுடரே, வாராய். 1

எண்ணில்பல் கோடி யோசனை யெல்லை
எண்ணிலா மென்மை யியன்றதோர் வாயுவாற்
புனைந்தநின் னெடுவால் போவதென் கின்றூர். 2

மண்ணகத் தினையும் வால்கொடு தீண்டி
ஏழையர்க் கேது மிடர்செயா தேநீ
போதி யென்கின்றூர் ; புதுமைக ளாயிரம்
நினைக்குறித் தறிஞர் நிகழ்த்துகின் றனரால். 3

பாரத நாட்டிற் பரவிய எம்மனோர்
நூற்கண மறந்துபன் னூறுண் டாயின ;
உனதியல் அன்னிய ருரைத்திடக் கேட்டே
தெரிந்தனம் ; எம்மூளே தெளிந்தவ ரீங்கில்லை. 4

வாராய், சுடரே ! வார்த்தைசில கேட்பேன் :
தீயர்க் கெல்லாந் தீமைகள் விளைத்துத்
தொல்புவி யதனைத் துயர்க்கட லாழ்த்தி நீ
போவையென் கின்றூர் ; பொய்யோ, மெய்யோ 5

ஆதித் தலைவி யாணையின்படி நீ
சலித்திடுந் தன்மையால், தண்ட நீ செய்வது
புவியினைப் புனிதமாப் புனைதற் கேயென
விளம்புகின் றனர் ;அது மெய்யோ, பொய்யோ ? 6

ஆண்டோ ரெழுபத் தைந்தினி லொருமுறை
மண்ணைநீ யணுகும் வழக்கினை யாயினும்,
இம்முறை வரவினில் எண்ணிலாப் புதுமைகள்
விளையுமென் கின்றூர் ; மெய்யோ, பொய்யோ ? 7

* இது 1910-1911இல் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது.

சித்திகள் பலவுஞ் சிறந்திடு ஞானமும்
மீட்டுமெம் மிடைநின் வரவினுல் விளைவதாப்
புகலுகின் றனர்; அது பொய்யோ, மெய்யோ? 8

---

17. அம்மாக்கண்ணு பாட்டு

1. "பூட்டைத் திறப்பது கையாலே—நல்ல
மனந்தி றப்பது மதியாலே"
பாட்டைத் திறப்பது பண்ணுலே—இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணுலே.

2. ஏட்டைத் துடைப்பது கையாலே—மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே,
வேட்டை யடிப்பது வில்லாலே—அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

3. காற்றை யடைப்பது மனதாலே—இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே—உயிர்
துணிவு றுவது தாயாலே.

---

18. வண்டிக்காரன் பாட்டு

அண்ணனுக்கும் தம்பிக்கும் சம்பாஷணை

"காட்டு வழிதனிலே—அண்ணே!
கள்ளர் பயமிருந்தால்?"—"எங்கள்
வீட்டுக் குலதெய்வம்—தம்பி
வீரம்மை காக்குமடா!"
"நிறுத்து வண்டி யென்றே—கள்ளர்
நெருக்கிக் கேட்கையிலே—எங்கள்
கறுத்த மாரியின் பேர்—சொன்னுல்
காலனும் அஞ்சுமடா!"

---

19. தொழில்

1. இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே !
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே !
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலியிங்கு நீரே !

2. மண்ணை டுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே !
உண்ணக் காய்கனி தந்திடு வீரே !
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே !
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே !
விண்ணி னின்றெமை வானவர் காப்பார் ;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே !

3. பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே !
பரத நாட்டியக் கூத்திடு வீரே !
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே !
நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே !
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே ;
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே !

---

20. நாட்டுக் கல்வி

(ஆங்கிலத்தில் ரவீந்திரநாதர் எழுதிய பாடலின் மொழிபெயர்ப்பு)

1. விளக்கி லேதிரி நன்கு சமைந்தது
மேவுவீர் இங்கு தீக்கொண்டு தோழரே !
களக்க முற்ற இருள்கடந் தேகுவார்
காலைச் சோதிக் கதிரவன் கோவிற்கே

துளக்க மூற்றவிண் மீனிடம் செல்லுவார்
தொகையில் சேர்ந்திட உம்மையும் கூவினர்.
களிப்பு மிஞ்சி ஒளியினைப் பண்டொரு
காலம் நீர்சென்று தேடிய தில்லையோ?

2. அன்று நுங்கள் கொடியினை முத்திட்டே
ஆசை யென்றவின் மீன்ஒளிர் செய்ததே;
துன்று நள்ளிருள் மாலை மயக்கத்தால்
சோம்பி நீரும் வழிநடை பிந்தினீர்
நின்ற விந்தன நுங்கள் விளக்கெலாம்
நீங்கள் கண்ட கனவுக ளெல்லாம்இசை
குன்றித் தீக்குறி தோற்றும் இராப்புட்கள்
கூவு மாறெத் திருந்தன காண்டிரோ.

3. இன்னு மிங்கிருள் கூடி யிருப்பினும்
ஏங்கு கின்ற நரகத் துயிர்கள்போல்
இன்னு மிங்கு வனத்திடை காற்றுத்தான்
ஓங்கும் ஓதை இருந்திடும் ஆயினும்
முன்னைக் காலத்தி லின்றெழும் பேரொலி
முறை முறைபல ஊழியின் ஊடுற்றே
பின்னை இங்குவந் தெய்திய பேரொலி
போல மந்திர வேதத்தின் பேரொலி.

4. "இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டுவாய்"
அருளும் இந்த மறையொலி வந்திங்கே
ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருப் பீர்தமைத்
தெருள் உறுத்தவும் நீர்எழு கில்லிரோ?
தீய நாச உறக்கத்தில் வீழ்ந்தநீர்
மருளை நீக்கி அறிதிர் அறிதிரோ
வான் ஒளிக்கு மகாஅர்இ யாம் என்றே.

2. சமூகம்

—: o :—

21. மனைத் தலைவிக்கு வாழ்த்து

வாழ்க மனைவியாங் கவிதைத் தலைவி !
தினமு மிவ்வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை
வாழ்க்கைப் பாலியில் வளர்பல முட்கள்போல்
பேதை யுலகைப் பேதைமைப் படுத்தும்
வெறுங் கதைத்திரளை, வெள்ளறி வுடைய
மாயா சக்தியின் மகளே, மனைக்கண்
வாழ்வினை வகுப்பாய், வருடம் பலவினும்
ஓர்நாட் போலமற் றோர்நாள் தோன்றுது
பலவித வண்ணம் வீட்டிடைப் பரவ
நடத்திடுஞ் சக்தி நிலையமே, நன்மனைத்
தலைவீ, ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயனிறை யனுபவ மாக்கி,
உயிரிலாச் செய்திகட் குயிர்மிகக் கொடுத்து,
ஒளியிலாச் செய்திகட் கொளியருள் புரிந்து,
வான சாத்திரம் மகமது வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையு மாங்கே யழகுறச் செய்து,
இலௌகிக வாழ்க்கையிற் பொருளினை யிணைக்கும்
பேதை மாசத்தியின் பெண்ணே, வாழ்க.
காளியின் குமாரி, அறங்காத் திடுக !
வாழ்க ! மனையகத் தலைவி வாழ்க !

---

22. பெண் விடுதலை*

1. விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம் ; வெல்லுவ மென்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடையவள் சக்தி யாண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்.
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ ?

2. திறமையா லிங்கு மேனிலை சேர்வோம் ;
தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம் ;
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனில வரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதிற் சேர்ந்திங் குழைப்போம் ;
அறவி ழுந்தது பண்டை வழக்கம் ;
ஆணுக் குப்பெண் விலங்கெனு மஃதே.

3. விடியு நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே ;
கொடியர் நம்மை யடிமைக ளென்றே ;
கொண்டு, தாமுத லென்றன ரன்றே.
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே,
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர்,நந் தேசத்து வீரக்
காரி கைக்கண த்தீர்,துணி வுற்றே.

---

* 'சியூசூனி' என்பாள் சீன பாஷையில் பாடிய பாட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு: 'பாரதி கட்டுரைகள்' என்ற தொகுதியில் 'சியூசீன் செய்த பிரசங்கம்' என்ற பகுதியில் இப்பாடல் உள்ளது.

23. பெண்கள் விடுதலைக் கும்மி

காப்பு

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே.

1. கும்மி யடிதமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமென்று கும்மியடி. (கும்மி)

2. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

3. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி. (கும்மி)

4. நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டிவைத் தார் பழி கூட்டி விட்டார். (கும்மி)

5. கற்பு நிலையென்று சொல்லவந் தாரிரு
கஷ்டிக்குமஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

6. பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
ணிளைப்பில்லை காணென்று கும்மியடி (கும்மி)

7. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந்தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம். (கும்மி)

8. காத லொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி (கும்மி)

---

24. புதுமைப் பெண்

1. போற்றி போற்றியோ ராயிரம் போற்றி ! நின்
பொன்ன டிக்குப்பல் லாயிரம் போற்றிகாண் !
சேற்றி லேபுதி தாக முளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே
துன்ப நீக்குஞ் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழி நீ !

2. மாதர்க் குண்டு சுதந்திர மென்றுநின்
வண்ம லர்த்திரு வாயின் மொழிந்தசொல்
நாதந் தானது நாரதன் வீணையோ ?
நம்பிரான் கண்ணன் வேய்ங்குழ லின்பமோ ?
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ ?
சாதல் மூத்தல் கெடுக்கு மமிழ்தமோ ?
தையல் வாழ்கபல் லாண்டுபல் லாண்டிங்கே !

3. அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினு மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே

சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயி லிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினல்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ !

4. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ !

5. நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டு மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சால வேயரி தாவதொர் செய்தியாம்
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்து மறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புகள் கேட்டிரோ !

6. புதுமைப் பெண்ணிவள் சொற்களுஞ் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்
சதும றைப்படி மாந்த ரிருந்தநாள்
தன்னி லேபொது வான வழக்கமாம்
மதுரத் தேமொழி மங்கைய ருண்மைதேர்
மாத வப்பெரி யோருட னெப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்.

7. நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்

அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலியின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ !

8. உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்
ஒது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க வுழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பாராம்.

9. சாத்தி ரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி யாண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையி னெண்ணங்கள் கேட்டிரோ !

10. போற்றி, போற்றி, ஜயஜய போற்றியிப்
புதுமைப் பெண்ணெழி வாழிபல் லாண்டிங்கே
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து,
மனிதர் தம்மை யமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல்
லருளி னொரு கன்னிகை யாகியே
தேற்றி யுண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினு மேற்செல்வ மெய்திஞேம்.

25. பெண்மை

1. பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் ஸதியென்ற நாமமும்.

2. அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலிக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பந் தீர்வது பெண்மையி லலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்.

3. வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்து நின் றுடுவோம்.

4. பெண்ண றத்தி னே யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா.

5. சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங் கொட்டி திசைக ளதிரவே
ஒத்தி யல்வதோர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்துநின் றுடுவோம்.

6. உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரி னுக்குயி ராயின்ப மாகிடும்
உயிரினு மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள், ஆடு களிகொண்டே.

7. 'போற்றி தாய்' என்று தோள்கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணெருத்தி பணியிலே.

8. 'போற்றிதாய்' என்று தாளங்கள் கொட்டடா
'போற்றிதாய்' என்று பொற்குழ லூதடா
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

9. அன்ன மூட்டிய தெய்வமணிக் கையின்
ஆணை காட்டில் அனலில் விழுங்குவோம்
கன்னத் தேமுத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்.

---

26. மறவன் பாட்டு

1. மண்வெட்டிக் கூலிதின லாச்சே !—எங்கள்
வாள்வலியும் வேல்வலியும் போச்சே !
விண்முட்டிச் சென்றபுகழ் போச்சே !—இந்த
மேதினியில் கெட்டபெய ராச்சே !

2. நாணிலகு வில்லிலெடு தூணி—நல்ல
நாதமிகு சங்கொலியும் பேணி,
பூணிலகு நிண்கதையும் கொண்டு, நாங்கள்
போர்செய்த காலமெல்லாம் பண்டு.

3. கன்னங் கரியவிருள் நேரம்—அதிற்
காற்றும் பெருமழையும் சேரும் ;
சின்னக் கரியதுணி யாலே—எங்கள்
தேகமெல்லாம் மூடிநரி போலே,

4. ஏழை யெளியவர்கள் வீட்டில்—இந்த
ஈன வயிறுபடும் பாட்டில்
கோழை யெலிக ளென்னவே—பொருள்
கொண்டு வந்து ... ...

5. மூன்னுளில் ஐயரெல்லாம் வேதம்—ஓதுவார் ;
மூன்றுமழை பெய்யுமடா மாதம் ;
இன்னுளி லேபொய்மைப் பார்ப்பார்—இவர்
ஏதுசெய்துங் காசுபெறப் பார்ப்பார்.

6. பேராசைக் காரனடா பார்ப்பான்—ஆனால்
பெரியதுரை என்னிலுடல் வேர்ப்பான்.
யாரானு லுங்கொடுமை... ...
... .

7. பிள்ளைக்குப் பூணூலா மென்பான்—நம்மைப்
பிச்சுப் பணங்கொடெனத் தின்பான்
கொள்ளைக் கேசென் ... ...
... ...

8. சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறுஞ்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்?
... ...
... ...

9. நாயும் பிழைக்கு மிந்தப்—பிழைப்பு;
நாளெல்லாம் மற்றிதிலே உழைப்பு;
பாயும் கடிநாய்ப் போலீசுக்—காரப்
பார்ப்பானுக் குண்டிதிலே பீசு.

10. சோரந்தொழிலாக் கொள்வோமோ?—முந்தைச்
சூரர் பெயரை அழிப்போமோ?
வீர மறவர் நாமன்றே?—இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றே?

---

27. புதிய கோணங்கி

1. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்லகாலம் வருகுது; நல்லகாலம் வருகுது;
சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி, மாகாளீ!
வேதபுரத் தாருக்கு நல்லகுறி சொல்லு.

2. தரித்திரம் போகுது; செல்வம் வருகுது;
படிப்பு வளருது; பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்,
போவான், போவான், ஐயோவென்று போவான்.

3. வேத புரத்திலே வியாபாரம் பெருகுது ;
தொழில் பெருகுது ; தொழிலாளி வாழ்வான் ;
சாத்திரம் வளருது ; சூத்திரந் தெரியுது ;
யந்திரம் பெருகுது ; தந்திரம் வளருது ;
மந்திர மெல்லாம் வளருது, வளருது ;

4. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
சொல்லடீ, சொல்லடீ, மலையாள பகவதீ !
அந்தரி, வீரி, சண்டிகை, சூலி !
குடுகுடு குடுகுடு.

5. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
சாமிமார்க் கெல்லாம் தைரியம் வளருது ;
தொப்பை சுருங்குது ; சுறுசுறுப்பு விளையுது ;
எட்டு லச்சுமியும் ஏறி வளருது ;
பயந் தொலையுது, பாவந் தொலையுது ;
சாத்திரம் வளருது, சாதி குறையுது ;
நேத்திரம் திறக்குது, நியாயம் தெரியுது ;
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது ;
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது ;
சொல்லடீ, சக்தி, மலையாள பகவதி !
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது.

3. வசன கவிதை

—: o :—

28. காட்சி

முதற் கிளை: இன்பம்

1

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமை யுடைத்து ;
காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று ; திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
கடல் இனிது. மலை இனிது. காடு இனிது.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்,
மலரும் காயும், கனியும் இனியன. பறவைகள் இனிய.
ஊர்வனவும் நல்லன.
விலங்குகளெல்லாம் இனியவை.
நீர்வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்.
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

2

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.
உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம்.
உணர்வு தெய்வம்.

3

மனம் தெய்வம், சித்தம் தெய்வம், உயிர் தெய்வம்.
காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான்,
ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள்—எல்லாம்
தெய்வங்கள்.
உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர்—இவை அமுதங்கள்.

4

இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு—இவை யனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலை, யருவி,
குழல், கோமேதகம்—இவ் வனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணன், குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெல்லாம் ஒன்று.
மூடன், புலவன்,
இரும்பு, வெட்டுக்கிளி—
இவை ஒருபொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர்—
இவை ஒருபொருளின் பலதோற்றம்.
உள்ள தெல்லாம் ஒரேபொருள், ஒன்று.
இந்த ஒன்றின் பெயர் 'தான்'.
'தானே' தெய்வம்.
'தான்' அமுதம், இறவாதது.

5

எல்லா உயிரும் இன்பமெய்துக.
எல்லா உடலும் நோய்தீர்க.
எல்லா உணர்வும் ஒன்றுதலுணர்க.
'தான்' வாழ்க.
அமுதம் எப்போதும் இன்பமாகுக.

6

தெய்வங்களை வாழ்த்துகின்றேம்.
தெய்வங்கள் இன்பமெய்துக.
அவை வாழ்க.
அவை வெல்க.
தெய்வங்களே !
என்றும் விளங்குவீர், என்றும் இன்பமெய்துவீர்.
என்றும் வாழ்வீர், என்றும் அருள்புரிவீர்.
எவற்றையும் காப்பீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே !
எம்மை உண்பீர், எமக்கு உணவாவீர்.
உலகத்தை உண்பீர், உலகத்துக்கு உணவாவீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே !
காத்தல் இனிது, காக்கப்படுதலும் இனிது.
அழித்தல் நன்று, அழிக்கப்படுதலும் நன்று.
உண்பது நன்று, உண்ணப்படுதலும் நன்று.
சுவை நன்று, உயிர் நன்று, நன்று, நன்று.

7

உணர்வே, நீ வாழ்க.
நீ ஒன்று. நீ ஒளி.
நீ ஒன்று. நீ பல.
நீ நட்பு. நீ பகை.
உள்ளதும், இல்லாததும் நீ.

அறிவதும், அறியாததும் நீ.
நன்றுப், தீதும் நீ.
நீ அமுதம், நீ சுவை.
நீ நன்று, நீ இன்பம்.

இரண்டாங் கிளை : புகழ்

ஞாயிறு

1

ஒளி தருவது யாது? தீராத இளமையுடையது யாது?
வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?
மழை எவன் தருகிறான்? கண் எவனுடையது?
உயிர் எவன் தருகிறான்?
புகழ் எவன் தருகின்றான்? புகழ் எவனுக்குரியது?
அறிவு எதுபோல் சுடரும்?
அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?
ஞாயிறு.
அது நன்று.

2

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி.
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து—
இவை யெல்லாம் நினது திருஷ்ட்சி.
கண் நினது வீடு.
புகழ், வீரம்—இவை நினது லீலை.
அறிவு நின் குறி. அறிவின் குறி நீ.
நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய், வாழ்க.
உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்.
வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,
நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க.

3

வைகறையின் செம்மை இனிது.
மலர்கள் போல நகைக்கும் உஷை வாழ்க.

உஷையை நாங்கள் தொழுகின்றோம்.
அவள் திரு.
அவள் விழிப்புத் தருகின்றாள், தெளிவு தருகின்றாள்,
உயிர் தருகின்றாள், ஊக்கந் தருகின்றாள்,
அழகு தருகின்றாள், கவிதை தருகின்றாள்.
அவள் வாழ்க.
அவள் தேன். சித்த வண்டு அவளை விரும்புகின்றது.
அவள் அமுதம்.
அவள் இறப்ப தில்லை. வலிமையுடன் கலக்கின்றாள்.
வலியைதான் அழகுடன் கலக்கும். இனிமை மிகவும் பெரிது.
வட மேருவிலே பலவாகத் தொடர்ந்துவருவாள். வானடி
யைச் சூழ நகைத்துத் திரிவாள்.
அவளுடைய நகைப்புக்கள் வாழ்க.
தெற்கே நமக்கு ஒருத்தியாக வருகின்றாள், அன்பு மிகுதியால்.
ஒன்று பலவினும் இனிதன்றே?
வைகறை நன்று. அதனை வாழ்த்துகின்றோம்.

4

நீ சுடுகின்றாய், நீ வருத்தந் தருகின்றாய்.
நீ விடாய் தருகின்றாய், சோர்வு தருகின்றாய்,
பசி தருகின்றாய்.
இவை இனியன.
நீ கடல் நீரை வற்றடிக்கிறாய், இனிய மழை தருகின்றாய்.
வானவெளியிலே விளக்கேற்றுகிறாய்.
இருளைத் தின்று விடுகின்றாய்.
நீ வாழ்க.

5

ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?
ஓட்டினையா? கொன்றாயா? விழுங்கிவிட்டாயா?
கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து
விட்டாயா?
இருள் நினக்குப் பகையா?
இருள் நின் உணவுப்பொருளா?

அது நின் காதலியா ?
இரவெல்லாம் நின்னைக் காணுத மயக்கத்தால் இருண்டிருந்ததா ?
நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானுங்கொண்டு நின்னைக் கலந்துவிட்டதா ?
நீங்கள் இருவரும் ஒரு தாய்வயிற்றுக் குழந்தைகளா?
முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்குப்படி உங்கள் தாய் ஏவியிருக்கிறாளா ?
உங்களுக்கு மரணமில்லையா ? நீங்கள் அமுதமா ?
உங்களைப் புகழ்கின்றேன்.
ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றேன்.

6

ஒளியே, நீ யார் ?
ஞாயிற்றின் மகளா ?
அன்று. நீ ஞாயிற்றின் உயிர். அதன் தெய்வம்.
ஞாயிற்றினிடத்தே நின்னைத்தான் புகழ்கின்றோம்.
ஞாயிற்றின் வடிவம் உடல். நீ உயிர்.
ஒளியே, நீ எப்போது தோன்றினாய் ?
நின்னை யாவர் படைத்தனர் ?
ஒளியே, நீ யார் ?
உனதியல்பு யாது ?
நீ அறிவின் மகள் போலும். அறிவுதான் தூங்கிக்கிடக்கும். தெளிவு நீ போலும்.
அறிவின் உடல் போலும்.
ஒளியே, நினக்கு வானவெளி எத்தனைநாட் பழக்கம் ?
உனக்கு அதனிடத்தே இவ்வகைப்பட்ட அன்பு யாது பற்றியது ?
அதனுடன் நீ எப்படி இரண்டறக் கலக்கிறாய் ?
உங்களை யெல்லாம் படைத்தவள் வித்தைக்காரி.
அவள் மோஹினி, மாயக்காரி.
அவளைத் தொழுகின்றோம்.
ஒளியே, வாழ்க.

7

ஞாயிறே !
நின்னிடத்து ஒளி எங்ஙனம் நிற்கின்றது ?
நீ அதனை உமிழ்கின்றாயா ?
அது நின்னைத் தின்னுகிறதா ?
அன்றி, ஒளிதவிர நீ வேறொன்றுமில்லையா ?
விளக்குத்திரி காற்றுகிச் சுடர் தருகின்றது.
காற்றுக்கும் சுடருக்கும் எவ்வகை உறவு ?
காற்றின் வடிவே திரியென்றறிவோம்.
ஒளியின் வடிவே காற்றுப்போலும்.
ஒளியே, நீ இனியை.

8

ஒளிக்கும் வெம்மைக்கும் எவ்வகை உறவு ?
வெம்மையேற ஒளி தோன்றும்.
வெம்மையைத் தொழுகின்றேம்.
வெம்மை ஒளியின் தாய். ஒளியின் முன்னுருவம்.
வெம்மையே, நீ தீ.
தீ தான் வீரத்தெய்வம்.
தீ தான் ஞாயிறு.
தீயின் இயல்பே ஒளி.
தீ எரிக.
அதனிடத்தே நெய் பொழிகின்றேம்.
தீ எரிக.
அதனிடத்தே தசை பொழிகின்றேம்.
தீ எரிக.
அதனிடத்தே செந்நீர் பொழிகின்றேம்.
தீ எரிக.
அதற்கு வேள்விசெய்கின்றேம்.
தீ எரிக.
அறத்தீ, அறிவுத்தீ, உயிர்த்தீ,
விரதத்தீ, வேள்வித்தீ,
சினத்தீ, பகைமைத் தீ, கொடுமைத் தீ—
இவை யனைத்தையும் தொழுகின்றேம்.

இவற்றைக் காக்கின்றோம்.
இவற்றை ஆளுகின்றோம்.
தீயே, நீ எமது உயிரின் தோழன்.
உன்னை வாழ்த்துகின்றோம்.
நின்னைப்போல, எம துயிர் நூறுண்டு வெம்மையும் சுடரும் தருக.
தீயே, நின்னைப்போல, எமதுள்ளம் சுடர்விடுக.
தீயே, நின்னைப்போல, எம தறிவு கனலுக.
ஞாயிற்றினிடத்தே, தீயே, நின்னைத்தான் போற்றுகின்றோம்.
ஞாயிற்றுத் தெய்வமே, நின்னைப் புகழ்கின்றோம்.
நினதொளி நன்று. நின் செயல் நன்று. நீ நன்று.

9

வானவெளி என்னும் பெண்ணை ஒளியெனும் தேவன் மணந் திருக்கின்றான்.
அவர்களுடைய கூட்டம் இனிது.
இதனைக் காற்றுத்தேவன் கண்டான்.
காற்று வலிமையுடையவன்.
இவன் வானவெளியைக் கலக்க விரும்பினான்.
ஒளியை விரும்புவதுபோல வானவெளி இவனை விரும்ப வில்லை.
இவன் தனது பெருமையை ஊதிப் பறையடிக்கின்றான்.
வெளியும் ஒளியும் இரண்டு உயிர்கள் கலப்பதுபோல் கலந்தன.
காற்றுத் தேவன் பொறுமைகொண்டான்.
அவன் அமைதியின்றி உழலுகிறான்.
அவன் சிறுகின்றான், புடைக்கின்றான், குமுறுகின்றான்.
ஓல மிடுகிறான், சுழலுகின்றான், துடிக்கின்றான்;
ஓடுகின்றான், எழுகின்றான், நிலையின்றிக் கலங்குகின்றான்.
வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகைசெய்கின்றன.
காற்றுத் தேவன் வலிமையுடையவன்.
அவன் புகழ் பெரிது. அப் புகழ் நன்று.
ஆனால் வானவெளியும் ஒளியும் அவனிலும் சிறந்தன.
அவை மோனத்திலே கலந்து நித்தம் இன்புறுவன.

அலவ வெற்றியுடையன.
ஞாயிறே, நீதான் ஒளித்தெய்வம்.
நின்னேயே வெளிப்பெண் நன்கு காதல்செய்கிறுள்.
உங்கள் கூட்டம் மிக இனிது.
நீவிர் வாழ்க.

10

ஞாயிறே, நின்முகத்தைப் பார்த்த பொருளெல்லாம் ஒளி பெறுகின்றது.
பூமி, சந்திரன், செவ்வாய், புதன், சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ், நெப்ட்யூன் முதலிய பலநூறு வீடுகள்—
இவை யெல்லாம் நின்கதிர்கள் பட்ட மாத்திரத்திலே ஒளியுற நகை செய்கின்றன.
தீப்பந்திலிருந்து பொறிகள் வீசுவதுபோல,
இவை யெல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டன வென்பர்;
இவற்றைக் காலம் என்னும் கள்வன் மருவினன்.
இவை ஒளிகுன்றிப் போயின;
ஒளியிழந்தனவல்ல, குறைந்த ஒளியுடையன.
ஒளியற்ற பொருள் சகத்திலே யில்லை.
இருளென்பது குறைந்த ஒளி.
செவ்வாய், புதன் முதலிய பெண்கள் ஞாயிற்றை வட்ட மிடுகின்றன.
இவை தமது தந்தைமீது காதல் செலுத்துகின்றன.
அவன் மந்திரத்திலே கட்டுண்டு வரைகடவாது சுழல் கின்றன.
அவனுடைய சக்தியெல்லையை என்றும் கடந்துசெல்ல மாட்டா.
அவன் எப்போதும் இவற்றை நோக்கியிருக்கின்றன்.
அவனுடைய ஒளியமுகத்தில் உடல்முழுதும் நனையும் பொருட்டாகவே இவை உருளுகின்றன.
அவனொளியை இவை மலரிலும், நீரிலும், காற்றிலும் பிடித்து வைத்துக் கொள்ளும்.
ஞாயிறு மிகச்சிறந்த தேவன். அவன் கைப்பட்ட இடமெல்லாம் உயிருண்டாகும்.

அவனையே மலர் விரும்புகின்றது.
இலைகள் அவனுடைய அழகிலே யோகமெய்தியிருக்கின்றன.
அவனை நீரும் நிலமும் காற்றும் உகந்து களியுறும்.
அவனை வான் கவ்விக் கொள்ளும்.
அவனுக்கு மற்றெல்லாத் தேவரும் பணிசெய்வர்.
அவன் புகழைப் பாடுவோம்.
அவன் புகழ் இனிது.

11

புலவர்களே, அறிவுப்பொருள்களே, உயிர்களே, பூதங்களே, சத்திகளே, எல்லோரும் வருவீர்.
ஞாயிற்றைத் துதிப்போம், வாருங்கள்.
அவன் நமக்கெல்லாம் துணை.
அவன் மழைதருகின்றான்.
மழை நன்று.
மழைத் தெய்வத்தை வாழ்த்துகின்றோம்.
ஞாயிறு வித்தைகாட்டுகிறான்.
கடல்நீரைக் காற்றுக்கி மேலேகொண்டுபோகிறான்.
அதனை மீளவும் நீராக்கும்படி காற்றை ஏவுகின்றான்.
மழை இனிமையுறப் பெய்கின்றது.
மழை பாடுகின்றது.
அது பலகோடி தந்திகளுடையதோர் இசைக்கருவி.
வானத்திலிருந்து அமுதவயிரக்கோல்கள் விழுகின்றன.
பூமிப்பெண் விடாய்தீர்கிறாள்; குளிர்ச்சி பெறுகின்றாள். வெப்பத்தால் தண்மையும், தண்மையால் வெப்பமும் விளைகின்றன.
அனைத்தும் ஒன்றுதலால்.
வெப்பம் தவம். தண்மை யோகம்.
வெப்பம் ஆண். தண்மை பெண்.
வெப்பம் வலியது. தண்மை இனிது.
ஆணிலும் பெண் சிறந்ததன்றே?
நாம் வெம்மைத் தெய்வத்தைப் புகழ்கின்றோம்.
அது வாழ்க.

12

நாம் வெம்மையைப் புகழ்கின்றோம்.
வெம்மைத் தெய்வமே, ஞாயிறே, ஒளிக்குன்றே,
அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே,
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே,
வலிமையின் ஊற்றே, ஒளி மழையே, உயிர்க்கடலே,
சிவனென்னும் வேடன் சக்தியென்னும் குறத்தியை உலகமென்னும் புனங்காக்கச்சொல்லி வைத்துவிட்டுப் போன விளக்கே,
கண்ணனென்னும் கள்வன் அறிவென்னும் தன் முகத்தை மூடிவைத்திருக்கும் ஒளியென்னும் திரையே,
ஞாயிறே, நின்னைப் பரவுகின்றோம்.
மழையும் நின் மகள், மண்ணும் நின் மகள்;
காற்றும் கடலும் கனலும் நின் மக்கள்;
வெளி நின் காதலி;
இடியும் மின்னலும் நினது வேடிக்கை.
நீ தேவர்களுக்குத் தலைவன்.
நின்னைப் புகழ்கின்றோம்.
தேவர்களெல்லாம் ஒன்றே.
காண்பன வெல்லாம் அவருடல்.
சுருதுவன அவருயிர்.
அவர்களுடைய தாய் அமுதம்.
அமுதமே தெய்வம். அமுதமே மெய்யொளி.
அஃது ஆத்மா.
அதனைப் புகழ்கின்றோம்.
அதன் வீடாகிய ஞாயிற்றைப் புகழ்கின்றோம்.
ஞாயிற்றின் புகழ் பேசுதல் நன்று.

13

மழை பெய்கிறது. காற்றடிக்கின்றது. இடி குமுறுகின்றது. மின்னல் வெட்டுகின்றது.
புலவர்களே, மின்னலைப் பாடுவோம், வாருங்கள்.

மின்னல் ஒளித்தெய்வத்தின் ஒரு லீலை—ஒளித்தெய்வத்தின் ஒரு தோற்றம்.
அஃனை யவனர் வணங்கி ஒளிபெற்றனர்.
மின்னலைத் தொழுகின்றோம்.
அது நம்மறிவை ஒளியுறச்செய்க.
மேகக் குழந்தைகள் மின்னற்பூச் சொரிகின்றன.
மின் சக்தி இல்லாத இடமில்லை.
எல்லாத் தெய்வங்களும் அங்ஙனமே.
கருங்கல்லிலே, வெண்மணலிலே, பச்சை இலையிலே,
செம்மலரிலே, நீல மேகத்திலே,
காற்றிலே, வரையிலே—எங்கும் மின்சக்தி உறங்கிக்கிடக்கின்றது.
அதனைப் போற்றுகின்றோம்.
நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.
நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க.
நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக.
நமது பாட்டு மின்னலுடைத்தாகுக.
நமது வாக்கு மின்போல் அடித்திடுக.
மின் மெலியதைக் கொல்லும்;
வலியதிலே வலிமைசேர்க்கும்.
அது நம் வலிமையை வளர்த்திடுக.
ஒளியை, மின்னலை, சுடரை, மணியை,
ஞாயிற்றை, திங்களை, வானத்து வீடுகளை, மீன்களை—
ஒளியுடைய அனைத்தையும் வாழ்த்துகின்றோம்.
அனைத்தையும் வாழ்த்துகின்றோம்.
ஞாயிற்றை வாழ்த்துகின்றோம்.

———

29. சக்தி

1

சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஓர் குமிழியாம்.
சக்தி பொய்கையிலே ஞாயிறு ஒரு மலர்.
சக்தி அநந்தம், எல்லையற்றது, முடிவற்றது;
அசையாமையில் அசைவு காட்டுவது.

சக்தி அடிப்பது, துரத்துவது, கூட்டுவது,
பிணைப்பது, கலப்பது, உதறுவது,
புடைப்பது, வீசுவது, சுழற்றுவது,
கட்டுவது, சிதறடிப்பது, தூற்றுவது,
ஊதிவிடுவது, நிறுத்துவது, ஓட்டுவது,
ஒன்றாக்குவது, பலவாக்குவது.
சக்தி குளிர் செய்வது, அனல் தருவது,
குதூகலப்புத் தருவது,
குதூஹலந் தருவது, நோவு தீர்ப்பது,
இயல்பு தருவது, இயல்பு மாற்றுவது,
சோர்வு தருவது, ஊக்கந்தருவது,
எழுச்சி தருவது, கிளர்ச்சிதருவது,
மலர்விப்பது, புளகஞ்செய்வது,
கொல்வது, உயிர்தருவது.
சக்தி மகிழ்ச்சி தருவது, சினந்தருவது,
வெறுப்புத் தருவது, உவப்புத் தருவது,
பகைமை தருவது, காதல் மூட்டுவது,
உறுதி தருவது, அச்சந் தருவது,
கொதிப்புத் தருவது, ஆற்றுவது.
சக்தி முகர்வது, சுவைப்பது, தீண்டுவது, கேட்பது, காண்பது.
சக்தி நினைப்பது ஆராய்வது, கணிப்பது, தீர்மானஞ்செய்வது,
கனக்காண்பது, கற்பனைபுரிவது, தேடுவது, சுழல்வது,
பற்றிநிற்பது, எண்ணமிடுவது, பகுத்தறிவது,
சக்தி மயக்கந்தருவது, தெளிவுதருவது.
சக்தி உணர்வது.
பிரமன் மகள், கண்ணன் தங்கை, சிவன் மனைவி.
கண்ணன் மனைவி, சிவன் மகள், பிரமன் தங்கை.
பிரமனுக்கும் கண்ணனுக்கும் சிவனுக்கும் தாய்.
சக்தி முதற்பொருள்.
பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு.
சக்திக்கடலிலே ஞாயிறு ஓர் நுரை ;
சக்திவீணையிலே ஞாயிறு ஒருவீடு ; ஒரு ஸ்வரஸ்தானம்.
சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம்.

சக்தியின் கலைகளிலே ஒளி யொன்று.
சக்தி வாழ்க.

2

காக்கை கத்துகிறது.
ஞாயிறு வையகமாகிய கழனியில் வயிரவொளியாகிய நீர் பாய்ச்சுகிறது.
அதனை மேகங்கள் வந்து மறைக்கின்றன.
அஃது மேகங்களை ஊடுருவிச் செல்லுகின்றது.
மேகமாகிய சல்லடையில் ஒளியாகிய புனலை வடிகட்டும் போது, மண்டி கீழும் தெளிவு மேலுமாக நிற்கின்றன.
கோழி கூவுகின்றது
எறும்பு ஊர்ந்து செல்கின்றது.
ஈ பறக்கிறது.
இளைஞன் சித்திரத்திலே கருத்துச் செலுத்துகிறான்.
இவையனைத்தும் மஹாசக்தியின் தொழில்.
அவள் நம்மைக் கர்ம யோகத்தில் நாட்டுக.
நமக்குச் செய்கை இயல்பாகுக.
ரஸமுள்ள செய்கை, இன்பமுடைய செய்கை,
வலிய செய்கை, சலிப்பில்லாத செய்கை,
விளையும் செய்கை, பரவும் செய்கை,
கூடிவரும் செய்கை, இறுதியற்ற செய்கை,
நமக்கு மஹாசக்தி அருள் செய்க.
கவிதை, காவல், ஊட்டுதல், வளர்த்தல்,
மாசெடுத்தல், நலந்தருதல், ஒளிபெய்தல்—
இச்செயல்கள் நமக்கு மஹாசக்தி அருள்புரிக.
அன்புநீர் பாய்ச்சி, அறிவென்னும் ஏருழுது,
சாத்திரக் களைபோக்கி, வேதப் பயிர்செய்து,
இன்பப் பயனறிந்து தின்பதற்கு மஹாசக்தியின் துணை வேண்டுகிறோம்.
அதனை அவள் தருக.

3

இருள் வந்தது, ஆந்தைகள் மகிழ்ந்தன.
காட்டிலே காதலனே நாடிச்சென்ற ஒரு பெண் தனியே கலங்கிப் புலம்பினாள்.
ஒளி வந்தது; காதலன் வந்தான். பெண் மகிழ்ந்தாள்.
பே யுண்டு மந்திரமுண்டு.
பே யில்லை, மந்திரமுண்டு.
நோயுண்டு, மருந்துண்டு.
அயர்வு கொல்லும். அதனை ஊக்கம் கொல்லும்.
அவித்தை கொல்லும். அதனை வித்தை கொல்லும்.
நாம் அச்சங் கொண்டோம். தாய் அதனை நீக்கி உறுதி தந்தாள்.
நாம் துயர் கொண்டோம்; தாய் அதை மாற்றிக் களிப்புத் தந்தாள்;
குனிந்த தலையை நிமிர்த்தினாள்;
சோர்ந்த விழியில் ஒளிசேர்த்தாள்;
கலங்கிய நெஞ்சிலே தெளிவு வைத்தாள்;
இருண்ட மதியிலே ஒளிகொடுத்தாள்.
மஹாசக்தி வாழ்க.

4

"மண்ணிலே வேலிபோடலாம். வானத்திலே வேலி போடலாமா?" என்றான் ராமகிருஷ்ண முனி.
ஜடத்தைக் கட்டலாம். சக்தியைக் கட்டலாமா?
உடலைக் கட்டலாம். உயிரைக் கட்டலாமா?
உயிரைக் கட்டு. உள்ளத்தைக் கட்டலாம்.
என்னிடத்தே சக்தி எனதுயிரிலும் உள்ளத்திலும் நிற்கின்றாள்.
சக்திக்கு அநந்தமான கோயில்கள் வேண்டும்.
தொடக்கமும் முடிவுமில்லாத காலத்திலே நிமிஷந்தோறும் அவளுக்குப் புதிய கோயில்கள் வேண்டும்.
இந்த அநந்தமான கோயில்களிலே ஒன்றுக்கு 'நான்' என்று பெயர்.

இதனை ஓயாமல் புதுப்பித்துக்கொண்டிருந்தால் சக்தி இதில் இருப்பாள்.

இது பழமைப்பட்டுப் போனவுடன், இதை விட்டு விடுவாள்.

இப்போது அவள் என்னுள்ளே நிறைந்திருக்கின்றாள்.

இப்போது எனதுயிரிலே வேகமும் நிறைவும் பொருந்தியிருக்கின்றன.

இப்போது எனதுடலிலே சுகமும் வலிமையும் அமைந்திருக்கின்றன.

இப்போது என்னுள்ளத்திலே தெளிவு நிலவிடுகின்றது.

இது எனக்குப் போதும்.

சென்றது கருதமாட்டேன், நாளைச் சேர்வது நினைக்க மாட்டேன்.

இப்போது என்னுள்ளே சக்தி கொலுவீற்றிருக்கின்றாள்.

அவள் நீடுழி வாழ்க.

அவளைப் போற்றுகின்றேன், புகழ்கின்றேன், வாய் ஓயாமல் வாழ்த்துகின்றேன்.

5

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?" போடலாம்.

மண்ணிலும் வானந்தானே நிரம்பி யிருக்கின்றது? மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா?

உடலைக் கட்டு. உயிரைக் கட்டலாம்.

உள்ளத்தைக் கட்டு. சக்தியைக் கட்டலாம்.

அநந்தசக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை.

என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது.

அதற்கு ஒரு வடிவம், ஓரளவு, ஒரு நியமம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நியமத்தை, அறியாதபடி, சக்தி பின்னே நின்று காத்துக்கொண்டிருக்கிறாள்.

மனிதஜாதி இருக்குமளவும் இதே தலையணை அழிவெய்தாதபடி காக்கலாம்;

அதனை அடிக்கடி புதுப்பித்துக்கொண்டிருந்தால், அந்த வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும்.

புதுப்பிக்கா விட்டால் அவ் வடிவம் மாறும்.

அழுக்குத் தலையணை, ஓட்டைத் தலையணை, பழைய தலையணை, —அதிலுள்ள பஞ்சையெடுத்துப் புதிய மெத்தையிலே போடு. மேலுறையைக் கந்தையென்று வெளியே எறி. அந்த வடிவம் அழிந்துவிட்டது.

வடிவத்தைக் காத்தால்,

சக்தியைக் காக்கலாம்;

அதாவது சக்தியை, அவ்வடிவத்திலே காக்கலாம்.

வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை.

எங்கும், எதனிலும், எப்போதும், எல்லாவிதத் தொழில் களும் காட்டுவது சக்தி.

வடிவத்தைக் காப்பது நன்று, சக்தியின் பொருட்டாக. சக்தி யைப் போற்றுதல் நன்று, வடிவத்தைக் காக்குமாறு.

ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை இழந்துவிடுவர்.

6

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.

"இனிய இசை சோகமுடையது" என்பது கேட்டுள்ளோம்.

ஆனால், இப் பிடாரன் ஒலிக்கும் இசை மிகவும் இனிய தாயினும் சோகரஸந் தவிர்ந்தது.

இஃதோர் பண்டிதன் தர்க்கிப்பதுபோலிருக்கின்றது.

ஒரு நாவலன் பொருள்நிறைந்த சிறிய சிறிய வாக்கியங்களை அடுக்கிக்கொண்டுபோவதுபோலிருக்கிறது.

இந்தப் பிடாரன் என்ன வாதாடுகிறான்?

"தானதந்தத் தானதந்தத் தா—தனத்
தானதந்தன தானதந்தன தா—
தந்தனத்தன தந்தனத்தன தா."

அவ்விதமாகப் பல வகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக வாசித்துக்கொண்டுபோகிறான். இதற்குப் பொரு ளென்ன?

ஒரு குழந்தை இதற்குப் பின்வருமாறு பொருள்சொல்லலாயிற்று :—

"காளிக்குப் பூச்சூட்டினேன். அதைக் கழுதையொன்று தின்ன வந்ததே.
பராசக்தியின் பொருட்டு இவ்வுடல் கட்டினேன்.
அதைப் பாவத்தால் விளைந்த நோய் தின்னவந்தது.
பராசக்தியைச் சரணடைந்தேன்.
நோய் மறைந்துவிட்டது.
பராசக்தி ஒளியேறி என் அகத்திலே விளங்கலாயினள்
அவள் வாழ்க."

7

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.
குழலிலே இசை பிறந்ததா ? தொளையிலே பிறந்ததா ?
பாம்புப் பிடாரன் மூச்சிலே பிறந்ததா ?
அவனுள்ளத்திலே பிறந்தது ; குழலிலே வெளிப்பட்டது.
உள்ளம் தனியே ஒலிக்காது. குழல் தனியே இசைபுரியாது ; உள்ளம் குழலிலே ஒட்டாது.
உள்ளம் மூச்சிலே ஒட்டும். மூச்சுக் குழலிலே ஒட்டும் குழல் பாடும்.
இஃது சக்தியின் லீலை.
அவள் உள்ளத்திலே பாடுகிறாள். அது குழலின் தொளையிலே கேட்கிறது.
பொருந்தாத பொருள்களைப் பொருத்திவைத்து அதிலே இசையுண்டாக்குதல்—சக்தி.
தொம்பப் பிள்ளைகள் பிச்சைக்குக் கத்துகின்றனர்.
பிடாரன் குழலையும் தொம்பக் குழந்தைகளின் குரலையும் யார் சுருதிசேர்த்துவிட்டது ? சக்தி.
"ஜரிகை வேணும் ; ஜரிகை !" என்றொருவன் கத்திக்கொண்டு போகிறான், அதே சுருதியில்.
ஆ ! பொருள் கண்டுகொண்டேன்.
பிடாரன் உயிரிலும், தொம்பக் குழந்தைகளின் உயிரிலும் ஜரிகைக்காரன் உயிரிலும் ஒரே சக்தி விளையாடுகின்றது.

கருவி பல. பாணன் ஒருவன்.
தோற்றம் பல. சக்தி ஒன்று.
அஃது வாழ்க.

8

பராசக்தியைப் பாடுகின்றோம்.
இவள் எப்படி உண்டாயினள்? அதுதான் தெரியவில்லை.
இவள் தானேபிறந்த தாய்; 'தான்' என்ற பரம்பொருளினிடத்தே.
இவள் எதிலிருந்து தோன்றினள்? 'தான்' என்ற பரம் பொருளிலிருந்து எப்படித் தோன்றினள்? தெரியாது.
படைப்பு நமது கண்ணுக்குத் தெரியாது; அறிவுக்கும் தெரியாது.
சாவு நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்குத் தெரியாது.
வாழ்க்கை நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்கும் தெரியும்.
வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்; இதன் பயன் இன்பமெய்தல்.
உள்ளம் தெளிந்திருக்க; உயிர் வேகமும் சூடும் உடையதாக; உடல் அமைதியும் வலிமையும் பெற்றிருக்க.
மஹாசக்தியின் அருள்பெறுதலே வாழ்தல். நாம் வாழ்கின்றோம்.
நம்மை வாழ்வுறச்செய்த மஹாசக்தியை மீட்டும் வாழ்த்துகின்றோம்.

---

30. காற்று

1

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல். தென்னோலை.
குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கிற் கழிகளை சாதாரணக் கயிற்றால் கட்டி மேலே தென்னங்கிடுகுகளை விரித்திருக்கிறது.
ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் மிச்சக்கயிறு தொங்குகிறது.

ஒரு சாண்கயிறு.

இந்தக் கயிறு, ஒருநாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. பார்த்தால் துளிகூடக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

சில சமயங்களில் அசையாமல் 'உம்' மென்றிருக்கும். கூப்பிட்டாற்கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை. 'குஷால்' வழியிலிருந்தது.

எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் ஸ்நேஹம். நாங்கள் அடிக்கடி வார்த்தைசொல்லிக்கொள்வதுண்டு.

"கயிற்றினிடத்தில் பேசினால், அது மறுமொழி சொல்லுமா?" பேசிப்பார், மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை.

ஆனால் அது ஸந்தோஷமாக இருக்கும் ஸமயம் பார்த்து வார்த்தை சொல்லவேண்டும். இல்லாவிட்டால், முகத்தைத் தூக்கிக்கொண்டு சும்மா இருந்துவிடும், பெண் களைப்போல.

எது எப்படியிருந்தாலும், இந்தவீட்டுக் கயிறு பேசும். அதில் ஸந்தேகமே யில்லை.

ஒரு கயிறு சொன்னேன்? இரண்டு கயிறு உண்டு.

ஒன்று ஒரு சாண். மற்றொன்று முக்கால் சாண்.

ஒன்று ஆண்; மற்றொன்று பெண்; கணவனும், மனைவியும்.

அவை யிரண்டும் ஒன்றையொன்று காமப்பார்வைகள் பார்த்துக்கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டும், வேடிக்கைப்பேச்சுப் பேசிக்கொண்டும் ரஸப்போக்கிலே யிருந்தன.

அத்தருணத்திலே நான் போய்ச்சேர்ந்தேன்.

ஆண் கயிற்றுக்குக் 'கந்தன்' என்று பெயர்.

பெண் கயிற்றுக்குப் பெயர் 'வள்ளியம்மை'.

(மனிதர்களைப் போலவே துண்டுக் கயிறுகளுக்கும் பெயர் வைக்கலாம்.)

கந்தன் வள்ளியம்மைமீது கையைப்போட வருகிறது. வள்ளியம்மை சிறிது பின்வாங்குகிறது. அந்த ஸந்தர்ப்பத்திலே நான் போய்ச்சேர்ந்தேன்.

"என்ன, கந்தா, ஸௌக்கியந்தானே? ஒரு வேளை, நான் ஸந்தர்ப்பந் தவறி வந்துவிட்டேனே, என்னவோ? போய், மற்றொருமுறை வரலாமா?" என்று கேட்டேன்.

அதற்குக் கந்தன் :—"அட போடா, வைதிக மனுஷன் ! உன் முன்னேகூட லஜ்ஜையா ? என்னடி, வள்ளி, நமது ஸல்லாபத்தை ஐயர் பார்த்ததிலே உனக்குக் கோபமா?" என்றது.

"சரி, சரி, என்னிடத்தில் ஒன்றும் கேட்கவேண்டாம்" என்றது வள்ளியம்மை.

அதற்குக் கந்தன், கடகடவென்று சிரித்துக் கைதட்டிக் குதித்து, நான் பக்கத்திலிருக்கும்போதே வள்ளியம்மை யைக் கட்டிக்கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக்கீச்சென்று கத்தலாயிற்று. ஆனல், மனதுக்குள்ளே வள்ளியம்மைக்கு ஸந்தோஷம். நாம் சுகப்படுவதைப் பிறர் பார்ப்பதிலே நமக்கு ஸந்தோஷந் தானே ?

இந்த வேடிக்கை பார்ப்பதிலே எனக்கும் மிகவும் திருப்தி தான், உள்ளதைச் சொல்லிவிடுவதிலே என்ன குற்றம் ? இளமையின் ஸல்லாபம் கண்ணுக்குப் பெரியதோர் இன்பமன்றே ?

வள்ளியம்மை அதிகக் கூச்சலிடவே, கந்தன் அதைவிட்டு விட்டது.

சில க்ஷணங்களுக்குப்பின் மறுபடிபோய்த் தழுவிக் கொண்டது.

மறுபடியும் கூச்சல், மறுபடியும் விடுதல்; மறுபடியும் தழுவல், மறுபடியும் கூச்சல்; இப்படியாக நடந்துகொண்டே வந்தது.

"என்ன, கந்தா, வந்தவனிடத்தில் ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேனென்கிறயே ? வேறொரு சமயம் வருகிறேன், போகட்டுமா ?" என்றேன்.

"அட போடா ! வைதிகம் ! வேடிக்கைதானே பார்த்துக் கொண்டிருக்கிறாய். இன்னும் சிறிதுநேரம் நின்று கொண்டிரு. இவளிடம் சில வ்யவஹாரங்கள் தீர்க்க வேண்டி யிருக்கிறது. தீர்ந்தவுடன் நீயும் நானும் சில விஷயங்கள் பேசலாம் என்றிருக்கிறேன். போய் விடாதே, இரு" என்றது.

நின்று மேன்மேலும் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சிறிதுநேரம் கழிந்தவுடன், பெண்ணும் இன்ப மயக்கத்திலே நான் நிற்பதை மறந்து நாணத்தை விட்டுவிட்டது.

உடனே பாட்டு. நேர்த்தியான துக்கடாக்கள். ஒரு வரிக்கு ஒரு வர்ணமெட்டு.

இரண்டே 'ஸங்கதி'. பின்பு மற்றொரு பாட்டு.

கந்தன் பாடிமுடிந்தவுடன், வள்ளி. இது முடிந்தவுடன், அது. மாற்றி மாற்றிப் பாடி—கோலாஹலம்!

சற்றுநேரம் ஒன்றையொன்று தொடாமல் விலகிநின்று பாடிக்கொண்டே யிருக்கும். அப்போது வள்ளியம்மை தானுகவேபோய்க் கந்தனைத் தீண்டும்.

அது தழுவிக்கொள்ளவரும். இது ஓடும். கோலாஹலம்!

இங்ஙனம் நெடும்பொழுது சென்றபின் வள்ளியம்மைக்குக் களியேறி விட்டது.

நான் பக்கத்து வீட்டிலே தாகத்துக்கு ஜலம் குடித்துவிட்டு வரப் போனேன்.

நான் போவதை அவ்விரண்டு கயிறுகளும் கவனிக்கவில்லை.

நான் திரும்பிவந்து பார்க்கும்போது வள்ளியம்மை தூங்கிக் கொண்டிருந்தது.

கந்தன் என் வரவை எதிர்நோக்கி யிருந்தது.

என்னைக் கண்டவுடன், "எங்கடா போயிருந்தாய், வைதிகம்! சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாயே" என்றது.

"அம்மா நல்ல நித்திரைபோலிருக்கிறதே?" என்று கேட்டேன்.

ஆஹா! அந்த க்ஷணத்திலே கயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டு என்முன்னே நின்ற தேவனுடைய மஹிமையை என்னென்று சொல்வேன்!

காற்றுத் தேவன் தோன்றினன்.

அவனுடல் விம்மி விசாலமாக இருக்குமென்று நினைத்திருந்தேன்.

வயிர ஊசிபோல் ஒளிவடிவமாக இருந்தது.

"நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி."

காற்றே, போற்றி. நீயே கண்கண்ட பிரமம்.

அவன் தோன்றியபொழுதிலே வானமுழுதும் ப்ராணசக்தி நிரம்பிக் கனல்வீசிக்கொண்டிருந்தது.

ஆயிரமுறை அஞ்சலிசெய்து வணங்கினேன்.

காற்றுத்தேவன் சொல்வதாயினன் :—''மகனே, ஏதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதா என்று கேட்கிறாயா? இல்லை. அது செத்துப்போய்விட்டது. நான் ப்ராணசக்தி.

என்னுடனே உறவுகொண்ட உடல் இயங்கும். என்னுற வில்லாதது சவம். நான் ப்ராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்தது'; சுகம்பெற்றது. சிறிது கூப்பெய்தியவுடனே அதை உறங்க—இறக்க—விட்டு விட்டேன். துயிலும் சாவுதான். சாவும் துயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும்.

நான் விழிக்கச்செய்கிறேன். அசையச்செய்கிறேன். நான் சக்திகுமாரன், என்னை வணங்கி வாழ்க'' என்றான்.

"நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி. த்வாமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி.''

2

நடுக் கடல். தனிக் கப்பல்.

வானமே சினந்துவருவதுபோன்ற புயற்காற்று.

அலைகள் சாரிவீசுகின்றன, நிர்த்தூளிப்படுகின்றன.

அவை மோதி வெடிக்கின்றன, சூறையாடுகின்றன.

கப்பல் நிர்த்தனஞ்செய்கிறது.;

மின் வேகத்தில் ஏற்றப்படுகின்றது ;

பாறையில் மோதிவிட்டது.

ஹதம் !

இருநூறு உயிர்கள் அழிந்தன.

அழியுமுன், அவை, யுகமுடிவின் அனுபவம் எங்ஙனமிருக்கு மென்பதை அறிந்துகொண்டு போயின.

ஊழி முடிவும் இப்படியேதானிருக்கும்.

உலகம் ஓடுநீராகிவிடும் ; தீ நீர்.

சக்தி காற்றாகிவிடுவாள்.

சிவன் வெறியிலே யிருப்பான்.

இவ்வுலகம் ஒன்றென்பது தோன்றும்.
அஃது சக்தியென்பது தோன்றும்.
அவள் பின்னே சிவன் நிற்பது தோன்றும்.
காற்றே பந்தற்கயிறுகளே அசைக்கின்றான். அவற்றில் உயிர் பெய்கிறான்.
காற்றே நீரில் சூறாவளி காட்டி, வானத்தில் மின்னேற்றி, நீரை நெருப்பாக்கி, நெருப்பை நீராக்கி, நீரைத் தூளாக்கித் தூளை நீராக்கிச் சண்டமாருதம் செய்கின்றான்.
காற்றே யுகமுடிவு செய்கின்றான்.
காற்றே காக்கின்றான்.
அவன் நம்மைக் காத்திடுக.
"நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி."

3

காற்றுக்குக் காது நிலே.
சிவனுடைய காதிலே காற்று நிற்கிறான்.
காற்றில்லாவிட்டால் சிவனுக்குக் காது கேட்காது.
காற்றுக்குக் காதில்லே.
அவன் செவிடன்.
காதுடையவன் இப்படி இரைச்சலிடுவானே?
காதுடையவன் மேகங்களே ஒன்றோடொன்று மோதவிட்டு, இடியிடிக்கச்சொல்லி வேடிக்கை பார்ப்பானே?
காதுடையவன் கடலைக் கலக்கி விளையாடுவானே?
காற்றை, ஒலியை, வலிமையை வணங்குகின்றோம்.

4

பாலைவனம்.
மணல், மணல், மணல். பல யோஜனை தூரம் ஒரே மட்டமாக நான்கு திசையிலும் மணல்.
மாலை நேரம்.
அவ்வனத்தின் வழியே ஒட்டைகளின் மீதேறி ஒரு வியாபாரக் கூட்டத்தார் போகிறார்கள்.
வாயு சண்டனாகி வந்துவிட்டான்.

பாலைவனத்து மணல்களெல்லாம் இடைவானத்திலே சுழல்கின்றன.
ஒரு க்ஷணம், யம வாதனை. வியாபாரக்கூட்ட முழுதும் மணலிலே அழிந்துபோகிறது.
வாயு கொடியோன். அவன் ருத்ரன். அவனுடைய ஓசை அச்சந்தருவது.
அவனுடைய செயல்கள் கொடியன.
காற்றை வாழ்த்துகின்றேம்.

5

வீமனும் அனுமானும் காற்றின் மக்கள் என்று புராணங்கள் கூறும்.
உயிருடையனவெல்லாம் காற்றின் மக்களே என்பது வேதம்.
உயிர்தான் காற்று.
உயிர் பொருள், காற்று அதன் செய்கை.
பூமித்தாய் உயிரோடிருக்கிறாள்.
அவளுடைய மூச்சே பூமியிலுள்ள காற்று.
காற்றே உயிர். அவன் உயிர்களை அழிப்பவன்.
காற்றே உயிர். எனவே, உயிர்கள் அழிவதில்லை.
சிற்றுயிர் பேருயிரோடு சேர்கிறது.
மரண மில்லை.
அகில வுலகமும் உயிர் நிலையே.
தோன்றுதல், வளர்தல், மாறுதல், மறைதல்—எல்லாம் உயிர்ச் செயல்.
உயிரை வாழ்த்துகின்றேம்.

6

காற்றே, வா.
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா.
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த ப்ராண-ரஸத்தை எங்களுக்குக் கொண்டுகொடு.
காற்றே, வா.

எமது உயிர்–நெருப்பை நீடித்துநின்று நல்லொளிதருமாறு நன்முக வீசு.
சக்தி குறைந்துபோய, அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம் நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுக்கள் பாடுகிறோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்.

7

சிற்றெறும்பைப் பார்.
எத்தனை சிறியது!
அதற்குள்ளே கை, கால், வாய், வயிறு எல்லா அவயவங்களும் கணக்காக வைத்திருக்கிறது.
யார் வைத்தனர்? மஹா சக்தி.
அந்த உறுப்புக்களெல்லாம் நேராகவே தொழில்செய்கின்றன.
எறும்பு உண்ணுகின்றது, உறங்குகின்றது, மணம்செய்துகொள்கின்றது, குழந்தை பெறுகிறது, ஓடுகிறது, தேடுகிறது, போர் செய்கிறது, நாடு காக்கிறது.
இதற்கெல்லாம் காற்றுத்தான் ஆதாரம்.
மஹாசக்தி காற்றைக்கொண்டுதான் உயிர்விளையாட்டு விளையாடுகின்றாள்.
காற்றைப் பாடுகிறோம்.
அஃது அறிவிலே துணிவாக நிற்பது;
உள்ளத்திலே விருப்பு வெறுப்புக்களாவது.
உயிரிலே உயிர் தாளுக நிற்பது.
வெளியுலகத்திலே அதன் செய்கையை நாம் அறிவோம், நாம் அறிவதில்லை.
காற்றுத் தேவன் வாழ்க.

8

மழைக் காலம்.
மாலை நேரம்.
குளிர்ந்த காற்று வருகிறது.
நோயாளி உடம்பை மூடிக்கொள்ளுகிறான்.
பயனில்லை.
காற்றுக்கு அஞ்சி உலகத்திலே இன்பத்துடன் வாழமுடியாது.
பிராணன் காற்றுயின் அதற்கு அஞ்சி வாழ்வதுண்டோ ?
காற்று நம்மீது வீசுக.
அது நம்மை நோயின்றிக் காத்திடுக.
மலைக்காற்று நல்லது.
கடற்காற்று மருந்து.
வான் காற்று நன்று.
ஊர்க்காற்றை மனிதர் பகைவனுக்கிவிடுகின்றனர்.
அவர்கள் காற்றுத் தெய்வத்தை நேரே வழிபடுவதில்லை.
அதனால் காற்றுத்தேவன் சினமெய்தி அவர்களை அழிக்கின்றான்.
காற்றுத் தேவனை வணங்குவோம்.
அவன் வரும் வழியிலே சேறு தங்கலாகாது, நாற்றம் இருக்கலாகாது, அழுகின பண்டங்கள் போடலாகாது, புழுதி படிந்திருக்கலாகாது. எவ்விதமான அசுத்தமும் கூடாது.
காற்று வருகின்றான்.
அவன்வரும் வழியை நன்றாகத் துடைத்து நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம்.
அவன்வரும் வழியிலே சோலைகளும், பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்.
அவன்வரும் வழியிலே கர்ப்பூரம் முதலிய நறும் பொருள்களைக் கொளுத்தி வைப்போம்.
அவன் நல்ல மருந்தாக வருக.
அவன் நமக்கு உயிராகி வருக ;
அமுதமாகி வருக.
காற்றை வழிபடுகின்றோம்.
அவன் சக்தி குமாரன். மஹாராணியின் மைந்தன்.

அவனுக்கு நல்வரவு கூறுகின்றோம்.
அவன் வாழ்க.

9

காற்றே, வா. மெதுவாக வா.
ஜன்னல் கதவை அடித்து உடைத்துவிடாதே.
காயிதங்களை யெல்லாம் எடுத்து விசிறி எறியாதே.
அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளிவிடாதே.
பார்த்தையா ? இதோ, தள்ளிவிட்டாய்.
புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்துவிட்டாய்.
மறுபடி மழையைக் கொண்டுவந்து சேர்த்தாய்.
வலி யிழந்தவற்றைத் தொல்லைப்படுத்தி வேடிக்கை பார்ப்பதிலே நீ மஹா ஸமர்த்தன்.
நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை,
நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர்,
நொய்ந்த உள்ளம்—இவற்றைக் காற்றுத் தேவன் புடைத்து நொறுக்கிவிடுவான்.
சொன்னாலும் கேட்கமாட்டான்.
ஆதலால், மானிடரே வாருங்கள்.
வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்.
கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்.
உடலை உறுதி கொள்ளப் பழகுவோம்.
உயிரை வலிமையுற நிறுத்துவோம்.
உள்ளத்தை உறுதிசெய்வோம்.
இங்ஙனம் செய்தால், காற்று நமக்குத் தோழனாகிவிடுவான்.
காற்று மெலிய தீயை அவித்துவிடுவான் ;
வலிய தீயை வளர்ப்பான்.
அவன் தோழமை நன்று.
அவனை நித்தமும் வாழ்த்துகின்றோம்.

10

மழை பெய்கிறது,
ஊர் முழுதும் ஈரமாகிவிட்டது.

தமிழ் மக்கள், எருமைகளைப்போல, எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள், ஈரத்திலேயே உட்கார்ந்திருக்கிறார்கள், ஈரத்திலேயே நடக்கிறார்கள், ஈரத்திலேயே படுக்கிறார்கள்; ஈரத்திலேயே சமையல், ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்படமாட்டான்.

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.

தமிழ் மக்களிலே பலருக்கு ஜ்வரம் உண்டாகிறது.

நாள்தோறும் சிலர் இறந்துபோகிறார்கள். மிஞ்சி யிருக்கும் மூடர் 'விதிவசம்' என்கிறார்கள்.

ஆமடா, விதிவசந் தான்.

'அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை' என்பது ஈசனுடைய விதி.

சாஸ்த்ரமில்லாத தேசத்திலே நோய்கள் வீளைவது விதி.

தமிழ் நாட்டிலே சாஸ்த்ரங்களில்லை. உண்மையான சாஸ்த்ரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை மூடரிடங் காட்டி வயிறுபிழைத்துவருகிறார்கள்.

குளிர்ந்த காற்றையா விஷ மென்று நினைக்கிறாய்?

அது அமிழ்தம், நீ ஈரமில்லாத வீடுகளில் நல்ல உடைகளுடன் குடியிருப்பாயானால.

காற்று நன்று.

அதனை வழிபடுகின்றோம்.

11

காற்றென்று சக்தியைக் கூறுகின்றோம்.

எற்றுகிற சக்தி, புடைக்கிற சக்தி, மோதுகிற சக்தி, சுழற்றுவது, ஊதுவது.

சக்தியின் பல வடிவங்களிலே காற்றும் ஒன்று.

எல்லாத் தெய்வங்களும் சக்தியின் கலைகளேயாம்.

சக்தியின கலைகளையே தெய்வங்க ளென்கின்றோம.

காறறு சக்தி குமாரன.

அவனை வழிபடுகின்றோம்.

12

காக்கை பறந்து செல்லுகிறது ;
காற்றின் அலைகளின்மீது நீந்திக்கொண்டு போகிறது.
அலைகள்போலிருந்து, மேலே காக்கை நீந்திச்செல்வதற்கு இடமாகும் பொருள் யாது ? காற்று.
அன்று, அஃதன்று காற்று ;
அது காற்றின் இடம். வாயு நிலயம்.
கண்ணுக்குத் தெரியாதபடி அத்தனை நுட்பமாகிய பூதத் தூள்களே (காற்றடிக்கும் போது) நம்மீது வந்து மோதுகின்றன.
அத்தூள்களைக் காற்றென்பது உலகவழக்கு.
அவை வாயு வல்ல, வாயு ஏறிவரும் தேர்.
பனிக்கட்டியிலே சூடேற்றினால் நீராக மாறிவிடுகிறது. நீரிலே சூடேற்றினால் 'வாயு' வாகிவிடுகிறது.
தங்கத்திலே சூடேற்றினால் திரவமாக உருகிவிடுகிறது. அத் திரவத்திலே சூடேற்றினால், 'வாயு'வாகின்றது.
இங்ஙனமே, உலகத்துப் பொருள்களனைத்தையும் 'வாயு' நிலைக்குக் கொண்டுவந்துவிடலாம்.
இந்த 'வாயு' பௌதிகத் தூள்.
இதனை ஊர்ந்துவரும் சக்தியையே நாம் காற்றுத்தேவ னென்று வணங்குகிறோம்.
காக்கை பறந்துசெல்லும் வழி காற்று.
அந்த வழியை இயக்குபவன் காற்று.
அதனை அவ்வழியிலே தூண்டிச்செல்பவன் காற்று.
அவனை வணங்குகின்றோம்.
உயிரைச் சரணடைகின்றோம்.

13

அசைகின்ற இலையிலே உயிர் நிற்கிறதா ? ஆம்.
இரைகின்ற கடல்-நீர் உயிரால் அசைகின்றதா ? ஆம்.
கூரையிலிருந்து போடும் கல் தரையிலே விழுகின்றது. அதன் சலனம் எதனால் நிகழ்வது ? உயிருடைமையால்.
ஓடுகின்ற வாய்க்கால் எந்த நிலையில் உளது ? உயிர் நிலையில்.

ஊமையாக இருந்த காற்று ஊதத்தொடங்கிவிட்டதே! அதற்கு என்ன நேரிட்டிருக்கிறது? உயிர் நேரிட்டிருக்கிறது.

வண்டியை மாடு இழுத்துச் செல்கிறது. அங்கு மாட்டின் உயிர் வண்டியிலும் ஏறுகிறது. வண்டி செல்லும்போது உயிருடனேதான் செல்கிறது.

காற்றுடி? உயிருள்ளது.

நீராவி-வண்டி உயிருள்ளது! பெரிய உயிர்.

யந்திரங்களெல்லாம் உயிருடையன.

பூமிப்பந்து இடைவிடாமல் மிக்க விசையுடன் சுழல்கின்றது.

அவள் தீராத உயிருடையவள், பூமித்தாய்.

எனவே, அவள் திருமேனியிலுள்ள ஒவ்வொன்றும் உயிர் கொண்டதேயாம்.

அகில முழுதும் சுழலுகிறது.

சந்திரன் சுழல்கின்றது. ஞாயிறு சுழல்கின்றது.

கோடி கோடி கோடி கோடி யோஜனை தூரத்துக்கப்பாலும், அதற்கப்பாலும், அதற்கப்பாலும் சிதறிக்கிடக்கும் வானத்து மீன்களெல்லாம் ஓயாது சுழன்றுகொண்டே தானிருக்கின்றன.

எனவே, இவ் வையகம் உயிருடையது.

வையகத்தின் 'உயிரை'யே காற்றென்கிறோம்.

அதனை முப்போதும் போற்றி வாழ்த்துதல்செய்கின்றோம்.

14

காற்றைப் புகழ நம்மால் முடியாது.

அவன் புகழ் தீராது.

அவனை ரிஷிகள் "ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம" என்று போற்றுகிறார்கள்.

ப்ராண வாயுவைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காத்திடுக.

அபானனைத் தொழுகின்றோம், அவன் நம்மைக் காக்க.

வ்யானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க.

உதானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க.

காற்றின் செயல்களையெல்லாம் பரவுகின்றோம்.

உயிரை வணங்குகின்றோம்.
உயிர் வாழ்க.

15

உயிரே, நினது பெருமை யாருக்குத் தெரியும்?
நீ கண்கண்ட தெய்வம்.
எல்லா விதிகளும் நின்னுல் அமைவன.
எல்லா விதிகளும் நின்னுல் அழிவன.
உயிரே,
நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.
தோன்றும் பொருள்களின் தோற்றநெறி நீ.
மாறுவனவற்றை மாற்றுவிப்பது நின் தொழில்.
பறக்கின்ற பூச்சி, கொல்லுகின்ற புலி, ஊர்கின்ற புழு, இந்த பூமியிலுள்ள எண்ணற்ற உயிர்கள், எண்ணற்ற உலகங்களிலுள்ள எண்ணேயில்லாத உயிர்த்தொகைகள்- இவையெல்லாம் நினது விளக்கம்.
மண்ணிலும், நீரிலும், காற்றிலும் நிரம்பிக்கிடக்கும் உயிர்களைக் கருதுகின்றோம்.
காற்றிலே ஒரு சதுர-அடி வரம்பில் லக்ஷக்கணக்கான சிறிய ஜந்துக்கள் நமது கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கின்றன.
ஒரு பெரிய ஜந்து; அதன் உடலுக்குள் பல சிறிய ஜந்துக்கள்; அவற்றுள் அவற்றிலுஞ் சிறிய பல ஜந்துக்கள்; அவற்றுள் இன்னுஞ் சிறியவை—இங்ஙனம் இவ் வையகமுழுதிலும் உயிர்களைப் பொதிந்துவைத்திருக்கிறது.
மஹத்—அதனிலும் பெரிய மஹத்—அதனிலும் பெரிது—அதனிலும் பெரிது—
அணு—அதனிலும் சிறிய அணு—அதனிலும் சிறிது—அதனிலும் சிறிது—
இரு வழியிலும் முடிவில்லை. இருபுறத்திலும் அநந்தம்.
பலவர்களே, காலையில் எழுந்தவுடன் உயிர்களையெல்லாம் போற்றுவோம்.
"நமஸ்தே, வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி."

---

31. கடல்

1

கடலே காற்றைப் பரப்புகின்றது.
விரைந்து சுழலும் பூமிப்பந்தில் பள்ளங்களிலே தேங்கியிருக்கும் கடல்-நீர் அந்தச் சுழற்சியிலே தலைகீழாகக் கவிழ்ந்து திசைவெளியில் ஏன் சிதறிப் போய்விடவில்லை?
பராசக்தியின் ஆணை.
அவள் நமது தலைமீது கடல் கவிழ்ந்துவிடாதபடி ஆதரிக்கிறாள்.
அவள் திருநாமம் வாழ்க.
கடல் பெரிய ஏரி, விசாலமான குளம், பெருங் கிணறு.
கிணறு நம் தலையிலே கவிழ்கிறதா?
அது பற்றியே கடலும் கவிழவில்லை.
பராசக்தியின் ஆணை.
அவள் மண்ணிலே ஆகர்ஷணத் திறமையை நிறுத்தினாள்.
அது பொருள்களை நிலைப்படுத்துகின்றது.
மலை நமது தலைமேலே புரளவில்லை.
கடல் நமது தலைமேலே கவிழவில்லை.
ஊர்கள் கலைந்து போகவில்லை.
உலகம் எல்லா வகையிலும் இயல்பெறுகின்றது.
இஃதெல்லாம் அவளுடைய திருவருள்.
அவள் திருவருளை வாழ்த்துகின்றோம்.

2

வெம்மைமிகுந்த பிரதேசங்களிலிருந்து வெம்மைகுன்றிய பிரதேசங்களுக்குக் காற்று ஓடிவருகிறது.
அங்ஙனம் ஓடிவரும்போது காற்று மேகங்களையும் ஓட்டிக் கொண்டு வருகிறது.
இவ்வண்ணம் நமக்குவரும் மழை கடற்பாரிசங்களிலிருந்தே வருகின்றது.
காற்றே, உயிர்க்கடலிலிருந்து எங்களுக்கு நிறைய உயிர் மழை கொண்டு வா.

உனக்குத் தூப தீபங்கள் ஏற்றிவைக்கிறேம்.
வருணு, இந்திரா, நீவிர் வாழ்க.
இப்போது நல்ல மழை பெய்யும்படி அருள்புரியவேண்டும்.
எங்களுடைய புலங்களெல்லாம் காய்ந்துபோய்விட்டன.
கூட்டின் மிகுதியால் எங்கள் குழந்தைகளுக்கும் கன்று காலி களுக்கும் நோய்வருகிறது. அதனை மாற்றியருள வேண்டும்.
பகல் நேரங்களிலே அனல் பொறுக்கமுடியவில்லை.
மனம் 'ஹா ஹா' வென்று பறக்கிறது.
பறவைக ளெல்லாம் வாட்டமெய்தி நிழலுக்காகப் பொந்து களில் மறைந்து கிடக்கின்றன.
பல தினங்களாக, மாலைதோறும் மேகங்கள்வந்து கூடு கின்றன.
மேக மூட்டத்தால் காற்று நின்றுபோய், ஓரிலைகூட அசை யாமல், புழுக்கம் கொடிதாக இருக்கிறது.
சிறிதுபொழுது கழிந்தவுடன் பெரியகாற்றுக்கள் வந்து மேகங்களை அடித்துத்துரத்திக்கொண்டு போகின்றன. இப்படிப் பலநாட்களாக ஏமாந்துபோகிறேம்.
இந்திரா, வருணு, அர்யமா, பகா, மித்திரா, உங்கள் கருணை யைப் பாடுகிறேன்.
எங்கள் தாபமெல்லாந் தீர்ந்து உலகம் தழைக்குமாறு இன்ப மழை பெய்தல் வேண்டும்.

———

32. ஜகத் சித்திரம்

(சிறு நாடகம்)

முதல் காட்சி

இடம்—மலையடி வாரத்தில் ஒரு காளி கோயில்.
நேரம்—நடுப்பகல்.
காக்கை யரசன்—(கோயிலை எதிர்த்த தடாகத்தின் இடையிலிருந்த தெப்பமண்டபத்தின் உச்சியில் ஏறி யுட்கார்ந்துகொண்டு ஸூர்யனை நோக்கிச் சொல்லு கிறான் :—)

" எங்கோ வாழ் !
நீல மலைகள் நிரம்ப அழகியன.
வான மழகியது ; வான்வெளி இனிது.
வான வெளியை மருவிய நின்னெளி
இனிய வற்று ளெல்லாம் இனிது.
' எங்கே,' ' எங்கோ,' எனவும் ; அன்றி
' கிலுகிலு கிலுகி ' லெனவும் ; ' கிக்கீ ;
கிக்கீ ' யென்றும் ; ' கேக்க,' ' கேக்க '
' கேட்க, கேட்க ' எனவும் ; ' கெக்கெக்கே '—
' குக்குக் குக்குக் குக்குக் குக்குக்
குக்கூவே !' என்றும் ; ' கீச்கீச், கீச்கீச்,'
' கிசு,கிசு, கிசுகீச் ' என்றும் ; ' ரங்க, ரங்க '—
என்றும் பல்லாயிர வகையினில் இசைக்கும்
குயில்களும், கிளிகளும், குலவுபல ஜாதிப்
புட்களும் இனிய பூங்குர லுடையன.
எனினும்,
இத்தனையின்பத் திடையே, உயிர்க் குலத்தின்
உளத்தே மாத்திரம் இன்ப முறவில்லை.
இஃதென்னே !—காக்கா ! காக்கா ; எங்கோவாழ் !"
இதைக் கேட்டு, மற்றப் பக்ஷிகளெல்லாம் கத்துகின்றன :—

" ஆம், ஆம், ஆமாம், ஆமாம். ஆமாமடா ! ஆமா மடா ! ஆமாம். எங்கோ வாழ். எங்கோ வாழ். நன்றாக உரைத்தாய். மனந்தான் சத்துரு. வேறு நமக்குப் பகையே கிடையாது. மனந்தான் நமக்குள்ளேயே உட்பகையாக இருந்துகொண்டு, நம்மை வேரறுக்கிறது. அடுத்துக் கெடுக்கிறது.

மனந்தான் பகை.

அதைக் கொத்துவோம் வாருங்கள். அதைக் கிழிப்போம் வாருங்கள். அதை வேட்டையாடுவோம் வாருங்கள்."

இரண்டாம் காட்சி

வானுலகம்—இந்திர ஸபை

தேவேந்திரன் கொலுவீற்றிருக்கிறான்.

தேவ ஸேவகன் :—தேவ தேவா !

இந்திரன் :—சொல்.

தேவ ஸேவகன் :—வெளியே நாரதர் வந்து காத்திருக்கிறார். தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்.

இந்திரன் :—வருக.

(நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்).

"நாராயண, நாராயண, நாராயண, ஹரி, ஹரி, நாராயண, நாராயண"

இந்திரன் :—நாரதரே ! நாராயணன் எங்கிருக்கிறான் ?

நாரதர் :—நீ அவனைப் பார்த்தது கிடையாதோ ?

இந்திரன் :—கிடையாது.

நாரதர் :—ஸர்வ பூதங்களிலும் இருக்கிறான்.

இந்திரன் :—நரகத்திலிருக்கிறானா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—துன்பத்திலிருக்கிறானா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—மரணத்திலிருக்கிறானா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—உங்களுடைய ஸர்வ நாராயண ஸித்தாந்தத்தின் துணிவு யாது ?

நாரதர் :—எல்லா வஸ்துக்களும், எல்லா லோகங்களும், எல்லா நிலைமைகளும், எல்லாத் தன்மைகளும், எல்லா சக்திகளும், எல்லா ரூபங்களும், எல்லாம் ஒன்றுக்கொன்று ஸமானம்.

இந்திரன் :—நீரும் கழுதையும் ஸமானந்தானா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—அமிருத பானமும், விஷபானமும் ஸமானமா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—ஸாதுவும், துஷ்டனும் ஸமானமா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—அசுரர்களும், தேவர்களும் ஸமானமா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—ஞானமும், அஜ்ஞானமும் ஸமானமா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—ஸுகமும், துக்கமும் ஸமானமா ?

நாரதர் :—ஆம்.

இந்திரன் :—அதெப்படி ?

நாரதர் :—ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்—

(பாடுகிறார்) நாராயண, நாராயண, நாராயண, நாராயண.

———

மூன்றும் காட்சி

இடம் :—மண்ணுலகத்தில் ஒரு மலையடிவாரத்தில் ஒரு காளி கோயிலுக் கெதிரே சோலையில்.

கிளி பாடுகிறது :—தைர்யா, தைர்யா, தைர்யா—

தன்மனப் பகையைக் கொன்று
தமோ குணத்தை வென்று
உள்ளக் கவலை யறுத்து
ஊக்கந் தோளிற் பொறுத்து
மனதில் மகிழ்ச்சி கொண்டு
மயக்க மெலாம் விண்டு
ஸந்தோஷத்தைப் பூண்டு
தைர்யா, ஹுக்கும், ஹுக்கும் !
ஹுக்கும், ஹுக்கும் !
ஆமடா, தோழா !

ஆமாமடா,
எங்கோவா, எங்கோவா !
தைர்யா, தைர்யா, தைர்யா !

குயில்கள் :—சபாஷ் ! சபாஷ் ! சபாஷ் !

குருவிகள் :—'டிர்ர்ர்ர்ர்ர்ர்', 'டிர்ர்ர்ர்'

நாகணவாய் :—ஜீவ, ஜீவ, ஜீவ, ஜீவ, ஜீவ, ஜீவ.

குருவிகள் :—சிவ, சிவ, சிவ, சிவ, சிவ, சிவா, சிவ சிவா.

காக்கை :—எங்கோ வாழ் ! எங்கோ வாழ் !

கிளி :—கேளீர், தோழர்களே ! இவ்வுலகத்தில் தற்கொலையைக் காட்டிலும் பெரிய குற்றம் வேறில்லை. தன்னைத்தான் மனத்தால் துன்புறுத்திக் கொள்வதைக் காட்டிலும் பெரிய பேதைமை வேறில்லை.

காக்கை :—அக்கா ! அக்கா ! காவு ! காவு !

குருவி :—கொட்டடா ! கொட்டடா ! கொட்டடா !

கிளி :—ஹுக்குக்கூ !

கிளி :—காதலைக் காட்டிலும் பெரிய இன்பம் வேறில்லை.

அணிற் பிள்ளை :—ஹுக்கும், ஹுக்கும், ஹுக்கும், ஹுக்கும்.

பசுமாடு :—வெயிலைப்போல் அழகான பதார்த்தம் வேறில்லை.

அணில் :—பசுவே, இந்த மிக அழகிய வெயிலில் என் கண்ணுக்குப் புலப்படும் வஸ்துக்களுக்குள்ளே உன் கண்ணைப் போல் அழகிய பொருள் பிறிதொன்றில்லை.

நாகணவாய் :—டுபுக் ! பாட்டைக் காட்டிலும் ரஸமான தொழில் வேறில்லை.

எருமை மாடு :—பக்ஷி ஜாதிகளுக்குள்ள ஸந்தோஷமும், ஜீவ ஆரவாரமும், ஆட்ட ஓட்டமும், இனிய குரலும் மிருக ஜாதியாருக்கும், மனுஷ்ய ஜாதியாருக்கு மில்லையே? இதன் காரணம் யாது ?

நாகணவாய் :—டுபுக் ! வெயில், காற்று, ஒளி இவற்றின் தீண்டுதல் மிருக மனிதர்களைக்காட்டிலும் எங்களுக் கதிகம்.

எங்களுக்கு உடம்பு சிறிது. ஆதலால் தீனி சொற்பம்; அதைச் சிறிது சிறிதாக நெடுநேரம் தின்கிறோம். ஆதலால் எங்களுக்கு உணவின்பம் அதிகம். மிருக மனிதஜாதியார்களுக்குள் இருப்பதைக்காட்டிலும் எங்களுக்குள்ளே காதலின்பம் அதிகம். ஆதலால் நாங்கள் அதிக ஸந்தோஷமும், பாட்டும், நகைப்பும், கொஞ்சு மொழிகளுமாகக் காலங்கழிக்கிறோம். இருந்தாலும், கிளியரசு சொல்லியதுபோல், காலனுக்குத் தூதனுகிய மனக்குறையென்னும் பேய் எங்கள் குலத்தையும் அழித்துவிடத்தான் செய்கிறது. அதற்கு நிவாரணம் தேடவேண்டும். சுவலையைக் கொல்வோம் வாருங்கள். அதிருப்தியைக் கொத்துவோம், கொல்லுவோம்.

மற்றப் பக்ஷிகள் :—வாருங்கள், வாருங்கள், வாருங்கள், துயரத்தை அழிப்போம், சுவலையைப் பழிப்போம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம்.

நான்காம் காட்சி

இடம் :—கடற்கரை.

நேரம் :—நள்ளிரா ; முழுநிலாப் பொழுது.

இரண்டு பாம்புகள் ஒரு பாலத்தடியே இருட் புதரினின்றும் வெளிப்பட்டு நிலா வீசி ஒளிதரும் மணல்மீது வருகின்றன.

ஆண் பாம்பு :—உன்னுடன் கூடிவாழ்வதில் எனக்கின்பமில்லை. உன்னால் எனது வாழ்நாள் விஷமயமாகிறது. உன்னாலேதான் என் மனம் எப்போதும் அனலில்பட்ட புழுவைப் போலே துடித்துக் கொண்டிருக்கிறது.

பெண் பாம்பு :—உன்னுடன் கூடிவாழ்வதில் எனக்கின்பமில்லை. உன்னால் எனது வாழ்நாள் நரகமாகிறது. உன்னால் என் மனம் தழலிற்பட்ட புழுவைப்போல் இடையறாது துடிக்கிறது.

ஆண் பாம்பு :—நான் உன்னைப் பகைக்கிறேன்.

பெண் பாம்பு :—நான் உன்னை விரோதிக்கிறேன்.

ஆண் பாம்பு :—நான் உன்னைக் கொல்லப்போகிறேன்.

பெண் பாம்பு :—நான் உன்னைக் கொல்லப்போகிறேன்.

ஒன்றையொன்று கடித்து இரண்டு பாம்புகளும் மடிகின்றன.

———

ஐந்தாம் காட்சி

கடற்கரை

தேவதத்தன் என்ற மனித இளைஞன் :—நிலா இனியது. நீல வான் இனியது. தெண்டிரைக் கடலின் சீர், ஒலி இனிய ; உலகம் நல்லது. கடவுள் ஒளிப்பொருள். அறிவு கடவுள் ; அதனிலே மோக்ஷம்.

விடுதலைப் பட்டேன். அசுரரை வென்றேன்.
நானே கடவுள். கடவுளே நான்.
காதலின்பத்தாற் கடவுள் நிலை பெற்றேன்.

ஓம்

33. விடுதலை

(நாடகம்)

அங்கம் 1

காட்சி 1

இடம் :—வானுலகம்.

காலம் :—கலிமுடிவு.

பாத்திரங்கள் :—இந்திரன், வாயு, அக்நி, ஒளி (சூரியன்), சோமன், இரட்டையர் (அசுவினி தேவர்), மருத்துக்கள், வசுக்கள், த்வஷ்டா, விசுவேதேவர் முதலாயினோர்.

இந்திரன் :—உமக்கு நன்று, தோழரே.
மற்றவர் :—தோழா, உனக்கு நன்று.
இந்தி :—பிரமதேவன் நமக்கோர் பணியிட்டான்.
மற்றோர் :—யாங்ஙனம் ?

இந்தி :—'மண்ணுலகத்து மானுடன்தன்னைக் கட்டிய தளை யெலாம் சிதறுக' என்று.

அக்நி :—வாழ்க தந்தை ; மானுடர் வாழ்க.

மற்றோர் :—தந்தை வாழ்க, தனிமுதல் வாழ்க. உண்மை வாழ்க, உலக மோங்குக. தீது கெடுக, திறமை வளர்க.

ஒளி :— உண்மையும் அறிவும் இன்பமுமாகி
பலவெனத் தோன்றிப் பலவினை செய்து
பலபயன் உண்ணும் பரமநற் பொருளை
உயிர்க்கெலாந் தந்தையை, உயிர்க்கெலாந் தாயை
உயிர்க்கெலாந் தலைவனை, உயிர்க்கெலாந் துணைவனை
உயிர்க்கெலாம் உயிரை, உயிர்க்கெலாம் உணாவை
அறிவிலே கண்டு போற்றி
நெறியினி லவன்பணி நேர்படச் செய்வோம்.

இந்தி :—நன்று தோழரே, அமிழ்த முண்போம்.

மற்றோர் :—அமிழ்த நன்றே. ஆம். அஃதுண்போம்.
(எல்லாரும் அமிர்தபானம் செய்கிறார்கள்.)

இந்தி :—நித்தமும் வலிது.

வாயு :— நித்தமும் புதிது.

அக்நி :—தீரா விரைவு,

இரட் :— மாறு இன்பம்,

மருத் :—என்றும் இளமை,

ஒளி :— என்றுந் தெளிவு.

அக்நி :—மண்ணுலகத்து மானிடர் வடிக்கும் ஸோமப் பாலுமிவ் வமிழ்தமு மோர்சுவை.

இந்தி :—மண்ணுல கத்து மக்களே, நீவிர்
இன்பங் கேட்பீர், எண்ணிய மறப்பீர்.
செயல்பல செய்வீர், செய்கையில் இளைப்பீர்.
எண்ணள வதனுல் ஏழுல கினையும்
விழுங்குதல் வேண்டுவீர், மீளவு மறப்பீர்,
தோழரென் றெம்மை நித்தமும் சார்ந்தீர்,
ஸோமப் பாலொடு சொல்லமுதூட்டுவீர்,
நும்மையே அவுணர் நோவுறச் செய்தார் ?

ஆஅஅ ! மறவுக் குறும்பா, அரக்கா,
விருத்திரா, ஒளியினை மறைத்திடும் வேடா,
நமுசிப் புழுவே, வலனே, நலிசெயுந்
துன்பமே, அச்சமே, இருளே, தொழும்பர்காள்,
பெயர்பல காட்டும் ஒருகொடும் பேயே,
உருப்பல காட்டும் ஒருபுலைப்பாம்பே,
படைபல கொணர்ந்து மயக்கிடும் பாழே,
ஏடா, வீழ்ந்தனை, யாவரும் வீழ்ந்தீர்.
அரக்கரே, மனித அறிவெனுங் கோயிலை
விட்டுநீ ரொழிந்தால் மேவிடும் பொன்னுகம்
முந்தைநாள் தொடங்கி மானுடர் தமக்குச்
சீர்தர நினைந்துநாம் செய்ததை யெல்லாம்
மேகக் கரும்புலை விருத்திரன் கெடுத்தான்.
'வலியிலார் தேவர் ; வலியவர் அரக்கர்.
அறமே நொய்யது ; மறமே வலியது.
மெய்யே செத்தை ; பொய்யே குன்றம்.
இன்பமே சோர்வது ; துன்பமே வெல்வது'
என்றோர் வார்த்தையும் பிறந்தது மண்மேல்.
மானுடர் திகைத்தார் ; மந்திரத் தோழராம்
விசுவா மித்திரன், வசிட்டன், காசிபன்
முதலியோர் செய்த முதனூல் மறைந்தது ;
பொய்ந்நூல் பெருகின ; பூமியின் கண்ணே
வேதங் கெட்டு வெறுங்கதை மலிந்தது.
போதச் சுடரைப் புகையிருள் சூழ்ந்தது.
தவமெலாங் குறைந்து சதிபல வளர்ந்தன.
எல்லாப் பொழுதினும் ஏழை மானுடர்
இன்பங் கருதி யிளைத்தனர், மடிந்தார் ;
கங்கைநீர் விரும்பிக் கானனீர் கண்டார் ;
அமுதம் வேண்டி விடத்தினை யுண்டார்.
ஏஎ !
வலியரே போலுமிவ் வஞ்சக அரக்கர் !

* * * *

விதியின் பணிதான் விரைக.
மதியின் வலிமையால் மானுடன் ஓங்குக.

ஒளி :—ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி
நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்தால்
மானுடச் சாதி முழுநல் வழிப்படும் ;
மானுடச் சாதி யொன்று ; மனத்திலும்
உயிரிலுந் தொழிலிலும் ஒன்றே யாகும்.

நி :—பரத கண்டத்திற் பாண்டிய நாட்டிலே
விரதந் தவறிய வேதியர் குலத்தில்
வசுபதி யென்றே ரிளைஞன்வாழ் கின்றான்.
தோளிலே மெலிந்தான், துயரிலே யமிழ்ந்தான்,
நாளும் வறுமை நாயொடு பொருவான்,
செய்வினை யறியான், தெய்வமுந் துணியான்,
ஐய லலியி லகப்பட லாயினன்.
இவனைக் காண்போம். இவன் புவி காப்பான்.

காற்று :—உயிர்வளங் கொடுத்தேன் ; உயிரால் வெல்க.

இந்தி :—மதிவலி கொடுத்தேன். வசுபதி வாழ்க.

சூரியன் :—அறிவிலே யொளியை அமைத்தேன் ; வாழ்க.

தேவர் :—மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம்,
கவலையற் றிருத்தலே வீடு. களியே
அமிழ்தம். பயன்வருஞ் செய்கையே யறமாம்
அச்சமே நரகம் ; அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க.
மகனே, வசுபதி, மயக்கந் தெளிந்து,
தவத்தொழில் செய்து தரணியைக் காப்பாய்.

காட்சி 2

பாண்டி நாட்டில் வேதபுரம், கடற்கரை ; வசுபதி தனியே நிலவைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

வசுபதி பாடுகிறான் :—

நிலவுப் பாட்டு

வாராய் நிலவே வையத் திருவே,
வெள்ளைத் தீவில் விளையுங் கடலே,
வானப் பெண்ணின் மதமே, ஒளியே,
வாராய், நிலவே, வா. 1

மண்ணுக் குள்ளே யமுதைக் கூட்டிக்
கண்ணுக் குள்ளே கவியைக் காட்டி
எண்ணுக் குள்ளே யின்பத் தெளிவாய்
வாராய், நிலவே, வா. 2

இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்,
வாவெளி தன்னை மண்ணிற் காண்பீர்,
துன்பந் தானோர் பேதைமை யன்றே !
வாராய், நிலவே, வா. 3

அச்சப் பேயைக் கொல்லும் படையாம்
வித்தைத் தேனில் விளையுங் கவியாய்
வாராய், நிலவே,வா. 4

———

பாடல் முதற் குறிப்பு அகராதி

		பக்கம்
அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்	...	490
அச்சமில்லை யச்சமில்லை	...	98
அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்	...	269
அல்லா, அல்லா, அல்லா !	...	104
அறத்தினுல் வீழ்ந்து விட்டாய்	...	218
அன்னியர் தமக்கடிமை யல்லவே	...	192
ஆங்கொரு கல்லை வாயிலிற்படி யென்று	...	420
ஆசைமுக மறந்து போச்சே	...	344
ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே	...	181
ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து	...	258
ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை	...	166
ஆதிப் பரம்பொருளின் ஊக்கம்	...	79
ஆயிரத் தெழுநூற்றைப பத்தாறு	...	200
ஆயிரந் தெய்வங்களுண்டென்று தேடி	...	99
இதந்தரு மனையினீங்கி	...	178
இந்தப் புவிதனில் வாழு மரங்களும்	...	111
இந்த மெய்யும் கரணமும் பொறியும்	...	95
இயற்கை யென்றுனை யுரைப்பார்	...	52
இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே	...	495
இவ்வுலகம் இனியது	...	507
இன்னுமொரு முறை சொல்வேன்	...	115
இனிய நீர்ப் பெருக்கினை	...	161
ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்	...	104
உண்ண உண்ணத் தெவிட்டாதே	...	317
உண்மை யறிந்தவருன்னைக் கணிப்பாரோ	...	97

உமக்கு நன்று தோழரே	...	546
உலகத்து நாயகியே—எங்கள் முத்து	...	65
உள்ளும் புறமுமா யுள்ள தெலாந் தானுகும்	...	121
உனையே மயல் கொண்டேன்—வள்ளீ	...	487
உஜ்ஜயினீ ! நித்ய கல்யாணி !	..	28
ஊருக்கு நல்லது சொல்வேன்	...	261
எங்கள் கண்ணம்மா நகை புது ரோஜாப் பூ	...	42
எங்கள் வேள்விக் கூடமீதில்	...	54
எங்கிருந்து வருகுவதோ—ஒலி	...	484
எங்கோ வாழ் !	...	541
எங்ஙனம் சென்றிருந்தீர்	...	19
எடுத்த காரியம் யாவினும் வெற்றி	...	94
எண்ணிய முடிதல் வேண்டும்	...	95
எண்ணிலாத பொருட்குவை தானும்	...	63
எத்தனை கோடி யின்பம் வைத்தாய்	...	60
எந்த நேரமும் நின் மையல் ஏறுதடி	...	486
எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி	..	135
எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின்	...	119
எல்லையில்லாததோர் வானக் கடலிடை	...	47
என்று தணியுமிந்த சுதந்திர தாகம் ?	...	117
என்றும் இருக்க உளங் கொண்டாய்	...	269
எனக்கு முன்னே சித்தர் பலரிருந்தாரப்பா	...	240
எனப்பல பேசி யிறைஞ்சிடப் படுவதாய்	...	170
ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல்	...	525
ஒளி தருவது யாது ?		510
ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா.	...	158
ஓடி விளையாடு பாப்பா	...	266
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பராசக்தி	...	16
ஓம், சக்தி சக்தி சக்தி யென்று சொல்லு	...	90
ஓ மெனப் பெரியோர்கள்—என்றும்	...	359
ஓய் திலகரே நம்ம ஜாதிக் கடுக்குமோ ?	...	190

கடமை புரிவா ரின்புறுவார்	...	111
கடலின் மீது கதிர்கூ வீசி	...	48
கடலே காற்றைப் பரப்புகின் றது	...	539
கண்ணன் திருவடி எண்ணுக மனமே	...	117
கண்ணன் பிறந்தான்	...	39
கண்ணன் மனங்கூலையைத் தங்கமே தங்கம்	...	348
கண்ணிரண்டும் இமையாமல் செங்நிறத்து	...	59
கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்	...	120
கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்	...	75
கரணமுந் தனுவு நினக்கெனத் தந்தேன்	...	87
கரும்புத் தோட்டத்திலே	...	222
கவிதையு மருஞ்சுவைக் கான நூலும்	...	271
களக்கமுறும் மார்லி நடம்	...	87
கற்பனையூரென்ற நகருண்டாம்	...	106
கனவென்ன கனவே—என்றன்	...	36
கனிகள் கொண்டுதரும்—கண்ணன்	...	345
காக்கைச் சிறகினிலே நந்தலாலா	...	107
காட்டு வழிதனிலே—அண்ணே !	...	494
காணிநிலம் வேண்டும்—பராசக்தி	...	72
காதலெனுந் தீவினிலே ராதே, ராதே	...	486
காயிலே புளிப்பதென்னே ?	...	41
காலமாம் வனத்திலண்டக்	...	64
காலா, உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்	...	479
காலைப் பொழுதினிலே கண் விழித்து	...	479
காலையிளம் பரிதிவீசுங் கதிர்களிலே	...	283
கா வென்று கத்திடுங் காக்கை	...	483
காற்றடிக்குது கடல் குமுறுது	...	488
காற்று வெளியிடைக் கண்ணம்மா	...	44
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு	...	505
கூலி மிகக் கேட்பார்	...	328
சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ சக்தீ யென்றேது	...	86

சக்தி தனக்கே கருவியாக்கு	...	80
சக்தி பதமே சரணென்று நாம் புகுந்து	...	113
(சக்தி பெறும்) பாவாணர் சாற்று பொருள் யாதெனினும்	...	1
சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஓர் குமிழியாம்	...	518
சந்திரஞெளியி லவகீக் கண்டேன்	...	92
சந்திரஞெளியை யீசன் சமைத்தது	...	270
சாகா வரமருள்வாய், ராமா	...	50
சாத்திரங்கள் பல தேடினேன்	...	332
சித்தாந்தச் சாமி திருக்கோயில் வாயிலில்	...	487
சிறந்து நின்ற சிந்தையோடு	...	140
சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா	...	335
சுட்டும் விழிச்சுடர்தான்—கண்ணம்மா	...	346
சுருதியின் கண் முனிவரும் பின்னே	...	45
சுருதியுமரிய உபநிடதத்தின்	...	269
செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்	...	99
செந்தமிழ் நாடெனும் போதினிலே	...	165
செம்பரிதி யொளி பெற்றுன்	...	273
சென்றதினி மீளாது, மூடரே	...	118
சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே	...	194
சொல்ல வல்லாயோ ?—கிளியே	...	34
தகத் தகத்தகத் தகதக வென்ருடோமோ ?	...	77
தஞ்ச முலகினில் எங்கணுமின்றித்	...	353
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்	...	176
தன்னை மறந்து ஸகல உலகினையும்	...	73
தாயின் மணிக்கொடி பாரீர்	...	154
தாருக வனத்தினிலே—சிவன்	...	67
திக்குக்களெட்டுஞ் சிதறி	...	490
திக்குத் தெரியாத காட்டில்	...	341
திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம்	...	109
திருவே நினைக்காதல் கொண்டேனே	...	45

திருவைப் பணிந்து நித்தம் ... 50
தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி ... 348
தினையின்மீது பனை நின்றுங்கு ... 493
தீர்த்தக் கரையினிலே ... 350
தீராத விளையாட்டுப்பிள்ளை—கண்ணன் ... 337
தீ வளர்த்திடுவோம் ... 57
துன்பமிலாத நிலையே சக்தி ... 78
தூண்டிற் புழுவினைப் போல் ... 388
தேடியுனைச் சரணடைந்தேன் ... 66
தேவர் வருக வென்று சொல்வதோ ? ... 107
தேகிமுதம் தேகி ஸ்ரீராதே, ராதே .. 485
தொண்டு செய்யுமடிமை ... 188
தொன்று நிகழ்ந்ததனைத்தும் ... 143
நல்லதோர் வீணை செய்தே ... 75
நளிர்மணி நீரும் நயம்படு கனிகளும் ... 162
நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை ... 193
நாடிழந்து மக்களையு நல்லாளையும் பிரிந்து ... 212
நாமகட்குப் பெருந் தொண்டியற்றி ... 210
நாமென்ன செய்வோம் துணைவரே ... 191
நித்தமுனை வேண்டி மனம் ... 27
நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும் ... 491
நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே ... 124
நின்னைச் சரணடைந்தேன்—கண்ணம்மா ... 355
நின்னையே ரதி யென்று ... 43
நெஞ்சி லுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி ... 196
நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும் ... 74
நெஞ்சு பொறுக்குதிலையே ... 155
நேர மிகுந்ததின்னும் நித்திரையின்றி ... 340
பக்தியினாலே-தெய்வ பகதியினாலே ... 17
பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும் ... 325
பகைவனுக்கருள் வாய்—நன்னெஞ்சே .. 118

பச்சைக் குழந்தையடி	...	51
பச்சை மணிக்கிளியே	...	151
பச்சை முந்திரித் தேம்பழங்கொன்று	...	475
பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்	....	208
பாயுமொளி நீ எனக்கு	...	351
பாரத தேசமென் று பெயர் சொல்லுவார்	...	137
பாரத சமுதாயம் வாழ்கவே	...	159
பாரி வாழ்ந்திருந்த சீர்த்தி	...	274
பாருக்குள்ளே நல்ல நாடு	...	136
பிள்ளைப் பிராயத்திலே	...	29
பீடத்திலேறிக் கொண்டாள்	...	43
பூட்டைத் திறப்பது கையாலே	...	494
பூமிக்கெனை யனுப்பினாள்	...	320
பூலோக குமாரி ஹே அம்ருத நாரி	...	96
பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்	...	499
பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா	...	503
பேயவள் காணெங்க ளன்னை	...	145
பேயாயுழலுஞ் சிறுமனமே	...	117
பேரருட் கடவுள் திருவடியாணை	...	214
பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்	...	146
பொன்னவிர் மேனிச் சுபத்திரை	...	315
போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்!	...	71
போற்றி போற்றி யோராயிரம் போற்றி	...	500
மங்கியதொர் நிலவினிலே	...	101
மண்ணுலகின் மீதினிலே யெக்காலும்	...	277
மண்வெட்டிக் கூலி தினலாச்சே	...	504
மலரின் மேவு திருவே—உன்மேல்	...	25
மன்னர் குலத்தினிடைப் பிறந்தவளை	...	349
மன்னுமிமயமலை யெங்கள் மலையே	...	139
மனதிலுறுதி வேண்டும்	...	59
மனமெனும் பெண்ணே	...	114

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற்	...	220
மாதவன் சக்தியினே	...	23
மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்	...	28
மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே	...	347
முருகா, முருகா, முருகா	...	32
முன்னுளிலிராமபிரான்	..	206
முன்னே யிலங்கை அரக்கர் அழிய	...	142
மோகத்தைக் கொன்று விடு	...	93
யாதுமாகி நின்றாய்—காளி	...	61
யாதுமாகி நின்றாய்—காளீ	...	61
யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்	...	168
யானேயாகி என்னலாற் பிறவாய்	...	327
ராஜமகா ராஜேந்த்ர ராஜகுல சேகரன்	...	275
வந்தே மாதரம் ஜய	...	134
வந்தே மாதர மென்போம்—எங்கள்	...	133
வருக செல்வ, வாழ்கமன் நீயே	...	279
வயலிடை யினிலே—செழுநீர்	...	489
வருவாய், வருவாய், வருவாய்—கண்ணு	...	41
வலிமையற்ற தோளினுய் போ, போ, டோ	...	157
வாராய் கவிதையாம் மணிப்பெயர்க் காதலி	...	473
வாழ்க திலகன் நாமம் வாழ்க வாழ்கவே	...	209
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி	...	169
வாழ்க நீ எம்மான்	...	199
வாழ்க மனவியாங் கவிதைத் தலைவி !	...	97
வாழ்வு முற்றுங் கனவெனக் கூறிய	...	227
வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்	..	174
வானமெங்கும் பரிதியின் சோதி	...	110
வானிற் பறக்கின்ற புள்ளெலா நான்	...	125
விட்டு விடுதலையாகி நிற்பாய்	...	113
விடுதலை, விடுதலை, விடுதலை	...	180
விடுதலைக்கு மகளிரெல்லோரும்	...	498

விணடுரைக்க அறிய அரியதாய்	...	88
விணணகத்தே யிரவிதனை வைத்தாலும்	...	211
விண்ணும் மண்ணுந் தனியாளும்	...	69
வில்லினை யொத்த புருவம் வளைத்தனை	...	35
விளக்கிலே திரி நன்கு சமைந்தது	...	495
வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்	...	175
வீரத் திருவிழிப் பார்வையும்	...	33
வீரர் முப்பத்திரண்டு கோடி விளைவித்த	...	147
வெடிபடு மண்டத்திடி பல தாளம் போட	...	91
வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்	...	20
வெற்றி யெட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே	...	261
வேண்டுமடி யெப்போதும் விடுதலை	...	112
வேதவானில் விளங்கி அறஞ்செய்மின்	...	223
வேளாளன் சிறை புகுந்தான	...	213
வைய முழுதும் படைத்தளிக்கின்ற	...	78
ஜய பேரிகை கொட்டடா	...	103
ஜயமுண்டு பயமில்லை மனமே	...	102
ஜய ஜய பவானி! ஜய ஜய பாரதம்!	...	182
ஜய ஸோம, ஜய ஸோம, ஜய ஸோமதேவா	...	49
ஸ்ஜலாம், ஸ்பலாம்	...	164

ஒருசொற் கேளீர்!

★ எந்நாளும் அழியாத மகாகவிதைக் களஞ்சியத்
யாத்த பாட்டுக்கொரு புலவரின் கவிதை
யாவும் இந்தப் பதிப்பில் அடங்கியுள்ளன.

★ இந் நூல் அந் நாளிலே பதிப்பிக்கப்பெற
நூல்களை ஒப்புநோக்கிப் பிரசுரிக்கப்பட்டுள்ளது

★ பழைய பதிப்புக்களின் முகவுரைகள், ஸமர்
ணங்கள், பாட பேதங்கள், கவிமணி அவர்
கண்டறிந்த ஸுகங்கள், குறிப்புரைகள், வி
வுரைகள் முதலியன தகுந்தவாறு ஆங்கா
குறிக்கப்பெற்றுள்ளன.

★ மதுரைப் பல்கலைக் கழகத்தினரின் பரிந்து
பெற்ற பிழைகளற்ற பதிப்பு.

★ தரத்தில் மிக உன்னதமான பதிப்பு
மக்களால் பாராட்டுதல் பெற்ற ஒரே பதிப்பு

Navabharat Printers & Traders, Madras-600 086.